ஸ்ரீஜகன்னாததாஸரின்
தத்வ சுவ்வாலி

(மூலம் + அர்த்த விளக்கங்களுடன்)

கன்னட உரை:
தாவணகெரெ திரு. பீமராவ்

தமிழில்

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஸ்ரீஜகன்னாததாஸரின் தத்வ சுவ்வாலி
(தமிழில் அர்த்தங்களுடன்)

24-08-2021 ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் ஆராதனை நாளன்று வெளியிடப்பட்டது.

தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்:

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

அட்டைப்படம் :
ஓவியர் திரு. வஜித் ஸஜித், மானவி
தொலைபேசி: 98456 25770

முன்னுரை

ஹரே ஸ்ரீநிவாஸா. குரோ ராகவேந்திரா.

புகழ்பெற்ற ஹரிதாஸரான தந்தெமுத்துமோகனதாஸர் என்பவரின் அங்கித பரம்பரையில் வந்தவரான திரு.சத்ய நாராயணன் அவர்கள், ஸ்ரீஜகன்னாததாஸரின் தத்வ சுவ்வாலி என்னும் அற்புதமான, அனைவரும் படிக்க வேண்டிய கிரந்தத்தை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இது ஒரு அபாரமான சேவையாகும். இது பகவந்தனுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய செயலாகும்.

இந்த தத்வசுவ்வாலி கிரந்தத்தில் இல்லாத விஷயங்களே இல்லை. வேதாந்த விஷயங்கள், உபநிஷத்கள் ஆகியவற்றின் சாரம், கிரகங்களின் / தேவதைகளின் வர்ணனை, பகவந்தனின் வர்ணனை என அனைத்தையும் இதில் நிரப்பியிருக்கிறார் ஸ்ரீதாஸார்யர். அதிலும் வாயுதேவரின் வர்ணனையோ மிகவும் அழகாக வந்திருக்கிறது.

ஸ்ரீமன் மத்வாசார்ய மூல மகாசம்ஸ்தானம், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி மடத்தின் மூலம் ஒருமுறை ஸ்ரீரகுநந்தன தீர்த்தரின் ஆராதனை சமயத்தில், இந்த தத்வ சுவ்வாலி (மூலம் மட்டும்) தமிழில் நாம் வெளியிட்டோம். அதனுடன் இதன் அர்த்தங்களும் வரவேண்டும் என்று விரும்பினோம். அந்த விருப்பத்தை இன்று திரு.சத்ய நாராயணாச்சார் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்.

அனைவருக்கும் புரியுமாறு எளிய, சரளமான தமிழில் இதனை மிகவும் அற்புதமாக இவர் மொழிபெயர்த்திருக்கிறார். இந்தப் புத்தகம் அனைத்து தமிழ் மாத்வர்கள் வீட்டிலும் இருக்க வேண்டிய புத்தகம் ஆகும். அனைவரும் இதனைப் படித்து, ஸ்ரீஜகன்னாததாஸரின் கருத்துக்களை புரிந்துகொண்டு, அதன் மூலம் ஹரிவாயு குருகளின் அருளை அனைவரும் பெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்தப் புத்தகத்தை வெளியிடும் திரு.சத்ய நாராயணாச்சார், மேலும் பற்பல புத்தகங்களை மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்றும், அவர் மூலமாக அதிகமாக ஹரிதாஸ சாகித்ய சேவை தமிழில் நடக்க வேண்டும் என்றும் நாம் வணங்கும் தெய்வமான ஸ்ரீனிவாசனை வேண்டிக் கொள்கிறோம்.

ஹரே ஸ்ரீனிவாசா. குரோ ராகவேந்திரா.

ஹரி ஸ்மரணைகளுடன்
முரளிதர தாஸரு, பெங்களூரு
10-08-2021

ஸ்ரீ ஜகன்னாத தாஸரின் தத்வ ஸுவ்வாலி

ஸ்ரீ ஜகன்னாத தாஸர் பிரஸித்தியான அஷ்ட தாஸர்களில் ஒருவராக போற்றப்படுபவர். இவர் தாஸ தீக்ஷ பெறுவதற்கு முன்பே ஸ்ரீநிவாஸ ஆச்சாரியராக இருந்தபோது ஸமஸ்கிருதத்தில் மாபெரும் புலமை பெற்று ஸ்ரீமன் நியாய ஸுதா க்ரந்தத்திற்கு பாட பிரவசனங்களை இடைவிடாது கொடுத்து வந்தவர். மூல ரூபத்தில் கர்மஜ தேவதையான தாஸர், ஸ்ரீ விஜய தாஸரின் ஆணைக்கிணங்க ஸ்ரீ கோபால தாஸர் மூலமாக 40 வருட ஆயுட்காலத்தை தானமாகப் பெற்று, பண்டரிபுரத்தில் சந்திரபாகா நதிக்கரையில் பகவானே இவருக்கு 'ஜகன்னாத விட்டல' என்னும் அங்கிதத்தை அளிக்க, தமது மீதமுள்ள ஆயுட்காலம் முழுவதையுமே தாஸ மார்க்கத்தில், கன்னடத்தில் பல க்ருதிகளை ரசனை செய்வதிலேயே கழித்தவர். தாஸரின் உயரிய கன்னட படைப்பே 'கன்னட நியாய ஸுதா' எனப் போற்றப்படுகின்ற மேரு க்ருதியான 'ஸ்ரீமத் ஹரிகதாம்ருத ஸாரம்' ஆகும். தத்வங்களின் தொகுப்பை திரிவிக்ரம ரூபமாக ஹரிகதாம்ருத ஸாரத்தில் அருளிய தாஸர், சுருக்கமாக, அதன் வாமன ரூபத்தை அணு ஹரிகதாம்ருத ஸாரத்தில் அருளியுள்ளார். அந்த வரிசையில் தாஸர், ஸ்ரீ ஹரியையும், தேவதைகளையும் ஸ்தோத்திரம் செய்யும் வகையிலும், தத்துவங்களின் சாரத்தையும் தொகுத்து நமக்கு அளித்துள்ள கன்னட கிரந்தமே 'தத்வ ஸுவ்வாலி' என்பதாகும்.

ஸ்ரீ ஜகன்னாத தாஸரின் 'தத்வ ஸுவ்வாலி' என்பது 392 பத்யங்களில் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கி , ஸ்ரீ ஹரி , ஸ்ரீ மஹாலஷ்மி, ப்ரஹ்மா, வாயு, ருத்ராதி தேவதைகளை ஸ்தோத்திரம் செய்யும் விதத்திலும், த்வைத ஸித்தாந்த தத்துவங்களைப் பறை சாற்றும் வகையிலும் அமைந்த கன்னட கிரந்தமாகும். தாஸர் இப்படைப்பில் கணபதி, நவக்கிரகங்கள், ஸ்ரீ துளஸி, ஸ்ரீ ருத்ர பகவான், ஸ்ரீ வாயு பகவான், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஸ்ரீ, பூ மற்றும் துர்கா ரூபங்கள், கிருஷ்ண பரமாத்மாவின் லீலா வினோதங்களில் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ

ருக்மணி விலாஸ, ஸ்ரீ கிருஷ்ண ஸ்துதி, தஸாவதார ஸ்தோத்திரம், வெங்கடேஸ ஸ்தோத்திரம், ஸ்ரீ நிவாஸ ஸ்தோத்திரம், மாயாவாத கண்டனம், அக்னி தேவனின் ஸ்தோத்திரம் என்பதாக வரிசைப் படுத்தி மங்கள பத்யங்களுடன் பூர்த்தி செய்துள்ளார்.

தாஸர் 1 முதல் 5 வரையிலான பத்யங்களில், ஸ்ரீ கணபதியை ஸ்தோத்திரம் செய்யும் விதத்தில், "அம்பிகாதனய பூதாம்பராதிப ஸுரக தம்ப ஸம்பூஜ்ய நிரவத்ய । நிரவத்ய நின்ன பாதாம்புஜகளெம்ம ஸலஹலி" எனத் தொடங்கி ஆகாஸ அபிமானி தேவதையான ஸ்ரீ விக்னேஷ்வரரைத் துதித்து, வித்யையில் அஞ்ஞானம் ஏற்படாமல் பகவானின் ஸ்மரணை தப்பாமல் காக்கும்படி வேண்டுகிறார்.

6 முதல் 28 வரையிலான பத்யங்களில் நவக்கிரகங்களிலே ஸுரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, ஸுக்கிரன் மற்றும் ஸனைஸ்சரன் முதலான தேவதைகளை தனித்தனியே 3 பத்யங்களில் துதித்துப் பாடியுள்ளார். முதலில் ஸுர்ய பகவானிடம், வியாதிகளை பரிஹாரம் செய்து, பகவானின் மஹிமைகளை உணர்த்தும் ஞானத்தையும், த்ருட பக்தியையும் அருளும்படியாக, "அனுதினதி ஸஜ்ஜனர வ்யாதிகள களெது ஸீகவீயோ" முதலான பத்யங்களினால் வேண்டித் துதிக்கிறார் தாஸர். அங்காரகனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்கையில், ஸ்ரீ ஹரியை மனதில் தியானம் செய்யவும், ஸஜ்ஜனர்களின் மனோபீஷ்டங்களை பூர்த்தி செய்யவும் வேண்டுகிறார். ஸ்ரீ புதனிடம் உத்தமமான ஞானம் மற்றும் பக்தியை வேண்டி, ஸம்ஸார ஸாகரத்திலிருந்துக் காப்பாற்றும்படியாக, "ஸன்மார்க தோரி உத்தார கைஸென்ன பவதிந்த" முதலான பத்யங்களினால் துதித்துள்ளார் தாஸர். ஸ்ரீ குருபகவானைக் குறித்துப் பாடுகையில், மனதிலே சுத்தமான ஞானத்துடன் பகவானைக் காணவும், அனைத்து பிராமணர்களையும் காக்கவும், பாபங்களை பரிஹாரம் செய்யவும் வேண்டி "ஸுக்ஞானவித்து ஸ்ரீபதிய தோரென்ன மனதல்லி" முதலான பத்யங்களினால் தாஸர் பிரார்த்தனை

செய்துள்ளார். ஸ்ரீ ஸுக்ர பகவானை ஸ்தோத்திரம் செய்யும் தாஸர், ஸ்ரீஹரியின் குணரூப வியாபாரங்களை அறிந்திடவும், பாரதம், பாகவதம் முதலான ஸாஸ்திரங்களை ஸ்ரவணம் செய்யும் பாக்கியத்தையும் அருளும்படி வேண்டுகிறார். ஸ்ரீ சனிபகவானை ஸ்தோத்திரம் செய்கையில், "பஹூ ஜன்ம க்ருத பாப பரிஹார மாடி ஸுகவீயோ" என்பதான பத்யங்களினால், பல ஜன்மங்களின் பாபங்களை பரிஹாரம் செய்து, நாராயணனின் ஸ்மரணையை அருளும்படி துதிக்கிறார் தாஸர். முடிவில் 27 & 28 பத்யங்களில், நவக்ரஹ தேவதைகள் நரஹரியின் பக்தர்களைத் துன்பப்படுத்துவது கிடையாது எனவும், அவர்களைத் துதிப்பவர்களுக்கு ஹரி ஸ்மரணையையும், ஸுகத்தையும் அளித்து ஸத்கதியை அருளுகின்றனர் எனவும் பலஸ்ருதியைக் கூறி, "ஜகன்னாத விட்டலன பதிகரிவரஹுதெந்து ஹகலிருளு பிடதெ நுதிஸுவ | நுதிஸுவ மஹாத்மரிகெ ஸுகதிகளனித்து ஸலஹோரு ||" முதலான பத்யங்களில் விவரித்து பூர்த்தி செய்துள்ளார் தாஸர்.

29 முதல் 36 வரையிலான பத்யங்களிலே, ஸ்ரீ துளஸி தேவியை ஸ்தோத்திரம் செய்யும் விதத்தில், ஸ்ரீ துளஸியானவள் விஷ்ணுவின் கண்களிலிருந்து வந்த ஆனந்த பாஷ்பத்தில் இருந்து தோன்றி 'ஸ்ரீ துளஸி' என்று பெயர் பெற்றதையும், நம்மிடம் கருணை கூர்ந்து, மிகப்பெரிய பாதகங்களைப் போக்கி, ஸம்ஸார ஸாகரத்திலிருந்து விடுவித்து அருளும்படி கைகூப்பி வேண்டி, பிரார்த்தனை செய்து, "அபி வந்திஸுத ஜனரு ஸுரிந்த நரரிந்த வந்தயராகுவரு ஜகதொளு" முதலான பத்யங்களினாலே ஸ்ரீ துளஸியை துதிப்பவர்கள் மோக்ஷத்தையும் அடைவர் என்பதாக பலன்களையும் குறிப்பிட்டுள்ளார் தாஸர்.

37 முதல் 51 வரையிலான பத்யங்களிலே , ஸ்ரீ ருத்ர பகவானைத் துதிக்கும் படியாக, இந்திராதி தேவதைகளால் பூஜிக்கப்படும் ருத்ர பகவானிடம், நமக்கு வைராக்கியத்தையும், நமது மனமெனும் வீட்டில் அமர்ந்து ஸுகத்தையும் அருளி, நமது அபராதங்களை மன்னித்து, ஞானத்தையும், மனமானது ஸ்ரீ ஹரியிடம் த்ருடமாக

இருக்கும்படியான பக்தியையும், குருவாக இருந்து ஜகன்னாத விட்டலனின் மஹிமைகளை நமக்குத் தெரியப்படுத்தி, தியானத்தை அருளும்படியாகவும் வேண்டி, காலையிலே எழுந்து பக்தியுடன் மஹாதேவனின் மஹிமைகளைப் படிப்பவர்களை ஜகன்னாத விட்டலன் ரக்ஷிக்கிறான் எனும் பலஸ்ருதியையும் கூறி, "பூதநாதன குண ப்ரபாத காலதலெத்து ப்ரீதி பூர்வகதி படிஸுவ | படிஸுவர ஜகன்னாத விட்டலனு ஸலஹுவ ||" முதலான பத்யங்களில் விவரித்துள்ளார் தாஸர்.

52 முதல் 97 வரையிலான பத்யங்களில், விஸ்தாரமாக ஸ்ரீ வாயு பகவானின் மஹிமைகளை வர்ணித்து, பிரார்த்தனை செய்யும் விதத்தில், "ஹனும பீமானந்த முனிராய என்ன துர்குணகளெணிஸதலெ ஸலஹெந்து" எனத் தொடங்கி, வாயு பகவானின் மஹிமைகளைக் கூறும் விதத்தில், பிரம்ம பதவியில் அமர இருப்பவரும், 24 தத்வங்களின் அபிமானி தேவதைகளையும் ஆளும் சக்தி கொண்டவரும், அனைத்து சேதனருள்ளும் பாரதி தேவியுடன் எண்ணற்ற ரூபங்களில் இருந்து காப்பவரும், அனைவரிலும் 21600 முறை ஹம்ஸ சுவாச ஜபத்தை செய்து, மூன்று விதமான ஜீவர்களுள்ளும் அவரவர்களின் யோக்யதைக்கு இணங்க காரியங்களைச் செய்வித்து, ஞானம் மற்றும் பலன்களை அருள்பவரும், ஹாலாஹல விஷத்தை உண்டு ஜீரணித்து அனைவரையும் காப்பாற்றியவரும், தோல்வியற்றவருமான ஸ்ரீ வாயு பகவானிடத்தில் அவரது பாத கமலங்களைப் பணிந்து வேண்டி, நவவித பக்தியையும் த்ருடமாக அருளும்படியும், பயங்களைப் போக்கி, நமக்கு புத்தி, பலம், கீர்த்தி, நோயற்ற வாழ்வு முதலானவற்றை அருளி, தாபத்ரயங்களை பரிஹரித்துக் காப்பாற்றும்படியாக, "புத்தி பல கீர்த்தி பரிஸுத்த பக்தி ஞான ஸத்வைர்ஜாட்ய ஆயுஷ்ய | ஆயுஷ்யவித்த பிவ்ருத்தி யைதிஸுவி பவமான ||" முதலான பத்யங்களினால் ப்ரார்த்தனை செய்கிறார் தாஸர். மேலும் இப்பேற்பட்ட வாயுபகவானின் மூல அவதார ரூபங்களை மனதில் ஒருமுறை நினைப்பதாலேயே பல பிறவிகளில் செய்த பாவங்கள் பரிஹாரமாகி விஷ்ணு லோகத்தில் வாஸம் கிட்டும் என்றும் விவரித்து, முக்ய ப்ராணரின் 3வது

அவதாரமான ஸ்ரீமன் மத்வாசார்யாரின் சரித்திரத்தை, அவதார காரியங்களை வர்ணித்து, நம்முடைய ஸம்ஸார துக்கத்தை பரிஹாரம் செய்யும்படி, "மாதரிஸ்வனே, என்ன மாத லாலிஸி ஜகன்னாத விட்டலன மனதல்லி |மனதல்லி தோரி பவ பீதி பிடிஸய்ய பவ்யாத்ம ||" எனும் பதங்களினாலே பிரார்த்தித்து பூர்த்தி செய்கிறார் தாஸர்.

98 முதல் 106 வரையிலான பத்யங்களில் பிரம்மதேவரை ஸ்தோத்திரம் செய்யும் தாஸர், ஸத்ய லோகத்தில் வாஸம் புரிபவரும், ஸ்ரீலக்ஷ்மி நாராயணரையைத் தமது தாய் தந்தையாகக் கொண்டவரும், 14 உலகுக்கும் அதிபதியானவரும், ஸரஸ்வதியின் பதியும், கருட ஸேஷ ருத்ரர்களுக்கு தந்தையானவரும், 200 பிரம்ம கல்பங்கள் தபஸு மேற்கொண்டு பிரம்ம பதவியை அடைந்தவரும், தத்வாபிமானி தேவதைகளின் அந்தர்யாமியான பிரம்மதேவரிடம் நிரந்தரமான ஹரிபக்தியை அருளி துக்கம், அஞ்ஞானத்தினால் வருகின்ற கஷ்டங்களைப் பரிஹரித்து, மாயாவாத மதத்தைப் பின்பற்றாதபடி அருள்புரிய வேண்டும் என்பதாக "த்விஷத கல்பதி தபவெஸகி அஸுதேவ பொம்பஸிரபத படெதெ ஹரியிந்த", "மகாலக்ஷ்மி ஜனனி புருஷோத்தமனெ ஜகைனெனிஸுவ" முதலான பத்யங்களினாலே துதித்து, இறுதியில் ப்ரம்ம தேவரின் ப்ரீதி ஒன்றிருக்க ஜகன்னாத விட்டலனின் கருணையைப் பெறுவதற்கு அதுவே காரணமாகும். ஆதலால் நரக துக்கம் தமக்கு வந்திடினும் பயமில்லை என்பதாக தாஸர் உணர்வுப்பூர்வமாக போற்றியுள்ளார்.

107 முதல் 117 வரையிலான பத்யங்களிலே தாஸர் , ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஸ்ரீ-பூ-துர்க்கா ரூபங்களைத் துதிக்கும் விதத்தில், ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் பிரளய காலத்தில் ஸ்ரீ மன் நாராயணன் சயனிக்கும் வடபத்ரமாக சேவை செய்பவளும், ஸாத்வீக, ராஜஸ மற்றும் தாமஸ குணங்களின் நியாமகளும், பகவானின் வக்ஷஸ்தளத்தில் வாஸம் புரிபவளும், மந்தகாஸத்துடன் கூடிய முகத்தினை உடையவளும்,

முக்தர்களால் வணங்கப்படுபவளும், ஸ்ரீ ஹரிக்கு ஆபரண ரூபமாகி, வஸ்திராதி ரூபங்களைத் தரித்து சேவை புரிபவளும் , ஸ்ரீ ஹரியிடமிருந்து மஹதாதி தத்வங்களை கர்பத்தில் தரித்து ப்ரமாண்டத்தைப் படைத்தவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரம் செய்து, அவளது கருணையை மனமுருக வேண்டி "ஸ்ரீ லக்ஷ்மி மஹாமஹிமளெ மெகெ தயவாகெ", "கமலதளாயதாக்ஷி நோடு தயதிந்த விதிமாதெ லோக ஸௌந்தரியே நீ நோடே தயமாடே" முதலான பத்யங்களினாலே வேண்டித் துதிக்கிறார் தாஸர்.

118 முதல் 136 வரையிலான பத்யங்களிலே 'ஸ்ரீ ருக்மணிவிலாஸ' என்பதாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸ்ரீ ருக்மணியிடம் கலஹ லீலை புரிந்தபோது அவர்களிடையே நடக்கும் உரையாடல் மூலமாக, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மஹிமைகளைப் புகழும் ஸ்ரீ மத்பாகவதப் பகுதிகளை தாஸர் இங்கு விவரித்துள்ளார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒருமுறை ருக்மணி தேவியுடன் மஞ்சத்தில் அமர்ந்தபடி, ராஜ்யத்தை ஆளாது கடல் நடுவே வாழும் தன்னை மணந்ததன் காரணமென்ன என விளையாட்டாகக் கேட்க, அதற்கு ஸ்ரீ ருக்மணி தேவி பதிலுரைக்கும் விதமாக, தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டது பகவானின் கருணை எனவும், அதனாலேயே தான் 'நித்ய முக்தள்', 'அக்ஷர' எனக் கொண்டாடப்படுவதாகவும், பிராக்ருத குணங்களின் தொடர்பற்ற பகவானின் மஹிமைகளைத் தம்மால் முழுவதுமாக் கூற இயலாது என்றும், தனது பதியின் அருளாலேயே பிரம்ம ருத்ராதி தேவதைகளையும் சிருஷ்டித்து, காத்து அழிக்கும் காரியத்தை தாம் புரிவதாகவும் கூறி, பகவானின் மஹிமைகளை பறைசாற்ற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா புன்னகை பூத்து ப்ரேமையுடன், ஸ்ரீ ருக்மணி தேவி என்றென்றும் தமது கருணைக்கு பாத்திரமானவர் என்று பதில் அளித்த விதத்தை தாஸர் வருணிக்கிறார். இத்தகைய ஜகன்னாத விட்டலன் நமது தந்தை, ஸ்ரீ மஹாலட்சுமி நமது தாய், பிரம்மதேவர் நமது குரு என்பதாகக் கூறி, ஸ்ரீ ருக்மணி விலாஸத்தின் இப்பகுதியில் வர்ணிக்கப்பட்டுள்ள பகவானின் லீலைகளைப் படிப்பவர்களுக்கு அவரவர்களின் அபிலாஷைகளை பகவான் நிறைவேற்றுகிறான்

என்பதாக பலஸ்ருதியையும் கூறி, "தோஷ வர்ஜித ருக்மணீஷன விலாஸ ஸந்தோஷதலி படிஸித | படிஸிதந்தவர அபிலாஷ பூரயிஸி ஸலஹுவ ||" முதலான பத்யங்களினால் நிறைவு செய்கிறார் தாஸர்.

137 முதல் 178 வரையிலான பத்யங்களிலே 'ஸ்ரீ கிருஷ்ண ஸ்துதி' என்பதாக தாஸர் பாகவதாதி கிரந்தங்களில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அவதார லீலைகளை, அதிலும் குறிப்பாக பகவான் தன் பக்தர்களுக்கு கருணையுடன் அருள்புரிந்ததை விளக்கும் வகையில், "ஞான ஸுக்ஞான ப்ரக்ஞான விக்ஞானமய மாணவக ரூப வஸுதேவ | வஸுதேவ தனய ஸுக்ஞானவனு கொட்டு கருணிஸோ ||" எனத் தொடங்கி, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பூதேவியின் பிரார்த்தனைக்கிணங்க, பூபாரத்தைக் குறைக்கும் பொருட்டு யாதவ குலத்தில் அவதரித்தது, நந்தகோபரின் இல்லத்தை அடைந்து, பூதனை ஷகடாஸுரன் முதலான அஸுரர்களைக் கொன்றது, கோபாலகனாகி பசுக்களை மேய்த்தது, தேவேந்திரன் இடைவிடாது மழை பொழிய பக்தர்களை காத்தது, கம்சனைக் கொன்று தாய் தந்தையரை விடுவித்தது, உக்ரஸேனருக்கு முடிசூட்டி அனுக்ரஹம் புரிந்தது, ஸத்யபாமா தேவிக்கு பாரிஜாதம் அளித்தது, கைப்பிடி அவலுக்கு குசேலனுக்கு ஸம்பத்தைக் கொடுத்தது, சந்தனம் அரைத்த குப்ஜைக்கும் அருள் புரிந்தது, த்ரௌபதியின் மானம் காத்தது முதலான லீலைகளை வர்ணித்து, பகவானின் காருண்யத்தைப் பற்றி எடுத்துக்கூறி, முக்கியமாக ஸாஸ்திர வசனங்களை உரைக்கும் விதத்தில் தாஸர் மேலும் தொடர்ந்து பகவானின் ஸ்வதந்த்ர தத்துவம், வ்யாப்த தத்துவம், ஜீவர்களை அவரவர்களின் யோக்யதை மற்றும் கர்மங்களுக்குத் தகுந்தபடி பந்தனப்படுத்தி, அவர்களுள் இருந்து காரியங்களை செய்து செய்வித்து, தான் மட்டும் பந்தனத்திற்குக் கட்டுப்படாமல் இருக்கும் நிலை, அனைவருள்ளும் அந்தர்யாமியாக இருத்தல் முதலான தத்துவங்களை எடுத்துக்கூறி, பகவானிடத்தில் பிரார்த்தனை செய்யும் விதத்தில், இந்திரியங்கள் அலைபாயாமல், பகவத் சேவையில் ஈடுபடவும், பகவானின் சரணங்களை பற்றியவர்களை

காக்கும்படியும் வேண்டுவதாக, "பாஹி கருணா ஸாகரணே பாஹி லக்ஷ்மிரமண பாஹி கோபால குணஷீல" முதலான பத்யங்களனாலே துதித்து, ஜகன்னாத விட்டலனை தினந்தோறும் ஸ்மரிக்கும்படியாக அறிவுறுத்தி தாஸர் இப்பகுதியை பூர்த்தி செய்கிறார்.

179 முதல் 189 வரையிலான பத்யங்களை 'தஸாவதார ஸ்தோத்திர' ரூபமாக தாஸர் அருளியுள்ளார். வேதங்களைக் காத்து ஹயக்ரீவன் எனும் ராக்ஷஸனைக் கொன்று, வைவஸ்வத மனுவிற்கு அருள்புரிந்த 'மச்சாவதாரம்', தேவ தைத்யர்கள் பாற்கடலைக் கடைந்தபோது மந்தரகிரியைத் தாங்கிப் பிடித்த 'கூர்மாவதாரம்', ஹிரண்யாக்ஷனைக் கொன்று பூமியைத் தூக்கி நிறுத்திய 'வராஹ அவதாரம்', பிரஹ்லாதன் பிரார்த்தனை செய்ய, கம்பத்திலிருந்து வெளிப்பட்டு காத்தருள் புரிந்த 'நரஸிம்ம அவதாரம்', பலியிடம் மூன்று அடி தானம் கேட்டு பூலோகம், மேல் லோகம் என அளந்து கங்கையைப் படைத்த 'வாமனாவதாரம்', துஷ்ட அஸுரர்களைக் கொன்று பூபாரத்தைக் குறைத்த 'பரசுராமாவதாரம்', தஸரதனுக்கு மகனாகி அவதரித்து தைத்யர்களை அழித்த 'ராமாவதாரம்', வஸுதேவர் தேவகி தம்பதியருக்கு மகனாகப் பிறந்து பூபாரத்தைக் குறைக்கும்படியாக தைத்யர்களை அழித்த 'கிருஷ்ணாவதாரம்', ஜினன் என்னும் தைத்யன் மற்றும் அவனைச் சேர்ந்தவர்களுக்கு துர்புத்தியை அளித்து, தேவதைகளுக்கு நல்லுபதேஸம் புரிந்த 'புத்தாவதாரம்', கலியின் தோஷத்தைப் பரிஹாரம் செய்யும் 'கல்கி அவதாரம்' என தஸாவதார ரூபங்களை, அவதார காரியங்களை வர்ணித்து "தயவாகோ தயவாகோ" என மீண்டும் மீண்டும் ப்ரார்த்தனை செய்துள்ளார் தாஸர்.

190 முதல் 216 வரையிலான பத்யங்களில் 'வெங்கடேஸ ஸ்தோத்திரம்' என்பதாக "ஷரணாகதர கல்பதருவெ வெங்கட தராதரனாத நின்ன சரணாப்ஜ | சரணாப்ஜயுகள ஸன்தருஷவனியோ எந்தெந்து ||" எனத் தொடங்கி வெங்கடேஸனின் மஹிமைகளைக் கூறும் விதமாக,

பிரம்மதேவரின் தந்தையும், ஸ்வாமி புஷ்கரணியில் வாஸம் செய்பவனும், ஸத்ய ஸங்கல்பனும், தேவஷர்மாவிற்கு தரிஸனம் அளித்து அருள்புரிந்தவனும், ஸர்வோத்தமனுமான வெங்கடேஸனின் ரூபத்தை மனதிலும், நாமத்தை நாவிலும், நைவேத்தியத்தை உதரத்திலும், நிர்மால்யத்தை சிரத்திலும் தரிக்க ஸம்ஸார பயமில்லை எனவும், அனந்த ரூபங்களைக் கொண்ட வெங்கடேஸனின் அருளாலேயே த்ருடமான பக்தி ஸித்திக்கும் எனவும் கூறி, பகவானிடத்தில் பிரார்த்தனை செய்யும் விதத்தில், நமக்கு பகவானின் பாத தரிஸனத்தையும், ஸஜ்ஜனர்களின் ஸங்கத்தையும், இடைவிடாத பகவத் ஸ்மரணையையும் வேண்டி, பகவான் ஸ்வதந்த்ரனாகவும், ஸர்வ கர்த்தனாகவும் இருப்பதை உணர்ந்த பிறகு நமக்கு கவலை எதற்கு ? எனவும் வினவி, அத்தகைய வெங்கடேஸனை பஞ்சரூப நாமங்களினாலும், தஸாவதார நாமங்களினாலும், விஸ்வாதி 8 நாமங்களினாலும், க்ருத்தோல்க, மஹோல்க, விரோல்க, த்யுல்க, ஸஹஸ்ரோல்க முதலான நாமங்களினாலும் துதித்து இப்பகுதியை நிறைவு செய்கிறார் தாஸர்.

217 முதல் 353 வரையிலான பத்யங்களில் தாஸர் 'ஸ்ரீநிவாஸ ஸ்தோத்திரம்' என்பதாக பகவானின் குணங்கள் மற்றும் மகிமைகளை வர்ணித்து, நமது பிரார்த்தனையை பகவானிடத்தில் முறையிடும் வகையில் அமைத்துள்ளார். "ஸ்ரீநிவாஸன போல்வ தீனவத்ஸலருண்டெ ஜகதொளு |ஜகதொளு இஹரெம்ப ஞானிகளுண்டெ அனுகால || " எனத் தொடங்கி, ஸ்ரீநிவாஸனைப் போல தீனவத்ஸலன் வேறொருவரும் இல்லை; அவன் பக்தர்களின் அபராதங்களை எண்ணுவதில்லை; தந்தை, தாய், நண்பன், குரு, புத்திரன் அனைத்துமாகவும் உள்ளவன்; பக்தர்களுக்கு அவனைப் போல் ஒரு ஸ்வாமி இல்லை; தேவதை களாலும் ஞானிகளாலும் பூஜிக்கப்படுபவன்; அனைவருள்ளும் அந்தர்யாமியாக விளங்குபவன்; ஜீவர்களுக்கு அவரவர்களின் யோக்யதைக்குத் தகுந்தபடி கர்ம பலன்களை அளிப்பவன்; பிரம்மாதி தேவதைகளுள் இருந்து காரியங்களைச் செய்பவன் என்பதாக விவரித்து, மனதில் ஹரியின் சிந்தனை இருந்தால் எந்த

ஆஸ்ரமத்தில் இருந்தாலும், துஷ்டர்களுடன் சகவாசம் செய்ய நேர்ந்தாலும் அவர்களை பாதிப்பதில்லை என்று விளக்கி பகவானை நினைக்கும்படியான கர்மங்களெல்லாம் புண்ணிய கர்மங்கள் எனவும், பகவானுக்கு சம்மதமில்லாத ஸ்வர்க லோகத்தைக் காட்டிலும் அவனுக்கு சம்மதமான நரக வாழ்க்கையே உத்தமம் எனவும் மனமுருகக் கூறி, பக்தர்களின் ஸஹவாஸத்தையும், பகவான் தான் ஒருவனே பூஜிக்கப்படுபவனும் பூஜையைச் செய்பவனுமாக உள்ளான் என்ற ஞானத்தையும் வேண்டி, பற்பல பிறவிகளில் ஜீவர்களைக் காப்பவனான ஸ்ரீ ஹரி அனைத்து ஜீவராசிகளுக்கும் அன்னமிடுபவன், நம்மைக் கைவிடுவதில்லை எனவும் விளக்கி, விசேஷமான மானசீக பூஜையை விளக்குவதாக, காணும் அனைத்தையும் பகவானின் பிரதிமை எனவும், மனம் வாக்கு தேகங்களினால் அனுவிக்கும் அனைத்தையும் ஸ்ரீ ஹரிக்கு சமர்ப்பணம் செய்வதாகவும் கூறி, மேலும் பூமியே பகவானுக்கு பீடம், ஆகாயமே குடை, நட்சத்திரங்களே தீபங்கள், மழையே அபிஷேகம், மரங்களே சாமரம், கடலின் ஓசையே வாத்தியம், பாதாள லோகமே பாதுகை, ஸ்வேத த்வீபமே கிரீடம், வைகுண்டமே ஒட்டியானம், சந்திர சூரியனே ஆகாய தீபங்கள், நமது தேகத்தில் இந்திரிய ஸ்தானங்களே ஆலயம், விஷயங்களே பகவானுக்கு நாம் சமர்ப்பிக்கும் பூஜை என்பதாக மானசீக பூஜையை எப்போதும் செய்யும்படி அறிவுறுத்தும் தாஸர், முடிவில் சரணாகதி அடைந்தவர்களுக்கு அருள்பவனான ஸ்ரீ ஜகன்னாத விட்டலனிடம் காப்பாற்றும்படி வேண்டித் துதிக்கிறார் தாஸர்.

354 முதல் 380 வரையிலான பத்யங்களிலே 'மாயாவாத கண்டனம்' என்பதாக தாஸர், மாயாவாதத்திலே கூறப்பட்டுள்ள தத்துவ விரோதங்களைக் கண்டித்து, `பஞ்சபேதம்', 'தாரதம்யம்', 'ஜகத் ஸத்யம்' முதலான ஆச்சார்யரின் சித்தாந்தத்தில் உள்ள உண்மைப் பொருள்களைத் தாமே கேள்விகளை எழுப்பி, பதிலுரைத்து, பலவித உதாரணங்களைக் கூறி விளக்கியுள்ளார். ஜீவ ஈஸ்வர ஐக்கியத்தைக் கூறுபவர்களிடம், அதைக் கண்டித்து கேள்விகளை

எழுப்பும் விதத்தில் தாஸர், "சிவனு நீனாதரே சிவராணி நினகேனு அவிவேகி மனுஜ ஈ மாது | ஈ மாது கேளிதரெ கவிஜனரு நகரெ கை ஹொடெது ||" என ஆரம்பித்து, நீயே சிவன் எனில், சிவனின் மனைவி உனக்கு என்னாக வேண்டும் ? அனைத்தும் ஒன்றெனில் மனைவி, தாய் மற்றும் சகோதரி ஒன்றெனக் கொள்வது முறையா ? பிம்பம், பிரதிபிம்பம் ஒன்றெனக் கொண்டால், பகவானுக்கும் துக்கம் முதலான தோஷங்கள் உண்டா ? பிரத்யக்ஷமான இந்த ஜகத்தை 'பொய்' என உரைப்பது தனது தாயை 'மலடி' என்று கூறுவதற்கு சமம்; ஸ்ரீ ஹரி குண பரிபூர்ணன் என்று கூறுவதில் மகிழ்ச்சி கொள்ளாதவன் மனித உருவில் உள்ள மிருகமே ஆவான்; ஸர்வ அபேதத்தைக் கூறுபவனுக்கு பசும் நெய்யும் மூக்குச் சளியும் சமமாகுமா? ஸ்ரீ ஹரியும் த்ருணமான ஜீவனும் சமானமாவது எவ்விதம்? ஸ்ரீஹரியை நிர்குணன் எனக் கூறுவது, அவனை நிந்திப்பது போல் ஆகாதா? எனப் பலவாறு கண்டித்து, "ஜகன்னாத விட்டலனே நான்" என்பவன் தனது தாய், தந்தை, சகோதரன், குரு, உறவினன் முதலான அனைவருக்குமே துரோகம் இழைத்தவன் ஆவான் என்பதை "மாத்ரு பித்ரு ப்ராத்ரு ஸக குரு பந்து காதகனு நீனு புஸியல்ல | புஸியல்ல ஸ்ரீ ஜகன்னாத விட்டலனே நானெம்பி ||" முதலான பத்யங்களினால் விளக்கியுள்ளார் தாஸர்.

381 முதல் 387 வரையிலான பத்யங்களில், 'ஸ்ரீ அக்னிதேவரின் ஸ்தோத்திரம்' என்பதாக தாஸர் "தேவமுக என்னய கராவலம்பனவித்து பாவகரிகொலிது பவதாப | பவதாப பரிஹரிஸி பாவகன ஜனக ப்ரதிதின ||" என ஆரம்பித்து பிரார்த்தனை செய்யும் விதத்தில், ப்ரதிதினமும் நம்மைக் காப்பாற்றுமாறும், கெட்ட புத்தியை நீக்கி, சத்கதி அடையும் மார்கத்தைக் காண்பித்து, மனவசனங்களினால் எழும் தோஷங் களைக் கவனிக்காமல் நம் மனதை ஸ்ரீ ஹரியிடத்தில் நிற்குமாறு செய்யவும், ஸ்ரீ ஜகன்னாத விட்டலனை துதிக்கும் பாக்கியம் இருக்கட்டும் என்று வணங்குவதாக "வீதி ஹோத்ரனே ஜகன்னாத விட்டலன ஸம்ப்ரீதி பூர்வகதி துதிஸிவ | துதிஸி ஹிக்குவ பாக்ய

ஜிதவாகி இரலி எந்தெந்து ||" முதலான பத்யங்களினால் போற்றித் துதித்துள்ளார் தாஸர்.

388 முதல் 392 வரையிலான பத்யங்களில், இந்த கிரந்தத்திற்கு மங்கள பதமாக அமைத்து 'ஸுவ்வி பத' என்பதாகப் பாடியுள்ளார் தாஸர். "ஸுவ்வி ஸ்ரீதேவி ரமண ஸுவ்வி ஸர்பராஜ ஸயன ஸுவ்வி தைத்ய நிகரஹரண ஸுவ்வி நாராயண ||" என ஆரம்பித்து, 'ஸுவ்வி' என்ற சப்தத்தினால் "மங்களப்ரதனாக ஆகு" எனப் பொருள்படும் வகையில், பகவானிடத்தில் பக்தர்களுக்கு மங்களத்தையும், தைத்யர்களுக்கு நாஸத்தையும் செய்யும்படி வேண்டி, மங்கள சரிதனும், ருத்ர, இந்த்ராதிகளால் வணங்கப்படுபவனுமான பகவான், ப்ரம்ம, ருத்ராதி தேவதைகளை கூர்ம, மச்ச, மோஹினி முதலான ரூபங்களிலே காப்பாற்றிய ஸ்ரீ ஹரி, நமக்கு மங்களம் அருளட்டும் எனவும் பிரார்த்தனை செய்து, தஸாவதார ரூபங்களையும் வேண்டி, மங்கள சரிதனான, வேதங்களில் ஸ்தோத்திரம் செய்யப்படும் அனந்த கல்யாண குணங்கள் நிறைந்தவனும், தோஷ தூரனுமான ஸ்ரீ ஜகன்னாத விட்டலனை, நம்மையும் காப்பாற்றும்படி வேண்டி, "பாஹி நிகம நிகரஸ்தோத்ர லலிதகாத்ர மாம் பாஹி ஸுஜனஸ்தோமமித்ர தோஷ தூர ஸுகுண ஸம்தோஹ ஜகன்னாத விட்டல ஜய த்ரிதாமக ||" போன்ற பத்யங்களில் பாடி பூர்த்தி செய்கிறார் தாஸர்.

பகவானின் மகிமைகளை போற்றும் வகையிலும், பிரம்ம ருத்ராதி தேவதைகளை ஸ்தோத்திரம் செய்யும் வகையிலும், த்வைத சித்தாந்தத்தை பறைசாற்றும் வகையிலும் அமைந்த இத்தகைய உயரிய க்ரந்தத்தை தினமும் பாராயணம் செய்து, விஸேஷமான அர்த்தங்களைத் தெரிந்து கொண்டு ஸ்ரீ ஜகன்னாத தாஸரின் அந்தர்யாமியான ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரராவோமாக!

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீ ஜகன்னாத தாஸர் அருளிய 'தத்வ ஸுவ்வாலி' என்ற உயரிய கிரந்தத்தின் மூலத்தையும், அதன் விஸேஷ அர்த்தங்களையும் பாமரரும் அறியும் வண்ணம் கன்னடத்தில் வழங்கிய திரு. தாவணகெரே பீமராவ் அவர்களின்

படைப்பைத் தமிழில் 'ஜகன்னாத கேஸவ' திரு.சத்ய நாராயணன் அவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீபகாலத்தில் வெளியிட்டுள்ள பல மொழிபெயர்ப்பு நூல்களின் வரிசையில், இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு ஸ்ரீ ஜகன்னாத தாஸரின் அந்தர்யாமியான ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மர் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் மற்றும் மனச்சாந்தி இவைகளை அருளி, இதுபோல் இன்னும் பல மொழிபெயர்ப்பு நூல்களை தமிழில் வெளியிட வேண்டும் என ப்ரார்த்தனை செய்கிறேன்.

மேடவாக்கம் சென்னை

நாள் : 12-8-2021

'பிரசங்க பூஷணம்'
' பிரவசன பூஷணம்'
Sலக்ஷ்மிபதிராஜா

மொழிபெயர்ப்பாளர் உரை

ஸ்ரீஜகன்னாததாஸரின் இன்னொரு அற்புத கிரந்தம் - தத்வ சுவ்வாலி. இந்த கிரந்தத்தில் உள்ள பத்யங்கள், நாட்டுப்புற பண்ணில், த்ரிபதி நுடியில் இருக்கின்றன. தத்வ என்றால் முக்காலத்திலும் உண்மையான, சித்தாந்தத்தை பிரதிபலிக்கும்; சுவ்வாலி என்றால் வசனங்களின் தொகுப்பு என்று சொல்லலாம். தத்வ போதனையே இதன் நோக்கம். தத்வ சுவ்வாலிகளை தன் மருமகளின் நலனுக்காக, நிம்மதிக்காக தாஸர் இயற்றினார் என்று சொல்வதுண்டு.

தாஸரின் ஹரிகதாம்ருதசாரத்தைப் போல இல்லாமல், இந்த சுவ்வாலிகள் எளிய கன்னடத்திலேயே உள்ளன; சாதாரணமாகப் படித்தாலே புரியும் என்று சொல்வதுண்டு. ஆனாலும் இவற்றில் அடங்கியிருக்கும் தத்வ விஷயங்களை ஒரு தக்க குருவிடம் கற்பதே சிறந்தது என்பது என் எண்ணம்.

இதனை எனக்கு பாடம் எடுத்த குருவான திரு. ஹரதி பிரகலாதாசார்யருக்கு (ஜாம்பவதிப்ரிய விட்டலதாஸர்) நன்றியுடன் கூடிய நமஸ்காரங்கள். உடன், இந்த உரையை எழுதி நமக்கு அளித்துள்ள திரு.தாவணகெரெ பீமராவ் அவர்களுக்கும் நம் அனைவரின் நன்றிகள்.

இந்த மொழிபெயர்ப்பினை முழுவதும் படித்து, வெளியிட ஒப்புதல் அளித்த திரு.முரளிதர தாஸருக்கும், முன்னுரை எழுதிக் கொடுத்த திரு.லட்சுமிபதிராஜாவிற்கும் மிக்க நன்றிகள்.

இதனை வெளியிட பொருளுதவி புரிந்துள்ள அனைத்து ஹரிபக்தர்களுக்கும் மிக்க நன்றிகள். அவர்கள் உதவியின்றி இப்புத்தகம் தமிழில் வந்திருக்க முடியாது. பாராயணத்திற்காக மூலம் மட்டும் எனவும், அர்த்தங்களுடன் கூடியது எனவும் இரு புத்தகங்களாக இதனை வெளியிடுகிறோம்.

இது வரை வந்த புத்தகங்களோடு ஒப்பிட்டால், இந்தப் புத்தகத்தில் சுவ்வாலிகளின் எண்ணிக்கை சில அதிகமாகவோ / குறைவாகவோ இருக்கலாம். திரு.பீமராவ் அவர்களின் புத்தகத்தில் உள்ள சுவ்வாலிகளை நாம் அப்படியே இதில் பயன்படுத்தியுள்ளோம்.

Proof reading பல முறை செய்திருந்தாலும், இந்தப் புத்தகத்தில் எங்கேயாவது எழுத்துப் பிழை தென்பட்டால், தயவு செய்து எனக்குத் தெரிவிக்கவும். சொல்ல வந்த விஷயத்தில் (மொழிபெயர்ப்பில்) புரியாத இடம் இருந்தாலோ / தவறாகவோ சொல்லியிருந்தாலோ, அதையும் தயவு செய்து எனக்குத் தெரியப்படுத்தவும்.

அஸ்மத் குருவந்தர்கத பாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஜகன்னாத கேசவனுக்கு இதனை சமர்ப்பிக்கிறேன். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

'ந அஹம் கர்தா ஹரி: கர்தா'

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
பெங்களூரு
10-08-2021

பொருளடக்கம்

1. ஸ்ரீகணபதி ஸ்தோத்திரம் - 21
2. நவக்கிரக ஸ்தோத்திரங்கள் - 25
3. துளஸி ஸ்தோத்திரம் - 41
4. ஸ்ரீ ருத்ரதேவரின் ஸ்துதி - 48
5. ஸ்ரீ வாயுதேவரின் ஸ்தோத்திரம் - 61
6. ஸ்ரீ பிரம்மதேவரின் ஸ்தோத்திரம் - 103
7. ஸ்ரீபூதுர்கா ஸ்தோத்திரம் - 110
8. ஸ்ரீருக்மிணி விலாஸ - 121
9. ஸ்ரீகிருஷ்ண ஸ்துதி - 135
10. தசாவதார ஸ்தோத்திரம் - 179
11. ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்திரம் - 191
12. ஸ்ரீஸ்ரீனிவாஸ ஸ்தோத்திரம் - 215
13. மாயாவாத கண்டன - 345
14. ஸ்ரீ அக்னி தேவரின் ஸ்தோத்திரம் - 372
15. மங்களம் - 377

***

ஓம்

ஸ்ரீமத் ஹனுமத்பீம மத்வாந்தர்கத
ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவாய நம:

ஸ்ரீ ஜகன்னாததாஸார்ய விரசித
தத்வ சுவ்வாலி

ந மாதவ ஸமோ தேவோ ந ச மத்வஸமோ குரு: |
ந தத்வாக்ய ஸமம் ஶாஸ்த்ரம் ந ச தஞ்ஞ ஸம:புமான் ||
ஜலஜேஷ்ட நிபாகாரம் ஜகதீஶ பதாஶ்ரயம் |
ஜகதீதல விக்யாதம் ஜகன்னாத குரும் பஜே ||

1. ஸ்ரீகணபதி ஸ்தோத்திரம்
ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஏக

அம்பி^{3}காதனய பூ^{4}தாம்ப^{3}ராதி^{4}ப ஸுரக
த^{3}ம்ப^3 ஸம்பூஜ்ய நிரவத்^{3}ய | நிரவத்^{3}ய நின்ன பா
தா^{3}ம்பு^{3}ஜக^{3}ளெம்ம ஸலஹலி ||1-(1)

பூதாம்பராதிப = பூதாகாஷத்தின் அபிமானியும். ஸுரகதம்ப ஸம்பூஜ்ய = தேவ சமூகத்தினரால் பக்தியுடன் பூஜிக்கப்படுபவனும் நிரவத்ய = தோஷங்கள் அற்றவனுமான. அம்பிகாதனய = பார்வதி புத்ரனே, நின்ன பாதாம்புஜகளு = உன் தாமரை மலர் போன்ற பாதங்கள். எம்ம = எம்மை. ஸலஹலி = காப்பாற்றட்டும்.

* ஸ்ரீஜகன்னாததாஸர், தாம் இயற்றப்போகும் கிரந்தத்தை நிர்விக்ன மாக முடிப்பதற்கும், நிரந்தரமாக ஹரி ஸ்மரணை இருப்பதற்கும், முதலில் கணபதியை வணங்குகிறார்.

* வானம், பூமி, காற்று, நீர், நெருப்பு இவையே பஞ்சபூதங்கள். இவற்றில் ஒன்றான ஆகாஷத்திற்கு கணபதி அபிமானி தேவதை ஆவார். தாரதம்யத்தில் கணபதி, மித்ர தாரா ஆகியோரின் கீழ்

கக்ஷையில் இருந்தாலும், ஸ்ரீஹரியின் விசேஷ அருளால், அவரது வர பலத்தினால், ஸ்வோத்தமர்களால் அனைத்து செயல்களின் துவக்கத்திலும் பூஜிக்கப்படுகிறார். இவனின் பூஜையால் விக்னங்கள் நாசமாகி, காரிய ஸித்தியும், பூஜிக்காமல் விடுவதால் விக்னங்களும் உண்டாகும் என்பதாலும், 'வந்திஸுவுதாதியலி கணநாதன' என்று புரந்தரதாஸர் பாடியிருக்கிறார்.

* தத்வாபிமானி ஆனதால், பாவங்கள் இவனை கட்டுப்படுத்து வதில்லை. ஆகையால் தோஷங்கள் அற்றவன். அனைத்து தேவதைகளும் ஸ்ரீஹரியின் பிரதிமைகள். கணபதியும் அவனின் பிரதிமையே. இவனின் அந்தர்யாமியான விஷ்வம்பரன், முக்ய நிரவத்யன் ஆகிறான்.

க^{3}ஜவக்த்ர ஷண்முகா^{2}னுஜ ஶப்^{3}த^{3} கு^{3}ணகி^{3}ரஹக
பு^{4}ஜக^{3} கடிஸூத்ர ஸுசரித்ர | ஸுசரித்ர த்வத்பதா^{3}ம்
பு^{3}ஜக^{3}ளிகெ^{3} எரகி^{3} பி^{3}ன்னயிபெ ||2-(2)

ஷண்முகானுஜ = குமாரஸ்வாமியின் தம்பி. ஶப்த குணக்ரஹக = ஷப்தமே குணமாக உள்ள ஆகாஷத்தை தன் அதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவன் (அதனை ஆளும் அபிமானி தேவதை இவனே). புஜக கடிஸூத்ர = பாம்பினை இடுப்பில் கட்டிக் கொண்டிருப்பவன் ஸுசரித்ர = புனித சரித்திரத்தைக் கொண்ட. கஜவக்த்ர = யானை யின் முகத்தைப் போல முகம் கொண்டவனே. த்வத்பதாம் புஜகளிகெ = உன் பாத பத்மங்களில். எரகி = வணங்கி. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன்.

ஷப்த, ஸ்பர்ஷ, ரூப, ரஸ, கந்த ஆகியவை முறையே ஆகாஷ முதலான பஞ்சபூதங்களின் குணங்கள் ஆகும். ஆகாஷத்திற்கு அபிமானியானதால், அதன் குணமான ஷப்தமும் கணபதியின் வசமே. ஆனால், இவன் ஸ்வதந்த்ர நியாமகன் அல்ல. தாரதம்யத் தில் மேலிருக்கும் அனைவரும் தமக்குக் கீழ் இருப்பவர்களின் வசமாக இருக்கும் தத்வங்களுக்கும் நியாமகரே ஆகின்றனர்.

வித்தபதி மித்ரஸுத ப்^{4}ருத்யானு ப்^{4}ருத்யன வி
பத்து படி^{3}ஸுவ அஞ்ஞான | அஞ்ஞான பி^{3}டி^{3}ஸி மம
சித்த மந்தி^{3}ரதி^{3} நெலெகொ^{3}ள்ளொ ||3-(3)

வித்தபதி மித்ர = குபேரனின் நண்பனான ருத்ரதேவன். ஸுத = மகனான ஹே கஜமுகனே. நின்ன ப்ருத்யானுப்ருத்யன = உன் தாஸானுதாஸனான என்னை. விபத்து படிஸுவ = ஆபத்திற்கு காரணமான. அஞ்ஞான = அஞ்ஞானத்தை. பிடிஸி = பரிகரித்து. மம = என். சித்தமந்திரதி = என் மனம் என்னும் கோயிலில். நெலெகொள்ளோ = ஸ்திரமாக வசிப்பாயாக.

* குபேர ஸ்த்ர்யம்பக ஸக: (அமரகோசம்). சிவன், குபேரனின் நட்பைக் கொண்டிருக்கிறான்.
* வித்யாரம்பத்தில் கணபதி விசேஷமாக பூஜிக்கப்படுகிறான். வித்யை கிடைப்பதற்கு அஞ்ஞானமே விக்னமாக (தடையாக) இருக்கிறது. அதன் பரிகாரம் விக்னேசனிடமிருந்தே.
* நெலெகொள்ளோ என்று, விஸ்மரணை (அவனைப் பற்றிய மறதி) வராமல் இருக்கட்டும் என்று பிரார்த்திக்கிறார்.

ககுபீ[4]ஶ நின்ன ஸேவகன பி[3]ன்னப[1]வ சி
த்தக்கெ தந்து[3] ஹரிய நெனெவந்தெ | நெனெவந்தெ கருணிஸோ
அகுடிலாத்மகனே அனுகா[3]ல ||4-(4)

ககுபீஶ = பூதாகாஷத்தின் தலைவனே. நின்ன ஸேவகன = உன்னை வணங்குபவனான என். பின்னபவ = பிரார்த்தனையை. சித்தக்கெ தந்து = மனதில் வந்து (தரிசனம் அளித்து) . அகுடிலாத் மகனே = தோஷங்கள் அற்றவனே. ஹரிய = ஸ்ரீஹரியை அனுகால = எப்போதும். நெனெவந்தெ = நினைக்குமாறு. கருணிஸோ = அருள்வாயாக

முக்தியை நாடுவோர் செய்ய வேண்டிய ஸாதனாத்மக காரியங்களில் நிரந்தர ஹரிஸ்மரணை முக்கியமானதாகும். இந்த மஹத்வபூர்ண ஸித்தியை கணபதியிடம் வேண்டுகிறார்.

மாதங்க[3]வரத[3] ஜகன்னாத[2]விட்ட[2]லன ஸம்
ப்ரீதிந்த ப[4]ஜிஸி ஸாரூப்ய | ஸாரூப்யவைதி[3] வி
க்[2]யாதியுதனாதே[3] ஜக[3]தொ[3]ளு ||5-(5)

மாதங்கவரத = கஜராஜனுக்கு தரிசனம் அளித்த. ஜகன்னாத விட்டலன = உலக நாயகனான ஸ்ரீஹரியை. ஸம்ப்ரீந்த பஜிஸி =

பக்தியுடன் வணங்கி. ஸாரூப்ய = ஸமான ருபத்தை. ஐதி = பெற்று. ஜகதொளு = உலகத்தில். க்யாதியுதனாதெ = புகழ் பெற்றாய்.

கஜேந்திரனை, முதலையின் வசத்திலிருந்து காப்பாற்றிய ஸ்ரீஹரியே அனைத்து பிராணிகளிலும் இருந்து 'விஷ்வ-தைஜஸ' என்னும் பெயர்களால், விழிப்பு நிலை மற்றும் கனவு நிலைகளுக்கு ப்ரேரகனாக இருக்கிறான். இந்த இரு ரூபங்களும், ஒவ்வொன்றும் 19 முகங்கள் உள்ளதாகவும், அவற்றின் நடு முகம் கஜமுகமாகவும் இருக்கிறது. ஸ்ரீஹரியின் இந்த ரூபங்களின் வர்ணனை மாண்டூக உபநிஷத்தில் இருக்கிறது. விஷ்வ தைஜஸ ரூபத்தின் தியானத் தினால் கணபதி, கஜமுகன் ஆனான் என்று மாண்டூக பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வினாயகஸ்து விஷ்வஸ்ய த்யானாதைத் கஜவக்த்ரதாம் |
ததா தைஜஸத்யானாத் ... (மஹாயோக)

ஆகையால், இங்கு 'ஸாரூப்ய' என்றால் ஸாரூப்ய மோட்சம் அல்ல. சிவன், வாயிலில் நின்ற வினாயகனின் தலையை கத்தரித்து, பிறகு தூதர்கள் மூலமாக யானையின் தலையை கொண்டு வரச்செய்து, உடலோடு இணைத்து, உயிர் கொடுத்தான் என்று புராணத்தில் கதை இருக்கிறது.

ஸாரூப்ய = சமான ரூபம் அல்லது கஜமுகம். இந்தக் கதையை தெரிவிப்பதற்காக, ஸாரூப்ய என்றார் என்று அறியவேண்டும்.

நவக்கிரக ஸ்தோத்திரங்கள்

2. ஸ்ரீசூரியதேவரின் ஸ்துதி

ஆதி^{3}த்ய தே^{3}வ த்வத்பாத^{3}யுக^{3}ளகெ அபி^{4}
வாத^{3}னவ மாள்பே அனுதி^{3}ன | அனுதி^{3}னதி^{3} ஸஜ்ஜனர
வ்யாதி^{4}க^{3}ள களெது^{3} ஸுக^{2}வீயோ ||1-(6)

ஆதித்யதேவ = ஹே சூர்யதேவனே. த்வத்பாதயுகளகெ = உன் பாத கமலங்களுக்கு. அனுதினதி = தினமும். அபிவாதனவ = நமஸ்காரத்தை. மாள்பே = செய்கிறேன். ஸஜ்ஜனர = சுஜீவிகளின்.

வ்யாதிகள = நோய்களை. களெது = போக்கி / பரிகரித்து. ஸுகவீயோ = தேக நலனைக் கொடு.

* சஜ்ஜனர்களின் மோட்ச ஸாதனைக்கு நவக்கிரகங்களின் அருள் மிகவும் அவசியம். கிருஹாந்தர்கதனான விஷ்ணுவே ஸ்தோத்திர த்தின் முக்கிய விஷயம் என்று அறியவேண்டும்.

* சாந்தோக்ய உபநிஷத்தில் 'அஸௌ வா ஆதித்யோ தேவமது' என்று துவங்கும் 'மதுவித்யை'யில், ஆதித்யனின் அந்தர்கதனான ஆதித்ய நாமக விஷ்ணுவே 'மது' நாமகன் என்று சொல்லப் பட்டிருக்கிறது. 'மது' என்றால், சுகத்தைக் கொடுப்பவன். தத்தம் யோக்யதைக்கேற்ப பகவத் உபாசனை செய்து பலன் கிடைக்கவேண்டுமெனில், தேகத்தில் ரோகாதி உபத்திரவங்கள் இருக்கக் கூடாது. தீர்க்காயுசும் வேண்டும். துர்மரணங்களால் நடுவில் தடை வரக்கூடாது.

ஒரு மாதத்திற்கு ஒருவர் என, 12 சூரியர்கள் இருக்கின்றனர். 'ஆதித்யானாம் ப்ரார்த்தனேன தத்கம் ம்ருத்யுமபானுதேத்' என்னும் பாஷ்ய பாகத்தில் ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதர் ஆதித்யரை பிரார்த்தித்து, வரவிருக்கும் நோய்களையும், துர்மரணத்தையும், பரிகரித்துக் கொள்ள வேண்டும் என்கிறார். ஆதித்யரின் தரிசனம், அவன் அந்தர்கதனான மது நாமக ஸ்ரீஹரியின் பிரசாதத்தையும் கிடைக்கச் செய்கிறது. அது, நிரந்தரமான பகவத் உபாசனைக்கு மிகவும் அவசியமான சுக, சாந்திகளை கொடுக்கிறது.

ஸஞ்ஞாரமண நினகெ[3] விக்[3]ஞாபிஸுவெனு ஸ
ர்வக்[3]ஞ நீனெந்து[3] ஸர்வத்ர | ஸர்வத்ர எனகெ[3] பிர
ம்மஞான ப[4]குதி கருணிஸோ ||2-(7)

ஸஞ்ஞாரமண = ஸஞ்ஞாதேவியின் பதியான ஹே ஸூர்ய தேவனே. ஸர்வக்ஞ நீனெந்து = நீ சர்வக்ஞன் என்னும் காரணத்தால். நினகெ விக்ஞாபிஸுவெனு = உன்னிடம் வேண்டிக் கொள்கிறேன். ஸர்வத்ர = அனைத்து இடங்களிலும். எனகெ = எனக்கு. பிரம்மஞான = அனைத்து கல்யாணகுண பரிபூர்ணனான நாராயணனின் மகிமைகளின் ஞானத்தையும். பகுதி = (அதிலிருந்து

வரும்) த்ருட பக்தியையும். கருணிஸோ = தயவு செய்து கொடுக்கவும்.

* ஞான, பக்திகளின் வளர்ச்சி என்பது, சூர்யனின் அந்தர்கதனான காயத்ரி நாமக ஸ்ரீஹரியின் சேவையினாலேயே கிடைக்கும்.
* பூமி, அந்தரிக்ஷம் மற்றும் ஸ்வர்க்க என்னும் மூன்று உலகங்களுக்கும் ஒளி கொடுப்பவன் சூரியன். அந்த உலகத்தின் பிரஜைகளை வாழ வைப்பவன். தேகத்தில் கண்ணிற்கு அபிமானி. அனைவரின் கர்மங்களின் சாட்சி என்று சொல்லப்படும் தேவதை களில் ஒருவன். 'ஜகத்சக்ஷு' என்னும் பெயரைக் கொண்டவன். இந்த காரணங்களால் சர்வக்ஞன். இவனின் அந்தர்யாமி நாராயணனே 'நிருபசரித சர்வக்ஞன்'.

ஸூரிக³ம்யனெ வாக் ஶரீரபு³த்தி³ஜவாத³
பார தோ³ஷக³ள எணிஸதெ³ | எணிஸதெ³ ப⁴கவந்த
நாராத⁴னெயனித்து கருணிஸோ ||3-(8)

ஸூரிகம்யனெ = ஞானிகளால் வணங்கப்படுபவனான ஹே சூர்யதேவனே. வாக் ஶரீரபுத்திஜவாத = வசன, தேக, மனஸ் ஆகிய மூன்று கரணங்களால் வரும். அபார தோஷகள = அபார தோஷங்களை; எல்லைகளற்ற தவறுகளை; எணிஸதெ = கவனிக்காமல் (புறக்கணித்து). பகவந்தன = உன் அந்தர்யாமியான நாராயணனின். ஆராதனெயனு = தியானாதி ரூப சேவைகளை. இத்து = கொடுத்து. கருணிஸோ = அருள்வாயாக.

* ஸூரிகம்ய என்பது ஸூர்ய சொல்லிலிருந்து வருவது. ஸூரிகள் என்றால் ஞானிகள். சூரியனில் இருக்கும் சூர்ய என்னும் சொல்லால் அழைக்கப்படுபவன் நாராயணனே. அவனே ஞானி களால் வணங்கப்படுபவன். அவனை அடைவதற்கே இந்த சூரியனின் அருள் நமக்கு வேண்டும்.

* தேகத்தை விட்டு புறப்பட்ட ஜீவன், செல்லும் மார்க்கத்தை சந்திர கதி, சூரிய கதி என்று இரு கதிகள் இருக்கின்றன என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. சூர்ய கதி என்பது, ஞானிகளின் சர்ம தேகம் (இறுதியான தேகம்) புறப்பட்டு தம் இடத்தை சேரும்

வழியாக இது இருக்கிறது. அந்த வழியில் கிடைக்கும் லோகங்களில் சூரிய லோகம் முக்கியமானதாகும்.

* வசன, தேக, மனஸ் ஆகிய மூன்று கரணங்களால் வரும், அனைவரின், அனைத்து கர்மங்களின் சாட்சி (ப்ரத்யட்சமாக பார்ப்பவன்) ஸ்ரீஹரியின் அருளால் சூரியதேவனே, அந்த அனைத்து கர்மங்களின் குண தோஷங்களை அறிகிறான். சூரியன் ‘கர்மசாட்சி’ என்னும் ஞானத்தினால், துஷ்கர்மங்கள் படிப்படியாக குறைந்து போகின்றன. தோஷங்களை எண்ணாமல் என்னும் பிரார்த்தனை இதனாலேயே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஸ்ரீசந்திரதேவரின் ஸ்துதி

ரோஹிணீரமண மத்³தே³ஹ கே³ஹாதி³க³ள
மோஹ பரிஹரிஸி மனத³ல்லி | மனத³ல்லி க³ருட³
வாஹனன ஸ்மரணெயனு கருணிஸோ ||1-(9)

ரோஹிணிரமண = ரோஹிணிதேவியின் பதியான ஹே சந்திர தேவனே. மத்தேஹ கேஹாதிகள = என் தேகம், வீடு முதலான வற்றில் இருக்கும். மோஹ = இவை என்னுடையது, என் வசத்தில் இருப்பது என்னும் அஞ்ஞானத்தை. பரிஹரிஸி = போக்கி மனதல்லி = என் மனதில். கருடவாஹனன = கருடனையே வாகனமாகக் கொண்ட ஸ்ரீஹரி. ஸ்மரணெயனு = சிந்தனையை. கருணிஸோ = அருள்வாயாக

* விராட்புருஷனின் மனதிலிருந்து சந்திரன் பிறந்தான். (சந்திரமா மனஸோ ஜாத:). சேஷ, ஸுபர்ண, ருத்ரர் இவர்களுடன் மனோ பிமானி எனப்படுகிறான். யமதேவருடன் சேர்ந்து ஸ்ரோத்ர இந்திரியத்திற்கு அபிமானியாக இருக்கிறான். நான், என்னுடையது என்னும் மோகம், மனதில் வருவது. அந்த மோகத்தின் பரிகாரத்திற்காக சந்திரனில் இந்த பிரார்த்தனையை செய்கிறோம்.

* மனஸஸ்த்வ நிருத்தஸ்ச சந்த்ரஸ்சான்யே யதோதிதம் || -- பாகவத 3ம் ஸ்கந்த தாத்பர்யம். சந்திரன் மனோபிமானி என்பதற்கான ஆதாரம் இது.

* வைதிக (வேத சம்பந்தமான) விஷயங்களில் மனதை ஈடுபடுத்துபவன் கருடன். '... சேஷோ஽ஸௌ பாஞ்சராத்ரகம் | வைதிகம் கருடஸ்சேந்த்ரோ யக்ஞாதி விஷயம் மன:' (ஐதரேய பாஷ்யம்). வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பகவன் மகிமைகளை கேட்பதால் மோகம் பரிகாரம் ஆகிறது. இதற்காகவே கருட வாகன னின் ஸ்மரணையைக் கொடு என்று பிரார்த்தனை செய்கிறார்.

க்ஷீராப்^{3}திஜாத மாராரிமஸ்தக ஸத^{3}ன
வாரிஜோத்ப^{4}வன ஆவேஶ | ஆவேஶ பாத்ர பரி
ஹார கை^{3}ஸென்ன ப^{4}வதாப ||2-(10)

க்ஷீராப்திஜாத = பாற்கடலில் (தேவதைத்யர்கள் அமிர்தத்திற்காக கடையும் காலத்தில்) தோன்றிய. மாராரிமஸ்தக ஸதன = காமனின் எதிரியான சிவனின் தலையில் வசிக்கும். வாரிஜோத் பவன = தாமரையில் பிறந்தவனான சதுர்முக பிரம்மனின். ஆவேஶ பாத்ர = ஆவேசத்திற்கு யோக்யன் என்று சொல்லப்படும் ஹே சந்திரதேவனே. என்ன = என்னுடைய. பவதாப = சம்சார துக்கங்களை. பரிஹாரகெஸு = பரிகாரம் செய்வாயாக

* வெப்பத்தை குறைத்து குளிர்ச்சியைக் கொடுப்பது சந்திரனின் பொதுவான குணம்.
* அத்ரி ரிஷிகளின் மனைவி அனுசூயா தேவியில் பிரம்ம, விஷ்ணு, ருத்ரர் புத்ரர்களாக அவதரித்தபோது, விஷ்ணு 'தத்த'னாகவும், ருத்ரர் 'துர்வாச'ராகவும் அவதரித்தனர். பகவந்தனின் ஆணையைப் போல பிரம்மனுக்கு அவதாரம் இல்லை என்பதால், சந்திரனில் நிலைத்திருந்து அவதரித்தார். தன் ஆவேசத்திற்கு சந்திரனே தகுதி யானவன் என்று பிரம்மன் எண்ணினார். 'தத்தம் தூர்வாஸஸம் ஸோமம் ஆத்மேஷ பிரம்ம ஸம்பவான்' என்று பாகவதத்தில் இந்த மகிமை சொல்லப்பட்டிருக்கிறது.

த^{3}த்த து^{3}ர்வாஸானுஜாத்^{1}ரி ஸம்ப^{4}வனெ த்வ
த்^{3}ப்^{3}ருத்ய நானய்ய எந்தெ^{3}ந்து^{3} | எந்தெ^{3}ந்து^{3} ப்ரார்த்திஸுவெ
ஹ்ருத்தி^{1}மிர களெதெ^{3}ன்ன ஸந்தெயிஸோ ||3-(11)

தத்த துர்வாஸானுஜ = தத்த துர்வாஸரின் தம்பியான. அத்ரி ஸம்பவனெ = அத்ரியின் புத்திரனான ஹே ஸோமதேவனே.

எந்தெந்து = என்றைக்கும். த்வத்ப்ருத்ய நானய்ய = நான் உன் சேவகன். எந்தெந்து பிரார்த்திஸுவெ = தினமும் வேண்டுகிறேன். ஹ்ருத்திமிர = மனதில் இருட்டினை (மோகத்தை). களெது = போக்கி. என்ன = என்னை. ஸந்தெயிஸோ = காப்பாற்று (மன அமைதியைக் கொடு).

4. ஶ்ரீஅங்காரக ஸ்துதி

கோலபூ^{4}னந்த^{3}ன ப்ரவாள ஸமவர்ண கர
வாள ஸமகே^{2}ட^{1} நிஶ்ஶங்க | நிஶ்ஶங்கபாணி கு^{3}ரு
மெளளி நீ என்ன ஸந்தெயிஸோ ||1-(12)

கோலபூனந்தன = வராகரூபியான ஶ்ரீஹரி மற்றும் பூதேவியின் புத்ரனான. ஹே மங்கள, ப்ரவாள ஸமவர்ண = சங்கினைப் போல சிவப்பு வர்ணத்தில் இருக்கும். கரவாள நிஷ்ஷங்கபாணி = வாள் ஏந்தியும், அபய ஹஸ்தம் கொண்டும். ஸமகேட = ராகுவிற்கு சமனும். நிஷ்ஷங்க = பயத்தை தூர ஓட்டுபவனுமான. குருமெளளி = ப்ருஹஸ்பதியே தலைமையாக உள்ள. நீ = நீ. என்ன = என்னை. ஸந்தெயிஸு = காப்பாற்று

* நவக்கிரக தேவதைகள்: சூரியன், சந்திரன், மங்கள, புத, குரு, சுக்ர, சனி, ராகு & கேது.
* இவர்களில் தாரதம்யத்தில் குருவே சிறந்தவர். சசி, ரதி, அனிருத்த இவர்களுடன் ஒரே கக்ஷையில் இருக்கிறார்.
* சூர்ய, சந்திர இவர்கள் இருவரும் யம, ஷதரூபா தேவி இவர்களுடன் கீழ் கக்ஷையில் இருக்கிறார்.
* புத, சனி இருவரும் அனைவரை விடவும் குறைவான கக்ஷையில் இருக்கின்றனர். இதில், புதனை விட சனி அதமன்.
* மற்ற மங்கள, சுக்ர, ராகு, கேது இந்த நால்வரும் கர்மஜதேவதைகளின் சமூகத்தை சேர்ந்தவர்கள்.
* ராகுவிற்கு ‘கேட’ என்று இன்னொரு பெயர் உண்டு.
* அங்காரகனுக்கு ‘குஜ’ என்று இன்னொரு பெயர் உண்டு.

மங்களாஹ்வயனே ஸர்வேங்கிதக்ஞனே அந்த
ரங்க^{3}த^{3}லி ஹரிய நெனெவந்தெ | நெனெவந்தெ கருணிஸோ
அங்கா^{3}ரவர்ண அனுதி^{3}ன ||2-(13)

ஸர்வேங்கிதக்ஞனே = அனைத்து ஜீவர்களின் வினைப்பயன்களை அறிந்தவன்.. மங்களாஹ்வயனே = மங்கள என்னும் பெயர் உள்ள. அங்காரவர்ண = நெருப்புக் கங்கினைப் போல ஒளிரும் தேகம் கொண்ட ஹே அங்காரகனே, அந்தரங்கதலி = மனதில் (அமைதி யாக). ஹரிய = ஸ்ரீஹரியை. நெனெவந்தெ = நினைக்குமாறு (தியானிப்பதற்கு வழி செய்யுமாறு). அனுதின = தினமும். கருணிஸோ = அருள்வாயாக

* மனிதர்களின் ஆயுள், ஆரோக்ய, ஐஸ்வர்யாதிகளை கிரகங்களின் சஞ்சாரங்கள் கட்டுப்படுத்துகின்றன. கிரகங்களுக்கு இந்த சாமர்த்தியம், ஸ்ரீஹரியின் விசேஷ அருளால் கிடைத்திருக்கிறது. அனைத்து கிரகங்களுக்கும் பல-தாயகன், ஸ்ரீனிவாஸனே. 'ஸகல கிருஹ பல நீனே ஸரிஸிஜாக்ஷ' என்கிறார் ஸ்ரீபுரந்தரதாஸர். கிரகங்களின் சஞ்சாரத்தினால் வரும் பலாபலன்களை அறிவதற்கு, அங்காரகனின் ஸ்தானத்தை விசேஷமாக கவனிக்க வேண்டும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.
* எப்போதும் ஹரிஸ்மரணை மற்றும் தியான ஸித்திக்கு மங்களனின் பார்வை அவசியம் என்று சொல்லப்படுகிறது.

பௌ4ம ராஜனே த்வன் மஹாமஹிமே து1தி1ஸல்கெ1
பாமரனிக3ளவே எந்தெ3ந்து3 | எந்தெ3ந்து3 ஸஜ்ஜனர
காமிதார்த்த2வனு கருணிஸோ ||3-(14)

பௌம ராஜனே = ஹே பூமி புத்ரர்களில் சிறந்தவனே. த்வன் மஹாமஹிமெ = உன் மகாமகிமைகளை. துதிஸல்கெ = துதிப்பதற்கு. பாமரனிகெ = அல்பனான (அஞ்ஞானியான) எனக்கு. அளவே = சாத்தியமா? (இல்லை). எந்தெந்து = எப்போதும். ஸஜ்ஜனர = முக்தி யோக்ய ஜீவர்களின். காமிதார்த்தவனு = அபீஷ்டங்களை. கருணிஸோ = நிறைவேற்றி அருள்வாயாக.

ஸ்ரீஹரியிடம் தம் பக்தி, ஞான, ரூப ஸாதனைக்கு தடையாக வரும் பிரச்னைகளை பரிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதே சஜ்ஜனர்களின் முக்கியமான நோக்கமாகும். அதையே அனைத்து சஜ்ஜனர்களின் முகமாக, ஸ்ரீதாஸார்யார் இங்கு பிரார்த்திக்கிறார்.

5. ஸ்ரீபுத ஸ்துதி

பு3த4னே நீ ஸுகு3ணவாரிதி4யெந்து3 பி3ன்னயிபே
க்ஷுதெ4ய பரிஹரிஸி ஸுக்ஞான | ஸுக்ஞான ஸத்ப4க்தி
ஸுதெ4ய பானவனு கருணிஸோ ||1-(15)

புதனே = ஹே புததேவனே. நீ = நீ. ஸுகுணவாரிதி எந்து = சத்குண நிதி என்று. பின்னயிபெ = வேண்டுகோள் விடுக்கிறேன். க்ஷுதெய = இந்த பசியை. பரிஹரிஸி = போக்கி. ஸுக்ஞான ஸத்பக்தி ஸுதெய பானவனு = சுத்தமான ஞான, பக்தி என்னும் அமிர்த பானத்தை. கருணிஸோ = அருள்வாயாக

* ஞான பக்திகளாலேயே விஷய சுகங்களால் ஆகும் துக்கங்கள் பரிகாரம் ஆகின்றன. இதற்கு வேறு வழியே இல்லை. ஆகவே, ஞான பக்திகளைப் பெறவேண்டும் என்பதே அனைத்து முக்தி யோக்யர்களான ஜீவர்களின் அந்தரங்க ஆசை (பசி). அவற்றைப் பெறுவதாலேயே இந்த பசி அடங்குகிறது. ஸ்வோத்தமர்களின் அருள் இல்லாமல், ஞானபக்த்யாதிகள் கிடைக்காது.

* புதன் ஸஸ்யாதிபதி ஆகையால், தியான ரூபத்து பலன்களைக் கொடுக்கிறான் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர். ஸாதனைக்கு புற பசியின் பரிகாரம் மிகவும் அவசியம்.

சந்திரனந்த3ன ஸதத வந்தி3ஸுவெ மன்மனத3
ஸந்தே3ஹ பி3டி3ஸய்யா மம தெ3ய்வ | மம தெ3ய்வ ஸர்வ கோ3
விந்த3னஹுதெ3ந்து3 திளிஸய்ய ||2-(16)

சந்த்ரனந்தன = சந்திரனின் ஸுதனான ஹே புதனே. ஸதத = நிரந்தரமாக. வந்திஸுவெ = உன்னை வணங்குகிறேன். மன்மதத = என் மனதின். ஸந்தேஹ = சந்தேகங்களை. பிடிஸய்யா = பரிகரிப் பாயாக. கோவிந்தனு = வேதங்களால் புகழப்படுபவனான ஸ்ரீஹரி. ஸர்வ = தேச, கால, குணங்களால் வியாப்தனும், மம தெய்வ = எனக்கு கதியைக் கொடுக்கக்கூடிய உத்தம தேவதையுமாக. அஹுதெந்து = இருக்கிறான் என்னும் உண்மையை. திளிஸய்ய = (எனக்கு) புரிய வை.

* 'ஸர்வம் ஸமாப்னோஷி ததோऽஸி ஸர்வ:' (கீதை). அனைத்து இடங்களிலும் வியாப்தனாக இருப்பதால், ஸ்ரீஹரி 'ஸர்வ' என்று அழைக்கப்படுகிறான். குணபூர்ணன் ஆனதாலும் அவன் ஸர்வன்.

* ராஜனின் அதிகாரத்தில், அவனின் மகனான அரசகுமாரனுக்கு, அந்தப் பதவி இருப்பதாலேயே, அனைத்து இடங்களிலும் சுற்று வதற்கு / நுழைவதற்கு அதிகாரம் இருப்பதைப் போல, சந்திரனின் அதிகாரத்தில், புதனுக்கும் இத்தகைய அதிகாரம் இருப்பதால், ஞானாதிகளின் தானத்திற்காக பிரார்த்தனை செய்வதற்கு இவன் தகுதியானவன் ஆகிறான்.

* 'ஸ்வோத்தமா குரவ: ப்ரோக்தா:' என்னும் ஆதாரத்தால், ஸ்வாவரர்கள் பிரார்த்தித்தால், உத்தமர்களின் அந்தர்கதனான பரமாத்மன், அந்த பக்தர்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றுகிறான்.

தாராத்மஜனெ மச்சரீரதொ³ளு நெலெகொ³ண்டு
தோரோ ஸஜ்ஜனர ஸன்மார்க்க³ | ஸன்மார்க்க³ தோரி உ
த்தா⁴ரகெ³ய்ஸென்ன ப⁴வதி³ந்த³ ||3-(17)

தாராத்மஜனே = தாரையின் மகனான ஹே புததேவனே. மச்சரீர தொளு = என் சரீரத்தில். நெலெகொண்டு = நின்று. ஸஜ்ஜனர = சுஜீவிகளின். ஸன்மார்க்க = உத்தம மார்க்கத்தை. தோரோ = காட்டு (அறிய வை). ஸன்மார்க்க தோரி = அப்படியே நன்மார்க்கத்தைக் காட்டி. என்ன = என்னை. பவதிந்த = சம்சார சாகரத்திலிருந்து. உத்தாரகெய்ஸு = காப்பாற்றுவாயாக.

தாராதேவி ப்ருஹஸ்பத்யாசார்யரின் மனைவி. சந்திரன், ஸ்வோத்தமரான ப்ருஹஸ்பதிகளின் மனைவியை சேர்ந்தான். பிரம்மதேவன், ஒரு சிறந்த காரணத்தால் நடைபெற்ற இந்த செயலின் முரண்பாட்டினை பரிகரித்து, தாரையை ப்ருஹஸ்பதி யிடம் ஒப்படைத்தான். தாரை, பிரம்மனால் அருளப்பட்டு, மறுபடி பவித்ரளாக ப்ராத: ஸ்மரணீயளானாள் (முன்பு போலவே ஆனாள்). புதனால் உலகத்தில் சந்திர வம்சம் வளர்ந்தது. அந்த வம்சத்தில் ஸ்ரீகிருஷ்ணனே பிறந்தான்.

6. ஸ்ரீகுரு ஸ்துதி

நுதிஸி பே^{3}டு^{3}வெ ப்^{3}ருஹஸ்பதி கு^{3}ருவெ என்ன து^{3}
ர்மதிய பரிஹரிஸி ஸுக்ஞான | ஸுக்ஞானவித்து ஸ்ரீ
பதிய தோரென்ன மனத^{3}ல்லி ||1-(18)

ப்ருஹஸ்பதி குருவே = ஹே தேவகுருகளான ப்ருஹஸ்பதி ஆசார்யரே. நுதிஸி = போற்றி. பேடுவே = வேண்டிக் கொள்கிறேன். என்ன = என்னுடைய. துர்மதிய = துர்புத்தியை. பரிஹரிஸி = போக்கி. ஸுக்ஞானவித்து = சுத்தமான ஞானத்தைக் கொடுத்து. என்ன = என். மனதல்லி = மனதில். ஸ்ரீபதிய = லட்சுமிபதியான நாராயணனை. தோரு = காட்டு

ப்ருஹஸ்பதி, தாரதம்யத்தில் தாராதேவியின் சம கக்ஷையில் இருப்பவன். அவாந்தர மனோபிமானியாகவும் இருக்கிறான். தர்ம காரியங்களில் ஈடுபாடு உண்டாவதற்கு இவனின் கருணையை வேண்ட வேண்டும்.

ஸுரராஜ கு^{3}ருவெ த்வச்சரணாரவிந்த^{3}க^{3}ளி
கெ^{3}ரகி^{3} பி^{3}ன்னயிபெ இளெயொளு | இளெயொளுள்ளகி^{2}ள ப்^{3}ராம்ம
ணர ஸந்தெய்ஸோ த^{3}யதி^{3}ந்த^3 ||2-(19)

ஸுரராஜ குருவே = தேவேந்திரனின் குருவே. த்வச்சரணாரவிந்த களிகெ = உன் பாத கமலங்களை. எரகி = வணங்கி. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன். இளெயொளுள்ள = பூமியில் இருக்கும். அகிள பிராம்மணர = அனைத்து பிராமணர்களையும். தயதிந்த = கருணையுடன். ஸந்தெய்ஸோ = காப்பாற்று

* ப்ருஹஸ்பதி, பிராமண வர்ண மற்றும் பிராமண தர்மங்களின் அபிமானி.
* தேவேந்திரனின் குருவானதால், தாரதம்யத்தில் இந்திரனைவிட உத்தமர் என்று நினைக்கக் கூடாது. பிரம்மண்யதேவ என்னும் பெயர் கொண்ட ஸ்ரீஹரி, பிராமணர்களில் சிறப்பு சன்னிதானம் கொண்டு, அவர்கள் மூலமாக மற்ற பிரஜைகளுக்கு அருள்கிறான்.

பிராமணர்களின் பூஜ்ய பாவனை எப்போதும் எல்லாருக்கும் இருக்க வேண்டும் என்பதை உலகத்திற்குக் காட்ட ‘வர்ணானாம்

பிராம்மணோ குரு:' என்று சொல்லியிருக்கிறான். ஆகையால், பிராமணர்களை குரு ஸ்தானங்களில் வைத்து, உத்தமர்களால்கூட வணங்கப்படுமாறு வைக்கிறான். உத்தமர்கள் கொடுக்கும் கௌரவம் மற்றும் பூஜாதிகளை பிராமணர்களின் அந்தர்யாமியான தானே ஏற்றுக் கொள்கிறான்.

ப்ருஹஸ்பதிகளைவிட குறைவானவரான விஷ்வரூபாசார்யரை, சில சமயங்களில், ப்ருஹஸ்த்யாசார்யரின் ஸ்தானத்தில் ஆசார்யராக இருக்குமாறு வேண்டி, அப்படியே செய்திருக்கிறான். 'அப்யச்யுதோ குருத்வாரா ப்ரஸாதக்ருத்' மற்றும் 'குருப்ரஸாதோ பலவான்' ஆகிய ஆதாரங்கள் மேற்சொன்ன ஹரி சங்கல்பத்தையே விளக்குகின்றன.

தாரா ரமணனெ மத்பா4ர நின்னது3 மஹா
காருணிக நீனெந்து3 பி3ன்னயிபெ | பி3ன்னெயிபெ து3ரித1வ நி
வாரிஸி தோரோ தவ ரூப ||3-(20)

தாராரமணனெ = தாராதேவியின் பதியான ஹே ப்ருஹஸ்பதி களே. மத்பார = என்னை காப்பாற்றும் பாரம். நின்னது = உன்னுடையது. மஹா காருணிக நீனெந்து = நீ கருணைக்கடல் என்று சொல்வதால். பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன். துரிதவ = பாபங்களை. நிவாரிஸி = பரிகரித்து. தவ ரூப = உன் ரூபங்களை. தோரோ = காட்டுங்கள் (தரிசன பாக்கியத்தைக் கொடுங்கள்)

தேவதைகளின் சாட்சாத் தரிசனம் அவர்களின் பூரண அனுக்கிரகத் தைக் கொடுக்க வல்லது. ப்ருஹஸ்பதிகள் மஹாஞானிகள். 'வாசஸ்பதி' என்பது அவரது காரணப் பெயர். தர்ம, ஞான, பக்திகளின் வளர்ச்சிக்கு ஸாதனையான சுத்த வசனங்களின் உச்சாரணைகளுக்கும், அதாவது 'வேத அத்யயனங்களும்' இவரின் அருள் மூலமாகவே கிடைக்கின்றன.

7. ஸ்ரீசுக்ர ஸ்துதி

ஶக்ராரிக3ள கு3ருவெ ஶுக்ரமுனிராய த3ர
சக்ராப்ஜ பாணி கு3ணரூப | கு3ணரூப வ்யாபார
ப்ரக்ரியவ திளிஸோ ப்ரதிதி3ன ||1-(21)

ஶக்ராரிகள குருவெ = இந்திரனின் எதிரிகளின் (தைத்யர்களின்) குருகளான. ஶுக்ரமுனிராய = ஹே ஸ்ரீஹரியின் குணரூப க்ரியாதி களை போற்றிப் புகழ்பவரான சுக்ராசார்யரே. தரசக்ராப்ஜபாணி = சங்கு, சக்ர, பத்மங்களை தரித்திருக்கும் கைகளைக் கொண்ட ஸ்ரீஹரி. குணரூப வியாபார ப்ரக்ரியவ = குணரூப க்ரியைகளின் வழிமுறைகளை. ப்ரதிதின = தினந்தோறும். திளிஸோ = எனக்குக் காட்டுவாயாக

* சுக்ராசார்யர், ஸ்வரூபத்தினால் கர்மஜதேவதைகள். தைத்ய குருகள். மஹா தபஸ்விகள். ம்ருத ஸஞ்சீவினி முதலான மஹா வித்யைகளை அறிந்தவர். தைத்யர்களுக்கு இவரில் குரு என்னும் புத்தியைக் கொடுத்து, இவரின் தபஸ் சக்தியின் பலனைப் பெறுவதின் மூலம், தேவ-த்வேஷத்தை வளர்த்துக் கொண்டு, தமஸ்ஸை அடையுமாறு ஸ்ரீஹரி தீர்மானித்து, சுக்ராசார்யரை தைத்ய குரு ஸ்தானத்தில் வைத்திருக்கிறான். ஸ்ரீஹரியின் இத்தகைய சங்கல்பத்தை நிறைவேற்றுவதால், அவர் ஸ்ரீஹரியின் அருளுக்கு பாத்திரமாகிறார்.

* 'ஷுக்ரநீதி' என்று புகழ் பெற்ற இவரது நீதி சாஸ்திரம், மோட்சத்திற்கு தகுதி இல்லாத தைத்யர்களுக்கு மிகவும் பிடித்த மானது. ஸ்ரீஹரியின் சங்கல்பத்திற்கேற்ப, தைத்யர்களுக்கு ஜய-காலம் (தமோ குணத்தின் வளர்ச்சி காலம்) வரும் வரைக்கும், அவர்களை லௌகீக நிர்பந்தங்களில் வைத்து, அவர்களால் சஜ்ஜனர்களுக்கு ஆகும் துன்பங்களை குறைப்பதற்கு இந்த நீதி சாஸ்திரம் உதவுகிறது.

* ராஜ்யம், ஐஸ்வர்யங்கள் ஆகியவை கிடைப்பதற்காக சுக்ராசார்யர் தைத்யர்களுக்கு அருள்கிறார். ஆனால், ஞான பக்த்யாதிகளைக் கேட்கும் சஜ்ஜனர்களையும் அருள்கிறார். இவர் மகிழ்ந்தால், தைத்யர்களால் வரும் துன்பங்கள் பரிகாரம் ஆவதுடன், ஞான பக்தியாதிகளும் கிடைக்கின்றன.

கவிகுலோத்தம்ஸ பா^{4}ர்க்க^{3}வ பே^{3}டி^{3}கொம்பெ^{3} பா^{4}
க^{3}வத பா^{4}ரதவெ மொத^{3}லாத^3 | மொத^{3}லாத^3 ஶாஸ்திரக^{3}ள
ஸ்ரவண ஸுக^{2}வெனகெ^{3} கருணிஸோ ||2-(22)

கவிகுலோத்தம்ஸ = ஞானிகுல ஸ்ரேஷ்டரான. பார்க்கவ = ஹே சுக்ராசார்யரே. பேடிகொம்பே = உம்மை வேண்டிக் கொள்கிறேன். பார்க்கவ பாரத மொதலாத ஶாஸ்திரகள = பாகவத, பாரத முதலான சாஸ்திரங்களின். ஸ்ரவண சுகவ = கேட்பதால் கிடைக்கும் சுகங்களை. எனகெ = எனக்கு. கருணிஸோ = தயவு செய்து அருளவும்.

மஹாத்மர்களிடம் என்ன வேண்டிக் கொள்ளவேண்டும் என்பதை குறிப்பிடுகிறார். பாரத, பாகவாதாதிகள் மிகவும் விசேஷமாக பகவன் மகிமைகளையே விளக்குகின்றன. இவற்றைக் கேட்பதும் சஜ்ஜனர்களுக்கு மகிழ்ச்சியை தரக்கூடியதாகும். இவற்றைக் கேட்பதால் பெறவேண்டியவை ஞான, பக்திகள். அவற்றை பெறுவதற்கு உதவும் ஸ்ரவணமும் சுகப்ரதமே என்பதை சொல்வதற்காக ‘ஸ்ரவணசுக’ என்று குறிப்பிடுகிறார்.

நிக^{3}மார்த்த^2 கோவித^{3}னெ ப்^{4}ருகு^{3} குலோத்தம்ஸ கை
முகி^{3}து^{3} பே^{3}டு^{3}வேனோ தெ^{3}ய்வக்ஞ । தெ^{3}ய்வக்ஞ ஹரிய ஒ
லக^{3}த^{3}ல்லி பு^{3}த்தி^{4} இரலெந்து^{3} ।।3-(23)

நிகமார்த்த கோவிதனெ = வேதாதி சாஸ்திர ஞானத்தில் நிபுணனான. ப்ருகு குலோத்தம்ஸ = ப்ருகு குலத்தில் சிறந்தவனான. தெய்வக்ஞ = நம் கிரக கதிகளை (அதிர்ஷத்தின் கதியை) அறிந்தவரான ஹே ஆசார்யரே. ஹரிய ஓலகதல்லி = ஸ்ரீஹரியின் பரிவாரத்தை சேர்ந்தவரான பிரம்ம வாயு முதலான தேவதைகளில். எந்தூ = என்றைக்கும். புத்தி இரலி = (தாரதம்யத்தை அறிந்து) அவரை வணங்கும் புத்தி ஸ்திரமாக இருக்கட்டும். கை முகிது = கை கூப்பி. பேடுவேனு = வேண்டிக் கொள்கிறேன்

ஸ்ரீஹரியின் பரிவாரத்தை சேர்ந்தவரான பிரம்ம வாயு முதலானவர்களைக்கூட ‘தாரதம்ய பரிக்ஞானே மஹாதாத்பர்ய விஷயதே’ என்று சொல்லியிருப்பதால், தரதம பாவங்களை அறிந்து பக்தியுடன் வணங்குவது மிகவும் அவசியம். அவரின் அருள் இல்லாமல் ஸ்ரீஹரியின் அருள் கிடைப்பது என்றும் சாத்தியமில்லை.

8. சனி ஸ்துதி

த[1]ரணினந்த[3]ன ஶனைஸ்சர நின்ன பாதா[3]ப்ஜ
க்கெரகி[3] பி[3]ன்னயிபெ ப[3]ஹுஜன்ம । ப[3]ஹுஜன்ம க்ருதபாப
பரிஹார மாடி[3] ஸுக[2]வீயோ ।।1-(24)

தரணி நந்தன = சூர்ய புத்ரனான. ஶனைஸ்சர = சனிதேவனே. நின்ன பாதாப்ஜகெ = உன் பாத கமலங்களை. எரகி = வணங்கி. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன். பஹுஜன்ம க்ருதபாப = பற் பல பிறவிகளில் செய்த பாவங்களை. பரிஹார மாடி = போக்கி. சுக வீயோ = சுகத்தைக் கொடுப்பாயாக

* கிரகங்களில் மிகவும் மந்தகதியைக் கொண்டவன் சனி. ஆகையால், சனைஸ்சரன் என்னும் பெயர். (சனை: = மெதுவாக; சரித = சஞ்சரிப்பவன்).
* ஸ்ருஷ்டியின் துவக்கத்திலேயே தத்தம் பதவிகளைப் பெற்றவர் கள் தத்வாபிமானி தேவதைகள். பிரம்மனின் ஆயுள் காலத்தில் தங்கள் கர்மங்களால் தேவத்வத்தை (தேவ பதவியை) பெறுபவர்கள் கர்மஜ தேவதைகள்.

உதாரணம்: பலி சக்ரவர்த்தி அடுத்த ஸாவர்ணி மன்வந்தரத்தில் இந்திர பதவிக்கு வருகிறான். இது தன் ஸாதன சாமர்த்தியத்தால் மற்றும் அதிலிருந்து வந்த ஹரி பிரசாதத்தினால். பலி, தத்வா பிமானியான இந்திரனைப் போல (புரந்தர), தத்வாபிமானி ஆக வில்லை. இதைப் போலவே சனியும், கர்மஜ தேவதைகளாக இல்லாமல், தேஹாபிமானி என்று சொல்லப்படுகிறான்.

ஏனெனில், புஷ்கர (கர்மாபிமானி) வரையிலான தேவதைகள், மூல தத்வத்திலிருந்து வேறுபடுத்த முடியாத, அந்த தத்வத்தின் அம்சங்களுக்கு (கலைகளுக்கு) அபிமானிகள் மட்டுமே ஆகின்றனர். வியாப்தமான தத்வங்களுக்கு இல்லை. இந்த வேறுபாட்டினால், இவரையும் தத்வாபிமானிகள் என்று சில இடங்களில் சொல்லப் படுகிறது.

ப்ருத்வி தத்வத்திற்கு 'தராதேவி' அபிமானி. மனுஷ்ய தேகமானது, பார்த்திவ (நில / பூமி) அம்சத்தை அதிமாகக் கொண்டது.

தேகத்தில் இருக்கும் ப்ருத்வி கலைகளுக்கு சனி அபிமானி. இந்த காரணத்தால் சனி தேகத்தின் அபிமானி எனப்படுகிறான். தேகத்தை பிடித்திருக்கும் பாவங்களின் பரிகாரத்திற்காக சனிதேவனின் அருளைப் பெறவேண்டியது சரியான செயலே ஆகும். தாரதம்யத்தில் புஷ்கரனைவிட சிறிது உத்தமன் சனி.

சா2யா தனுஜ மன: கா1ய க்லேஶக3ளிந்த3
ஆயாஸ படு3வந்த2 ஸமயத3லி | ஸமயத3லி லக்ஷ்மீ நா
ராயணன ஸ்மரணெ கருணிஸோ ||2-(25)

சாயாதனுஜ = சாயாதேவியின் புத்திரனான ஹே சனிதேவனே.. மன: காய க்லேஶகளிந்த = மானசிக மற்றும் தைஹிக துக்கங் களால். ஆயாஸ படுவந்த ஸமயதலி = சிரமப்படும் காலங்களில். லட்சுமி நாராயணன = ஸ்ரீ லட்சுமி நாராயணனின். ஸ்மரணெ = ஸ்மரணையை. கருணிஸோ = அருள்வாயாக

* விவஸ்வான் என்பது சூரியனின் பெயர். அவனுக்கு சஞ்ஞா மற்றும் சாயா என்று இரு மனைவிகள். இந்த சாயாதேவியிடம் பிறந்தவன் சனைஸ்சரன்.

* சூரியனின் தேஜஸ்ஸினை தாங்கமுடியாமல், சஞ்ஞாதேவி, சூரியனை விட்டு தன் பிறந்த வீட்டுக்குச் செல்ல, அப்போது தன்னைப் போலவே இருக்கும் இன்னொரு ஸ்த்ரியை (சாயா தேவியை) நிர்மாணித்து, தான் புறப்பட்டுச் சென்றாள். இந்த விஷயம் சூரியனுக்கு தெரியக்கூடாது என்று சாயாதேவியிடம் சொல்லிவிட்டுச் சென்றாள். அந்த சந்தர்ப்பத்தில், சூரியன் – சாயாதேவியிடம் பிறந்தவன் சனைஸ்சரன்.

இத3னெ பே3டு3வெ பதோ3பதி3 புஷ்கரன கு3ருவெ
ஹ்ருத3ய வத3னத3லி ஹரிமூர்த்தி | ஹரிமூர்த்தி கீர்த்தனெக3
ளொத3க3லெனகெ3ந்து3 பி3ன்னயிபெ ||3-(26)

புஷ்கரன குருவெ = புஷ்கரனின் குருவான ஹே சனிதேவனே. ஹரிமூர்த்தி கீர்த்தனெகளு = ஸ்ரீஹரியின் ரூபம் மற்றும் அவனின் ஸ்தோத்திரங்கள். ஹ்ருதய வதனதலி = மன, வசனங்களில். எனகெ = எனக்கு. ஒதகலெந்து = கிடைக்குமாறு. பேடுவெ = வேண்டிக்

கொள்கிறேன். இதனெ = இதையே. பதோபதி = திரும்பத் திரும்ப. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன்

தாரதம்யத்தில், சனி, புஷ்கரனைவிட மேல் கக்ஷையில் இருப்பவன். ஸ்வோத்தமன் ஆனதால், புஷ்கரனுக்கு சனி குரு ஆகிறான். ஹரி மூர்த்திகளின் தரிசனம், ஹரிஸ்மரணை ஆகியவ ற்றிற்கு சனியை வணங்குவது பொருத்தமாகவே இருக்கிறது.

ஐஹிக பாரத்ரிகதி^{3} ந்ருஹரி தா^{3}ஸர நவ
க்^{3}ரஹ தே^{3}வதெக^{3}ளு த^{3}ணிஸோரெ | த^{3}ணிஸோரெ இவரன்னு
அஹிதரெந்தெ^{3}னுத கெட^{3}பே^{3}டி^{3} ||4-(27)

அஹிகபாரத்ரிகதி = இஹபரங்களில். நவக்ரஹ தேவதெகளு = நவக்கிரக மண்டலங்களின் அபிமானி தேவதைகள். ந்ருஹரிதாஸர = நரஹரிய பக்தர்களை (பகவத் பக்தர்களை). தணிஸோரெ = துன்பப்படுத்துமா? (என்றும் கிடையாது).. இவரன்னு = இந்த தேவதைகளை. அஹிதரு = துன்பம் விளைவிப்பவர்கள். எந்தெனுத = என்று சொல்லிக்கொண்டு (நினைத்து). கெடபேடி = கெட்டுப் போகாதீர்கள். என்று பக்தர்களை எச்சரிக்கிறார்.

* ஸ்ரீஜகன்னாததாஸரின் உபாஸ்ய தேவதை ஸ்ரீநரசிம்மன். ஸ்ரீஜகன்னாத விட்டல அபின்னனே நரஹரி. (இருவரும் ஒன்றே. ஐக்ய சிந்தனை).

* ஹரிபக்தர்களை, எந்த கிரகங்களோ, என்றும் துன்புறுத்துவ தில்லை. அப்படி அவர்கள் நம்மை துன்புறுத்துகிறார்கள் என்று சொல்பவர்கள் தாமே கெடுகிறார்கள். சனியால் பெரும் விபத்துகள் (ஆபத்துகள்) வருகிறதென்று பலரும் நினைக்கிறார்கள். அந்த பயத்தை விலக்கவேண்டும் என்று தாஸார்யா் ஹரிபக்தர்களை எச்சரிக்கிறார். 'இது என்ன சனியின் தொல்லை' என்று சொல்வது அஞ்ஞானிகளுக்கு மட்டுமே சரியாக இருக்கும்.

* ஹரிகதாம்ருதசாரத்தில், ஸ்ரீஜகன்னாததாஸர் 'ஹரிகுருகளர்ச் சிஸத பாபாத்மரனு ஸிக்ஷிஸலோஸுக ஷனைஸ்சரனெனிஸி துஷ்டலகளீவெ' என்கிறார். ஜீவர்கள், தம் துஷ்கர்மங்களின் பலனை அனுபவிக்கும் காலம் வரும்போது, பலன்களைக் கொடுப்பவனான ஸ்ரீஹரி, கிரக கதிகளை காரணமாகக் காட்டி, அந்த பலன்களைக் கொடுக்கிறான்.

ஜகன்னாத விட்டலன ப³தி³க³ரிவரஹுதெ³ந்து³
ஹக³லிருளு பி³ட³தெ³ நுதிஸுவ | நுதிஸுவ மஹாத்மரிகெ³
ஸுக³திக³ளனித்து ஸலஹோரு ||5-(28)

ஜகன்னாதவிட்டலன = உலக நாயகனான ஸ்ரீவிட்டலனின். பதிகரு = பரிவாரத்தினர். இவரு = இந்த நவக்கிரக தேவதைகள். அஹு தெந்து = ஆகியிருக்கின்றனர் என்று. ஹகலிருளு = தினந்தோறும். பிடதெ = தவறாமல். நுதிஸுவ = சொல்லும். மஹாத்மரிகெ = மஹத் என்று அழைக்கப்படும் ஸ்ரீஹரியை எப்போதும் மனதில் தரித்திருக்கும் (நிரந்தர ஹரிஸ்மரணை செய்யும்) பக்தர்களுக்கு. ஸுகதிகளனு = சத்கதிகளை. இத்து = கொடுத்து. ஸலஹோரு = அருள்கின்றனர்.

தினந்தோறும் நவக்கிரக ஸ்தோத்திரங்களை பாடுவதால், கிரகாந்தர் கதனான ஷிம்ஷுமார ரூபி ஸ்ரீஹரி, மகிழ்கிறான். இதன் பலன் என்னவெனில், ஒருவருக்கு வரவிருக்கும் துஷ்கர்மபல போகங்களை போக்கிக் கொண்டு, அல்லது முடிந்தவரை குறைத்துக் கொண்டு, தம் ஸாதனையை நன்றாக செய்துகொண்டு தத்தம் யோக்யதைக்கேற்ப ஞானபக்திகளை சம்பாதிப்பதற்கு தகுதி பெறுகிறார் என்று சஜ்ஜனர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறார். அது போலவே, காலை வேளைகளில் சொல்லப்படும் ஸ்தோத்திரங் களில் முந்தைய காலத்து ஞானிகள் நவக்கிரக தேவதைகளின் ஸ்துதிகளை தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

இங்கு கிரக ஸ்தோத்திரங்கள் என்று பெயர் வைத்துவிட்டு, வெறும் ஏழே கிரகங்களின் ஸ்துதிகளை மட்டும் பாடியிருக்கிறார். ராகு, கேதுகள் சாயா கிரகங்கள் ஆகையால், அவர்கள் தாம் எங்கு, யாருடன் சேர்ந்து இருக்கின்றனரோ, அந்த கிரகங்களின் பல, பல வீனங்களை அனுசரித்து பலாபலன்களைக் கொடுக்கின்றனர் என்பது ஜோதிடர்களின் அபிப்பிராயம் இருப்பதால், ஸ்ரீதாஸர் அவர்களுக்கு தனியாக ஸ்தோத்திரம் செய்யவில்லை அல்லது நமக்கு அந்த இரு கிரகங்களின் ஸ்தோத்திரம் கிடைக்க வில்லையோ, தெரியவில்லை.

9. ஸ்ரீ துளஸி ஸ்தோத்திரம்

ப்^{3}ருந்தா^{3}வனி ஜனனி வந்தி^{3}ஸுவெ ஸதத ஜ
லந்த^{3}ரன ராணி கல்யாணி । கல்யாணி ஸ்ரீதுளஸி நிஜ
மந்தி^{3}ரெ எனகெ^{3} தயவாகெ^{3} ।।1-(29)

ஜலந்தரன ராணி = ஜலந்தரனின் மனைவியான. ப்ருந்தாவனி = பிருந்தாவனரூபியான (துளஸி கட்டெ). துளஸி நிஜமந்திரெ = துளஸிதேவிக்கு நிரந்தர இருப்பிடமான. கல்யாணி = மங்கள ஸ்வரூபளான. ஜனனி = ஹே தாயே ப்ருந்தே!. ஸதத = எப்போதும். வந்திஸுவெ = (உன்னை) வணங்குகிறேன். எனகெ = எனக்கு. தயவாகெ = கருணை காட்டுவாயாக.

ஸ்காந்த புராணத்தில், கார்த்திக மாத மஹாத்ம்யத்தில், ப்ருந்தையின் கதை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ப்ருந்தை, ஜலந்தர என்னும் தானவேந்திரனின் மனைவி. ‘தன் பதியின் ரூபத்தில் வந்து, இணைந்து, ஸ்ரீகிருஷ்ணனின் அருளுக்குப் பாத்திரமாகி, ஸ்ரீதுளஸிக்கு இருப்பிடமாகி, பக்தர்களால் பூஜிக்கப்படு’ என்ற வரத்தைப் பெற்றாள்.

பகவத் பக்தர்கள் தம் வீட்டில் முன்பாகத்தில், விருந்தானவத்தை நிர்மாணித்து, ஸ்ரீதுளஸியின் செடியை நட்டு, வளர்த்து, தினமும் அதை வணங்கி பூஜிக்கின்றனர். வ்ருந்தாவனத்தில் (துளஸி கட்டெயில்) ப்ருந்தை சன்னிதானம் கொண்டிருந்து, பூஜையை ஏற்றுக் கொள்கிறாள். துளஸிகட்டையை (அங்கு சன்னிதானம் கொண்டிருக்கும் ப்ருந்தையை) முதலில் பூஜித்து, பிறகு ஸ்ரீதுளஸியை பூஜிப்பர். (அடுத்த நுடியின் அர்த்தத்தையும் சேர்த்து வாசிக்கவும்).

ஜலஜாக்ஷ நமலக^{1}ஜ்ஜலபி^{3}ந்து^{3} பீயூஷ
கலஶத^{3}லி பீ^{3}ளி ஜனிஸிதி । ஜனிஸி ஹரியிந்த^{3} ஸ்ரீ
துளஸி நீனெந்து^{3} கரெஸிதி^{3} ।।2-(30)

ஜலஜாக்ஷன = புண்டரிகாக்ஷன் என்னும் புகழ் பெற்ற பெயர் உள்ள ஸ்ரீவிஷ்ணுவின். அமலகஜ்ஜலபிந்து = பவித்ரமான கண்ணீர் துளி. பீயூஷகலஶதலி = அமிர்த கலசத்தில். பீளி = விழ. ஜனிஸிதி =

அங்கு தோன்றினாய். ஹரியிந்த = ஸ்ரீஹரியால். ஸ்ரீதுலஸி எந்து = ஸ்ரீதுளஸி என்று. நீனு = நீ. கரெஸிதி = அழைக்கப்பட்டாய் (பெயர் பெற்றாய்).

முந்தைய பத்யத்திலும் துளஸியின் மஹாத்ம்யமே சொல்லப் பட்டிருக்கிறது என்று அறிய வேண்டும். 'ப்ருந்தாவனி' என்பதற்கு ஜலந்தரனின் ராணியான ப்ருந்தையை தனக்கு முன் வைத்துக் கொண்டு அருள்பவன் என்று, 'துளஸி நிஜமந்திரெ' என்பதை துளஸி மற்றும் நிஜமந்திரெ என்றும் தனித்தனியாக படித்து, நிஜமந்திரெ என்பதற்கு பக்தர்களுக்கு ஆதரவு தருபவள் என்னும் அர்த்தத்தையும் அறியலாம். துளஸியும், பக்தர்களுக்கு ஆதரவு தருபவள் என்னும் அர்த்தம் வருகிறது.

தேவ தைத்யர்கள் சேர்ந்து அமிர்தத்திற்காக பாற்கடலை கடையும் போது, ஸ்ரீஹரி, தன்வந்திரி ரூபத்தால் அமிர்த கலசத்தை கையில் பிடித்து மேலே வந்தார். அவனின் நிஜ சேவகர்களான தேவதைகள், அந்த அமிர்தத்தைக் குடித்து வெற்றியாளர்கள் ஆயினர் என்பது போல, ஸ்ரீதன்வந்திரியின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வந்தது. அந்த கண்ணீர் அந்த கலசத்தில் விழுந்தது. அப்போது, அங்கு ஸ்ரீதுளஸி தோன்றினாள். ஸ்ரீஹரியின் கண்ணீரும் ஆனந்தக் கண்ணீரே. இப்படியாக, ஸ்ரீஹரியின் மகிழ்ச்சியால் தோன்றிய ஸ்ரீதுளஸி பரமமங்கள ஸ்வரூபள். அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருபவள். மங்களங்களை தருபவள். மங்கள தேவதையான ரமா தேவியின் அம்சத்தைக் கொண்டவள். ஸ்ரீஹரிக்கு மிகவும் பிடித்தவள்.

ஸ்ரீஹரியே தனக்கு பதி ஆகவேண்டும் என்னும் விருப்பத்தால், வெகு காலம் கடுந்தவம் செய்து, ஸ்ரீதுளஸிதேவி, இந்திர ஸாவர்ணி (அடுத்த மன்வந்தர அதிபதி) குலத்தில் உதித்தவனான தர்மத்வஜ என்னும் ராஜனின் மகளாக லட்சுமிதேவியின் அம்சத்தைக் கொண்டு அவதரித்தாள். பேரழகியான அவளை ராஜனான தர்ம த்வஜன், லட்சுமிதேவியின் சௌந்தர்யத்திற்கு சமமான சௌந்தர்ய த்தைக் கொண்டவள் என்னும் காரணத்தால் துளஸி என்று காரணப் பெயர் சொல்லி அழைத்தான்.

தான் எப்போதும் ஸ்ரீஹரியின் சங்கத்திலேயே இருக்க வேண்டும் என்று அவள் வேண்ட, வ்ருக்ஷ ரூபத்தினால் எப்போதும் பூஜிக்கப்பட்டு, என்னுடைய நித்ய சங்கத்தை (பக்தர்கள் அர்ப்பிப்பதன் மூலம்) நீ பெறுவாய் என்று ஸ்ரீஹரி வரம் அளித்தான்.

ஸ்ரீதருணி வல்லப⁴ன ப்ரீதிவிஷயளெ நின்ன
நா துதிஸி கைய முகி³வேனு | முகி³வேனு என்னய மஹா
பாதகவ களெது³ பொரெயம்ம ||3-(31)

ஸ்ரீதருணி வல்லபன = ஸ்ரீலட்சுமிதேவியின் ப்ரியனான, ஸ்ரீ நாராயணனின். ப்ரீதிவிஷயளெ = ப்ரீதிபாத்திரளான ஹே துளஸியே. நின்ன = உன்னை. நா = நான். துதிஸி = வணங்கி. கைய முகிவெனு = கை கூப்பி வணங்குகிறேன். என்னய = என்னுடைய. மஹாபாதகவ = மிகப்பெரிய தவறுகளை. களெது = போக்கி. பொரெயம்ம = காப்பாற்றுவாயாக. ஹே தாயே.

ஸ்ரீகிருஷ்ணனின் ஷண்மஹிஷியர்களில் ஜாம்பவதிதேவி சிறந்தவள். ரமாதேவியின் விசேஷமான சன்னிதானம் உள்ளவள். ஜாம்பவதியே ஸ்ரீதுளஸி ரூபத்தினால் ஸ்ரீஹரியின் நித்ய சேவையில் ஈடுபட்டிருக்கிறாள் என்று ('துளஸீ ஜாம்பவதி ப்ரோக்தா') புராண வாக்கியம் இருக்கிறது என்று ஞானிகள் சொல்கின்றனர். 'எல்ல ஸாதனவித்து துளஸி இல்லத பூஜெ ஒல்லனோ ஹரி கொள்ளனோ' என்னும் தாஸரின் வாக்கியம் அனைவரும் அறிந்ததே.

அனைத்து பூக்களின் நறுமணங்களும் ஸ்ரீதுளஸியில் இருக்கின்றன. சூக்ஷ்ம பிராணேந்திரியங்கள் உள்ள யோகிகள் இதனை அறிவார்கள். எல்லா பூக்களும், எல்லா காலங்களிலும் பூப்ப தில்லை. ஸ்ரீதுளஸியை அர்ப்பிப்பதால், அனைத்து காலங்களிலும் கிடைக்கும் அனைத்து பூக்களையும் சமர்ப்பிப்பதைப் போலாகிறது.

இத்தகைய ஸ்ரீஹரியின் ப்ரீதியைப் பெற்றவளான ஸ்ரீதுளஸியின் அருளால், மஹா பாபங்கள் பரிகாரம் ஆகின்றன என்று சொல்வதில் என்ன வியப்பு?

துலசி நின்னடிகெ³ நா தலெபா³கி³ பி³ன்னயிபெ
கலுஷ கர்மக³ள எணிஸதெ³ | எணிஸதெ³ ஸம்ஸார
ஜலதி⁴யிந்தெ³ம்ம கடெ³ஹாய்ஸு ||4-(32)

துலசி = ஹே துளஸிதேவியே. நின்னடிகெ = உன் பாதங்களுக்கு. நா = நான். தலெபாகி = தலை வைத்து நமஸ்கரித்து. பின்னயிபெ = வேண்டி கேட்டுக் கொள்கிறேன். கலுஷகர்மகள = (என்) துஷ்கர்மங் களை. எணிஸதெ = எண்ணாமல். ஸம்ஸார ஜலதியிந்த = சம்சார சாகரத்திலிருந்து. எம்ம = என்னை. கடெஹாய்ஸு = தாண்டச் செய்.

சாஸ்திரங்களின் விதியை மீறியது மற்றும் செய்யக்கூடாதவற்றை செய்வது என்று தினமும் நாம் எண்ண முடியாத அளவுக்கு தவறுகளை செய்கிறோம். அதனாலேயே, தாஸார்யர் 'எணிஸதெ' என்றார். தேவதைகள் குணக்ராஹிகள். (தவறுகளை மறந்து அவர்களுக்கு அருள்பவர்கள்). தமக்கு சேவை செய்யும் பக்தர்களின் பக்தியை கவனித்து அவர்களுக்கு அருள்பவர்கள்.

பயன்படுத்தக்கூடாத, அ-பத்ய (பத்தியத்தில் சேராத) பொருட்களை ஏற்றுக் கொள்வதும் 'கலுஷகர்ம' (தடை) என்றே அழைக்கப்படுகின் றன. மருத்துவ பார்வையினாலும்கூட ஸ்ரீதுளஸி, அபத்தியத்தால் வரும் பல்வேறு நோய்களை தீர்க்கும் அற்புத மருந்தாகவே இருக்கிறது.

நோடி³த³வ து³ரித ஈடாடி³த³வ நின்ன கொண்
டா³டி³த³வ நித்ய ஹரிபாத³ | ஹரிபாத³ கமலக³ள
கூடித³வ ஸத்ய எந்தெ³ந்து³ ||5-(33)

நின்ன = உன்னை. நோடிதவ = பார்த்தவன். துரித = பாவங்களை. ஈட்யாடிதவ = அழித்து கொள்கிறான். நித்ய = தினந்தோறும். கொண்டாடிதவ = பூஜிக்கிறவன். ஹரிபாத கமலகள = ஸ்ரீஹரியின் பாதாரவிந்தங்களை. கூடிதவ = சேர்ந்தவனே. எந்தெந்து = எந்த காலங்களிலும். ஸத்ய = இதுவே உண்மை.

காலையில் தினமும் ஸ்ரீதுளஸியின் தரிசனத்தைப் பெறுபவர்களின் பாவங்கள் நஷ்டமாகின்றன; பக்தியுடன் ஸ்ரீதுளஸியின் ஸ்தோத்திர

ங்களை படிப்பவர்கள், ஸ்ரீஹரியின் பாதங்களை அடைகிறார்கள் என்பதும் உண்மையான விஷயம். 'கூடிதவ' சேர்ந்தவன் என்று நிச்சயமாக நடக்கும் என்று தீர்மானமாக சொல்லியிருக்கிறார். தரிசனம் மற்றும் ஸ்தோத்திரங்களை செய்வதால் இந்த பலன்கள் கண்டிப்பாக கிடைக்கின்றன என்று இதிலிருந்து அறியவேண்டும்.

ஸ்ரீஹரியை அடையும் தகுதி உள்ளவர்களுக்கே (முக்தி யோக்யர் களுக்கு மட்டும்) ஸ்ரீதுளஸியின் தரிசன, ஸ்தோத்திரங்களில் சிரத்தை பக்தி உண்டாகிறது என்பது இங்கு குறிப்பால் உணர்த்து கிறார் என்று அறியவேண்டும்.

யன்மூலே ஸர்வதீர்த்தானி யன்மத்யே ஸர்வதேவதா |
யதக்ரே ஸர்வவேதாஸ்ச துளஸி த்வாம் நமாம்யஹம் ||

என்று தினமும் காலையில் சொல்லும் ஸ்தோத்திரம் ஸ்ரீதுளஸியின் பவித்ர ரூபத்தை விளக்குகிறது. துளஸி செடியின் மூலத்தில் அனைத்து தீர்த்த அபிமானி தேவதைகளும், மத்யத்தில் அனைத்து தேவதைகளும், அடிப்பாகத்தில் வேதாபிமானிகளும் சன்னிதானம் கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்கையில், ஸ்ரீதுளஸியின் சேவை எந்த அபீஷ்டங்களை கொடுக்க முடியாமல் போகிறது? அனைத்து அபீஷ்டங்களும் கிடைக்கின்றன என்று அர்த்தம்.

பாபானி யானி ரவிஸூனு படஸ்திதானி
கோப்ரம்ம பாலபித்ரு மாத்ரு வதானிகானி: |
நஷ்யந்தி தானி துளஸீ வனதர்ஷனேன
கோகோடி தான ஸத்ருஷம் பலமாப்னவந்தி ||

பசு, பிரம்ம, குழந்தை, தந்தை, தாய் இவர்களை ஹத்யா (கொலை) செய்தால் வரும் பாவங்களைவிட அதிகமான, யமதேவனின் பட்டியலில் இருக்கும் நம் பாவங்கள் அனைத்தும் ஸ்ரீதுளஸியின் தரிசனத்தினாலேயே நாசம் அடைகின்றன. மற்றும் அனேக எண்ணிக்கையிலான கோதானத்தின் பலனும் கிடைக்கின்றன. ஆகையாலேயே, ஸ்ரீதாஸார்யர் 'நோடிதவ துரித ஈட்யாடிதவ' என்றார்.

துளஸீகானனம் யத்ர யத்ர பத்மவனானி ச |
வஸந்தி வைஷ்ணவா யத்ர தத்ர ஸன்னிஹிதோ ஹரி: ||

துளஸி இருக்கும் இடத்தில் ஸ்ரீஹரி சன்னிதானம் இருக்கிறது என்று இந்த பிரமாணத்தில் இருப்பதால், துளஸியின் சேவையால் ஸ்ரீஹரி சேவையும் ஆகிறது என்றே ஆகிறது. ஆகையால், ஸ்ரீதாஸார்யர் துளஸியின் ஸ்தோத்திரம் ஸ்ரீஹரி ஸ்தோத்திரத் தையும் கொண்டே இருந்து, ஹரியின் அருளும் கிடைக்கிறது என்று குறிப்பிடுகிறார். ஆகையால், 'நின்ன கொண்டாடிதவ ஹரிபாத கமலகள கூடிதவ' என்கிறார்.

நிந்தி³ஸித³வரெல்ல நிந்த்³யராகு³வரு அபி⁴
வந்தி³ஸித³ ஜனரு ஸுரரிந்த³ | ஸுரரிந்த³ நரரிந்த³
வந்த்³யராகு³வரு ஜக³தொ³ளு ||6-(34)

நிந்திஸிதவரெல்ல = ஸ்ரீதுளஸிதேவியை நிந்தித்தவர்கள் அனைவரும். ஜகதொளு = உலகில். நிந்த்யராகுவரு = தாமே நிந்திக்கப்படுவர். அபிவந்திஸித ஜனரு = பக்தியுடன் நமஸ்கரித்து துதிப்பவர்கள். ஸுரரிந்த = தேவதைகளாலும். நரரிந்த = மனிதர்களாலும். வந்த்யராகுவரு = வணங்கப்படுவர்.

சாதனை செய்வதற்காக மனிதர்களாக அவதரித்த தேவதைகள் அனைவராலும் வணங்கப்படுகின்றனர். வணங்குவதற்கு தகுதி உள்ளவர்கள். மனுஷ்யாதி ஜீவர்கள் யோக்யர்களாகி, சுரர்களாலும் கௌரவிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர். 'வாஞ்சந்தி கரஸ்பர்ஷம் தேஷாம் (தேஷாம் = சாலிகிராம ஸ்பர்ஷனத்தை தினமும் செய்யும் மானவர்களின்) தேவா: ஸ வாஸவா:) என்று சொல்லியிருக்கின்றனர்.

கலுஷவர்ஜிதெ நின்ன த³லக³ளிந்த³லி லக்ஷ்மி
நிலயனங்க்⁴ரிக³ள பூஜிப | பூஜிபரிகெ பரம மங்
க³லத³ பத³வித்து ஸலஹுவி ||7-(35)

கலுஷவர்ஜிதெ = ஹே தோஷங்கள் அற்றவளே, துளஸியே. நின்ன தளகளிந்தலி = உன் இலைகளால். லக்ஷ்மி நிலயன = ஸ்ரீமஹா லட்சுமிக்கும் தலைவனான ஸ்ரீநாராயணனின். அங்க்ரிகள =

பாதங்களை. பூஜிபரிகெ = பூஜை செய்பவர்களுக்கு. பரமமங்களத பதவ = மோட்சத்தை. இத்து = கொடுத்து. ஸலஹுவி = அருள்வாய்.

பரம மங்களத பதவ = என்பதற்கு வைகுண்டாதி அப்ராக்ருத (லட்சும்யாத்மக) உலகங்களை. அல்லது, சிதானந்தாத்மக ஸ்வ ஸ்வரூபத்தின் ஆவிர்பாவத்தை, பரமாத்மனிடம் ஸ்திதிரூபமான சாயுஜ்ய முக்தியையும், அதிகமான புண்ய சாதகமான செல்வத் தையும், யதார்த்த தத்வ ஞானத்தையும், சுத்தமான விரக்தியையும் என்று பலவிதமாக வேண்டுபவர்களின் யோக்யதைக்கேற்ப அறிய முடியும்.

ஸ்ரீதுளஸி மோட்சத்தைக் கொடுக்கிறாள் என்றால், ஸ்வதந்த்ரமாக தானே கொடுப்பதில்லை என்றும், லட்சுமியின் ஆவேசத்துடன் ஸ்ரீஹரியின் ஆணையுடனேயே கொடுக்கிறாள் என்று அறிய வேண்டும்.

ஸ்ரீதுளஸி தே^{3}வி மன்மாத லாலிஸு ஜக^{3}
ந்னாத^{2}விட்ட^{2}லனு சரணாப்^{3}ஜ | சரணாப்^{3}ஜ என்ன ஹ்ருத்ப^{3}த்மத^{3}லி
நீ தோரெ க்ருபெயிந்த^{3} ||8-(36)

ஸ்ரீதுளஸிதேவி = ஹே தேஜோமயமான துளஸியே. மன்மத = என் பேச்சினை. லாலிஸு = சித்தத்திற்குக் கொண்டு வா. நீ = நீ ஜகன்னாதவிட்டலனின். சரணாப்ஜ = பாதபத்மங்களை. என்ன. ஹ்ருத்பத்மதலி = என் இதய கமலத்தில். க்ருபெயிந்த = தயவு செய்து. தோரெ = காட்டுவாயாக.

ஸ்ரீதுளஸிதேவியின் சேவை, ஸ்ரீஹரியின் சாட்சாத்காரத்தை (அபரோக்ஷ ஞானத்தை) அடைவதற்கு காரணமாக இருப்பதால், அதனால் மோட்சம் கண்டிப்பாக கிடைப்பதால், ஸர்வஸஜ்ஜனர்கள் அவளை தினமும் வணங்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

யா த்ருஷ்ட்வா நிகிலாக ஸங்கஷமனீ ஸ்ம்ருஷ்ட்வா வபு:பாவனி
ரோகாணாமபி வந்திதா நிரஸனீ ஸிக்தாந்தகத்ராஸினி |
ப்ரத்யாஸத்தி விதாயினீ பகவத: க்ருஷ்ணஸ்ய ஸம்ரூபிதா
ந்யஸ்தா தச்சரணே விமுக்திபலதா தஸ்ம்யை துலஸ்யை நம: ||

துளஸியின் தரிசனத்தால் அனைத்து பாவங்களும் பரிகாரம் ஆகின்றன. தொடுவதால் தேக சுத்தி. நமஸ்காரத்தால் ரோகங்கள் போகின்றன. துளஸிக்கு நீர் இறைப்பதால் யமனின் தொந்தரவு பரிகாரம். துளஸியை வளர்ப்பதால் ஹரிபக்தி வளர்கிறது. ஸ்ரீஹரிக்கு துளஸியின் சமர்ப்பணத்தால் மோட்ச பிராப்தி.

என மேற்சொன்ன பிரமாணத்தால் அறிகிறோம். இவ்வளவு அபிப்பிராயத்தையும் ஸ்ரீதாஸார்யர் இந்த ஸ்ரீதுளஸி ஸ்தோத்திரத் தில் சொல்லியிருக்கிறார்.

10. ஸ்ரீ ருத்ரதேவரின் ஸ்துதி

சந்தி3ரஶேக2ர ஸுமனஸேந்த்3ர பூஜித சரணா
ஹீந்த்3ர பத3யோக்3ய வைராக்3ய | வைராக்3ய பாலிஸம
ரேந்த்3ர நின்னடி3கெ3 ஶரணெம்பெ3 ||1-(37)

சந்திரஶேகர = ஹே சந்திரசூடா. ஸுமனஸேந்த்ர பூஜித சரணா = தேவேந்திரனால் பூஜிக்கப்படும் பாதங்களைக் கொண்ட. அஹீந்த்ர பதயோக்ய = சேஷ பதவிக்கு தகுதி பெறப்போகும் நீ. வைராக்ய = வைராக்கியத்தை. பாலிஸு = அருளி என்னை காப்பாற்று. அமரேந்த்ர = ஹே தேவஸ்ரேஷ்டனே. நின்னடிகெ = உன் பாதங்களில். ஷரணெம்பெ = நான் விழுந்து வணங்குகிறேன் (உன் பாதங்களையே நான் பற்றுகிறேன் என்று வேண்டிக் கொள்கிறேன்)

அமரேந்த்ர என்றால், உத்தமர்களான பாரதி வாயு, சரஸ்வதி பிரம்மதேவர்களை விட்டு (தவிர), தம்மை விட கீழாக இருக்கும் தேவதைகளைவிட மகாதேவர், ஸ்ரேஷ்டர் என்று அறியவேண்டும். இதன்படியே, ஸுமனசேந்த்ர, தன்னைவிட கீழான தாரதம்யத்தில் இருக்கும் தேவதைகளைவிட தேவேந்திரன் உத்தமன் என்று அர்த்தம் சொல்ல வேண்டும்.

தத்வங்கள் 24 எவை என்றால்:
* பஞ்ச மகாபூதங்களான – வானம், பூமி, காற்று, நீர் மற்றும் நெருப்பு.
* பஞ்ச தன்மாத்ரங்களான – கந்த, ரஸ, ரூப, ஸ்பர்ஷ, ஷப்த
* பஞ்ச கர்மேந்திரியங்களான – கை, கால், வாக்கு, மலஜல இந்திரியங்கள்

* பஞ்ச ஞானேந்திரியங்களான - மெய், வாய், கண், மூக்கு, செவி
* மனஸ், அஹங்கார, மஹத் மற்றும் அவ்யக்த என்னும் நான்கு தத்வங்கள் -- ஆக மொத்தம் 24 தத்வங்கள்/

இவற்றால் உருவாக்கப்பட்ட தேகத்தில், ஜீவன் மற்றும் பரமாத்மன் சேர்ந்தால் மொத்தம் 26 தத்வங்கள் ஆகின்றன. இவர்களில் பரமாத்மன் ஒருவனே ஸ்வதந்த்ரன். மற்ற அனைத்து தத்வங்க ளுக்கும் அபிமானி தேவதைகள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் பரமாத்மனின் அதீனத்திலேயே இருந்து, தத்தம் தத்வங்களை நிர்வகிக்கிறார்கள். இந்த தத்வங்களின் அபிமானிகள் அனைவரும் பகவந்தனின் ஆணைகளைப் பெற்றே அந்தந்த தத்வங்களுக்கு அபிமானிகளாக இருந்து, அவர்களின் செயல்களை செய்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

மகாதேவ, ருத்ர, ஷிவ, பரமேஷ்வர ஆகிய பெயர்கள், அஹங்கார தத்வத்தின் அபிமானி தேவதையின் பெயர்கள் ஆகும். அஹங்கார தத்வம், வைகாரிக, தைஜஸ, தாமஸ என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. வைகாரிகத்தினால் மனஸ் மற்றும் தத்வாபிமானி தேவதைகள்; தைஜஸத்தினால் ஞான கர்மேந்திரியங்கள்; தாமஸத் தினால் தன்மாத்ராகளும் பஞ்ச பூதங்களும் தோன்றியிருக்கின்றன.

இப்படி இருப்பதால், வைகாரிகத்தினால் தோன்றிய மனஸ் தத்வத்திற்கும் ருத்ரதேவர் அபிமானிகள். கருட சேஷர்களும் அஹங்கார தத்வத்தின் அபிமானிகளே. கருட, சேஷ, ருத்ரர் மூவரும் சமமானவர்கள். ஸ்வரூப யோக்யதையால் ருத்ரதேவர், சேஷதேவருக்கு சமமானாலும், பதவியின்படி சிறிது குறைவானவர். வாயுதேவரும், பிரம்மதேவரும் சமமானவர்கள் ஆனாலும், பதவியால் வாயுதேவர் சிறிது குறைவானவர் ஆவார். இவர் பிரம்ம பதவிக்கு வந்து, பின் முக்தர் ஆகிறார். இதைப் போலவே, ருத்ரதேவரும் சேஷ பதவிக்கு வந்த பின்னர், முக்தர் ஆகிறார்.

இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசையும், அதிலிருந்து கிடைக்கும் சுகமே புருஷார்த்தம் என்று நினைத்து, அதில் மேலும் ஈடுபடுவது 'ராக' எனப்படுகிறது. ராக இல்லாமல் இருப்பதே வைராக்ய. ராகத்திற்கு மனதே காரணம். மனோ நியாமகரே அந்த ராகத்தை வெளியே விரட்டி,

வைராக்கியத்தைக் கொடுக்க வேண்டும். ஆகையால், மகாதேவரே வைராக்கியத்தைக் கொடுக்க வேண்டும். ஆகவே அதற்காக அவரையே வணங்க வேண்டும்.

நந்தி^{3}வாஹன விமலமந்தா^{3}கி^{3}னீத^{4}ரனெ
வ்ருந்தா^{3}ரகேந்த்^{3}ர கு^{3}ணஸாந்த்^{3}ர | கு^{3}ணஸாந்த்^{3}ர என்ன மன
மந்தி^{3}ரதி^{3} நெலெஸி ஸுக^{2}வீயோ ||2-(38)

நந்திவாஹன = ரிஷபத்தையே வாகனனாகக் கொண்ட. விமல மந்தாகினி தரனே = புனிதளான கங்கையை (தலையில்) தரித்தவனே. வ்ருந்தாரகேந்த்ர = தேவ ஸ்ரேஷ்டனான. குணசாந்த்ர = குணநிதியான ஹே மகாதேவனே. என்ன = என். மனமந்திரதி = மனம் என்னும் வீட்டில் . நெல்ஸி = (அருளியவாறு) இருந்து . ஸுகவீயோ = சுகத்தைக் கொடுப்பாயாக.

தத்வங்களின் அபிமானிகள், அவர்களின் நாம மற்றும் மகாத்ம்யங்களை குரு உபதேசத்தினால் அறியவேண்டும். அபார மகிமைகளைக் கொண்ட தத்வாபிமானிகளின் நடுவில் ருத்ரதேவர், அவருக்கு முந்தைய கட்சையில் இருக்கும் பிரம்ம வாயு மற்றும் அவர்களின் மனைவிகளைத் தவிர, மற்ற அனைவர்களைவிடவும் சிறந்தவர்.

நிஸ்ஸீமாஷ்ட மஹாஸித்தி ஸம்பூர்ணா: ஸர்வதெய்வது
அத: பூர்ணகுணா: ஸர்வே நிஸ்ஸீமானந்த போஜன: |
ஈஷ்வராசிந்த்ய ஷக்த்யைவ விபக்தாம் ஷைரனந்தகை: ||
ப்ரேரகா: ஸர்வஜீவானாம் ஸ்வோத்தமை: ப்ரேரிதா: ஸதா ||
(சத்தத்வ ரத்னமாலா)

என்னும் வாக்கியங்கள், அல்பாதிகாரிகளின் மனதிற்கு ஊகிக்க முடியாத அளவிற்கு, அபாரமான அணிமாதி அஷ்ட ஸித்திகளை தத்வாபிமானி தேவதைகள் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் அனைவரும் குணபூர்ணர் என்றும், அபரிமிதமான ஆனந்த போகம் உள்ளவர்கள் என்றும் அறிய வேண்டும். ஸ்ரீஹரியின் எல்லையில்லா சக்தியால், இந்த தேவதைகள் பல அம்சங்களைக் கொண்டு, அனைத்து ஜீவர்களின் தேகங்களில் இருந்து தங்கள் செயல்களை செய்பவர்களாக இருக்கின்றனர்.

அக்ஷீண பூர்ண விஞ்ஞானா: ஸத்யகாமாஷ்ச ஸர்வஷ: |
ஸர்வாத்தாரஸ்ச தே தேவா: ... (சத்தத்வ ரத்னமாலா)

என்று, இவர்கள் அனைத்து பிராணிகளின் தேகங்களிலும் இருந்து அனைத்து நற்சுவைகளையும் ஏற்றுக் கொள்கிறார்கள் ஆகையால், எண்ணமுடியா மகிமைகளைக் கொண்டவர்கள் என்று வர்ணிக்கப் படுகிறார்கள்.

க்ருத்திவாஸனெ நின்ன ப்^{4}ருத்யானுப்^{4}ருத்ய எ
ந்னுத்த நோட^{3}ய்ய ஶுப^{4}கா^{1}ய | ஶுப^{4}கா^{1}ய ப^{4}க்தரப
ம்ருத்யு பரிஹரிஸி ஸலஹய்ய ||3-(39)

க்ருத்திவாஸனெ = யானை, புலித்தோல்களையே ஆடையாகக் கொண்ட ஹே மகாதேவனே. நின்ன ப்ருத்யானுப்ருத்ய = உன் தாஸானுதாஸன். என்னுத = என்று. நோடய்ய = என்னை கருணையுடன் பார். ஶுபகாய = ஹே மங்களாங்கனே. பக்தர = உன் பக்தர்களின். அபம்ருத்யுவன்னு = துர்மரணங்களை. பரிஹரிஸி = பரிகரித்து. ஸலஹய்ய = அவர்களை காப்பாற்று.

உடுத்த, போர்த்திக் கொள்ள இரு வஸ்திரங்களை பயன்படுத்த வேண்டும் என்று நியமம் உள்ளது. மகாதேவர், உடுத்துவது புலித்தோல், போர்த்திக் கொள்வது யானைத் தோல் என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அபம்ருத்யு என்றால் துர்மரணம். முந்தைய கர்மங்களின் பயன்களால் அனுபவிக்க வேண்டிய தீர்க்க ஆயுளை முடிக்க முடியாமல் தடையாக நடுவில் மரணத்தைக் கொடுக்கக்கூடிய சாமர்த்தியம் உள்ள அதிர்ஷ்டமே துர்மரணத்திற்கு காரணம். அதனை யோக்ய சாதனைகளால் பரிகரித்துக் கொள்ள முடியும். இந்த சாதனைகள் ஐதரேய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக் கின்றன. துர்மரணம் நேரப்போகிறது என்று தெரியும் குறிப்புகளை அங்கு வர்ணித்திருக்கின்றனர்.

உபவாசம் செய்து, நியமத்தின்படி செய்த பாயசத்தை செய்து, ராத்ரி சூக்தத்தின் ஒவ்வொரு மந்திரத்தினாலும் ஹோமம் செய்து, தனியாக தயாரித்த அன்னத்தை பிராமணர்களுக்குக் கொடுத்து,

அந்த மீந்த ஹவிஸ்ஸினை தான் உண்ண வேண்டும். ராத்ரி சூக்தத்திற்கு விஷ்ணு சஹிதமான துர்கா ரூபளான ஸ்ரீலட்சுமி தேவியே தேவதை. ஹோமத்தினால் மகிழும் துர்காதேவி, துர் மரணத்தை பரிகரிக்கிறாள். அப்படி துர்மரணம் இல்லாமல், விதிக்கப்பட்ட மரணமே வந்திருந்தால், தன் அந்தர்கத ராத்ரி நாமக பகவந்தனை திருப்திப்படுத்திய பக்தனை, உத்தம லோகத்திற்கு அனுப்புகிறாள்.

நீலகந்த[4]ர ருண்ட[3]மாலி ம்ருக[3]வரபாணி
ஶைலஜா ரமண ஶிவரூபி | ஶிவரூபி நின்னவர
பாலிஸோ நித்ய பரமாப்த ||4-(40)

நீலகந்தர = நீலகண்டன். ருண்டமாலி = முண்டங்களால் (தலைகளால்) கட்டப்பட்ட மாலையை அணிந்திருப்பவன். ம்ருகவரபாணி = உத்தமமான மானை உடன் வைத்திருப்பவன். ஶைலஜாரமண = பார்வதி ரமணன். ஶிவரூபி = மங்கள ஸ்வரூபன். பரமாப்த = ஸ்ரீஹரிப்ரியன், ஆன நீ. நித்ய = எப்போதும். என்னவர = என் பக்தர்களை (ஹரிபக்தர்களை). பாலிஸோ = காப்பாற்று.

கபாலங்களால் ஆன மாலையை அணிந்தவனும், ஸ்மஷான வாசியும் ஆனதால் அவன் அமங்களரூபன் என்று அறியாமல் இருக்க, ஷிவரூபி என்கிறார் தாஸர். 'ஈஷ்வராத் ஞானமன்விச்சேத், மோக்ஷமிச்சேத் ஜனார்த்தனாத்' என்னும் பிரமாண வாக்கியத்தால், ஞானத்தைக் கொடுத்து பகவத் பக்தர்களை மேம்படுத்தும் வைஷ்ணவர் என்று ருத்ரரை அறியவேண்டும்.

ஹரித்வேஷிகளுக்கு உக்ர ரூபத்தினால் (த்ரிபுராசுரர்களுக்குக் கொடுத்ததைப் போல) வினாசத்தைக் கொடுப்பவரும், ஹரிபக்தர் களுக்கு அமைதியான ரூபத்தினால் மங்களங்களைக் கொடுக்கிறார். யமதர்மராஜன் (யம = உக்ர, தர்ம = அமைதி), உக்ர மற்றும் அமைதியான ரூபங்களால், பாவிகள் மற்றும் பகவத் பக்தர்களுடன் நடவடிக்கைகளை செய்வது போல.

த்ரிபுராரி நித்ய என்னபராத[4]க[3]ள நோடி[3]
குபிதநாக[3]த[3]லெ ஸலஹய்ய | ஸலஹய்ய பி[3]ன்னயிபெ
க்ருபண வத்ஸலனெ க்ருபெயிந்த[3] ||5-(41)

த்ரிபுராரி = ஹே த்ரிபுராசுரர்களின் எதிரியான மகாதேவனே. என்ன = என்னுடைய. நித்ய = எப்போதும் சம்பவிக்கும். அபராதகள = அபராதங்களை (தவறுகளை). நோடி = பார்த்து. குபிதனாகதெ = கோபம் கொள்ளாமல். க்ருபெயிந்த = கருணையுடன். ஸலஹய்ய = காப்பாற்று. க்ருபணவத்ஸலனெ = தீனபந்துவே. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன்

'க்ருபணோ யோऽஜிதேந்த்ரிய:' என்று பாகவதத்தில் சொல்லியதைப் போல, க்ருபணர் என்றால், இந்த்ரிய நிக்ரஹம் இல்லாதவர். மனதில் ராக ரூபமான அழுக்குகள் களைந்தால், இந்திரியங்கள் வசமாகின்றன. அப்படியில்லையெனில், விஷயங்களின் பக்கமே மனஸ் ஈர்க்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்களே தீனர்கள். அவர்களுக்காக ஞானிகள் மருகுகிறார்கள். இப்படிப்பட்டவர்களின் மனோ நியாமகரான ருத்ரதேவர் சிறந்தவர். ஆகையால், அவரையே பிரார்த்திக்கிறார்.

பஞ்சாஸ்ய மன்மனத[3] ஸஞ்சலவ பரிஹரிஸி
சஞ்சிதாகா[3]மி ப்ராரப்[3]த[3] | ப்ராரப்[3]த[3] தா[3]டிஸு வி
ரிஞ்சி ஸம்ப[4]வனே க்ருதயோக[3] ||6-(42)

பஞ்சாஸ்ய = ஐந்து முகங்களைக் கொண்ட. விரிஞ்சி ஸம்பவனே = ஹே பிரம்ம புத்ரனான மகாதேவனே. மன்மனத = என் மனதின். ஸஞ்சலவ = சஞ்சலத்தினை. பரிஹரிஸி = போக்கி (ஸ்திர சித்த உள்ளவனாக என்னை ஆக்கி). க்ருதயோக = யோக ஸித்தியைக் கொண்ட நீ. சஞ்சிதாகாமி ப்ராரப்த = சஞ்சித, ஆகாமி, ப்ராரப்த என்னும் கர்மங்களிலிருந்து. தாடிஸு = என்னை காப்பாற்று.

பிரம்மன் முதலில் ஐந்து முகங்களைக் கொண்டிருந்தார். பிரம்ம த்விஷே ஷரவே ஹந்த வா உ (அம்ப்ரிணி சூக்தம்) என்பதில், துர்கா ரூபளான லட்சுமிதேவி பிரளய காலத்தில், பிரம்மனின் ஐந்தாம் தலையை கத்தரித்த ருத்ரனின் சம்ஹாரத்திற்காகவே தனுஸ்ஸினை எடுத்தாள் என்று சொல்லி, லட்சுமிதேவி ஆனவள்,

பிரம்ம ருத்ரர்களின் ஸ்ருஷ்டி சம்ஹார கர்த்தள் என்று, அவளின் மகிமையை நிரூபிக்கிறது. ருத்ரர், பிரம்மத்வேஷி அல்ல. தோஷங்களைக் கொண்டவன் என்று மட்டுமே சொல்கிறது என்று அறிய வேண்டும். தன் மானஸ புத்ரர்களான ஸனந்தாதிகள் தன் ஆணையின்படி மக்களை ஸ்ருஷ்டி செய்யும் காரியத்தில் ஈடுபடாமல் விரக்தர்கள் ஆகிவிட, பிரம்மன் கோபம் கொள்கிறான். அப்போது அவனின் நெற்றியிலிருந்து ருத்ரர் தோன்றுகிறார்.

மனோபிமானி ஆனதால், மனதை வெற்றியடையச் செய்வதும் ருத்ரரால் முடிகிறது. வைராக்கியத்தினால் மனம் சஞ்சலமில்லா மல் தியானத்திற்கு தயாராகிறது. தியானத்தின் மூலமே அபரோக்ஷம்.

வைராக்கியம் என்பது நிஷ்காம கர்மங்களை செய்வதற்கு மிகவும் முக்கியம். கர்மங்கள் சஞ்சித, பிராரப்த மற்றும் ஆகாமி என்று மூன்று விதங்கள். இதுவரை (முந்தைய பிறவிகளிலும்) செய்யப்பட்ட கர்மங்கள் – 'சஞ்சித'. இவற்றின் மலை போன்ற பலன்களே ஒவ்வொருவரின் முதுகில் இருக்கின்றன. இவற்றில் எந்த கர்மத்தின் அதிர்ஷ்ட பலன்களை இப்போது அனுபவிக்க துவங்குகிறோமோ அது 'ப்ராரப்த'. எதிர் காலத்தில் வரப்போகும் கர்மங்கள் 'ஆகாமி'.

ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்ம ஸாத்குரதேsர்ஜுன (கீதை). ஞானம் என்னும் அக்னி சஹிதமான கர்மங்கள், எரிந்து சாம்பலாகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பலன்களை எதிர்பார்க்காமல், நானே செய்தேன் என்னும் சிந்தனையை விட்டு (தன்னில் கர்த்ருவம் இருக்கிறது என்ற சிந்தனையை விட்டு), ஈஸ்வர அர்ப்பண புத்தியினால் செய்யப்படும் கர்மங்களே, ஞானம் என்னும் அக்னியுடன் கூடியதாகும். கர்மங்கள் செய்ய வேண்டும். ஆனால், அது ஞானத்துடன் இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அது தடையாக இருக்காமல், விஷ்ணுப்ரீதியாக ஆகிறது. இப்படியான ஞானத்தை (புத்தியை), கொடுப்பவர் மகாதேவர். அதையே இங்கு பிரார்த்திக்கிறார் தாஸர்.

ஞான என்னும் சொல்லின் முக்கிய அர்த்தம் ஸ்ரீஹரியின் சாட்சாத் காரம். 'ஈஷ்வராத் ஞானமன்விச்சேத்' என்று சொல்லியதைப் போல,

அதனை கொடுப்பவரும் அவரே, அவரின் அருளே. ஆகையால், பிராரப்த கர்மத்தை, சுலபமாக தாண்டுகிறோம்.

பஞ்சாஸ்ய என்பது சிவனின் இன்னொரு பெயரே ஆகும். விஸ்தாரமான முகம் உள்ளவன் ஆகையால் பஞ்சாஸ்ய.

மானுஷான்னவனுண்டு^{3} ஞானஶூன்யனு ஆதெ^{3}
ஏனு க^{3}தி எனகெ^{3} அனுதின |அனுதி^{3}னதி^{3} நா நின்ன
தீ^{4}னத^{3}வனய்ய ப்^{1}ரமதே^{4}ஶ ||7-(43)

ப்ரமதேஷ = அழிவுச் செயலை செய்பவனே. மானுஷான்னவ னுண்டு = அஞ்ஞானிகளால் சமர்ப்பிக்க ஆகாரத்தை உண்டு. ஞானஶூன்யனு = ஞானம் இல்லாதவன். ஆதெ = ஆனேன். எனகெ = எனக்கு. ஏனு கதி = அடுத்த கதி என்ன?. அனுதின = தினந் தோறும். நா = நான். நின்னதீனதவனய்ய = உன் சேவகன் நானே. (ஆகையால் ஞானத்தைக் கொடுத்து அருள்வாயாக).

தேவதைகள் பூமியில் அவதரித்தபோது, பூமியின் ஸ்பர்ஷத்தினால் அவர்களின் ஞானம் குறைகிறது. மனிதர்கள் உண்ணத் தகுதியான உணவை, அமிர்தத்தை வணங்கும் தாம் உண்பதால், அவர்களின் ஞானம் குறைகிறது. மானுஷான்னத்தை உண்டு ஞானஷூன்யன் ஆனேன் என்று சொல்லிக் கொள்ளும் தாஸார்யர், தேவதா அம்சம் என்று இதிலிருந்து தெரிகிறது. ஸ்ரீஜகன்னாததாஸர், பிரகலாதனின் தம்பியான சஹ்லாதனின் அவதாரர் ஆவர். சஹ்லாதன் கர்மஜ தேவதை. துஷ்கர்மங்களை செய்பவர்களின் பாவங்கள் அவர்களின் அன்னாதி வஸ்துகளில் போய் சேர்கின்றன. அவற்றை ஏற்றுக் கொள்பவர்களுக்கு அந்த பாவங்கள் போகின்றன. அத்தகைய உணவினை உண்பதால் துர்புத்தி உண்டாகிறது. அன்னத்தை மனதிற்கு ஒப்பிட்டு சொல்கிறார்.

அன்னமஷிதம் த்ரேதா விதீயதே தஸ்ய யத் ஸ்தவிஷ்டோ தாது: | தத்புரீஷம் பவதி யோ மத்யம: தன்மாம்ஸம் யோऽணிஷ்ட: தன்மன: ||

என்று சாந்தோக்ய உபநிஷத், உண்ட அன்னத்தின் மிச்சங்கள் மலம் ஆகின்றன என்றும், மத்ய பாகங்கள் மாமிசம் ஆகின்றன என்றும்,

சூக்ஷ்ம பாகங்கள் மனஸ் ஆகிறது என்றும் சொல்கிறது. இதே ஆதாரத்தை இங்கு விளக்கியிருக்கிறார் தாஸர்.

இதன்படி துஷ்டர்களின் (அஞ்ஞானிகளின், துஷ்ட செயல்களை செய்பவர்களின்) அன்னத்தினால் ஞானம் குறைகிறது என்று, ஸ்ரீதாஸார்யரின் பேச்சினை அறியவேண்டும். ஞானத்தில் சிறிதளவு குறைந்தாலும்கூட, சிறிது நேரம் வீண் ஆனாலும்கூட, ஞானிகள் மிகவும் நொந்து, இப்படியாக வருத்தப்படுவர் என்று அறிய வருகிறது.

அஷ்டமூர்த்யாத்மக1னே வ்ருஷ்ணிவர்யன ஹ்ருத3யா
தி4ஷ்டானத3ல்லி இரதோ3ரோ | இரதோ3ரு நீ த3யா
த்3ருஷ்டியலி நோடோ3 மஹதே3வ ||8-(44)

அஷ்டமூர்த்யாத்மகனே = எட்டு அவதார ரூபங்களால் ஒளிர்ந்து கொண்டிருக்கும். மஹதேவ = ஹே ருத்ரதேவரே. நீ = நீ.. தயா த்ருஷ்டியலி = கருணைப் பார்வையால். நோடு = என்னைப் பார். வ்ருஷ்ணிவர்யன = யாதவ ஸ்ரேஷ்டனான ஸ்ரீகிருஷ்ணனை. ஹ்ருதய அதிஷ்டானதல்லி = என் இதய பீடத்தில். இரதோரோ = இருப்பவனாக காட்டு (பரமாத்மனின் தரிசன பாக்கியத்தைக் கொடு)

1. தப 2. ஷுக 3. தூர்வஸ 4. அஷ்வத்தாம 5. வாமதேவ 6. அகோர 7. ஸத்யோஜாத 8. ஔர்வ -- இவையே 8 அவதாரங்கள். சதாஷிவ, ஊர்த்வரேத, உம்பட, ஜைகீஷவ்ய என்னும் ரூபங்களுடன் மொத்தம் 12 என்றும் சொல்வதுண்டு. சிறப்புகள் நிறைந்த இந்த அவதாரங்களின் மகிமைகளை பிரம்ம காண்ட முதலான புராண பாகங்களில் பார்க்கலாம். எட்டு முகங்களைக் கொண்ட ஒரே ரூபம் கூட ருத்ரதேவருக்கு இருக்கிறது என்று தெரிய வருகிறது.

ம்ருட3தே3வ என்ன கைபிடி3யோ நின்னவனெந்து3
ப3ட3வ நின்னடி3கெ3 பி3ன்னயிபெ | பி3ன்னயிபெ என்ன மன
த்3ருட4வாகி3 இரலி ஹரியல்லி ||9-(45)

ம்ருடதேவ = ஹே மகாதேவனே. படவ = ஏழையான நான் (ஞான பக்தி வைராக்ய என்னும் செல்வங்கள் இல்லாத நான்). நின்ன

அடிகெ = உன் பாதங்களில். பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன். நின்னவனு எந்து = உன் சேவகன் என்று. என்ன = என். கைபிடியோ = கை பிடித்து என்னை காப்பாற்று. என்ன மன = என் மனமானது. ஹரியல்லி = ஸ்ரீஹரியிடம். த்ருடவாகிரலி = திடமாக இருக்கட்டும்.

ம்ருட் என்னும் வேர்ச் சொல்லிற்கு பிரசன்னனாகு, கருணாசாலி யாகு, க்ஷமாவந்தன் ஆகு, என்று அர்த்தங்கள் உண்டு. இந்த குணங்கள் மகாதேவரில் மிகவும் அதிகமாக இருப்பதால், ம்ருடதேவ என்பது அவரது காரணப் பெயர் ஆகிறது.

உக்³ரதப நா நின்னனுக்³ரஹதி³ ஜனிஸிதெ³ ப
ரிக்³ரஹிஸி என்ன ஸந்தெயிஸு |ஸந்தெயிஸு இந்த்³ரியவ
நிக்³ரஹிப ஶக்தி கருணீஸோ ||10-(46)

உக்ரதப = ஹே உக்ரதபனே. நா = நான். நின்னனுக்ரஹதி = உன் அருளால். ஜனிஸிதெ = பிறந்தேன். என்ன = என்னை. பரிக்ரஹிஸி = கை பிடித்து ஏற்றுக் கொண்டு. ஸந்தெயிஸு = காப்பாற்று. இந்திரியவ = அனைத்து இந்திரியங்களையும். நிக்ரஹிப ஷக்தி = வென்று, என் வசத்தில் வைத்துக் கொள்ளும் சக்தியை. கருணிஸோ = அருள்வாயாக

தஷகல்பம் தப: கர்த்தும் விவேஷ லவணாம்பஸி |
அதோ ருத்ரஸ்தப: ஸஞ்ஞாம் அவாப ககஸத்தம || (பிரம்மகாண்ட)

10 கல்ப தவத்திற்காக ருத்ரதேவர் உப்புக்கடலில் பிரவேசித்த காரணத்தால், அவனுக்கு ‘தப’ என்ற பெயர் வந்தது என்று, ஸ்ரீகிருஷ்ணன் கருடனுக்கு சொல்கிறார். ‘உக்ரதப’ என்றால் இப்படியான கோரமான தவம் செய்தார் என்று பொருள்.

மனோபிமானிகளான மகாதேவரின் அருளால், மனதை வெல்ல முடிகிறது என்றால், இந்திரியங்கள் அனைத்தும் ஜீவனின் அதீனத்தில் இருக்கிறது என்று சொல்வதில் என்ன வியப்பு இருக்கிறது? உன்னை தியானத்துடனான தவத்தினால் மகிழ்ந்து இந்திரியங்களை வெல்லும் சக்தியைக் கொடு என்று வேண்டுகிறார் தாஸார்யர்.

பா^{4}கீ^{3}ரதீ^{2}த^{4}ரனெ பா^{4}க^{3}வதஜனர ஹ்ரு
த்^{3}ரோக^{3} பரிஹரிஸி நின்னல்லி | நின்னல்லி ப^{4}க்தி செ
ந்னாகி கொடு^{3} எனகெ^{3} மரெயதெ^{3} ||11-(47)

பாகீரதீதரனே = ஹே கங்காதரனே. பாகவதஜனர = விஷ்ணு பக்தர்களின். ஹ்ருத்ரோக = மனோவியாதிகளை. பரிஹரிஸி = பரிகரித்து. நில்லல்லி = உன்னிடம். எனகெ = எனக்கு. மரெயதெ = மறக்காமல். பக்தி = பக்தியை. சென்னாகி கொடு = திடமாக இருக்குமாறு அருள்வாயாக

வைராக்கியம் இல்லாததால் மனம் எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. இதனால் உடலுக்கு நோய் வந்ததைப் போல பற்பல துக்கங்கள் வருகின்றன. மன அமைதியே மனோ வியாதியின் பரிகாரம் ஆகும்.

வ்யோமகேஶனெ த்ரிகு^{3}ணநாம தே^{3}வோத்தம உ
மாமனோஹரனெ விரூபாக்ஷ | விரூபாக்ஷ மம கு^{3}ரு
ஸ்வாமி நீ எனகெ^{3} த^{3}யவாகோ^{3} ||12-(48)

வ்யோமகேஷனே = ஹே மகாதேவனே. த்ரிகுணநாம = குணங்களைக் குறிக்கக்கூடிய மூன்று பெயர்களைக் கொண்ட. தேவோத்தம = தேவர்களில் சிறந்தவனான. விரூபாக்ஷ = மூன்றாம் கண் உள்ள. உமா மனோஹரனே = ஹே பார்வதி ரமணனே. நீ = நீ. மம குரு = என்னுடைய குருவாக இருக்கிறாய் ஆகையால், எனகெ = எனக்கு. தயவாகோ = கருணை காட்டு. ஸ்வாமி = என் தலைவனே

மூன்று விதமான அஹங்கார தத்வங்களைக் கொண்ட ருத்ரதேவர், அந்தந்த பெயர்களாலேயே அழைக்கப்படுகிறார்.

வைகாரிகே ஸ்திதோ ருத்ரோ வைகாரிக இதீரித: |
தாமஸே து ஸ்திதோ ருத்ரோ தாமஸேத்யபிதீயதே ||
தைஜஸே து ஸ்திதோ ருத்ரோ லோகே வை தைஜஸ: ஸ்ம்ருத: || (பிரம்மகாண்ட)

மற்றும்

த்ரிவிதாஹங்க்ருதே ருத்ரம் த்ரிரூபமஸ்ருஜத்தத꞉ ||
(விஷ்ணுரஹஸ்ய)

என்னும் பிரமாணங்களால், மூன்று விதமான அஹங்கார தத்வங்களுக்கு ருத்ரதேவர் அபிமானியானவர் என்று தெரிகிறது. வைகாரிக, தைஜஸ, தாமஸ என்னும் பெயருள்ள மூன்று ரூபங்களைக் கொண்டவர் என்றும் தெரிகிறது.

வ்யோம என்னும் சொல், ஆகாயம் மற்றும் தண்ணீர் என்று ஒரு அர்த்தங்களைக் கொடுக்கக்கூடியது. வ்யோமகேஷ என்றால், கங்கையை தலையில் தரித்தவன் என்ற காரணப் பெயராக விளங்குகிறது.

லோசனத்ரய நின்ன யாசிஸுவெ ஸந்ததவு
கே^{2}சரேஶன வஹன கு^{3}ணரூப | கு^{3}ணரூப க்ரியெக^{3}ளா
லோசனெய கொட்டு ஸலஹய்ய ||13-(49)

லோசனத்ரய = ஹே த்ரிநேத்ரனே (மூன்று கண்களைக் கொண்டவனே). நின்ன = உன்னை. யாசிஸுவெ = வேண்டிக் கொள்கிறேன். ஸந்ததவு = எப்போதும். கேசரேஶன வஹன = கருட வாகனனான ஸ்ரீகிருஷ்ணனின். குணரூப க்ரியெகள ஆலோசனெய = குண, ரூப, க்ரியைகளின் தியானத்தை. கொட்டு = எனக்குக் கொடுத்து. ஸலஹய்யா = காப்பாற்றுவாயாக.

கேசர = ஆகாயத்தில் பறக்கும் பறவை.
கேசரேஷ = அந்த பறவைகளுக்கு அரசனான கருடன்
கேசரேஷன = கருடனை
வஹன = வாகனமாகக் கொண்ட

சுபர்ண நாமக ஸ்ரீஹரி, சுபர்ணனாக (கருடன்) இருந்து, தன்னைத் தானே சுமக்கிறான். அமர்ந்திருப்பவன், சுமப்பவன் இரண்டும் தானே ஆகியிருக்கிறான்.

ஸ்ரீஹரியின் குண, ரூப, க்ரியைகள் ஆகியவை வெறும் ரூப சிந்தனையினால் கிடைப்பதில்லை. ஸ்ரவண, மனன, தியான என்னும் சாதனைகளில் தியானம் என்பது, குணக்ரியைகள் உடனான பகவத் ரூப சிந்தனையாக இருக்கிறது. குணங்கள்

எனப்படுவது சத், சித், ஆனந்த, ஆத்மா ஆகியவை. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன முதலான எட்டு வித பகவத் வியாபாரங்கள் மற்றும் பற்பல அவதாரங்களில் வெளிப்படும் அபார மகிமைகளை விளக்கும் க்ருதிகளே க்ரியைகள் ஆகும்.

மாதங்க^{3} ஷண்முக^{2}ர தா^{1}த^{1} ஸந்தத ஜக^{3}
ந்நாத^{2} விட்ட^{2}லன மஹிமெய | மஹிமெயனு திளிஸு சம்
ப்ரீதிந்த^{3}லெமகெ^{3} அமரேஶ ||14-(50)

மாதங்க ஷண்முகர = யானைமுகம் மற்றும் ஆறு முகங்களைக் கொண்ட ஸ்கந்தனின். தாத = தந்தையான. அமரேஷ = ஹே தேவ ஸ்ரேஷ்டனே. ஸந்தத = எப்போதும். ஜகன்னாத விட்டலன = உலக நாயகனான விட்டலனின். மஹிமெயனு = மகாத்ம்யங்களை. ஸம்ப்ரீதிந்தலி = பிரசன்னனாகி (மகிழ்ந்து). எமகெ = எங்களுக்கு. திளிஸு = சொல்லிக் கொடு (புரிய வை).

பூ^{4}தநாத^{2}ன கு^{3}ண ப்ரபா^{4}தகாலத^{3}லெத்து^{3}
ப்ரீதி பூர்வகதி^{3} படி^{2}ஸுவ | படி^{2}ஸுவர ஜக^{3}
ந்நாத^{2} விட்ட^{2}லனு ஸலஹுவ ||15-(51)

ப்ரபாதகாலதி = காலை வேளையில். எத்து = (தூக்கத்திலிருந்து) எழுந்து. ப்ரீதிபூர்வகதி = பக்தியினால். பூதநாதனகுண = மகாதேவ னின் மகிமைகளை. படிசுவர = படிப்பவர்களை (சொல்பவர்களை). ஸ்ரீஜகன்னாத விட்டலனு = ஞானானந்த ப்ரதனான ஜகன்னாதன். ஸலஹுவ = காப்பாற்றுவான்.

காலையில் மகாதேவரின் ஸ்தோத்திரத்தை படிப்பதன் அவசியத்தையும், அதனால் கிடைக்கக்கூடிய பலன்களையும் விளக்குகிறார்.

11. ஸ்ரீ வாயுதேவரின் ஸ்தோத்திரம்

ஹனும பீ^{4}மானந்த^{3} முனிராய என்ன து^{3}
ர்கு^{3}ணக^{3}ளெணிஸத^{3}லெ ஸலஹெந்து^{3} | ஸலஹெந்து^{3} பி^{3}ன்னயிபெ
விக்ஞானரூப விஜிதாத்ம ||1-(52)

விக்ஞானரூப = விக்ஞான தத்வத்தின் அபிமானியும், நித்ய அபரோக்ஷியுமான. விஜிதாத்ம = பூர்ண மனோஜயம் உள்ளவன் (பக்தியால் ஸ்ரீஹரியை வசப்படுத்திக் கொள்பவனும், ஜீவோத்தம னும், மனம் முதலான சர்வேந்திரியங்களின் மற்றும் ஜீவ ஸ்வரூபத்தின் நியாமகனும் ஆன). ஹனுமபீமானந்த முனிராய = ஹனும, பீம, ஆனந்ததீர்த்த என்னும் மூன்று ரூபங்களைக் கொண்ட வாயுதேவனே. என்ன = என்னுடைய. துர்குணகள = தோஷங்களை. எணிஸதலெ = எண்ணாமல். ஸலஹெந்து = காப்பாற்று என்று. பின்னயிபெ = பிரார்த்திக்கிறேன்.

ஹனும, பீம, மத்வ என்னும் காரணப் பெயர்களைக் கொண்ட ஸ்ரீவாயுதேவரின் மூன்று அவதாரங்கள், வேதங்களில் சொல்லப்பட்டுள்ளன.

விக்ஞான தத்வமானது, மஹத் தத்வத்தின் ஒரு பகுதியே ஆகும். அதற்கு அபிமானிகள் வாயுதேவர். அவர், நித்ய அபரோக்ஷிகள். ப்ராக்ருத தேகம் இருந்தாலும், அதற்கு சம்பந்தமான பந்த, அஞ்ஞானம் ஆகியவை இல்லாத காரணத்தால் ‘ஷாரீரோப்ய ஷரீரவான்’ என்று பிரம்ம வாயுகள் சரீரம் இருந்தாலும், இல்லாதவர்கள் என்று சொல்லும் காரணத்தால், ஞானஸ்வரூபர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். ஆகையால், விக்ஞானரூப என்று அழைக்கப்படுகிறார்கள்.

மனம் முதலான அனைத்து இந்திரியங்களும், இந்திரிய அபிமானி களும், வாயுதேவரின் வசம் ஆனவர்கள். இந்திரியங்களிலும், இந்திரிய அபிமானிகளிலும் இவர் அந்தர் நியாமகராக இருக்கிறார். ‘விஜிதாத்ம’ என்னும் பெயர் இந்த மஹாத்ம்யத்தையே விளக்குகிறது.

ப்ராண நாமக நின்ன காணபே³கெந்தெ³னுத
ஸானுராக³த³லி நமிஸுவெ | நமிஸுவேனு மூஜக³
த்ராண பஞ்சாஸ்ய பரமேஷ்டி ||2-(53)

மூஜகத்ராண = மூன்று உலகங்களைக் காப்பவனும். பஞ்சாஸ்ய = ஐந்து முகங்களைக் கொண்டவனும். பரமேஷ்டி = பிரம்ம பதவியைப் பெறப் போகிறவனான / பிரம்மனுக்கு சமனுமான.

பிராண நாயக = ஹே பிராணேஷனே. நின்ன = உன்னை. காண பேகெந்தெனுத = சாட்சாத்தாக காணவேண்டும் என்னும் விருப்பத்தால். ஸானுராகதி = பக்திபூர்வகமாக. நமிஸுவெ = வணங்குகிறேன்.

பிராண, அபான, வியான, உதான, ஸமான என்னும் பஞ்ச-ப்ராணர்கள், தேகத்தில் இருக்கும் ப்ராண சக்தியின் நியாமகர் ஆவர். இவர்கள் அனைவரையும் வழி நடத்துபவரான வாயுதேவர், தேகத்தில் இருந்து கொண்டு முக்யபிராணர் என்று அழைத்துக் கொள்கிறார். முக்யபிரணரே ப்ராண நாயகர். பஞ்சப்ராணர், முக்ய பிராணரின் அதீனர் ஆவர். இவர் தாஸப்ராணர் என்றும் அழைக்கப் படுகிறார். இந்த பிராணாதி நாமங்களைக் கொண்ட முக்ய பிராணரின் ரூபங்கள் (அதே வரிசையில்) அவரில் இருக்கின்றன.

மூன்று உலகங்கள் என்பது மொத்த உலகத்தையே (14 உலகங்களைக் கொண்ட பிரம்மாண்டத்தையே) குறிக்கிறது. 14 உலகங்களைக் காப்பவரும் அனைத்து ஜீவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பவர் ஆகையால், முக்யபிராணர் ஜகத்ப்ராணர். பாவி-பிரம்மர் ஆனதால் பரமேஷ்டி என்று அழைக்கப்படுகிறார்.

பிரம்மதேவர் முதலில் ஐந்து முகங்களைக் கொண்டு, பகவத் விருப்பப்படி ஒரு முகத்தை ருத்ரரால் இழந்து சதுர்முக என்று அழைக்கப்பட்டார். இதயத்தில் இருப்பவனான மூலேஷனின் (பிம்ப ரூப ஸ்ரீஹரியின்) பாத சேவகராகி, நின்றிருக்கும் ஸ்ரீமுக்யபிராண தேவரின் தரிசனம் கிடைத்து, பிறகு பிம்ப அபரோக்ஷம் கிடைக்கிறது. அதற்காக அவரைக் காணவேண்டும் என்பது விருப்பம்.

சதுரவிம்ஷதி தத்வபதிக[3]ளாளுவ ஶக்த
நதிஸுவேனு நின்ன சரணக்கெ । சரணகமலவ தோரி
க்ருதக்ருத்யனெனிஸோ க்ருபெயிந்த[3] ||3-(54)

சதுரவிம்ஷதி தத்வபதிகள = 24 தத்வங்களுக்கு அபிமானிகளான தேவதைகளை. ஆளுவ ஷக்த = ஆளும் சக்தியைக் கொண்ட ஹே முக்யபிராண தேவரே. நின்ன சரணக்கெ = உன் பாதங்களுக்கு. நதிஸுவெனு = நமஸ்காரம் செய்கிறேன். க்ருபெயிந்த = கருணை

காட்டி. சரணகமலவ = (உன்) பாத கமலங்களை. தோரி = காட்டி. க்ருதக்ருத்யனு எனிஸோ = என்னை தன்யனாக மாற்று.

24 தத்வங்க்ளின் பெயர்களுக்கு 37ம் பத்யத்தை பார்க்கலாம். இவர்களில்,

* ப்ருத்வி முதலான பஞ்சபூதங்களுக்கு, முறையே, தராதேவி, வருண, அக்னி, ப்ரவஹ வாயு, கணபதி, இவர்களும்,
* கந்த முதலான பஞ்ச தன்மாத்ரங்களுக்கு, ஸௌபர்ணி (கருடனின் மனைவி), வாருணி (சேஷதேவரின் மனைவி), மற்றும் உமா (ருத்ரரின் மனைவி) ஆகியோர் அபிமானிகள்.
* வாக் முதலான பஞ்ச கர்மேந்திரியங்களுக்கு அக்னி, இந்திர, ஜயந்த, யம மற்றும் தக்ஷ ஆகியோர் அபிமானிகள்.
* பஞ்ச ஞானேந்திரியங்களுக்கு முறையே சூரிய, சந்திர, குபேர, வருண, அஸ்வினி தேவதைகள் ஆகியோர் அபிமானி தேவதைகள்.
* மனஸ் மற்றும் அஹங்கார தத்வத்திற்கு கருட, சேஷ, ருத்ரரும்,
* புத்தி தத்வத்திற்கு சரஸ்வதியும்
* மஹத் தத்வத்திற்கு சதுர்முகனும் அபிமானிகள்.

* மனஸ், புத்தி, அஹங்கார, சித்த, சேதன (சங்கல்பாதிகள், விவேசன சக்தி, கர்த்ருத்வாபிமான, ஸ்மரண சக்தி, அதிக ஸ்மரண சக்தி) ஆகியவை மனஸ்ஸின் செயல்கள் ஆகும். இவற்றில் இருக்கும் புத்தி அஹங்காரங்கள், மேலே சொன்ன புத்தி, அஹங்கார தத்வங்கள் அல்ல. புத்தி தத்வம், மஹத் தத்வத்தின் ஒரு பகுதியான விக்ஞான தத்வம் என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றிற்கு அபிமானிகள் என்று சொல்லப்படும் சரஸ்வதி மற்றும் சதுர்முகர்களுடன் பாரதி மற்றும் வாயுதேவரையும் சேர்க்க வேண்டும்.

* அவ்யக்த தத்வத்திற்கு ரமாதேவி அபிமானி ஆவார்.

தத்வங்களுக்கு வெவ்வேறு அபிமானிகளும் இருக்கக்கூடும். முக்ய அபிமானிகளுடன் அவரின் அதீனராக தத்வ நியாமகராக இருக்கின்றனர். (இது சம்பந்தமான விசேஷ விவரணைகளை குரு-முகேன சாஸ்திரங்களைப் படித்து அறிய வேண்டும்.

கர்மேந்திரிய, ஞானேந்திரியங்களின் அபிமானிகள் அனைவரும் உத்தம தேவதைகள். இவர்களைவிட இந்திரியார்த்தங்களுக்கு அபிமானிகளான சௌபர்ணி, வாருணி, உமா இவர்கள் சிறந்தவர்கள். இவர்களைவிட அஹங்கார தத்வத்திற்கு அபிமானிகளான, கருட சேஷ ருத்ரர் உத்தமர்கள். இவர்களைவிட புத்தி தத்வத்திற்கு நியாமகளான சரஸ்வதியும், அவரைவிட மஹத் தத்வாபிமானி யான சதுர்முகனும் சிறந்தவர் ஆவார்.

க்ருதக்ருத்ய = கண்டிப்பாக செய்ய வேண்டிய கடமைகளைக் கொண்டவன். தன்ய = முக்யபல பாத்ரன்.

சாந்தோக்ய, ப்ருஹதாரண்ய மற்றும் ஐதரேய உபநிஷத்களில் அவ்யக்த தத்வாபிமானியான ரமாதேவியைத் தவிர, மற்ற தத்வாபிமானிகளில் யார் சிறந்தவர்கள் என்று பார்ப்பதற்கு நடந்த சம்பவம் இருக்கிறது. விராட் புருஷ தேகத்தில், பரபிரம்ம சதுர்முக இருவரும் பார்த்திருக்க, வாயுதேவரே முதலான தேவதைகளில் யாரின் பிரவேசத்தினால் தேகம் செயல்களை செய்யத் துவங்குகிறதோ, அல்லது யார் தேகத்தை விட்டு வெளியேறினால், தேகம் செயல்களை விட்டு கீழே விழுகிறதோ அவரே சிறந்தவர் என்று சொல்ல வேண்டும் என்று நிச்சயித்து, அவரவர்களின் திறமையை சோதித்து அறிந்தனர் என்னும் கதை விளக்கப்பட்டிருக்கிறது.

சூர்ய, சந்திர முதலான தேவதைகள் ஒவ்வொருவராக தேகத்திலிருந்து வெளியே வர, கண், காது முதலான இந்திரியங்களின் செயல்கள் நின்றதே தவிர, தேகம் இறந்து கீழே விழவில்லை. வாயுதேவர் வெளியே வந்தவுடன் தேகம் கீழே விழுந்ததோடு மட்டுமல்லாமல், பிணத்திற்கு உண்டாகும் செயல்கள் அதற்கு ஆகத் தொடங்கின.

இதிலிருந்து, வாயுதேவரே சிறந்தவர் என்று நிச்சயமானாலும், அந்த தேவதைகள் மறுபடி இன்னொரு சோதனைக்கு தயாராகி, வாயுதேவரே முதலில் உடலை விட்டு வெளியேற வேண்டும் என்றனர்.

அப்படியே வாயுதேவரும் முதலில் வெளியேற, அந்த தேகத்தில் வேறு யாரும் நின்றிருக்க சாமர்த்தியம் இருந்திருக்கவில்லை. வாயுதேவரால் வெளியே இழுக்கப்பட்டனர். அப்போதே அவர்கள், தேகத்தில் தாங்கள் இருந்தாலும், அவர்கள் அனைவரும் வாயுதேவரின் அதீனர் என்று அறிந்தனர். அது மட்டுமல்லாமல், வேறு எந்த தத்வாபிமானி தேவதைகளும் இல்லாமல், வாயுதேவர் மட்டுமே அனைத்து இந்திரியங்களை நிர்வகிக்க சமர்த்தர் என்பதைக் கண்டு, அனைத்து தேவதைகளும் வாயுதேவரை சரணடைந்து வணங்கினர். ‘அனுபிராணந்தி யம் ப்ராணா: ப்ராணம் தம் சர்வஜந்துஷு’ (பாகவத) என்று, அரசனை மக்கள் பின் பற்றுவதைப் போல, தத்வாபிமானிகள் அனைவரும் முக்ய பிராணரை பின்பற்றி, அவர் அதீனத்தில் செயல்களை செய்தனர் என்று இதே நிர்ணயம் விளக்குகிறது.

த்ரித^{3}ஶ த்ரிஶதிரூப ஸூத^{3}தியிந்தொ^{3}ட^{3}கூ^{3}டி^{3}
பது^{3}மஜாண்ட^{3}தொ^{3}ளு ஸர்வத்ர | ஸர்வத்ர ப^{4}குதர
ப^{3}தி^{3}க^{3}னாகி^{3}த்து^{3} ஸலஹுவி ||4-(55)

த்ரிதஶ த்ரிஶதிரூப = (அனைத்து சேதனர்களிலும்) 30-30 ரூபங்களில் இருக்கும், ஹே பிராணநாதனே, ஸூததியிந்த = மனைவியுடன் (பாரதி தேவியுடன்). ஒடகூடி = சேர்ந்து. பதும ஜாண்டதொளு = பிரம்மாண்டத்தில். ஸர்வத்ர = அனைத்து இடங்களிலும் இருக்கும். பகுதர = பக்தர்களின். பதிகனாகித்து = அருகில் இருந்துகொண்டு. ஸலஹுவி = காப்பாற்றுகிறாய்

ஜீவ சரீரம், ஆத்யாத்ம, ஆதிபூத, ஆதிதெய்வ என்னும் மூன்றினையும் கொண்டது.

* ‘ஸ்வபாவோ அத்யாத்ம உச்யதே’ என்றால் (ஸ்வஸ்ய + பவதி) ஜீவனுக்கு உதவி செய்துகொண்டு அவனுடன் தேகத்தில் இருக்கும் மனஸ் முதலான இந்திரியங்களின் சமூகம் ஆத்யாத்ம எனப்படுகின்றன.

* ‘ஆதிபூதம் க்ஷரோ பாவ:’ என்றால் ப்ருத்வி முதலான பஞ்சபூதங் களின் காரியமான அழியக்கூடிய தேகம் ஆதிபூதம்.

* ‘புருஷஸ்சாதி தெய்வதம்’ என்றால், இந்திரிய அபிமானிகள் மற்றும் அவர்களில் ஸ்வாமியாக இருக்கும் ‘புருஷ’ என்னும் சொல்லால் அழைக்கப்படும் ஸ்ரீஹரி ஆதிதெய்வம்.

இப்படியாக பகவத்கீதையின் வாக்கியம் சொல்கிறது. ‘ஆதிபூதம் ஷரீரம், ஆத்யாத்ம மிந்த்ரியம், ஆதிதெய்வம் அபிமானின:’ ஆகிய மற்ற ஆதார வாக்கியங்களாலும், ஆத்யாத்ம முதலான சொற்களின் அர்த்தம் புலப்படுகின்றன.

ப்ராணாதி பஞ்சகஞ்சைவ ததா நாகாதி பஞ்சகம் |
ஸனாக கூர்ம க்ருகல தேவதத்த தனஞ்சயா: |
ஏவம் து தஷதா ப்ராண அத்யாத்மாதி த்ரிதாsகிலா: ||

என்னும் பாகவத தாத்பர்யத்தில் ஸ்ரீமதாசார்யர் உதாரணம் கொடுத்திருக்கும் வ்யோம சம்ஹிதையின் வாக்கியமானது,

ஸாத்யாத்மம் ஸாதிதெய்வம் ச ஸாதிபூதமிதி த்ரிதா |
விராட் ப்ராணோ தஷவித ஏகதா ஹ்ருதயேன ச ||

என்னும் பாகவத மூல ஸ்லோகத்தின் வியாக்யான ரூபமாக இருக்கிறது. இந்த வாக்கியங்களால், ப்ராண, அபான, வியான, உதான, சமான என்னும் ஐந்து, நாக, கூர்ம, க்ருகல, தேவதத்த, தனஞ்சய என்னும் ஐந்து, இப்படி மொத்தம் 10 பிராணர்களில், 10 ரூபங்களால் முக்யபிராணர் இருக்கிறர் என்றும், இந்த 10 ரூபங்களும், ஆத்யாத்ம, ஆதிபூத, ஆதிதெய்வங்களில் ஒவ்வொன்றிலும் இருந்துகொண்டு, மொத்த தேகத்திலும் 30 ரூபங்களால் முக்ய பிராணர் இருக்கிறார் என்று அறிகிறோம்.

பாகவத வாக்கியம் சொல்லும் இதயத்தில் இருக்கும் இன்னொரு ரூபம், மூலேஷனின் பாத மூலத்தில் இருக்கும் ரூபம். அத்யாத்மாதிகளில் இருக்கும் 30 ரூபங்கள், ஹரிபக்தர்களின் அனைத்து கர்மங்களையும் பகவந்தனின் அருகில் செல்லுமாறு செய்து, அருள்கிறார். இதயத்தில் இருக்கும் ரூபமானது, அபரோக்ஷத்திற்கு உதவும் ஸ்ரீஹரி தியானத்திற்கு காரணமாகி, அபரோக்ஷ காலத்தில் பக்தர்களுக்கு தரிசனம் கொடுக்கிறது.

கோடித்ரய ஸ்வரூப தா[3]டி[1]ஸு ப[4]வாப்தி[3]ய நி
ஶாடகுலவைரி ப[4]யஹாரி | ப[4]யஹாரி ரணதொ[3]ளு கி
ரீடியனு காய்தி[3] த்[4]வஜனாகி[3] ||5-(56)

கோடித்ரய ஸ்வரூப = மூன்று கோடி ரூபங்கள் உள்ள. நிஶாடகுலவைரி = ராத்ரிசர குல வைரி. பயகாரி = அனைத்து பயங்களையும் பரிகரிப்பவனான ஹே பிராணதேவனே. ரணதொளு = (குருக்ஷேத்ரத்தில் நடந்த) போரில். த்வஜனாகி = (அர்ஜுனனின் ரதத்தில்) த்வஜத்தில் இருந்து கொண்டு. காய்தி = (அர்ஜுனனை) காத்தாய். பவாப்திய = சம்சாரம் என்னும் கடலை. தாடிஸு = (நான்) தாண்டுமாறு செய்வாயாக.

வாயுதேவர் அனந்தரூபங்களைக் கொண்டவர். அவற்றில் மூன்று கோடி ரூபங்கள் விசேஷமானவை. 'அனந்தான்யஸ்ய ரூபாணி த்ரிகோடீனி விசேஷத:' (ச.ர.மா).

நிஷாடர் என்றால், இரவில் சஞ்சரிக்கக்கூடிய அசுரர்கள். அத்தகைய அசுர குலத்திற்கு வைரி – எதிரி.

மூரேளு ஸாவிரத[3] ஆர்னூருமந்த்ர
ஈரேளு ஜகதி[3] ஜனரொளு | ஜனரொளு மாடி உ
த்[3]தா[4]ரகை[3]ஸுவியோ ஸுஜனர ||6-(57)

மூரேளுஸாவிரத ஆர்னூரு = 21,600 . மந்த்ர = ஹம்ஸ மந்திரங்களை. ஈரேளு ஜகதி = 14 உலகங்களின். ஜனரொளு = மக்களில் இருந்து கொண்டு. மாடி = ஜபம் செய்து. ஸுஜனர = சுஜீவிகளை. உத்தார கைஸுவியோ = அவர்களுக்கு அருள்வாய் தேவா.

பவமானராய நீ த்ரிவித[4] ஜீவரொளித்து[3]
விவித[4] வ்யாபார நீ மாடி[3] | நீ மாடி[3] மாடி[3]ஸி
அவரவர க[3]திய கொடு[3]திப்ப ||7-(58)

பவமானராய = ஹே பவமான தேவனே. நீ = நீ. த்ரிவித ஜீவ ரொளித்து = (முக்தியோக்ய, நித்ய சம்சாரி மற்றும் தமோயோக்ய என்னும்) மூன்று வித ஜீவர்களில் இருந்து. விவித வியாபார = நானாவிதமான கர்மங்களை. நீ மாடி = நீ செய்து. மாடிஸி =

அவர்கள் மூலமாக செய்வித்து. அவரவர கதிய = அவரவர்களின் தகுதிக்கேற்ப கதியை. கொடுதிப்ப = கொடுக்கிறாய்.

ஸ்ருதி ஸ்ம்ருதிகள் பல்வேறு வாக்கியங்களால் எவ்வித சந்தேகங்களுக்கு இடமின்றி, ஸ்வரூபத்திலேயே ஜீவர்கள் மூன்று விதர்கள் என்று சொல்கின்றன.

நாஸுராணாம் தேவம் ரூபம் ந தேவானாமாஸுரம் ந சோபயம் மனுஷ்யாணாம் |
யே யத்ரூப: ஸ தத்ரூபோ நிஸர்கோ ஹ்யேஷ பவதி || (ஸ்ருதி)

தெய்வீமேவ ஸம்பத்திம் தேவா அபிகச்சந்தி அஸுரீமேவ சாஸுரா: |
நெய்தயோரபிபவ: கதாசித் ஸ்வபாவ ஏவ ஹ்யவதிஷ்யதே || (ஸ்ருதி)

ஸ்ருண்வே வீர உக்ரமுக்ரம் தமாயன்னன்யான்ய மதினேனீமான:
ஏதமான த்விரூபயஸ்ய ராஜா சோஷ்யோயதே விஷ இந்த்ரோ மனுஷ்யான் || (ரிக்வேதம்)

அஸுரா அஸுரேண்யைவ ஸ்வபாவேன ச கர்மணா |
ஞானேன விபரீதேன தமோ யாந்தி வினிஷ்சயாத் |
தேவ தெய்வஸ்வபாவேன கர்மணா ஜாப்யஸம்ஷயம் |
ஸம்யக் ஞானேன பரமாம் கதிம் கச்சந்தி வைஷ்ணவீம் |
நானயோரன்யதா பாவ: கதாசித் க்வாபி வித்யதே |
மானுஷா மிஸ்ரமதயோ விமிஸ்ரகதயோ஽பி ச ||
(ஸ்காந்த புராணம்)

அசுரர்களுக்கு தேவ ஸ்வரூபமும், தேவதைகளுக்கு அசுர ஸ்வரூபமும், மனுஷ்யர்களுக்கு இந்த இரண்டில் ஏதாவது ஒன்றும் எப்போதும் கிடைப்பதில்லை. யார், எந்த ஸ்வரூபத்தை சேர்ந்தவரோ, அவன் அந்த ஸ்வபாவத்தையே பெறுகிறான்.

தேவதைகள் தேவ ஸ்வபாவத்தையும், அசுரர்கள் அசுர ஸ்வபாவத்தையும் பெறுகிறார்கள். இந்த ஏற்பாட்டில் என்றும் மாற்றமில்லை. அவரவர்களின் ஸ்வபாவங்களே நிரந்தரமாக அவர்களில் இருக்கின்றன.

வீர: - சர்வஷக்தனான, இந்த்ர: - மிகுந்த செல்வந்தனான பரமாத்மன், உக்ரம் உக்ரம்- அசுர ஸ்வபாவம் இல்லாத அனைவரையும், அதினேனிமான: - சம்சாரத்திலிருந்து தாண்ட வைக்கிறான் என்று, ஸ்ருண்வே - ஸ்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறான்.

ஏவமான த்விட் - ஸ்வயோக்யதையை மாற்றாதவன், உபயஸ்ய ராஜா - தேவ, அசுர ஸ்வபாவங்களைக் கொண்டவர்களை அந்த ஸ்வாமி, மனுஷ்யா விஷ: - மத்யவர்த்திகளான ராஜஸர்களை சோஷ்கோயதெ - தினமும் சுற்ற வைக்கிறான்.

அசுரர்கள் தாமஸ கர்மங்களாலும், மித்யா ஞானத்தினாலும், நிச்சயமாக தமஸ்ஸினை அடைகிறார்கள். தேவதைகள் சத்கர்மங் களாலும் உண்மையான ஞானத்தினாலும் உத்தமமான விஷ்ணு லோகத்தை அடைகிறார்கள். இந்த நியமத்திற்கு என்றும், எங்கும் மாற்றம் உண்டாவதில்லை. (மனுஷ்யோத்தமர்கள் முக்தி யோக்யர் - தேவ ஸ்வபாவத்தின் குழுவை சேர்கின்றனர்). மிஸ்ர ஞானம் உள்ள மனுஷ்யர் - சுகதுக்க மிஸ்ரமான கதியையே அடைகிறார்கள்.

தேவ, மனுஷ்ய அசுரர் என்னும் த்ரிவித ஜீவர்களிலும், முக்ய பிராணர் ‘ஹம்ஸ: ஸோஹம் ஸ்வாஹா’ என்னும் ஹம்ஸ மந்திரத்தை உச்வாஸ, நிஷ்வாஸங்களால் ஒரு நாளுக்கு 21,600 முறை ஜெபிக்கிறார். ஒரு நிமிடத்திற்கு 15 உச்வாஸ, நிஷ்வாஸங்கள் ஆகின்றன. ஹம்ஸ: - மூச்சை உள் நிறுத்தும் காலம். ஸோஹம் - உச்வாஸ காலம். ஸ்வாஹா - நிஷ்வாஸ காலம்.

தோஷங்கள் அற்றவனும், பக்தர்களின் துக்கங்களை பரிகரிப்பவனும் ஆனதால், பரமாத்மன் ‘ஹம்ஸ’ என்று அழைக்கப படுகிறான். ‘ஸோஹம்’ என்றால், அந்த ஹம்ஸனே என் அந்தர்யாமியானவன் என்று அர்த்தம். ‘ஸ்வாஹா’ என்றால் ஆத்ம சமர்ப்பணை ரூபத்தின் நமஸ்காரத்தை சொல்கிறது. சாத்விகர்கள் (தேவ ஸ்வபாவம் கொண்டவர்கள்) இந்த அர்த்தானுசந்தானத்தைக் கொண்டவர்கள். இதை புரிந்து கொள்ளாதவர்கள்,

புறக்கணிப்பவர்கள் – ராஜஸர்கள். 'ஸோஹம்' என்பதற்கு நானே ஹம்ஸன் என்று அர்த்தம் சொல்பவர்கள் அசுரர்கள்.

அந்தர்யாமிணமீஷேஷம் அபேக்ஷ்யாஹம் த்வமித்யபி |
இமே ஷப்தா: ப்ரயுஜ்யந்தே அபேக்ஷ்யாஹம் வஸ்துஷு |(பாஷ்ய)

இந்த பிரமாண வசனம், அஹம், த்வம் முதலான சொற்கள் வெவ் வேறு சொற்களாக இருந்தாலும், அந்தர்யாமியை நிரூபிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்கிறது. ஆகையால், ஸோஹம் என்பதற்கு என் அந்தர்யாமி என்றே அர்த்தம்.

பவமான கு³ருவெ நின்னவர ஸேவக நானு
ஶ்ரவணமனனாதி³ ப⁴குதிய | ப⁴குதி நின்னல்லி மா
த⁴வனல்லி கொட்டு ஸலஹய்ய ||8-(59)

பவமான குருவெ – ஹே பவமான குருவே. நான், நின்னவர – உன் பக்தர்களின். ஸேவக – சேவகன் . ஶ்ரவணமனனாதி பகுதிய – நற்சாஸ்திரங்களின் ஸ்ரவண, (அப்படி ஸ்ரவணம் செய்த பகவன் மகிமைகளின்) மனனம், தியானங்களை செய்து. நின்னல்லி – உன்னிலும். மாதவனல்லி – லட்சுமிபதியான ஸ்ரீஹரியிலும். பகுதி – பக்தியை. கொட்டு – கொடுத்து. ஸலஹய்ய – அருள்வாயாக.

ஸ்ரவண, மனன, த்யானங்கள் ஆகியவை பகவந்தனின் சாக்ஷாத் காரத்திற்கு முக்கிய சாதனங்கள் ஆகும். மனஸ் முதலான அனைத்து இந்திரியங்களுக்கும் தலைவரான வாயுதேவரின் அருளாலேயே இந்த சாதனங்கள் நமக்குக் கிடைக்கின்றன. தத்வஞானம் என்பது அவரின் பரம பிரசாதத்தினால் மட்டுமே கிடைக்கும். அனைவருக்கும் அவரே ஞானத்தைக் கொடுப்பவர். ஞானத்தினாலேயே பக்தி. பக்தியினால் ஸ்ரீஹரி பிரசாதம்.

மிஶ்ர ஜீவரொளித்து³ மிஶ்ரஞானவனித்து
மிஶ்ர ஸாத⁴னவ நீ மாடி³ | நீ மாடி³ மாடி³ஸி
மிஶ்ரக³திக³ளனே கொடு³திப்ப ||9-(60)

மிஶ்ர ஜீவரொளித்து – நித்ய சம்சாரியான ஜீவர்களில் இருந்து கொண்டு; மிஶ்ர ஞானவனித்து – சம்ஷய ஞானத்தைக் கொடுத்து;

மிஶ்ர சாதனவ – சுகதுக்கங்களுக்கு காரணமாகும் கர்மங்களை; நீ மாடி மாடிஸி – நீ செய்து, அவர்கள் மூலமாக செய்வித்து; மிஶ்ர கதிகளனெ – (அதன் மூலம்) நித்யசுகதுக்க மிஶ்ர அனுபவ நிலைகளை. கொடுதிப்ப = கொடுக்கிறாய்

நித்ய சம்சாரி ஜீவர்களில் இருந்துகொண்டு, ஸ்ரீமுக்யபிராணர் அவர்களுக்கான கதியைக் கொடுக்கும் விதங்களை சொல்கிறார்.

அனிலதே³வனெ தை³த்யத³னுஜ கணதொ³ளகி³த்து³
அனுசித கர்மக³ள நீ மாடி³ | நீ மாடி³ மாடி³ஸி
த³ணிஸுவியோ அவர தி³விஜேஶ ||10-(61)

திவிஜேஷ – தேவஸ்ரேஷ்டனான (அனைத்து தத்வாபிமானி தேவதைகளில் இருந்து அவர்களுக்கும் தலைவனான). அனில தேவனே – ஹே வாயுதேவனே. தைத்யதனுஜ கணதொளகித்து – தைத்ய தானவ ஜீவ சமூகத்தில் இருந்து (தமோ யோக்ய ஜீவர்களில் இருந்து). அனுசிதகர்மகள = அயோக்ய கர்மங்களை. நீ மாடி மாடிஸி = நீ செய்து, அவர்கள் மூலமாக செய்வித்து. அவர – அவர்களை. தணிஸுவியோ – துக்கப்படுத்துவாய்.

தமோயோக்யர்களில் இருந்து வாயுதேவர் செய்விக்கும் சாதனைகளை நிரூபிக்கிறார். 'தேவஸ்ரேஷ்டஸ்ச மாருதி:' ஆகிய ஆதாரங்கள் வாயுதேவரின் ஜீவோத்தமத்வத்தை சொல்கின்றன. 'ஓம் இயதாமனனாத் ஓம்' 'ஓம் ஸ்ரேஷ்டஸ்ச ஓம்' ஆகிய பிரம்ம சூத்ரங்களில் இவரின் ஜீவோத்தமத்வம் வெளிப்படுகின்றன.

காலநியாமகனே காலத்ரயங்க³ளலி
காலகு³ணகர்ம அனுஸார | அனுஸாரவித்து பரி
பாலிஸுவி ஜக³வ பவமான ||11-(62)

பவமான – ஹே பிராணதேவனே. கால நியாமகனே – காலா பிமானியான நீ. காலத்ரயங்களலி = எப்போதும் (இறந்த, நிகழ், எதிர் காலங்களில்). காலகுணகர்ம = கால, குண, கர்மங்களுக்கு. அனுஸார வித்து = தக்கவாறு பலன்களைக் கொடுத்து. ஜகவ = சஜ்ஜனர்களை. பரிபாலிஸுவி = காக்கிறாய்.

ப்ரதானோ ஞானினாம் பிரம்மா ஞானமானி ஹ்ருதிஸ்தித: |

ஸ ஏவ காலமானீ ச ஸம்ஹர்த்யாணாம் பதி:ஸ்ம்ருத: ||
(பாகவத தாத்பர்ய)

மற்றும்

வேதானாம் சைவ லோகானாம் வ்யோமகாலாதிகஸ்ய ச |
ஸர்வதஸ்த்வாபிமானீ ச ஸர்வப்ராணகணாதிப: ||
(சத்தத்வ ரத்ன மாலா)

என்னும் வாக்கியங்கள், வேதங்கள், உலகங்கள், ஆகாயம், காலம் ஆகியவற்றிற்கும், அனைத்து தத்வங்களுக்கும், அனைத்து ஜீவ கணங்களுக்கும் நியாமகர் என்றும், ஞானி ஸ்ரேஷ்டர் என்றும், அனைவரின் ஹ்ருதயத்தில் இருந்துகொண்டு ஞானத்தைக் கொடுப்பவராக இருக்கிறார் என்றும், சர்வசம்ஹார கர்தரும் அவர்களே என்று பிரம்மவாயுகளின் மகிமைகளை நிரூபிக்கின்றன.

ஆக^{2}ணாஶ்மனெ நின்ன ஸோகலரியவு தோ^{3}ஷ
ஸ்ரீகண்ட^{2}முக்^{2}ய ஸூரரிகெ^{3} | ஸூரரிகெ^{3}ல்லவோ பா^{4}ர
தீகாந்த நினகெ^{3} ப^{3}ஹதெ^{3}ந்தோ^{1} ||12-(63)

ஆகணாஶ்ம = கடினமான பாறையைப் போலிருக்கும். பாரதீகாந்த = பாரதிதேவியின் பதியான ஹே முக்யபிராணனே. நின்ன = உன்னை தோஷ = எந்த தோஷமும் . ஸோகலரியவு = தொடக்கூட சாத்தி யமில்லை. ஸ்ரீகண்டமுக்ய ஸூரரிகெ = ருத்ரரே முதலான தேவதை களுக்கு. இல்லவோ = தோஷங்கள் இல்லாதிருக்கையில். நினகெ = அவர்கள் அனைவரின் தலைவனான உனக்கு. பஹது = (அத்தகைய தோஷங்கள்) வருவது. எந்தோ = எப்படி? (வராது என்று அர்த்தம்)

தே ஹ நாஸிக்யம் ப்ராணமுத்கீதம் உபாஸாம்
சக்ரிரே தம் ஹாஸூரா:பாப்மனா விதது: ||
என்று சொல்லி இறுதியில்:

அத ஹ ய ஏவாயம் முக்ய: ப்ராணஸ்தமுத்கீதம்
உபாஸாம் சக்ரிரே தம் ஹாஸூரா ருத்வா
விதத்வஸூ: யதா அஷ்மானம் அகணம்
ருத்வா வித்வம்ஸேத்யேவம்

என்று முக்யபிராணரை ‘ஆகணாஷ்ம’ என்று சாந்தோக்ய உபநிஷத் சொல்லியிருக்கிறது. தேவ அசுரர்களில் ஒரு முறை போர் உண்டானது. அசுரர்கள் அனேக எண்ணிக்கையில் இருந்ததாலும், ருத்ரதேவரின் வரத்தைப் பெற்றிருந்ததாலும், அந்தப் போரில் தேவதைகள் தோற்றனர். உத்கீத என்னும் ஸ்ரீஹரியை துதித்து, அவனின் விசேஷ அருளால் தேவதைகள் அசுரர்களை வெல்ல முயன்றனர். முதலில் நாஸிக்ய வாயுவை பிரதிமையாக செய்து, அவனில் உத்கீதனை உபாசனை செய்யத் துவங்கினர். உத்கீதனை வணங்கினால் இவர்கள் நம்மை வென்றுவிடுவார்கள் என்று அறிந்திருந்த அசுரர்கள், நாசிக்ய வாயுவில் இறங்கி, அவனை தோஷியாக மாற்றினர்.

அதனால் அந்தப் பிரதிமை அபவித்ரம் ஆனதால், உபாசனை தடைபட்டது. தேவதைகள், பிறகு முறையே அக்னி, சூர்ய, சந்திர, ருத்ர, சேஷ, கருட பிரதிமைகளை வைத்துக்கொண்டு உத்கீதனை வழிபட முயன்றனர். அசுரர்கள் அந்த அனைத்து பிரதிமைகளையும் களங்கப் படுத்தினர். இறுதியில், முக்யபிராணர் பிரதிமையை வைத்து உத்கீதனை வழிபட்டனர் தேவதைகள்.

அசுரர்கள் அந்த பிரதிமையின் மேல் விழ, ஒரு பெரிய பாறையின் மேல் மண் உருண்டைகள் விழுந்தால் எப்படி அந்த மண் உருண்டைகள் தூள்தூளாகிப் போகுமோ, அப்படியே, அசுரர்கள் அந்த பிரதிமையை களங்கப் படுத்தமுடியாமல் தோற்றுப் போயினர். தோஷங்கள் அற்ற இந்த பிரதிமையில் (வாயு அந்தர்கத) ஸ்ரீஹரியை உபாசிக்கும் பக்தன் ‘ஆகணாஷ்ம’ன் ஆகிறான். அதாவது, அந்த பக்தனுக்கு கேடு செய்விப்பவனும், கொல்ல வருபவனும், இந்த அசுரர்களைப் போல தாமே தோற்று ஒடுவர். பக்தன் எவ்வித பிரச்னைகளும் இன்றி நலமாக இருப்பான். தேவதைகள் உத்கீதனை (வாயு அந்தர்கதனை) மெச்சி, தம் வெற்றியை அடைந்தனர்.

சாந்தோக்யத்தில் சொல்லப்பட்டிருக்கும் இந்த வாயுதேவரின் மகிமைகளை இங்கு சுருக்கமாக சொல்லியிருக்கிறார் ஸ்ரீதாஸார்யர்.

கல்யாதி^{3} தை^{3}த்ய குலத^{3}ல்லண த^{3}யாஸாந்த்^{3}ர
ப^{3}ல்லித^{3}னு ஜக^{3}க்கெ ப^{4}யதூ^{3}ர | ப^{4}யதூ^{3}ர ப^{4}குதரனு
எல்ல காலத^{3}லி ஸலஹய்யா ||13-(64)

கல்யாதி தைத்ய குலதல்லண = கலி முதலான தைத்ய சமூகத்தை கொன்று அழிக்கும். பயதூர = பயங்கள் அற்றவனான ஹே பிராணதேவனே. ஜகக்கெ = இந்த உலகத்தில். பல்லிதனு = வலிமையான நீ. தயாஸாந்த்ரா = கருணையுள்ளவன் நீ. பக்தர = பக்தர்களை. எல்ல காலதி = அனைத்து காலங்களிலும் (முக்தி நிலை வரைக்கும்). ஸலஹய்ய = (அனைத்து விதமான பயங்களை யும் போக்கி) அருள்வாயாக.

ஆகணாஷ்மசமனான முக்யபிராணர் இல்லாமல் பயத்தைப் போக்குபவர் வேறு யாரும் இல்லை என்பதால், இந்த பிரார்த்தனை மிகவும் அவசியமானதாகும்.

காருண்யநிதி^{4} ஜக^{3}த^{3} உத்தா^{4}ரகனு நீனெ உ
த்தா^{4}ர மாட^{3}தி^{3}ரெ ப^{4}குதர | ப^{4}குதரனு காவரி
ந்னாரு லோகத^{3}லி ஜயவந்த ||14-(65)

காருண்யநிதி = ஹே கருணா சமுத்திரனே. ஜகத உத்தாரகனு = உலகத்தை காப்பாற்றுபவனே. நீனே = நீயே. பகுதர = பக்தர்களை. உத்தார மாடதிரெ = காப்பாற்றாமல் விட்டால் (கை பிடித்துத் தூக்கி காப்பாற்றாமல் இருந்தால்). ஜயவந்த = நித்ய வெற்றியாள னான ஹே பிராணதேவனே. லோகதலி = இந்த உலகத்தில். இன்யாரு = வேறு யார். காவரு = காப்பாற்றுவார்கள்? (உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பொருள்)

ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரியைத் தவிர காப்பாற்றுபவர்கள் வேறு யாரும் இல்லை என்று அர்த்தம். ஸ்ரீஹரியும் முக்யபிராணர் மூலமாகவே அனைவரையும் காக்கிறான்.

யானி யானீஹ கர்மாணி ஜகதி ஸ்யோ ரமாபதே: |
பாய: ப்ராணாதிபே தானி ஸமஸ்தானி ந ஸம்ஷய: ||
(சத்தத்வ ரத்ன மாலா)

உலகத்தின் அனைத்து விஷயங்களிலும் ஸ்வதந்த்ர கர்தனான நாராயணன் நிர்வகிக்கும் அனைத்து கர்மங்களையும், அந்த ஸ்ரீஹரியின் அதீனனாகி பிராண நாயகன் தான் நிர்வகிக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கும் முக்யபிராணனின் மகிமை, இந்த விஷயத்தில் ஆதாரமாக இருக்கிறது. ஸ்ரீஹரியைப் போல, முக்ய பிராணனும் உலகத்தை காக்கிறான். ஆனால், அது ஸ்ரீஹரியின் அதீனனாகியே இருந்து செய்கிறாரே தவிர, ஸ்வதந்த்ரனாக அல்ல.

த்ரிஜக^{3}த் கு^{3}ருவரேண்ய ருஜுக^{3}ணாதி^{4}ப பதா^{3}ம்
பு^{3}ஜ யுக்மக்கெரகி^{3} பி^{3}ன்னயிபெ | பி^{3}ன்னயிபெ மன்மனதி^{3}
நிஜரூப தோரி ஸந்தயிஸு ||15-(66)

ருஜுகணாதிப = ருஜுகண ஜீவர்களில் முக்ய அதிகாரிகளாக இருக்கும். த்ரிஜகத்குருவரேண்ய = மூன்று (அனைத்து) உலகங்களின் சஜ்ஜனர்களுக்கு முக்ய குருவான ஹே முக்ய பிராணதேவரே. பதாம்புஜயுக்மகெ = உன் இரு பாத கமலங்களை. எரகி = வணங்கி. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன். மன்மனதி = என் மனதில். நிஜரூப = உன் ஸ்வரூபத்தை. தோரி = காட்டி. ஸந்தெயிஸு = எனக்கு அருள்வாயாக

ருஜுகணத்தவர்கள் பிரம்ம பதவியை அடைந்து, அங்கிருந்து முக்தர்கள் ஆகின்றனர். அந்த பதவி வேறு எந்த ஜீவர்களுக்கும் கிடைப்பதில்ல. ருஜுஜீவர்களின் 200 கல்ப ஸாதனையில் 199ம் கல்பத்தில் வாயுபதவியை அடைகின்றனர். அந்த பதவியில் இருக்கும் ருஜுகணத்தின் ஜீவனே வாயுதேவர் என்னும் பெயர் உள்ளவர். அவரே முக்யபிராணர்.

ஸ்ரீஹரி அவன் மூலமாகவே அனைத்து உலகத்தையும் வழி நடத்துகிறார். ருஜுகண ஜீவர்கள் அனாதி காலத்திலிருந்து பரோக்ஷ ஞானம் உள்ளவர்கள். அபரோக்ஷ ஞானிகள் ஆகின்றனர். அவர்களே ஒவ்வொரு பிறவியிலும், பகவத் ரூபங் களின் சாட்சாத்காரத்தைப் பெற்றவாறு, அத்யந்த அதிசயமான மோட்ச ஆனந்தத்தைப் பெறுகிறார்கள். இவர்களுக்கு கிடைக்கும் ஆனந்தத்தை வேறு எந்த ஜீவனும் எப்போதும் பெறுவதில்லை.

அனிலதே[3]வனே நின்ன ஜனும ஜனுமக[3]ளல்லி
இனிது பே[3]டு[3]வேனு எந்தெ[3]ந்து[3] | எந்தெ[3]ந்து[3] விஷய சின்
தனெய கொட[3]தெ[3]ன்ன ஸலஹெந்து[3] ||16-(67)

அனிலதேவனே = ஹே வாயுதேவனே. ஜனுமஜனுமகளல்லி = அனைத்து பிறவிகளிலும். நின்ன = உன்னை. இனிது = அதிகமாக. பேடுவேனு = வேண்டிக் கொள்கிறேன். எந்தெந்து = எல்லா காலங் களிலும். விஷயசிந்தனெய = விஷய போகத்தின் சிந்தனையை (விஷயங்க்ளை அனுபவிக்கும் விருப்பத்தை). கொடதெ = எனக்கு கொடுக்காமல். என்ன = என்னை. ஸலஹெந்து = அருள்வாயாக (என்று வேண்டிக் கொள்கிறேன்)

தாரதம்ய ஞான வைராக்[3]ய ஸத்ப[4]க்தி
தா[3]ரட்[4]யவாகி[3] இரலெந்து[3] | இரலெந்து[3] பி[3]ன்னயிபெ
பா[4]ரதிரமண நினகா[3]னு ||17-(68)

பாரதிரமண = ஹே பாரதிபதியான முக்யபிராணதேவனே. தாரதம்ய ஞான = தாரதம்ய ஞானத்தை (மற்றும் ஸ்ரீஹரியின் சர்வோத்த மத்வம், வாயுதேவரின் ஜீவோத்தமத்வம்). வைராக்ய = வைராக்கிய மும். ஸத்பக்தி = நவவித பக்தியுடன் கூடிய சத்பக்தியை. தாரட்யவாகி = திடமாக. இரலெந்து = (உன்னிடம் மற்றும் ஸ்ரீஹரி யிடம்) இருக்கட்டும் என்று. ஆனு = நான். நினகெ = உன்னிடம். பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன்.

மரண ஜனனக[3]ளு ப[3]ந்த[3]ரெ ப[3]ரலி ப்ரத்[3]வேஷ
கு[3]ருஹிரியரல்லி ஹரியல்லி | ஹரியல்லி கொட[3]தெ[3] உ
த்த[4]ரிஸ பே[3]கென்ன பரமாப்த ||18-(69)

பரமாப்த = தாய், தந்தை, உறவினர் அனைவரைவிடவும் அதிகமாக அருளும் ஹே பாரதீஷனே. மரண ஜனனகளு = பிறப்பு இறப்புகள். பந்தரெ = வந்து கொண்டிருந்தால். பரலி = வரட்டும் (அதற்கு நான் பயப்படுவதில்லை). ஆனால். குருஹிரியரல்லி = குருகளும் மற்றும் சான்றோர்களில். ஹரியல்லி = ஸ்ரீஹரியிடம். ப்ரத்வேஷ = (நானே பிரம்மன், ஸ்வதந்த்ரன் ஆகிய) புகழ்பெற்ற நவத்வேஷங்களில் ஒரு த்வேஷத்தையும். கொடதெ = கொடுக்காமல். என்ன = என்னை. உத்தரிஸபேகு = அருள்வாயாக.

விஷயதா3ஸெய பி3டி3ஸி அஸுனாத2 என்ன பா
லிஸபே3கு மனஸு நின்னல்லி | நின்னல்லி நில்லிஸி ஸன்
தஸதி3 காயென்ன மருதீ3ஶ ||19-(70)

அஸுனாத = ஹே பிராணநாதனே. விஷயதாஸெய = விஷய போகங்களின் ஆசையை. பிடிஸி = விடுவித்து. என்ன = என்னை. பாலிஸபேகு = காப்பாற்றுவாயாக. மனஸு = என் மனதை. நின்னல்லி நிலிஸி = உன்னிடம் திடமாக நிறுத்துமாறு செய்து. ஸந்தஸதி = மகிழ்ந்து. மருதீஷ = ஹே மருத்கணர்களின் நாயகனே. என்ன = என்னை. காயி = காப்பாற்றுவாயாக

(சாஸ்திரத்திற்கு சம்மதம் இல்லாத) விஷயங்களின் ஆசையை துறப்பதே வைராக்கியம் எனப்படுகிறது. வைராக்கியம் இல்லாமல் ஞானம் இல்லை. பக்தி இல்லை. ஞான பக்தி வைராக்கியங்கள் இல்லாமல், ஸ்ரீஹரி என்றும் பிரசன்னன் ஆவதில்லை. ஹரி பிரசாதம் இல்லாமல் அபரோக்ஷம் இல்லை. அது இல்லாமல் மோட்சம் இல்லை. இந்த அனைத்து முக்கிய சாதனங்களையும், அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய ஸ்ரீஹரி பிரசாதத்தையும், யோக்ய ஜீவர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு வாயுதேவரே முக்கிய காரணமாகிறார். பக்தி வைராக்யாதிகளைக் கொடுப்பவர்.

வாயுர்ஹி ஸர்வஜீவானாம் அபிமானி நியாமக: |
பலிமேதாத்ருதீ ஸ்தைர்யத்யான ஜராக்யமானமான் |
ஸத்ஞானானந்த பக்த்யாதி குணமானி ஸ ஏகல: ||
(சத்தத்வ ரத்ன மாலா)

அனைத்து ஜீவர்களின் பல, புத்தி, தைர்ய, ஸ்தைர்ய, த்யான, வைராக்ய, ஞான, ஆனந்த, பக்தி முதலான குணங்களுக்கு அபிமானிகள் என்றும்;

முக்யபிராணோ மஹானேஷ யேன வ்யாப்தம் சராசரம்
தஸ்மின் ஓதமிதம் ஸர்வம் சேதனாசேதனாத்மகம் |
யதா ஸூத்ரே மணிகணா: ரதனாபாவரா யதா
யதா கந்தாபடா:ஸூத்ரே ஓதா:ப்ரோதாஸ்ச ஸம்ஸ்திதா: ||
(பாகவத தாத்பர்ய)

ஜீவோத்தமனான இந்த முக்யபிரணர், சராசரங்களால் நிறைந்த இந்த உலகில் நிறைந்திருந்து, உள்ளேயும் வெளியேயும், குறுக்கும் நெடுக்குமாக அனைத்து இடங்களிலும் நிறைந்திருந்து இந்த உலகத்தை தரித்திருக்கிறார். ஒரு மாலையில் இருக்கும் முத்துக்களை இணைக்கும் கயிறைப் போலவும், ஒரு சக்கரத்தை இணைக்கும் ஆரங்களைப் போலவும் வாயுதேவர் இருக்கிறார் என்று அவரது மகிமைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

ஏகோ ஹி கர்தா ஸர்வஸ்ய ரமானாத ப்ரஸாததஃ |
பதப்ரதஸ்ச தேவானாம் தத்தச்சக்தி ப்ரதஸ்ததா |
ததா ம்ருத்யுப்ரதஸ்சாயம் ஜகத்யமயதீஸ்வரஃ
ஜாக்ரத்ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி ஸர்வாவஸ்தானியாமகஃ ||
(சத்தத்வ ரத்ன மாலா)

ரமாபதியின் அருளால், முக்யபிராணர் அனந்தானந்த ரூபங்களை தரித்து, அனந்த ஜீவர்களில் இருந்து, அனைத்து செயல்களையும் செய்து செய்விக்கிறார்.

தேவதைகளுக்கு அவரவர்களின் பதவியைக் கொடுக்கிறார். அந்த பதவியில் அவரவர்கள் இருந்து தத்தம் வேலைகளை செய்வதற்கான சக்தியை அவர்களுக்குக் கொடுக்கிறார். அவரே ஜீவனைக் கொடுப்பவர். மரணத்தைக் கொடுப்பவர். ஜீவன் முக்தர்கள் என்னும் அபரோக்ஷ ஞானிகளின் செயல்களுக்கும் அவரே காரணர்.

முழிப்பு முதலான அனைத்து நிலைகளை நிர்வகிப்பவரும் முக்ய பிராணரே. இதே அர்த்தங்களைக் கொண்ட அனேக ஆதாரங்கள், முக்யபிராணரின் அபாரமான, எல்லையற்ற மகிமைகளை விளக்குகின்றன. 67ம் நுடியிலிருந்து இதுவரை சொல்லியிருக்கும் பிரார்த்தனைகளை, மகாமகிமரான பிராணதேவரைத் தவிர வேறு யாரிடமும் செய்ய முடியுமா? அபீஷ்டங்களை கொடுக்கும் சாமர்த்தியத்தையும் கொண்டவரிடம் மட்டுமே பிரார்த்தனைகளை செய்வது நல்லதல்லவா?

யதா ஜீர்ணானி வஸ்த்ராணி தந்த்வாதாரணி வா புனஃ |
கந்தாவயவபூதானி தத்வதேதச் சதுர்முகே ||

என்று உலகத்தைக் காக்கும் மகிமைகள், சதுர்முக பிரம்மனுக்கும் கூறப்பட்டிருக்கிறது.

அஞ்சித^{3}வரிகெ^{3} வஜ்ரபஞ்சரனு நீனெ ப்ர
ப^{4}ஞ்சன ப்ரபு^{4}வெ ப்ரதிதி^{3}ன |ப்ரதிதி^{3}னதி^{3} நம்ம ப^{4}ய
ப^{4}ஞ்சிஸி காயோ ப^{3}ஹுரூப ||20-(71)

பஹுரூப = அனந்த ரூபங்களைக் கொண்ட. ப்ரபஞ்சன ப்ரபுவே = ஹே துஷ்டர்களை அழிப்பவனே (சம்சார துன்பங்களிலிருந்து காப்பவனே). அஞ்சிதவரிகெ = பயம் உள்ளவர்களுக்கு. நீனே = நீயே வஜ்ரபஞ்சரனு = (பறவையானது எந்த எதிரிகளின் பயமும் இல்லாமல் தன் கூட்டில் சுகமாக இருப்பதைப் போல) திடமாக கூட்டைப் போல பக்தர்களை காப்பவன். ப்ரதிதின = தினமும். நம்ம = நம். பய = (பற்பல விதமான) பயங்களை. பஞ்சிஸி = போக்கி. காயோ = அருள்வாயாக

சம்சார வாழ்க்கையே நானா விதமான பயங்களுக்கும், அதன் மூலம் வரும் துக்கங்களுக்கும் காரணமாகும். வாயுதேவரின் க்ருபா கவசமானது, பிராணிகளுக்கு திடமான கூடு எப்படி பாது காப்பாக இருக்கிறதோ, அதைப் போல, அனைத்து பயங்களையும் போக்குகிறது. தைத்யர் என்னும் மேகக் கூட்டங்களை நாசம் செய்வதில் காற்றினைப் போல எல்லைகளற்ற சாமர்த்தியத்தைக் கொண்ட ப்ரபஞ்சப்ரபு என்னும் பெயர், தேவதைகளின் நடுவில் இவனுக்கு மட்டுமே சரியாகப் பொருந்துகிறது. (ப்ரபஞ்சன = காற்று).

கலிமுக்^{2}ய தைத்யருபடளவ பரிஹரிஸி ம
த்குல கு^{3}ருவெ ஸலஹோ காருண்ய |காருண்யஸிந்து^{4} நி
ன்னொலுமெயொந்தி^{3}ரலு ஹரி காய்வ ||21-(72)

மத்குல குருவே = என் மற்றும் முக்தியோக்யரின் குருவான ஹே பிராணதேவரே. கலிமுக்ய தைத்யர = கலி முதலான தைத்யரால் வரும். உபடளவ = உபத்ரவங்களை (பிரச்னைகளை). பரிஹரிஸி = போக்கி. ஸலஹோ = காப்பாற்று. காருண்யஸிந்து = கருணா சமுத்திரனான. நின்ன = உன். ஒலுமெயொந்திரலு = அருள் ஒன்று மட்டும் இருந்தால். ஹரி = ஸ்ரீஹரி. காய்வ = காப்பான்

ஞானத்தை உபதேசிப்பவரே குருகள். சுஜனர்கள் அனைவருக்கும் வாயுதேவரே முக்ய குருகள். ஜகத்குருகள் என்றால் அவரே. வாயு தேவர் மகிழ்ந்தால் ஸ்ரீஹரி கண்டிப்பாக மகிழ்கிறான். ஸ்ரீஹரியின் அருள் இருந்தால், கிடைக்காதது என்பது எதுவும் இல்லை. தைத்யர்கள் யாரும் எந்த காலத்திலும் தொடக்கூட முடியாதவர் ஆகணாஷ்மசமரான பாரதீஷா். தைத்யர்களில் சிறந்தவன் (அதமா அதமன்) கலி. அத்தகைய கலி முதலானவர்களைக் கொல்லும் சாமர்த்தியம் அவருக்கு மட்டுமே உண்டு.

பா4ரதிரமண மத்பா4ர நின்னது3 என்ன
பார தோ3ஷகள எணிஸதெ3 | எணிஸதெ3 ஸந்தயிஸு
காருண்யஸிந்து4 எந்தெ3ந்து3 ||22-(73)

பாரதிரமண = ஹே பாரதீஷனே. மத்பார = என் (என்னை காப்பா ற்றும்) பொறுப்பு. நின்னது = உன்னையே சேர்ந்தது. என்ன = என். அபார தோஷகள = அனந்த தோஷங்களை. எணிஸதெ = எண்ணாமல். காருண்யஸிந்து = ஹே கருணா சமுத்திரனே. எந்தெந்து = என்றைக்கும். ஸந்தெயிஸு = காப்பாற்றுவாயாக

ஸ்ரத்தா, பக்திகளுக்கு பாரதிதேவி அபிமானிகள். அவளை ஆளும் பதி வாயுதேவர். தேவதைகளின் பெயரைக் கொண்ட தைத்யர் களும் இருக்கின்றனர். ஆனால் 'பாரதி' என்னும் பெயரைக் கொண்ட மனைவியைக் கொண்ட தைத்யன் யாரும் இல்லை. தேவதா ஸ்வரூபத்தை திடமாக நினைத்துக் கொள்வதற்காக பாரதி ரமண – பாரதீஷ என்று அழைக்க வேண்டும். ஸாதனைகளை செய்து வரும் சுஜீவிகள் பல தோஷங்களை கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட தோஷங்களை போக்கிக் கொண்ட பிறகே வாயு தேவரின் க்ருபா கடாட்சத்திற்கு பாத்திரர் ஆகின்றனர் என்றில்லை. அத்தகைய தோஷங்களை போக்கிக் கொள்வதற்கே வாயுதேவரின் கருணை தேவை. ஆகையாலேயே, இந்த பிரார்த்தனை. தோஷங் கள் இல்லாதவர்கள் அவரின் பரமானுக்கிரகத்திற்கு பாத்திரர் ஆனவர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

ஸ்ரீமஸத்3மனே ஜீவராஶியொளகொ3ந்த3தி4க
விம்ஷதி ஸஹஸ்ரதா3ர்னூரு | ஆர்னூரு ஹக3லிரளு
ஶ்வாஸ ஜபமாடி3 ஹரிகீ3வி ||23-(74)

ஸ்ரீஶஸத்மனே = லட்சுமிபதியான நாராயணனின் நித்ய சான்னித்யம் உள்ளவனான ஹே முக்யபிராணதேவனே. ஜீவ ராஶியொளகெ = ஜீவ சமூகங்களில். ஹகலிருளு = (அனைவரிலும்) எப்போதும். ஒந்ததிக விம்ஷதி சஹஸ்ரத = 21,000. ஆர்னூரு = 600. ஷ்வாஸ ஜபமாடி = ஸ்வாச ரூபத்தினால் (ஹம்ஸ மந்திர) ஜபம் செய்து. ஹரிகெ = ஸ்ரீஹரிக்கு. ஈவி = அர்ப்பிக்கிறாய்

ஷ்வாஸ ஜெபங்களின் விவரங்களை 57-58ம் பத்யங்களின் விளக்கங்களில் கொடுத்துள்ளோம். ஸ்ரீவாயுதேவரின் அனைத்து வியாபாரங்களும் ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யர்த்தமாகவே இருந்து, அவரிடமே அனைத்தும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஸமர்ப்ய க்ருத்யானி க்ருதீ க்ருதானி வியாஸாய பூம்னே ஸுக்ருதானி தாவத் |
கரிஷ்யமாணானி ச தஸ்ய பூஜாம் ஸங்கல்பயாமாஸ ஸ ஷுத்த புத்தி || (மத்வ விஜயம்)

என்று, வாயுதேவரின் இரண்டாம் அவதாரரான பீமசேனதேவர், தனது கடந்த, நிகழ் மற்றும் எதிர்கால செயல்கள் அனைத்தையும் பகவத் அவதாரரான வேதவியாசரில் அர்ப்பிக்கும் விதத்தை, வர்ணிக்கிறார். ஷ்வாஸ ஜபங்களை ஸ்ரீஹரியிடம் சமர்ப்பிக்கிறார் என்பது அவரது சகஜமான செயலே ஆகும்.

ஆபாஸகோடிஸ்ய பவன: (பாரத தாத்பர்ய) – வாயுவே நாராயணனின் முக்ய பிரதிபிம்பர். 'ஆனந்தரூபஸ்ய பரஸ்ய பாத்ரதீ:' (மத்வ விஜய) -- பூர்ணானந்த ஸ்வரூபனான ஸ்ரீஹரிக்கு முக்ய ஆவாஸ ஸ்தானன் என்று சொல்லும் இந்த வகையான ஆதாரங்கள் 'ஸ்ரீஷஸத்மனெ' என்று ஸ்ரீதாஸார்யர் சொன்னதையே விளக்குகிறது.

ப[4]விஷ்யத்விதா[4]த தவ சரண ஸேவிபெ நா
ஶ்ரவண மனனாதி[3] ப[4]குதிய | ப[4]குதி நின்னல்லி மா
த[4]வனல்லி கொட்டு ஸலஹுய்ய ||24-(75)

பவிஷ்யத்விதாத = வரும் கல்பத்தில் பிரம்மனாகப் போகும் ஹே வாயுதேவனே. தவ சரண = உன் பாதங்களை. நா = நான். ஸேவிபெ

= வணங்குகிறேன். ஶ்ரவண மனனாதி பகுதிய = பகவத் மகிமைகளின் (நற்சாஸ்திரங்களின்) ஸ்ரவண, மனன, த்யானங்களில் கவனத்தை. நின்னல்லி (மற்றும்) மாதவனல்லி = உன்னிடம் மற்றும் ஸ்ரீஹரியிடம். பகுதி = பக்தியையும். கொட்டு = கொடுத்து. ஸலஹய்ய = அருள்வாயாக

'நியமாத்வாயுரேவைகோ பிரம்மத்வம் யாதி நாபர:' (பாக. தாத்பர்ய) -- வாயுதேவர் ஒருவரே பிரம்மபதவியை அடையப் போகிறவர். இத்தகைய பல ஆதாரங்கள் வாயுதேவரே முந்தைய பிரம்ம பதவிக்கு வருகிறவர் என்பதை சொல்கின்றன.

தா[1]ஸி கொம்பை[4]னூரு ஶ்வாஸ ஜபக[3]ள மாடி[3]
பே[3]ஸரதெ[3] நம்ம ஸலஹுவி | ஸலஹுவி ஸ்ரீபா[4]ர
தீ[1]ஶ நின்னடி[3]கெ[3] ஶரணெம்பெ[3] ||25(76)

தாஸிகெ = ஒவ்வொரு மணி நேரத்திற்கும். ஒம்பைனூரு ஶ்வாஸ ஜபகள = ஷ்வாஸ ரூபத்தினால் ஹம்ஸ மந்திர ஜபத்தை. பேஸரதெ = சோர்வில்லாமல். மாடி = செய்து. நம்ம = நம்மை. ஸலஹுவி = காப்பாற்றுவாயாக. ஸ்ரீபாரதீஷ = ஸ்ரீ பாரதிரமணனே. நின்னடிகெ = உன் பாதங்களுக்கு. ஶரணெம்பெ = நீ என் ரட்சகன் என்று சரணடைகிறேன்.

ஸ்வரூப, லிங்க, அனிருத்த மற்றும் ஸ்தூல என்னும் நான்கு தேகங்களில் இருந்துகொண்டு, முக்யபிராணதேவர் ஹம்ஸ மந்திர ஜபத்தை ஜெபிக்கின்றார். இப்படியாக, பிரம்ம கல்பம் முடியும் வரைக்கும் அனைத்து ஜீவர்களிலும் ஜெபிக்கின்றார். இத்தகைய அற்புத மகிமை வேறு எந்த ஜீவருக்கும் இல்லை. வேறு தேவதைகளிலும்கூட முக்யபிராணர் இருந்து, இந்த ஷ்வாஸ ஜபத்தை செய்கின்றார்.

57ம் நுடியில் நாள் ஒன்றிற்கு 21,600 ஜபங்கள் ஆகின்றன என்று சொல்லியிருந்தாலும், பகல் இரவுகளில் இந்த ஷ்வாஸ மந்திரங்களில் வேறுபாடு இல்லை என்று சொல்வதற்காக, ஒரு மணி நேரத்திற்கு 900 ஜபங்கள் ஆகின்றன என்று இங்கு தனியாக சொல்லியிருக்கிறார் என்று அறிய வேண்டும்.

ப³லதே³வ நீனே பெ³ம்ப³லவாகி³ இரலு து³
ர்ப³ல காலகர்ம கெடி³ஸோதெ | கெடி³ஸோதெ நின்ன ஹம்
ப³லு உள்ள ஜனர ஜக³தொ³ளு ||26(77)

பலதேவ = ஹே முக்யபிராணதேவனே. நீனே = நீ ஒருவனே. பெம்பலனாகி இரலு = உதவி செய்பவனாக இருக்க. துர்பல காலகர்ம = (ஸ்வதந்த்ரமாக எதை செய்வதற்கும்) சக்தியில்லாத கர்மங்கள். நின்ன ஹம்பலு உள்ள = எப்போதும் உpன்னிடம் பக்தி உள்ள. ஜனர = மக்களை. ஜகதொளு = உலகில் . கடிஸோதே = கெடுக்க முடியுமா? (கெட்டவர்களாக ஆக்க முடியுமா? முடியாது என்று பொருள்)

யதோ நிஸ்ஸீமகாஸ்தேஷாம் தேவனாமஷ்ட ஸித்தய: |
தேவேஷ்டிந்த்ரேஷவாயு ஸ்ரீவிஷ்ணோ நாமுத்தரோத்தரம் ||
(பாகவத தாத்பர்ய)

என்று, அணிமாதி அஷ்ட ஸித்திகள், தேவதைகளில் காணப்படுகி ன்றன. அதிலும், இந்திர, ருத்ர, வாயு, லட்சுமி, விஷ்ணுகளில் படிப்படியே அதிகரித்து, ஸ்ரீவிஷ்ணுவிடம் எண்ணிக்கையில்லா மகிமைகள் உள்ளதென்று சொல்லப்பட்டுள்ளது.

'ப்ராணஸ்ய நிஸ்ஸீம பலம்' (பாரத தாத்பர்ய) என்று, முக்யபிராணர் அபாரமான பலம் உள்ளவர் என்றும், 'வ்ருத்திஹ்ராஸௌ ந யஸ்மாத்தத் தேஹஸ்யா ன்னாதினா யத:' (சத்தத்வ ரத்னாவளி) என்று, அன்னாதிகளால் அவரது தேகத்திற்கு வளர்ச்சியோ, குறை பாடோ ஆவதில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வாயுதேவர் வீரியம், சகிப்புத்தன்மை, வலிமை ஆகியவற்றால் நிரம்பியவர் என்பது பற்பல ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டி ருக்கிறது. வஷ்சாஸௌ + ஆயுஸ்ச = வாயு: என்று அவரது பெயரே பலம் + ஞானத்தால் அவர் நிரம்பியவர் என்பதை விளக்குகிறது. 'வ' என்பது பலத்தைக் குறிக்கிறது. 'அய்' ஞானத்தைக் குறிக்கிறது. இத்தகைய மகாமகிமர் நம்மைக் காப்பவராக இருந்தால், கால-கர்மங்கள் (மற்றும் அவற்றின் அபிமானிகளான கருடாதி தேவதைகள்) அவரது அதீனர்களாகவே இருப்பதால், நமக்கு எவ்வித கேடுகளையும் விளைவிப்பதில்லை.

ஹாலாஹலவனுண்டு³ பாலிஸிதெ³ ஜக³வ கரு
ணாளு பவமான விக்ஞான | விக்ஞான ப⁴குதி ஸ்ரீ
லோலனலி கொட்டு ஸலஹய்ய ||27(78)

கருணாளு = காருண்யமூர்த்தியான. பவமான = ஹே வாயுதேவரே. ஹாலாஹலவனுண்டு = ஹாலாஹல என்னும் (காலகூட) விஷத்தைக் குடித்து. ஜகவ = உலகத்தை. பாலிஸிதெ = காப்பாற்றி னாய். ஸ்ரீலோலனலி = லட்சுமி ரமணனிடம். விக்ஞானபகுதி = விசேஷ ஞான பக்திகளை. கொட்டு = கொடுத்து. ஸலஹய்ய = அருள்வாயாக

தேவதைத்யர்கள் சேர்ந்து, அமிர்தத்திற்காக பாற்கடலைக் கடைந்தபோது, பயங்கரமான ஹாலாஹல விஷம் அங்கிருந்து தோன்ற, வாயுதேவர் அதனை அடக்குவதற்கு சாமர்த்தியம் கொண்டிருந்தாலும், ருத்ரதேவருக்கு விஷத்தைக் குடிக்க வைத்து அவரே உலகத்தைக் காத்தார் என்ற பெயரைக் கொடுப்பதற்காக தான் அந்த விஷத்தை அடக்கவில்லை.

அந்த விஷத்தைக் குடித்த ருத்ரருக்கு ஆன சங்கடத்தை பரிகரித்து, வாயுதேவர் தானே அந்த விஷத்தைக் குடித்து (அதனால் எந்தவொரு சங்கடத்திற்கும் ஆளாகாமல்), அந்த விஷத்தின் ஒரு அம்சத்தை தன் உள்ளங்கையில் ஊற்றி, அதன் விஷத்தன்மையைக் குறைத்து, அதை ருத்ரருக்குக் கொடுத்தார். ருத்ரர் அதனைக் குடித்து, அதன் நீலத் தன்மை அவர் கழுத்தில் நிற்க, அவருக்கு நீலகண்டன் என்ற பெயர் வந்தது. அப்படியே உலகத்தை அந்த விஷத்திலிருந்து காத்தார் என்ற பெயரையும் பெற்றார்.

ருத்ரஸ்ய யஷஸோऽர்த்தாய ஸ்வயம் விஷ்ணுர்விஷம் விபு: ||
ந ஸஞ்சஹ்ரே ஸமர்த்தோபி வாயும் சோசி ப்ரஷாந்தயே ||

ஆகிய மகாபாரத தாத்பர்ய நிர்ணய வாக்கியங்களால் இது தெரிகிறது.

வாயுரஸ்மா உபாமந்தத்பினஷ்டிஸ்மா குனன்னமா ||
கேஷீ விஷஸ்ய பாத்ரேண யத்ருத்ரேணாபி பத்ஸஹ ||

என்னும் ஸ்ருதியும் இதையே விளக்குகிறது.

கேஷி = சுகஸ்வரூபனான நாராயணனே ஈசனாக உள்ள வாயு தேவர். குனன்னமா = தைத்யர்களான கல்யாதிகளை அந்தம் தமஸ்ஸில் தள்ளுபவர் ஆகையால் 'குனன்னமா' என்னும் பெயரைக் கொண்டார் வாயுதேவர். ருத்ரர் குடித்த விஷத்தை, முதலில்,. பாத்ரேண = தன் உள்ளங்கையில். பினஷ்டி = ஊற்றி, அழித்து (அதன் விஷத்தன்மையைக் குறைத்து). உபாமந்தத் = குடிக்கத் தகுந்ததாக மாற்றிக் கொடுத்தார்.

இந்த ஸ்ருதியின் அர்த்தத்தையே ஸ்ரீமதாசார்யர் மகாபாரத தாத்பர்ய நிர்ணய 10ம் அத்தியாயத்தில் 13-17 வரையிலான ஸ்லோகங்களில் விளக்கியிருக்கிறார்.

வாதாத்மஜனெ நின்ன ப்ரீதியனெ படெ^{3}த^3 க^2
த்^{3}யோதனந்த^{3}னன பொரெத^{3}ந்தெ | பொரெத^{3}ந்தெ பொரெயென்ன நீ
நிந்து க்ஷணதி^{3} க்ருபெயிந்த^3 ||28(79)

வாதாத்மஜனே = வாயுபுத்ரன் என்று அழைக்கப்படும் ஹே ஆஞ்சனேயா. நின்ன = உன். ப்ரீதியனே = உன் அன்பினையே. படெத = பெற்றுக் கொண்ட. கத்யோதனந்தனன = சூர்ய புத்திரனான சுக்ரீவனை. பொரெதந்தெ = காப்பாற்றியதைப் போல. க்ருபெயிந்த = கருணையுடன். என்ன = என்னை. நீ நிந்து = நீ என்னைக் காப்பாற்றுபவனாக இருந்து. க்ஷணதி = ஒரே நொடியில். பொரெ = காப்பாற்றுவாயாக.

மூலரூபத்தின் ஒரு அம்சம், அவதாரம் செய்யும்போது, அவதாரம் ரூபம் புத்ரன் என்றும் மூலரூபம் தந்தை என்றும் சொல்வது வழக்கமாக இருக்கிறது. வாயுபுத்ரர் ஆஞ்சனேயர் என்பது இதே அர்த்தத்திலேயே எடுத்துக் கொள்ளவேண்டும். சுக்ரீவன் சூர்ய புத்ரன், வாலி இந்திர புத்ரன், இவையும் அப்படியே. ஆனால் இந்த தேவதைகளின் அவதாரங்களுக்கும் வாயுதேவரின் அவதாரங் களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. 'பளித்தா தத்வபுஷே..' என்னும் ஸ்ருதிகளினால், வாயுதேவரின் மூல ரூபத்திற்கும் அவதார ரூபங்களுக்கும் பல ஞானாதிகளில் எந்த வேறுபாடுகளும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. பிற தேவதைகளின் அவதாரங்களுக்கு இவ்வாறு சொல்ல முடியாது.

சுக்ரீவன் ஆஞ்சனேயனின் ஆதரவினைப் பெற்றிருந்ததால், ஸ்ரீராமனின் அருளைப் பெற்றவனானான். இந்திர புத்ரனான வாலி இறந்தான். அடுத்து வாலியே அர்ஜுனனாக பீமசேனனின் ஆதரவைப் பெற்றதால், ஸ்ரீகிருஷ்ணனின் அருளைப் பெற்றான். சுக்ரீவன் கர்ணனாகப் பிறந்து தோல்வி அடைந்தான் (சுக்ரீவனாக இருந்து ஸ்ரீராமனுக்கு செய்த சேவையினால் வந்த அதிக யோக்யதையை கர்ணனாகப் பிறந்து குறைத்துக் கொண்டான்).

நீனிந்து = நீனு+இந்து என்று பிரித்து, நீ இன்று சுக்ரீவனைக் காத்ததைப் போல, என்றும் அர்த்தம் சொல்லலாம். 'க்ஷணதி' என்றதால், வாயுதேவரின் க்ருபா கடாட்சத்திற்குப் பாத்திரனான அதே நொடியிலேயே வாழ்க்கையில் மேம்படுகிறான் என்னும் அர்த்தம் புலப்படுகிறது.

நீரு சளமள காஸி அரலிட்டதரல்லி
நீரினிந்தெப்பிடலு ஹெபுதேனோ
மாருதியே நின்ன க்ருபே படெயதெலெ உளிதவர
காருண்யவாகலு மோக்ஷ ஸாதனவல்ல

என்று தன் பரமகுருகளான விஜயதாஸர் பாடியதை இங்கு விளக்கியிருக்கிறார் ஸ்ரீதாஸார்யர்.

அபராஜிதனெ மனதொ³ள பரோக்ஷவித்தெனகெ³
அபவர்க³தல்லி ஸுக²வீயோ | ஸுக²வீயோ நீ பா⁴வி லோ
கபிதமஹனெ தயவாகோ³ ||29(80)

அபராஜிதனே = தோல்வி அற்றவனான ஹே வாயுதேவனே. எனகெ = எனக்கு. மனதொளு = மனதில். அபரோக்ஷவித்து = தரிசனம் கொடுத்து. அபவர்க்கதலி = மோட்சத்தில் (அல்லது ஜீவன் முக்த அவஸ்தையில் வைத்து). சுகவீயோ = ஆனந்தத்தைக் கொடு. பாவி லோகபிதமஹனெ = ஹே முந்தைய கல்பத்தில் பிரம்மனே. நீ = நீ. எமகெ = எனக்கு. தயவாகோ = அருள்வாயாக

வாயுதேவரின் பிரத்யட்ச தரிசனமும், பிறகு ஸ்ரீஹரியின் சாட்சாத்காரமும், ஸாதனை பூர்த்தியான சுஜீவிகளுக்கு தியானாவஸ்தையில் மனதிலேயே ஆகிறது. வாயுதேவரின் அருள்

இல்லாமல் பகவத் அபரோக்ஷம் இல்லை. முக்யபிராணர், தனது விசேஷ சன்னிதானத்தை வைத்து திவ்ய தரிசனத்தைக் கொடுப்பதாலேயே - ப்ராக்ருத மனதிற்கு அப்ராக்ருதனான ஸ்ரீஹரியை தெரிய வைக்கும் சாமர்த்தியம், ஆகிறது. இதற்கான ஆதாரம் அதர்வண உபநிஷத்தில் இருக்கிறது.

ஏஷோ஽ணுராத்மா சேதஸா வேதிதத்யோ யஸ்மின் ப்ராண: பஞ்சதா ஸம்விவேஷ (அத. உப). அத்யந்த சூக்ஷமனான ஸ்ரீஹரி, முக்யபிராணன், தனது பிராண, அபான, வியான, உதான மற்றும் சமான என்னும் ஐந்து ரூபங்களால் விசேஷமாக அருளினால், அத்தகைய மனதில் தன்னை காட்டிக் கொள்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான்யைர்தேவைர்ஹரிம் பஷ்யேத் ஞானரூபேண வாயுனா |
பிரம்மணா பரமஞானரூபேண ஹரிணா ததா |
ப்ரஸன்னேனைவ தம் பஷ்யேத் அன்யே஽னுஞான ப்ரதாயின: ||
(அத. பாஷ்யம்)

ஞானரூபனான முக்யபிராணனின் மற்றும் பரமஞானரூபனான பரபிரம்மனின் பிரசாதத்தினாலேயே ஸ்ரீஹரியின் தரிசனம் ஆகிறது. வேறு எந்த தேவதைகளின் அருளாலும் அல்ல. பிற தேவதைகள் அருள்கிறார்கள் என்றால், ஸ்ரீஹரிவாயுகளின் பிரசாதம் கிடைப்பதற்கான ஞானத்தைக் கொடுக்கிறார்கள் என்று மட்டுமே அர்த்தம். இந்த தேகத்தில், இதே ப்ராக்ருத மனதில் அபரோக்ஷம் ஆகிறது என்றும், அதற்கு முக்யபிராணரின் பிரசாதமே சாட்சாத் சாதனம் என்றும் பாஷ்யம் சொல்கிறது.

அபரோக்ஷ மற்றும் மோக்ஷ என்னும் இரு அர்த்தங்களையும் கொண்டது ‘அபவர்க்க’ என்னும் சொல். அபரோக்ஷம் ஆனபிறகு பிராரப்த போகத்திற்காக ப்ராக்ருத தேகத்தில் இருக்கும் ஜீவர்கள் ‘ஜீவன்முக்தர்’ என்று அழைக்கப்படுகின்றனர்.

பு³த்தி⁴ ப³ல கீர்த்தி பரிஶுத்த⁴ ப⁴க்தி ஞான
ஸத்வைர்யாஜாட்³ய ஆயுஷ்ய | ஆயுஷ்யவித்த பி⁴
வ்ருத்³தி⁴ யைதி³ஸுவி பவமான ||30(81)

புத்தி = அறிவு. பல = அதற்குள் இருக்கும் காமாதி எதிரிகளை வெல்லும் சக்தி. கீர்த்தி = புகழ். பரிஷுத்த பக்தி ஞான = எதிரிகளான பக்தி ஞானங்கள். ஸத்வைர்ய = சத்கார்ய சாதனைக்கு வரும் தடைகளால் பயப்படுவது. அஜாட்ய = நோய் நொடிகள் இல்லாமல் இருத்தல். ஆயுஷ்ய = முழு ஆயுளைக் கொண்டவனாக இருப்பது (வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வது). வித்ததர்ம = புண்ணியத்தைப் பெற்றுத் தரும் பொருள். அபிவ்ருத்திய = இந்த அனைத்தையும் பெறுவது. பவமான = ஹே வாயுதேவனே. ஐதிஸுவி = உன்னை அடைந்தவர்களுக்கு அருள்வாயாக.

புத்திர்பலம் யஷோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா |
அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத் ||
என்னும் ஸ்லோகம் இந்த பத்யத்தின் அபிப்பிராயத்தை சொல்கிறது. ‘அஜாட்ய’ என்பதில் ‘அரோகதா’வும் அடங்கியிருக் கிறது என்று அறியவேண்டும். ஜாட்ய என்றால், உடம்பிற்கு வரும் நோய், நொடிகள் மட்டுமல்லாமல் மனதிற்கு வரும் சோர்வு, அஞ்ஞானம் ஆகியவற்றையும் குறிக்கிறது.

சந்தேகம், தவறான அர்த்தம் இல்லாத உண்மையான ஞானமே சுத்த ஞானம் ஆகும்.

சுத்தபக்தி என்றால் ஒன்பது வித த்வேஷங்கள் அற்ற மஹாத்ம்ய ஞானம் ஆகும். பக்தியும் ஒன்பது விதங்களே ஆகும்.
ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம் ||
(பாகவதம்)

* ஹரிகதா ஸ்ரவண, ஹரிமகிமைகளின் கீர்த்தனம், ஹரி ஸ்மரணை, ஹரிபாத சேவை, ஹரிமூர்த்திகளின் பூஜை, நமஸ்கரிப்பது, நான் ஹரிதாஸன் என்னும் நித்ய பாவனை, ஹரி யின் நித்ய சகன் என்னும் சிந்தனை (அனாதி அனந்த காலத்திலிருந்து ஸ்ரீஹரி நம்முடனேயே இருக்கும் அனிமித்த நண்பன் என்னும் சிந்தனை), ஆத்ம நிவேதனம் (நம் ஸ்வரூபம், ஸ்ரீஹரியின் நித்ய அதீனம் என்று அறிந்து, தன்னையே ஸ்ரீஹரி யிடம் அர்ப்பிப்பது, ஸ்வதந்த்ர கர்த்ருத்வ அபிமானத்தை

முழுமையாக விட்டுவிடுவது) ஆகியவையே ஒன்பது விதமான பக்தி பாவங்கள் எனப்படுகின்றன.

ஜீவாபேதோ நிர்குணத்வம் அபூர்ணகுணதா ததா ।
ஸாம்யாதிக்யே ததன்யேஷாம் பேதஸ்தத்கத ஏவ ச ।
ப்ராதுர்பாவவிபர்யாஸ: தத்பக்தத்வேஷ ஏவ ச ।
தத்ப்ரமாணஸ்ய நிந்தா ச த்வேஷா ஏதோऽகிலாமதா: ।।
(பாரத தாத்பர்ய)

* ஜீவன் ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபடாதவன் என்று அறிவது.
* ஸ்ரீஹரி ஆனந்தாதி குணஷூன்யன் என்று அறிவது.
* குணம் உள்ளவனானாலும், அபூர்ண குணம் கொண்டவன் என்று அறிவது. (ஒவ்வொரு குணமும் அனந்தமாக இருக்கும் அனந்த குண பூர்ணன் என்று அறியாமலிருப்பது)
* ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபட்டிருக்கும், ரமா, பிரம்ம ருத்ராதி களுக்கு ஸ்ரீஹரி சமம் என்று சிந்திப்பது
* அவர்களை ஸ்ரீஹரியைவிட சிறந்தவர்கள் என்று சிந்திப்பது
* ஸ்ரீஹரியின் ரூபங்களில், ஒவ்வொரு ரூபத்திற்கும், அதன் கர சரணாதி அவயவங்களில், பேதங்களை சிந்திப்பது
* ஸ்ரீஹரியின் அவதாரங்களை சாதாரண மனிதன், ப்ராக்ருத தேகம் கொண்டவன் என்று அறிவது
* ஹரிபக்தர்களை த்வேஷிப்பது
* ஸ்ரீஹரியை போற்றும் வேதாதி பிரமாணங்களை நிந்திப்பது அதாவது, அப்ரமாண என்று புறக்கணிப்பது ஆகியவையே, நவவித த்வேஷங்கள் எனப்படுகின்றன.

தி^{3}ரௌபதி ரமண விக்ஞாபிஸுவெ நின்னடி^{3}கெ^{3}
தாபத்ரயக^{3}ள ப^{4}யஶோக ।ப^{4}யஶோக பரிஹரிஸி
ஸ்ரீபதிய த்^{4}யான ஸுக^{2}வீயோ ।।31(82)

திரௌபதிரமண = ஹே பீமசேனதேவரே. நின்னடிகெ = உன் சரண ங்களில். விக்ஞாபிஸுவெ = வேண்டிக் கொள்கிறேன். தாபத்ரயகள = அத்யாத்ம, ஆதிதெய்வ, ஆதிபூத என்னும் மூன்று வித தாபங்களை. பயஶோக = அவற்றினால் ஆகும் பயம் மற்றும் துக்கங்களை. பரிஹரிஸி = போக்கி . ஸ்ரீஹரியின் தியானசுகவ = ஸ்ரீஹரியின் தியான சுகத்தை. ஈயோ = அருள்வாயாக

திரௌபதிரமணன் என்றால் பாரதி ரமணனே. பீமசேனரும் வாயு தேவரே. திரௌபதி, பாரதிதேவியின் அவதாரம். பாரதி வாயு தேவரின் நித்யபத்னி. பதிதேவரின் ஆணைப்படி, பார்வதி, ஷசி, ஷ்யாமளா, உஷா (முறையே ருத்ரர், இந்திர, யம, அஷ்வினி தேவதைக்ளின் மனைவிகள்) இவர்களை தன் தேகத்தில் வைத்துக் கொண்டு அவதரித்தாள். திரௌபதியாகி, பீமசேனதேவருக்கு மட்டுமே ரமண. பிறருக்கு அல்ல. தர்ம, அர்ஜுன, நகுல, சக தேவர்களுக்கு பாரதியுடன் இணை இல்லை. இந்த சம்பந்த விசேஷங்களை குருவின் மூலமாக, பாரத தாத்பர்ய நிர்ணயத்திலிருந்து அறிய வேண்டும்.

பகவந்தனின் சாட்சாத்காரத்திற்கு பிரதான ஸாதனங்களான ஸ்ரவண, மனன, தியானங்களும் சுகரூபங்களே. முதலில் சிரமமாகவும் இறுதியில் பரமாத்மனின் தரிசன ரூபமான ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியவை அல்ல. தாபத்ரயங்களின் விவரணைகளை 55ம் நுடியின் அர்த்தத்தில் விளக்கியுள்ளோம்.

பால்க^{3}ட^{3}ல மக^{3}ளாள்த^3 நாள்க^{3}ளொளக^3 ப்ரதிம
ஓல்லைப ஜனர ஸலஹெந்து^{3} | ஸலஹெந்து^{3} பி^{3}ன்னயிபெ
பல்கு^{3}ணாக்^{3}ரஜனெ ப்ரதிதி^{3}ன ||32(83)

பால்கடல = பாற்கடலின் (வருணதேவனின்). மகள = லட்சுமிதேவி யை (தேவ அசுரர்கள் அமிர்தத்திற்காக பாற்கடலைக் கடைந்த போது, அதிலிருந்து தோன்றியவள்). ஆள்தன = ஆண்ட (திருமணம் செய்துகொண்ட) மஹாஸ்வாமியான ஸ்ரீநாராயணன். ஆள்க ளொளகெ = சேவகர்களில். அப்ரதிம = திடமான. பல்குணாக்ரஜனே = அர்ஜுனனின் அண்ணனான ஹே பீமசேனனே ஒல்லைப ஜனர = உன்னை சரணடைந்தவர்களை. ப்ரதிதின = எப்போதும். ஸலஹு எந்து = காப்பாற்று என்று. பின்னயிபெ = வேண்டிக் கொள்கிறேன்.

தலைவனின் ஆணையை சிறிதும் புறக்கணிக்காமல் அவனின் சித்தத்திற்கேற்ப செயல்களை செய்வது 'ஓலைசுவுது' என்று அழைக்கப்படுகிறது. லட்சுமிபதியின் சேவர்களில் சிறந்தவர் – ஜீவோத்தமர் என்று அர்த்தம். உன்னை சரணடைந்தவர்களுக்கு அருள்வாயாக என்று வேண்டிக் கொள்கிறேன்.

அத்3வைத மத1விபின ப்ரத்4வம்ஸகானலனெ
மத்4யகே3ஹாக்2ய த்3விஜபத்னி | த்3விஜபத்னி ஜட2ரதொ3ளு
உத்3ப4விஸி மெரெதெ3 ஜக3தொளு ||33(84)

அத்வைத மதவிபின ப்ரத்வம்ஸ கானலனே = ஜீவ மற்றும் பரபிரம்மனின் வேறுபாடு இல்லை என்று சொல்லும் மாயாவாத மத என்னும் காட்டினை அழிப்பதற்காக நெருப்பைப் போன்றவரன ஹே மத்வாசார்யரே. மத்யகேஹாக்ய – மத்யகேஹ பட்டர் என்னும். த்விஜபத்னி = பிராமண பத்னி. ஜடரதொளு = கர்ப்பத்தில். உத்பவிஸி = அவதாரம் செய்து. ஜகதொளு = உலகத்தில். மெரெதெ = ஒளிர்ந்தாய்.

ஜீவபிரம்மனின் ஐக்யத்தையும், மித்யாத்வத்தையும் சொல்லும் அத்வைத மதம் மாயாவாத என்று அழைக்கப்படுகிறது. பிரம்மனே மாயையில் ஈடுபட்டு ஜீவபாவத்தைப் பெறுகிறான் என்றும், இந்த ஜகத்தே பொய் என்றும், மாயா – அவித்யா – அஞ்ஞானங்களே உண்மை என்று சொல்லும் மாயாவாதத்தை பொய் என்று ஸ்ரீமத்வாசார்யார் நிரூபித்து, சஜ்ஜனர்களுக்கு அருளினார்.

அவரின் அவதார காலத்தில் பிரம்மசூத்ரங்களுக்கு பற்பல தவறான விளக்கங்களைக் கொடுத்து வந்த 21 பாஷ்யங்கள் இருந்தன. அவை அனைத்தையும் புறக்கணித்து 22வதாக தமது பாஷ்யத்தை அருளினார்.

'த்விஜபத்னி ஜடரதொளு உத்பவிஸி' என்பதற்கு அஞ்ஞானிகள், தங்களின் கர்மங்களுக்கேற்ப கர்பவாச துக்கங்களை அனுபவித்து பிறப்பது போல, என்று அர்த்தம் சொல்லக்கூடாது. வாயுதேவருக்கு கர்ப்பவாச துக்கம் என்பது எப்போதும் இல்லை. கர்ப்ப காலத்தில் அங்கிருந்த சிசுவின் ஜீவனை வெளியில் இழுத்து, வாயுதேவர் அந்த தேகத்தில் நுழைந்தார் என்று மத்வவிஜயத்தில் ஆதாரபூர்வ மாக விளக்கப்பட்டிருக்கிறது. இதை சொல்வதற்காகவே 'உத் பவிஸி' அதாவது தோன்றி, என்றார் ஸ்ரீதாஸார்யர்.

மத்4வாக்2யவெம்ப ப்ரஸித்த4 ஶ்ருதிப்ரதிபாத்3ய
மத்வமுனிராய தவ கீர்த்தி | தவ கீர்த்தி வாணி
ருத்3ராதி3க3ளிக3ரிது3 துதிஸல்கெ ||34(85)

மத்வாக்யவெம்ப = மத்வ என்னும் பெயருள்ள. ப்ரஸித்த ஶ்ருதி ப்ரதிபாத்ய = புகழ்பெற்ற வேதங்களில் சொல்லப்பட்டுள்ள. மத்வ முனிராய = அனைத்து செல்வங்களையும் கொடுப்பவரான, பக்தி ஞானாதி செல்வங்களால் நிறைந்தவரான, ஹே மத்வாசார்யரே, . தவ கீர்த்தி = உன் புகழானது. துதிஸல்கே = முழுமையாக அறிந்து வர்ணிப்பதற்கு. வாணி ருத்ராதிகளிகெ = சரஸ்வதி மற்றும் ருத்ரனே முதலான தேவதைகளுக்கு. அரிது = சாத்தியமில்லை

பளித்தா சூக்தத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. ‘யதீமனு ப்ரதிவோ மத்வ ஆதவே குஹாஸந்தம் மாதரிஷ்வா மதாயதி’. எந்த ஒளிமயமான மத்வ நாமகனான மாதரிஷ்வா – வாயுதேவரே, ஸ்ரீஹரியின் சாஸ்திரங்களை அனுசரித்து அவரே சர்வாதிபதி என்று சாஸ்திரங்களை மதனம் செய்து நிச்சயித்திருக்கிறார்.

ஹுணிஸெ பீ^{3}ஜதி^{3} பிதன ருணவ தித்தி^{3}த^{3} பூர்ண
கு^{3}ணவந்த கு^{3}ருவெ த^{3}யவாகோ^{3} | த^{3}யவாகி^{3} நீனென்ன
ருண மூரரிந்த^{3} கெ^{3}லிஸய்ய ||35(86)

ஹுணிஸெ பீஜதி = (கடன் வாங்க வந்தவருக்கு) புளியங் கொட்டைகளைக் கொடுத்து. பிதன = தந்தையின். ருணவ தித்தித = கடனைத் தீர்த்த. பூர்ண குணவந்த = குணபூர்ணனான. குருவே = ஹே மத்வகுருவே. தயவாகோ = அருள்வாயாக. நீ = நீ. என்ன = என்னுடைய. ருண மூரரிந்த = மூன்று கடன்களை. கெலிஸய்ய = தாண்டச் செய்வாயாக

கடன் வாங்க வந்தவருக்கு புளியங்கொட்டைகளைக் கொடுத்து தந்தையின் கடனைத் தீர்த்த, பாலலீலைகளின் மகிமைகளை ஸ்ரீசுமத்வ விஜயத்தில் வர்ணிக்கப்படுகிறது.

தேவருண, ரிஷிருண, பித்ருருண என்னும் மூன்று வித ருணங்களி லிருந்து ஒவ்வொரு மனிதனின் விடுதலை பெறுவதற்கு, அதற்கு ஏற்ப உள்ள கடமைகளை செய்ய வேண்டும். யக்ஞத்தினால் (வைஷ்வதேவ, பிரம்மயக்ஞ மற்றும் பிற யாகாதிகளால்) தேவ ருணமும், வேத அத்யயன நியமங்களை பின்பற்றும் பிரம்மசர்யத் தினால் ரிஷிருணமும்; பித்ரு ஸ்ரார்த்தங்களை விதியின்படி செய்வது, பித்ரு சேவை, பித்ரு வாக்ய பரிபாலனம் ஆகியவற்றால்

பித்ரு ருணமும் பரிகாரம் ஆகிறது என்று வேதாதி சாஸ்திரங்கள் சொல்கின்றன.

பிரம்மசர்யேண ரிஷிப்யோ யக்ஞேன தேவேப்யோ ப்ரஜயா பித்ருப்ய: -- என்று ஸ்ருதி சொல்கிறது. இவற்றில் எந்தவொரு ருணத்தினாலும் கட்டுப்பட்டவர் அல்ல – ஸ்ரீமத்வர்.

யத்1யாஶ்ரமவ வஹிஸி ஶ்ருத்யர்த்த கி3ரந்த2 மூ
வத்தேளு ரசிஸி த3யதி3ந்த3 | த3யதி3ந்த3 நின்னவரி
கி3த்து பாலிஸிதி3 கருணாளு ||36(87)

யத்யாஶ்ரமவ = சன்யாசி ஆசிரமத்தை. வஹிஸி = ஏற்றுக் கொண்டு. ஶ்ருத்யர்த்த கிரந்த மூவத்தேளு = ஸ்ருத்யர்த்தங்களை விளக்குமாறு இருக்கும் 37 சர்வமூல கிரந்தங்களை. ரசிஸி = இயற்றி. தயதிந்த = (சஜ்ஜனர்களின் மேல் இருக்கும்) கருணை யால். நின்னவரிகெ = உன் பக்தர்களுக்கு. இத்து = கொடுத்து (உபதேசித்து). பாலிஸிதி = அருளினாய். கருணாளு = நீயே கருணா மூர்த்தி.

ஸ்ரீமன் மத்வாசார்யர் இயற்றிய 37 கிரந்தங்கள் இவையே: 1. கீதா பாஷ்ய 2. கீதா தாத்பர்ய 3. சூத்ர பாஷ்ய 4. அணுபாஷ்ய 5. அனு வியாக்யான 6. பிரமாண லட்சண 7. கதா லட்சண 8. உபாதி கண்டன 9. மாயாவாத கண்டன 10. பிரபஞ்ச மித்யாத்வானுமான கண்டன 11. தத்வ சங்க்யான 12. தத்வவிவேக 13. தத்வோத்யோத 14. கர்ம நிர்ணய 15. விஷ்ணுதத்வ நிர்ணய 16. ரிக்பாஷ்ய 17. உபநிஷத் பாஷ்யங்கள் – ஐதரேய 18. ஈஷாவாஸ்ய 19. ப்ருஹதாரண்ய 20. காடக 21. தைத்திரிய 22. சாந்தோக்ய 23. தலவகார 24. ஷட்பிரஸ்ன 25. மாண்டூக 26. அதர்வண 27. நியாயவிவரண 28. மகாபாரத தாத்பர்ய நிர்ணய 29. பாகவத தாத்பர்ய நிர்ணய 30. யமகபாரத 31. த்வாதச ஸ்தோத்திர 32. கிருஷ்ணாம்ருத மஹார்ணவ 33. தந்திரஸார 34. நரசிம்ம நகஸ்துதி 35. ஸதாசார ஸ்ம்ருதி 36. யதிபிரணவ கல்ப 37. ஜயந்தி நிர்ணய.

நாமத்ரயாங்கித ஸுதீ3மந்த குலகு3ருவெ
ஸ்ரீமதா3சார்ய கு3ருவர்ய | கு3ருவர்ய த4ர்மார்த்த2
காம மோக்ஷத3னெ த3யவாகோ3 ||37(88)

நாமத்ரயாங்கித = ஹனும, மத்வ, பீம என்னும் (ஸ்ருதிகளில் சொல்லப்பட்ட) மூன்று பெயர்களைக் கொண்ட. ஸுதீமந்த குலகுருவே = சுத்த ஞானிகளின் சமூகத்திற்கு குருவான. குருவர்ய = குருகள் என்னும் (ஞானோபதேசகர் என்னும்) அனைவருக்கும் குருகளான. ஸ்ரீமதாசார்ய = ஸ்ரீமன் மத்வாசார்யரே. தர்மார்த்த காம மோக்ஷதனெ = தர்ம, அர்த்த, காம, மோட்ச என்னும் நான்கு புருஷார்த்தங்களை கொடுப்பவரான நீ. தயவாகோ = எமக்கு அருள்வீராக

* தர்ம என்றால் புண்ய சத்கர்மங்களை பின்பற்றுவதால் வரக்கூடிய, காலாந்தரத்தில் அல்லது ஜென்மாந்தரத்தில் சுகத்தைக் கொடுக்கக்கூடிய அதிர்ஷ்ட விசேஷம்.
* அர்த்த என்றால் திரவ்யங்கள் அல்லது போகப் பொருட்கள்
* காம என்றால் போகப் பொருட்களை பயன்படுத்த இருக்கும் விருப்பங்கள்
* மோக்ஷ என்றால் சம்சாரத்திலிருந்து விடுதலை பெற்று ஸ்வ ஸ்வரூபத்தினால் இருக்கும் நித்ய ஸ்திதி.

பிற தேவதைகளை வணங்குவதாலும், தர்ம, அர்த்த, காமங்கள் கிடைக்கின்றன. அவற்றையும் அவர்கள் அவர்களின் அந்தர்யாமி யான ஸ்ரீஹரியின் உதவியினாலேயே கொடுக்கின்றனர். பலன் களைக் கொடுப்பதில் யாரும் ஸ்வதந்த்ரர் இல்லை. எப்படி இருப்பினும், மோட்சத்திற்கு சாட்சாத் ஸாதகமான விஷ்ணு பிரசாதத்திற்கு இதர தேவதைகளின் (தத்வாபிமானி தேவதை களின்) அருள் தேவையே.

விஷ்ணுர்ஹிதாதா மோக்ஷஸ்ய வாயுஸ்ச ததனுக்ஞயா – விஷ்ணுவின் ஆணையினால் வாயுதேவர் மோக்ஷத்தைக் கொடுப்பவரும் ஆகிறார் என்று பிரமாணங்கள் சொல்கின்றன. ஸ்ரீஹரி, தன் திடமான பக்தரான வாயுதேவருக்கு கொடுத்திருக்கும் விசேஷமான அதிகாரம் இது.

மூரேளு கு[1]மத[1] கோ[4]ராரண்யபாவக ஸ
மீராவதார க[3]ம்பீ[4]ர | க[3]ம்பீ[4]ர த்வத்பதா[3]ம்
போ[4]ருஹத்[3]யான கருணிஸோ ||38(89)

மூரெளு குமத = 21 துர்மதங்கள் என்னும். கோராரண்ய = பயங்கரமான அரண்யங்களுக்கு. பாவக = அக்னியான (துர்மதங்களை நெருப்பைப் போல கண்டித்த). ஸமீராவதார = ஸ்ரீவாயுதேவரின் மூன்றாம் அவதாரரான. கம்பீர = அபாரமான மகிமைகளைக் கொண்ட (ஹே மத்வாசார்யரே). த்வத்பதாம்போருஹத்யான = உன் பாத கமலங்களை நிரந்தரமாக நினைக்குமாறு. கருணிஸோ = அருள் புரிவாயாக

ஸ்ரீமத்வாசார்யரின் முந்தைய காலத்தில், ஸ்ரீபாதராயணரால் (ஸ்ரீமன் நாராயணரின் அவதாரரான வேதவியாசரால்) இயற்றப்பட்ட வேதார்த்த நிர்ணயமான பிரம்மசூத்ரங்களுக்கு, 21 பாஷ்யங்கள் வந்திருந்தன. பாஷ்ய காரர்கள், அந்தந்த பாஷ்யங்களில், அவரவர்களின் அபிப்பிராயங்களை நிரூபித்திருந்தார்களே தவிர, பாதராயணருக்கு சம்மதமானவற்றை அல்ல.

22ம் பாஷ்யகாரரான ஸ்ரீமன் மத்வாசார்யர், சூத்ரகாரரின் அபிப்பிராயங்களுடன் சிறிதும் வேறுபடாமல் தம் பாஷ்யத்தை இயற்றி, அதன் மூலம் சஜ்ஜனர்களுக்கு அருள வேண்டும் என்னும் பகவந்தனின் ஆணையை நிறைவேற்றினார்.

அந்த 21 குபாஷ்யங்களின் பெயர்கள் பின்வருமாறு:
1. பாரதிவிஜய 2. ஸம்விதானந்த 3. பிரம்மகோஷ 4. ஷதானந்த 5. உத்தத 6. விஜய 7. ருத்ரபட்ட 8. வாமன 9. யாதவபிரகாச 10. ராமானுஜ 11. பர்த்ருபிரபஞ்ச 12. த்ரவிட 13. பிரம்மதத்த 14. பாஸ்கர 15. பிஷாச 16. வ்ருத்திகாரக 17. விஜய பட்ட 18. விஷ்ணுக்ராந்த 19. வாதீந்த்ர 20. மாதவ தாஸ 21. சங்கர.

ஈ சராசரதொ³ளு அனாசார³த³லி நடெ³வ
நீசமாயிக³ள கெ³லிதி³ர்ப்ப | கெ³லிதி³ர்ப்ப ஸ்ரீம
தா³சார்யரடி³க³ளிகெ³ ஶரணெம்பெ³ ||39(90)

ஈ சராசரதொளு = சராசரங்கள் நிறைந்த இந்த உலகில். அனாசாரதலி = (விஹித ஆசாரங்களை விட்டு) துராசாரர்கள் ஆகி. நடெவ = நடக்கும். நீசமாயிகள = அதமர்களான மாயாவாதிகள். கெலிதிர்ப்ப = வென்றிருக்கும். ஸ்ரீமதாசார்யர = ஸ்ரீமன் மத்வா சார்யரின். அடிகளிகெ = பாதங்களுக்கு. ஷரணெம்பெ = வணங்கு

கிறேன் (அவரின் பாதங்களே கதியென்று அடைந்து எப்போதும் வணங்குவேன்).

முன்னர் பார்த்த 21 பாஷ்யங்களில் ஜீவ-ஈஸ்வர ஐக்யங்களை சொல்லும் 21வது பாஷ்யமான சங்கர பாஷ்யம், தமஸ்ஸிற்கு ஸாதனம் ஆகிறது. 'நீசமாயிகள கெலிதிர்ப்ப' என்றதால் ஸ்ரீதாஸார்யர் இந்த அபிப்பிராயத்தை சொல்கிறார். கலி ஸ்பர்ஷம் இல்லாதவர் மட்டுமே இந்த மதத்தை நிராகரிப்பதற்கு சாத்தியம். ஆகணாஷ்மசமரான வாயுதேவரே அவதரித்து இதனை சாதித்தார்.

இந்த மஹா மகோத்ஸவத்தை தேவதைகளே பின்பற்றி, ஆகாயத்தி லிருந்து தேவலோகத்து புஷ்பங்களை சொரிந்தனர். அவதார காரியம் முடிந்ததால், அந்த புஷ்பராசியில் ஸ்ரீமன் மத்வாசார்யர் அத்ருஷ்யராகி, பதரிக்கு பிரயாணம் செய்தார். 'த்ருஷ்யஸ்து பதரீதடே' பதரியில், ஸ்ரீவேதவியாசரின் சன்னிதானத்தில், தகுந்த அதிகாரிகளால் காணப்படுகிறார் என்று ஸ்ரீவாதிராஜ தீர்த்தர் கூறுகிறார்.

நினகி³ந்த³தி⁴கராத³ அனிமித்த பா³ந்த⁴வரு
எனகி³ல்ல ஸ்ரீமத்⁴வமுனிராய | முனிராயனிரலு யோ
சனெயாகே ஜக³தி³ நமகி³ன்னு ||40(91)

ஸ்ரீமத்வமுனிராய = ஹே மத்வமுனிகளே. நினகிந்ததிகராத = உன்னை விட உத்தமமான. அனிமித்த பாந்தவரு = பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காத நண்பர். எனகில்ல = எனக்கு யாரும் இல்லை. இரலு = நீ இருக்கையில் (உன் அருள் இருக்கையில்). நமகின்னு = நமக்கு வேறு. ஜகதி = உலகில். யோசனே யாகே = கவலை எதற்கு? (கவலைப்படுவதற்கு சந்தர்ப்பமே இல்லை).

வாயுதேவர் – அனிமித்த பந்துகள் (பிரதிபலன் எதிர்பார்க்காத நண்பர்). 'நினகித்த ஸமராத அனிமித்த பாந்தவரு எனகில்ல ஆவாவ ஜனுமதல்லு' என்று ஸ்ரீதாஸார்யர் பாடியிருக்கிறார். வாயு தேவர் பூர்ணகாமர் ஆனதால், பக்தர்களிடமிருந்து எந்தவொரு பிரதி பலனையும் எதிர்பார்க்காமல் கருணையுடன் அருள்பவர். பூர்ண காமர் எனப்படுபவரே, எதையும் எதிர்பார்க்காமல் அருள்வதற்கு

தகுதியானவர். ஆகவே வாயுதேவர் ‘அர்த்யர்த்த:’ என்று அழைக்கப்படுகிறார்.

நித்யபூர்ணகுணத்வாச்ச ஹரே: ப்ரியதமத்வத: |
அஷக்யா ப்ராப்யராஹித்யா தர்த்யர்த்த ஸமுதாஹ்ருத: ||

நித்யபூர்ணர் ஆனதாலும், ஸ்ரீஹரிக்கு ப்ரியமானவர் ஆனதாலும் வாயுதேவரால் செய்யமுடியாதது எதுவும் இல்லை. இந்த காரணத் தினாலேயே இவர் ‘அர்த்யர்த்த’ என்று அழைக்கப்படுகிறார் என்று இவரது மகிமை வர்ணிக்கப்படுகிறது.

ஶ்ரீமத் ஸமஸ்த கு³ணதா⁴ம விஷ்ணோரங்க்⁴ரி
தாமரஸ மது⁴ப ப⁴வதாப | ப⁴வதாப கு³ருஸார்வ
பௌ⁴ம பரிஹரிஸி ஸலஹய்யா ||41(92)

ஶ்ரீமத் ஸமஸ்த குணதாம = அனைத்து கல்யாண குணங்களையும் கொண்டவரான. விஷ்ணோரங்க்ரி தாமரஸ மதுப = ஸ்ரீவிஷ்ணுவின் பாத பத்மங்களில் தேனியைப் போல சஞ்சரிக்கும் ஹே ஸ்ரீமதாசார் யரே. குருஸார்வபௌம = குரு சக்ரவர்த்திகளான நீங்கள். பவதாப = சம்சார துக்கங்களை. பரிஹரிஸி = போக்கி. ஸலஹய்யா = அருள்வாயாக

குருஸார்வபௌமர் என்று ஸ்ரீமதாசார்யரை வர்ணிப்பதற்கு தாஸார்யர் கொடுக்கும் ஆதாரம் இப்படியாக இருக்கிறது.

அஸம்ஷய: ஸம்ஷயச்சித் குருருக்தோ மனீஷிபி: |
தஸ்மாத்ப்ரம்மா குருர்முக்ய: ஸர்வேஷாமேவ ஸர்வதா ||

ஷண்ணவத்யங்குலோ யஸ்து ந்யக்ரோதபரிமண்டல: |
ஸப்தபாத: சதுர்ஹஸ்தோ த்வாத்ரிம்ஷல் லக்ஷணைர்யுத: ||
(பார. தாத்.)

சந்தேகமற்ற ஞானம் உள்ளவராக, சிஷ்யர்களின் அனைத்து சந்தேகங்களையும் பரிகரிப்பவரே குரு என்று ஞானிகள் சொல்கின்றனர். முக்யகுருகள் எனப்படுகிறவர் 32 லட்சணங்களைக் கொண்ட தேகத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

வாயுர்ஹி பிரம்மதாமேதி தஸ்மாத் பிரம்மைவ ஸ ஸ்ம்ருத: -- என்னும் சத்தத்வ ரத்னமாலா வாக்கியம், வாயுவே பிரம்மபதவியை அடையப் போகிறார் என்பதால், அவர் பிரம்ம என்று அழைக்கப் படுகிறார். ஆகையால், சர்வக்ஞரும், வாயுதேவரின் மூன்றாம் அவதாரருமான ஸ்ரீமத்வாசார்யரே முக்யகுருகள். அனைவரின் குருகள் ஆனதால் ஜகத்குருகள். அவரே ‘குருசார்வபௌமர்’.

ஜகத்குருவின் தேகபிரமாணம், மேற்கூறியதைப் போல இருக்க வேண்டிய 32 லட்சணங்கள் என்னவெனில்:

பஞ்சதீர்க்க: பஞ்சசூக்ஷ்ம: ஸப்தரக்த: ஷடுன்னத: |
த்ரிப்ருது த்ரிஷு கம்பீரோ த்வாத்ரிம்ஷல் லக்ஷணஸ்த் விதி ||
(லட்சண சாஸ்திரம்)

இதன் அர்த்தம்:
* தோள், கண், முட்டி, தாடை, நகங்கள் - நீளமாக இருக்க வேண்டும்.
* தோல், முடி, விரல்கள், பற்கள், விரல்கடைகள் - சிறியதாக இருக்க வேண்டும்.
* உள்ளங்கை, பாதம், கண் ஓரங்கள், வாய்க்குள் மேல் பாகம், நாக்கு, உதடுகள், நகங்கள் - சிவப்பாக இருக்க வேண்டும்.
* மார்பு, வயிறு, நெற்றி, முதுகு, கைகள், முகம் - இவை அகலமாக இருக்க வேண்டும்.
* கால்கள், கழுத்து, குஹ்யேந்திரியங்கள் இவை சிறியதாக இருக்க வேண்டும்.
* குரல், ஸ்வபாவம், நாபி இவை கம்பீரமாக இருக்க வேண்டும்.

இத்தகைய 32 லட்சணங்களைக் கொண்ட தேகத்தைக் கொண்ட ருஜுகண ஜீவரைத் தவிர, தாரதம்யத்தில் கீழான வேறு தேவதை களில் யார்யாருக்கு எவ்வளவு லட்சணங்கள் இருக்கின்றன என்பதையும், எந்த அங்கங்கள் லட்சணங்கள் குறைவாக இருக்கின்றன என்பதையும், துர்லட்சணங்களின் ஸ்வரூபத்தையும், அதமாதமனான கலியிடம் இருக்கும் 32 துர்லட்சணங்களின் விவரங்களும் கருடபுராணத்தில் பிரம்மகாண்டத்தில், மிகவும் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை படித்து தெரிந்து கொள்ளலாம்.

உத்த4ரிபுதெ3ம்ம ஹனுமத் பீ3மஸேன கு3ரு
மத்4வமுனிராய கவிகே3ய | கவிகே3ய என்ன து3
ர்புத்தி4க3ள பி3டி3ஸோ த3யதி3ந்த3 ||42(93)

ஹனுமத் பீமஸேன குரு மத்வமுனிராய = ஹே ஹனும, பீம ரூபங்களால் வேறுபடாதிருக்கும் ஹே மத்வகுருகளே. எம்ம = (உங்கள் பக்தரான) எம்மை. உத்தரிபுது = அருளவேண்டும். கவிகேய = ஞானிகளால் வணங்கப்படும் ஹே குருசார்வபௌமரே. என்ன = என். துர்புத்திகள = கெட்ட மனோவ்ருத்திகளை. தயதிந்த = கருணை யுடன். பிடிஸோ = போக்குவாயாக.

நமோ நமோ பா4ரதிரமண ஹனுமத் பீ4ம
யமிகுலோத்தம்ஸ கு3ருமத்4வ | கு3ருமத்4வ து3ர்வாதி3
திமிர மார்த்தாண்ட3 ஸுரஶௌண்ட3 ||43(94)

ஹனுமத் பீம யமிகுலோத்தம்ஸ = ஹே ஹனும, பீம, யதிகுலதிலகரான குருமத்வ ராயரே. பாரதிரமண = ஹே பாரதீஷா. துர்வாதி திமிர மார்த்தாண்ட = துர்வாதிகள் என்னும் இருட்டிற்கு சூரியனைப் போலிருக்கும். ஸுரஷௌண்ட = ஹே தேவோத்தமனே நமோ நம: = (உங்களுக்கு) திரும்பத்திரும்ப நமஸ்காரங்கள். ஷௌண்ட = புகழ்பெற்றவன் 'ஷௌண்டே மத்தே ச விக்யாதே' (உலகத்தின் அகராதி). ஸுரஷௌண்ட = தேவதை களின் குழுவில் புகழ்பெற்றவர் – அதாவது, வாயுதேவர் என்று பொருள்.

நம்ம கு3ருக3ள பாத3 ஒம்மெ நெனெயலு ஜன்ம
ஜன்ம க்ருதபாப பரிஹார | பரிஹாரவாகி3 ஸ
த் பி3ரம்மபத3த3ல்லி ஸுகி2ஸோரு ||44(95)

நம்ம குருகள பாத = நம் குருகளான ஸ்ரீமத்வாசார்யரின் பாதங்களை. ஒம்மெ = ஒரு முறை. நெனெயலு = (பக்திபூர்வகமாக) நினைப்பதாலேயே. ஜன்மஜன்மக்ருத பாப = பற்பல பிறவிகளில் செய்த பாவங்கள். பரிஹாரவாகி = பரிகாரமாகி. ஸத்பிரம்ம பததல்லி = விஷ்ணுலோகத்தில். ஸுகிஸோரு = ஆனந்தப்படு கிறார்கள்.

ஏகோऽபி க்ருஷ்ணஸ்ய ஸக்ருத் ப்ரணாமோ தஷாஷ்வமேதாவப்ருதேன தல்ய: |
தஷாஷ்வமேதீ புனரீதி ஜன்ம க்ருஷ்ணப்ரணாமோ ந புனர்பவாய||

ஸ்ரீகிருஷ்ணனுக்கு செய்யப்படும் ஒரு நமஸ்காரமானது, மோட்சத்திற்குக் காரணமாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, ஸ்ரீவாயுதேவரை பக்திபூர்வகமாக வணங்குவதும்கூட மகாபலன்களைக் கொடுக்கக்கூடியது என்று சொல்கிறார்.

வாயு ஹனுமத் பீ^{4}மமத்^{4}வராயர ஸ்தோத்திர
பா^{3}யொளுள்ளவகெ^{3} ஜன்மாதி^{3} | ஜன்மாதி^{3} ரோக^{3}ப^{4}ய
வீயனெந்தெ^{3}ந்து^{3} ப^{4}கவந்த ||45(96)

வாயுஹனுமத் பீமராயமத்வர ஸ்தோத்திர = ஸ்ரீவாயுதேவரின் மற்றும் அவரது அவதாரங்களான (மூலரூபத்தைப் போலவே பல, ஞானாதிகளைக் கொண்ட) ஹனும, பீம மற்றும் மத்வராயரின் ஸ்தோத்திரங்களை. பாயொளுள்ளவகெ = (நிரந்தர பக்தியுடன்) உச்சரிப்பவனுக்கு. ஜன்மாதி ரோகபய = பிறப்பு, இறப்பு சுழற்சி, தேக நோய்கள் போன்ற பயங்களை. பகவந்த = ஸ்ரீஹரி. எந்தெந்து = என்றைக்கும். ஈயனு = கொடுப்பதில்லை

ஜன்மாதி வியாத்யுபாதி ப்ரதிஹதி விரஹ ப்ராபகாணாம் குணானாம்... (ஹரிவாயுஸ்துதி) – பிறப்பு, மனோவியாதி, சம்சாரிக பிரச்னைகள் என இவை அனைத்தையும் தீர்க்கவல்ல குணங்கள் ஸ்ரீவாயுதேவரிடம் உள்ளன. இதே அபிப்பிராயத்தையே ஸ்ரீதாஸ ராயர் இங்கு சொல்லியிருக்கிறார். ஸ்ரீஹரியை நினைத்தால் அந்த செயல் என்றும் வீணாவதில்லை என்று அபயம் அளிக்கிறார் ஸ்ரீதாஸராயர்.

மாதரிஶ்வனே என்ன மாத லாலிஸி ஜக^{3}
ந்னாத^{2} விட்ட^{2}லன மனத^{3}ல்லி | மனத^{3}ல்லி தோரி ப^{4}வ
பீ^{4}தி பி^{3}டி^{3}ஸய்ய ப^{4}வ்யாத்ம ||46(97)

மாதரிஶ்வனே = ஹே வாயுதேவனே. என்ன = என். மாத லாலிஸி = பிரார்த்தனையை (தயவு செய்து) நினைத்துப் பார்த்து. ஜகன்னாத விட்டலன = உலக நாயகனான ஸ்ரீவிட்டலனை. மனதல்லி = என்

இதயத்தில். தோரி = தரிசனம் கொடுக்க வைத்து. பவபீதி = சம்சார துக்கத்தை. பவ்யாத்ம = ஹே மஹா மஹிமனே. பிடிஸய்ய = போக்குவாயாக, பிரபோ!

ஸ்ரீவாயுதேவரை திரும்பத்திரும்ப துதித்து, பிரார்த்தித்து, ஸ்ரீஜகன்னாத விட்டலனில் மனதை அர்ப்பித்து, வாயுதேவனின் ஸ்துதியை முடித்து வைக்கிறார். பவ்யாத்ம என்றால் கருணை உள்ளவன், வியாப்த ஸ்வரூபன் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

16. ஸ்ரீ பிரம்மதேவரின் ஸ்தோத்திரம்

ஸத்யலோகவெ ஸத³ன தத்வாபி³மானிக³ளு
ப்⁴ருத்யரெனிஸுவரு மஹலக்ஷ்மி | மஹலக்ஷ்மீ ஜனனி புரு
ஷோத்தமனெ ஜனகனெனிஸுவ ||1-(98)

ஸத்யலோகவே = சத்யலோகமே. ஸதன = (பிரம்மதேவனின்) வசிப்பிடம். தத்வாபிமானிகளு = தத்வாபிமானிகளான ருத்ராதி தேவதைகள். ப்ருத்யரெனிஸுவரு = சேவகர்கள் எனப்படுகின்றனர். மஹலக்ஷ்மி = ஸ்ரீமஹாலட்சுமி தேவியே. ஜனனி = தாய். புருஷோத்தமனே = புருஷோத்தமனான ஸ்ரீஹரியே . ஜனகனு எனிஸுவ = தந்தை எனப்படுகிறான்.

உலகங்கள் 14. பூலோக, அந்தரிக்ஷ, ஸ்வர்க்க, மஹர்லோக, ஜனலோக, தபோலோக, ஸத்யலோக இவை 7 மற்றும் பூமியின் கீழ் உள்ள அதல, விதல, சுதல, தலாதல, மஹாதல, ரஸாதல, பாதால என்னும் 7 - இவற்றில் சத்யலோகம் அனைத்தையும்விட மேல் இருக்கிறது. அதுவே பிரம்மதேவரின் வசிப்பிடம் ஆகும்.

பிரம்மதேவருக்கு ரமாநாராயணர்களே தாய்தந்தைகள். அவர்கள் மூலமாக பிறந்தவர். பிரம்மாண்டத்தின் ஸ்ருஷ்டிக்கு முன்னரே, வாசுதேவரூபியான பரமாத்மன் மற்றும் மாயா நாமகளான லட்சுமி தேவி இவர்களால் பிரம்மன் ஸ்ருஷ்டிக்கப்பட்டார். பிறகு, பிரம்மாண்டத்தில் பரமாத்மனின் நாபி கமலத்திலிருந்து பிறந்தார். தேவதைகளின் படைப்பும், ரமா நாராயணர்களின் செயல்களும் மிகுந்த அற்புதமானவை. லௌகிக ஆண் பெண்களின் செயல்கள் மற்றும் அவர்களால் ஆகும் உற்பத்தியைப் போலவே

(அவர்களுடையதும்) என்று எப்போதும் நினைக்கக்கூடாது. அப்படி நினைப்பதால் மிகப்பெரிய அனர்த்தம் உண்டாகும் என்று நினைவில் கொள்ள வேண்டும்.

ஜீவர்கள் ஸ்வரூபத்தினால் நித்யர்கள் ஆனாலும், தேகத்தால் நாசம் அடைபவர்கள் ஆகையால், க்ஷர புருஷர்கள் என்று அழைக்கப் படுகின்றனர். நித்யமான அப்ராக்ருத தேகத்தைக் கொண்ட மகாலட்சுமி அக்ஷர புருஷள். க்ஷர, அக்ஷர புருஷர்களைவிட வேறுபட்டவனும், உத்தமனும், சிறந்தவனும் ஆன ஸ்ரீஹரியே புருஷோத்தமன் ஆகிறான்.

தத்வாபிமானிகளான தேவதைகளும் க்ஷர புருஷர்களே. அவர்களும் அபாரமான ஞானம் கொண்டவர்களே. ஆனாலும்கூட அவர்கள் பிரம்மதேவரின் சேவகர்களே ஆகின்றனர்.

சதுரத³ஶ லோகாதி³பதியெனிப நினகெ³ ஸர
ஸ்வதியு நிஜராணி விஹகே³ந்த்ர । விஹகே³ந்திர ஶேஷபா
ர்வதி பராத்மஜரு எனிஸோரு ।।2(99)

சதுரதஷ லோகாதிபதியு = 14 உலகங்களுக்கு அதிபதி என்று. எனிப = புகழ்பெற்ற. நினகெ = உனக்கு. ஸரஸ்வதியு = சரஸ்திதேவி. நிஜராணி = நியத பத்னி ஆகிறாள். விஹகேந்த்ர சேஷபார்வதிபரு = கருட, சேஷ, பார்வதிபதியான ருத்ரர், . ஆத்மஜரு = மக்கள். எனிஸோரு = என்று அழைக்கப்படுகிறார்.

சத்யலோகத்தில் வசித்தாலும் அந்த ஒரு உலகத்திற்கே பிரம்ம தேவர் அதிபதி என்று இல்லை. 14 உலகங்களுக்கும் பிரபு என்று அழைக்கப்படுகிறார்.

முந்தைய நுடியில் தாய் தந்தையரை, சேவகர்களை சொல்லி, இங்கு மனைவி, மக்களை சொல்கிறார். பிரம்மன் சரஸ்வதியிடம் சேஷனையும், வாயுதேவன் பாரதியிடம் கருடனையும் ஸ்ருஷ்டித்தனர். பிரம்மனின் நெற்றியிலிருந்து ருத்ரர் பிறந்தார். வாயு, பிரம்மன் சமமாக இருந்தாலும், வாயுதேவரே அடுத்த பிரம்மபதவிக்கு வருபவர் ஆகையாலும், கருடனையும், பிரம்மனின் மகன் என்றே சொல்கிறோம்.

த்^{3}விஶத கல்பதி^{3} தபவெஸகி^{3} அஸுதே^{3}வ பொ^{1}ம்
ப^{3}ஸிரபத^{3} படெ^{3}தெ^{3} ஹரியிந்த^{3} | ஹரியிந்த^{3} மிக்க ஸுமநஸரிகுண்டே ஈ பா^{4}க்ய ||3(100)

அஸுதேவ = பிராணர்களுக்கு (ஜீவர்களுக்கு) தலைவனான நீ. த்விஷத கல்பதி = 200 பிரம்ம கல்பங்களில். தபத = தவம். எஸகி = செய்து. ஹரியிந்த = ஶ்ரீஹரி பிரசாதத்தினால். பொம்பஸிரபத = பிரம்ம (ஹிரண்யகர்ப்ப) பதவியை. படெதெ = பெற்றாய். மிக்க = மற்ற. ஸுமனஸரிகெ = தேவதைக்ளுக்கு. ஈ பாக்ய = சத்ய லோகாதிபதி என்று சொல்லப்படும் இந்த பாக்கியம். உண்டே = கிடைக்குமா? (என்றும் இல்லை)

பிரம்ம பதவி என்பது, ருஜுகண ஜீவர்களுக்கு மட்டுமே கிடைப்பதாகும். பிறருக்கு வேறு எந்த ஸாதனைகளாலும் அது கிடைப்பதில்லை.

ருஜுகண ஜீவர்களின் ஸாதனைக் காலம் 200 பிரம்ம கல்பங்கள். இவர்கள் அனாதி காலத்திலிருந்து பூர்ண சாஸ்திர ஞானம் கொண்டவர்கள். பகவந்தனின் அபரோக்ஷமும், சாட்சாத்காரமும் அனாதி காலத்திலிருந்தே இவர்களுக்கு உண்டு. முதலாம் 100 கல்பங்களில் ஶ்ரீஹரி தியானத்தில் செலவழிக்கின்றனர். விசேஷ அபரோக்ஷத்தைப் பெற்று, 101ம் கல்பத்திலிருந்து பிரம்ம பதவி கிடைப்பதற்காக விசேஷ ஸாதனைகள் துவங்குகின்றன.

இந்த காலங்களில் பகவத் ரூபங்களில் அதிக ஸ்பஷ்டமும், அதிக ரூபங்களின் அபரோக்ஷ லாபமும் கிடைக்கின்றன. ஸாதனையும் தொடர்கிறது. ருஜுகளின் பிராரப்தம் – சுக பிராரப்தமே. துக்க பிராரப்தம் என்பது அவர்களுக்கு இல்லவேயில்லை. 199ம் கல்பத்தில் வாயுபதவிக்கு வருகின்றனர். 200ம் கல்பத்தில் பிரம்ம பதவியை அடைந்து, சஹபோகத்தை அனுபவித்து, சாயுஜ்ய (சர்வாங்க சாயுஜ்ய) முக்தியை அடைகின்றனர்.

ருஜுகளுக்கு துக்க அஞ்ஞானிகளின் ஸ்பர்சம் எந்த காலத்திற்கும் இல்லை. இதர தத்வாபிமானி தேவதைகளுக்கு சிறிதளவு ஸ்பர்சம் உண்டு. இவர்களும்கூட அனாதி காலத்திலிருந்து பகவந்தனின் சமான்ய அபரோக்ஷம் உள்ளவர்களே. ஸாதனைக்குப் பிறகு ஸ்வ–

பிம்ப ரூபத்தின் தரிசனம் கிடைத்து, அவரவர்களின் தாரதம்யத் திற்கேற்ப, கறைகளற்ற சூரியனைப் போல தெரிகிறது.

பாரோக்ஷ்யேண து பூர்ணம் ஸ்யாத்தேஷாம் ஞானம் ஸதெய்வ ஹி |
விசேஷேணா பரோக்ஷ்யாச்ச க்ரமாத்ருத்திரி தீரிதா ||
அனாதிதோப்யா பரோக்ஷ்யக்தா ரூபேஷு ச க்வசித் ||
(சத்தத்வ ரத்ன மாலா)

என்று அனைத்து தத்வாபிமானி தேவதைகளின் சாமான்ய லட்சணங்களையும் நிரூபித்தவாறு,

ஸமஸ்த லட்சணை:பூர்ணா: ஸமஸ்த ஜகதீஷ்வரா: |
முக்தப்ராயா: ஸதா ஸர்வே.. (சத்தத்வ ரத்ன மாலா)

என்று சொல்கின்றனர். ‘ஸமஸ்த லட்சணை:’ என்பதற்கு லட்சண சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் 32 லட்சணங்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. பக்தி வைராக்கியங்கள் என அறிய வேண்டும். இதே ஆதாரத்தை ஸ்ரீஜகன்னாததாஸரே, தமது ஹரிகதாம்ருத சாரத்தில் இவ்வாறு நிரூபிக்கிறார்.

ஸாத4னாத் பூர்வத3லி ஈ ரு
ஜ்வாதி3 தாத்விகரெனிப ஸுரக3ண
நாதி3 ஸாமான்யா பரோக்ஷிக3ளெந்து3 கரெஸுவரு |
ஸாத4னோத்தர ஸ்வஸ்வபி3ம்ப3 உ
பாதி4 ரஹிதாதி3த்ய நந்த3தி3
ஸாதரதி3 நோடு3வரு அதி4காரானுஸாரத3லி ||13

ருஜுகணாதீ4ஸ்வரனெ அஜபத3விகோ3ஸுக3தி3
ஜபிஸித3வனல்ல ஹரிபாத3 | ஹரிபாத3 ஸேவெயு ஸ
ஹஜவே ஸரி நினகெ3 எந்தெ3ந்து3 ||4(101)

ருஜுகணாதீஷ்வரனே = (அமுக்த) ருஜுகண ஜீவர்களில் சிறந்த அதிபத்யத்தை அடைந்திருக்கும் ஹே பிரம்மதேவனே. அஜபதவி கோஸுகதி = பிரம்மபதவியைப் பெறுவதற்காக (நீ). ஹரிபாத = ஸ்ரீஹரிபாதங்களை. ஜபிஸிதவனல்ல = வணங்கியவன் அல்ல. நினகெ = உனக்கு. எந்தெந்து = அனைத்து காலங்களிலும் (அனாதி

அனந்த காலங்களில்). ஹரிபாத ஸேவெயு = ஸ்ரீஹரிசரண சேவை யானது. சஹஜவே சரி = ஸ்வபாவிகமாகவே (சாதாரணமாகவே) வந்திருக்கிறது.

ஏகாந்த பக்தர்கள் யாரும் மோட்சத்தைக் கூட விரும்புவதில்லை. தத்வாபிமானிகள் அனைவரும் ஏகாந்த பக்தர்களே. இவர்கள் சாதாரண பக்தர்கள் அல்லர். வாயுபிரம்மர், ஏகாந்த பக்தர்களில் சிறந்தவர்கள். இதர ஏகாந்த பக்தர்கள் திடமான ஹரிதியான, ஹரி பஜனை, ஹரி சேவாதிகள் ஆகியவை கிடைக்க வேண்டும் என்பதால், மோட்சத்தை விரும்புவார்கள். பிரம்ம வாயுகள் ஆனவர்கள், இவை அனைத்தும் அமுக்த்ய அவஸ்தையிலேயே தமக்கு கிடைத்திருப்பதால், எந்த காரணத்தாலும், அவர்கள் மோட்சத்தை விரும்புவதே இல்லை. ஸ்ரீஹரியின் ஆணை என்று, ஸ்ரீஹரியால் கொடுக்கப்பட்ட மோட்சத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

சதுராஸ்ய தத்வ தேவதெக[3]ளந்தர்யாமி
நுதிஸி பி[3]ன்னயிபெ அனுகா[3]ல | அனுகா[3]ல ப[4]க்தி ஶா
ஶ்வதவாகி[3] இரலி ஹரியல்லி ||5(102)

தத்வ தேவதெகளந்தர்யாமி = தத்வாபிமானி தேவதைகளின் அந்தர் யாமியாக இருக்கக்கூடிய. சதுராஸ்ய = ஹே சதுர்முகனே. நுதிஸி = (உன்னை) வணங்கி (உன் மகிமைகளை கொண்டாடி). பின்னயிபெ = பிரார்த்திக்கிறேன். ஹரியல்லி = ஸ்ரீஹரியிடம். அனு கால = எப்போதும். பக்தி = பக்தி. ஶாஶ்வதவாகி இரலி = நிரந்தரமாக ஒரே மாதிரியாக இருக்கட்டும்.

சர்வேந்த்ரியா பிமானிஸ்த முக்யபிராணஸ்த விஷ்ணுனா என்னும் பிரமாண வாக்கியத்தால், இந்திரியாபிமானிகளில் இருந்து, வாயு தேவருக்கும் நியாமகர் என்று தெரியவருகிறது. ஸ்ரீவிஷ்ணு, இந்திரியாபிமானிகளில் இருக்கும் வாயுதேவருக்கும் நியாமகமான இருக்கிறான்.

சதுராஸ்ய: பிரம்மனுக்கு ஐந்து முகங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றினை ருத்ரர் ஸ்ரீவிஷ்ணு ப்ரேரணையால் கத்தரிக்கிறார். ‘அஹம் ருத்ராய தனுராதனோமி பிரம்மத்விஷே ஷரவே... (அம்ப்ரிணி சூக்தம்) என்பதில் இந்த விஷயம் புரிகிறது. அம்ப்ரிணி

நாமகளான மகாலட்சுமி, ருதரனை அழிப்பதற்காக தனுஸ்ஸினை கையில் எடுத்துக்கொண்டாள் என்று சொல்கிறது. அம்ப்ரிணி தேவி, பிரம்ம ருத்ரர்களையும் ஸ்ருஷ்டி சம்ஹாரம் செய்கிறவள் என்றும் இதிலிருந்து தெரியவருகிறது. த்வேஷி, ஹிம்ஸக என்னும் சொற்கள், ருத்ரன், பிரம்மனால் வெறுக்கப்பட்டவன் என்றும், தோஷத்தின் ஸ்பர்சம் கொண்டவன் என்பதைக் குறிப்பதற்காகவே இருக்கிறது என்றும் அறிய வேண்டும். (அடுத்து வரும் லட்சுமி ஸ்துதியில், இங்கு சொல்லப்பட்டுள்ள லட்சுமிதேவியின் மகிமைகள் விரிவாக சொல்லப்பட்டுள்ளன).

ஸத்யலோகேஶனெ ப³ளித்தா²தி³ ஶ்ருதிவினுத
ம்ருத்யுஞ்சயாதி³ ஸுரபூஜ்ய | ஸுரபூஜ்ய ப⁴க்தர வி
பத்து பரிஹரிஸி ஸலஹய்ய ||6(103)

ம்ருத்யுஞ்சயாதி சுரபூஜ்ய = ருத்ராதி தேவதைகளால் பூஜ்யனும். பளித்தாதி ஸ்ருதிவினுத = பளித்தாதி சூக்தங்களால் (வேதங்களில்). போற்றப்படுபவனும், மகிமைகள் கொண்டவனுமான. ஸத்ய லோகேஷனே = சத்யலோகாதிபதியான ஹே பிரம்மதேவனே. பக்தர = (உன்) பக்தர்களை. விபத்து = (பய, துக்க, அஞ்ஞானாதிகளால் வரக்கூடிய) கஷ்டங்களை. பரிஹரிஸி = போக்கி. ஸலஹய்ய = அருள்வாயாக.

இனிதித்³த⁴ ப³ளிக நீ ஸலஹதி³ப்புது³ நம்ம
அனுசிதனுசிதவோ நீ ப³ல்லி | நீ ப³ல்லி ஶாரதா³
வனிதெய ரமண த³யவாகோ³ ||7(104)

இனிதித்த பளிக = உன் மகிமைகளை இப்படியாக அறிந்து உன்னிடம் பக்தி செய்த பிறகும். நீ = நீ. நம்ம = எம்மை. ஸலஹதிப்புது = அருளாமல் இருப்பது. அனுசிதனுசிதவோ = யோக்யமல்ல / சரியல்ல என்பதை. நீ = நீ. பல்லி = (சர்வக்ஞனானதால்) அறிந்தே இருக்கிறாய். ஷாரதாரமண = சரஸ்வதி பதியான ஹே பிரம்ம தேவனே. தயவாகோ = கருணை காட்டி அருள்வாயாக.

‘அனுசிதனுசிதவோ’ என்று அனுசித-அனுசித என்று இரு முறை சொன்னதால் நீ அருளாமல் இருப்பது உண்மையே - அது சரியல்ல. இதிலிருந்து அருள வேண்டும் என்ற அர்த்தம் வருகிறது.

‘தயவாகோ’ என்பது பக்தியினால் கூடிய விசேஷ பிரார்த்தனை எனப்படுகிறது.

ஸத்வாத்மக ஷரீர மித்^{2}யாதி^{3} மதக^{3}ளொளு
உத்பத்தி ஸம்பத்து கொட^{3}தி^{3}ரு | கொட^{3}தி^{3}ரெனகெ^{3}ந்து^{3} ஸம்
ப்ரார்த்தி^{2}ஸுவெ நினகெ^{3} நமோ எந்து^{3} ||8-(105)

ஸத்வாத்மகஷரீர = சத்வ குணத்தால் ஆன தேகத்தைக் கொண்ட, ஹே பிரம்மதேவனே. மித்யாதி மதகளொளு = மாயாவாத முதலான மதங்களைப் பின்பற்றுபவர்களில் (நம் மதத்தைத் தவிர பிறரில்). எனகெ = எனக்கு. உத்பத்தி = பிறவியை. ஸம்பத்து = அவரின் ஞான (அவற்றால் மோட்சம் கிடைப்பதற்கு தடை வருமாகையால்) ஐஸ்வர்யாதிகளை. எந்து = எந்த காலத்திலும். கொடதிரு = கொடுக்க வேண்டாம். நினகெ நமோ எந்து = உன்னை வணங்கி. ஸம்ப்ரார்த்திஸுவெ = பக்திபூர்வகமாக வேண்டிக் கொள்கிறேன்.

ஸத்வஸத்வ மஹாஸத்வ ஸூக்ஷ்ம ஸத்வ ஸ்சதுர்முக: ||
(கீதா பாஷ்ய)
விஷுத்தஸத்வ பிரம்மாதே: ஷரீரே ஸம்ஸ்திதோ ஹரி: |
(பாக. தாத்)
ஆகிய பிரமாணங்களால், பிரம்மதேவரின் சரீரம் சுத்த சத்வாத்மகமானது என்று தெரியவருகிறது.

தமஸி யத்ரஜ: | தமஸ்ச ஸூரே தமபி -- என்பதில் மஹத் தத்வத்தில் ரஜஸ் தமோ குணங்களும் அடங்கியிருக்கின்றன என்பது தெரிகிறது. இது மிகச் சிறிய அளவிலும், பந்தக சக்தி இல்லாமலும் இருக்கிறது என்றும் இந்த வாக்கியங்களிலிருந்து அறியவேண்டும்.

அபந்தக பரமஸுக்ஷ்ம ஸத்வோபாதானகதேஹாதி மத்வாபிதானாத் |
(சத்தத்வ ரத்ன மாலா)
என்று இதையே சொல்லி, சத்வ குணமும், பிரம்மதேவருக்கு பந்தக இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, பிரம்ம

தேவருக்கு இஷ்டம் இல்லாத எந்த வேலையிலும் அவரை ஈடுபடுத்துவதில்லை என்று மட்டுமே அர்த்தம்.

மாதரிஶ்வனே நின்ன ப்ரீதியொந்தே[3] ஜக[3]
ந்னாத[2]விட்ட[2]லன கருணக்கெ | கருணக்கெ காரணெம
யாதனெயு ப[3]ரலு நானஞ்சே ||9-(106)

மாதரிஶ்வனே = ஹே பிரம்மதேவனே. நின்ன = உன். ப்ரீதியொந்தே = அன்பு மட்டுமே. ஜகன்னாதவிட்டலன = உலக நாயகனான விட்டலனின். கருணக்கெ = கருணையைப் பெறுவதற்கு. காரண = காரணம் ஆகும். நானு = நான். யமயாதனெயு = நரக துக்கங்கள் (யம லோகத்தில்). பரலு = வந்தாலும். அஞ்சே = பயப்படுவதில்லை

நீ மகிழ்ந்தால், ஸ்ரீஹரியின் பிரஸாதத்தை நான் பெறுகிறேன். உங்கள் இருவரின் பிரஸாதம் இருந்தால், யம பட்டணத்திற்கு செல்வதற்கு வாய்ப்பே இல்லை. அப்படி வந்துவிடுமோ என்று பயப்படவும் காரணம் இல்லை. அதற்காக பரிகாரமும் உங்களிடமிருந்தே ஆகின்றது. இது ஆதாரங்களால் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

13. ஸ்ரீ பூ[4] துர்கா ஸ்தோத்திரம்

ஸ்ரீபூ[4]மி து[3]ர்கெ[3] மத்தேபீ[4]ந்த்ரக[3]மனெ ஸ்வ
ர்ணாப[4]கா[3]த்ரே ஸுசரித்ரெ | ஸுசரித்ரெ ஸ்ரீபத்[3]ம
நாப[4]ன்ன ஜாயெ வரவீயெ ||1-(107)

ஸ்ரீபூமி துர்கெ = ஸ்ரீ, பூ, துர்கா ரூபங்களைக் கொண்ட. மத்தே பீந்த்ர கமனே = கஜராஜனின் கம்பீரமான வருகையைப் போல வருகையை உள்ளவளே. ஸ்வர்ணாபகாத்ரே = தங்கத்தைப் போன்ற ஒளிரும் தேகம் கொண்ட. ஸுசரித்ரெ = பிரம்மாதிகளால் ஸ்துத்யமான மகிமைகளைக் கொண்டவளே. ஸ்ரீபத்மனாபன்ன ஜாயே = ஸ்ரீபத்மனாபனின் (நாராயணனின்) மனைவியான ஹே மகாலட்சுமியே. வரவீயே = மகிழ்ச்சியுடன் வரங்களைக் கொடுப்பாயாக.

ரமா, மகாலட்சுமி ஆகியவை மூலரூபத்தின் பெயர்கள். உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய ஆகிய கர்மங்களை, நிஜ ரமணனான ஸ்ரீமன் நாராயணனின் ஆணைப்படி நிர்வகிப்பதற்காக, சத்வகுண, ரஜோகுண, தமோகுணங்கள் என்னும் மூன்று குணங்களுக்கு முறைப்படி நியாமகளான ஸ்ரீ, பூ, துர்கா நாமம் கொண்ட ரூபங்களை மகாலட்சுமி ஸ்வீகரித்துள்ளார். ஸ்ரீ நாராயணன் பத்மனாபன் ஆகிறான். நாபி கமலத்தில் பூ-ரூபளான லட்சுமிதேவியே இருந்து, சதுர்முகனின் படைப்பிற்கு காரணம் ஆகிறாள்.

த்ரிகு^{3}ணாபி^{4}மானி என்னவகு^{3}ணத^3 ராஶிக^{3}ள
ப^{3}கெ^{3}யத^{3}லெ காயெ வரவீயெ | வரவீயெ நின்ன பத^3
யுக^{3}ளக்கெ நமிபெ ஜக^{3}த^{3}ம்பெ^{3} ||2-(108)

த்ரிகுணாபிமானி = மூன்று குணங்களுக்கு நியாமகளான மகாலட்சுமி தேவியே. என்ன = என்னுடைய. அவகுணத ராஷிகள = தோஷராசிகளை . பகெயதலெ = கவனத்தில் கொள்ளாமல். காயி = காப்பாற்றுவாயாக. வரவீயே = என் இஷ்டார்த்தங்களை அருள்வாயாக. ஜகதம்பெ = ஹே ஜகத் ஜனனியே. நின்ன பதயுக ளக்கெ = உன் பாத கமலங்களை. நமிபெ = நான் வணங்குகிறேன்.

ஸ்ரீர்மூலஸத்வம் விக்ஞேயா பூர்மூலம் ரஜ உச்யதே |
மூலம் தமஸ்ததா துர்கா மஹாலக்ஷ்மீ ஸ்த்ரிமூலிகா ||
(பாகவத தாத்பர்ய)

சத்வ, ரஜஸ், தமோ குணங்கள் ஸ்ரீ, பூ, துர்கா ரூபளான லட்சுமி தேவியின் அதீனங்கள் என்றும், அவளின் சக்தியினாலேயே செயல்களில் ஈடுபடுகின்றன என்றும் இந்த ஆதாரத்தினால் தெளிவாகிறது.

மமயோனிர் மஹத்பிரம்ம தஸ்மின் கர்ப்பம் ததாம்யஹம் |
ஸம்பவ: ஸர்வபூதானாம் ததோ பவதி பாரத ||
ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா: |
தாஸாம் பிரம்ம மஹத்யோனிரஹம் பீஜப்ரத:பிதா ||

என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணன், தன் மனைவியான மகாலட்சுமியே ஜகன்மாதை என்று சொல்லியிருக்கிறார். 'மஹத்பிரம்ம' என்று

அழைக்கப்படும் என் மனைவியிடம், நான் கர்ப்பத்தை ஸ்தாபிக்கிறேன். அப்போது அனைத்து பிராணிகளும் பிறக்கின்றன. ஸ்ருஷ்டியின் துவக்கத்திற்கு மட்டும் நாங்கள் (நான் மற்றும் என் மனைவி) காரணம் என்று அல்ல. அடுத்து, அனைத்து காலங்களிலும், தேவ, மனுஷ்ய, பசு முதலான தேகத்தினால் பிறக்கும் அனைவருக்கும், லட்சுமியே க்ஷேத்ர ரூபத்தின் காரணள். நானே கர்ப்பாதானம் செய்யும் தந்தை. பீஜத்தைக் கொடுப்பவன். மூல காரணன்.

இப்படியான அர்த்தத்தைக் கொடுக்கும் மேற்சொன்ன ஸ்லோகங்களினால் மகாலட்சுமியே 'ஜகதம்பெ' என்று திடமாகிறது. பிரம்ம தேவனைவிட அனந்தகுணபூர்ணள் ஆகையால் மகாலட்சுமி 'மஹத்பிரம்ம' என்று அழைக்கப்படுகிறாள். யோனி = மனைவி / க்ஷேத்ரம் / உற்பத்தி ஸ்தானம்.

த3ரஹஸித1 வத3ன ஸுந்த3ரி கமலஸத3னே நி
ர்ஜரஸித்த3கீ3தே விதி4மாதே | விதி4மாதே லோக ஸுன்
த3ரியே நீ நோடே3 த3யமாடே3 ||3-(109)

தரஹஸிதவதன ஸுந்தரி = மந்தகாசத்துடன் கூடிய முகத்தைக் கொண்ட. கமலஸதனெ = தாமரையில் வீற்றிருக்கும். லோக ஸுந்தரி = (14) உலகங்களில் பரம சுந்தரியான மகாலட்சுமி தேவியே. நீ = நீ. நிர்ஜரஸித்தகீதெ = தேவதைகளாலும், முக்தர்களாலும் வணங்கப்படுபவள். விதிமாதே = பிரம்மதேவனின் தாயாக இருப்பவளே. நோடே = உன் கருணைப் பார்வையை செலுத்து. தயமாடே = அருள்வாயாக

தர – சிறிது / மந்த. கமலஸதனே = 'பத்மப்ரியே பத்மினி பத்ம ஹஸ்தே பத்மாலயே பத்மதளாயதாக்ஷி' ஆகிய ஸ்ருதிகள் 'பத்ம'த்தில் மகாலட்சுமியின் விசேஷ சன்னிதானத்தை சொல்கிறது.

ப்ரளயகாலதி3 ப1தியு மலக3பே3கெனுத வட
தெ3லெயாகி3 ஹரிய ஒலிஸிதி3 | ஒலிஸிதி3 ஜக3த3 மங்
க3ளதே3வி நமகெ3 த3யவாகெ3 ||4-(110)

ப்ரளயகாலதி = மகாப்ரளய காலத்தில் (அனைத்து இடங்களிலும் நீர் நிரம்பியிருக்க). பதியு = உன் பதியான நாராயணன். மலக பேகெனுத = சயனிக்கும் அபிப்பிராயத்தில். வடதெலெயாகி = வட பத்ர (ஆல இலை) ரூபத்தை தரித்து. ஹரிய = ஸ்ரீஹரியை. ஒலிஸிதி = மெச்சினாய். ஜகத = உலகத்தின். மங்களதேவி = மங்களத்தைக் கொடுக்கக்கூடிய நீ. நமகெ = (உன் பக்தனான) எங்களுக்கு. தயவாகே = அருள்வாயாக

பிரளய காலத்தில், ஸ்ரீஹரி ஆல இலையில் சயனித்திருந்தார் என்பது ஸ்ருதியில் சொல்லப்பட்டுள்ளது. அந்த ஆல இலை யானது, மகாலட்சுமியின் ஒரு ரூபம் என்பதை இங்கு சொல்கிறார் தாஸார்யர். 'தேவோ நாராயண: ஸ்ரீஷ: தேவி மங்களதேவதா' என்று சொல்வதைப் போல, தேவ, தேவி ஆகிய சொற்கள் முக்கியமாகக் குறிப்பது நாராயணன் மற்றும் ரமாதேவியையே. தேவி மங்கள ஸ்வரூபள். தோஷங்கள் அற்றவளான நித்ய முக்தள். ப்ராக்ருத தேகம் இல்லாதவள். அவதாரங்களிலும் ப்ராக்ருத தேகம் இல்லாத அப்ராக்ருத ஸ்வரூபள். சத்குணபூர்ணள். சர்வக்ஞள். தன் மற்றும் தன் பதியின் பக்தர்களுக்கு அனைத்து புருஷார்த்தங்களையும் அருளும் கருணைக்கடல். இதற்காகவே 'சர்வமங்களே' என்று அழைக்கப்படுபவள்.

தந்துபடத³ந்தெ ஜக³த³ந்தர் ப³ஹிரத³லி
காந்தனொட³கூ³டி³ நெலெஸிர்ப்பெ | நெலெஸிர்ப்பெ நீனென்ன
அந்தரங்க³த³லி நெலெகொ³ள்ளெ ||5-(111)

தந்துபடதந்தெ = நூல்கள் ஆடையின் குறுக்கும் நெடுக்குமாக ஓடி, அந்த ஆடைக்கு ஆதாரமாக இருப்பதைப் போல. ஜகதந்தர் பஹிரதல்லி = உலகத்தின் உள்ளே வெளியே. காந்தனொடகூடி = கணவனுடன். நெலெஸிர்ப்பெ = நிலைத்திருக்கிறாய். நீ = நீ. என்ன = என்னுடைய. அந்தரங்கதலி = மனதில். நெலெகொள்ளே = எப்போதும் நிலைத்திருப்பாயாக.

ஸ்ரீஹரிக்கு தேச காலங்களில் சமானமான வியாப்தி உள்ளவள் ரமாதேவி. குணங்களால் மட்டுமே குறைந்தவள். உலகில் குறுக்கும் நெடுக்குமாக இருந்து உலகத்தை தரித்திருப்பவர் முக்ய பிராணர். ஆனால், அனைத்து தேச காலங்களில் ரமா நாராயணர்

களுடன் இருக்கத் தக்கவரல்ல. முக்யபிராண மற்றும் ரமாதேவி இருவரும் ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரியின் விசேஷ அருளால், அவருடன் உலகத்தின் ஆதாரமாக இருக்கிறார்கள். இங்கு 70ம் பத்யத்தின் சிறப்பு விளக்கத்தை ஒரு முறை படித்துக் கொள்ளலாம்.

ஈஶகோடிப்ரவிஷ்டே ஈஶபி⁴ன்னளெ ஸர்வ
தோ³ஷவர்ஜிதளெ வரதே³ஶே । வரதே³ஶே பதியொட³னெ
வாஸவாகெ³ன்ன மனத³ல்லி ।।6-(112)

ஈஶபின்னளே = ஸ்ரீஹரியிடமிருந்து வேறுபட்டிருக்கும் நீ. ஈஶ கோடி பிரவிஷ்டே = (சேதன அசேதனங்கள் நிறைந்த உலகை ஆளும்) ஈசனுடன் நியாமகம் (ஆளும்) செய்யும் குழுவில் இருப்பவளே. ஸர்வதோஷவர்ஜிதளெ = எவ்வித தோஷங்களும் இல்லாதவளே. வரதேஷே = வரங்களை அளிக்கும் பிரம்மாதி களையும் ஆளும் லட்சுமியே. என்ன = என்னுடைய. மனதல்லி = மனதில். பதியொடனே = ஸ்ரீஹரியுடன். வாஸவாகு = (அருள் வதற்காக) வசித்திரு.

நித்யாதுக்கா ரமான்யே து ஸ்ப்ருஷ்டதுக்கா ஸமஸ்தஶ: ।(தத்வ சங்க்யான)

ரமாதேவி எப்போதும் துக்கத்தின் ஸ்பர்ஷமே இல்லாதவள். மற்ற அனைவரும் துக்க ஸ்பர்ஷம் உள்ளவர்களே. முக்தர்கள் கூட ஸாதனா நிலையில் இருக்கும்போது துக்கங்களை அனுபவிக் கிறார்கள். துக்கம் என்றால் பயம், அஞ்ஞானம் ஆகியவையும் சேர்ந்தது என்று சிந்திக்க வேண்டும்.

மனஸ்யைவ ஸ்வபக்தானாம் த்ருஷ்யோऽஸௌ ரமயா ஸஹ । (சத். ரத். மா)

ஸ்ரீஹரி தனது பக்தர்களுக்கு அவரவர்களின் மனதில் ரமா சமேத னாகியே தரிசனம் அளிக்கிறான். தரிசனம் தியானத்திற்கேற்பவே என்பதால், ரமா சமேதனான நாராயணனையே தியானம் செய்ய வேண்டும் என்பது புரிகிறது. ஆகவே, பதியுடன் மனதில் நிலைத்திரு என்று பிரார்த்தனை.

கோடி என்றால் வர்க்க. பிரம்மதேவரே முதலான அனைத்து சேதனர்களும் ஜீவகோடியில் இருக்கின்றனர். ரமாதேவியே ஸ்ரீஹரியால் ஆளப்பட்டு வந்தாலும், அவள் பிரம்மாதி அனைத்து ஜீவர்களின் நியாமகள் ஆகியிருக்கிறாள்.

விஸ்வஸ்திதி ப்ரளய சர்க்க மஹாவிபூதி வ்ருத்தி ப்ரகார நியமா வ்ருதி பந்தமோக்ஷா: |
யஸ்யா அபாங்கலவ மாத்ரத ஊர்ஜிதாஸா ஸ்ரீயத் கடாக்ஷ பலவத் அஜிதம் நமாமி ||

ஆஸ்ரித்ய விஷ்வமகிலம் விததாதி தாதா ஸ்ரீயத் கடாக்ஷ பலவத் அஜிதம் நமாமி ||

ஆகிய த்வாதச ஸ்தோத்திர பதங்கள், உலகத்தில் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதி என அனைத்தையும் தன்னுடைய லீலைகளால் நிர்வகிக்க க்கூடிய அசிந்திய சக்தி உள்ளவள் என்று, மகாலட்சுமியின் மகிமைகளை வர்ணிக்கிறார். ஆகையால், சந்தேகமின்றி, ஈசகோடிக்கு சேர்ந்தவளே ஆகிறாள் என்பதை அறிய வேண்டும்.

ஆனந்த³மய ஹரிகெ³ நானாப⁴ரணவாதெ³
பானீயவாதெ³ படவாதெ³ | படவாதெ³ பங்கஜ
பாணி நீனெமகெ³ த³யவாகெ³ ||7-(113)

ஆனந்தமய ஹரிகெ = பூர்ணானந்த ஸ்வரூபனான ஸ்ரீஹரிக்கு. நானாபரணவாதே = அனந்த ஆபரண ரூபமான ஆகியிருக்கிறாய் (கிரீட, குண்டலாதி பூஷணங்களின் ரூபங்களை தரித்து அவனை வணங்குகிறாய்). பானீயவாதே = பான ரூபளும் ஆகியிருக்கிறாய் (ஜலாத் பானங்களும் மற்றும் அனைத்து ஆகார ரூபங்களுமாக ஆகியிருக்கிறாய்). படவாதே = (பீதாம்பர முதலான) வஸ்திராதி ரூபங்களும் நீயே ஆகியிருக்கிறாய். பங்கஜபாணி = (பூஜைக்காக) எப்போதும் பத்மத்தைப் பிடித்திருக்கும் ஹே மகாலட்சுமியே! . நீனு = நீ. எமகெ = எனக்கு. தயவாகே = அருள்வாயாக.

பற்பல ஆபரணங்களால் ஸ்ரீஹரிக்கு எவ்வித சுகங்கள் இல்லை என்பது ‘ஆனந்தமய ஹரிகே’ என்பதிலிருந்து அறியவேண்டும்.

ஆனாலும், ஆபரண ரூபங்களாக சேவிக்கும் ரமாதேவிக்கு அதனால் சுகம் உண்டாகிறது.

யத்ர வாயூதபத்மாதி ரூபேண ப்ரக்ருதி: ஸ்திதா || (பாக. தாத்)
பிரளய காலத்தில், வாயு, தண்ணீர், படுக்கை போன்ற ரூபங்களால் ஸ்ரீலட்சுமிதேவியெ இருக்கிறாள்.

லக்ஷ்ம்யைவோதக ரூபேண ஷய்யா ரூபேண ஜாண்டஜ |
ஆஸீத் கர்போதகே சேத்தம் நான்யதாஸீத் கதஞ்சன ||
(பிரம்மகாண்ட)

பிரளய உதகத்தில் படுத்திருக்கும் ஸ்ரீஹரிக்கு, லட்சுமிதேவியே தண்ணீர், படுக்கையின் ரூபமாக இருக்கிறாள். அங்கு வேறு யாரும் இருக்கவில்லை. இப்படியான பிரமாண வாக்கியங்கள், பிரளய காலத்தில் லட்சுமியே வடபத்ராதி ரூபங்களால் இருக்கிறாள் என்று சொல்கிறது.

தஸ்ய நாபேரபூத்பத்மம் ஸௌவர்ணம் புவனாஸ்ரயம் |
தத்ப்ராக்ருதம் ச விக்ஞேயம் பூதேவீஹ்யபிமானினீ ||
(பிரம்ம காண்ட)

ஸ்ருஷ்டி காலம் வரும்போது பரமாத்மனின் நாபியிலிருந்து உலகங்களுக்கு ஆதரவான தங்கமயமான பத்மம் தோன்றியது. அந்த பத்மம் ப்ராக்ருதமானது. பூ-ரூபளான லட்சுமிதேவியே அதன் அபிமானியாவாள் -- என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியான ஆதாரங்களின் பேரில் நிச்சயமாகும் விஷயங்கள் என்னவெனில்:

ஸ்ரீஹரிக்கு கிரீடாதி ஆபரணங்கள் இரு விதங்கள். ஸ்வஸ்வரூபபூதமானவை (ஞானானந்தாத்மகமானவை) மற்றும் அதிலிருந்து வேறுபட்டவை. வைகுண்டாதி முக்த லோகங்களில் இருக்கும் ஸ்ரீஹரி, தன் ஸ்வரூபத்திலிருந்து வேறுபடாதிருக்கும் கிரீடாதிகளுடன், கிரீடாதி ஆபரணங்களின் ரூபங்களுடன் வணங்கி மகிழும் லட்சுமிதேவியின் ப்ரீத்யர்த்தமாக, அந்த லட்சும்யாத் மகமான ஆபரணங்களை தரித்திருக்கிறான்.

அன்யத்ர என்றால், பிரளய காலத்து மற்றும் ஸ்ருஷ்டி காலத்து நாபி பத்ம முதலான பொருட்களை லட்சுமிரூபள் என்று

நிரூபிக்கும் வாக்கியங்களுக்கு 'பூதேவீஹ்யபிமானினீ' எனும் வாக்கியங்களால், அவற்றிற்கு லட்சுமிதேவியே ஏக மாத்ர அபிமானினி என்றும், வேறு அபிமானிகள் யாரும் இல்லை என்றும் அறியவேண்டும்.

தண்ணீர், வாயு முதலானவற்றின் அபிமானிகள் யாரும் அப்போதும் செயல்களை செய்யத் தக்கவர்கள் அல்ல – அவர்கள் படைக்கப் படவும் இல்லை. 'விமலாக்ருதி: ப்ரக்ருதிரேவ மஹாமணி ஹேமமய்யகில வஸ்துமயீ' (மத்வவிஜய) என்று, மங்கள ஸ்வரூபளான லட்சுமிதேவியே தங்க, ரத்ன முதலான அனைத்து பொருட்களின் ரூபம் என்று, வைகுண்ட வர்ணனையில் சொல்லப் பட்டிருக்கிறது.

இதையே ஸ்ரீபுரந்தரதாஸர்:
சத்ரசாமர வியஜன பர்யங்க பாத்ரரூபளு தானே ஆகி
சித்ரசரிதனாத ஹரிய நித்ய சேவே மாடுதிஹளு
ஏனு தன்யளோ லகுமி எந்த மான்யளோ – என்றிருக்கிறார்.

கிரீடாத்யா அபி ஹரேர்த்விதா ஸந்தி ந சம்ஷய:
ஸ்வரூபாஹ்யஸ்வரூபாஷ்ச .... (பிரம்மகாண்ட)

என்னும் வாக்கியம், ஸ்வரூபாத்மகமும், அதிலிருந்து வேறுபட்டு மாக இருக்கும் இரு விதங்களான கிரீடாதிகளை ஸ்ரீஹரி தரித்திருக்கிறான் என்று சொல்கிறது. இப்படி, ஸ்ரீஹரி, ஸ்வரூபாத்மகளான ஆபரண, ஆயுதங்களுடன் லட்சும்யாத்மக ஆபரண, ஆயுதங்களை எப்போதும் தரித்திருக்கிறான். காமதேவ, அனிருத்தாதிகளால் அபிமன்யகளான சக்ர, சங்காதிகளை தரித்திருக்கிறான்.

இது சம்பந்தமான விசேஷ விவரங்களை குருமுகேன சாஸ்திரங்களிலிருந்து அறிய வேண்டும்.

மஹதா³தி³ தத்வக³ள த⁴ரிஸி நின்னுத³ரதொ³ளு
த்ருஹிணாண்ட³ படெ³தெ³ பதியிந்த³ | பதியிந்த³ ஸ்ரீலக்ஷ்மி
மஹாமஹிமளெ எமகெ³ த³யவாகெ³ ||8-(114)

பதியிந்த = உன் பதியான ஸ்ரீஹரியிடமிருந்து. மஹதாதி தத்வகள = மஹத் தத்வ முதலான தத்வங்களை. நின்னுதரதொளு = உன் கர்ப்பத்தில். தரிஸி = தரித்து (ஏந்தி). த்ருஹிணாண்ட = பிரம்மாண்டத்தை. படெதெ = பெற்றாய். மஹமஹியளே = அற்புத மகிமைகளைக் கொண்ட. ஸ்ரீலட்சுமி = ஹே மகாலட்சுமியே. எமகெ = எங்களுக்கு. தயவாகே = அருள்வாயாக

ஸ்ருஷ்டி காலம் துவங்கியபோது, அசிந்த்யாத்மக சக்தியுள்ள ஸ்ரீஹரி, மூல ஜட ப்ரக்ருதிக்கு அபிமானியான மகாலட்சுமிதேவி யிடம், ப்ரக்ருதியில் இருக்கும் சத்வ ரஜஸ் தமோ குணங்கள் நிலைகொண்டு, மஹதாதி தத்வங்களின் ரூபங்களாக மாற்றம் கொள்வதற்குத் தேவையான, தன் சக்தியை, நிறுவினான்.

புருஷேணாத்மபூதென வீர்யமாதத்த வீர்யவான் ததோ஽பவன் மஹத்தத்வம் -- என ஸ்ரீமத் பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இது சூக்ஷ்ம ஸ்ருஷ்டி என்று அழைக்கப்படுகிறது. இப்படியாக படைக்கப்பட்ட தத்வாபிமானி தேவதைகள், தம்மிடமிருந்து அபிமான்யகளாக இருக்கும் தத்வங்களிலிருந்து, பிரம்மாண்டத்தைப் படைப்பதற்கு சாமர்த்தியம் இல்லாதவர்களாக, மறுபடி ஸ்ரீஹரி யையே சரணாகதி அடைந்து பிரார்த்தனை செய்ய, லட்சுமியின் மூலமாக தன் சக்தியினால் பிரம்மாண்டத்தைப் படைத்து, தத்வங்கள் மற்றும் அபிமானி தேவதைகளை பிடித்துக் கொண்டு பிரவேசித்தான். லட்சுமி சமேதனாக விராட் (என்னும் பெயருள்ள) தேகத்தில் புருஷ ரூபத்தினால் நுழைந்து, அடுத்து, தேவதைகளுக்கு அவர்கள் வசிக்கத்தகுந்த இடங்களை நியமித்துக் கொடுத்தான். இந்த விஷயங்கள்:

இதி தாஸாம் ஸ்வஷக்தீனாம் அஸதீனாம் ஸமேத்யஸ: |
ப்ரஸுப்தலோக தந்த்ராணாம் நிஷம்ய கிரமீஷ்வர: ||
காலஸஞ்ஞாம் ததா தேவீம் பிப்ரச்சக்தி முருக்ரம: ||
த்ரயோவிம்ஷதி தத்வானாம் கணம் யுகபதாவிஷத் ||

ஆகிய பாகவத ஸ்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படியாக, பரமாத்மனுடன் ஜகத் ஸ்ருஷ்டியில் பங்கு பெற்று, அற்புத செயல்களை செய்யும் மகிமைகளை இந்த பத்யத்தில் சுருக்கமாக சொல்லியிருக்கிறார்.

ஆவ பி3ரம்மப4வாதி3 தே3வரெல்லரு தவ க்ரு
பாவலோகனதி3 க்ருதக்ருத்ய | க்ருதக்ருத்யராகி3ஹரு
தே3வி நா ப3யஸுவுது3 அரித3ல்ல ||9-(115)

ஆவ = எந்த (புகழ்பெற்ற). பிரம்மபவாதி தேவரெல்லரு = பிரம்ம ருத்ராதி தேவதைகள் அனைவரும். தவ = உன். க்ருபாவலோகனதி = க்ருபா கடாக்ஷத்தின் பலத்தினால். க்ருதக்ருத்யராகிஹரு = (ஸ்வகதியை அடைந்து) தன்யர் ஆகியிருக்கிறார்களோ. நா = நான். பயசுவுது = (மகிமைகள் நிறைந்த உன் கருணைக் கண் பார்வை யையே) நான் வேண்டுகிறேன். தேவி = ஹே ஸ்ரீதேவியே. அரிதல்ல = வியப்பு எதுவும் இல்லை

பிரம்மேரவீஷ சேஷேஷ ஷக்ரார்க்கேந்த்வாதி தேவதா: |
பூத்யைஷ்ச த்வர்த்தமானஸ்ச ஸர்வே வேதோதிதா அபி ||
பதானி ச ஸ்வகீயானி ஸ்ருஷ்டிஸ்தித்யாதி கர்த்ருதாம் |
ஞானபக்த்யாதிகான் தர்மான் முக்திம் ஞானந்தஸந்ததிம் ||
ப்ராப்னுவந்தி மஹாலக்ஷ்ம்யா அபாங்கலவ மாத்ரத: ||
(சத். ரத். மா)

பிரம்ம, ஈர (வாயுதேவர்), வீஷ (கருட), சேஷ, ஈஷ (ருத்ர), ஷக்ர (இந்திர), அர்க்க (சூர்ய), இந்து (சந்த்ர) – இவர்களே முதலான தேவதைகள் – இப்போது இருப்பவர்கள் மட்டுமல்ல, முன்பு இந்த பதவியில் இருந்து சென்றவர்கள் மற்றும் அடுத்து இந்த பதவிக்கு வரப்போகிறவர்கள், மற்றும் வேதங்களில் சொல்லப்பட்டுள்ள அனைத்து தேவதைகளும், தங்களின் பதவியை, ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலான கர்த்ருத்வ சக்தியை, அனந்தாம்சங்களால், அனந்த சரீரங்களில் அவற்றை ஆண்டவாறு நிற்கும் சாமர்த்தியத்தை, ப்ரக்ருதி முதலான தத்வங்களுக்கு அபிமானிகளாக இருக்கும் மகிமையையும், ஞான பக்தி முதலான குணங்களையும், முக்தியையும், முக்திகளில் ஆனந்தாதி அதிசயங்களையும், ஸ்ரீமகாலட்சுமியின் கடாக்ஷத்தினாலேயே பெற்றிருக்கின்றனர் என்று பல்வேறு ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

ப1க்ஷீந்த்3ர வாஹனன வக்ஷஸ்தளனிவாஸி
அக்ஷயஞானி ஸுக2பூர்ணெ | ஸுக2பூர்ணெ கமலத3ளாய
தா1க்ஷி நோடு3 த3யதி3ந்த3 ||10-(116)

பக்ஷீந்த்ரவாஹனன = கருட வாகனனான ஸ்ரீஹரியின். வக்ஷ ஸ்தள நிவாஸி = வக்ஷஸ்தளத்தில் எப்போதும் வசித்திருக்கும். அக்ஷயஞானி = நித்ய ஞான பூர்ணளான. சுகபூர்ணே = பூர்ணானந்த ஸ்வரூபளான. கமலதளாயதாக்ஷி = தாமரை இதழ்களைப் போல விசாலமான கண்களைக் கொண்ட ஹே தேவி. தயதிந்த = கருணையுடன். நோடு = என்னை பாரம்மா

ஆனந்தஸ்வரூபனான ஸ்ரீஹரியின் வக்ஷஸ்தளத்தில் எப்போதும் வசித்திருக்கும் ஸ்ரீமகாலட்சுமி, சுகபூர்ணள் என்று சொல்லவும் வேண்டுமோ? பாற்கடலை கடையும் நேரத்தில் அங்கிருந்து தோன்றி, அஜித நாமக ஸ்ரீஹரியை அடைந்து, பத்மமாலையை அவன் கழுத்தில் அர்ப்பித்து, அவன் அருகில் நிற்க, ஸ்ரீஹரி, ஜகத்ஜனனியான அவளை, அவளின் உண்மையான வசிப்பிடமான தன் வக்ஷஸ்தளத்தில் தரித்தான் என்று ஸ்ரீமத் பாகவதம், இந்த நுடியில் சொல்லப்பட்டுள்ள மகிமையையே விளக்கியிருக்கிறது.

ஹலவு மாதேகெ[1] ஸ்ரீலலனெ ஜகன்னாத[2]வி
ட்ட[2]லனிந்த[3] கூடி[3] மனத[3]ல்லி | மனத[3]ல்லி வாஸவா
க்[3]ஹலவு காலத[3]லி அவியோகி[3] ||11-(117)

ஹலவு மாதேகே = அதிக பேச்சுகள் ஏன்? (அதிகமான வேண்டு கோளினை ஏன் செய்யட்டும்?). அவியோகி = எப்போதும் பதியை விட்டுப் பிரியாமல் இருப்பவளான. ஸ்ரீலலனே = ஹே மகா லட்சுமியே. ஜகன்னாதவிட்டலனிந்த கூடி = உலக நாயகனான (உன் தலைவனான) விட்டலனுடன். ஹலவு காலதி = எப்போதும். மனதல்லி = என் மனதில். வாஸவாகு = நிலைத்திரு

நாராயணோ நாம ஹரி: ஸ்வதந்த்ர: ஸ்ரீயம்
வினா நாஸ்தி கதாபி காலே |
ஹரிம் வினா ஸ்ரீரபி தேஷகாலே நாஸ்தீதி
மோக்ஷாச்சுபிர் வேதிதவ்யம் || (பிரம்மகாண்ட)

ஆகிய ஆதாரங்கள், ஸ்ரீதேவி, தேச காலங்களால் சமான வியாப்தியுள்ள ஸ்ரீ நாராயணனின் நித்ய அவியோகினியான மனைவி என்று சொல்கின்றன.

14. ஸ்ரீ ருக்மிணி விலாஸ

**ப^{4}ணிராஜஶயன ருக்மிணிதே^{3}வியொடகூ^{3}டி^{3}
மணிமஞ்சத^3 மேலே குளிதிர்து^{3} | குளிதிர்து^{3} ஸதியொட^{3}னெ
அணக^{1}வாடி^{3}த^{3}னு இனிதெந்து^{3} ||1-(118)**

பணிராஜஷயன = (சேஷசாயியான பத்மனாபனிடமிருந்து வேறுபடாத – இருவரும் ஒன்றே) ஸ்ரீகிருஷ்ணன்; ருக்மிணிதேவியொடகூடி = ருக்மிணிதேவியுடன் சேர்ந்து; மணி மஞ்சத மேலே = ரத்னமயமான மஞ்சத்தின் மேல்; குளிதிர்த்து = அமர்ந்து; ஸதியொடனே = தன் மனைவியான ருக்மிணியுடன்; இனிதெந்து = இப்படியாக (அடுத்த பத்யங்களில் விவரிக்கப்படும்); அணக வாடிதனு = ஒரு நாடகம் ஆடினான் (நகைச்சுவையான பேச்சினைப் பேசினான்).

ஏதே ஸ்வாம்ஷகலா: பும்ஸ: கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம் – (பாகவத) என்பதில், மத்ஸ்ய, கூர்மாதி அவதாரங்கள் பத்மனாப ரூபத்தினாலேயே வெளிவந்த ரூபங்கள் ஆனாலும், ஸ்ரீகிருஷ்ணன், சாட்சாத் பத்மனாபனே என்று சொல்லப்பட்டிருக்கிறது. அனைத்து ரூபங்களிலும் பரஸ்பரம் குணாதிகளில் எவ்வித பேதங்களும் இல்லை. 'நேஹ நானாஸ்தி கிஞ்சன' என்று ஸ்ருதியானது அபேதத்தையே விளக்குகிறது. ஸ்ரீகிருஷ்ணரூபமானது விசேஷ பலத்தினால் வேறு நாம ரூபங்களால் சொல்லப்படும் ரூபங்களைப் போன்றது இல்லை. ஆனால், அது பத்மனாபனே என்னும் சிறப்பு இருப்பதாக அறியவேண்டும்.

நித்யவியோகினியான மகாலட்சுமிதேவியின் ஸ்வரூபளே ஆன ருக்மிணிதேவியுடன் சரசமாடியவாறு, அவளைவிட பற்பல குணங்களால் சிறந்தவனான தான், அவளில் பக்தியை உண்டு பண்ணி, அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தவாறு லௌகிக கணவன் மனைவியரைப் போல அன்பு, ஊடல் ஆகியவற்றை எப்படி செய்தான் என்பதை வெளிப்படுத்துமாறு ஸ்ரீகிருஷ்ணன் நாடகம் ஆடத் துவங்குகிறான்.

ஹேற ராஜகன்னிகெ[1] | பூ[4]ரமண நானல்ல
வாரிதி[4]யொளகி[3]த்து[3] ப[3]து[3]குவ | ப[3]து[3]குவகெ[3] மருளாதெ[3]
நாரத[3]ன நுடி[3]கெ[3] நளினாக்ஷி ||2-(119)

ஹேற ராஜகன்னிகே = ஹேற ராஜகுமாரியே. பூரமண நானல்ல = நான் அரசன் அல்ல. வாரிதியொளகித்து = கடல் நடுவில் இருந்துகொண்டு. பதுகுவ = வாழும் எனக்கு. நாரதன நுடிகெ = நாரதனின் பேச்சுகளைக் கேட்டு. நளினாக்ஷி = ஹேற பத்மாக்ஷி, ருக்மிணியே. மருளாதே = ஏமாந்து போனாய் (மயங்கினாய்)

ஶிஶுபால மொத[3]லாத[3] வஸுதெ[4]பா[1]லர பி[3]ட்டு
பஶுபாலகொ[3]லிதெ[3] ஸுகுமாரி | ஸுகுமாரி எனலு பர
வஶளாத[3]ளாக[3] மஹறலக்ஷ்மி ||3-(120)

ஶிஶுபால மொதலாத = சிசுபாலன் முதலான. வஸுதெபாலர = அரசர்களை. பிட்டு = (அவர்கள் உன்னையே நினைத்தாலும்) அவர்களை புறக்கணித்து. ஸுகுமாரி = ஹேற கோமலாங்கி. பஷுபாலகெ = கோபாலகனை. ஒலிதெ = விரும்பி வந்தாய். எனலு = (ஸ்ரீகிருஷ்ணன்) இப்படியாக சொல்ல. ஆக = அந்த கணத்தில். மஹறலக்ஷ்மி = ஸ்ரீமகாலட்சுமிரூபளான ருக்மிணி. பரவஷளாதளு = (சோக பயங்களைக் கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல்) திகைத்தாள்.

ருக்மிணி பீஷ்மகராஜனின் மகள். பீஷ்மகன் தன் மகனான ருக்மியின் கட்டாயத்தின் பேரில், ருக்மிணியை சிசுபாலனுக்கு திருமணம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, திருமண நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தான். அதற்கு முன்னதாக ஒரு ஸ்வயம்வர நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தபோது, ஸ்ரீகிருஷ்ணன் பரபிரம்மன் என்றும், ருக்மிணி லட்சுமியின் அவதாரி என்றும், ஸ்ரீகிருஷ்ணனைத் தவிர வேறு யாரையும் அவள் திருமணம் செய்ய முடியாது என்பதையும் அறிந்தான்.

நாரதாதிகளிடமிருந்து, ருக்மிணி, ஸ்ரீகிருஷ்ணனின் அழகினையும், வீரம் முதலான மகிமைகளையும் கேட்டு, வேறு யாரையும் மணம் புரிந்துகொள்வதில்லை என்று (சாதாரண கன்யையைப் போல நாடகமாடியவாறு) நிச்சயித்து, ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு கடிதத்தை

எழுதி அனுப்பி, சிசுபாலனுடன் திருமணம் நடக்கும் முன்னரே வந்து தன்னை அழைத்துக் கொண்டு போகுமாறு வேண்டிக் கொண்டாள்.

திருமண நாளன்று, ருக்மிணி கௌரி பூஜையை முடித்து, திருமண மண்டபத்தை நோக்கிப் போகும்போது, ஸ்ரீகிருஷ்ணன் அவளை தூக்கி தன் ரதத்தில் அமர்த்தி, அழைத்து வந்து துவாரகையில் விதிப்படி திருமணம் செய்து கொண்டான்.

ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

பய:பேனனிபே ஷுப்ரே பர்யங்கே கஷிபொத்தமே |
உபதஸ்தே ஸுகாசீனம் ஜகதாமீஷ்வரம் பதிம் ||
வாலவ்யஜன மாதாய ரத்னதண்டம் ஸகீகராத் |
தேன வீஜயதே தேவி உபாஸாம் சக்ர ஈஷ்வரம் ||
ராஜப்யோ பிப்யத: ஸுப்ர ஸமுத்ரம் ஷரணம் கதான் |
பலவத்பி: க்ருதத்வேஷான் ப்ராயஸ்த்யக்த ந்ருபாஸனான் ||
நிஷ்கிஞ்சனா மயம் ஷஷ்வத் நிஷ்கிஞ்சன ஜனப்ரியா: ||
வைதர்ப்யே ததவிக்ஞாய த்வயாऽதீர்க்க ஸமீக்ஷயா ||
வ்ருதா வயம் குணைர்ஹீனா: பிக்ஷுபி:ஷ்லாகிதா முதா ||

இதன் அர்த்தம்: மிகவும் ஆடம்பரமான அந்தப்புரத்தில், ரத்னமயமான மஞ்சத்தின் மேல் சயனத்திருக்கும் தன் பதிதேவனை ருக்மிணி தன் தோழியிடமிருந்து வாங்கிய சாமரத்தால் காற்று வீசியவாறு, சேவை செய்து கொண்டிருந்தாள். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் ‘அரச போகங்களால் திளைத்திருக்கும் பராக்ரமிகளான சிசுபாலாதிகளை விட்டு, அத்தகைய அரசர்களைப் போல இல்லாமல் கடலில் நடுவே வசிக்கும் (கடல் நடுவே இருக்கும் துவாரகையில் இருக்கும்), சிம்மாசனம் இல்லாதவனும், தரித்திரனும், தரித்திரர்களுக்கு ப்ரியனும், குணங்கள் இல்லாதவனுமான என்னை, நாரதாதி விரக்தர்களின் பேச்சைக் கேட்டு மயங்கி திருமணம் செய்து கொண்டாயே’ என்றான்.

ஈ மாத கேளி கை சாமரவ நீடா^{3}டி^{3}
பூ^{4}மிகொ^{3}ரகி^{3}த^{3}ளு பு^{4}கிலெந்து^{3} | பு^{4}கிலெந்து^{3} மலகி^{3}தா^{3}
காமினிய கண்ட^3 கமலாக்ஷ ||4-(121)

ஈ மாத கேளி = ஶ்ரீகிருஷ்ணனின் இந்தப் பேச்சினைக் கேட்டு. கை சாமரவனு = தன் கையில் இருந்த சாமரத்தை. ஈடாடி = (கை நடுக்கம் ஏற்பட்டதைப் போல) விட்டு. புகிலெந்து = (பய துக்கங்களால் நடுங்கி) 'தப்'பென்று. பூமிகெ = பூமியில். ஒரகிதளு = விழுந்தாள். மலகித காமினிய = அப்படி பூமியில் விழுந்த தன் மனைவியை. கமலாக்ஷ = தாமரைக் கண்ணனான ஶ்ரீகிருஷ்ணன். கண்ட = அன்புடன் பார்த்தான்.

கங்கெ³ட்டளெந்து³ தன்னங்க³னெய பி³கித³ப்பி
முங்கு³ருள தித்தி³ முத்தி³ஸி | முத்தி³ஸி மாதாட்த³
கங்க³ளஸ்ருக³ள ஒரெஸூத்த ||5-(122)

கங்கெட்டளெந்து = என்ன செய்வதென்று அறியாதவள் இவள் என்று. தன்னங்கனெய = தன் மனைவியை. பிகிதப்பி = கட்டி யணைத்து. முங்குருள = நெற்றியில் விழுந்த கூந்தலை. தித்தி = சரிப்படுத்தி . முத்திஸி = முத்தம் கொடுத்து. கங்களஸ்ருகள = கண்ணீரை. ஒரஸூத்த = துடைத்தவாறு. மாதாட்த = இவ்வாறு பேசினான்

இதி த்ரிலோகேஷ பதேஸ்ததாத்மன:
ப்ரியஸ்ய தேவ்யஸ்ருத பூர்வமப்ரியம்
ஆஸ்ருத்ய பீத்யா ஹ்ருதி ஜாதவேபது: |
சிந்தாம் துரந்தாம் ருததீம் ஜகாம ஹ || (பாகவத)

இதுவரை இப்படியொரு பேச்சினை தன் கணவனின் வாயிலிருந்து கேட்டிராத ருக்மிணி, நடுநடுங்கியவாறு, மிகுந்த கவலைப்பட்டவாறு, அழத் துவங்கினாள். அடுத்து என்ன ஆனது என்று பாகவதம் இவ்வாறு சொல்கிறது.

தஸ்யா: ஸுது:க்க பயஷோக வினஷ்டபுத்தே: |
ஹஸ்தாத் ஷ்லதத்வலயதோ வ்யஜனம் பபாத ||
தேஹஸ்ச விக்யவதிய: ஸஹஸைவ பிப்ருத்
ரம்பேன வாயுவிஹதா ப்ரவிகீர்ய கேஷான் |
தத்ருஷ்ட்வ பகவான் க்ருஷ்ணப்ரியாயா: ப்ரேம பந்தனம் |
ஹாஸ்ய ப்ரௌடி மாஜானந்த்யா: கருண: ஸோsன்வ ஷுசா
ஆஷ்லிஷ்ய பாஹுன ராஜன் அனன்யவிஷயாம் ஸதீம் ||

பயந்து போன ருக்மிணியின் கையிலிருந்த விசிறி கீழே விழுந்தது. தேகம் நடுங்கியது. காற்றில் விழுந்த வாழைமரத்தைப் போல விழுந்தாள். கூந்தல் கலைந்தன. ஸ்ரீகிருஷ்ணன், தன் அன்பிற்கினியவளின் காதலை, தன் நகைச்சுவைப் பேச்சினை அறியாமல் துக்கப்படுவதை, தன்னைத் தவிர வேறு யாரையும் மனதில் வரிக்காத அவளை தன் கைகளால் தூக்கி எழுப்பினான்.

இந்த ஸ்லோகத்தின் பாவார்த்தங்களையே ஸ்ரீதாஸர்யார் 121-122ம் பத்யங்களில் விளக்கியிருக்கிறார். ‘புகிலெந்து – சாமரவனீடாடி’ என்பதற்கு கோபம் கொண்டு வீசினாள் என்று அறியக்கூடாது. எந்த நிலையிலும் ருக்மிணி பதி சேவையை புறக்கணிப்பதில்லை. மகாலட்சுமி தேவிக்கு பய, சோகங்கள் இல்லை. – ஸ்ரீஹரி அவளிடம் என்றும் வெறுப்பினைக் காட்டுபவனல்ல.

லௌகிக தம்பதிகளைப் போல நாடகம் ஆடினர் என்று மட்டும் அறியவேண்டும். இதுவும் லௌகிகர்களை திருத்துவதற்காகவே என்பதை கவனிக்க வேண்டும். பதிபக்தியை எப்படி செலுத்த வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். துக்கப்படும் சதியை, பதி சரியான நேரத்தில் உதவி செய்ய வேண்டும். ஊடல் என்பது ஒரு நாடகம். அது சண்டை அல்ல. அங்கு கோப தாபங்களின் சாயலே இருக்கக்கூடாது என்ற நீதிகள் இதிலிருந்து தெரிய வருகிறது.

ஸலிகெ^{3} மாதுக^{3}ள ப^{3}கெ^{3} திளியத^{3}லெ ஹேகெ^{3} சஞ்
சலவனைது^{3}வரெ சப^{1}லாக்ஷி | சப^{1}லாக்ஷி ஏளெந்து^{3}
லலனெயள நகி^{3}ஸி நகு^{3}திர்த்த^3 ||6-(123)

ஸலிகெ மாதுகள பகெ = நகைச்சுவையாக பேசின என் பேச்சின் (உண்மையான அர்த்தத்தை). திளியதலே = அறியாமல். சபலாக்ஷி = ஹே சஞ்சலமான கண்களைக் கொண்ட ருக்மிணியே. ஹீகெ = இப்படியாக. சஞ்சலவனு = மனோவ்ருத்திகளை (வருத்தங்களை). ஐதுவரெ = அடைவார்களா? (அடையக் கூடாது). ஏளெந்து = எழுந்து கொள் என்று அவளை எழுப்பி. லலனெயள = தன் அன்பிற்கினிய மனைவியை. நகிஸி = சிரிக்கச் செய்து. நகுதிர்த்த = தானும் சிரித்தான்.

ஸ்ரீதே3வி நின்னொளு வினோத3வனெ மாட3லு வி
ஷாத3பட3ல்யாகெ அனுதி3ன | அனுதி3னதி3 ஸ்மரிஸுவர
காமகொண்டி3ஹெனெ ப3ளியல்லி ||7-(124)

ஸ்ரீதேவி = ஹே லட்சுமிதேவியே. நின்னொளு = உன்னுடன். வினோதவனே மாடலு = கேலி பேசியதற்காக. விஷாத = இப்படியாக பய சோகங்களை. படல்யாகே = அடைய வேண்டுமா?. அனுதினதி = தினந்தோறும். ஸ்மரிஸுவர = என்னை நினைப்பவர்களை. பளியல்லி = அவரின் அருகில் இருந்து. காதுகொண்டி ஹேனே = (அவர்களுக்கு பய, சோகாதிகள் வராதவாறு) காக்கிறேன். உன்னைப் போல எப்போதும் என்னையே நினைப்பவர்கள் வேறு யாரும் இல்லை. அப்படியிருக்கையில், உனக்கு பய, சோகங்களைக் கொடுப்பதற்கு நான் நினைப்பேனா? - என்றும் இல்லை.

ஸாந்த்வயாமாஸ ஸாந்த்வக்ஞ: க்ருபயா க்ருபணாம் ப்ரபு: |
ஹாஸ்யப்ரௌடி ப்ரமச்சித்தாம் அதத்ர்ஹாம் ஸதாம் கதி: ||
ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய அழகான கரங்களால், பயந்து நடுங்கிய ருக்மிணியை சமாதானம் செய்து, தன் பக்தர்களின் நித்ய ரட்சகன் அவனே என்று நிரூபித்தான். (பாகவத)

ஹிக்கி3த3ளு மனதி3 ஸௌபா4க்ய பா4மினியு அப
வர்க்க3த3 நுடி3கெ3 ஹருஷதி3 | ஹருஷதி3ந்த3லி பாத3
யுக்3மகெரகி3த3ளு இனிதெந்து3 ||8-(125)

ஸௌபாக்ய பாமினியு = மங்களதேவதையான ருக்மிணி (செல்வத்தின் அபிமானி). மனதி = தன் மனதில். ஹிக்கிதளு = மகிழ்ந்தாள். அபவர்க்கத நுடிகெ = (ஸ்ரீகிருஷ்ணனின்) மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய சொற்களுக்கு. ஹருஷதி = மகிழ்ச்சியுடன். இனிதெந்து = இப்படியாக (அடுத்து வரப்போகும் பத்யங்களின்படி) சொல்லி. பாதயுக்மகெ = (ஸ்ரீகிருஷ்ணனின்) பாத கமலங்களுக்கு. எரகிதளு = விழுந்து வணங்கினாள்

ஜகதே3கமாதெ கைமுகி3து3 லஜ்ஜெயலாக3
முகு3ளுநகெ3 ஸூஸி மாதாடி3 | மாதாடி3த3ளு ப1திய
மொக3வ நோடு3தலி நளினாக்ஷி ||9-(126)

ஜகதேகமாதே = உலக நாயகியான. நளினாக்ஷி = தாமரைப் போன்ற கண்களைக் கொண்ட ருக்மிணி. ஆக = (ஸ்ரீகிருஷ்ணனின் நுடிகளால்) மகிழ்ச்சி அடைந்தபோது. லஜ்ஜெயலி = (பய பக்தியுடன் கூடிய) வெட்கத்தினால். முகுளுனகெ ஸூஸி = புன்னகையை வீசியவாறு. பதிய = கணவனின். மொகவ = முகத்தினை. நோடுதலி = பார்த்தவாறு. மாதாடிதளு = பேசினாள்

ஸைவம் பகவதா ராஜன் வைதர்ப்பீ பரிஸாம்த்விதா |
பபாஷ ருஷபம் பும்ஸாம் வீக்ஷந்தி பகவன்முகம் ||

என்று பாகவதத்தில் வர்ணித்ததைப் போல, நகைச்சுவைக்காக அப்படி சொன்னேன் என்ற ஸ்ரீகிருஷ்ணனின் பேச்சில் நிம்மதி அடைந்து, பதியுடன் சகஜமாக பேசினாள் என்பதை 'ஸவ்ரீடஹாஸ ருசிர ஸ்னிக்தாபாங்கேன பாரத' என்னும் பாகவத வாக்கியத்தின் சாரத்தையே தாஸார்யர் முந்தைய இரு பத்யங்களில் சொல்லி யிருக்கிறார். புருஷர்களில் சிறந்தவனான ஸ்ரீகிருஷ்ணனிடம் தனக்கு இருக்கும் பக்தி மற்றும் காதலை வெளிப்படுத்துமாறு, ருக்மிணி அவனிடம் பேசத் துவங்கினாள்.

பரிபூர்ணகாம நீ கருணதி³ந்தீ³க³ ஸ்வீ
கரிஸிதெ³யோ என்ன ஸதியெந்து³ | ஸதியெந்து³ காருணா
க்ஷரளெனிஸி கொண்டெ³ ஶ்ருதியிந்த³ ||10-(127)

பரிபூர்ணகாம = பர்யாப்த காமனாத (ஆனந்தபூர்ணனான) ஹே தேவா. நீ = நீ. கருணதிந்த = கருணையுடன். ஈக = இப்போது. என்ன = என்னை. ஸதியெந்து = உன் மனைவி என்று. ஸ்வீகரிஸிதெயோ = ஏற்றுக் கொண்டிருக்கிறாய் (ஒப்புக் கொண்டாய்). ஸதியெந்த காரண = (நீ என்னை) மனைவியென்று ஏற்றுக் கொண்டிருப்ப தாலேயே. ஸ்ருதியிந்த = வேதத்தினால். அக்ஷரளு = 'அக்ஷர' என்று (நித்யமுக்தள் என்று). எனிஸிகொண்டெ = அழைக்கப்படுகிறேன் (ஸ்ருதியில் புகழப்படுகிறேன்)

'ஹரே:ப்ரஸாத ஸாமர்த்யாதக்ஷரா சாஜராஹ்யஹம்' -- ஆகிய ஆதாரங்களால், ஸ்ரீஹரி, லட்சுமிதேவியை நித்ய மனைவியாக ஏற்றுக்கொண்டு, அவளின் மேல் எப்போதும் முழுமையாக

அன்புடன் இருக்கிறான். இதனாலேயே, ஸ்ரீதேவி 'அக்ஷரள், அஜரள்' என்று அழைக்கப்படுகிறாள்.

'ஈக ஸதியெந்து ஒப்பிகொண்டெ' என்பதற்கு இப்போது, அவதார ரூபளான ருக்மிணியில், அக்ஷர என்று அழைக்கப்படுவதன் தன்மை வெளிப்பட்டது என்று அறிய வேண்டும்.

பு^{4}வனாதி^{4}பதி நீனு அவியோகி^{3} நினகா^{3}னு
அவிவேகி^{1} ந்ருபர பதியெந்து^{3} | பதியெந்து^{3} ப^{3}கெ^{3}வெனே
ஸவிமாதித^{3}ல்ல ஸர்வக்^{3}ஞ ||11-(128)

நீனு = நீ. புவனாதிபதி = உலகநாயகன். நினகெ = உனக்கு. ஆனு = நான். அவியோகி = நித்ய பத்னி. அவிவேகிந்ருபர = மூர்க்க அரசர்களை. பதியெந்து = (எனக்கு) கணவர் என்று (எப்போதாவது). பகெவெனே = நினைப்பேனா? (மனதில் அப்படிப்பட்ட சிந்தனை யாவது வந்ததா? எப்போதும் இல்லை). ஸர்வக்ஞ = நீ சர்வக்ஞன் ஆனதால், என் மன ஓட்டங்களை அறிவாய். ஸவிமாதிதல்ல = இது (சிசுபாலர்களை விட்டு என்னை ஏன் திருமணம் புரிந்தாய் என்று நீ கேட்டது) எனக்குப் பிடிக்கவில்லை.

சிசுபாலாதி ராஜர்களை விட்டு என்னை திருமணம் புரிந்து கொண்டாய் என்ற ஸ்ரீகிருஷ்ணனின் பேச்சிற்கு ருக்மிணியின் பதில் இவ்வாறு:

கஸ்யா:ஸ்யுரச்யுத ந்ருபா பவதோஷதிஷ்டா: |
ஸ்த்ரீணாம் க்ருஹேஷு ககோஷ்வ பிடால ப்ருத்யா: ||
ஜீவச்சவம் பஜதி காமமதிர் விமூடா யா தே
பதாப்ஜமகரந்த மஜப்ரதீ ஸ்த்ரீ || (பாகவத)

இது ருக்மிணியின் பதில். அரசு, செல்வம் ஆகியவற்றைக் கொண்டவர்கள் என்று உன்னால் சொல்லப்பட்டவர்கள், காமத்திற்கு உட்பட்டு, பெண்களின் அந்தப்புரத்தில், பசு, குதிரை, பூனைகளைப் போல அவர்களின் தாஸராக இருக்கிறார்கள். இத்தகைய பேடி களான அரசர்களை அடைவதற்கு, உன் பாத பத்மங்கள் என்னும் மகரந்தத்தை என்றைக்கும் நுகராத மூர்க்களான பெண் மட்டுமே, காமத்தில் உந்தப்பட்டு விரும்பமுடியும். உத்தம ஸ்த்ரீயர்கள்

தம்மை ஆள்வதற்கு, நற்குணங்களைக் கொண்ட உத்தமரான புருஷர்களை மட்டுமே பதியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, தம் பேச்சை சிரமேற்கொண்டு வாழும் பேடிகளை அல்ல.

ப⁴கவந்த நீனு து³ர்ப⁴க³ தே³ஹக³தரவரு
த்ரிகு³ணவர்ஜிதவு தவ ரூப | தவ ரூப கு³ணக³ளனு
பொக³ளலென்னளவெ பரமாத்ம ||12-(129)

நீனு = ஹே வல்லபனே, நீ. பகவந்த = நற்குணங்கள் நிரம்பியவன். அவரு = மற்ற அரசர்கள் அனைவரும். துர்பகதேஹகதரு = துக்கங்களுக்கு ஈடுபடும் அழியக்கூடிய தேகத்தைக் கொண்டவர்கள் தவ ரூப = உன் ஸ்வரூபமானது . த்ரிகுணவர்ஜித = ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் ஸ்பர்சம் இல்லாதவன் (ஞானானந்த ரூபன்). தவ = உன். ரூபகுணகளனு = ரூபங்களை, குணங்களை. பொகளலு = துதிப்பதற்கு (வர்ணிப்பதற்கு). பரமாத்ம = ஹே புருஷோத்தமனே. என்னளவெ = எனக்கு சாமர்த்தியம் இருக்கிறதா? (இல்லை என்று பொருள்)

பரமாத்மன் அனந்தரூப குணங்களைக் கொண்டவன். ஒவ்வொரு ரூபமும் ஞானானந்தாதி அனந்தகுண பூர்ணமானவை. ஒவ்வொரு குணமும் அனந்தமானவை மற்றும் அனந்தகுணாத்மகவும் ஆனவை.

ஸ்ரீமகாலட்சுமியும் பரமாத்மனின் குணங்களை பூர்ணமாக அறியாதவள். ஏதாவது ஒரு குணத்தின் எல்லையை (அதாவது, முழுமையாக) அறியாதவள்.

ந ரமாபி பதாங்குலீலஸன்னக தூராஜதனந்த ஸத்குணான் |
கணயேத்கணயந்த்யனாரதம் பரமான் கோஸ்யபரோ குணான் வதேத் || (மத்வவிஜயம்)

பரமாத்மனின் நகக்கண்களில் முனையில் இருக்கும் அனந்த சத்குணங்களை, ரமாதேவி, நிரந்தரமாக அறிய முற்பட்டாலும், அவளால் அது முடியாது. இப்படியிருக்கையில், வேறு யாரால் பரமாத்மனின் சத்குணங்களை சொல்வதற்கு சாமர்த்தியம் இருக்கிறது?

முக்தபிரம்மாதி தேவேஷ்வப்ய முக்தேஷு ஜடேஷு ச |
ரமாயாம் ச ஸ்திதா: ஸர்வே ஸத்குணாஸ்தத பேக்ஷயா ||
அனந்தானந்தகுணிதா: தேப்யோsத்யந்த விலக்ஷணா: ||
அத்யாஷ்சர்யா ரமாதேஸ்து மனோவாசாமகோசரா: || (சத் ரத் மா)

முக்த, அமுக்த அனைத்து பிரம்மாதி தேவதைகளிலும் (இவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானது), அனைத்து அசேதன பொருட்களிலும், ரமாதேவியிலும் இருக்கும் அனைத்து சத்குணங் களையும், அனந்தமுறையாக எண்ணினாலும், அதனைவிட அதிகமாக மற்றும் அற்புதமான குணபூர்ணன், ஸ்ரீஹரி. ரமாதிகளின் மனதிற்கும் தெரியாதவனான, சொற்களால் சொல்லி வர்ணிக்க சாத்தியமே இல்லாத மகாமகிமன்.

பா[4]னு தன்னய கிரணபாணிக[3]ள தெ[3]ஸெயிந்த[3]
பானீபஜக[3]ள அரளிஸி | அரளிஸித[3] க[3]ந்த[4]வனா
க்[4]ராணிஸித[3]ந்தெ க்[3]ரஹிஸிதி[3] ||13-(130)

பானு = சூரியன். தன்னய = தன் . கிரணபாணிகள தெஷெயிந்த = கிரணங்கள் என்னும் கைகளால். பானீபஜகள = தாமரைகளை. அரளிஸி = மலரச் செய்து. கந்தவனு = (அவற்றின்) நறுமணத்தை. ஆக்ராணிஸிதந்தெ = வாசனையை அனுபவிப்பதைப் போல. க்ரஹிசிதி = (ஹே கிருஷ்ணனே, என்னை, குணங்களில் சிறந்தவளாக ஆக்கி) ஏற்றுக் கொண்டாய்.

தாமரை மலர்ந்து சுகந்தத்தை பரப்புவது என்பது, ஆயிரம் கிரணங்களைக் கொண்ட சூரியனின் அதீனத்தில் இருப்பதைப் போல, அனைத்து சேதனர்களின், அசேதனர்களின், மற்றும் ரமாதேவியின் குண க்ரியாதிகள் ஸ்ரீஹரியின் அதீனத்தில் இருக்கின்றன. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதிகளை செய்வதற்கு சாமர்த்தியளான மகாலட்சுமியின் குண, க்ரியைகளும் ஸ்ரீஹரியின் அதீனமே ஆகியிருக்கின்றன. ஸ்ரீஹரி, தன் விருப்பப்படி, அவற்றை வெளிப்படுத்துமாறு செய்து, தன் ஸ்ருஷ்ட்யாதி காரியங்களில், அவர்களிடமிருந்து சேவையைப் பெற்று, அவளை தன் மனைவி என்று ஏற்றுக்கொண்டு , மகிழ்விக்கிறான்.

யதோsவரணாம் ஸர்வேஷாம் குணா: ஸர்வா க்ரியா அபி |

நியமேனைவ பூர்வேஷாம் சுப்ரஸாத நிபந்தனா: ||
மோக்ஷோ ஞானம் ச க்ரமஷ: முக்திகோ போக ஏவ ச |
உத்தரேஷாம் ப்ரஸாதேன நீசானாம் நான்யதா பவேத் ||(பாக.தாத்)

குண க்ரியைகள் மட்டுமல்லாமல், முக்தி, ஞான, போக விசேஷங்கள் ஆகியவையும் ஸோத்தமர்களின் பிரசாதத்திற்கு கட்டுப்பட்டவை என்றும், இந்த நியமம் என்றும், எங்கும், மாறுவதில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பை^{3}த^{3}வன குத்திகெ^{3}ய கொய்து^{3} அந்த^{4}ந்தமஸி
கொ^{3}ய்து^{3} ஹாகிதெ^{3}யோ பரிபந்தி^{2} | பரிபந்தி^{2} ந்ருபரன்ன
ஐது^{3}வெனெ நின்ன ஹொரதாகி^{3} ||14-(131)

பைதவன = திட்டிய சிசுபாலனின். குத்திகெய = கழுத்தை. கொய்த = சக்கரத்தினால் கத்தரித்து . அந்தந்தமஸிகெ = அந்தந்தமஸ் என்னும் மகா நரகத்திற்கு. ஒய்து ஹாகிதெயோ = அனுப்பினாய். நின்ன ஹொரதாகி = உன்னைத் தவிர. இன்னு = இன்னும் வேறு. பரிபந்தி ந்ருபரன்னு = (உன்னை) பற்பல விதமாக எதிர்க்கும் அரசர்களை. ஐதுவெனே = அடைவேனா? (என்றும் இல்லை)

ஹரித்வேஷிகளுக்கு சுகத்தைக் கொடுக்கக்கூடிய செல்வங்கள் என்றும் கிடைப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. சிசுபாலனிடம் ஜீவ த்வயர்கள் இருந்தனர். அதில் அசுரனை தமஸ்ஸிற்கு அனுப்பி, தன் த்வாரபாலகனான ஜயனுக்கு சத்கதியை அளித்தான்.

ஸர்வதா பக்திதோ முக்தி: த்வேஷாத்தம உதீரதம் |
ஜீவத்வய ஸமாயோகாத் கதித்வய ஜிகீஷவ: |
ஷிஷுபாலாதிஷு த்விஜா: ஜீவா: ... (பாக. தாத்)
ஆகிய வாக்கியங்கள் மேற்சொன்ன விஷயங்களுக்கு ஆதாரமாகும்.

மகாதைத்யர்கள் தமஸ்ஸினை அடைகிறார்கள். மறுபடி பிறந்து, தத்தம் ஸாதனைகளில் ஈடுபடுகிறார்கள்.

நிம்மானுக்^{3}ரஹதி^{3}ந்த^3 பிரம்ம ருத்^{3}ராதி^{3}க^{3}ள
நிர்மிஸி ஸலஹி ஸம்ஹார | ஸம்ஹார மாடு^{3}வெனு
து^{3}ர்மதா^{3}ந்த^{4}ரனு ப^{3}கெ^{3}வேனெ ||15-(132)

நிம்மனுக்ரஹதிந்த = ஹே பதிதேவனே, உங்கள் அருளாலேயே. பிரம்மருத்ராதிகள = பிரம்ம ருத்ராதி தேவதைகளை. நிர்மிஸி = ஸ்ருஷ்டித்து. ஸலஹி = அருளி. ஸம்ஹார மாடுவேனு = சம்ஹரிக்கிறேன். துர்மதாந்தரனு = (இப்படியிருக்கையில்) துர் அஹங்காரங்களால், அந்தகாரத்தை (விவேகம் இல்லாதவர்களை) பகெவேனே = கவனிப்பேனா? (ஏரெடுத்துப் பார்ப்பேனா?)

யம் காமயே தம் தமுக்ரம் க்ருணோமி
தம் பிரம்மாணம் தம்ருஷிம் தம் ஸுமேதாம் (ஸ்ருதி)
விரிஞ்சாதீன் த்ருணீகர்த்தும் த்ருணமப்யுத்தமம் ததா |
கர்த்தும் ஸமர்த்தா...
ஸ்ருஷ்டிஸ்திதிஸ்ச ஸம்ஹாரோ நியதிர்ஞ்ஞான மாவ்ருதி: |
பந்தமோக்ஷாதய: ஸர்வே மஹாபூதிபுரஸ்ஸரா: ||
அனாத்யனந்தகாலேஷு ஸர்வஸ்ய ஜகதோऽபி ச |
கடாக்ஷலேஷமாத்ரேண மஹாலக்ஷ்ம்யா பவந்தி ஹி ||
ஸதா முக்தௌ ச ஸம்சாரே பிபர்த்யேதான் ஸதா ரமா |
ஸைவ ஸர்வஸ்ய கர்த்ரே ச ஸதா ஸர்வத்ர ஸம்ஸ்திதா ||
(சத். ரத். மா)

ஆகிய பிரமாணங்கள் ஸ்ரீமன் மகாலட்சுமியின் சக்தி, ஞானாதி வைபவங்களை நிரூபிக்கின்றன. இந்த வாக்கியங்களின் சாரம் இவ்வாறாக இருக்கிறது. எந்த அதிகாரிக்கு பிரம்மா, ருத்ர, ரிஷி பதவிகளை கொடுப்பதற்கு இஷ்டப்படுவேனோ அத்தகையவர்களை அந்த பதவிகளுக்கு வரவழைக்கிறேன். அஞ்ஞானிகளை மகா ஞானிகளாக்க என்னால் முடியும். பிரம்மாதிகளை ஒரு புல்லைப் போலவும் செய்ய முடியும். த்ருணாதி அல்ப சேதனர்களை தூக்கிப் பிடித்து மிகப்பெரிய செயல்களை செய்ய வைக்க என்னால் முடியும். ஸ்ருஷ்ட்யாதிகள் அனைத்தையும் அனாதி அந்த்ய காலத்தில் (ஸ்ரீஹரியின் சித்தத்திற்கேற்ப) நடப்பதற்கு என் க்ருபா கடாக்ஷம் இருக்கிறது. முக்தாமுக்த பிரம்மாதி அனைத்து உலகத்தின் நியாமகள். சர்வகர்த்தள்.

மஞ்சுளோக்திய கேளி அஞ்சலேதகெந்து^{3} நவ
கஞ்சலோசனெய பி^{3}கி^{3}த^{3}ப்பி | பி^{3}கி^{3}த^{3}ப்பி பேளித^3 த^4
னஞ்சயப்ரிய ஸதெ^{2}யிந்த^3 ||16-(133)

மஞ்சுளோக்திய = (ருக்மிணியின்) மனோகரமான பேச்சுக்களை. கேளி = (ஸ்ரீகிருஷ்ணன்) கேட்டு. அஞ்சலேகெந்து = (என் நகைச்சுவைப் பேச்சுக்களால்) ஏன் பயப்பட்டாய் என்று மறுபடி கேட்டு. நவகஞ்சலோசனெய = அப்போதே மலர்ந்த தாமரையைப் போல ஒளிரும் கண்களைக் கொண்ட ருக்மிணியை. பிகிதப்பி = கட்டியணைத்து. தனஞ்சயப்ரிய = பார்த்தசகனான ஸ்ரீகிருஷ்ணன். ஸதெயிந்த = அன்புடன். பேளித = (அடுத்து வருவதைப் போல) பேசினான்.

இப்படியாக பேசலாமோ கூடாதோ என்னும் சந்தேகத்துடன், ஆனால் மனதில் பய பக்தியுடன் உள்ள உணர்வே 'ஸதெ' எனப்படுகிறது.

நினகெ^{3} என்னல்லி ப^{4}க்தி எனிதிஹுது நா கண்டெ^{3}
எனகி^{3}ஹுது^{3} கருண எந்தெ^{3}ந்து^{3} | எந்தெ^{3}ந்து^{3} இஹுதி^{3}த^{3}கெ
அனுமானவில்ல வனஜாக்ஷி ||17-(134)

நா = நான். நினகெ = உனக்கு. என்னல்லி = என்னிடம். பக்தி = (என்னுடைய மஹாத்ம்ய ஞான பூர்வகமான) அன்பு. எனிதிஹுது = எவ்வளவு அபாரமாக இருக்கிறது என்பதை. கண்டெ = பார்த்தேன். எனகெ = எனக்கு. எந்தெந்து = எப்போதும். கருண = (உன்னிடம்) வாத்ஸலம் (கருணை, பிரசாதம்). இஹுது = இருக்கிறது. இஹுதிதகெ = நீ எப்போதும் என் கருணையைப் பெற்றவள் என்னும் விஷயத்தில். வனஜாக்ஷி = ஹே கமலாட்சியே. அனுமானவில்ல = சந்தேகமே இல்லை

ஏகாந்த பக்தர்களில் ரமாதேவி சிறந்தவள். ஸ்ரீஹரியின் கருணையை நிரந்தரமாக பெற்றவர்களில் அவளைப் போல வேறு யாரும் இல்லை. பிரம்மதேவரை விட கோடி மடங்கு அதிக குணங்களைப் பெற்றவள். நித்ய முக்தள். எவ்வித தோஷங்களும் அற்றவள். பூர்ண காமள். ஸ்ரீஹரிக்கு ப்ரியமானவள்.

யம் யம் காமயஸே காமம் மயி காமய காமினி |
ஸந்தி ஹ்யேகாந்த பக்தாயா: தவ கல்யாணி நித்யதா ||

'ஹே கல்யாணி, நீ விரும்பும் அனைத்து போகங்களும், ஏகாந்த பக்தளான உனக்கு அனைத்து காலங்களிலும் கிடைக்கின்றன' -- என்று ஸ்ரீகிருஷ்ணன் பாகவதத்தில் ருக்மிணியிடம் கூறினான் என்று ஸ்ரீகிருஷ்ண ருக்மிணியரின் ஊடல் சம்பவத்தின் இறுதியில் 'ஸ்வரதோ ரமயா ரேமே நரலோகம் விடம்பயன்' -- ஸ்வரமணனான தான், ரமாரூபளான ருக்மிணியிடம், சாதாரண மனிதர்களைப் போல நாடகமாடி விளையாடுவேன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தோ^{3}ஷவர்ஜித ருக்மிணீஶன விலாஸ ஸன்
தோஷத^{3}லி கேளி படி^{2}ஸித^{3} | படி^{2}ஸித^{3}ந்த^{2}வர அபி^{4}
லாஷெ பூரயிஸி ஸலஹுவ ||18-(135)

தோஷவர்ஜித = தோஷங்கள் அற்றவனான. ருக்மிணீஷன = ஸ்ரீகிருஷ்ணனின். விலாஸ = லீலைகளை. ஸந்தோஷதலி = மிகவும் மகிழ்ச்சியுடன் (பக்தியுடன்). கேளி படிஸிதந்தவர = கேட்பவர்களின் மற்றும் படிப்பவர்களின். அபிலாஷெ = விருப்பங்களை. பூரயிஸி = நிறைவேற்றி. ஸலஹுவ = அருள்வான்

நீதஜனகனு ஜகன்னாத^{2} விட்ட^{2}லனு ஜக^{3}
ந்மாதெ எனிஸுவளு மஹலக்ஷ்மி | மஹலக்ஷ்மிஸுத பிரம்ம
ப்^{4}ராதனெனிஸுவனு கு^{3}ருராய ||19-(136)

நீதஜனகனு = நிரந்தர தந்தையான. ஜகன்னாதவிட்டல = உலக நாயகனான விட்டலன். மஹலட்சுமி = மகாலட்சுமிதேவி. ஜகன் மாதெ எனிஸுவளு = உலகத்தின் தாய் எனப்படுகிறாள். மகலட்சுமி ஸுத = மகாலட்சுமிதேவியின் மகனான. பிரம்மப்ராதனு = பிரம்மதேவரின் சகோதரரான ஸ்ரீவாயுதேவர். குருராய = குருகளின் ராஜன் (ஜகத்குரு). எனிஸுவனு = என்று (சாஸ்திரங்களால்) போற்றப்படுகிறான்.

15. ஸ்ரீகிருஷ்ண ஸ்துதி

ஞான சுக்ஞான ப்ரக்ஞான விக்ஞானமய
மாணவகரூப வஸுதே^{3}வ | வஸுதே^{3}வதனய ஸு
க்ஞானவனு கொட்டு கருணிஸோ ||1-(137)

ஞானஸுக்ஞான ப்ரக்ஞான விக்ஞானமய = ஞான, சுக்ஞான, ப்ரக்ஞான, விக்ஞானங்களே தேகமாக உள்ள (பரமாத்மனின் ஸ்வரூபங்களான இவற்றில் எந்தவொரு வேறுபாடுகளும் இல்லை. ரமாபிரம்மாதி அனைவரின் ஞானாதிகளின் பிரதான நியாமகராக இருப்பதால், தன்மய என்று அழைக்கப்படும்). மாணவகரூப = பாலரூபியான. வசுதேவ = அனைத்து செல்வங்களின் தலைவனான. வசுதேவ தனய = வசுதேவனின் மகனான ஹே கிருஷ்ணனே. சுக்ஞானவனு = சுத்தமான (யதார்த்த) ஞானத்தை. கொட்டு = கொடுத்து. கருணிஸோ = அருள்வாயாக

'மய' என்பதற்கு பூர்ண என்றும் பொருள் உண்டு. ஞானமய என்றால், ஞானபூர்ணன் என்று அர்த்தம். ஞானானந்தாதிகள் பரமாத்மனின் ஸ்வரூபமே ஆனாலும், பரமாத்மனின் ஞான ஆனந்த ஆகிய செயல்கள் விசேஷ பலத்தினால் மட்டுமே. ஒரு பொருளின் தர்மங்கள் அந்தப் பொருளிலிருந்து வேறுபடாமலே இருந்தாலும், அதனை வேறுபடுத்திப் பார்ப்பது / அறிவது, 'விசேஷ' என்னும் வஸ்துவில் இருக்கும் ஸ்வபாவத்தினால் மட்டுமே.

பரமாத்மனின் ஸ்வரூபத்திற்கும் குணங்களுக்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. ஞான, ஆனந்த முதலான குணங்கள் ஆகியவையும் வேறுபடாதவைகளே. ஞானத்தில் ஆனந்தமும், ஆனந்தத்தில் ஞானமும் இருக்கின்றன. அப்படியே மற்ற அனைத்து குணங்களும். ஞானமே ஆனந்தம், ஆனந்தமே ஞானம் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

சுக்ஞான, ப்ரக்ஞான, விக்ஞான என்பது ஞானத்தின் வகைகள். பரமாத்மனில் இருக்கும் ஞானாதி வகைகளில் எவ்வகை விசேஷங்களும் இல்லை. ஆனாலும், ஜீவர்கள் தத்தம் யோக்யதை களுக்கேற்ப, ஸ்ரீஹரியின் ஞானத்தின் எல்லையில்லா மகிமைகளை அறிவதற்கு, ஞானாதிகளின் உதவுகின்றன. ஞான, சுக்ஞானாதி களைப் பெறுவதற்கும் இவையே காரணமாகின்றன.

* விஷயத்தை அறிவது ஞானம். சுக்ஞான என்றால் யதார்த்த ஞான. விஷயத்தை அது இருப்பதை அப்படியே உணர்வது / அறிவது யதார்த்த ஞானம். சந்தேகம், தவறான புரிதல் ஆகியவை இல்லாததே ஆகும்.

* ப்ரக்ஞான என்பது, சுக்ஞானத்தைவிட சிறந்ததாகும். உதாரணம்: தேகத்தை, தேகம் என்று அறிவது சுக்ஞானம். தேகத்தில் இருக்கும் நாடிகள், ப்ராணாதிகளின் செயல்கள் இவற்றுடன் தேகத்தை அறிவது ப்ரக்ஞான.

* அந்த தேகத்திற்கு சம்பந்தமான அனைத்து விசேஷ தர்மங்களையும் அறிவது விக்ஞான.

அனைத்து சேதனர்களும் ஞானம் கொண்டவர்களே. சாத்விக ஸ்வபாவம் கொண்ட சேதனர் சுக்ஞானம் கொண்டவர்கள். தேவதைகள் (அவரிலும் தத்வாபிமானிகள்) ப்ரக்ஞானம் உள்ளவர்கள். ருஜுகணத்து பிரம்மாதிகள் விக்ஞானிகள்.

பிரம்மாதிகளைவிட அதிகமான, அனைத்து பொருட்களையும் அதன் சிறப்புகளுடன் அறிந்திருக்கும், விக்ஞானிகள் – ரமா நாராயணர். மோட்ச பிராப்திக்கு சுக்ஞானம் அதிஅவசியம். சாத்விகர்களின் ஸ்வரூப ஸித்தியான இந்த சுக்ஞானத்தை அளிக்குமாறு ஸ்ரீகிருஷ்ணனிடம் தாஸார்யர் இந்த பத்யத்தின் மூலம் வேண்டுகிறார்.

ஆதி[3] நாராயணனு பூ[4]தேவி மொரெ கேளி
யாத[3]வர குலதல்லி ஜனிஸித[3] | ஜனிஸித[3] ஸ்ரீகிருஷ்ண
பாத[3]க்கெ ஶரணெம்பெ[3] த[3]யவாகோ[3] ||2-(138)

ஆதி நாராயணனு = மூலரூபி நாராயணன். பூதேவி மொரெ = பூதேவி சரணடைந்து தன்னை காக்குமாறு வேண்டிக் கொண்ட பிரார்த்தனையை. கேளி = (பிரம்மதேவனின் வேண்டுகோளின் மூலம்) அறிந்து, . யாதவர குலதல்லி = யாதவ குலத்தில். ஜனிஸித = அவதரித்த. ஸ்ரீகிருஷ்ண = ஹே கிருஷ்ணனே. பாதக்கெ = உன் பாதங்களை. ஷரணெம்பெ = (அவையே எனக்கு கதி என்று திடமான ஞானத்துடன்) வணங்குகிறேன்.. தயவாகு = கருணை காட்டு.

கௌர்பாத்வாऽஸ்ருமுகே கின்னா ருதந்தீ கருணம் யதா |
உபஸ்திதாந்திகே தஸ்ம்ருவ்யஸனம் ஸமபோசத |
பிரம்மாததுபதார்யாத ஸஹ தேவ்யைஸ்தயா ஸஹ |

அகாம ஸத்ரினயன: தீரம் க்ஷீரபயோனிதே: |
தத்ர கத்வா ஜகன்னாதம் தேவதேவம் வ்ருபாகபிம் ||
புருஷம் புருஷஸூக்தேன உபதஸ்தே ஸமாஹித: |
கிரம் ஸமாதௌ ககனே ஸமீரிதாம் நிஷம்ய வேதாஸ் த்ரிதஷானுவாசி ஹ || (பாகவத)

பசு ரூபத்தை தாங்கிய பூதேவி, கண்ணீருடன், பிரம்மனிடம் வந்து, தன் நிலையை, சொல்லி முறையிட்டாள். அதனைக் கேட்ட பிரம்மன், ருத்ராதி தேவர்களுடன், பாற்கடலின் கரைக்கு வந்து, புருஷசூக்தத்தினால் தேவோத்தமனான ஸ்ரீமகாவிஷ்ணுவை துதித்தான். தியானத்தில் ஆழ்ந்த பிரம்மனுக்கு, அசரீரியின் ரூபத்தில், விஷ்ணு ஆணையிட்டதை, பிரம்மன், தேவதைகளுக்கு தெரிவித்தான்.

'பூதேவியின் துக்க பரிகாரத்திற்காக விஷ்ணு, வசுதேவ தேவகியரிடம் அவதரிக்கப் போகிறான் என்பதால், நீங்கள் அனைவரும் அதற்கு முன்னர் பூமியில் அவனது சேவை செய்வதற்காக உங்கள் அம்சங்களுடன் அவதாரம் செய்யுங்கள்' என்றார்.

ஜன்ம கர்ம ச மே திவ்யம் மம யோ வேத்தி தத்வத: || (கீதை). என் செயல்களை உலகத்திற்காக செய்த நாடகங்கள் / லீலைகள் என்று அறிபவனே ஞானி. 'ப்ரத்யக்ஷத்வம் ஹரே ஜன்ம ந விகாரி கதஞ்சன' எப்போதும் இருப்பவனான சூரியன் உதிக்கும்போது, சூரியன் தோன்றினான் என்று சொல்வதைப் போல, ஸ்ரீஹரி தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே அவனின் பிறப்பு. அவனுக்கு ப்ராக்ருத சரீரம் இல்லை. அவனது அனைத்து ரூபங்களும் சிதானந்தாத்மக ரூபங்களே.

ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர் மாம்ஸமேதோஸ்தி ஸம்பவா |
ஸர்வே நித்யா: ஷாஷ்வதாஸ்ச தேஹாஸ்தஸ்ய பராத்மன: |
ஹானோபாதான ரஹிதா: நைவ ப்ரக்ருதிஜா: க்வசித் |
பரமானந்த ஸந்தோஹா ஞானமாத்ராஸ்ச ஸர்வஷ: |
ஸர்வே ஸர்வகுணை:பூர்ணா: ஸர்வே பேதவிவர்ஜிதா: ||

மாமிசம், மேதஸ், அஸ்திகளால் ஆன ப்ராக்ருத தேகம், ஸ்ரீஹரிக்கு எந்த காலத்திலும் இல்லை. அத்தகைய தேகத்தைக் கொள்வது, விடுப்பது என்பது எக்காலத்திலும் இல்லை. அவனது அனைத்து ரூபங்களும் அனந்தகுணங்களால் நிரம்பியதாக, ஒன்றுக்கொன்று பேதங்கள் அற்று இருக்கின்றன. இந்த விஷயத்தை, இங்கு சொன்ன ஸ்லோகங்கள் மற்றும் அனேக ஆதார வசனங்களால் அறிகிறோம்.

வஸுதே³வனந்த³னன ஹஸுகூ³ஸு எனபே³டி³
ஶிஶுவாகி³ கொந்த³ ஶகடன்ன | ஶகடவத்ஸாசுரர
அஸுவளிது³ பொரெத³ ஜக³வன்ன ||3-(139)

வசுதேவ நந்தனன = வசுதேவ சுதனான ஸ்ரீகிருஷ்ணனை. ஹஸுகூஸு = சிறிய மகன் (எதுவும் அறியாத சின்னப்பையன்). எனபேடி = என்று அறியாதீர்கள். ஶிஶுவாகி = சிறிய குழந்தையாக இருந்தபோதே. ஷகடன்ன = ஷகடாசுரனை. கொந்த = கொன்றான். ஷகடவத்ஸாசுரர = ஷகட மற்றும் வத்ஸ அசுரர்களை. அஸுவளிது = கொன்று. ஜகவன்ன = உலகத்தை (விசேஷமாக, வ்ருந்தாவன மக்களை). பொரெத = காப்பாற்றினான்.

ஷகட = வண்டி. யசோதை தன் தோழிகளுடன் யமுனா நதிக் கரைக்கு வந்து, தாம் வந்த வண்டியின் அருகில் குழந்தையான ஸ்ரீகிருஷ்ணனை படுக்க வைத்து, தன் வேலையில் ஈடுபட்டிருந்த போது, ‘ஷகட’ என்னும் கம்சனின் சேவகன் ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்வதற்கு வந்து, அந்த வண்டியைச் சேர்ந்து, ஸ்ரீகிருஷ்ணனின் மேல் ஏற முயல, குழந்தைகள் செய்வதைப் போல ஸ்ரீகிருஷ்ணன் தன் கால்களால் எட்டி உதைத்து அந்த வண்டியை பொடிப்பொடி ஆக்கினான். அதனுடன் ஷகடனும் இறந்தான். இதனைக் கண்ட யசோதை மற்றும் அங்கிருந்தவர்கள் வியந்தனர்.

நந்தகோப முதலான கோகுலத்து மக்கள், வ்ருந்தாவனத்திற்கு வந்து அங்கு வசித்தனர். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் இன்னும் சிறிய பாலகன். கன்றுகளை மட்டுமே மேய்க்கக் கூடியவனாக இருந்தான். ஒரு நாள், வத்ஸாசுரன் என்னும் கம்சனின் சேவகன், கன்றுகளுடன் கன்றாக அங்கு வந்து சேர்ந்தான். சமயம் பார்த்து, ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்ல முயன்றான். அப்போது கிருஷ்ணன், கன்று ரூபத்தில் இருந்த அசுரனின் இரு கால்களைப் பிடித்துத்

தூக்கி, திருகி, ஒரு மரத்தில் அடித்தான். அசுரனும் கீழே விழுந்து இறந்தான். அப்போது தன் உண்மையான ரூபத்தைப் பெற்ற அந்த அசுரனைக் கண்டு, வ்ருந்தாவனத்து மக்கள் அனைவரும் ஸ்ரீகிருஷ்ணனின் மகிமைகளை அறிந்து அவனை துதித்தனர்.

தைத்ய அசுரர்கள் காமரூபிகள். தம் இஷ்டத்திற்கேற்ப ரூபங்களை எடுக்க வல்லவர்கள். மரண சமயத்தில் மட்டும், அந்த விருப்ப சக்தி இல்லாததால், தம் சுயரூபத்தை அடைவார்கள்.

வாதரூபிலி ப^{3}ந்த^3 ஆ த்ருணாவர்த்தன
பாதாளகிளுஹி மடு^{3}ஹீத^3 | மடு^{3}ஹி மொலெயுணிஸிதா^{3}
பூதனிய கொந்த^3 புருசேஶ ||4-(140)

வாதரூபிலி = சுழற்காற்று ரூபத்தில். பந்த = (ஸ்ரீகிருஷ்ணனை ஆகாயத்தில் தூக்கி அடித்து) கொல்வதற்கு வந்த. ஆ த்ருணாவர்த்தன = (அதே கம்சனின் சேவகனான) த்ருணாவர்த்தன் என்னும் தைத்யனை. பாதாளகிளுஹி = பாதாளத்திற்கு தள்ளி. மடுஹித = கொன்ற. மொலெயுணிஸிதா = (ஏழு நாட்களேயான சிறு குழந்தையாக இருந்தபோது தன்னைக் கொல்ல வந்த) விஷம் தடவிய முலையிலிருந்து பாலைக் கொடுத்த. ஆ பூதனிய = (அதே கம்சனின் ஆணைப்படி வந்த) பூதனி என்னும் அரக்கியை. கொந்த = கொன்ற. புருஷேஷ = புருஷோத்தமனே ஸ்ரீகிருஷ்ணன்

ஒரு நாள், ஸ்ரீகிருஷ்ணனை தூக்கிக் கொண்டிருந்த யசோதை, அவனது எடை தாங்காமல் அவனை கீழே இறக்கி, வியப்படைந்திருந்தாள். அதற்குள் ஒரு பெரிய சூறாவளிக் காற்று வந்தது. அக்காற்றால் ஏற்பட்ட தூசியில் கோகுலமே மூடிக் கொண்டது. கண்களில் தூசு படர்ந்து, மக்கள் அனைவரும் துக்கப்பட்டனர். பின் அக்காற்று கலைந்தபின்னர், அங்கிருந்த கிருஷ்ணனைக் காணாமல் யசோதை கவலைப்பட்டாள்.

சுற்றுமுற்றும் பார்க்கையில், அங்கு ஒரு பெரிய பாறையின் மேல் மரணமடைந்து கிடந்த ஒரு பயங்கரமான அசுரனின் மார்பின் மேல் ஆடிக்கொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணனை, யசோதையும், மக்களும் கண்டனர். ஸ்ரீகிருஷ்ணனின் இந்த அற்புத மகிமையை அனைவரும் கொண்டாடினர். த்ருணாவர்த்தன், ஸ்ரீகிருஷ்ணனை

தூக்கி சிறிது மேலே போகும்போது, ஸ்ரீகிருஷ்ணனின் எடையைத் தாங்கமுடியாமல் கஷ்டப்பட்டான். ஸ்ரீகிருஷ்ணன், அந்த தைத்யனின் கழுத்தைப் பிடித்து நெறித்தான். அப்போது அந்த தைத்யன், மூச்சிறைக்க, தன் நிஜ ரூபத்தை தரித்து கீழே விழுந்து இறந்தான்.

பூதனி, ஒரு நல்ல பெண்மணியைப் போல வேடம் தரித்து வந்து, யசோதையிடமிருந்து ஸ்ரீகிருஷ்ணனை வாங்கிக் கொஞ்சினாள். அவனின் அழகினை புகழ்ந்தவாறு, விஷம் தடவிய தன் முலையை அவனின் வாயில் வைத்தாள். பாலைக் குடிப்பதற்கு பதில், அவளது உயிரையே உறிஞ்சினான் சிசுரூபியான ஸ்ரீகிருஷ்ணன். மலையளவு இருந்த தன் நிஜ ரூபத்தைக் கொண்டு கீழே விழுந்த அந்த அரக்கியைக் கண்ட யசோதை மற்றும் அவளது தோழியர் வியப்படைந்தனர். குழந்தைக்கு வந்த ஆபத்துகளைக் களைவதற்கு ரட்சாபந்தனம் முதலானவற்றை செய்து, அவனின் நலனை வேண்டினர். பிராமண போஜனாதிகளை செய்து, அவர்களிடமிருந்து ஆசிகளைப் பெற்றனர்.

தே[3]வகிஸுதனாகி[3] கோ[3]வுக[3]ள காய்த[3]ரெ
பாவகன நுங்கி[3] நலிவோனெ | நலிவோனெ மூர்லோக
ஓவ தே[3]வேந்த்[3]ர துதிவோனெ ||5-(141)

தேவகிஸுதனாகி = தேவகியின் மகனாக. கோவுகள காய்தரெ = கோபாலகனாக பசுக்களைக் காத்து. பாவகன = காட்டுத்தீயை. நுங்கி = விழுங்கி. நலிவோனே = சுகமாக இருப்பானா? (சாதாரண மகனைப் போல, தேவகியின் மகனும் அல்ல. பசுக்களைக் காக்கும் சாதாரண இடையனும் அல்ல).. மூர்லோக = மூன்று உலகங்களையும். ஓவ = ஆளும் (காக்கும்). தேவேந்த்ர = தேவேந்திரன். துதிபோனெ = வணங்குவானா? (இல்லை. ஸ்ரீகிருஷ்ணன் புருஷோத்தமனே ஆகிறான்).

கோவர்த்தன மலையை தன் விரல் நுனியால், ஒரு குடையைப் போல தாங்கிப் பிடித்து, பிரளய காலத்தைப் போல பொழிந்து கொண்டிருந்த மழையிலிருந்து பசுக்களை மற்றும் இடையர்களை, காப்பாற்றிய ஸ்ரீகிருஷ்ணனை, அவன் மேல் கொண்ட கோபத்தினால் மழை பெய்வித்த தேவேந்திரன், தன் ஐராவதத்தின்

மேல் அமர்த்தி, தேவ கங்கையினால் அபிஷேகம் செய்வித்து, வணங்கி, ஸ்ரீகிருஷ்ணனை மகிழ்வித்தான் என்று ஸ்ரீகிருஷ்ண மகிமை வர்ணிக்கபட்டிருக்கிறது. அன்றிலிருந்து 'கோவர்த்த னோத்தாரி' என்னும் காரணப் பெயர் ஸ்ரீகிருஷ்ணனுக்கு வந்தது.

குவலயாபீட3வனு லவமாத்ரத3லி கொந்து3
ஶிவன சாபவனு முரிதி3ட்ட | முரிதி3ட்ட முஷ்டிகன
ப3வரத3லி கெட3ஹித3 த4ரெயொளு ||6-(142)

குவலயாபீடவனு = (ஸ்ரீகிருஷ்ணன்) குவலயாபீட என்னும் யானையை. லவமாத்ரதலி = ஒரே நொடியில். கொந்து = கொன்று. ஶிவன ஜாபவனு = சிவ தனுஸ்ஸினை. முரிதிட்ட = முறித்து எறிந்தான். முஷ்டிகன = முஷ்டிக என்னும் மல்லனை . பவரதலி = மல்யுத்தத்தில். தரெயொளு = பூமியில். கெடஹித = தள்ளிக் கொன்றான்

குவலயாபீட என்னும் யானை, ருத்ரரின் வரத்தினால் யாராலும் வெல்லப்பட முடியாததாக இருந்தது. 'அர்யஜகத்குருதமோ பலினம் கஜேந்திரம் ருத்ர ப்ரஸாத பரிரக்ஷ தமாஷ்வ பஷ்யத்' (பா. தா.). ருத்ரரின் வரத்தினால் பலம் கொண்டிருந்த யானையை, ரங்க மண்டபத்தின் முன்பாகத்தில் ஜகத்குருவான ஸ்ரீகிருஷ்னன் பார்த்தான் என்னும் இந்த வாக்கியமே இதற்கு ஆதாரமாக இருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணன் மல்யுத்தத்தில், சாணூரனைக் கொன்றான். முஷ்டிகனை பலராமன் கொன்றான். இந்த இரு மல்லர்களும் ருத்ரரிடமிருந்து வரம் பெற்றிருந்தனர். இங்கு ஸ்ரீகிருஷ்ணன் முஷ்டிகனைக் கொன்றான் என்பதற்கு, பலராமனுக்கு சக்தியைக் கொடுக்க, அவனில் நின்று, ஸ்ரீகிருஷ்ணனே அவனைக் கொன்றான் என்று அறியவேண்டும்.

கப்ப கொட3லில்லெந்து3 த3ர்பத3லி தே3வேந்த்3ர
கு3ப்பித3னு மளெய வ்ரஜதொ3ளு | வ்ரஜதொ3ளு பர்வதவ
புஷ்பத3ந்தித்தி ஸலஹீத3 ||7-(143)

கப்ப = (கோபாலகர்கள் தனக்கு யாகத்தின் மூலமாக கொடுத்து வந்த) காணிக்கையை (பூஜைகளை). கொடலில்லெந்து = (வழக்கம் போல கொடுத்து வந்ததை) அர்ப்பிக்கவில்லை என்று. தர்ப்பதலி = அதிகார மதத்தினால். தேவேந்திர = இந்திரதேவன். வ்ரஜதொளு = (வ்ருந்தான பிரதேசத்தில் இருந்த) கோபாலகர்களின் கிராமத்தின் மேல். மளெய = மழையை. குப்பிதனு = (மேகங்களுக்கு ஆணை யிட்டு மழை) பொழியச் செய்தான்). பர்வதவ = (ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன) பர்வதத்தை. புஷ்பதந்தெ = ஒரு பூவைப் போல (அனாயாசமாகி). எத்தி = தூக்கிப் பிடித்து. ஸலஹித = (பசுக்களை, மக்களை) காத்தான்.

பிரளய காலத்து மேகங்களுக்கு 'ஸாம்வர்த்தக மேகம்' என்று பெயர். இந்திரன் அவர்களிடம் கோபாலகர்களின் கிராமத்தின் மேல் முழுவதுமாக பெய்யுங்கள் என்று சொல்லியிருந்தான். இப்படியாக ஏழு நாட்கள் தொடர்ந்து மழை பெய்தபோதிலும், பசுக்கள் மற்றும் மக்கள், ஸ்ரீகிருஷ்ணனால் காப்பாற்றப்பட்டனர் என்பதைக் கண்டு, இந்திரன் மேகங்களை தடுத்து நிறுத்தினான். அவனின் கர்வம் அழிந்தது. அசுர ஆவேசம் நீங்கியது. ஸ்ரீகிருஷ்ணனை சரணடைந்தான்.

'அத்யல்பஸ்த்வ சுராவேஷோ தேவானாம் ச பவிஷ்யதி | ப்ராணமேகம் வினாஸௌ ஹி...' ஆகணாஷ்மசமரான, அசுர ஆவேசத்திற்கு வாய்ப்பே இல்லாத ஸ்ரீவாயுதேவரைத் தவிர, இதர தேவதைகளுக்கு சிறிதளவாவது அசுர ஆவேசம் உண்டு. அந்த அசுர ஆவேசம் நீங்கிய உடனேயே அவர்கள் தங்களின் முந்தைய தேவ ஸ்வபாவத்தை அடைகின்றனர் என்று பாகவத தாத்பர்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

141ம் பத்யத்தில், தேவேந்திரன் துதித்தான் என்று வந்ததற்கான சம்பவமே இது.

வஞ்சிஸித³ ஹரியெந்து³ ஸஞ்சிந்தெயலி கம்ஸ
மஞ்சத³ மேலெ குளிதிர்த்த³ | குளிதிர்த்த முத³கரிகெ³
பஞ்சாஸ்யனந்தெ எரகீ³த³ ||8-(144)

ஹரியு = ஸ்ரீகிருஷ்ணன். வஞ்சிஸித = மோசம் செய்தான். எந்து = என்று. கம்ஸ = கம்சன். சஞ்சிந்தெயலி = கவலைப்பட்டவாறு. மஞ்சத மேலே = (ரங்கமண்டபத்தில் தனக்காக போடப்பட்டிருந்த) உயரமான ஆசனத்தின் மேல். குளிதிர்த்த = அமர்ந்திருந்தான். (அப்போது ஸ்ரீகிருஷ்ணன்). மதகரிகெ = மதயானையின் மேல். பஞ்சாஸ்யனந்தெ = சிம்மத்தைப் போல. எரகித = (கம்சனின் மேல்) தாவினான்.

நன்றாக அகலமான வாயினைக் கொண்டிருப்பதால், சிம்மம், பஞ்சாஸ்ய என்று அழைக்கப்படுகிறது. யானைக்கு சிங்கத்தை கனவில் கண்டாலும் பயமாம். தேவகியின் எட்டாவது கர்ப்பத் தினால் தனக்கு மரணம் என்று சொன்ன அசரீரியினால், தன்னை ஸ்ரீஹரி ஏமாற்றினான் என்றும், தேவகியிடம் பிறந்து, வேறு இடத்தில் வளர்ந்து, தன் சேவகர்கள் பலரைக் கொன்று, குவலயாபீட யானையையும், சாணூர முஷ்டிகர்களையும் கொன்று, தன்னையும் கொல்வதற்கு வந்த இந்த பாலகனே, தேவகியின் பெண் குழந்தையை கல்லில் அடித்துக் கொல்ல முயன்றபோது ‘உன்னைக் கொல்லப் போகிறவன் இன்னொரு இடத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறான்’ என்று சொன்ன ஆள் என்பதை அறிந்து கம்சன் கவலையில் ஆழ்ந்தபோது, ஸ்ரீகிருஷ்ணன் அவனின் மஞ்சத்தில் ஏறி அவனின் தலைக் கூந்தலை பிடித்து இழுத்தான்.

து³ர்த⁴ர்ஷகம்ஸன்ன மத்⁴யரங்க³தி³ கெட³ஹி
கு³த்தி³ட்ட தலெய ஜன நோடெ³ | ஜன நோடெ³ து³ர்மதிய
மர்த்தி³ஸித³ கிருஷ்ண ஸலெஹெம்ம ||9-(145)

துர்மதிய = துர்புத்தியுள்ள. துர்தர்ஷ கம்ஸன்ன = பிறரால் கொல்ல முடியாத கம்ஸனை. ஜன நோடே = அனைத்து மக்களும் பார்த்துக் கொண்டிருக்கையில். மத்யரங்கதி = ரங்கமண்டபத்தின் நடுவில். கெடஹி = தலைக் கூந்தலைப் பிடித்து இழுத்து தள்ளி. தலெய = அவனின் தலையை. குத்திட்ட = குத்தினான். மர்த்திஸித = கொன்றான். ஸ்ரீகிருஷ்ண = ஹே ஸ்ரீ கிருஷ்ணனே. எம்ம = உன் பக்தர்களான எம்மை. ஸலஹு = அருள்வாயாக

கம்ஸாவிஷ்ணோ ஸ்வயம் ப்ருகு: -- என்னும் ஆதாரத்தினால், கம்சனின் தேகத்தில் நிலைத்திருந்த ப்ருகு ரிஷிகளை விட்டு, இந்த

பத்யத்தில் இருக்கும் 'துர்மதி' என்னும் சொல் காலநேமி தைத்யனையே குறிப்பதாக அறிய வேண்டும். காலநேமி என்னும் தைத்யனே கம்சனாக பிறந்திருந்தான்.

உக்ரஸேனகெ³ பட்ட ஶீக்ரத³லி கட்டி கா
ராக்³ருஹத³ல்லித்த³ ஜனனீய |ஜனனி ஜனகர பி³டி³ஸி
அக்³ரஜன கூடி³ ஹொரவண்ட ||10-(146)

காராக்ருஹதல்லித்த = (கம்சனால் கைது செய்யப்பட்டு) சிறையில் அடைக்கப்பட்டிருந்த. ஜனனிஜனகர = தன் தாய் தந்தைகளை (தேவகி வசுதேவரை). பிடிஸி = சிறையிலிருந்து விடுவித்து. ஷீக்ரதலி = விரைவாக. உக்ரஸேனகே = உக்ரசேனனுக்கு. பட்ட கட்டி = சிம்மாசனத்தில் அமர்த்தி (அரசில் பட்டாபிஷேகம் செய்து). அக்ரஜன கூடி = பலராம சமேதனாக. ஹொரவண்ட = (பிற உறவினர்களைப் பார்ப்பதற்கு) புறப்பட்டான்.

கம்சனைக் கொன்றபிறகு, தானே அரசில் அரசனாக வேண்டும் என்று பலரும் வேண்டுகோள் வைத்திருக்க, அதற்கு ஒப்பாமல், உக்ரசேனனையே அரசனாக பட்டம் கட்டி, (கம்சன், தன் தந்தையான உக்ரசேனனை சிறையில் அடைத்து, தானே அரசன் ஆகியிருந்தான்), தன் நண்பர்கள் உறவினர்களைக் காண்பதற்கு மதுரா பட்டணத்திலிருந்து புறப்பட்டான்.

யாத யூனம் வ்ரஜம் தாத மயம் ச ஸ்னேஹதுக்கிதான் |
ஞாதேன்னோ த்ரஷ்டுமேஷ்யாமோ விதாய ஸுஹ்ருதாம் சுகம் ||
(பாகவத)

ஹே நந்தனே, நீங்கள் அனைவரும் ஊருக்கு திரும்புங்கள். நம் உறவினர், நம்மிடம் இருக்கும் நட்பின் பேரில் கம்சனால் பெரும் துக்கங்களை அனுபவித்து, வெகு தொலைவுக்கு சென்றிருக் கிறார்கள். அவர்களைக் கண்டு மகிழ்விப்பதற்காக, நானும் பலராமனும் புறப்படுகிறோம். இப்படியாக சொன்ன கிருஷ்ணனின், உறவினர்கள் மேல் அவன் வைத்த பாசத்தினை, ஶ்ரீதாஸார்யர் இங்கு விவரிக்கிறார். எதிரிகளை வென்ற வீரர்கள், தானே அனைத்து ராஜ்யங்களையும் ஆள வேண்டும் என்ற நினைப்பின்றி, மக்களை அரவணைத்து அவர்களின் அன்பினை சம்பாதிக்க

வேண்டும் என்னும் நீதியை ஸ்ரீகிருஷ்ணன் இங்கு வெளிப்படுத்துகிறான்.

அம்பு3ஜாம்ப3கிகொ3லிது3 ஜம்பா4ரி புரதி3ந்த3
கெம்ப3ல்லன மர தெகெ3த3ந்த2 | தெகெ3த3ந்த2 கிருஷ்ணன க
ராம்பு3ஜக3ளெம்ம ஸலஹலி ||11-(147)

அம்புஜாம்பகிகெ = கமலாக்ஷிக்கு (தன் மனைவியான சத்யபாமா தேவிக்கு). ஒலிது = அன்புடன். கெம்பல்லனமர = பாரிஜாத மரத்தினை. ஜம்பாரி புரதிந்த = தேவேந்திரனின் (அமராவதி) பட்டணத்திலிருந்து. தெகெதந்த = பிடுங்கி கொண்டு வந்த (சத்யபாமாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, இந்திரனின் பட்டணத்திலிருந்து பாரிஜாத மரத்தைக் கொண்டு வந்தவனான). கிருஷ்ணன = ஸ்ரீகிருஷ்ணனின். கராம்புஜகளு = மங்கள கரங்கள். எம்ம = எம்மை. ஸலஹலி = அருளட்டும்

பாரிஜாத மரம் சிவப்பு வர்ணம் கொண்டது. பாரிஜாத = coral tree. கிம்பல்ல மரம் என்றால் பவளத்தைப் போல இருக்கும் பாரிஜாத மரம். சிவப்பு பவள மலர்களைக் கொடுக்கக்கூடிய மரம். நரகாசுரனின் வதம் ஆனபிறகு, ஸ்ரீகிருஷ்ணன் கருடாரூடனாக சத்யபாமா உடன், ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்று, நரகாசுரன் அதிதியிடமிருந்து அபகரித்திருந்த குண்டலங்களை திரும்ப அவளுக்கே கொடுத்துவிட்டு, பூலோகத்திற்கு திரும்பி வந்தபோது, சத்யபாமா தேவியின் விருப்பத்தின்பேரில் பாரிஜாத மரத்தைப் பிடுங்கி, கருடன் மேல் வைத்துக் கொண்டு வந்து, த்வாரகையில் அவளின் அரண்மனையின் முன்பு வைத்த கதை, புராணங்களில் வந்திருக்கிறது.

ஒப்பிடி3 அவலக்கிகொ3ப்பிகொண்ட3 முகுந்த3
விப்ரனிகெ3 கொட்ட ஸௌபா4க்3ய | ஸௌபா4க்3ய கொட்ட ந
ம்மப்பகி3ந்த3தி4க தொ3ரெயுண்டெ ||12-(148)

முகுந்த = முக்தியைக் கொடுக்கக்கூடிய ஸ்ரீகிருஷ்ணன். ஒப்பிடிய = ஒரு கைப்பிடி. அவலக்கிகெ = (குசேலன் கொண்டு வந்திருந்த) அவலுக்கு. ஒப்பிகொண்ட = மகிழ்ந்து ஏற்றுக் கொண்டான். விப்ரனிகெ = (சிறு வயது நண்பனான கடும் ஏழையான

பிராமணனான) குசேலனுக்கு. ஸௌபாக்ய = பெரும் செல்வத்தை. கொட்ட = கொடுத்தான் (இப்படியாக அருளிய). நம்மப்பகிந்ததிக = நம் அனைவரின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணனைவிட உத்தமனான. தொரெயுண்டெ = பிரபு இருக்கிறானோ? (இல்லவே இல்லை)

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி (கீதை) – – இலை, பூ, பழம், நீர் ஆகிய அல்ப பொருட்களானாலும் பக்தியினால் அர்ப்பித்தால் அதன் நான் ஏற்றுக்கொள்வேன் என்று ஸ்ரீகிருஷ்ணனே ஆணையிட்டு சொல்கிறான். பக்தர்கள் அர்ப்பித்தது மிகச் சிறியதானாலும், அதைவிட அதிக மடங்கிலான பலன்களை, அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கிறான். பக்தியே முக்கிய ஸாதனமாகக் கருதுகிறானே தவிர, பொருட்களின் மதிப்பினை அல்ல. இதற்கு குசேலனே சாட்சி.

க^{3}ந்த^{4}வித்தப^{3}லெயள குந்த^{3}னெணிஸதெ^{3} பரம
ஸுந்த^{3}ரிய மாடி^{3} வஶனாத^{3} | வஶனாத^{3} நம்ம கோ^{3}
விந்த^{3} கோ^{3}விந்த^{3} நீனெந்த^{2} கருணாளோ ||13-(149)

கந்தவித்த = சந்தனத்தை அர்ப்பித்த. அபலெயள = குப்ஜெ என்னும் பெண்ணின். குந்தனு = தோஷத்தை / பிரச்னையை. எனிஸதெ = கவனிக்காமல். பரம ஸுந்தரிய மாடி = உத்தம அழகியாக (தேகத்தின் வக்ரத்தை திருத்தி) மாற்றி. வஷனாத = (அவளின் விருப்பத்தைப் பெற்று) தன் அங்க சங்கத்தைக் கொடுத்து. கோவிந்த = வேதவேத்யனான. கோவிந்த = பசுக்களை காப்பவனே. நீனெந்த கருணாளோ = நீ வர்ணிக்கமுடியாத கருணாமூர்த்தியாக இருக்கிறாய்.

குப்ஜை தினந்தோறும் கம்சனுக்கு சந்தனத்தைக் அரைத்து சமர்ப்பித்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீகிருஷ்ணன், கம்சனைக் கொல்வதற்காக, மதுரா பட்டணத்திற்கு வந்து, ராஜவீதியில் நடமாடிக் கொண்டிருந்தபோது, சந்தனத்தைக் கொண்டு போய்க்கொண்டிருந்த குப்ஜை, அதனை பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பித்தாள்.

த்ரிவக்ரளான (தேகத்தில் மூன்று இடங்களில் வளைந்திருக்கும்) அவளைப் பிடித்து, ஸ்ரீகிருஷ்ணன் ஒரு நொடியில் அவளது தேக

பிரச்னையை தீர்த்தான். அவள், ஸ்ரீகிருஷ்ணனின் அங்க சங்கத்தை விரும்பி, அவனை தன் வீட்டிற்கு வருமாறு அழைத்தாள். காலாந்தரத்தில் ஸ்ரீகிருஷ்ணன் அவளது விருப்பத்தை நிறைவேற்றி, அவளுக்கு விஷோக என்னும் புத்திரனையும் அளித்தான்.

இந்த விஷோகன் நாரதரிடமிருந்து உபதேசம் பெற்று, ஞானியாகி, பின் பீமசேனனின் சாரதியானான். இந்த த்ரிவக்ரை முந்தைய பிறவியில் பிங்களெ என்னும் வேசியாக இருந்து, விரக்தளாகி, தன் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீஹரியே தனக்கு ரமணன் ஆக வேண்டும் என்று வேண்டி தேகதியாகம் செய்தாள். இந்த பிங்களையே முன்பு, ரமா ஆவேசம் கொண்டு ஸ்ரீஹரியின் அங்கசங்கத்தைப் பெறத் தகுதியானவளாக வந்தாள்.

பகவத்சார்யதாயோக்யா: ந காஸ்சிதப்ஸரஸ:ஸ்த்ரிய: ||
ரமாவேஷாத்கதாசித்ஸ்ய: தாஸ்வேகா பிங்கலாऽபவத் ||(பாக. தாத்)

ரமா ஆவேசத்தினால் பகவந்தனின் மனைவி ஆவதற்கு தகுதி பெற்ற சில அப்ஸர ஸ்த்ரீயர்கள் இருந்தனர். அவர்களில் பிங்களெ என்பவளும் ஒருத்தி.

ஸைரந்த்ரிகோதரபவ: ஸது நாரதஸ்ய
ஷிஷ்யோ வ்ருகோதரரதஸ்ய பபூவயந்தா||
யா பிங்கலாऽன்யபவ ஆத்மனி ஸம்ஸ்திதம் தம்
ஸம்ஸ்க்ருத்ய காந்தமுருகாயமபூத் த்ரிவக்ரா || (பாக. தாத்.)

ஸைரந்திரி (தாசி)யிடம் பிறந்து, நாரத சிஷ்யனான விஷோகனே பீமசேனரின் சாரதி ஆனான். அந்த தாசி, முந்தைய பிறவியில் தன் அந்தர்யாமியான ஸ்ரீஹரியையே பதியாக நிச்சயித்து, த்ரிவக்ரையாகி பிறந்தாள் என்று ஸ்ரீமதாசார்யர் தமது கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார்.

எந்து^{3} காம்பெ^{3}னோ நின்ன மந்த^{3}ஸ்மிதானனவ
கந்த^{3}ர்ப்பனய்ய கவிகே^{3}ய | கவிகே^{3}ய நின்னந்த^2
ப^{3}ந்து^{4}க^{3}ளு நமகி^{3}ரலு அனுகா^{3}ல ||14-(150)

நின்ன மந்தஸ்மிதானனவ = புன்னகையுடன் கூடிய உன் முகத்தை. எந்து = எப்போது. காம்பெனோ = நான் காண்பேனோ?. கந்தர்ப்பனய்ய = மன்மதனின் தந்தையே. கவிகேய = ஞானிகளால் வணங்கப்படும் ஹே ஸ்ரீகிருஷ்ணனே. நின்னந்த = உன்னைப் போல இருக்கும். பந்துகளு = உறவினர். அனுகால = அனைத்து காலங்களிலும். நமகிரலி = எனக்குக் கிடைக்கட்டும்.

மோட்சானந்தம் எப்போது கிட்டும் என்னும் விருப்பம் கொண்ட பக்தனின் மன ஆசை இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ‘கிருஷ்ண இஜ்யதே வீதமோஹை:’ என்று முக்தர்களாலும் வணங்கப்படுபவன், ஸ்ரீகிருஷ்ணன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

‘ஸௌந்தர்ய ஸாரைகரஸம் ரமாபதேரூபம் ஸதானந்தயதீஹ மோக்ஷிண:’ -- (மத்வவிஜய)

முக்தர்களின் மகிழ்ச்சிக்கு, அழகின் மொத்த வடிவமான வைகுண்டபதியின் தரிசனம் மிகவும் அவசியம் என்று சொல்கிறார்கள். பிரம்மதேவனே ஆதிகவி. அவனால் வணங்கப்பட்ட ஸ்ரீஹரி – கவிகேய.

ஸ்ரீஹரி – சம அதிகம் இல்லாதவன். ‘நின்னந்த பந்துகளு’ என்று சொன்னதால், விஷ்ணு சன்னிதானம் கொண்டவர்களான, விஷ்ணு பக்தர்களே பந்துகளாக வேண்டும் என்று விருப்பத்தை சொல்கிறார். ‘பாந்தவம் விஷ்ணுபக்தாஸ்ச’ - விஷ்ணு பக்தரே முக்தி யோக்ய ஜீவர்களின் நிஜ உறவினர்கள்.

ரங்க3ராயனெ கேளு ஶ்ருங்கா3ர குணபூர்ண
ப4ங்க3பட3லாரெ ப4வதொ3ளு | ப4வதொ3ளு என்னந்த
ரங்க3த3லி நிந்து ஸலஹய்ய ||15-(151)

ஸ்ருங்கார குணபூர்ண = ஸௌந்தர்ய முதலான அனைத்து குணங்களையும் கொண்டவனான. ரங்கராய = ஹே ரங்கராயனே. கேளு = (என் வேண்டுகோளினை) கேள். பவதொளு = சம்சாரத்தில். பங்கபடலாரெ = துக்கப்பட மாட்டேன். பவ பிடிஸி = இந்த சம்சாரத்தை விடுவித்து (சம்சாரத்திற்கு காரணமான அபிமானத்தை விடுவித்து). என்ன = என்னுடைய. அந்தரங்கதலி =

மனதில். நிந்து = நிலைத்திருந்து. ஸலஹய்ய = எனக்கு அருள்வாயாக

அனைவரின் மனதிலும் எப்போதும் ஶ்ரீஹரி நிலைத்தே இருக்கிறான். 'நெலெஸு' என்னும் பிரார்த்தனை, அருள் செய்யும் முடிவுடன் இரு என்னும் அர்த்தத்தை சொல்கிறது. இந்த உலகத்தையே விளையாட்டு அரங்கமாகக் கொண்ட, நற்குணங்கள் நிரம்பியவனாகையால் ஶ்ரீஹரி 'ரங்கராய' என்று அழைக்கப்படுகிறான்.

தா³னவாரண்யகெ க்ருஶானு காமிதகல்ப
தே³னு ஶ்ரீலட்சுமி முக²பத்ம | முகபத்ம நவஸூஸ
த்பா⁴னு நீனிமகெ³ த³யவாகோ³ ||16-(152)

தானவாரண்யகெ = தானவ என்னும் காட்டிற்கு. க்ருஶானு = நெருப்பினைப் போல இருக்கும். காமிதகல்பதேனு = வேண்டிய அனைத்தையும் கொடுக்கும் கல்பதேனுவைப் போல. ஶ்ரீலட்சுமி முகபத்ம = ரமாதேவியின் முக கமலத்திற்கு. நவஸூஸத்பானு = உதய சூரியனின் ஒளியைப் போல இருக்கும். நீனு = நீ. எமகெ = எமக்கு. தயவாகோ = அருள்வாயாக

நெருப்பினால் காடு எரிந்து அழிவதைப் போல, தைத்யர்கள் உன்னால் நஷ்டமடைகின்றனர். தையாந்தகாரக என்று அர்த்தம்.

'சிந்தாமணீந்த்ரமிவ சிந்திததம்' என்பதைப் போல, சிந்தாமணியை, கல்ப என்றதால் கல்பவ்ருக்ஷத்தையும், தேனு என்றதால் காமதேனுவையும் சிந்திக்க வேண்டும். இவை மூன்றும், ஸ்வர்க்க லோகத்தின் பிரஜைகளுக்கு அவர்களின் இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுகின்றன. இவற்றைப் போல, பக்தர்களுக்கு அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவன், ஶ்ரீகிருஷ்ணன்.

ஶ்ரீதேவி, நித்ய அவியோகினி ஆனதால், நித்ய சன்னிதானத்தினால், சூர்ய ஸ்தானியனான தன் பதியிடமிருந்து தொடர்ச்சியாக ஒளியைப் பெறுகிறாள்.

தாபத்ரயக³ளு மஹதா³பத்து படி³ஸோவு
காபாடு³ கண்ட்³ய கமலாக்ஷ | கமலாக்ஷ மொரெயிட்ட
த்ரௌபதி³ய காய்தெ³ அளுகதெ³ ||17-(153)

கமலாக்ஷ = ஹே தாமரைக் கண்ணனே. தாபத்ரயகளு = ஆத்யாத்ம, ஆதிதெய்வ, ஆதிபூதங்கள் என்னும் மூன்று வித தாபங்கள். மஹதாபத்து = மகா விபத்துகளை. படிஸோவு = உண்டு பண்ணுகின்றன (கொடுக்கின்றன). காபாடு கண்ட்ய = அவற்றிலிருந்து காப்பாற்று. மொரெயிட்ட = வேண்டிகொண்ட. த்ரௌபதிய = திரௌபதியை. அளுகதெ = யாரையும் கவனிக்காமல். காய்தெ = காத்தாய் (அல்லது, அளுகதெ = யாருக்கும் காத்திருக்காமல், மொரெயிட்ட = நீ கைவிடுவதில்லை என்று திட நம்பிக்கையால் உன்னை வேண்டிய திரௌபதியை, காய்தெ = காத்தாய்)..

பாபியான துச்சாதனன், அறிஞர்கள் நிறைந்த சபையில் திரௌபதியின் ஆடையைப் பிடித்து இழுக்கையில், அவள் 'கிருஷ்ணா, என்னைக் காப்பாற்று' என்று வேண்ட, ஸ்ரீகிருஷ்ணனும் அவளுக்கு அக்ஷய வஸ்திரத்தைக் கொடுத்து அவளின் மானத்தைக் காத்தான் என்று அறிகிறோம்.

தாபங்கள் மூன்று விதம். அதிபூத – தேகத்திற்கு ஏற்படும் நோய், நொடிகள். அத்யாத்ம – பற்பல விதமான மனோவியாதிகள். ஆதிதெய்வ – தெய்வீக சக்தியால் ஏற்படுபவை – பஞ்சம், காட்டுத்தீ, புயல், வெள்ளம் ஆகியவை.

கரண நியாமகனெ கருணாளு நீனெந்து³
மொரெ ஹொக்கெ நானா பரியல்லி | பரியல்லி மத்³வேஶ
மருள மாடு³வுது³ உசிதல்ல ||18-(154)

கரண நியாமகனே = அனைத்து இந்திரியங்களையும் வழி நடத்துபவனே, ஹே ஹ்ருஷிகேஷனே. நீனு = நீ. கருணாளு எந்து = கருணாமூர்த்தி என்று. நானா பரியல்லி = பற்பல விதங்களாக. மொரெஹொக்கெ = (உன்னை) சரணடைந்தேன். மத்வேஷ = ஹே மத்வநாத ஸ்ரீகிருஷ்ணனே. மருளுமாடுவுது = ஏமாற்றுவது (உன்

தரிசனத்தைக் கொடுக்காமல் சம்சாரத்திலேயே என்னை தள்ளுவது). உசிதல்ல = (பக்தவத்ஸலனான உனக்கு) சரியல்ல அல்லது, நானா பரியல்லி மருளு மாடுவுது = பற்பல விதங்களில் சம்சாரத்தில் ஈடுபடுமாறு செய்வது சரியல்ல.

மததொ^{3}ளகெ^{3} மத்^{4}வமத வ்ரததொ^{3}ளகெ^{3} ஹரிதி^{3}னவு
கதெ^{2}யொளகெ^{3} பா^{4}க^{3}வத கதெ^{2}யென்னி | கதெ^{2}யென்னி மூர்லோக
கதிஶய ஸ்ரீகிருஷ்ண ப்ரதிமென்னி ||19-(155)

மததொளகெ = (பற்பல) மதங்களின் நடுவில். மத்வமத = மத்வாசார்யரால் நிறுவப்பட்ட மதம் (சிறந்தது என்பது அபிப்பிராயம். . தத்வங்களை யதார்த்தமாக நிரூபித்த மதம்). வ்ரததொளகெ = (பற்பல) விரதங்களில் . ஹரிதினவு = ஏகாதசி விரதம். கதெயொளகெ = (பற்பல) புராண கதைகளில். பாகவதகதெ = ஸ்ரீமத் பாகவத கதை. என்னி = என்று அறியுங்கள் (மிகவும் சிறந்தவை என்று அறியுங்கள்). மூர்லோகக்கெ = மூன்று உலகங்களுக்கும். ஸ்ரீகிருஷ்ண ப்ரதிமெ = (உடுப்பியில் ஸ்ரீமதானந்த தீர்த்தர் நிறுவிய) ஸ்ரீகிருஷ்ண பிரதிமையே. அதிஷய = சிறந்தது. என்னி = என்று அறியுங்கள்.

த்வாராவதீம் ஸகலபாக்யவதீம் விஹாய
கோபாலபால லலனாகர பூஜனம் ச |
வார்த்திம் வதூக்ய ஹமதீத்ய ஸ மத்வ நாத:
யத்ராஸ்தி தத்ரஜதிபீடபுரம் கரீய: || (தீர்த்த பிரபந்த)

அனைத்து செல்வங்களும் நிறைந்த த்வாரகையையும், பக்தியுடன் தன்னை வணங்கி பூஜிக்கும் கோபிகாஸ்த்ரீயர்களையும், லட்சுமி தேவியின் வீடான சமுத்திரத்தையும் தாண்டி, மத்வநாதன் ஆனதால், ஸ்ரீகிருஷ்ணன் உடுப்பிக்கு (ரஜதபீடபுரத்திற்கு) வந்து சேர்ந்தான். இப்படியாக உடுப்பியின் ஸ்ரீகிருஷ்ண பிரதிமை சிறந்தது என்று வர்ணித்து, ஆகையாலேயே உடுப்பியே மிகவும் சிறந்த பவித்ர க்ஷேத்திரம் என்று கூறினார்.

ஸர்வவேதாந்தஸாரம் ஹி ஸ்ரீபாகவதமிஷ்யதே |
தத் ரஸாம்ருத த்ருப்தஸ்ய நான்யத்ர ஸ்யாத்ரதி: க்வசித் ||
(பாகவத)

ஸ்ரீமத்பாகவதம் அனைத்து வேதாந்த சாரம் என்று புகழ் பெற்றிருக்கிறது. இதன் ரசத்தினால் திருப்தி அடைந்தவனுக்கு, வேறு எதிலும் திருப்தியே ஆகாது என்று பாகவத புராணத்தின் சிறப்பு விளக்கப்பட்டிருக்கிறது.

நேத்ருஷம் பாவனம் கிஞ்சித் நராணாம் புவி வித்யதே |
யாத்ருஷம் பத்மனாபஸ்ய தினம் பாதக நாஷனம் |
ஏகாதாசிஸமம் கிஞ்சித் பவித்ரம் ந ஹி வித்யதே ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

ஹரிதினத்தைப் போல, அனைத்து பாவங்களையும் பரிகரிக்கும் ஸாதனம் மனிதர்களுக்கு வேறு எதுவும் இல்லை. ஏகாதசி விரதத்திற்கு சமமான பவித்ரமான விரதம் வேறு இல்லை – என்று ஸ்ரீமதானந்த தீர்த்தர் தம் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார்.

நீனல்ல த^{3}ன்யரிகெ^{3} நானெரகெ^{3}னோ ஸ்வாமி
தா^{3}னவாந்தகனெ த^{3}யவந்த | த^{3}யவந்த என்னபி^{4}
மான நினகி^{3}ரலோ த^{3}யவாகோ^{3} ||20-(156)

ஸ்வாமி = ஹே ஸ்ரீகிருஷ்ணா. நீனல்லதெ = உன்னைத் தவிர. அன்யரிகெ = பிறருக்கு. நானு = நான். எரகேனோ = வணங்கு வதில்லை (ஆதரவு கேட்பதில்லை). தானவாந்தகனெ = தைத்ய வினாசகனே. தயவந்த = ஹே க்ருபாளோ. என்னபிமான = என்னுடையது என்னும் அபிமானம் . நினகிரலோ = (என் மேல்) உனக்கு இருக்கட்டும். தயவாகோ = கருணை காட்டுவாயாக. அல்லது, நினகெ என்னபிமான = (பக்தவத்ஸலனான) உனக்கு என்னுடைய மானத்தைக் காக்கும் பாரம் (பொறுப்பு) இரலோ = இருக்கட்டும், ஸ்வாமி .

பிறருக்கு வணங்குவதில்லை என்றால், பிற தேவதைகளை, ஸ்வதந்த்ரன், ஸர்வோத்தமன் என்னும் சிந்தனையுடன் வணங்குவதில்லை என்று பொருள். அவர்கள் அனைவரும் பரமாத்மனின் சேவகர்கள் என்னும் பார்வையில் வணங்கத் தக்கவர்களே ஆகின்றனர். அவர்களையும் தாரதம்யத்திற்கேற்ப பக்தியுடன் வணங்கவேண்டும்.

ஸர்வவர்ணாஸ்ரமைர் விஷ்ணுரேக ஏவேஜ்யதே ஸதா |
ரமாபிரம்மாதயஸ்தஸ்ய பரிவாரதயா ததா || (சதாசார ஸ்ம்ருதி)

அனைத்து வர்ணாசிரமத்தவர்களும் (அனைத்து ஸாதகர்களும்) எப்போதும் விஷ்ணுவே சர்வோத்தமன் என்று வணங்குவர். ரமாபிரம்மாதி தேவதைகளை விஷ்ணுவின் பரிவாரத்தவர்கள் என்று தாரதம்யத்திற்கேற்ப வணங்குகின்றனர் என்று பொருள்.

லெக்கவில்லதெ^{3} தே^{3}ஶ துக்கித^{3}ரெ ப^{2}லவேனு
ஶக்தனாத^{3}ரெ மாத்ர ப^{2}லவேனு | ப^{2}லவேனு நின்ன
ஸத்ப^{4}க்தரனு கண்டு^{3} நமிஸதெ^{3} ||21-(157)

லெக்கவில்லதெ = எண்ணமுடியாத அளவிற்கு. தேஶ = தேசத்தை துக்கிதரெ = சுற்றி வந்தால். பலவேனு = என்ன பலன்?. ஶக்தனாதரே மாத்ர = பலசாலியானால் மட்டும். பலவேனு = என்ன பலன்? (ஒன்றும் இல்லை என்று அர்த்தம்), நின்ன சத்பக்தரனு = உன்னிடம் சத்பக்தி உள்ள சஜ்ஜனர்களை. கண்டு = பார்த்து. நமிஸதெ = வணங்காமல் இருந்தால், யதாயோக்யமாக வணங்காதிருந்தால். பலவேனு = என்ன பலன்?. (தேச சஞ்சாரமும், செல்வங்களின் இருப்பும், ஆயுளும் வீண் என்கிறார்)

விஷ்ணு பக்தர்களே ஸாதகர்கள். விஷ்ணு சன்னிதான விசேஷத்தினால் அவர்களை வணங்குபவர்கள் புனிதர் ஆகின்றனர். சத்புருஷர்களின் சகவாசம், அவர்களின் ஆசியைப் பெற்றுக் கொள்ளாதிருத்தல், ஆகியவை, வெறும் தேசங்களை சுற்றி வருவதைப் போல வீணான செயல் ஆகும்.

தன்யம் ஹி தர்மைகபலம் யதோ ஸ்யாத்
ஞானம் ஸவிக்ஞானமனுப்ரஷாந்தி: (பாகவத)

என்று சொல்லியிருப்பதைப் போல, செல்வத்தினால் தர்மத்தை (புண்ணியத்தை), அதனால் ஞான, விக்ஞான, மோக்ஷங்களை அடைய வேண்டும். தேக சக்தியை குருகளின், விஷ்ணு பக்தர்களின் சேவைக்காக பயன்படுத்த வேண்டும்.

மஹத்ஸேவாம் த்வாரமாஹுர் விமுக்தே: |
தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம் || (பாகவத)

சத்புருஷர்களின் சேவை முக்தியைக் கொடுக்க வல்லது. விஷயங்களை அனுபவிப்பவர்களின் சகவாசம் தமஸ்ஸினைக் கொடுக்க வல்லது. சஜ்ஜனர்களின் நட்பு இல்லாத வேறு எதுவும் நற்பலன்களைக் கொடுக்காது என்னும் இந்த ஸ்லோகத்தின் சாரத்தையே இந்த பத்யம் சொல்கிறது.

நரர கொண்டா³டி³ தி³ன ப³ரிதெ³ களெயலு பே³ட³
நரன ஸக²னாத³ ஶ்ரீகிருஷ்ண | ஶ்ரீகிருஷ்ண மூர்த்திய
சரிதெ கொண்டா³டோ³ மனவுப்பி³ ||22-(158)

நரர = மனுஷ்யர்களை. கொண்டாடி = துதித்தவாறு. தின = காலத்தை. பரிதெ = வீணாக. களெயலு பேட = கழிக்க வேண்டாம். நரன ஸகனாத = பார்த்த சகனான. ஶ்ரீகிருஷ்ணமூர்த்திய = ஶ்ரீகிருஷ்ணரூபியான பரமாத்மனின். சரிதெ = சரித்திரங்களை (மகிமைகளை அறியக்கொடுக்கும் அவதார லீலைகளை). மனவுப்பி = உற்சாகத்துடன். கொண்டாடோ = கொண்டாடியவாரு இரு

நர-ஸ்துதி வீண். மனுஷ்யர்களில் தெரியும் குணங்கள், அவர் அந்தர்யாமியான ஸ்வதந்த்ர கர்த்தனான ஶ்ரீஹரியின் செயல்களே என்று அறிந்து, அவனின் குணகானங்களை செய்தால், அது நர-ஸ்துதி எனப்படுவதில்லை. ஶ்ரீஹரி ப்ரீத்யர்த்தமே ஆகிறது.

நிஷம்ய கர்மாணி குணானதுல்யான்
வீர்யாணி லீலாதனுபி:க்ருதானி |
யதாதிஹர்ஷோத் பலகாஸ்ருகத்கத:
ப்ரோத்கண்ட உத்காயதி ரௌதி நைத்யதி |
ததா புமான் முக்த ஸமஸ்தபந்தன
ஸ்தத்பாவ பாவானுக்ருதாஷயாக்ருதி: |
நிர்தக்தபீஜானுஷயோ மஹீயஸா பக்தி
ப்ரயோகிண ஸமேத்யதோக்ஷஜம் | (பாகவத)

பரமாத்மனின் அவதார லீலைகளையும் (சிறு விரலால் மலையைத் தூக்கிய லீலை) முதலிய அற்புத சக்தியைக் காட்டும் செயல்களையும், ஶ்ரீஹரியின் அற்புத குணங்களைக் கேட்டு, மிகவும் மகிழ்ந்து, ஆனந்தக்கண்ணீர் விட்டு, அவனின் தரிசனத்திற்காக விரும்பினால், அந்த விதமான பக்தி

அதிகமானால், சம்சார பந்தனத்திற்கு மூலகாரணமான கர்வம், அகங்காரம் ஆகியவை சுட்டுப் போகின்றன. அப்போது பிம்பனான ஸ்ரீஹரியின் தரிசனம் கிடைக்கிறது.

பாஹி பாண்ட[3]வபால பாஹி ருக்மிணிலோல
பாஹி த்ரௌபதி[3]ய அபி[4]மான | அபி[4]மான காய்த[3] ஹரி
தே[3]ஹி கைவல்ய நமகி[3]ந்து[3] ||23-(159)

பாண்டவபால = ஹே பாண்டவர்களை காப்பவனே. பாஹி = எனக்கு அருள்வாயாக. ருக்மிணிலோல = ஹே ருக்மிணி ரமணனே. பாஹி = எனக்கு அருள்வாயாக. த்ரௌபதிய அபிமான = திரௌபதியின் மானத்தை. காய்த = காப்பாற்றிய. ஹரி = ஹே ஸ்ரீகிருஷ்ணா. பாஹி = எனக்கு அருள்வாயாக. நமகெ = (பக்தர்களான) எங்களுக்கு. இந்து = இன்றே. கைவல்ய = மோட்சத்தை (அல்லது நீ இல்லாது வேறு கதி இல்லை என்னும் மனோபாவத்தை). தேஹி = அருள்வாயாக

மோட்சத்தை இன்றே கொடு என்பதற்கு, அபரோக்ஷ ஞானத்தை, ஜீவன்முக்தி ஸ்திதியை என்னும் அர்த்தத்துடன் படிக்க வேண்டும். பிரம்மதேவருடன் அனைவரும் முக்திலோகத்தை நுழைவார்கள்.

பாஹி கருணாகரனே பாஹி லக்ஷ்மிரமண
பாஹி கோ[3]பால கு[3]ணஶீல | கு[3]ணஶீல பாப ஸம்
மோஹ களெதெ[3]ன்ன ஸலஹய்ய ||24-(160)

கருணாகரனே = காருண்ய நிதியே. பாஹி = காப்பாற்று. லக்ஷ்மிரமண = ரமா ரமணனே. பாஹி = காப்பாற்று. கோபால = ஹே கோபாலகிருஷ்ணனே. பாஹி = காப்பாற்று. குணஷீல = சத்குண ஸ்வரூபனே. என்ன பாபசந்தோஹ = என் பாவங்களின் ராசியை. களெது = நாசம் செய்து. ஸலஹய்யா = காப்பாற்று, தேவா!

பக்தர்களை அனைத்து வித விபத்துகளிலிருந்து காப்பாற்றுபவன் ஸ்ரீஹரியே. 'விஷான்மஹாக்னே:' ஆகிய பாகவத வாக்கியம் துரியோதனாதிகள் பீமசேனனை விஷம் கொடுத்து கொல்ல முயன்றபோது, பாண்டவர்கள் அனைவரையும் அரக்கு

மாளிகையில் வைத்து எரிக்க முயன்றபோது, துச்சாதனன் திரௌபதியின் மான பங்கம் செய்ய முயன்றபோது, அவர்கள் அனைவரும் ஸ்ரீகிருஷ்ணனாலேயே காப்பாற்றப்பட்டான் என்று சொல்கிறது.

ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேऽர்ஜுன' (கீதை) என்று சொன்னதைப் போல, அபரோக்ஷ ஞானம், அனைத்து பாவங்களையும் காம்ய புண்யங்களையும் அக்னியைப் போல சுடுகின்றது. பகவன் மகிமைகளின் ஞானத்துடனான பக்தியால் செய்யும் ஸ்ரீஹரி நாம சங்கீர்த்தனையானது, அனைத்து பாவங்களையும் நாசம் செய்கிறது.

நாம்னோऽஸ்தி யாவதீ ஷக்தி: பாபனிர்ஹரணீ ஹரே: |
தாவத்கர்த்தும் ந ஷக்னோதி பாதகம் பாதகீஜன: || (கிரு. மஹா)

ஹரி நாமத்தில் இருக்கும் பாப பரிகாரம் செய்யும் சக்தி மிகவும் அபாரமானது. அவ்வளவு பாவங்களை எந்தவொரு பாவியும் செய்யக்கூட முடியாதவனாக இருக்கிறான். அதனாலேயே பகவந்தன், கருணாகரன் என்னும் காரணப் பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

ஏகாந்திக3ள ஒடெ3ய லோகைக ரக்ஷகா
நாக1ஜனவந்த்3ய நளினாக்ஷ | நளினாக்ஷ நின்ன பா
த3க்கெ கைமுகி3தெ3 த3யவாகோ3 ||25-(161)

ஏகாந்திகள = ஏகாந்த பக்தர்களின். ஒடெய = தலைவன். லோகைக ரக்ஷக = அனைத்து உலகங்களின் (மக்களின், பிராணிகளின்) காப்பாளன் (பிற தேவதைகள் ஸ்வதந்த்ரபிரபுவான உன் அதீனமாகியே நீ ஆணையிடுவதைப் போல பலன்களைக் கொடுக்கும் சாமர்த்தியம் உள்ளவர்கள்). அனேகஜனவந்த்ய = சஜ்ஜனர்களை. நளினாக்ஷ = ஹே புண்டரீகாட்சனே கிருஷ்ணா. நின்ன பாதக்கெ = உன் சரண கமலங்களுக்கு. கைமுகிவெ = கை கூப்பி வேண்டுகிறேன். தயவாகோ = எமக்கு அருள்வாயாக

ஏகாந்தினாம் ந கஸ்யசித் அர்த்தே நாராயணோ தேவ: -- ஏகாந்த பக்தர்களுக்கு நாராயணனே புருஷார்த்தன். வேறு எதையும்

அவர்கள் விரும்புவதில்லை. ஏகாந்த பக்தர்களில் பிரம்ம வாயுகள் சிறந்தவர்கள். 'ஹனுமதோ ந ப்ரதிகர்த்ருதா ஸ்யாத் ஸ்வபாவ பக்தஸ்ய நிரௌபதம் மே' (பாக. தாத்). -- எனக்கு சேவை செய்த பிறருக்கு மோட்சம் அளிப்பது என்பது பிரதி உபகாரம் செயதைப் போல ஆகிறது. ஆனால் ஸ்வபாவ பக்தரான (எவ்வித பிரதி பலன்களையும் எதிர்பாராமல் தொடர்ச்சியாக பக்தி செய்வது) ஹனுமந்தனுக்கு, அவனின் சேவைக்கு பிரதிபலனாக எதைக் கொடுத்தாலும் அது சாத்தியமில்லை. -- இப்படியாக ஸ்ரீராமசந்திரன் கூறினார் என்று பார்க்கிறோம்.

ஏகாந்தபக்தாஸ்தே ப்ரீதிமாத்ரோத் தேஷ்யாஸ்ததா ஹரே: ||
ஸர்வே ச ஸோமபா: ப்ரோக்தா: ஸபார்யாஸ்த்ரிதிவைகஸ: ||

ஸ்ரீஹரியின் ப்ரீதி ஒன்றினையே வேண்டும் பக்தர் என்றால், சோம பானம் குடிக்கத் தகுந்தவர்களான தேவதைகள் அனைவரும் மற்றும் அவர்களது மனைவியரும் என்று சத்தத்வ ரத்னமாலா வசனம் சொல்கிறது.

யதி தத்யாத்ருக்தியோகபலம் மொக்ஷமபீஷ்வர: |
பக்தியோக பலத்வேன ந தத் க்ருண்ஹீயுரேவ தே ||

பக்தி யோகத்தின் பலன் என்று ஸ்ரீஹரி முக்தியைக் கொடுத்தால், ஏகாந்த பக்தர்கள் அதனை பக்தியின் பலனாக ஏற்றுக் கொள்வதில்லை என்று பாகவத 11ம் அத்தியாய தாத்பர்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியெனில், மோட்சத்தை நிராகரித்து விடுவார்களோ? என்றால்,

நேச்சந்தி ஸாயுஜ்யமபி பலத்வேன ஹரிர்யதி |
ததாதி பக்திஸந்துஷ்ட அஞ்ஞாத்வேனைவ க்ருஹ்ணதே ||

ஸ்ரீஹரி அவர்களின் பக்தியை மெச்சி சாயுஜ்ய முக்தியைக் கொடுத்தாலும், அதனை பலன் ரூபமாக பெறுவதற்கு அவர்கள் விரும்புவதில்லை. ஆனால், ஸ்ரீஹரியின் ஆணைப்படி அதனை ஏற்றுக் கொள்கிறார்கள் -- என்று பாகவத 3ம் ஸ்கந்த தாத்பர்யத்தில், ஏகாந்த பக்தர்களின் ஸவரூபம் மற்றும் மகிமைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஏகாந்த பக்தர்களின் தலைவனான ஸ்ரீஹரி, த்ரிவிதர்களான (முக்தி யோக்ய, நித்யசம்சாரி மற்றும் தமோயோக்யர் என்னும்) மூவர் களையும் காப்பவனாக இருக்கிறான். தன்னைத்தானே காத்துக் கொள்வதிலும், செயல்களை செய்வதிலும் யாரும் ஸ்வதந்தர்கள் அல்லர். தமோ யோக்யர்கள் ஸ்ரீஹரியிடம் ஸ்வபாவிகமாகவே த்வேஷம் கொண்டவர்கள். அவர்கள் ஸ்ரீஹரியை வணங்கு வதில்லை. முக்தியோக்யர்கள் மூலமாகவே எப்போதும் வணங்கப் படுகிறான் ஸ்ரீஹரி. 'லோகைகரக்ஷக' மற்றும் 'அனேகஜனவந்த்ய' என்னும் பதங்களை அதற்காகவே பயன்படுத்தியிருக்கிறார் தாஸர்.

பா[3]ஹிராந்தரத[3]ல்லி தே[3]ஹாபி[4]மானிக[3]ளு
நீ ஹேளித[3]ந்தெ நடி[3]ஸோரு | நடி[3]ஸோரு நுடி[3]ஸோரு
த்[3]ரோஹக்கெ என்ன கு[3]ரிமாள்பெ ||26-(162)

தேஹாபிமானிகளு = ப்ராக்ருத தேகத்தில் அபிமானம் உள்ள தத்வாபிமானி தேவதைகள். பாஹிரந்தரதல்லி = புற (ஞான கர்மேந்த்ரியங்கள் இருக்கும் தேகம் மற்றும் மனதினால்). நீ = நீ. ஹேளிதந்தெ = ஆணையிட்டதைப் போல. நடிஸோரு = செய்விக்கிறார். நுடிஸோரு = சொல்கின்றனர். ஹீகிரலு = இப்படி இருக்கையில். என்ன = என்னை (தேகாபிமானிகளில் நீ நின்று நடத்தியதைப் போல நடந்த என்னை). த்ரோஹக்கெ = பாவத்திற்கு (கர்ம பந்தனத்திற்கு). குரிமாள்பெ = தள்ளுவாய் (ஸ்வதந்த்ரனாக நானே கர்மங்களை செய்வதைப் போல என்னை நினைக்கச் செய்வாய்).

ஸ்ரீஹரியே சர்வகர்த்தன், ஸ்வதந்த்ர கர்த்தன். ஜீவன் பராதீனன். அவன் ஜட அல்ல. விதி நிஷேதங்கள் – பகவந்தனின் ஆணைப்படியே (ஸ்ருதி ஸ்ம்ருதிகளே பகவந்தனின் ஆணைகள்). ஸ்வதந்த்ரன் விதி நிஷேதங்களால் கட்டுப்பட்டவன் அல்ல. பராதீனன் – அவற்றிற்கு கட்டுப்பட்டவன். ஜடம் – ஞானம் இல்லாதவை. அவற்றிற்கு சுகங்களின் அனுபவம் இல்லை. ஆகையால், ஜீவ ஜட ஈஸ்வர என்னும் மூன்றில், ஈஸ்வர மற்றும் ஜடங்களுக்கு விதி நிஷேதங்கள் இல்லை. ஜீவனுக்கு மட்டுமே அவை உண்டு. ஆகையால், ஜீவனுக்கு மட்டுமே கர்ம பந்தனங்கள் உண்டு.

கர்த்தா ஷாஸ்த்ரார்த்த வத்வாத் (பிரம்மசூத்ர) என்னும் சூத்திரத்தைக் கொண்ட அதிகரணத்தில், விதி நிஷேதங்களை சொல்லும் சாஸ்திரங்கள் பயன்கள் உள்ளவை. வியர்த்தம் ஆனவை அல்ல என்பதால் ஜீவனும் கர்த்தனே என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்வதந்த்ர கர்த்தன் அல்ல. க்ரியா சக்தியே இல்லாத ஜடனும் அல்ல.

அதிஷ்டானம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம் |
விவிதாஷ்ச ப்ருதக்சேஷ்டா த்ருவம் சைவாத்ர பஞ்சமம் ||
ஷரீரவாங்மனோ பிர்யத்யர்ம குருதே நர: |
ந்யாயம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: ||
தத்ரைவம் ஸதி கர்தாரம் ஆத்மானம் கேவலம் து ய: |
பஷ்யத்யக்ருதபுத்தித்வான்ன ஸ பஷ்யதி துர்மதி: || (கீதை)

யோக்யாயோக்ய என்னும் அனைத்து கர்மங்களுக்கும்:
* தேகம்
* ஞான, விருப்பம், க்ரியா சக்தியைக் கொண்ட ஜீவன்
* பல இந்திரியங்கள்
* அவற்றின் செயல்கள்
* அவற்றை செய்விக்கும் ஸ்ரீஹரி

என இவை அனைத்தும் காரணங்கள். இப்படியிருக்கையில், கர்மங்களுக்கு தான் மட்டுமே காரணன் என்று அறியும் நரன், ஞானசூன்யன். இது கீதையை உபதேசித்த ஸ்ரீகிருஷ்ணனின் வாக்கு.

இந்த ஐந்து காரணங்களில், அனைத்தும் சமமான இடத்தைக் கொண்டிருக்கின்றன என்று நினைக்கக்கூடாது. ஐந்தாம் காரணமாக இருக்கும் ஸ்ரீஹரியே ஸ்வதந்த்ர காரணன். மற்ற நான்கும் அவனுக்கு கட்டுபட்டவையே. இதில் ‘கர்த்தா’ என்னும் சொல்லினால், ஸ்வதந்த்ர கர்த்தனான ஸ்ரீஹரியையே வைத்துக் கொண்டு, ‘தெய்வ’ சொல்லினால் ஜீவனை (ஸ்வதந்த்ரனான எதையும் செய்யத் தகுதி இல்லாத ஜடமானவன், ஆனால் ஜடனும் இல்லாமல், பூர்ண அஸ்வதந்த்ரனான ஜீவனை) வைத்துக் கொண்டாலும் கர்த்தா என்றால் ஸ்ரீஹரியே – ஸ்வதந்த்ரன், முக்கியமானவன்.

இந்த ஆதாரங்களை ஸ்ரீமதானந்த தீர்த்தர் தமது ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் நிர்ணயம் செய்திருக்கிறார். பாண்டவர்கள் அரண்யவாசத்தில் இருந்தபோது, பீமசேனன் ஒப்புக்கொண்ட அரண்யவாசம், அஞ்ஞாத வாசம் ஆகியவற்றை முடித்தபிறகாவது, பொறுமையாக இருக்காமல், போர் செய்தாவது (சர்வக்ஞனான பீமனுக்கு துரியோதனன் போர் இல்லாமல் அரசினைக் கொடுப்பதில்லை என்று தெரிந்திருந்தது) அரசினை அடைய வேண்டும் என்னும் அனுமதியை தர்மராஜனிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்று நிச்சயித்து, திரௌபதியை இந்த விஷயத்தை சொல்லுமாறு தர்மராஜனிடம் அனுப்பினார்.

ஆனால் தர்மராஜனோ, சர்வகர்த்தனான ஸ்ரீஹரியே ராஜ்ய ஐஸ்வர்யங்களை, தன் விருப்பப்படி கொடுக்கும் ஸ்வதந்த்ர பிரபுவாக இருக்கிறான். துஷ்கர்மிகளின் செயல்களுக்கும் அவனே பொறுப்பு. இப்படி இருக்கையில், துரியோதனாதிகளை போரில் வென்று, அரசைப் பெற்றுக் கொள்வது என்பது சரியல்ல'. என்று சொல்லி மறுபடி கருணை குணத்தையே வெளிப்படுத்தினான்.

அப்போது திரௌபதி, க்ஷத்ரிய ராஜனின் கடமையை எடுத்துச் சொல்லி, ஸ்ரீஹரியின் அதீனனாகியே ஜீவன் தன் கடமைகளை செய்ய வேண்டும் என்றும், புருஷ முயற்சியை செய்வதற்கு இடம் இருக்கிறது என்றும் சொல்லி விளக்க, தர்மராஜன் அதற்கு பதில் அளிக்கமுடியாமல், 'வாசாலுதா நாதிதராம் ஹி ஷோபதே ஸ்த்ரீணாம்' - பெண்களுக்கு வாசாலுதா (அதிகமாக பேசுவது) அழகில்லை என்று சொல்கிறான்.

திரௌபதியும் கணவன் என்னும் மரியாதையுடன் அமைதி காக்கிறாள். அந்த சந்தர்ப்பத்தைக் கண்ட பீமன், தர்மராஜனுடன் வாக்குவாதம் செய்யத் துவங்குகிறான். சர்வக்ஞனான வாயுதேவரின் எதிரில் தர்மராஜன் வாதிட்டு வெல்ல முடியுமோ? ஜீவனின் முயற்சிக்கு இடம் உள்ளது என்று ஒப்புக்கொண்டு, அஞ்ஞான வாசத்தை முடித்தபிறகு, துரியோதனன் அரசினைக் கொடுக்கவில்லையெனில், போர் செய்வதாக ஒப்புக் கொள்கிறான்.

இந்த சந்தர்ப்பத்தை, மகாபாரத தாத்பர்ய நிர்ணய பாகத்தை, குருமுகத்திலிருந்து பாடம் கேட்டால், ஜீவகர்த்ருத்வ விஷயத்தில்

உண்மையான பொருள் விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த சம்பவத்தின் இறுதியில், ஆதாரங்களை தொகுத்துக் கொடுத்த பீமனின் வாக்கியங்கள் இவ்வாறு இருக்கின்றன.

ஸ்வபாவாக்யா யோக்யதா யா ஹடாக்யாயாऽனாதிஸித்தா ஸர்வஜீவேஷு நித்யா
ஸா காரணா ப்ரதமம் து த்விதீயமனாதி கர்ம்யைவ த்ருதீய: |
ஜீவப்ரயத்ன: பௌருஷாக்யஸ்ததேதத் த்ரயம் விஷ்ணோர்வஷகம் ஸதைவ
ஸ கஸ்யசின்னவஷே வாஸுதேவ: பராத்பர: பரமோऽஸௌ ஸ்வதந்த்ர: ||

ஜீவ ஸ்வபாவம் 1. யோக்யதை – இதனை 'ஹட' என்று சொல்கின்றனர். இந்த யோக்யதை அல்லது ஹட அனைத்து ஜீவர்களிலும் அனாதியாகவே இருக்கிறது. அது நித்யமே ஆகிறது. ஜீவர்களின் நானாவித கர்மங்களை செய்வதற்கு இதுவே முதலாம் காரணம் ஆகும்.

2. அனாதிகர்மம் – இது இரண்டாவது காரணம்.
3. பௌருஷ என்று அழைக்கப்படும் ஜீவ ப்ரயத்னம் மூன்றாவது காரணம்.

இந்த மூன்றும் எப்போதுமே ஸ்ரீஹரியின் வசத்திலேயே இருக்கின்றன. விஷ்ணு மட்டும் யாரின் வசத்திலும் இல்லை. அவன் பராத்பரன். லட்சுமிதேவியைவிட அனந்த குணங்கள் அதிகம் உள்ளவன். சர்வோத்தமன். ஸ்வதந்த்ரன்.

அடுத்து பீமசேனர் 'யத்னோஅதோ ஹடகர்ம ப்ரயோக்தா...' என்று பல வாக்கியங்களால் ஜீவ யோக்யதை மற்றும் வினைப்பயன் களால் ஸ்ரீஹரியினால் கிடைக்கும் பலன்களை, புருஷ முயற்சி கிடைக்கச் செய்கிறது என்று ஜீவனின் முயற்சியின் முக்கியத்துவத்தை சொல்கிறார்.

ஜீவர்கள், அஸ்வதந்த்ரர் ஆனாலும், தத்த ஸ்வாதந்த்ர்யம் உள்ளவர்கள் என்றும், ஆகையால், அவரின் யோக்யதைக்கேற்ப கர்த்ருத்வம் உள்ளவராக, கர்மங்களை முயற்சி செய்வர் என்றும்,

'கர்த்ருத்வம் ப்ரதி ஸ்வாதந்த்ர்யம்' 'ஸ்வதந்த்ர கர்த்தா' (1-4-24) என்னும் பாணினியின் சூத்திரம் சொல்கிறது. ஜீவர்களும் சிறிது ஸ்வாதந்த்ர்யம் உள்ளவர்கள் என்றும், அதனாலேயே 'கர்மண்யே வாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன' -- கர்மத்தில் அதிகாரம் உள்ளது, ஆனால் பலனில் ஸ்வதந்த்ர்யம் இல்லை என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் சொல்லியிருக்கிறான் என்று சிலர் நினைத்து, இந்த ஆதாரத்தை விளக்குகிறார்கள்.

தத்தஸ்வாதந்த்ர்ய ஆதாரத்தின் விளக்கம், முன்னர் 24ம் பத்யத்தில் விளக்கியிருப்பதை பார்க்கலாம். அதே அர்த்தத்தையே இங்கும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏகாத³ஶேந்த்³ரியக³ளேக ப்ரகாரத³லி
லோகைகனாத² நின்னல்லி | நின்னல்லி விஸ்ம்ருதி கொட³லு
வைகுண்ட² லோக நானொல்லெ ||27-(163)

லோகைகனாத = ஹே ஜகதேக நாதனான கிருஷ்ணனே. ஏகாதஷேந்த்ரியகளு = 11 இந்திரியங்கள். ஏகப்ரகாரதலி = ஒரே மாதிரியாக (வேறு இடத்தில் அலைபாயாமல், உன் ப்ரீத்யர்த்தமாக தம் செயல்களை செய்தவாறு). நின்னல்லி = உன்னிடமே (உன் சேவையிலேயே) இருக்கட்டும் (இருக்குமாறு அருள்வாயாக).. நின்னல்லி விஸ்ம்ருதிய = உன் விஷயத்தை மறக்கும்படியான . கொடலு = கொடுப்பதானால். வைகுண்ட = வைகுண்டத்தை. நானொல்லெ = நான் விரும்புவதில்லை

வாக், பாணி, பாத, பாயு, உபஸ்த என்னும் ஐந்து கர்மேந்திரியங்கள். சக்ஷு, ஸ்ரோத்ர, ஸ்பர்ஷ, ரசன, ப்ராண என்னும் ஐந்து ஞானேந்திரியங்கள் மற்றும் 1 மனஸ் என தேகத்தில் இருப்பவை 11 இந்திரியங்கள். இவை அனைத்தும் எப்போதும் உன் சேவையில் இருக்குமாறு அருள்வாயாக என்று பிரார்த்திக்கிறார்.

ஸ்மர்தவ்ய: ஸததம் விஷ்ணு: விஸ்மர்தவ்யோ ந ஜாதுசித் |
ஸர்வே விதி நிஷேதா:ஸ்யு: ஏதயோரேவ கிங்கரா: ||
(சதாசார ஸ்ம்ருதி)

அதாவது, ஸ்ரீஹரியின் ஸ்மரணை நிரந்தரமாக இருக்க வேண்டும். விஸ்மரணை (மறதி) என்பது வரவேகூடாது. ஹரிஸ்மரணை பூர்வகமாக செய்யப்படும் கிருதியே தர்மம். விஸ்மரணையினால் செய்யப்படும் செயல்கள் அதர்மம் ஆகும்.

வைகுண்டபதியின் கதா ஸ்ரவணம் என்னும் அமிர்த பிரவாகம் இல்லாத, அதனை ஆதரவளிக்காத பக்தர்கள் இல்லாத, யக்ஞ பதியான ஸ்ரீஹரியின் பூஜாரூபமான மகோத்ஸவங்கள் இல்லாத இடங்கள், பற்பல சுகபோகங்களால் நிரம்பியிருந்தாலும், அவை வசிக்கத் தகுந்த இடங்கள் இல்லை என்று ஸ்ரீமத்பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தையே ஸ்ரீதாஸர், உன் நினைவு இல்லாமல் வைகுண்டத்தையே கொடுத்தாலும் அது எனக்கு வேண்டாம் என்று சொல்கிறார். வைகுண்டாதி முக்த லோகங்களில் அவனின் விஸ்மரணைக்கு வாய்ப்பில்லை. நீயே அப்படிப்பட்ட விஸ்மரணையைக் கொடுத்தால், அந்த லோகங்களே எனக்கு வேண்டாம்.

ந யத்ர வைகுண்டகதா சுதாபகா
ந ஸாதவோ பாகவதாஸ்ததாஸ்ரயா:
ந யத்ர யக்ஞேஷமகாமஹோத்ஸவா:
சுரேஷலோகோऽபி ந யாதிஸேவ்யதாம் || (பாகவதம்)

நின்னவர நீ மரெத^{3}ரின்னு ஸாகு^{1}வர்யாரு
பன்னங்கஶயன புருஷேஶ | புருஷேஷ நீ ஸதத ஶ
ரணரனு பி^{3}டு^{3}வோது^{3}சிதல்ல ||28-(164)

நின்னவர = உன் பக்தர்களை. நீ = நீ. மரெதரெ = மறந்துவிட்டால். இன்னு = மேலும். ஸாகுவர்யாரு = காப்பாற்றுபவர்கள் வேறு யார் இருக்கிறார்கள் (யாரும் இல்லை). பன்னங்கஷயன = சேஷசாயி யான. புருசேஷ = ஹே புருஷோத்தமனே. நீ = நீ. ஸதத = அனைத்து காலங்களில். ஷரணரனு = உன் சரணங்களை பற்றியவர் களை (உன் பக்தர்களை). பிடுவோது = (அருளாமல்) புறக்கணிப்பது . உசிதல்ல = சரியல்ல (பக்தவத்ஸலன் என்னும் விருது பெற்றதற்கு இது சரியல்ல)

அனைத்திற்கும் சாட்சியாக இருந்து, எப்போதும் அனைத்தையும் அறிந்த சர்வக்ஞருக்கு ‘மறதி’ என்பது இல்லவேயில்லை. ஆகையால், ‘மரெதரெ’ என்பதற்கு புறக்கணித்தால் என்று அர்த்தம் சொல்ல வேண்டும்.

புருஷேஷ என்பது புருஷோத்தமன் என்ற பெயரைக் குறிக்கிறது. ஶ்ரீமத் பகவத்கீதையில் ஶ்ரீகிருஷ்ணன், தானே புருஷோத்தமன் என்று வேத இதிகாசங்களில் புகழ் பெற்றிருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறான்.

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்சாக்ஷர ஏவ ச |
க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே ||
உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: |
யோ லோகத்ரயமாவிஷ்ச பிபர்த்யவ்யய ஈஷ்வர: ||
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹம் அக்ஷராதபி சோத்தம: |
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: || (கீதை)

புருஷர் என்று அழைக்கப்படுபவர்கள் இருவர். அழியக்கூடிய தேகம் கொண்ட ஜீவர்கள் மற்றும் நித்யமும் அப்ராக்ருத தேகம் கொண்ட லட்சுமிதேவி. ஜீவர்கள் க்ஷரபுருஷர். லட்சுமி அக்ஷரபுருஷள். இந்த இருவரிடமிருந்து வேறுபட்டும், உத்தமனுமான புருஷனே, புருஷோத்தமன் என்று ஸ்ருதிகளிலும் புராணாதி பௌருஷேய கிரந்தங்களிலும் பிரசித்தனான பரமாத்மன். அவனே நான் (ஶ்ரீகிருஷ்ணன்).

ஸ்வச்ச க³ங்கெ³ய ஔளகெ³ அச்யுதன ஸ்மரிஸிதொ³டெ³
ஸ்வச்ச முடி³யெந்து³ கரெஸோரு | கரெஸோரு கைவல்ய
நிஸ்சயவு கண்ட்³ய எமகி³ன்னு ||29-(165)

ஸ்வச்ச கங்கெயொளகெ = பவித்ரமான கங்கையில் ஸ்னானம் செய்யும்போது . அச்யுதன = ஶ்ரீஹரியை. ஸ்மரிஸிதொடெ = நினைத்தால். அச்சமடியெந்து = பரம சுத்த மடியென்று. கரெஸோரு = சொல்லப்படுவர். அல்லது, அச்யுதன = ஶ்ரீஹரியை. ஸ்மரிஸி தொடெ = ஸ்மரித்தால். ஸ்வச்சகங்கெய ஔளகெ = (எப்போதும்) பவித்ரமான கங்கையில் இருந்தாற்போலவே ஆகும். அச்ச மடியெந்து = அதையே சுத்தமான மடி என்று (எப்போதும் ஹரி

ஸ்மரணை உள்ளவர்களே மடியானவர்கள் என்று). கரெஸோரு = அழைக்கப்படுகின்றனர்

இன்னு = இதனை அறிந்தபிறகு. எமகெ = நமக்கு. கைவல்ய = மோட்சமானது. நிஸ்சயவு கண்ட்ய = கண்டிப்பாகக் கிடைக்கும் பார். (மோட்சம் கிடைப்பது உறுதி என்பது கருத்து)

ஸ்ரீஹரியின் மஹாத்ம்ய ஞானம் இருந்தால் மட்டுமே, நிரந்தர ஹரிஸ்மரணை இருப்பது சாத்தியமாகும். ஞான தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து, அந்த:கரண சுத்தியைப் பெற்று (மடிவந்தராகி) மோட்சத்தை அடையுங்கள் என்று உபதேசம் செய்கிறார் ஸ்ரீதாஸராயர்.

மலநிர்மோசனம் பும்ஸாம் ஜலஸ்னானம் தினே தினே |
ஸக்ருத்கிதாம்பஸி ஸ்னானம் ஸம்ஸாரமல நாஷனம் ||

என்று கீதை மஹாத்ம்யத்தில், தினமும் செய்யும் தண்ணீர் ஸ்னானத்தினால் தேகத்தின் அழுக்கு மட்டும் கழிகிறது. பகவத்கீதை என்னும் தீர்த்தத்தில் ஒரு முறை முழுகி ஸ்னானம் செய்தால், சம்சார என்னும் மலமே நாசம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. இப்படி சொல்வதால், கர்ம ஸித்திக்கு மிகவும் அவசியமான ஜல ஸ்னானத்தை விட்டுவிடலாம் என்று அர்த்தம் சொல்லக்கூடாது.

கங்காதி நதிகளின் தண்ணீர்களே தீர்த்தங்கள் அல்ல. தீர்த்தாபிமானி தேவதைகளையும், அவர்களின் அந்தர்யாமியான அச்யுதனையும் சிந்தித்து ஸ்னானம் செய்தால் மட்டுமே, ஸ்னானத்தால் கிடைக்கும் பலன்கள் (மடி) கிடைக்கிறது என்பதை, ஸ்ரீமத் பாகவதம், தண்ணீரே தீர்த்தம் என்று அறிவதை கண்டிக்கிறது.

யஸ்யாத்ம புத்தி:குணபே த்ரிதாதுகே
ஸ்வதீ:கலத்ராதிஷு பௌம இஜ்யதீ: |
யத்தீர்த்தபுத்தி: ஸலிலே ந கர்ஹிசித்
ஜனேஷ்யபிக்ஞேஷு ஸ ஏவ கோகர: || (பாகவதம்)

வாதம், பித்தம் ஆகியவற்றைக் கொண்ட தேகமே நான் என்று (தேகமே ஆத்மன் என்று) அறிபவனும், மனைவி, மக்களில் இவர்கள் தன்னவர்கள் என்னும் அபிமானம் கொண்டவனும், கட்டை, உலோக பிரதிமைகளை இவையே பூஜைக்கு உகந்தவை என்று அறிபவனும், ஞானிகளால் மூர்க்கன் என்று அறியப்படுகிறான்.

ஆனந்தா^{3}னந்த^{3} பரமானந்த^{3}ரூப நி
த்யானந்த^{3}வரத^{3} ஆத^{4}மார | ஆத்^{4}மரிகெ நாராய
ணானந்த^{3}மயனெ த^{3}யவாகோ^{3} ||30-(166)

ஆனந்தானந்த = ஸ்வரூபானந்தத்தினாலேயே எப்போதும் மகிழ்ச்சி யடையும் அல்லது ஆனந்தானந்த = மகிழ்ச்சியான நந்தனைக் கொண்டவனே, அதாவது, தனது பால்ய லீலைகளால் நந்த கோபனுக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தவனே.. பரமானந்தரூப = பூர்ண ஆனந்தமான தேகத்தைக் கொண்டவன். நித்யானந்த = (இப்படியான ஆனந்தத்தை) எப்போதும் அனுபவிப்பவன். வரத = அனைவருக்கும் அனைத்து விதமான நலன்களையும் கொடுப்பவன். அல்லது, நித்யானந்தவரத = நித்யானந்தமான மோட்சத்தைக் கொடுப்பவன். அல்லது,. நித்யமான இருப்பவனும், ஆனந்தவரத = ஸ்ரீமதானந்த தீர்த்தருக்கு எப்போதும் நலன்களை வழங்குபவன். நாராயண = ஹே நாராயணனே. ஆனந்தமயனே = ‘ஆனந்தமய’ என்னும் பெயரைக் கொண்டவனே. அதமரிகெ = அல்பர்களுக்கு (உன் நித்ய தாஸர்களான மனுஷ்யாதி அதம முக்தி யோக்யர்களுக்கு). தயவாகோ = கருணை காட்டுவாயாக.

ஆனந்ததீர்த்தபரானந்தவரத (த்வாதச ஸ்தோத்திரம்) என்று ஸ்ரீமதானந்த தீர்த்தரால் வர்ணிக்கப்பட்ட மகிமையையே இங்கு சொல்கிறார்.

ஆனந்தமய என்று சொல்லப்படுபவன் விஷ்ணுவே என்று ‘ஆனந்த மயோ஽ப்யாஸாத்’ என்னும் பிரம்மசூத்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த ஆனந்தமயனே ஸ்ரீகிருஷ்ணன் என்று குறிப்பிடுகிறார்.

நாராயண என்னும் சொல் பற்பல அர்த்தங்களைக் கொண்டது. ஸ்ரீஹரியின் பற்பல மகிமைகளை நிரூபிக்கிறது. அவற்றில், குண பூர்ணத்வம், நிர்தோஷத்வம், ஞேயத்வ (யோக்ய ஸாதனங்களால் யதா யோக்யமாக அறியப்படுபவன்), கம்யத்வ ((முக்தர்களால் வணங்கப்படுபவன்) என்னும் அர்த்தங்கள் முக்கியமானவை.

ஏனெம்பெ3 நின்னாடகானந்த3மயனெ கு3ணி
கு3ணக3ளொளகி3த்து3 கு3ணகார்ய | கு3ணகார்யக3ள மாடி3
ப்ராணிக3ளிகு3ணிஸுவி ஸுக2து3க்க ||31-(167)

ஆனந்தமயனே = ஆனந்தரூபனான ஹே ஸ்ரீகிருஷ்ணனே. நின்னாடகெ = உன் விளையாட்டிற்கு (உன் ஸ்ருஷ்ட்யாதி லீலைகளின் விஷயத்திற்கு). அல்லது, அற்புத மகிமனான உன் பாலலீலைகளே முதலான உன் இந்த அவதாரங்களின் லீலைகளின் விஷயத்திற்கு. ஏனெம்பெ = என்ன சொல்வேன்? (அறிவதற்கும் சொல்வதற்கும் முடியாது). குணிகுணகளொளகித்து = ஜீவர்களிலும், அவர்களை சம்சாரத்தில் தள்ளியிருக்கும் சத்வரஜஸ் தமோ குணங்களிலும் அந்தர்யாமியாக இருந்து, . குணகார்யகள = குணங்களால் புண்யபாப ரூபமான கர்மங்களை. மாடி = (ஸ்வதந்த்ர கர்த்தனான) நீயே செய்து. பிராணிகளுக்கு = ஜீவர்களுக்கு (சரீரங்களுக்கு). சுகதுக்க = சுகதுக்கங்களை. உணிஸுவி = போகிக்குமாறு (அனுபவிக்குமாறு) செய்கிறாய்.

கீதையில் சொல்லியிருப்பதைப் போல, 'காரணம் குண ஸங்கோ஽ஸ்ய ஸதஸத்யோனி ஜன்மஸு' - உச்ச நீச யோனிகளில் ஜீவர்கள் பிறப்பதற்கு குண சங்கமே (சத்வாதி குணங்களின் சம்பந்தமே) காரணம். இந்த குணங்கள் (சத்வ, ரஜஸ், தமோ) ஸ்ரீ, பூ, துர்கா ரூபளான லட்சுமிதேவியினால் துவக்கப்பட்டு, ஜீவர்களை கட்டுப்படுத்துகின்றன.

ஆனால், அவளோ ஸ்ரீஹரியின் அதீனளாகி அவனின் விருப்பத்திற் கேற்பவே, குணங்களால் குணகார்யங்களை செய்கிறாள். இந்த குண காரியங்களே சுகதுக்கங்களுக்கு காரணங்கள் ஆகும். தேஹேந்திரி யாதிகள், ஷப்தாதி விஷயங்கள் (அனைத்து வஸ்துக்கள்) குணங்களால் தோன்றியதே ஆகும். தேஹேந்திரியாதிகளால் உருவாகும் புண்ய பாவ ரூபமான கர்மங்களும் குண கார்யங்களே.

சுக துக்கங்களுக்கு, குண கார்யங்களே காரணம் என்றும், குண நியாமகளான மகாலட்சுமியிடமிருந்து வேறுபட்டவனும், அனந்த மடங்கு உத்தமனுமான ஸ்ரீஹரியே சர்வோத்தமன் என்றும், ஜீவன் அறியும்போது, அவன் குணபந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

நான்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டானுபஷ்யதி |
குணேப்யஸ்ச பரம் வேத்தி மத்பவம் ஸோऽதிகச்சதி ||

குணங்களாலேயே பந்தனம் என்றும், ஜீவன் எப்போதும் அவற்றின் வசனாகவே இருந்து, கர்மங்களை செய்கிறான் என்றும், அவற்றினாலேயே சுக துக்கங்களான பலன்கள் கிடைக்கின்றன என்பதை அறிந்தால், அவற்றிலிருந்து வேறுபட்டிருக்கும் சர்வோத்தமன் ஒருவன் இருக்கிறான் என்பதை புரிந்துகொண்டு, ஸ்ரீகிருஷ்ணன், காரணங்களால் பிறக்கும் கர்த்ருத்வ, ஜீவஸ்வரூப பூதமான பொதுவான கர்த்ருத்வம் இரண்டும் பரமாத்மனின் அதீனங்களே ஆனாலும், குணத்தினால் வரும் கர்த்ருத்வத்திற்கு குணங்களே முக்கியமான காரணங்கள் என்றும், பொதுவான கர்த்ருத்வத்திற்கு தானே முக்கிய காரணன் என்றும், இந்த இரண்டிலிருந்து வேறுபட்டும், ஸ்வதந்த்ரனுமான தன்னை முக்கிய கர்தன் என்று அறிந்தவன் மட்டும் தன்னை வந்து அடைகிறான் என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான்.

குட்டி பீ^{3}ஸி கொய்து^{3}ஸுட்டு பே^{3}ய்ஸித^3 பாப
கெட்டு போபுத^{3}கெ ப^{3}கெ^{3}யில்ல | ப^{3}கெ^{3}யில்ல த^{3}த^{3}ரிந்த^3
விட்ட^{2}லன பாடி^{3} ஸுகி^{2}யாகு^{3} ||32-(168)

பறிப்பது, கழுவுவது, புடைப்பது, பிரிப்பது, வேக வைப்பது (தான்யம் முதலான ஆகார வஸ்துகளை புடைப்பது, வேக வைப்பது போன்றவை), வாணலி அல்லது நெருப்பில் வைத்து சுடுவது, வேக வைப்பது முதலான செயல்களால், நம் வெளிப்பார்வைக்கு தெரியாத பற்பல பிராணிகளுக்கு தொந்தரவு ஆகிறது.

பாப கெட்டு போபுதகெ = இவற்றால் உண்டாகும் பாவங்கள் அழிவதற்கு . பகெயில்ல ததரிந்த = வேறு வழியிலாத காரணத்தால், . விட்டலன = ஸ்ரீஹரியை. பாடி = கொண்டாடி (குண

சங்கீர்த்தனம் செய்து). ஸுகியாகு = அந்த பாவங்கள் அழிந்தவனாக சுகத்தை அடைவாயாக.

இந்த நுடியில் சொல்லப்பட்டிருக்கும் ஐந்து விதமான செயல்களால் வருகின்ற பிராணிஹத்யா தோஷங்களுக்கு, ஸ்ரீஹரி ஸ்துதியைத் தவிர வேறு பரிகாரமே இல்லை என்று சொல்வதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில், வைஷ்வதேவ என்னும் செயலானது, பஞ்சசூன தோஷத்தின் பிராயச்சித்த ரூபமானது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

இங்கு சொல்லப்பட்டிருக்கும் ஐந்து விதங்களால், பிராணிஹத்யமே 'பஞ்சஸூனா' என்று சொல்லப்படுகிறது. 'அக்னி அந்தர்கத பாரதி ரமண முக்யபிராணாந்தர்கத ஹரிணிபதி ஸ்ரீபரசுராம ப்ரீத்யர்த்தம் பஞ்சசூன தோஷ பிராயச்சித்தார்த்தம் ச வைஷ்வதேவ ஹோமாக்யம் கர்ம கரிஷ்யே' என்னும் வைஷ்வதேவ யக்ஞுத்தின் சங்கல்பம் இதனையே குறிக்கிறது.

தேவதைகளுக்கும், தேவோத்தமனான நாராயணனுக்கும், அக்னியின் மூலம் ஹவிஸ்கள் அர்ப்பிக்கப்படுகின்றன. ஹரிஸ்துதி பூர்வகமாக ஹவிஸ்ஸுகளை அர்ப்பணம் செய்தால் மட்டுமே, சங்கல்பத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல, பஞ்சசூன தோஷ பிராயச்சித்த ரூபமாக ஆகிறது. இது இல்லையேல், பாப பரிகாரமும், சுக பிராப்தமும் ஆவதில்லை என்பது ஸ்ரீதாஸார்யரின் வாக்கு. வைஷ்வதேவம் 'தேவயக்ஞம்'. பிரம்மயக்ஞம் 'ரிஷியக்ஞம்'. தர்ப்பண, ஸ்ரார்த்திகள் 'பித்ருயக்ஞம்'. இந்த மூன்று விதமான ருணங்களின் (தேவருண, ரிஷிகண, பித்ருருண) பரிகாரத்திற்காக இவற்றை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டி ருக்கின்றன. அனைத்தையும் யக்ஞங்கள் என்று அழைத்தாலும், ஸ்ரீஹரிஸ்மரணை பூர்வகமாகவே செய்ய வேண்டும் என்பதையே இங்கு குறிப்பிடுகிறார். யக்ஞ என்றால் விஷ்ணு பூஜை என்றே பொருள்.

ஶுகனய்ய நீனெ தாரகனெந்து[3] நின்ன ஸே
வகரு பேளுவுது[3] நா கேளி । நா கேளி மொரெஹொக்கெ
ப[4]குதவத்ஸலனெ த[3]யவாகோ[3] ||33-(169)

ஷுகனய்ய = சுகாசார்யரின் தந்தையான ஸ்ரீவேதவியாச ரூபனான. நீனெ = நீயே (வேறு யாரும் அல்ல). தாரகனெந்து = (சம்சாரம் என்னும் கடலை) தாண்டச் செய்பவன் என்று. நின்ன ஸேவகரு = உன் பக்தனான ஞானிகள். பேளுவுது = சொல்வதை. நா = நான். கேளி = கேட்டு அறிந்து. பகுத வத்ஸலனெ = பக்தர்களில் கிருபை உள்ள ஹே கிருஷ்ணனே. மொரெஹொக்கெ = (உன்னை) சரணடைகிறேன் . தயவாகோ = எனக்கு கருணை காட்டி அருள்வாயாக.

'நீனே ஷுகனய்ய' என்னும் சொல்வதால், ஸ்ரீகிருஷ்ணன் சுகத்தைக் கொடுப்பவரான வேதவியாசரிடமிருந்து வேறுபடாதவன் என்று குறிப்பிடப்படுகிறது. 'வேதாந்த க்ருத்வேத விதேவ சாஹம்' (கீதை) என்று, நானே வேதாந்த (பிரம்ம சூத்திரங்களை) நிர்மாணித்தவன், (அபௌருஷேயங்களான) வேதங்களை அறிந்தவன் நானே என்று ஸ்ரீகிருஷ்ணனே சொல்லிக் கொண்டிருக்கிறான். 'தேஷாமஹம் சமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸார ஸாகராத்' (கீதை) என்னில் பக்திபூர்வகமாக சரணடைந்தவர்களை சம்சார சமுத்திரத்திலிருந்து தாண்டச் செய்பவன் நானே என்றும் சொல்லியிருக்கிறான்.

என்ன போலுவ பதிதரின்னில்ல லோகதொ³ளு பதித பா
வன நினகெ³ ஸரியில்ல | ஸரியில்ல லோகதொ³ளு
அன்யப⁴ய எனகெ³ மொத³லில்ல ||34-(170)

லோகதொளு = உலகத்தில். என்ன = என்னை. போலுவ = போல் உள்ள. பதிதரு = ப்ரஷ்டர்கள். இன்னில்ல = வேறு யாரும் இல்லை. பதித பாவன = தோஷிகளை பவித்ரர்களாக மாற்றும். நினகெ சரியில்ல = உனகு சமமானவர்கள் வேறு யாரும் இல்லை. (இப்படியாக அறிந்த). எனகெ = எனக்கு. லோகதொளு = உலகத்தில். அன்யபய = வேறு எந்த பயத்திற்கும். மொதலில்ல = காரணம் இல்லை (மூலகாரணம் இல்லை)

நானோ பதிதன் (ப்ரஷ்டன்). நீ பதிதோத்தாரகன் என்னும் திடமான நம்பிக்கை இருப்பதால் பதிதனே ஆனாலும், எனக்கு பயம் எதற்கு? (பயம் இல்லை என்று பொருள்). பதிதன் என்றால் ஸாதனை மார்க்கத்தை பின்பற்றாதவன். அதைவிட அதிகமான பயம் சஜ்ஜனர்களுக்கு இல்லவே இல்லை. பதிதபாவனன். சம்சாரம்

என்னும் சாகரத்தில் விழுந்து ஜீவர்களை ப்ராக்ருத பந்தம் என்னும் மலத்தை சுத்தப்படுத்தி, ஸ்வஸ்ரூப ஸ்திதியை கொடுப்பவன்.

ஸ்வர்ணகாரோ யதா ஸ்வர்ணமலமக்னௌ நிஹத்ய ச |
ஷுத்தேன தேன சாத்மேஷ்டம் குருதே ரூபமஞ்சஸா ||
ஏவம் ஸ பகவான் விஷ்ணு: ஜீவஸ்வர்ணஸ்ய யன்மலம் |
அவித்யாகாமகர்மாத்யம் ஆத்மாக்னௌ நாஷ்ய ஸர்வக்ருத் ||
ஸ்வேச்சயா குருதே ரூபம் யத்யோக்யம் யஸ்ய முக்திகம் |
பித்ருஜீவஸ்ய பித்ர்யம் காந்தர்வம் தஸ்ய சைவ ஹி ||
தெய்வம் து தேவஜீவஸ்ய...

ஆகிய பிரமாண வாக்கியங்கள், பொற்கொல்லன் ஆனவன், எப்படி தங்கத்தை நெருப்பில் போட்டு அதன் தோஷங்களை நீக்கி, சுத்தப்படுத்துகிறானோ மற்றும் தன் விருப்பத்திற்கேற்ப ஆபரண ரூபங்களை செய்கிறானோ, அப்படியே பகவான் விஷ்ணுவும், தங்கத்தைப் போல சுத்த ஸ்வரூபனான ஜீவனின் அவித்யா போன்ற மலத்தை, தன் அருள் என்னும் அக்னியினால் சுட்டு, தன் விருப்பத்தினால் ('யமைவேஷ வ்ருணுதே' ஆகிய பிரமாணங்களால் தெரிவதைப் போல) அவரவர்களின் தகுதிக்கேற்ப ஜீவர்களுக்கு முறையே அவரவர்களின் ஸ்வரூபத்தையே கொடுக்கிறான் என்று, பதிதர்களை அருளும் வழிமுறையை சொல்கிறார்.

நீ நுடி³து³ நடெ³த³ந்தெ நா நுடி³து³ நடெ³வெனோ
ஞானிக³ள அரஸ கு³ணபூர்ண | கு³ணபூர்ண நீனென்ன
ஹீனதெய மாடி³ பி³டு³வோதே³ ||35-(171)

நீ = நீ. நுடிது நடெதந்தெ = சொல்லி நடந்ததைப் போல (ஜீவனுக்கு பாதுகாப்பாளனாக நீ இருப்பதைப் போல). நா = நான். நுடிது நடெவேனோ = சொல்லி அப்படியே நடப்பேன் ('உன் ஆணை, பிரபோ') என்று மனதில் சொல்லி, நீ செய்வதைப் போலவே செய்வேன், அல்லது, என் செயல்கள் அனைத்தும் ஸ்வதந்த்ர கர்த்தனான உன்னுடையதே ஆகும். எனது என்று எதுவும் இல்லை.. ஞானிகள = பிரம்மாதிகளின். அரஸ = தலைவன். குண பூர்ண = அனைத்து கல்யாண குணபூர்ணனுமான. நீ = நீ. என்ன = என்னை. ஹீனதெய மாடி = என்னை ஹீனனாகவே வைத்து

(ஸ்வயோக்ய குணங்களை மேம்படுத்தாமல்). பிடுவோதெ = கைவிடுவாயோ? .

என் அனைத்து ஞான க்ரியாதிகளுக்குக் காரணமான நீயே, ஸ்வகதியை அடைவதற்குத் தேவையான ஸாதனைகளை என் மூலம் செய்விக்க வேண்டும்.

தத்ர தத்ர ஸ்திதோ விஷ்ணு: தத்தச்சக்தே: ப்ரபோதயன் |
ஏக ஏவ மஹாஷக்தி: குருதே ஸர்வமஞ்சஸா ||

என்று, ஸ்ருதியானது, அனைத்து இடங்களிலும் நிலைத்திருப் பவனான ஸ்ரீஹரி, அங்கங்கு இருக்கும் (சேதன, அசேதனர்களில் இருக்கும்) சக்திகளை மேம்படுத்தி, தானே அனைத்தையும், அந்தந்த வஸ்துகளின் யோக்யதைக்கேற்ப செய்கிறான் என்று சொல்கிறார்.

மூரு கு³ணக³ள மானி ஸ்ரீரமாபூ⁴து³ர்க்கெ³
னாரேர மாடி³ நலிதா³டி³ | நலிதா³டி³ ஜீவிக³ள
தூ³ரதர மாடி³ நகு³திர்ப்பெ ||36-(172)

மூரு குணகள மானி = ஸத்வ, ரஜஸ், தமோ என்னும் மூன்று குணங்களின் அபிமானியாகி. ஸ்ரீரமாபூதுர்கெ நாரேர = ஸ்ரீ, பூ, துர்கா நாமக மூன்று ரூபங்களைக் கொண்ட உன் மனைவிகளான ரமா தேவியை. மாடி = நியமித்து. நலிதாடி = லீலைகளை செய்தவாறு. ஜீவிகள = ஜீவர்களை. தூரதர மாடி = அவர்களின் ஸ்வரூப ஸ்திதி யிலிருந்து தூரத்தில் வைத்து (சம்சாரத்தில் அவர்களை பந்தனம் செய்து). நகுதிர்ப்பெ = மகிழ்ந்திருப்பாய் (நித்யானந்த பூர்ணனாகியே இருக்கிறாய்)

குணபந்தனத்தின் வழியை 167ம் பத்யத்தின் விவரத்திலிலிருந்து அறியலாம். 'நாரேர மாடி' என்பதால், ஸ்த்ரி என்றும் புருஷரின் அதீனத்தில் இருப்பதால், பந்தன காரியத்தில் அவள் ஸ்வதந்த்ரம் இல்லாதவள் என்றும், ஸ்ரீஹரியே 'பந்தகோ பவபாஷேன மோசகஸ்ச ஸ ஏவ ஹி' என்று சொன்னதைப் போல, முக்ய பந்தகன் என்பதை சொல்கிறார்.

'முக்திர்ஹித்வாऽன்யதாரூபம் ஸ்வரூபேண வ்யவஸ்திதி:' (பாகவத). அதாவது, ஸ்வரூப தேகத்தினால் வேறுபட்டிருக்கும்,

லிங்க, அனிருத்த, ஸ்தூல தேகம் என்று உறைகளைப் போல இருக்கும் தேகங்களின் சம்பந்தத்தை இழந்து, ஸ்வரூபத்தினால் மட்டுமே இருப்பது முக்தி. இந்த நிலையிலிருந்து தூரம் இருப்பது என்றால், சம்சாரத்தில் சுழன்று, நானாவித யோனிகளைப் பெறுவது என்று அர்த்தம்.

விஷயதொ^{3}ளு மனவிரிஸி விஷய மனதொ^{3}ளகி^{3}ரிஸி
விஷயேந்த்^{3}ரியக^{3}ள அபி^{4}மானி | அபி^{4}மானி தி^{3}விஜரிகெ^{3}
விஷயனாக^{3}த^{3}லெ இருதிர்ப்பெ ||37-(173)

மனவ = மனதினை. விஷயதொளு = (இந்திரியாதிகளால் கூடிய) விஷயங்களில். இரிஸி = வைத்து (அதை நோக்கி செல்லுமாறு செய்து). விஷய = விஷயங்களை. மனதொளகிரிஸி = மனதில் வைத்து (மனதினை விஷய தியானத்திலேயே இருக்குமாறு செய்து). விஷயேந்திரியகள = விஷய மற்றும் இந்திரியங்களின். அபிமானிதிவிஜரிகெ = அபிமானிகளான தேவதைகளுக்குக்கூட. விஷயனாகதலெ = (முழுமையாக) அறியப்படாமல். இருதிர்ப்பெ = இருக்கிறாய் (அனைத்து இடங்களிலும் இருந்து செயல்களை செய்கிறாய்).

மனமானது விஷயங்களை விரும்புவது அதன் ஸ்வபாவமே. மனதின் இந்த ஸ்வபாவம் ஸ்ரீஹரியின் அதீனமே. விஷயத்தின் மேல் உள்ள ஆசை, மனதில் இருந்து கொண்டு, அதைப் பற்றி நினைப்பதற்கு காரணம் ஆகிறது. அதைப் பற்றிய நினைப்பினால், அதன் சங்கம், சங்கத்தினால் ஆசை, அதிலிருந்து காமம், க்ரோதம், பிறகு அதை அனுபவிப்பதே புருஷார்த்தம் என்னும் மோகம், அதனால் சாஸ்திரார்த்தங்களின் மறதி, அதிலிருந்து அவிவேகம். அதிலிருந்து வினாசம் என்னும் அனர்த்த பரம்பரைகள் உண்டாகின்றன என்று ‘த்யாயதோ விஷயான் பும்ஸ:...’ ஆகிய கீதா வாக்கியங்கள் விளக்குகின்றன.

தத்வாபிமானி தேவதைகளும்கூட முழுமையாக கிரகிக்க முடியாத மகாமகிமைகளைக் கொண்டவனான ஸ்ரீஹரி, அவர்களின் அந்தர்யாமியாக இருந்து, அவர்களிடமிருந்து இந்திரிய வியாபாரங்களை செய்விக்கிறான். தத்வாபிமானிகள், தங்களின் இந்திரிய வியாபாரங்கள் பகவந்தனாலேயே ஆகின்றன என்று

தெரியாதவர்கள் அல்ல. அவர்கள் மகாஞானிகள். அத்தகையவர்களைவிடவும் மகாமகிமை உள்ளவன் ஸ்ரீஹரி.

ஈஷ்வராசிந்த்ய ஷக்த்யைவ விபக்தாம்ஷௌரனந்தகை: |
ப்ரேரகா: ஸர்வசேவானாம் ஸ்வோத்தமை: ப்ரேரிதா: ஸதா |
அக்ஷீணபூர்ணவிக்ஞானா: ஸத்யகாமாஸ்ச ஸர்வதா ||
(சத். ரத். மாலா)

தாத்விக தேவதைகள், ஸ்ரீஹரியின் அசிந்த்ய சக்தியின் பலத்தினாலேயே அனந்தாம்சங்களைக் கொண்டு, அனைத்து ஜீவர்களின் தேஹேந்திரியங்களில் இருந்து, முக்யபிராணனே முதலான தத்தம் ஸ்வோத்தம தேவதைகளால் வழி நடத்தப்பட்டு, தம்முடைய தத்வங்களை (இந்திரியாதிகளை) தாம் வழிநடத்து கின்றனர். இந்த அனைவரும், பூர்ண விக்ஞானம் கொண்டவர்கள் மற்றும் ஸத்யகாமர்கள். ஜீவர்களின் அதிர்ஷ்டத்திற்கேற்ப, தகுந்த பலன்களை தாம் (தம் பாகத்தை) அனுபவித்தவாறு, தம் சங்கல்பத்திற்கு, எவ்வித இடையூறும் இல்லாத சத்யசங்கல்பர் ஆகியிருக்கின்றனர்.

லோகனாயகனாகி^{3} லோகதொ^{3}ளு நீனித்து^{3}
லோகக^{3}ள ஸ்ருஜிஸி ஸலஹுவி | ஸலஹி ஸம்ஹரிஸுவ
லோகேஶ நினகெ^{3} எணெகா^{3}ணெ ||38-(174)

நீனு லோகநாயகனாகி = உலகநாயகனாக இருந்து. லோகதொளு = உலகத்தில். இத்து = அந்தர்யாமியாக இருந்து. லோககள = உலகத்தை (அனைத்து உலகங்களையும் – பிரம்மாண்டத்தை). ஸ்ருஜிஸி = ஸ்ருஷ்டித்து. ஸலஹுவி = காப்பாற்றுகிறாய். ஸலஹி ஸம்ஹரிஸுவ = நீ அருளிய உலகத்தை நீயே நாசம் செய்யும். நினகெ = உனக்கு. லோகேஷ = ஹே ஜகதீஷ. எணெகாணெ = இணை இல்லை (சமரும் இல்லை; உத்தமரும் இல்லை)

தத்ஸ்ருஷ்ட்வா ததேவானுப்ராவிஷத் – ஆகிய ஸ்ருதிகள், அதன் அர்த்தத்தை விளக்கும்படியான பாகவதாதி கிரந்தங்கள், மகாபிரளயத்தில் தன் வயிற்றில் உள்ள உலகத்தை, ஸ்ருஷ்டி காலம் துவங்கியவுடன், சூக்ஷ்ம ரூபத்தினால் ஸ்ருஷ்டித்து, அந்த

சூக்ஷ்ம தத்வங்கள் மற்றும் தத்வாபிமானிகளுடன் அதில் பிரவேசித்து, சூக்ஷ்ம ரூபத்தினால் மறுபடி அவற்றை ஸ்ருஷ்டித்து, அவற்றிலும் பிரவேசித்தான் என்று சொல்கின்றன. தானே ஸ்ருஷ்டித்து காப்பாற்றியதை, தானே அழித்து, அதில் மகிழும் அற்புத மகிமையானது வேறு யாருக்கும் எங்கும், எந்த காலத்திலும் இல்லை.

ஜகது³த³ர நீனாகி³ ஜக³தொளகெ³ நீனிப்பெ
ஜக³தி³ ஜீவரனு ஸ்ருஜிஸுவி । ஸ்ருஜிஸி ஜீவரொளித்து³
ஜக³த³ன்யனெந்து³ கரெஸுவி ।।39-(175)

ஜகதுதர = உலகத்தை வயிற்றில் வைத்துக் கொண்டு. ஸத்தா ப்ரதனாகி = அவற்றிலும். நீனாகி = நீயாக இருந்து. ஜகதொளகெ = நீயே படைத்த (சூக்ஷ்ம, ஸ்தூல) உலகத்தில். நீனிப்பெ = (பல்வேறு ரூபங்களில்) நீயே வியாபித்திருக்கிறாய் (அந்தர்யாமியாக . இருந்து, அனைத்து விதங்களிலும் ஆள்கிறாய்). ஜகதி = உலகத்தில். ஜீவரனு = ஜீவர்களை. ஸ்ருஜிஸுவி = (தேக சம்பந்தத்தைக் கொடுத்து) படைக்கிறாய். ஸ்ருஜிஸி = அப்படி படைத்து. ஜீவரொளித்து = அனைத்து ஜீவர்களிலும் இருந்து. ஜகதன்யனெந்து = ஜீவர்களுக்கு அன்யர் (வேறுபட்டவன்) என்று. கரெஸுவி = அழைக்கப்படுகிறாய் (உலகிற்கு அன்யன் ஆகிறாய். உலகத்தை காப்பாற்றுபவனும் ஆகிறாய்.). ஜீவரொளித்து = யமன் முதலான வர்களில் இருந்து . ஜகதன்யனு = ஜகத்திலிருந்து அன்யன் என்று. கரெஸுவி = அழைத்துக் கொள்கிறாய்

‘ஜீவோ ஜீவஸ்ய ஜீவனம்’ ஆகிய ஸ்ருதிகள் ஸ்ரீஹரி, போக்த்ரு போஜ்யங்களில் இருந்துகொண்டு, தானே போக்தனும், போஜ்யனும் ஆகிறான் என்று, அனைத்து செயல்களையும் செய்விக்கிறவன் என்றும் சொல்கின்றன. அன்னம் ஆகி, அனைவரையும் காப்பாற்றுபவனும் ஆகிறான். பிராணிகள் உண்ணும் ஆகாரங்களில் அன்ன நாமகனாகி தானே இருக்கிறான்.

பிரளய காலத்தில் அனைத்து உலகங்களையும் தன் வயிற்றில் வைத்துக் கொண்டு, தன்னிடம் இருக்கும் அனந்த வேத ஞானத்தை, சிஷ்யா பாவத்துடன் தன்னில் வைத்துக் கொண்டு, லட்சுமிதேவிக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காக அவளை ஆலிங்கனம் செய்து

கொண்டு, ஸ்வரமணனான ஸ்ரீஹரி அங்கு நிலைத்திருக்கிறான். படைப்பதற்காக சங்கல்பம் செய்து கொண்டபோது, தன் வயிற்றில் இருக்கும் சுஜீவிகளின் நலனுக்காக, உலகத்தைப் படைக்கத் தயாரானான்.

ஆஸீதுதார குணவாரிதி ரப்ரமேய:
நாராயண: பரதம: பரமாத்ஸ ஏக: |
ஸம்ஷாந்தஸம்விதகிலம் ஜடரே நிதாய
லட்சுமிபுஜாந்தரகத: ஸ்வரதோऽபி ஜாக்ரே |
பூத்யை நிஜாஸ்ரீதஜனஸ்ய ஹி ஸ்ருஜ்ய
ஸ்ருஷ்டாவீக்ஷா பபூவ பரனாம நிமேஷகாந்தே||
(பாகவத தாத்பர்ய)

இந்த வாக்கியங்கள் மேற்சொன்ன விஷயங்களையே நிரூபிக்கின்றன. இந்த ஆதாரங்களின் சாரத்தையே தாஸார்யர் தொகுத்து இந்த நுடியில் சொல்லியிருக்கிறார்.

ஏசு ஜன்மத[3] புண்ய தா ஸமனிஸிது எனகெ
வாசுகீஶயன ஜனரெல்ல |ஜனரெல்ல வைகுண்ட[2]
தா[3]ஸனெந்தெ[3]ன்ன துதிஸோரு ||40-(176)

ஏஸு ஜன்மத = எவ்வளவு பிறவிகளின். புண்ய = புண்ணியம். தா = தான். எனகெ = எனக்கு. ஸமனிஸிதோ = பலன்களைக் கொடுக்கிறதோ. வாஸுகீஷயன = ஹே சேஷ சயனனே. ஜனரெல்ல = அனைத்து மக்களும். என்ன = என்னை. வைகுண்டதாஸனெந்து = வைகுண்ட ஸ்ரீஹரியின் தாஸன் என்று. துதிஸோரு = வணங்குகின்றனர்.

பரமாத்மனின் அருளினாலேயே உலகத்தில் அனைவருக்கும் கீர்த்தி, கௌரவங்கள் கிடைக்கின்றனவே தவிர, அவர்களின் புண்ணியங்கள் மட்டுமே காரணமல்ல. இப்படியான அருளை ஸ்ரீஹரி, தம்மேல் செய்திருக்கிறான் என்பதை 'தாஸ' என்னும் பதத்தினால் குறிப்பிடுகிறார். தன் தாஸன் என்று அங்கீகரித்து, பிறரில் நின்று தானே அவ்வாறு புகழ்கிறான். டாம்பீகர்களுக்கு கிடைக்கும் கீர்த்தி, கௌரவங்கள் நிரந்தரமானவை அல்ல என்பதை கவனிக்க வேண்டும்.

மணிகுந்தணக3ளு கங்கணதி3 ஶோபி4ஸுவந்தெ
த்ருணதி3 நின்னகி2ள ஸ்ரீதே3வி | ஸ்ரீதே3வி ஸஹித நி
ர்கு3ணனு ஶோபி4ஸுவி ப்ரதிதி3ன ||41-(177)

மணிகுந்தணகளு = ரத்னங்கள் பொறிக்கப்பட்ட . கங்கணதி = கை வளையல்கள். ஷோபிஸுவந்தெ = ஒளிர்வதைப் போல. நின்னகிள ஸ்ரீதேவிஸஹித = உன் சகதர்மிணியான ஸ்ரீதேவியுடன். நிர்குணனு = ப்ராக்ருத குண சம்பந்தம் இல்லாத, அதாவது, அனந்த கல்யாண குண ஸ்வரூபனான நீ. த்ருணதி = மிகவும் துச்சமான, புல்லைப் போன்றிருக்கும் இந்த உலகத்தில், அல்லது, ஒரு புற்கட்டில் கூட. ப்ரதிதின = அனைத்து நிலைகளிலும். ஷோபிஸுவி = நிலைத்திருந்து ஒளிர்கிறாய். கில = உன்னுடையவள், உன்னை அனுசரித்து செயல்களை செய்பவள் என்று அர்த்தம். ஸ்ரீஹரியைப் போலவே அனைத்து இடங்களிலும் வியாப்தளான ரமாதேவி, அவரின் நித்யாவியோகினியாக, அனைத்து இடங்களிலும், அவனுடனேயே இருக்கிறாள்.

'தத்ஸ்ருட்வா ததே மானுப்ராவிஷத்' என்று, ரமா சமேதனாக ஸ்ரீஹரி பிரவேசித்தான் என்றே அர்த்தம். அல்லது, நின்னகிள ஸ்ரீ = உன் அனைத்து குண செல்வங்களும், தேவி சஹித = ரமா சகிதமாக இருந்து நிர்குணனான நீ ஒளிர்கிறாய் – என்னும் அர்த்தத்தையும் அறியலாம். புற்களில்கூட ரமா சமேதனான ஸ்ரீஹரி, பூர்ணனாகியே இருக்கிறான். பிரம்மாதிகளில் மட்டுமல்ல.

ஸ்ருஷ்டி காலம் – பகல். பிரளய காலம் – இரவு. 'ப்ரபவந்த்யஹராகமே | ராத்ர்யாகமே ப்ரலீயந்தே' (கீதை).

ஈதன பதா3ம்பு3ஜ விதா4த்ரு மொத3லாத3 ஸுர
வ்ராத பூஜிபுது3 ப்ரதிதி3ன | ப்ரதிதி3னதி3 ஸ்ரீஜக3
ந்னாத2 விட்ட2லன நெனெ கண்ட்ய ||42-(178)

ஈதன = இப்படியான மகிமைகளைக் கொண்ட ஸ்ரீஹரியின். பதாம்புஜ = பாத கமலங்களை. விதாத்ரு மொதலாத ஸுரவ்ராத = பிரம்மாதி தேவ சமூகம். பூஜிபுது ப்ரதிதின = தினந்தோறும் பூஜிக்கின்றனர். ஸ்ரீஜகன்னாதவிட்டலன = உலக நாயகனான ஸ்ரீவிட்டலனை. ப்ரதிதினதி = தினந்தோறும் தவறாமல். நெனெ

கண்ட்ய = சிந்தித்திரு. திளியிதே = புரிந்ததா? (பக்தர்களை அல்லது தம் மனதினை அழைத்து சொல்லப்பட்டும் அறிவுரை).

16. தசாவதார ஸ்தோத்திரம்

வேத[3]ததிக[3]ளனு கத்தோ[3]ய்த[3]வன கொந்து[3] ப்ரள
யோத[3]தி[4]யொளகெ[3] சரிஸிதி[3] | சரிஸி வைவஸ்வதன
காய்த[3] மஹமஹிம த[3]யவாகோ[3] ||1-(179)

வேதததிகளனு = வேத சமூகங்களை (பிரம்மனின் முகத்திலிருந்து வெளிப்பட்ட வேதங்களை). கத்தொய்தவன = அபகரித்த ஹயக்ரீவாசுர என்னும் தைத்யனை. கொந்து = கொன்று (முதலாம் மத்ஸ்யாவதாரத்தினால்). பிரளயோததியொளகெ = பிரளய காலத்து நீரில். சரிஸிதி = நீந்தினாய். சரிஸி = சாக்ஷுஷ மன்வந்தரத்தின் பிரளய தண்ணீரில் தோன்றி, திரும்ப சஞ்சாரம் செய்து. வைவஸ்வதன = சூர்ய புத்திரனான ஸ்ராத்ததேவனை. காய்து = அருளிய. மஹமஹிம = அற்புத மகிமனான ஹே மத்ஸ்யனே. தயவாகோ = அருள்புரிவாயாக.

பிரம்மதேவனின் பகல் வேளை முடியும்போது, பிரளய காலம் வருகிறது. அப்போது பூமி, அந்தரிக்ஷ, ஸ்வர்க்க என்னும் மூன்று உலகங்களும் நாசம் அடைகின்றன. அந்த பிரளய காலத்தில், பிரம்மனின் முகத்திலிருந்து வெளிவந்த வேதங்களை ஹயக்ரீவாசுரன் அபகரித்து, பிரளய தண்ணீரில் மூழ்கினான்.

ஸ்ரீஹரி, மத்ஸ்ய ரூபத்தை தரித்து, அந்த தண்ணீரில் மூழ்கி, அந்த அசுரனைக் கொன்று, வேதங்களை திரும்பக் கொண்டு வந்து பிரம்மனுக்குக் கொடுத்தார். பிரம்மனின் முகத்திலிருந்து வெளிவந்த வேதங்களை திருடினான் என்பதால், கிரந்தங்களை அல்ல என்பது புரிகிறது. வேதஞானத்திற்கு அதிகாரிகள் அல்லாத அயோக்யர்கள், அதனை அபகரித்து (குரு உபதேச மார்க்கத்தை புறக்கணித்து), அதனை அபவித்ரம் ஆக்குவதற்கு முயன்றால், அத்தகைய காலங்களில் ஸ்ரீஹரி, அயோக்யர்களை வென்று, வேதங்களை காப்பாற்றினான் என்னும் மகிமை, நிரூபணம் ஆகியிருக்கிறது என்று அறிய வேண்டும். இது முதலாம் அவதாரம் – மத்ஸ்ய.

தற்போது நடந்துகொண்டிருக்கும் வைவஸ்வத மன்வந்தரத்தின் அதிபதியான சூர்ய புத்ரனான ஸ்ராத்ததேவன், சாக்ஷுஷ மன்வந்தரம் (முந்தைய மன்வந்தரம்) முடியும் காலத்தில் 'ஸத்யவ்ரத' என்னும் பெயரில் அரசனாக இருந்தான். மன்வந்தரம் முடியும்போது, ஜல பிரளயம் ஆகி (மன்வந்தர பிரளயம்) பூமியில் கடல் பொங்கியது. அனைத்து பிராணிகளும் அழிந்தன.

சில நாட்களுக்குப் பின், மத்ஸ்யரூபத்தினால் சத்யவ்ரத ராஜனுக்கு தரிசனம் அளித்து, ஸ்ரீஹரி, பிரளய ஜலத்திலிருந்து வெளியேறும் மார்க்கத்தை உபதேசம் செய்தார். அதற்கேற்ப, சத்யவ்ரத ராஜன், ஒரு படகில் அமர்ந்து, சமுத்திரத்தில் போய்க் கொண்டிருக்க, மத்ஸ்யரூபி ஸ்ரீஹரி, அந்த படகினை காப்பாற்றி, மன்வந்தராதிபதி ஆகுபவனுக்குத் தேவையான ஞானோபதேசத்தை செய்தான். இரு மத்ஸ்யாவதாரங்களையும் இந்த நுடியில் வணங்கியிருக்கிறார், ஸ்ரீதாஸார்யர். இந்த பிரமேயங்கள்:

ஞாத்வா தத்தானவேந்த்ரஸ்ய ஹயக்ரீவஸ்ய சேஷ்டிதம் |
ததார ஷபரீரூபம் பகவான் ஹரிரீஷ்வர: ||
மற்றும்
தத்ர ராஜர்ஷி: கஸ்சித் நாம்னா சத்யவ்ரதோ மஹான் |
யோஸௌ அஸ்மின் மஹாகல்பே தனய: ஸ விவஸ்வத: |
ஸ்ராத்ததேவ இதி க்யாதோ மனுத்வே ஹரிணார்ப்பித: ||

என்னும் பாகவத வாக்கியங்களில் நிரூபணம் ஆகியிருக்கிறது. 'மஹாகல்ப' என்றால் இங்கு 'தினகல்ப' என்று அர்த்தம். மனுகல்பத்தைவிட பெரியது தினகல்ப. (ஒரு நாளில் 14 மனு கல்பங்க்ள் ஆகின்றன).

ஆதிஸ்ருஷ்டியில் வேதங்களை அபகரித்துச் சென்ற மது கைடபர்களைக் கொன்று, ரசாதலத்திலிருந்து வேதங்களைக் கொண்டு வந்த ஹயக்ரீவ அவதாரமே இந்த நுடியில் வணங்கப் பட்டிருக்கிறது. இந்த விஷயம் பாகவதத்தில் இவ்வாறாக சொல்லப் பட்டிருக்கிறது.

தஸ்ம்யை பவான் ஹயஷிரஸ்தனுவம் ச பிப்ரத்
வேதத்ருஹாவதிபலௌ மதுகைடபாக்யௌ |

ஹத்வssனயச்ச்ருதிகணாம்ஸ்து ரஜஸ்தமஸ்ச ஸத்வம்
தவ ப்ரியதமாம் தனுமாமனந்தி ||

இதன் பொருள்: வேதங்களை அபகரித்த மதுகைடபர் என்னும் வேத த்ரோகிகளைக் கொன்று, வேதங்களை காப்பாற்றிய ஹயக்ரீவ ரூபனான ஸ்ரீஹரி, பிரம்மனுக்கு அருளினான். ரஜ, தம, ஸத்வ என்னும் குணங்களை ப்ரதிமைகளாக செய்து விளையாடும் ஸ்ரீஹரியின் ரூபங்கள் ஞானிகளுக்கு மிகவும் ப்ரியமானவையாகும்.

மந்தராத்^{3}ரிய த்^{4}ரிஸி ஸிந்து^{4}மத^{2}னவ மாடி^{3}
வ்ருந்தா^{3}ரகரிகெ^{3} அம்ருதவ | அம்ருதவ உணிஸித^{3}
இந்தி^{3}ராராத்^{4}ய த^{3}யவாகோ^{3} ||2-(180)

மந்தராத்ரிய = (தேவ தைத்யர்கள் அமிர்தத்திற்காக பாற்கடலைக் கடையும்போது, மத்தினைப் போல பயன்படுத்திய) மந்தர மலையை. தரிஸி = (கூர்ம ரூபத்தினால், அந்த மலை முழுகி விடாமல் இருக்குமாறு தன் முதுகின் மேல்) தரித்து, . ஸிந்து மதனவ = கடலைக் கடையும் செயலை. மாடி = தானும் சேர்ந்து செய்து. வ்ருந்தாரகரிகெ = தேவதைகளுக்கு. அம்ருதவ = அமிர்தத்தை. உணிஸித = குடிக்க வைத்த. இந்திராராத்ய = லட்சுமி தேவியினால் (எப்போதும்) பூஜிக்கப்படும் ஹே நாராயணனே. தயவாகோ = எனக்கு அருள்வாயாக

இந்த பத்யத்தினால் மகாவிஷ்ணுவின் மூன்று அவதாரங்கள் வணங்கப்படுகின்றன என்று அறியவேண்டும்.

* மந்தர பர்வதத்தை தரித்த ‘கூர்ம’ ரூபம்.
* தேவதைகளுடன் சேர்ந்து பாற்கடலைக் கடைந்த ‘அஜித’ ரூபம். (வாசுகி பாம்பினை கயிறாகப் பிடித்து, தன் அமிர்த சக்தியை வெளிப்படுத்தாமல் இருந்தால், தேவ தைத்யர்கள் என்றைக்கும் அமிர்தத்தைப் பெறுவதற்கு சாத்தியமே இல்லை).
* தேவதைகளுக்கு அமிர்தத்தைக் குடிக்க வைத்த மோகினி ரூபம். (அமிர்தத்தைக் குடிப்பதற்கு தகுதியற்ற தைத்யர்களை, தன் அபரிமித அழகினால் ஏமாற்றிய ரூபம்).

ஸோமபன நுடி^{3} கேளி ஹேமாம்ப^{3}கன கொந்தி^{3}
பூ^{4}மிய நெக^{3}ஹிதி^{3} தா^{3}டி^{3}ந்த^{3} | தா^{3}டி^{3}ந்த^{3} நெ^{3}க^{3}ஹித^{3}
ஸ்வாமி பூ^{4}வரஹ த^{3}யவாகோ^{3} ||3-(181)

ஸோமபன = சதுர்முகனின். நுடி கேளி = பிரார்த்தனையைக் கேட்டு ஹேமாம்பகன = ஹிரண்யாக்ஷன் என்னும் தைத்யனை. கொண்டி = கொன்று. தாடிந்த = உன் கோரைப்பற்களால். பூமிய = பூமியை. நெகஹிதி = தூக்கினாய். நெகஹித = இப்படியாக மேலே தூக்கி நிறுத்திய. ஸ்வாமி பூவரஹ = ஹே உலக நாயகனான பூவராகனே. தயவாகோ = எனக்கு அருள்வாயாக

சோமபானம் குடிக்கத் தகுதி உடைய தேவதைகளில் சிறந்தவர் பிரம்மதேவர். பிரம்மபுத்ரனான ஸ்வாயம்புவ மனு, தன் தந்தையின் ஆணையின்படி, பிரஜா ஸ்ருஷ்டியைத் தொடங்க முற்பட்டபோது, (பூமி தண்ணீரில் மூழ்கியிருந்ததால்), அதனை திரும்ப அதன் இடத்தில் வைக்க வேண்டினான். பிரம்மதேவன், பிரளய ஜலத்தை முழுமையாக குடித்தார். ஆனாலும், திரும்ப பூமி தண்ணீரில் மூழ்கியது. பிரம்மனின் மூக்கிலிருந்து கட்டை விரல் அளவிலான சிறிய வராகரூபத்தினால் ஸ்ரீஹரி அவதரித்து, நொடிப்பொழுதில் மிகப் பெரிய உருவத்தைப் பெற்று, பிரளய ஜலத்தில் மூழ்கி, அவரை எதிர்த்த ஹிரண்யாக்ஷ என்னும் தைத்யனை, தன் கோரைப் பற்களால் குத்திக் கொன்றார். பின், பூமியை தன் கோரைப்பற்களில் ஏந்தி, திரும்ப மேலே கொண்டு வந்து நிறுத்தினார்.

அடுத்து, அதே ஹிரண்யாக்ஷன், கஷ்யபர் – திதிதேவி தம்பதியிடம் பிறந்து, பூமியை அபகரிக்க, ஸ்ரீஹரி வராக ரூபத்தினாலேயே, அவனைக் கொன்று, தராதேவிக்கு அருளினான். மத்ஸ்ய அவதாரத்தைப் போலவே வராக அவதாரமும், இப்படியாக, இரு முறை ஆயிற்று.

பிரம்மஜஸ்து ஹிரண்யாக்ஷ: ப்ரதமம் தம்ஷ்ட்ரயா ஹத: |
ஸ ஏவ பார்ஷாதாவிஷ்டோ த்விதீய: கர்ணதாடனாத் ||
பூர்வம் லயோதகே மக்னாம் த்விதீயம் தேன மஜ்ஜிதாம் |
புவமுத்தர தைவா஽ஸௌ ஹரிணா க்ரோடமூர்த்தினா ||
(பாக. தாத்.)

என்னும் வாக்கியங்கள், இரு வராக ரூபங்களால் ஆன செயல்களை நிரூபிக்கின்றன. முதலாம் ஹிரண்யாக்ஷன் பிரம்மனிடமிருந்து பிறந்தவன். பூமி பிரளய ஜலத்தில் மூழ்கியிருந்தது. வராகனின் கோரைப்பற்களால் கொல்லப்பட்டான். இரண்டாம் ஹிரண்யாக்ஷன் திதியிடம் பிறந்தான். பூமியை தண்ணீரில் மூழ்கடித்தான். வராகன் இவனை தன் உள்ளங்கையால் காதில் அடித்துக் கொன்றான்.

கந்த3 கரெயலு கம்ப3தி3ந்து3தி3ஸி ரக்ஷிஸிதி3
வந்தி3ஸித3 ஸுரர ஸலஹிதி3 | ஸலஹிதி3 நரசிம்ஹ
தந்தெ3 நீனெமகெ3 த3யவாகோ3 ||4-(182)

கந்த = பாலகனான பிரகலாதன். கரெயலு = பிரார்த்திக்க (ஸ்தம் பேன த்ருஷ்யதே = கம்பத்திலிருந்தே வருவான் என்று சொல்ல). கம்பதிந்த = கம்பத்திலிருந்து. உதிஸி = பிரத்யட்சமாகி. ரக்ஷிஸிதி = காப்பாற்றினாய். வந்திஸித = போற்றி வணங்கிய. ஸுரர = தேவதைகளை (சஜ்ஜனர்களை). ஸலஹிதி = காப்பாற்றினாய் (அசுரனான ஹிரண்யகசிபுவை கொன்று காப்பாற்றினாய்). தந்தெ நரஸிம்ஹ = உலகத்தின் தந்தையான ஹே நரசிம்மனே. நீனு = நீ. எமகெ = எமக்கு. தயவாகோ = அருள் புரிவாயாக

'ப்ரத்யக்ஷத்வம் ஹரேரன்ம ந விகாரி கதஞ்சன' ஆகிய ஆதார வாக்கியங்கள், உதய சூரியனைப் போல, ஸ்ரீஹரியின் ரூபம் வெளிப்படுவதே ஸ்ரீஹரியின் பிறப்பு. உலகத்தில் நடப்பதைப் போல பௌதிக தேகம் கொண்டு பிறந்தவன் அல்ல என்று சொல்கிறது. கம்பத்திலிருந்து வெளிப்பட்ட நரசிம்ம ரூபம், சுக்ல ஷோணிதங்களால் (ஆண் பெண் சங்கத்தினால்) பிறந்த ப்ராக்ருத தேகம் இல்லை என்னும் விஷயத்தை இங்கே சந்தேகமின்றி நிரூபித்திருக்கிறார். ஸ்ரீஹரியின் அனைத்து ரூபங்களும் ஞானானந்த ஸ்வரூபங்களே. ஸ்ரீஹரி, ப்ராக்ருத தேகத்தை என்றைக்கும் ஏற்றுக் கொள்பவனல்ல.

வைரோசனிய பூ4மி மூரு பாத3வு பே3டி3
ஈரடி3யொளக3ளதெ3 பூ4வ்யோம | பூ4வ்யோமவளெத3 பா4
கீ3ரதி2ய ஜனக த3யவாகோ3 ||5-(183)

வைரோசனிய = விரோசனனின் மகனான பலிசக்ரவர்த்தியை. பூமி = அரசினை. மூரு பாதவு பேடி = மூன்று அடி பூமியை தானம் கேட்டு. ஈரடியொளகெ = இரு அடிகளில். பூவ்யோமவ = பூலோகம் மற்றும் ஆகாயம் (அந்தரிக்ஷ மற்றும் ஸ்வர்க்க என்னும்) . இரு உலகங்களை. அளெத = அளந்து. பாகீரதிய ஜனக = பாதத்திலிருந்து கங்கையை படைத்த (கங்கா ஜனகனான) ஹே வாமனனே. தயவாகோ = அருள் புரிவாயாக

பாலகனான வாமன, அற்புதமான த்ரிவிக்ரம ரூபம் ஆனான். அவன் தன் ஒரு பாதத்தினால் மொத்த பூமியை அளந்தான். இரண்டாம் பாதம் அந்தரிக்ஷ மற்றும் ஸ்வர்க்க லோகங்களை அளந்தது. அப்படி வளர்ந்த அந்த பாதம், சத்யலோகம் வரை சென்று, பிரம்மாண்டத்தின் ஓட்டினை உடைத்தது. அப்போது பிரம்மாண்டத்திற்கு வெளியே இருந்த தண்ணீர் உள்ளே நுழைந்தது. அந்த தண்ணீரால், சத்யலோகாதிபதியான பிரம்மதேவன், த்ரிவிக்ரமனின் பாதத்தைக் கழுவினான். அந்த பாதோதகம், ஆகாய மார்க்கத்தினால் தேவ நதியாக பாய்ந்து, த்ருவாதி உலகங்களின் வழியே, மேரு பர்வதத்திற்கு வந்தது. பிறகு, பகீரதனின் பெரும் முயற்சியால், பூலோகத்திற்கு வந்து, பரத கண்டத்தின் மக்களை 'பாகீரதி' என்னும் நாமத்தினால், புனிதமாக்கியது.

பலி சக்ரவர்த்தி, இந்திராதிகளை வென்று, ஸ்வர்க்கத்தை ஆக்ரமித்து, மூன்று உலகங்களின் அதிபதியாக இருந்தான். வாமனனுக்கு தானம் அளித்த மூன்று பாத பூமியில், அவனின் இரு அடிகளில், மூன்று உலகங்களும் அடங்கின. மூன்றாவது அடியை, பலி சக்ரவர்த்தியின் பிரார்த்தனைக்கேற்ப, அவனின் தலை மேல் வைத்து, பலி சொன்ன சொல் தவறாதவன் என்னும் பெயரைப் பெற்றான்.

ஏகாம்ஷேன ஸ்திதோ ஜகத் -- மொத்த உலகமே விஷ்ணுவின் ஒரு பாதத்தின் ஒரு அம்சத்திற்கு ஈடு இல்லை. பக்தர்களில் சிறந்தவனான பலிக்கு நற்பெயரைக் கொடுக்க வேண்டும் என்னும் ஸ்ரீஹரியின் விருப்பமே, பலியை 'சொன்ன சொல் தவறாதவன்' என்னும் பெயரைப் பெற்றுத் தந்தது. அடுத்த மன்வந்தரத்தில் அவனே இந்திர பதவியையும் பெற்றான்.

குவலயாதீ4ஶ்வரர ப3வர முக2த3லி கொந்து3
அவனிபா4ரவனு இளுஹித3 | இளுஹித3 ஸ்வாமி பா4
ர்க்க3வராம எமகெ3 த3யவாகோ3 ||6-(184)

குவலயாதீஶ்வரர = துஷ்ட அரசர்களை. பவரமுகதலி = போர்க் களத்தில். கொந்து = கொன்று. அவனிபாரவனு = பூமியின் பாரத்தை. இளுஹித = குறைத்த. ஸ்வாமி பார்க்கவராம = ஹே பரசுராம ஸ்வாமியே. எமகெ = எமக்கு. தயவாகோ = அருள்வாயாக

வலயாதீஷ்வரர = பூமியை ஆளும் அரசனான, துஷ்ட க்ஷத்ரியர்களை, 21 முறை சுற்றி வந்து அவர்களை அழித்து, ஸ்யமந்த பஞ்சக க்ஷேத்திரத்தில், அவர்களின் இரத்தத்தினால் பெரிய குளத்தையே நிர்மாணம் செய்த, ஸ்ரீஹரியின் பரசுராம அவதாரம், இந்த நுடியில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

த்ரி:ஸப்தக்ருத்வ: ப்ருதிவீம் க்ருத்வா நி:க்ஷத்ரியாம் ப்ரபு: |
ஸ்யமந்த பஞ்சகே சக்ரே ஷோணிதோதான் ஹ்ரதான் ந்ருப: ||
(பாகவத)
என்னும் வாக்கியம், இந்த அவதாரத்தின் முக்கிய நோக்கத்தை வர்ணிக்கிறது.

ஶதத்4ருதிய நுடி3கெ3 த3ஶரத2ன க3ர்ப்ப4தி3 ப3ந்தி3
தி3திஜரனு ஒரஸி ஸுஜனர | ஸுஜனரனு பொரெத3 ரகு4
பதியெ நீனொலிது3 த3யவாகோ3 ||7-(185)

ஶதட்ருதிய = பிரம்மதேவனின். நுடிகெ = வேண்டுகோளுக்கு (பிரார்த்தனையைக் கேட்டு). தஶரதன = தசரத அரசனின். கர்ப்பதலி = வயிற்றில். பந்தி = அவதரித்து. திதிஜனரு = தைத்யர்களை. ஒரஸி = கொன்று. ஸுஜனரனு = சஜ்ஜனர்களை. பொரெத = காப்பாற்றிய. ரகுபதியெ ஹே ரகுகுலத்தின் ராமசந்திரனே. நீனொலிது = நீ தரிசனம் கொடுத்து. தயவாகோ = அருள்வாயாக

இமௌ ச ரக்ஷோऽதிபதி வரோத்ததௌ
ஜஹி ஸ்வவீர்யேண ந்ருஷு ப்ரபூத: | (பாக. தாத்பர்ய)

என்று சொல்வதைப் போல, வர பலத்தினால் வெல்லப்பட முடியாதவர்களாக இருந்த ராவண கும்பகர்ணர்களை மனுஷ்ய

ரூபத்தில் அவதரித்து, கொல்வாயாக என்று பிரம்மாதி தேவதைகள் வேண்டிக் கொண்டனர். மனிதர்கள் அசுரர்களுக்கு ஆகார ரூபமாக இருப்பதால், அவர்களால் நமக்கு மரணம் எப்படி வரும் என்னும் தைரியத்தினால், அவர்களால் நமக்கு மரணம் வரக்கூடாது என்னும் வரத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

முதலில் ஆகாரத்தின் மூலம், தந்தையின் தேகத்தில் நுழைந்து, பின், ரேதஸ்ஸின் மூலம் தாய்க்குள் நுழைந்து, சுக்ல ஷோணிதங்களின் மாற்றங்களால் ப்ராக்ருத தேகத்தைக் கொண்டு, பிரசவ காலம் நெருங்குகையில், கர்ப்பத்திலிருந்து குழந்தையாக வெளிவருவது, சம்சாரி ஜீவர்களின் பொதுவான வழியாக இருக்கிறது. இப்படியான பிறப்பு, ஸ்ரீஹரிக்கு என்றைக்கும் இல்லை. தமோ யோக்யர்களை மயக்கி, தன் திவ்ய ஜன்ம கர்மங்களின் சம்பந்தமான மித்யா ஞானத்தைக் கொடுப்பதற்காக, ஸ்ரீஹரி, தானும் சாதாரணமான முறையிலேயே பிறந்தான் என்பதைக் காட்டுவதற்காக, முதலில் தந்தையின் மனதில் நுழைந்து, பிறகு தன் அம்சத்தை தாயிடம் நிறுவுகிறார்.

இதைப் பார்க்கும் அஞ்ஞானிகளுக்கு அவள் கர்ப்பிணியைப் போலவே காட்டிக் கொள்கிறாள். விசேஷ ஒளி பொருந்தியவளாகத் தோன்றுகிறாள்.

பகவானபி விஷ்வாத்மா பக்தானாமபயங்கர: |
ஆவிவேஷாம்ஷ பாகேன மன ஆனகதுந்துபீ: |
ஸ பிப்ரத் பௌருஷம் தாம ப்ராஜமனோ யதா ரவி: |
ததோ ஜகன்மங்கள முச்யதாம்ஷம் ஸமாஹிதம் ஷூரஸுதேன தேவி ததார..

மற்றும்

ஸா தேவகி ஸர்வஜகன்னிவாஸபூதா நிதராம் விரேஜே (பாகவதம்)

ஆகிய வாக்கியங்கள், மேற்சொன்ன விஷயங்களையே நிரூபிக்கின்றன. இதன்படியே, (ஸ்ரீகிருஷ்ணனின் அவதாரத்தை விளக்கும் இதே வழியில்) ஸ்ரீராமனின் அவதாரமும் ஆயிற்று என்று அறிய வேண்டும். 'தஷரதன கர்ப்பதி' என்பதற்கு தசரதனின்

தேகத்தினால் கௌஸல்யையின் கர்ப்பத்திற்கு வந்து, என்னும் அர்த்தத்தை அறியவேண்டும்.

ரகுவம்சத்தில் அவதரித்து, அந்த வம்சத்தின் பெருமையை வளர்த்தான் என்பதைக் குறிப்பதற்காக, ஸ்ரீராமசந்திரன் 'ரகுராம' என்று அழைக்கப்படுகிறான்.

வஸுதே^{3}வ தே^{3}வகி ப^{3}ஸுரிலி ஜனிஸித^{3}
வஸுதெ^{3}பா^{4}ரவ நீனு இளுஹீதி^{3} | இளிஹி பாண்ட^{3}வர போ
ஷிஸித^{3} ஸ்ரீகிருஷ்ண த^{3}யவாகோ^{3} ||8-(186)

வசுதேவ தேவகி பஸுரிலி = வசுதேவ தேவகியர்களின் கர்ப்பத்தினால். ஜனிஸிதி = பிறந்தாய். வசுதெபாரவனு = பூமியின் பாரத்தினை. இளுஹிதி = குறைத்தாய் (பூதேவியின் பாரத்தை, பாவிகளைக் கொன்றதால், குறைத்தாய்). பாண்டவர = தர்மராஜன் முதலானவர்களை. போஷிஸிதி = காப்பாற்றினாய் (இந்த செயல்களை செய்த). ஸ்ரீகிருஷ்ண = ஹே கிருஷ்ணனே. தயவாகோ = எனக்கு அருள்வாயாக

பகவத் அவதாரங்களின் விஷயத்தில், முந்தைய பத்யத்தில் விளக்கியுள்ள சிறப்பு அம்சங்களையும் மற்றும் 138ம் பத்யத்தில் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தைப் பற்றி சொல்லியிருக்கும் விஷயங்களை இங்கே கவனிக்க வேண்டும்.

ஜினனெம்ப^{3} த^{3}னுஜ ஸஜ்ஜன கர்மவனு மாடெ^{3}
ஜனிஸி அவரல்லி து^{3}ர்பு^{3}த்தி^{4} | து^{3}ர்பு^{3}த்தி^{4} கவிஸித^{3}
வினுத ஸ்ரீபு^{3}த்த^{4} த^{3}யவாகோ^{3} ||9-(187)

ஜினனெம்ப தனுஜ = ஜினன் என்னும் தைத்யன். சஜ்ஜன கர்மவனு = சுஜீவர்களுக்கு தகுதி உள்ள வேதோக்த கர்மங்களை. மாடெ = செய்ய. ஜனிஸி = அவதரித்து. அவரல்லி = ஜின மற்றும் அவனைச் சேர்ந்தவர்களில். துர்புத்தி கவிஸித = மித்யா ஞானத்தைக் கொடுத்து. வினுத = (பிரம்மாதிகளால்) விசேஷமாக வணங்கப்படும் ஸ்ரீபுத்த = புத்தரூபி ஸ்ரீஹரியே. தயவாகோ = அருள் புரிவாயாக

புத்தாவதாரத்தின் கதையை மற்றும் மகிமைகளை ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத்பாதர் தமது மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

யஸ்த்ரைபுராணாம் ப்ரதமோsத்ர ஜாத:
ஷுத்தோதனேத்யேவ ஜினேதி சோக்த: |
க்ஷேத்ரே கயாக்யேsஸ்ய ஷிஷும் ப்ரஜாதம்
ஸம்ப்ராஸ்ய தூரேsத்ர பபூவ விஷ்ணு: |
அஜானமானா: ஸ்வஷிஷும் கதம் தம்
ஷிஷும் ஹரிம் வீக்ஷ்ய நிஜம் ஸ்ம மேனிரே |
தேஷாம் ததா வைதிக கர்ம வீக்ஷ்ய
ஸம்ப்ராஹ ஸத்தத்வபுஷைவ கேஷவ: ||
சஞ்சாதமாத்ரம் ப்ரஹஸந்தமீக்ஷ்ய
ஸுவிஸ்மித்யை: ப்ருஷ்ட உவாச விஷ்ணு: |
புத்தோsஹமித்யேவ ஸ நித்யபோதாஜ்ஜகாத
சைஷாமத புத்ததர்ஷனம் ||
ததாப்யவிஷ்வாஸமவேக்ஷ்ய தேஷாம்
ஸஸ்மார தேவானகிலான் ஜனார்த்தன: |
விக்ஞாய தே தஸ்ய மனோகதம்
நிஜான் ப்ரவிக்ஷிபுர்ஹேதி கணான முஷ்மின் |
ஸ ஜாதமாத்ர: ஷிவபூர்வகாணாம்
ஷூலாதிஹேதீரகிலா நிகீர்ய |
தைத்யாதிமோஹாய நிஜம் ச சக்ரம்
ஸ்வமுக்தமாஷ்வேவ வஷீ ஸமக்ரஹீத் |
ததாஸனத்வேன விதாய தஸ்மின்
ஸ்வமுக்தமாஷ்வேவ வஷீ ஸமக்ரஹீத் |
ததாஸனத்வேன விதாய தஸ்மின்
ஸமாஸ்திதம் தேவகணா: ப்ரணம்ய |
ஜக்மு: ஸ்வதாமானி வசாம்ஸி ஜாஸ்ய
ஸ்வீசக்ருராஷ்வேவ ஜினாதிதைத்யா: ||

த்ரிபுராசுரர்களில் முக்கியமான தைத்யன், ஷூத்தோதனன் எனும் பெயரில் பூமியில் பிறந்தான். அவனுக்கு 'ஜின' என்னும் பெயர் உண்டு. கயா க்ஷேத்திரத்தில் (கயா நாமகளான பத்னியில்) இவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையை தூர விலக்கி,

ஸ்ரீவிஷ்ணு அங்கு படுத்தார். இதனை அறியாத ஜினாதிகள், அக்குழந்தையை தம் குழந்தை என்றே அறிந்து, ஜாதகர்ம முதலான வேதோக்த சம்ஸ்காரங்களை செய்யத் துவங்கினர். அதனைக் கண்ட (குழந்தை வடிவான) விஷ்ணு, கேலியுடன் சிரித்தான். இதைக் கண்டு வியப்படைந்த ஜைனாதி மக்கள், ஏன் சிரிக்கிறாய் என்று குழந்தையைக் கேட்டனர்.

அதற்கு, அக்குழந்தை, தான் புத்தன் என்று சொல்லிக் கொண்டான். (நித்ய ஞான ஸ்வரூபனான ஸ்ரீஹரிக்கு அது ஒரு அனர்த்தமான பெயரே ஆகும்). அடுத்து அக்குழந்தை உபதேசம் செய்யத் துவங்கியது. அவர்கள் தம் உபதேசத்தில் நம்பிக்கை வைக்காத காரணத்தால், புத்தன் தன் இஷ்டத்திற்கேற்ப, தன் மேல் ருத்ராதி தேவதைகள் பிரயோகித்த ஷூலாதி ஆயுதங்களையும், தானே ஆகாய மார்க்கத்திலிருந்து தருவித்த, சக்ராயுதங்களையும் தன் வசப்படுத்திக் கொண்டான். அந்த சக்ராயுதத்தை தன் ஆசனமாக ஆக்கிக்கொண்டு அதன் மேல் அமர்ந்தான்.

அதன் பின், ஜினாதிகளுக்கு புத்தன் மேல் நம்பிக்கை வந்து, இவன் மகேஸ்வர, விஷ்ணுகளைவிட சிறந்தவன் என்று அறிந்து, அவனின் உபதேசங்களைக் கேட்டு, வேதோக்த கர்மங்களை விட்டுவிட்டு, வேதாதிகளில் நம்பிக்கையை இழந்தனர். தேவதைகள் விஷ்ணு மகிமையைக் கண்டு மகிழ்ந்தவாறு, தத்தம் உலகங்களுக்குத் திரும்பினர். புத்தனாக தைத்ய அசுரர்களை மயக்கி, அவர்களை வேத மார்க்கத்திலிருந்து விலகியிருக்குமாறு செய்து, தன் அந்த உபதேச வாக்கியங்களின் அர்த்தத்தை இப்படியாக புரிந்து கொள்ளுங்கள் என்று தேவதைகளுக்கு விளக்கி, அவர்களுக்கு சந்தேகங்கள் வராதவாறு அருளினார்.

இந்த அர்த்தங்களையே தாஸார்யர் மிகச் சொற்பமான வார்த்தைகளில் இங்கு சொல்லியிருப்பதை கவனித்து மகிழ வேண்டும்.

கலிய வ்யாபார வெக்^{3}க^{3}ளவாகெ^{3} திளிது^{3} ஶம்
ப^{3}லி எம்ப^3 புரதி^{3} த்^{3}விஜனல்லி | த்^{3}விஜனல்லி ஜனிஸி கலி
மலவ ஹரிஸித^3 கல்கி த^{3}யவாகோ^{3} ||10-(188)

கலிய வியாபார = (தைத்யரில் அதமனான) கலியின் சக்தியால் ஆகும் துஷ்கர்மங்கள். வெக்களவாகி = அளவுக்கு அதிகமாகிப் போக. திளிது = இந்த விஷயத்தை அறிந்த சர்வக்ஞனான ஶ்ரீஹரி. ஷம்பலி எம்ப புரதி = ஷம்பல என்னும் கிராமத்தில். த்விஜனல்லி = ஒரு பிராமணனிடம். ஜனிஸி = அவதரித்து. கலிமலவ = கலியின் தோஷங்களை. பரிஹரிஸித = பரிகாரம் செய்தான் . (தர்மத்தை அழிப்பவர்களான அனைத்து அரசர்களையும், அரசன் என்று சொல்லிக் கொண்டு மக்களை துன்புறுத்தி வரும் அனைவரையும் கொன்று கலி தோஷத்தை பரிகரித்த). கல்கி = கல்கி ரூபியான ஹே பகவான். தயவாகோ = எனக்கு அருள்வாயாக.

இந்த அவதாரத்தின் கதை மற்றும் மகிமைகள் இவ்வாறு இருக்கிறது.

நாராயணஸ்தை:ஸ்துதி பூர்வமர்திதோ
பவாய லோகஸ்ய ஷம்பலாக்யே |
க்ராமே முனீர் விஷ்ணுயஷோபிதஸ்ய
க்ருஹே பபூவா விரசிந்த்யஷக்தி: ||
கலேஸ்து கால்க்யாரத ஏவ கல்கி
ஞானம் கலம் கம் ஸுகமேவ தத்வான் |
கல்கீதி வா தேன ஸமஸ்த தஸ்யு
வினாஷனம் தேன தினாத் வ்யதாயி || (பாரத தாத்)

தேவதைகள் வணங்கி வேண்டிக் கொள்ள, விஷ்ணுயஷஸ் என்னும் பிராமணனின் மனைவியிடம், ஷம்பல என்னும் கிராமத்தில், எல்லையில்லா சக்திகளைக் கொண்டவனான ஶ்ரீமகா விஷ்ணு அவதரித்தான்.

ஈ ரீதி ஹத்தவதாரத[3]லி ஸஜ்ஜனர
நீ ரக்ஷிஸிதி[3] ஸ்வாமி ஜகன்னாத[2] | ஜகன்னாத[2] விட்ட[2]லனெ உ
த்[3]தா[3]ர மாட[3]ய்ய ப[4]வதி[3]ந்த[3] ||11-(189)

ஈ ரீதி = இப்படியாக. ஹத்தவதாரதலி = பத்து அவதாரங்களில். சஜ்ஜனர = முக்தியோக்ய ஜீவர்களை. நீ = நீ. ரக்ஷிஸிதி = காப்பாற்றினாய் (எப்போதும் காப்பாற்றுகிறாய்). ஸ்வாமி ஜகன்னாதவிட்டலனே = ஹே ஸ்வாமி, உலகத்தின் தலைவனான

விட்டலனே. பவதிந்த = சம்சாரத்தினால். உத்தார மாடய்யா = என்னை விடுவித்து காப்பாற்றுவாயாக, தேவா!!

17. ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்திரம்

ஶரணாக^{3}தர கல்பதருவெ வெங்கடத^{4}ரா
த^{4}ரனாத^{2} நின்ன சரணாப்ஜ | சரணாப்^{3}ஜயுக^{3}ள ஸன்
த^{3}ருஶவனீயோ எந்தெ^{3}ந்து^{3} ||1-(190)

ஷரணாகதர கல்பதருவெ = சரணடைந்த மக்களுக்கு கல்ப வ்ருக்ஷத்தைப் போல அபீஷ்டங்களைக் கொடுக்கும். வெங்கட தராதரனாத = ஹே வெங்கடாசலபதியே. நின்ன = உன். சரணாப்ஜ யுகள = பாத பத்மங்களின் (இரு பாதங்களை). சந்தருஷனவ = பிரத்யட்ச தரிசனத்தை. எந்தெந்து = எப்போதும். ஈயோ = கொடுப்பாயாக

ஸ்ரீவெங்கடேசன், நம்பிய மக்களின் கல்பவிருட்சம். கல்பவிருட்சம் சேவானுரூபமாக பலன்களைக் கொடுப்பதைப் போல, தன் பக்தர்களுக்கு அவர்களின் சேவானுகுணமான இஹபர சௌக்கியங்களைக் கருணிக்கிறான்.

நைஷா பராவரமதிர் பவதோ நனு
ஸ்யாஜ்ஜந்தோர் யதாத்ம ஸுஹ்ருதோ ஜகதஸ்ததாபி |
ஸம்ஸைவயா ஸுரதரோரிவ தே ப்ரஸாத:
ஸேவானுரூப உதயோ ந பராவரத்வம் || (பாகவதம்)

கல்பவிருட்சத்தினால் கிடைக்கும் பலன் சேவானுரூபமாக இருக்கிறது. பகவத் பிரஸாதமும் சேவானுகுணமானதே. பரமாத்மன் ஸர்வஸமன். (அனைவருக்கும் சமமானவன்). அவரவர்களுக்கு விருப்பமானவற்றை, அவர்கள் கொடுக்கும் சேவைக்கேற்ப அவர்களுக்குக் கொடுக்கிறான்.

ஸாதகர்கள் நிரந்தர ஸ்ரீஹரிபாத தியானத்தை யாசிக்க வேண்டும். அபரோக்ஷிகள் நித்ய சாட்சாத் தரிசனம் இருக்கும் மோட்சத்தை கேட்க வேண்டும். இந்த வேண்டுகோளை ஸ்ரீஹரி நிறைவேற்றும் போது ஸாதகர்களுக்கு கிடைக்கிறது. மனஸ்ஸம்ஸ்காரமே

உபாதான காரணமாக உள்ள ஸ்ரீஹரிபாதங்கள், முக்தர்களுக்கு சச்சிதானந்த ஸ்வரூபத்தின் பாதங்களின் தரிசனம் ஆகிறது. இரு விதமான தரிசனமும் ஸ்ரீஹரி ப்ரஸாதத்தினாலேயே கிடைக்கிறது - புருஷ முயற்சியால் சாத்தியம் இல்லை. இதைத்தவிர மற்ற பலன்களை எப்போதும் கேட்கக்கூடாது. விரும்பக்கூடாது. கல்ப விருட்சத்தை வணங்கி, வெறும் மாவினை வேண்டுவது எப்படி முட்டாள்தனமோ அதைப் போலவே இதுவும் என்று எச்சரிக்கிறார் ஸ்ரீதாஸார்யர்.

வெங்கடாசலனிலய பங்கஜோத்ப⁴வனய்ய
ஶங்கரப்ரீய கவிகே³ய | கவிகே³ய நின்ன பத³
கிங்கரனெனிஸோ ஶுப⁴காய ||2-(191)

வெங்கடாசலனிலய - வெங்கடாசல வாசியும், பங்கஜோத்பவனய்ய - நாபி கமலத்திலிருந்து பிறந்த பிரம்மனின் தந்தையும், ஷங்கர ப்ரிய - (பிரம்மனின் மகனான) மஹேஷ்வரனில் அன்பு உள்ளவனும், கவிகேய - ஞானிகளால் புகழப்படுபவனுமான, ஷுபகாய - சின்மய தேகம் கொண்ட ஸ்ரீனிவாஸனே, நின்ன பத கிங்கரனு எனிஸோ - உன் பாத சேவகர் என்று ஏற்றுக்கொள். (உன் தாஸனாக ஆக்கிக்கொள்). அல்லது எனிஸோ - ஞானிகளால் என்னை பக்தன் என்று அழைக்க வை. அல்லது, எப்போதும் 'தவ தாஸோsஹம்' என்று என்னை சொல்ல வை.

மஹா பகவத்பக்தர்கள் எதை பக்தன் என்று அங்கீகரிப்பரோ, அவனை பகவந்தனும் பக்தத்வேன ஏற்றுக் கொள்வான் என்னும் விஷயமும் இங்கு சொல்லப்படுகிறது என்று அறிய வேண்டும்.

ஸ்வாமி தீர்த்த நிவாஸ காமிதப்ரத³ குல
ஸ்வாமி ஸர்வக்ஞ ஸர்வேஷ | ஸர்வேஷ ஸுரஸார்வ
பௌ⁴ம நீனெனகெ³ த³யவாகோ³ ||3-(192)

ஸ்வாமி தீர்த்த நிவாஸ - ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தின் தென் கரையில் நிலைத்திருக்கும், காமிதப்ரத - அபீஷ்டங்களைக் கொடுக்கும், குலஸ்வாமி - பக்தர்களின் தலைவனும் (அல்லது என் குலஸ்வாமி), ஸர்வக்ஞ - சர்வக்ஞனும், சர்வேஷ - ஸர்வ ஸ்வாமியும் ஆன, ஸுரஸார்வபௌம - தேவதைகளின் சக்ரவர்த்தி

யான ஹே வெங்கடேஷனே, நீ - நீ, எனகெ - எனக்கு, தயவாகோ - அருள்வாயாக.

ஸ்வாமி தீர்த்தத்தின் மகிமையை இங்கு விளக்குகிறார்.
த்ரைலோக்ய விஷ்ருதா புண்யா ஸ்வாமிபுஷ்கரிணீதி வை |
கங்காத்யை: ஸகலைஸ்தீர்த்தை: ஸா ஸமா விமலோதகா |
அனேகபஹுஸாஹஸ்ரை: பாதகைரபி ஸம்வ்ருத: |
நரஸ்தேப்ய: ஸமஸ்தேப்ய: பாபேப்யோऽபி ப்ரமுச்யதே ||
(வாமன புராணம்)

மூன்று உலகங்களிலும் புகழ்பெற்ற இந்த புஷ்கரிணி, கங்காதி அனைத்து தீர்த்தங்கள் ஒரேயிடத்தில் உள்ள பவித்ர தீர்த்தத்திற்கு சமானமானதாகும். அனேக பிறவிகளில் சேர்ந்த எண்ணிக்கையற்ற பாவங்களை ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்த ஸ்னானாதிகளால் சுலபமாக பரிகரித்துக் கொள்ளலாம். அனைத்து புண்ய தீர்த்தாபிமானி தேவதைகளின் ஸ்வாமினி இந்த புஷ்கரிணி ஆனதால் 'ஸ்வாமிதீர்த்த' என்னும் காரணப் பெயர் வந்திருக்கிறது. இந்த திவ்ய தீர்த்த ஸ்னானத்தினால் பரிசுத்தமாகி, அங்கிருக்கும் ஸ்ரீனிவாஸனை வணங்கினால், கிடைக்காத பலன்களே இல்லை. 'கிமலப்யம் பகவதி ப்ரஸன்னே ஸ்ரீனிகேதனே'.

தே³வஶர்மன ஸ்துதிகெ³ நீனொலிது³ பாலிஸிதெ³
தே³வகீ கந்த³ த³யதி³ந்த³ | த³யதி³ந்த³ ஒலிதெ³ன்ன
தாவகரொளகி³ட்டு ஸலஹய்ய ||4-(193)

தேவஷர்மன - தேவஷர்ம என்னும் பக்தனின், துதிகெ - ஸ்தோத்திரத்திற்கு, நீனொலிது - நீ மகிழ்ந்து, பாலிஸிதெ - அருளினாய், தேவகீகந்த - ஹே தேவகீ புத்திரனே, வெங்கடேசனே, தயதிந்த - தயவு செய்து, ஒலிது - மகிழ்ந்து தரிசனம் அளித்து, என்ன - என்னை, தாவகரொளகெ - உன் சேவகர்களின் நடுவில், இட்டு - எப்போதும் இருக்குமாறு அருளி, ஸலஹய்யா - காப்பாற்றுவாய் தந்தையே.

ஆதித்ய புராணத்தின்படி வெங்கடேஷ மஹாத்ம்யத்தில், தேவஷர்ம என்பவன் ஸ்ரீவாயுதேவரின் பக்தனான பிராமணன். சர்வேஷ்ட பிரதனான ஸ்ரீவெங்கடேஷனை வணங்கி அருள் பெற்ற கதை

வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தேவஷர்ம பெரிய குடும்பஸ்தன். குசேலனைப் போல ஏழை. வெங்கடாசலத்திற்கு போய்வர வேண்டு மென்று மனைவி அவனை வேண்ட, அவனோ அதை கேட்டுக் கொள்ளாமல் இருந்தான். பின் வாயுதேவர் அவனுக்கு பிரத்யட்சமாகி ஆணையிட்டபிறகு, குருவின் ஆணையை பின்பற்று வதற்கு, வெங்கடாசலத்திற்கு வந்தான். ஆனந்த நிலயனான ஸ்ரீவெங்கடேஷனை விதம்விதமாக கொண்டாடினான். பிரசன்னனான வெங்கடேஷனில் தன் ஏழ்மையை பரிகரிக்க வேண்டும் என்று அவன் வேண்டவில்லை. நிலையான பக்தியையே வேண்டிக் கொண்டான். வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தால், அவன் வீட்டில் தங்க மழையும், பின் அவனுக்கு மோட்சமும், அவன் வேண்டாமலேயே வெங்கடேசன் அவனுக்கு அருளியிருந்தான். தேவஷர்ம இயற்றிய இந்த ஸ்தோத்திரத்தை படிப்பவர்களுக்கு, மிகப்பெரிய செல்வம் மற்றும் உத்தம ஸாதனை ஆகட்டும் என்று வரம் அளித்தான். வேதார்த்த சாரங்களைக் கொண்ட இந்த ஸ்தோத்திரத்தை ஞானிகள் இப்போதும் தினந் தோறும் பாராயணம் செய்கின்றனர்.

ஸத்யஸங்கல்ப ஜக³த்³த்யந்தபி⁴ன்ன ஸ
ர்வோத்தம புராண புருஷேஶ |புருஷேஶ ஸதத த்வ
த்ப்³ருத்யன்ன காயோ கருணாளோ ||5-(194)

ஸத்யஸங்கல்ப – சத்யசங்கல்பனும், ஜகதத்யந்தபின்ன – (சேதன அசேதன) உலகத்திலிருந்து மிகவும் வேறுபட்டவனும், சர்வோத்தம – சம-அதிக இல்லாதவனும், புராணபுருஷ – அனாதி புருஷனும், ஈஷ – சர்வேஷனும் ஆன, கருணாளோ – ஹே தயாமூர்த்தியே, வெங்கடநாதனே, ஸதத – எப்போதும், த்வத்ப்ருத்யன்ன – உன் தாஸனான என்னை, காயோ – காப்பாயாக.

அத்யயோ யஸ்ய கேனாபி ந க்வாபி ஹி |
ப்ரத்யயோ யத்குணேஷூத்தமானாம் பர: |
ஸத்யஸங்கல்ப ஏகோ வரேண்யோ வஷீ |
மத்யனூனை: ஸதா வேதவாதோதித: |
ப்ரீணயாமோ வாசுதேவம்
தேவதா மண்டலா கண்ட மண்டலம் (த்வாதச ஸ்தோத்திரம்)

யாரை, யார், எந்த தேச காலங்களிலும் மறக்கமாட்டானோ, யாரின் அனந்த ஷக்தி ஞானாதி குணங்களில், உத்தம தேவதைகளும் த்ருட நம்பிக்கையை வைத்திருக்கிறாரோ, யாரின் சங்கல்பம் என்றும் வீணாவதில்லையோ, சம-அதிக நிலைகள் இல்லாதவனோ, யாரொருவன் அனைத்தையும் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறானோ, யாரை அனைத்து ஞானிகளும் அனைத்து வேதப்ரதிபாத்ய மகிமைகளால் பூர்ணன் என்று சொல்கிறாரோ, அந்த தேவசமூகத்திற்கு பூஷணனான ஸ்ரீஹரியை வணங்கி மகிழ்ச்சிப்படுத்துகிறோம். இந்த மகிமைகளையே ஸ்ரீதாஸார்யர் நிரூபித்திருக்கிறார் என்பது தெளிவாக புரிகிறது.

க்ருதிபதியெ நின்ன ஸம்ஸ்ம்ருதியொந்தி^{3}ரலி ஜன்ம
ம்ருதி நரகப^{4}யவு ப^{3}ரலஞ்செ | ப^{3}ரலஞ்செ எனகெ^{3} ஸந்
தத நின்ன ஸ்மரணெ கருணிஸோ ||6-(195)

க்ருதிபதியெ – க்ருதிதேவியின் ரமணனான ஹே பிரத்யும்ன, நின்ன சம்ஸ்க்ருதியு – நிரந்தர பக்திபூர்வக ஸ்மரணை; ஒந்திரலி – (என் அனைத்து க்ருதிகளில்) தப்பதெ இரலி – இருக்குமாறு அருள்வாயாக. ஜன்மம்ருதினரக பயவு – பிறப்பு, இறப்பு, நரகங்கள் என்னும் பயம், பரலி – வந்தாலும், அஞ்செ – பயப்படுவதில்லை. (ஆகையால்), எனகெ – எனக்கு, ஸந்தத – எப்போதும், நின்ன ஸ்மரணெ – உன் ஸ்மரணையை கருணிஸோ – அருள்வாயாக பிரபுவே.

மூல நாராயணனிலிருந்து வெளிவந்த வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த நாமக நான்கு ரூபங்களின் சேவைக்காக, ஸ்ரீமஹாலட்சுமியும், மாயா, ஜயா, க்ருதி, ஷாந்தி என்று நான்கு ரூபங்களை தரித்தாள். க்ருதிதேவியின் கணவரே பிரத்யும்னன். இவனிடமிருந்தே உலகத்தின் ஸ்ருஷ்டி துவங்கியது.

ஹரிஸ்ம்ருதி: ஸர்வவிபத் விமோக்ஷிணீ – ஹரிஸ்ம்ருதி அனைத்து விபத்துகளையும் பரிகரிக்கிறது என்னும் புராணம், ஹரிஸ்மரணையின் மஹத்வங்களை சொல்கிறது. துக்கம் பயத்தைக் கொடுக்கிறது. நானாவித துக்கங்களின் நடுவில், பிறப்பு, மரணம் மற்றும் நரகங்கள் அதிசய துக்க ரூபங்கள் ஆனவை. துக்கத்தின் மூலம் பாபகர்ம. நம் கர்மங்கள் புண்ய பாவங்கள்

என்னும் அதிர்ஷ்டத்தை கொடுப்பதற்கு, முறையே ஹரிஸ்மரணை, மறதிகளே முக்கிய காரணங்கள் ஆகின்றன.

ஸ்வதந்த்ரனான சர்வகர்த்தனான ஸ்ரீஹரியே அனைத்து கர்மங்களையும் செய்து, அஸ்வதந்த்ரனான தன் மூலமாக செய்விக்கிறான் என்னும் அனுசந்தானம், கர்மங்களை செய்யும் காலத்தில் இல்லாததே 'விஸ்மரணை' (மறதி) எனப்படுகிறது. ஹரி விஸ்மரணையினால் செய்த கர்மங்கள் சம்சார பந்தனத்திற்கு காரணம் ஆகின்றன. அதுவே பாவங்கள். சர்வே விதி நிஷேதாஸ் யுரேத யோரேவ கிங்கரா: – அதாவது, அனைத்து விதி விதி மீறல்கள், ஸ்மரணை, விஸ்மரணைகளையே கொடுக்கிறது. ஆகையால், நிரந்தரமாக ஸ்மரணை இருந்தால், பந்தக கர்மங்களே இல்லை என்றாகி, பயதுக்காதிகளுக்கு வழியே இல்லை என்று ஆகிறது.

ஶுசிஸத்[3]மனெ மனோவசனாத்ம க்ருதகர்ம
நிசய நினகீ[3]வெ ஸுசரித்ர |ஸுசரித்ர ஸுகு[3]ணக[3]ள
ரசனெ ஸுக[2]வீயோ ருசிராங்க[3] ||7-(196)

ஷுசிஸத்மனெ – ஹே முக்யபிராணாந்தர்கத வெங்கடேசனே, மனோவசனாத்ம க்ருத கர்மனிசய – மன, வாக்கு, தேகங்களால் செய்யும் கர்ம சமூகத்தை (அனைத்து கர்மங்களையும்), நினகீவெ – உனக்கு அர்ப்பிப்பேன். ஸுசரித்ர – மங்கள சரித்திரங்களைக் கொண்டவனே, ஸுகுண – (உன்) கல்யாண குணங்களை, ரசனெ ஸுகவ – எப்போதும் செய்யும் (மனதில் சிந்திக்கும்) சுகத்தை, ருசிராங்க – அழகான தேகம் உள்ள ஹே ஸ்வாமி, ஈயோ – அருள்வாயாக, ஹே ஸ்வாமியே.

ஷுசிஸத்ம – ஷுசி நாமக முக்யபிராணனே பிரதான வாசஸ்தலமாக உள்ள ஸ்ரீஹரி, முக்யபிரணாந்தர்கத லட்சுமி ரமணன் என்று அர்த்தம். முக்யபிராணன் ஸ்ரீஹரியின் முக்ய பிரதிமையாக இருக்கிறான் என்னும் விஷயத்திற்கு 74ம் நுடியில் உள்ள விசேஷ பிரமாணங்களை இந்த இடத்தில் கவனிக்க வேண்டும்.

ஆத்ம ஷப்தத்தின் முக்ய வாச்யன் ஸ்ரீஹரியே. ஆத்ம ஷப்தத்திற்கு ஜீவ, மனஸ், தேகம் முதலான பிற அர்த்தங்களும் உள்ளன. இந்த பத்யத்தில் ஆத்ம ஷப்த, தேகம் என்னும் அர்த்தத்தைக் கொண்டது.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த மற்றும் மோட்ச என்னும் ஜகத் சம்பந்தமான விஷ்ணு கர்த்ருத்வங்களும், அந்த மகாமகிமனின் நற்சரித்திரங்களே. தன் பற்பல அவதார ரூபங்களால் செய்யும் செயல்களும் நற்சரித்திரங்களே. அவை அனைத்தும் மங்கள மகிமைகள் மற்றும் அனைத்தும் அவனின் ஸ்வரூபாத்மகமே. இவற்றை பக்தியுடன் நினைப்பவர்களை மங்கள ஸ்வரூபனாக மாற்றுகின்றன.

ஹ்ருத்³யத்³லி தவ ரூப வத்³னத்³லி தவ நாம
உத்³ரத்³லி நைவேத்ய ஶிரத்³ல்லி | ஶிரத்³ல்லி நிர்மால்ய
பத்³ஜலக³ளிரலு ப⁴யவுண்டே ||8-(197)

ஹ்ருதயதலி – மனதில், தவ ரூப – உன் ரூபம், வதனதலி – வாயில், தவ நாம – உன் நாமம், உதரதலி – வயிற்றில், நைவேத்ய – உனக்கு அர்ப்பிதமான உணவு, ஷிரதல்லி – தலையில், நிர்மால்ய – உனக்கு அர்ப்பிதமான துளஸி புஷ்பாதிகளை, பதஜலகளு – உன் பாதோதகம், இரலு – (என் அவயவங்களில்) இருக்க, பயவுண்டெ – சன்சார பயம் இருக்குமா? (இருக்காது என்று அர்த்தம்).

ஹ்ருதி ரூபம் முகே நாம நைவேத்யமுதரே ஹரே: |
பாதோதகம் ச நிர்மால்யம் மஸ்தகே யஸ்ய ஸோऽஸ்யுத: ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

ஸ்ரீமதானந்த தீர்த்தரின் இந்த வாக்கியத்தின் பொருளே தாஸார்யரின் இந்த நுடியில் உள்ளது. ‘பயவுண்டே’ என்பது மேற்கண்ட ஸ்லோகத்தில் உள்ள ‘ஸோऽச்யுத:’ என்பதின் அர்த்தம். ஸ: – இவ்வித பக்தன், அச்யுத: – ச்யுதி இல்லாதவனாக இருக்கிறான் (சம்சாரத்தில் இருக்கும் பய துக்காதிகள் இல்லாதவனாக, பின் முக்தன் ஆகிறான் என்று அர்த்தம்).

ஸதத ஸ்மரிஸுத நின்ன நுதிஸி பே³டி³ கொளுவெ
ஹிததி³ந்த³லி நின்ன விக்³ஞான | விக்³ஞான நிஜபா⁴க³
வதர ஸங்க³வனெ கருணிஸோ ||9-(198)

ஸதத – எப்போதும் ஸ்மரிஸுத – (உன்னை) நினைத்தவாறு, நுதிஸி – ஸ்தோத்திரம் செய்து, பேடிகொளுவெ – வேண்டிக் கொள்கிறேன். ஹிததிந்த – என் சுய லாபத்திற்காக, நின்ன அஞ்ஞான – உன் சம்பந்தமான (உன்னால் இயற்றப்பட்ட) பிரம்ம மீமாம்ஸ சாஸ்திர பிரக்ஞை), நிஜபாகவதர – உன் சத்பக்தரின்; சங்கவனெ – சகவாசத்தை, கருணிஸோ – அருள்வாயாக ஸ்வாமி.

பகவத் அபரோக்ஷத்திற்கு ஸாதனமான ஸ்ரேஷ்ட பக்தியை, ஆன்றோர்களின் சங்கம் கொடுப்பதால், அதனையே வேண்டுகிறார். எப்போது ஹரிஸ்மரணை செய்தவாறு, பகவத் பக்தர்களின் சங்கத்தையே பகவந்தனிடம் வேண்டுங்கள் என்று ஸாதகர்களுக்கு உபதேசம் செய்கிறார்.

ஸதாம் ப்ரஸங்கான்மம வீர்ய ஸம்பதோ
பவந்தி ஹ்ருத்கர்ணரஸாயனா: கதா: |
தஜ்ஜோஷணாதாஷ்வப வர்க்கவர்த்மனி
ஸ்ரத்தாவதி பக்திரனுக்ரமிஷ்யதி || (பாகவத)

சத்புருஷரின் சங்கத்தினால் (சாமீப்ய சேவாதி ரூப சங்கத்தினால்), காது மற்றும் மனதிற்கு, அமிர்தத்தைப் போல ஆனந்தம் தரக்கூடிய, என் மகிமைகள் என்னும் திவ்ய சரித்திரங்களின் நித்யலாபம் உண்டாகிறது. அதன் பலனாக விரைவில் என் பிரத்யட்ச தரிசனத்தை தரக்கூடிய சிறந்த பக்தி படிப்படியாக வளர்கிறது. என்று கபில நாமக பரமாத்மன் தன் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்கிறான்.

ருஷகேது ஜனக து³ர்விஷயகொ³ளகா³கி³ ஸா
ஹஸபடு³வ சித்த ப்ரதிதி³ன | ப்ரதிதி³னக³ளலி நி
ந்னொஶ மாடி³கொள்ளொ வனஜாக்ஷ ||10-(199)

ருஷகேதுஜனக – (மகரத்வஜ) மன்மத பிதனான, வனஜாக்ஷ – ஹே புண்டரிகாக்ஷனே, துர்விஷயகெ – துர்விஷயங்களுக்கு

(நிஷித்த போகங்களுக்கு) அடிமையாகி / வசமாகி, ப்ரதிதின - தினமும், ஸாஹஸபடுவ - அவற்றின் திருப்திக்காக, நேரம் செலவழித்து, சித்த - (என்) மனதை, ப்ரதி தினகளல்லி - அனைத்து காலங்களிலும், நின்னோஷமாடிகொள்ளோ - உன் அதீனமாக (உன்னைத் தவிர வேறு யாரையும் நினைக்காமல்), மாடிகோ - செய்வாயாக, ஸ்வாமி.

விஷயங்களில் மனதை ஈடுபட வைக்காத மனதை அருளி, தன் வசமாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று அவனையே பிரார்த்திக்கவும் என்று உபதேசிக்கிறார். விஷயங்களை விரும்புவதே, மோட்ச மார்க்கத்திற்கான முக்கிய தடையாகும். போகங்களே அந்தம்தமஸ்ஸிற்கு காரணமாகும். நிஷித்தம் இல்லாத போக்ய வஸ்துகளை, ஹரியிடமிருந்து கிடைத்தன என்று சிந்தித்து, அவற்றை ஹரிக்கு அர்ப்பித்து, ஹரிஸ்மரணையுடன் வணங்கினால், மோட்ச ஸாதனைக்கு அவை தடைகளாக ஆவதில்லை.

மலமூத்ர ரக்த கஷ்மல தேஹபோஷணெகெ^{3}
பளலிதெ^{3} நா நின்ன ப^{4}ஜிஸதெ^{3} | ப^{4}ஜிஸதெ^{3} பரர பா^{3}
கி^{3}ல காய்து^{3} களெதெ^{3} தி^{3}வஸவ ||11-(200)

மலமூத்ர ரக்த கஷ்மலதேஹபோஷணெகெ - மல மூத்ர ரக்த என்னும் கழிவுகளால் நிரம்பிய இந்த தேகத்தை வளர்ப்பதற்கு, நா - நான், நின்ன - உன்னை, பஜிஸதெ - வணங்காமல், பளலிதெ - காலத்தை கழித்தேன். பரர - பிறரின் (அபக்தரின் - கீழான மனிதர்களின்), பாகில காய்தெ - (வஸ்திர, திரவ்ய, தான்யாதிகளை பெறுவதற்கு) வாயிலில் காத்து நின்றேன். மத்து திவஸவ - (இதற்காக விலைமதிப்பற்ற ஆயுளின்) நாட்களை, களெதெ - வீணாக்கினேன்.

ஶ்வானஸூகர நீசயோனியொளு ப^{3}ரலஞ்செ
ஸ்ரீநாத^2 நின்ன ஸ்ம்ருதி ஸ்வர்க்க^3 | ஸ்ம்ருதி ஸ்வர்க்க^3 ஸுக^2
நினகா^{3}னு பே^{3}டு^{3}வேனு கருணீஸோ ||12-(201)

ஷ்வான ஸூகர நீசயோனியொளு - நாய், பன்றி முதலான நீச பிறவிகளில், பரலு - பிறக்க, அஞ்செ - பயந்து, ஸ்ரீநாத - ஹே

லட்சுமிரமணா, நின்ன ஸ்ம்ருதி ஸ்வர்க்க ஸுகவ – ஸ்வர்க்கத்திற்கு இணையான சுகத்தை, ஆனு – நான், நினகெ – உன்னில், பேடுவெனு – வேண்டுகிறேன், கருணிஸோ – (அதையே) அருள்வாயாக.

ஸ்ரீஹரிதியானத்தினாலும், ஸ்ரீஹரி மற்றும் ஹரிபக்தரின் கதைகளைக் கேட்பதாலும், அதிசயமான அலௌகிகமான ஆனந்தம் ஆகிறது என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. சிறிதே பக்தி வைராக்யம் உள்ளவர்களுக்கும், பாகவத ஸ்ரவணம் மனதிற்கு ஆனந்தத்தை கொடுக்கிறது என்று சொல்கிறது. 'பானேன தே தேவ கதாஸுதாயா: ப்ரவ்ருத்தபக்த்யா விஷதாஷயாயே' - ஹரிகதா சிரவணம் அமிர்தத்திற்கு ஈடானது என்றும், அதனால் பக்தி அதிகமாகி, அந்தக்கரணம் சுத்தி ஆகிறது என்றும் 'யா நிர்வ்ருதி ஸ்தனுப்ருதாம் தவ பாதபத்ம த்யானாத் பவஜ்ஜனகதா ஸ்ரவணேன வா ஸ்யாத்' - உன் பாதபத்ம தியானத்தினாலும், உன் பக்தர்களின் கதா சிரவணத்தினாலும், தேகம் கொண்டவர்களுக்கு அதிகமான ஆனந்தம் ஆகிறது என்றும், ஸ்ரீமத் பாகவதம் பற்பல விதமான பகவத் ஸ்மரணையின் சுகத்தை வர்ணிக்கிறது.

நின்ன விஸ்ம்ருதி ஜன்ம ஜன்மக்கெ கொட³தி³ரு
என்ன குலதெ³ய்வ எந்தெ³ந்து³ | எந்தெ³ந்து³ நினகா³னு
பி³ன்னயிபெ பி³ட³தெ இனிதெந்து³ ||13-(202)

என்ன குலதெய்வ – என் குலஸ்வாமி வெங்கடேஷா, ஜன்ம ஜன்மக்கெ – அனைத்து பிறவிகளிலும், நின்ன விஸ்ம்ருதி – உன் விஸ்மரணையை (மறதியை) கொடதிரு – கொடுக்க வேண்டாம். இனிதெந்து – இவ்வாறாக (இதுவே என் பிரார்த்தனை என்று), ஆனு – நான், பிடதெ – நிரந்தரமாக (எப்போதும்), நினகெ பின்னயிபெ – உன்னிடம் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீஹரி ஸ்மரணையானது, நீச யோனிகளிலிருந்து தப்பிக்க வைத்து, ஸ்மரண காலத்தில்கூட ஸ்வர்க்க சுகத்தைக் கொடுக்கிறது என்னும் மகிமையை சொல்லி, விஸ்மரணையால் அதன் எதிரான பலன்கள் கிடைக்கிறது என்றும் சொல்கிறது. அதாவது, நீசயோனிகள் மற்றும் இஹத்தின் லோகங்களில் துக்கங்கள் கிடைக்கின்றன என்று இந்த நுடியிலிருந்து தெரிகிறது.

விஸ்மரணையினால், தானே ஸ்வதந்த்ர கர்த்தன் என்னும் அபிமானம், வீடு, செல்வம் ஆகியவை தன்னுடையது என்னும் கர்வம் உண்டாகிறது. இந்த சுய கர்வத்தை போக்குவதற்காக அனேக விதங்களால் துக்கங்களை அனுபவிப்பதோடு மட்டுமல்லாமல், ஜீவன் பற்பல தேகங்களில் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது.

ப்ரக்ருதிகு^{3}ணக^{3}ள கார்ய ஸுக^{2}துக்க^{2} மூல ஜட^{3}
ப்ரக்ருதிக^{3}பி^{4}மானி மஹலக்ஷ்மி | மஹலக்ஷ்மிபதி நின்ன
ப^{4}குத நானய்ய எந்தெ^{3}ந்து^{3} ||14-(203)

ப்ரக்ருதி குணகள கார்ய – ஸத்வ, ரஜ, தமஸ் என்னும் குணங்களின் காரியங்களே, சுகதுக்க மூல – சுக துக்கத்திற்கான காரியங்கள், ஜட ப்ரக்ருதிகபிமானி – அபிமானி, மஹலக்ஷ்மி – மஹாலட்சுமி, ஆனு – நான் , எந்தெந்து – எப்போதும் (அனைத்து நேரங்களிலும்) மஹலட்சுமிபதி – மஹாலட்சுமியின் பதியான, நின்ன – உன், பகுதனய்ய – பக்தனாகி இருக்கிறேன் ஸ்வாமி!

ஸத்வம் ரஜஸ்தம இதி குணா:ப்ரக்ருதி ஸம்பவா: |
நிபத்னந்தி மஹாபாஹோ தேஹே தேஹினமவ்யயம் ||

ஸத்வ, ரஜ தம என்னும் குணங்கள் மூலப்ரக்ருதியின் அதிசூக்ஷ்ம விஷயங்களால் பிறந்தன. ஜீவர்களை தேகத்தில் கட்டுப்படுத்துவது இந்த குணங்களே. ஜீவர்கள், ஸ்வரூபத்ஹ்டினால் நித்யர். நிர்விகார ஸ்வரூபம் உள்ளவர்கள்.

தெய்வீஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||

இந்த குணங்களுக்கு நியாமகளான தேவி (மஹாலட்சுமி) என் விருப்பத்திற்கேற்ப, தன் அதீனமான குணங்களால் ஜீவர்களை சம்சாரத்தில் கட்டுப்படுத்துகிறாள். அவளை நியமிக்கும் (அவளின் கணவனான) என்னை சரணாகதி அடைந்தவர்கள் மட்டும் சம்சாரத்தை தாண்ட வல்லவர்கள். என்று ஸ்ரீகிருஷ்ணன், பகவத்கீதையில், குணகார்யகளான, தேஹேந்திரிய விஷயாதிகளின் (அதிலிருந்து வந்த சுக துக்காதிகளின்) பந்தனங்களை விட்டு

முக்தர் ஆகவேண்டும் என்று விரும்புபவர்கள் தன்னையே சரணடைய வேண்டும் என்று உபதேசிக்கிறான்.

புண்ய பா1பா1தி3க3ளு நின்னதீ4னதொ3ளிரலு
என்னதெ3ந்த3ருஹி த3ணிஸுவி | த3ணிஸுவுது3 த4ர்மவெ
நின்னரிவ ஞான கருணிஸோ ||15-(204)

புண்ய பாபாதிகளு – புண்யபாப ஆகியவை (மற்றும் என்னுடைய அனைத்து செயல்களும்), நின்னதீனதொளிரலு – உன் வசத்திலேயே இருக்க, என்னதெந்தருஹி – என்னுடையது என்னும் அறிவைக் கொடுத்து (அபிமானத்தைக் கொடுத்து), தணிஸூவி – சோர்வினைக் கொடுப்பாய், (இவ்வாறு), தணிஸுவுது – கஷ்டப் படுத்துவது, தர்மவே? - நியாயமா? (நியாயம் அல்ல). நின்னரிவ – உன்னை அறியும் (உன் சர்வ கர்த்ருத்வ மற்றும் ஸ்வாதந்த்ர்யங்களை அறியும்), ஞான ஸுக்ஞானங்களை, கருணிஸோ – (துரபிமானங்களை விலக்கி) அருள்வாயாக.

ஸ்ரீஹரியே ஸர்வகர்த்தனாகி புண்யபாபாதி ரூபங்களின் கர்மங்களை செய்து, பராதீன கர்த்தனான ஜீவன் மூலமாக செய்விக்கிறான் என்னும் ஞான நிஸ்சயத்தைக் கொடுத்து, அதன் மூலம் பாப புண்யங்களின் லேபம் ஆகாதவாறு அருள்வாயாக என்று ஸ்ரீஹரியை பிரார்த்திக்க வேண்டும் என்று உபதேசிக்கிறார். ஜீவ கர்த்ருத்வ விஷயமாக 162 மற்று 140ம் பத்யங்களில் கொடுத்திருக்கும் விவரணைகளை பார்க்கலாம்.

இனிதித்த3 ப3ளிக யோசனெயாகெ க3ருட3 வா
ஹனனெ மஹலக்ஷ்மீ நரசிம்ஹ | நரசிம்ஹ பி3ன்னயிபெ
க4னதெ நினக3ல்ல கருணாளு ||16-(205)

இனிதித்த பளிக – நீயே ஸ்வதந்த்ரனான ஸர்வகர்த்தன் என்னும் ஞானம் வந்த பிறகு, யோசனெ யாகெ – கவலை எதற்கு (சம்சாரத்தில் கவலைப்பட்டு, கஷ்டப்படுவதே தேவையில்லை). கருடவாஹனனே – கருட வாகனனான, மஹலட்சுமி நரசிம்ஹ – ஹே லட்சுமி ந்ருஸிம்மனே, பின்னயிபெ – (திரும்பத்திரும்ப) கேட்டுக் கொள்கிறேன். கருணாளு நினகெ – கருணைக்கடலான உனக்கு, கனதெ அல்ல – (பக்தனுக்கு இந்த விதமான

சுக்ஞானத்தைக் கொடுக்காமல் இருப்பது) உன் (பக்தவத்ஸலன் என்னும்) பெயருக்கு பொருந்துவதில்லை.

ஸுலப^{4}ரின்னுண்டெ நின்னளிது^{3} லோகத்ரயதி^{3}
ப^{3}லவந்தருண்டெ ஸுரரொளு |ஸுரரொளு நீனு பெ^{3}ம்
ப^{3}லவாகி^{3} இரலு ப^{4}யவுண்டெ ||17-(206)

நின்னளிது – உன்னை விட்டு, லோகத்ரயதி – உலகில், ஸுலபரு – (உன்னைப் போல) பக்தாதீனராகி உதவுபவர், இன்னுண்டெ – வேறு யார் இருக்கிறார்கள்? (யாரும் இல்லை). ஸுரரொளு – தேவதைகளில், பலவந்தரு – பலசாலிகள் (சம்சார பயத்தினால் உன்னைப் போல அருள்பவர்கள்), உண்டே? - யாராவது இருக்கிறார்களா? (இல்லை). நீ, பெம்பலவாகி – முதுகின் பின் இருக்கையில் (ரக்ஷகனாக இருக்கையில்), பயவுண்டெ – பயம் எதற்கு? (எவ்வித பயமும் இல்லை).

பற்பல பயங்களின் நடுவில் சம்சார பயமே (பிறப்பு, இறப்பு, நரகாதிகளின் பயமே) மிகவும் அதிகமானது. பிற தேவதைகள் பற்பல வித பயங்களை பரிகரிக்கின்றனர் என்றாலும், சம்சார பயத்திற்கு பரிஹார ரூபமான மோட்சத்தைக் கொடுப்பதற்கு அவர்களால் சாத்தியம் இல்லை. மற்றும் ஸ்வதந்த்ரராக எந்த பயத்தையும் அவர்கள் பரிகரிப்பதில்லை. அவர்கள் மூலமாக ஸ்ரீஹரியே பயத்தை பரிகரிக்கிறான். தன் பக்தர்களுக்கு வாழ்க்கை காலத்தில் வரும் பற்பல பயங்களைக்கூட ஸ்ரீஹரி தானே பரிகரிக்கிறான். பிசாசு, அக்னி, ஆயுதாதிகளால் மற்றும் தண்ணீர், நிலம், மலை, காடுகளில் பற்பல காரணங்களால் ஆகும் பயங்களை தன் பற்பல ரூபங்களால் ஸ்ரீஹரி பரிகரிக்கிறான் என்று, நாராயண வர்ம என்னும் திவ்ய கவச தாரணையின் மகிமையை நிரூபிக்கும் பாகவத வாக்கியங்கள் சொல்கின்றன.

யன்னோ பயம் க்ரஹேப்யோऽபாத் கேதுப்யோऽன்யேப்ய ஏவ ச |
ஸரீஸ்ருபேப்யோ தம்ஷ்ட்ரேப்யோ பூதேப்யோம்ஹோப்ய ஏவ ச|
ஸர்வாண்யேதானி பகவன்னாம ரூபாஸ்த்ர கீர்த்தனாத் |
ராமோऽத்ரிகூடேஷ்வத விப்ரவாஸே
ஸலக்ஷ்மணோऽவ்யாத் பரதாக்ரஜோऽஸ்மான் |

ஆகிய பாகவத வாக்கியங்கள் – க்ரஹபிசாசிகளால், கேது, மனிதன், பாம்பு, சிங்கம், பாவங்கள் (பாவ நிமித்தமான நரகங்கள்) இவற்றினால் ஆகும் அனைத்து பயங்களையும், பகவன் நாம கீர்த்தனை ரூபமான அஸ்திரம் காப்பாற்றட்டும். ஸ்ரீராம லட்சுமணர், காட்டில் மற்றும் மலைகளின் நடுவில் என்னை காப்பாற்றட்டும்' ஆகிய பயபரிஹாரக மகிமைகளை நிரூபிக்கிறது.

ஸ்ரீஹரி பாதங்களின் நித்யோபாசனை (நித்ய ஸ்மரணோபாசனை) மஹாபலன்களைக் கொடுக்கிறது என்று ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது.

மன்யேऽகுதஸ்சித் பயமச்யுதஸ்ய
ஸதாம்புஜோபாஸன மத்ர நித்யம் |
உத்திக்னபுத்தேரஸதாத்ம பாவாத்
விஷ்வாத்மனா யத்ர நிவர்த்ததே பீ: || (பாகவத)

அமங்கள தேகங்களில் அபிமானம் வைத்து துக்காதிகளை அடையும் அதிகாரிகளுக்கு, ஸ்ரீஹரி பாத கமலங்களின் நித்யோபாசனையினால், அனைத்து பயங்களும் முழுமையாக நாசம் அடைகின்றன.

அனன்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஷ: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகின: || (கீதை)

பிற கவலைகளை விட்டு, எப்போதும் என் ஸ்மரணை உள்ளவனுக்கு நான் மிகவும் சுலபன் (என் அருள் சுலபமாக கிடைக்கிறது) அவனே யோகி என்று ஸ்ரீகிருஷ்ணன் அபயம் அளிக்கிறான்.

ஹயவத^{3}ன ஸ்ருஷ்டி ஸ்தி^{2}திலய காரணனு நீனெ
த^{3}யவாக^{3}லெமகெ^{3} து^{3}ரிதௌ^{1}க^4 | து^{3}ரிதௌ^{1}க^{4}க^{3}ளு ப^{3}ட்ட
ப^{3}யலாகு^{3}திஹவோ ஸ்ம்ருதியிந்த^3 ||18-(207)

ஹயவதன – ஹே ஹயக்ரீவனே, நீனே – நியே (ஸ்வயம் – பிறரின் உதவிகளை எதிர்பாராமல்), ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரணனு – உலகின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு ஸ்வதந்த்ர (மூல) காரணன், எமகெ – நமக்கு, தயவாகலு – நீ அருள்வதற்கு,

துரிதௌககளு – (நம்) பாவராசிகள், ஸ்ம்ருதியிந்த – உன் ஸ்மரணை மாத்திரத்தில், பட்டபயலாகுதிஹவோ – நாசம் அடைகின்றன.

பகவத் ஸ்மரணையின் மகா பலன்களைக் கூறி, அந்த ஸ்மரணையும், பகவந்தனின் கருணையாலேயே கிடைக்கிறது என்கிறார். இவ்வாறு கருணையால் கிடைத்த ஸ்மரணையால் நாசம் ஆகின்றன, அனைத்து பயங்கள்.

நிரந்தர ஹரிஸ்மரணைக்கு காரணமான கருணை, வேதாதி அனைத்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் பகவந்தனின் மகிமைகளின் சிரவணத்தால் கிடைக்கிறது. சிரவணாதிகளுக்கும் பகவந்தனின் கருணை அவசியம். இவ்வாறு பகவந்தனின் கருணை இல்லாமல் எந்த ஸாதனையும் ஆவதில்லை. ஆனால் அந்த கருணை பற்பல விசேஷங்கள் கொண்டது. ஒரே விதமாக இருப்பதில்லை. எந்த விதமான கருணைக்குப் பாத்திரமாக வேண்டுமானாலும், ஸ்வரூப யோக்யதை மற்றும் அனாதி கர்மங்கள் மூலகாரணம் எனப்படுகிறது. சம்சார பய பரிஹாரகமான நிரந்தர ஸ்மரணைக்கு அவசியமான கருணைக்கு, வேதப்ரதிபாத்யங்களான பகவத் மகிமைகளின் ஞானம் அவசியம் என்றே, ஹயக்ரீவ ரூபியான ஸ்ரீஹரியின் அருளை வேண்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அனைத்து நற்சாஸ்திர கிரந்த ஆரம்பத்தில் 'ஸ்ரீமத் ஹனுமத்பீம மத்வாந்தர்கத ராமகிருஷ்ண வேதவியாஸ ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவாய நம:' என்று ஹயக்ரீவ ரூபி ஸ்ரீஹரியை நமஸ்கரிக்கும் சம்பிரதாயம் நம்மிடையே இருக்கிறது. அனைத்து வேதாதி வித்யா பிரதிபாத்யனும், ப்ரவர்த்தகனும், ஞானத்தை அருள்பவனுமானவன் ஸ்ரீஹயக்ரீவன். இந்த விஷயத்தில், நாரதருக்கு பிரம்மதேவர் கூறிய விஷயங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

ஸத்ரே மமாஸ பகவான் ஹயசீர்ஷ ஏஷ
ஸாக்ஷாத் ஸயக்ஞபுருஷஸ்தப நீயவர்ண: |
சந்தோமயோ மகமயோऽகில தேவதாத்மா
வாசோ பபூவுருஷதீ: ஷ்வஸதோऽஸ்ய நஸ்த: || (பாகவத)

என் யக்ஞத்தில் ஸ்வயம் யக்ஞபுருஷனான ஸ்ரீஹரியே ஹயக்ரீவ ரூபத்தினால் ப்ரத்யட்சம் ஆகிறான். சொக்கத் தங்கத்தைப் போல ஒளிரும் அந்த ரூபம், வேதமயம், யக்ஞமயம், ஸர்வதேவதைகளின் ஆத்மன் (ஸ்வாமி மற்றும் அந்தர்யாமி). ஹயக்ரீவனின் மூக்கிலிருந்து வெளிவந்த மூச்சிலிருந்து சிறந்த, ஸ்பஷ்டமான வேத வாக்கியங்கள் வெளிவந்தன.

கலுஷவர்ஜிதனெ மங்களசரித ப^{4}க்த வ
த்ஸல பா^{4}க்யபுருஷ ப^{3}ஹுரூபி^{1} | ப^{3}ஹுரூபி^{1} எனக^{3}sசஞ்
சல ப^{4}குதி நீ கருணிஸோ ||19-(208)

கலுஷவர்ஜிதனே – எவ்வித தோஷங்களும் அற்றவனே. மங்கள சரித – ஷுப சரிதனே, பக்தவத்ஸல – பக்தவத்ஸலனே, பாக்ய புருஷ – செல்வம் முதலான ஷட்குண பூர்ணனே, பஹுரூப – (ஆகிய அனந்தகுண பரிபூர்ணங்களான), அனந்தரூபங்களைக் கொண்ட ஹே ஸ்ரீவெங்கடேசனே, எனகெ – எனக்கு, அசஞ்சல பகுதி – நிலையான பக்தியை, நீனே கருணிஸோ – நீயே அருள்வாயாக (உன் அருளாலேயே த்ருடபக்தி சாத்தியமே தவிர, பிற ஸாதனைகளால் அல்ல).

ஸ்ரீஹரியின் ஜகத் ஸ்ருஷ்ட்யாதி மகிமைகளையும், அவதார லீலைகளையும் கொண்டாடும் மற்றும் சிரவணாதிகளால் மரியாதை செலுத்தும் ஜீவர்கள், தோஷங்கள் அற்றவராக, சுத்தமான ஸ்வஸ்வரூபத்தை பெறுகிறார்கள் ஆகையால், ஸ்ரீஹரி 'மங்களசரித' எனப்படுகிறான். த்ருடமான பக்தி ஸ்ரீஹரி ப்ரஸாதத்தினால் மட்டுமே கிடைக்கிறது. அவனின் பரிவாரங்களான பிற தேவதைகளின் அருள், அந்த ப்ரஸாத ப்ராப்திக்கு அவசியமே. ஆனால், அவர்களே ஸ்வதந்த்ரமாக நிஸ்சல பக்தியை அருள்வதில்லை என்று அறிய வேண்டும்.

பா^{2}லாக்ஷப்ரிய நின்ன லீலெக^{3}ள மரெயத^{3}லெ
காலகாலத^{3}லி ஸ்மரிஸுவ | ஸ்மரிஸி ஹிக்கு^{3}வ பா^{4}க்ய
பா^{1}லிஸோ எனகெ^{3} பரமாத்ம ||20-(209)

பாலாக்ஷப்ரிய – ஹே ருத்ரப்ரியனே, (ருத்ரருக்கு ஸ்ரீஹரி ப்ரியன்; ஆகையால், ஸ்ரீஹரிக்கும் ருத்ரன் ப்ரியனே). பரமாத்ம –

ஸ்ரீஹரியே, நின்ன லீலெகள – (மூலரூப மற்றும் அவதாரங்களின்) லீலைகளை (மஹிமோபேத செயல்களை), மரெயதலெ – மறக்காமல், காலகாலதலி – எப்போதும் அல்லது விசேஷமாக சிறப்பு செயல்களில், ஸ்மரிஸீ ஹிக்குவ – நினைத்து மகிழும், பாக்ய – பாக்யத்தை (ஸ்மரணரூப செல்வத்தினை), எனகெ – எனக்கு, பாலிஸோ – அருள்வாயாக. (உன்) விஸ்மரணை (மறதி) வராமல் என்னை காப்பாற்று.

பாலாக்ஷஸ்ய ப்ரிய:, பாலாக்ஷ: ப்ரிய: யஸ்ய என்று இரு விதங்களாக இதனை பிரித்து, இருவரும் ஒருவருக்கொருவர் ப்ரியர் என்று அறிய வேண்டும். 'ப்ரியோ ஹி ஞானினோऽத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:' ஞானிகளுக்கு நான் அதிப்ரியன் ஆனதாலேயே, அவர்கள் எனக்கு ப்ரியர்கள்' என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான்.

கனஸிலாத³ரு விஷய நெனெஹனீயதெ³ என்ன
மனத³ல்லி நீனே நெலெகொ³ள்ளோ | நெலெகொ³ள்ளோ லோக¹பா¹
வன சரித பார்த்த²ஸக² ஸ்ரீகிருஷ்ண ||21-(210)

லோகபாவனசரித – அனைத்து உலகங்களையும் (ப்ரஜெகளன்னு – ஜீவர்களை) பவித்ரமாக்கும் சரித்திரத்தைக் கொண்ட, பார்த்தசக – அர்ஜுன சகனான, ஸ்ரீகிருஷ்ண – ஹே ஸ்ரீகிருஷ்ணனே, கனஸிலாதரு – கனவிலும்கூட, விஷய நெனெஹனு – விஷய் போகத்தின் நினைப்பை (ஸ்மரணையை), ஈயதே – கொடுக்காமல், என்ன – என், மனதலி – மனதில், நீனே – நீயாக (என் பிரார்த்தனைக்காக காத்திருக்காமல்), நெலெகொள்ளோ – ஸ்திரமாக நிற்பாயாக (நிரந்தரமாக உன் ஸ்மரணையே இருக்குமாறு அருள்வாயாக).

விழிப்பு நிலையில் மனதில் தோன்றிய விஷயங்களே கனவிலும் வருகின்றன. நாம் விழிப்பு நிலையில் சரியாக கவனிக்காத மிகச்சிறிய விஷயங்களும்கூட, இவ்வளவு ஏன், நாம் நினைக்கும் விஷயங்கள்கூட மனதில் சம்ஸ்காரங்களை உண்டுபண்ணுகிறது. அவற்றை (அத்தகைய சம்ஸ்காரங்களை) ஸ்ரீஹரி, ஸ்வப்ன வஸ்துகளை நிர்மாணித்து, கனவில் காட்டுகிறான்.

‘த்வா ஸுபர்ணா’ ஸ்ருதி சொல்வதைப் போல பரமாத்மன் அனைத்து ஜீவர்களின் நண்பன். ஆனால் அனைவரும் அதனை அறியவில்லை. கிருஷ்ணாவதாரத்தில் அர்ஜுனனுடன் நண்பனாக பிரத்யட்சமாக இருந்தான். ஸ்ரீஹரி, லௌகிக நண்பன் அல்ல. லௌகிக நண்பனைப் போல ஸ்ரீகிருஷ்ணனுடன் நடந்துகொண்ட அர்ஜுனன், விஷ்வரூபத்தைக் கண்டபோது ‘ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்’ (கீதை) ஆகிய வாக்குகளால் தன் நடவடிக்கைகளைப் பற்றி மன்னிப்பு கேட்கிறான்.

மனதினை ஷூன்யமாக வைப்பதற்கு சாத்தியம் இல்லை – ஏதோவொரு விஷயத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருப்பது மனதின் ஸ்வபாவம். ‘த்யாயதோ விஷயான் பும்ஸ:’ ஆகிய கீதை வாக்கியங்கள், விஷயங்களை (இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் பொருட்களை) சிந்திப்பது, மிகப்பெரிய அனர்த்தங்களுக்கு காரணம் ஆகிறது என்று, சொல்கிறது. ஆகையால், விஷய தியானத்தை மனதிலிருந்து வெளியேற்றி உன்னையே (உன் குண ரூபங்களையே) சிந்தித்திருக்குமாறு அருள்வாயாக என்னும் பிரார்த்தனையே சரியானதாகும். வரத்தை வேண்டிக் கொள் என்று நரசிம்ம ஸ்வாமி கேட்டுக் கொண்டபோது, பிரகலாதன் இதையே வேண்டிக் கொண்டான்.

யதி ராஸீஷ மே காமான் வராம்ஸ்த்வம் வரதர்ஷப |
காமானாம் ஹ்ருத்யஸம்ரோஹம் பவதஸ்துவ்ருணீவரம்|பாகவத

வரங்களைக் கொடுப்பவர்களில் சிறந்தவனான ஹே நரசிம்மனே, வரங்களை கொடுக்க விரும்பினால், (எனக்கு எவ்வித வரங்களும் தேவையில்லை. ஆனால், வேண்டிக் கொள் என்று கூறும் உன் ஆணையை மீறாமல், இவ்வாறு கேட்கிறேன்), விஷய போகத்தின் ஆசைகள் எந்த காலத்திற்கும் என் மனதில் வராதவாறு அருள்வாயாக என்னும் ஒரே வரத்தை கேட்டுக் கொள்கிறான்.

சதுரவித^{4} புருஷார்த்த^{2} சதுராத்ம நீனிரலு
இதர புருஷார்த்த^{2} நானொல்லெ |நானொல்லெ த்வத்பாத^{3}
ரதிபா^{4}க்^{3}ய நீனே கருணிஸோ ||22-(211)

சதுரவித புருஷார்த்த – தர்ம அர்த்த காம மோட்ச என்னும் நான்கு புருஷார்த்த ஸ்வரூபனான, சதுராத்ம – அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ என்னும் நான்கு ரூபங்கள் உள்ள, நீனிரலு – நீ இருக்கையில் (எனக்கு அனைத்து புருஷார்த்தமும் நீயேயாக இருப்பதால்), இதர புருஷார்த்த (நீ இல்லாத) மற்ற எந்த புருஷார்த்தத்தையும், நானொல்லெ – நான் விரும்பவில்லை. நீனெ – நீயே, கருணிஸோ – அருள்வாயாக.

ஸ்ரீஹரியைத் தவிர வேறு எதையும் விரும்பாதவன் நிஷ்கிஞ்சனன். அவர்களுக்கு ஸ்ரீஹரியே அனைத்து பாக்ய ரூபம் ஆனவன். அவர் அந்த பாக்யத்தின் பிராப்திக்கு முக்கிய காரணமான அவனின் பாத பக்தியையே விரும்புவார்கள்.

ஷாஸ்த்ரேஷ்டியானேவ ஸுநிஷ்சிதோ ந்ருணாம்
க்ஷேமஸ்ய ஸம்யக்விம்ருதேஷு ஹேது: |
அஸங்க ஆத்மவ்யதிரிக்த வஸ்துஷு
த்ருடா ரதிர்ப்ரஹ்மணி நிர்குணே ச யா ||

மற்ற பொருட்களில் நிராசையும், சாஸ்திரங்கள் சொல்லிய கல்யாண குணபூர்ணனான (நிர்குண) பரபிரம்மனில் திடமான பக்தியும், மோட்சத்திற்கு முக்ய காரணங்கள் என்று அனைத்து வேதாதி நற்சாஸ்திரங்களை படிப்பதிலிருந்து தெரிகிறது என்று ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது. அந்த விஷயத்தையே இங்கு தாஸார்யர் சொல்கிறார்.

ஜய மத்ஸ்யகூர்ம ஜய ஜய வரஹ நரசிம்ஹ
ஜயது வாமனதே^{3}வ ப்^{4}ருகு^{3}ராம | ப்^{4}ருகு^{3}ராம ரகு^{4}ராம
ஜய கிருஷ்ண பௌ^{3}த்த^{3} கலிஹர்த்தா ||23-(212)

மத்ஸ்ய கூர்ம – ஹே மத்ஸ்யனே, ஹே கூர்மனே, (உன் ரூபங்களுக்கு), ஜயஜய – ஜயஜய. மங்களம். வாமனதேவ, ப்ருகு ராம – ஹே வாமனஸ்வாமி, ஹே பரசுராமனே, ஜயது – உன் ரூபங்களுக்கு மங்களம் உண்டாகட்டும், ரகுராம, கிருஷ்ண, பௌத்த, கலிஹர்த்த – ஸ்ரீராமசந்திர, ஸ்ரீகிருஷ்ண, புத்த, கல்கி, ரூபங்களுக்கு, ஜய – மங்களம் உண்டாகட்டும்.

ஜய விஶ்வ தைஜஸனே ஜய ப்ராக்ஞ துர்யாத்ம
ஜய அந்தராத்ம பரமாத்ம | பரமாத்ம ஞானாத்ம
ஜயது அனிருத்த ப்ரத்யும்ன ||24-(213)

விஷ்வ தைஜஸனே - ஹே விஷ்வ, ஹே தைஜஸனே, ஜய - வெற்றி உண்டாகட்டும், ப்ராக்ஞ துர்ய - ஹே ப்ராக்ஞனே, ஹே துரியனே, ஜய - வெற்றி உண்டாகட்டும், ஆத்ம அந்தராத்ம பரமாத்ம ஞானாத்ம - ஆத்ம, அந்தராத்ம, பரமாத்ம, ஞானாத்ம ரூபங்களால் நிலைத்திருக்கும் ஹே ஸ்ரீஹரியே, ஜய - வெற்றி உண்டாகட்டும். அனிருத்த ப்ரத்யும்ன - ஹே அனிருத்தனே, பிரத்யும்னனே, ஜயது - நீ வெற்றியாளன் ஆகு.

ஜயது ஸங்கர்ஷணனே ஜய வாஸுதேவனே
ஜய ஜயது ஸ்ரீலக்ஷ்மி நாராயண | நாராயணானந்த
ஜயது ஸ்ரீகோவிந்த அச்யுத ||25-(214)

சங்கர்ஷணனே - ஹே சங்கர்ஷணனே, ஜயது - எப்போதும் வெற்றியாளனாகவே இருப்பாயாக, வாசுதேவனே - ஹே வாசுதேவனே, ஜய - உனக்கு வெற்றி உண்டாகட்டும், ஸ்ரீலட்சுமி நாராயண - ஹே லட்சுமி நாராயணனே, ஜய ஜயது - உனக்கு வெற்றி உண்டாகட்டும், அச்யுத அனந்த ஸ்ரீகோவிந்த - ஹே அச்யுத, அனந்த, கோவிந்தனே, ஜயது - உனக்கு வெற்றி உண்டாகட்டும்.

ஜய பூர்ணஞானாத்ம ஜய பூர்ண ஐஸ்வர்ய
ஜய ப்ரபாபூர்ண தேஜாத்ம | தேஜாத்ம நந்தாத்ம
ஜயது ஶக்த்யாத்ம க்ருத்தோல்க ||26-(215)

பூர்ணஞானாத்ம - ஹே பூர்ண ஞானாத்ம ஸ்வரூபனே, ஜய - உனக்கு வெற்றி உண்டாகட்டும், பூர்ண ஐஷ்வர்ய - பூர்ண ஐஸ்வர்ய ஸ்வரூபனே, ஜய - வெற்றி, ப்ரபாபூர்ண தேஜாத்ம - பூர்ண ப்ரகாஷம் உள்ள தேஜோரூபனே, ஜய - உனக்கு வெற்றி உண்டாகட்டும். நந்தாத்ம ஷக்த்யாத்ம க்ருத்தோல்க - ஹே அனந்த ஸ்வரூபனே, அற்புத சக்தி ஸ்வரூபனே, க்ருத்தோல்கனே, ஜயது - உனக்கு வெற்றி உண்டாகட்டும்.

ஜய ஜயது மஹோல்க ஜய ஜயது விரோல்க
ஜய ஜயது த்[3]யுல்க ஸஹஸ்ரோல்க ।ஸஹஸ்ரோல்க ஜய ஜய
ஜய ஜக[3]ன்னாத[2] விட்ட[2]லார்ய ||27-(216)

மஹோல்க – ஹே மஹோல்கனே. ஜயஜயது – உனக்கு வெற்றி உண்டாகட்டும். வீரோல்க – ஹே வீரோல்கனே. ஜயஜயது – உனக்கு வெற்றி உண்டாகட்டும். த்யுல்க – ஹே த்யுல்கனே. ஜயஜயது – உனக்கு வெற்றி உண்டாகட்டும். ஸஹஸ்ரோல்க – ஹே ஸஹஸ்ரோல்கனே, ஜய ஜய – உனக்கு வெற்றி உண்டாகட்டும். ஜகன்னாத விடலார்ய – உலக நாயகனான பிரம்மாதி பூஜ்ய விட்டலனே. ஜய – ஜயஷீலனாக எப்போதும் நிலைத்து, பக்தர்களை அருள்வாயாக.

121ம் பத்யத்திலிருந்து இதுவரை பரமாத்மனின் பற்பல ரூபங்களுக்கு ஜயகோஷம் செய்கிறார். ஜயகோஷம் செய்வது எப்போதும் வெற்றியாளனாக இரு என்று சொல்வதாகும். தக்க ரூபங்களால், சத்யசங்கல்பனான ஸ்ரீமஹாவிஷ்ணு, ஜீவர்களின் உதவிக்காக செய்யும் பற்பல செயல்களை ஒரே விதமாக செய்தவாறு, சஜ்ஜனர்களின் மேம்பாட்டிற்காக இருக்கட்டும் என்னும் ஆசை மற்றும் பிரார்த்தனை ரூபமானதே இந்த ஜயகோஷம்.

121ம் பத்யமானது, புகழ்பெற்ற தசாவதாரங்களுக்கு ஜயகோஷத்தை சொல்கிறது. சஜ்ஜனர்களின் காப்பாளனாக காலகாலத்திற்கு இந்த அவதாரங்களின் நலன் இருக்கட்டும் என்பது சிந்தனை.

விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துரிய என்னும் ஸ்ரீஹரியின் ரூபங்கள் அனைத்து பிராணிகளின் சரீரத்திலும் இருந்து, முழிப்பு, ஸ்வப்ன, தூக்கம் மற்றும் சமாதிகள் என்னும் நிலைகளை வழிநடத்துகிறது. துரிய ரூபம் மோட்ச நிலைக்கும் நியாமக ரூபம் ஆகும்.

ஏஷ சதுரூப ஆத்மா ஸர்வக்ஞத்வ ஸர்வேஷ்வரத்வாதி லக்ஷண: – இந்த நான்கு ரூபங்களும் சர்வக்ஞத்வ, சர்வேஷ்வரத்வாதி லட்சணங்கள் கொண்டவை என்று சொல்லி, மாண்டூக உபநிஷத் பாஷ்யத்தில் ஸ்ரீமதானந்த தீர்த்தர், அந்த விஷயத்திற்கு பிரமாண வாக்கியங்களை உதாரணம் கொடுத்திருக்கிறார்.

பரமாத்மா சதூரூப: ஸர்வப்ராணி ஷரீரக: |
விஷ்வஸ்ச தைஜஸ: ப்ராக்ஞ ஸ்துரியஷ்வேதி கத்யதே |
தானி ரூபாணி ஸர்வாணி பூர்ணானந்த மயானி து |
சேதோமுகானி ஸர்வாணி பூர்ணஞான ஸ்வரூபத: |

பரமாத்மன், விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துரிய என்னும் நான்கு ரூபங்களால் அனைத்து பிராணிகளின் சரீரங்களிலும் இருக்கிறான். இந்த ரூபங்கள், மற்ற சர்வ ரூபங்களைப் போல, பூர்ண ஞானானந்த ஸ்வரூபங்களே ஆகும். 'சேதோமுகானி' என்பதில் முகம், உத்தம, பூர்ண என்னும் அர்த்தங்கள் உள்ளன. பூர்ணஞான ஸ்வரூபன் என்று அர்த்தம்.

விஷ்ணுஸ்துரீயரூபேண த்வாதஷாந்தே வ்யவஸ்தித: |
முக்தானாம் ப்ராப்யரூபோऽஸௌ வ்யவஹாரே ந த்ருஷ்யதே |
அபரோக்ஷத்ருஷாம் க்வாபி துரீயம் த்ருஷ்யதே பதம் ||
(பிரம்மாண்ட புராணம்)

இந்த துரிய ரூபம் மூக்கிலிருந்து 12 அங்குலத்தில் மேலே தலையின் நடுவில் உள்ளது. முக்தர்களால் பெறுவதற்கு தகுதியானது, முக்த நியாமகமும் அதுவே. சம்சார அவஸ்தையில் அமுக்தர்கள் (அபரோக்ஷிகள் அல்லாதவர்கள்) அதனை காணமாட்டார்கள். ஆனால், அபரோக்ஷிகள் (ஜீவன் முக்தர்கள்) சமாதி நிலையில் சில சமயம் இந்த ரூபத்தை காண்பார்கள்.

மூலநாராயணன், ஜீவசேதனர்களுக்கு அவரவர்களின் கதிகளை கொடுப்பதற்காக, உலகத்தை படைத்து, வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த என்னும் ரூபங்களை ஸ்வீகரித்தான். சேதன அசேதனாத்மக உலகத்தின் ஸ்ருஷ்டி முதலான அஷ்ட கர்த்ருத்வங்களை நிர்வகிக்கும் ரூபங்கள் இவை. ஜீவர்கள், அவர்களின் கர்மங்களுக்கேற்ப ஸ்தூல தேகங்களிலிருந்து சிறந்தவர்கள் ஆகுவதும் இந்த ரூபங்களின் காரியத்தாலேயே.

த்யுபர்ஜன்யதராபும்ஸ்த்ரி ஸம்ஸ்திதம் பஞ்சரூபிணம் |
நாராயணம் வாஸுதேவம் ததா ஸங்கர்ஷணம் ப்ரபும் |
ப்ரத்யும்னம் ஜானிருத்தம் || (சாந்தோக்ய பாஷ்யம்)

என்று சொல்வதைப் போல, ஆகாஷாதி பஞ்சாக்னிகளில் தத்வாபிமானி தேவதைகளால் ஹோமம் செய்யப்பட்ட ஜீவர்கள் மாத்ரு கர்ப்பத்திலிருந்து உத்பன்னர் ஆவதற்கு இந்த ஐந்து ரூபங்கள் ஸ்வதந்த்ர காரணங்கள். மற்றும் ஸ்வரூப, லிங்க, அனிருத்த, ஸ்தூலங்கள் என்னும் ப்ரதி ப்ராணிகளில் இருக்கும் நான்கு தேகங்களில் இருந்து அனைத்து செயல்களையும் செய்து செய்விக்கும் ரூபங்களும் இவையே.

ஆத்ம, அந்தராத்ம, பரமாத்ம, ஞானாத்மக என்னும் ஸ்ரீஹரியின் ரூபங்கள், முறையே, மனஸ், அஹங்கார, மஹத், அவ்யக்த என்னும் தத்வங்களில் இருந்து, அந்த தத்வங்களின் அபிமானி தேவதைகள் மூலமாக அனைத்து வ்யாபாரங்களை நிர்வகிக்கின்றன. ஸ்ரீஹரியின் ஒவ்வொரு ரூபமும் ஷட்குணைஸ்சர்ய பூர்ணமானவை.

ஐஸ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஷஸ: ஸ்ரிய: |
ஞானவிக்ஞானயோஸ்சைவ ஷண்ணாம் பக இதீரணா ||

என்றால், 'பக' என்னும் வார்த்தையால் சொல்லப்படும், பூர்ணைஸ்வர்ய, வீர்ய, யஷஸ், காந்தி, ஞான, விக்ஞான என்னும் ஆறு பிரதான குணங்களால் பகவந்தன் எப்போது எல்லா இடங்களிலும் பூர்ணனாக இருக்கிறான்.

தமஸ் (அஞ்ஞான), மோஹ (விபரீத ஞான), மஹாமோஹ (அதிலும் மோசமானது), தாமிஸ்ர (அந்த பிரச்னைகளின் பலனாக, மித்யா ஞான நிந்தகரில் க்ரோதம்), அந்ததாமிஸ்ர (யதார்த்த ஞானிகளில், சுக்ஞானிகளில் எப்போதும் இருக்கும் த்வேஷம்), இவ்வாறு அவித்யைகள் ஐந்து விதங்கள் ஆகும். தாமஸ அஹங்காரத்தின் விகாரங்களான (அதிலிருந்து பிறந்த), ஷப்த, ஸ்பர்ஷ, ரூப, ரஸ, கந்த என்னும் ஐந்து தன்மாத்ரங்களுக்கு அபிமானிகளான நாக, கூர்ம, க்ருகல, தேவதத்த, தனஞ்சய என்னும் உபப்ராணர்கள், இந்த பஞ்சவித அவித்யைகளின் ப்ரேரகர்கள் ஆவர்.

இவர்களில், தமோகுணாபிமானியான துர்காரூபளான லட்சுமி தேவியும், அவளில், முறையே, க்ருத்தோல்க, மஹோல்க, வீரோல்க, த்யுல்க, ஸஹஸ்ரோல்க என்னும் பரமாத்மனின் ரூபங்களும்

உள்ளன. முக்தியோக்ய ஜீவர்களுக்கு அவித்யைகளை விலக்கி, சுக்ஞானத்தையும், தமோ யோக்யர்களுக்கு மித்யா ஞானத்தை திடப்படுத்தி, அவரவர்களின் கதிகளை கொடுக்கிறார்கள். இந்த விவரங்களை ஸ்ரீஜகன்னாததாஸார்யரே தம் ஹரிகதாம்ருத சாரத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

ஐதுவித்யெகளொளகெ இஹ நா
கதிகளதிஷ்டானதலி ல
க்ஷ்மீதவனு க்ருத்தோல்க மொதலாதைது ரூபகள ।
தா தரிஸி ஸஜ்ஜனர வித்யவ
சேதிஸுவ தாமஸரிகக்ஞா
நாதிகள கொட்டவரவர ஸாதனவ மாடிஸுவ ।।

'உல்க' அக்னி ஜ்வாலையுள்ள கொள்ளி, உல்க நாமக ஸ்ரீஹரி, தேவதானவாதி ஜீவர்களிலும், ஸ்வர்க்காதி லோகங்களிலும் செய்யும் பற்பல விசித்ர காரியங்களை, க்ருத்தோல்காதி ஐந்து நாமங்கள் சொல்கின்றன. இந்த ப்ரமேய ரஹஸ்ய விசேஷங்களை குரு-முகத்திலிருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

18. ஸ்ரீஸ்ரீனிவாஸ ஸ்தோத்திரம்

ஸ்ரீநிவாஸன போல்வ தீ³னவத்ஸலருண்டெ
தா³னிக³ளுண்டெ ஜக³தொ³ளு ।ஜக³தொ³ளு இஹரெம்ப³
ஞானிக³ளுண்டெ அனுகா³ல ।।1-(217)

ஸ்ரீனிவாஸன – ஸ்ரீலட்சுமிபதியை, போல்வ – வணங்கும், தீன வத்ஸலரு – தீன தயாளுகள், உண்டெ – இருக்கிறார்களா? (இல்லவே இல்லை). தானிகளு – அபீஷ்டங்களை கொடுப்பவர்கள், உண்டே – இருக்கிறார்களா? (இல்லை). ஜகதொளு – உலகத்தில், இஹரெம்ப – அவனுக்கு சமமான தயாளுகள், தானிகள் இருக்கிறார்கள் என்று சொல்லும், ஞானிகள் – அறிந்தவர்கள், அனுகால – என்றாவது (மூன்று காலங்களிலும்), உண்டெ – இருக்கிறார்களா? (இறந்த, நிகழ், எதிர் காலங்களைச் சேர்ந்த எந்த ஞானியும் ஸ்ரீனிவாசனுக்கு சமமானவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதில்லை. ஸத்ருஷரில்லெம்புது – அதிகமானவர்கள்

இல்லவே இல்லை என்பது அனைத்து காலத்தின் அனைத்து ஞானிகளின் வாதம்.

ஸ்ரீஹரி சம-அதிக இல்லாத சர்வோத்தம என்னும் வாதத்தை எந்த ஞானியும் என்றும் மறுப்பதில்லை. அப்படி மறுப்பவன் ஞானியே அல்ல. ஸ்ருததேவ, குசேல முதலான பற்பல பக்தர்களில் ஸ்ரீகிருஷ்ணன், ‘தீனவத்ஸல’ என்னும் தன் மகிமையை வெளிப்படுத்தினான்.

ஏனு கருணாநிதி^{4}யோ ஸ்ரீனிதம்பி^{3}னிரமண
தா நம்மனக^{3}லி ஸைரிஸ | ஸைரிஸத கருணிய
நானெந்து^{1} துதிஸி ஹிக்க^{3}லி ||2-(218)

ஸ்ரீனிதம்பினி ரமண - ஸ்ரீமஹாலட்சுமி ரமண, ஏனு கருணாநிதி யோ - எவ்வளவு அபாரமான கருணைக் கடலோ, தா - தான், நம்மனு - நம்மை (தன் பக்தர்களை), அகலி - விலகியிருப்பதை, ஸ்மரிஸ - பொறுக்க மாட்டான். ஸைரிஸத - இவ்வாறு பக்தர்களின் விலகலை, தாங்க மாட்டான். கருணிய - தயா மூர்த்தியை, நான், எந்து - எப்படி எவ்வளவு, துதிஸி - வணங்கி, ஹிக்கலி - பெருமைப்படுவது? (எவ்வளவு புகழ்ந்தாலும் அது முடியாது என்பது சிந்தனை).

ஸ்ரீநாத^{2} நின்னவர நானாபராத^{4}க^{3}ள
நீனெணிஸத^{3}வர ஸலஹுூவி | ஸலஹுூவி ஸர்வக்ஞ
ஏனெம்பெ^{3} நின்ன கருணக்கெ ||3-(219)

ஸ்ரீநாத - ஹே லட்சுமிரமணா, நின்னவர - உன் பக்தர்களின், நானாபராதகள - பற்பல விதமான அபராதங்களை, நீனெணிஸதெ - நீ கணக்கிற்கு எடுத்துக் கொள்ளாமல், அவர - அவர்களுக்கு, ஸலஹிதி - அருளினாய், ஸர்வக்ஞ - ஹே சர்வக்ஞனே, நின்ன கருணக்கெ - உன் கருணைக்கு, ஏனெம்பெ - என்ன சொல்வேன்? (உன் காருண்யம் அபாரமானது. இஷ்டெந்து - எவ்வளவு என்று சொல்வது சாத்தியமில்லை).

ஷ்ருதிஸ்ம்ருதீ ஹரேராக்ஞே - ஸ்ருதி ஸ்ம்ருதிகள் ஸ்ரீஹரியின் வாக்குகள். அவை நானா விதி நிஷேதங்களை நிரூபிக்கின்றன.

அவற்றை மீறுவது / புறக்கணிப்பது தவறு. ஸ்வாமியின் ஆணையை மீறுவதைவிட, சேவகனுக்கு வேறு தவறு என்ன இருக்கிறது? இந்த ரூபத்தின் அபராதங்கள் எண்ணவே முடியாத அளவிற்கு தினமும் நாம் தவறுகளை செய்கிறோம். சர்வாந்தர்யாமியாக இருந்து சர்வ சாக்ஷியான ஸ்ரீஹரிக்கு, அபராதங்கள் தெரியாமல் இருக்குமா? அனைத்தையும் அறிந்த சர்வக்ஞன் அவன்.

தேவேந்திரனின் அஹல்யா சம்பவம், சந்திரனின் குருபதி சங்கம், ப்ருகு ரிஷியினால் பகவந்தனின் மார்பில் எட்டி உதைத்தது ஆகிய மஹாபராதங்களை புறக்கணித்து, அவர்கள் அனைவரையும் மன்னித்தான்.

அச்யுதனே நின்னந்த^{2} ஹுச்சு தொ^{3}ரெக^{3}ள காணே
கச்சி பை^{3}ய்தொ^{3}த்த^{3} ப^{4}குதர | ப^{4}குதரபராத^{4}க^{3}ள
து^{1}ச்சகை^{3}த^{3}வரா ஸலஹிதி^{3} ||4-(220)

அச்யுதனே – ஹே அச்யுதனே. நின்னந்த – உனக்கு சமமான. ஹுச்சுதொரெகள – ஸ்வதந்த்ர பிரபுகளை, காணெ – நான் காணவில்லை (எங்கேயும் இல்லை). கச்சி பைதொத்த – கடித்து, திட்டி, மிதித்து என உன்னில் நடந்துகொண்ட, பகுதர – பக்தர்களின், அபராதகள – தவறுகளை, துச்சகெய்து – அல்பம் என்று மன்னித்து, அவர – அவர்களை, ஸலஹிதி – காப்பாற்றினாய்.

கடித்து ருசி பார்த்து பலன்களை அர்ப்பித்த ஷபரி, சிறு வயதிலிருந்து திட்டிய ஷிஷுபால, காலினால் எட்டி உதைத்த ப்ருகு, ஆகிய பக்தர்களையும், மற்றும் பலரையும் காப்பாற்றினார் என்று இந்த நுடியில் சொல்லியுள்ளதாக அறிய வேண்டும்.

ஸ்வேச்சானுஸாரிதாமேவ ஸ்வாதந்த்ர்யம் ஹி விதோ விது: (அனுவியாக்யான). தன் விருப்பத்தின்படி மட்டுமே நடந்து கொள்ளும் ஸ்வாதந்த்ர்யன் என்று ஞானிகள் அறிவார்கள். இந்த அர்த்தத்தில் பூர்ண ஸ்வதந்த்ரனான அச்யுதன், தன் விருப்பத்திற்கேற்ப நடக்கிறான் என்று அறிவதற்கு 'ஹுச்சு தொரெ' என்றிருக்கிறார். எந்த விதிகளுக்கும் அடிபணியாமல், தன் செயல்களின் விளைவுகளை அறியாமலேயே தன் இஷ்டப்படி

நடப்பவனை ஹுச்சு (பைத்தியம்) என்று சொல்வர். அவன் புத்தி-ஷூன்யன். இப்படியான பழக்கங்களைக் கொண்டவன் என்னும் அர்த்தத்தில் இங்கு 'ஹுச்சு தொரெ' என்று சொல்கிறார் என்று அறிய வேண்டும். பைத்தியக்காரன் மற்றவர்களை காப்பாற்ற முடியுமா? - தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாதவன் அவன்.

தந்தெ^{3} தாயியு ப்^{4}ராத்ரு ப^{3}ந்து^{4} ஸக^{2} கு^{3}ரு புத்ர
எந்தெ^{3}ந்து^{3} நீனே க^{3}தி கோ^{3}த்ர | க^{3}தி கோ^{3}த்ர இஹபரதி^{3}
இந்தி^{3}ராராத்ய^{4} ஸலஹெம்ம ||5-(221)

தந்தெ தாயியு - தந்தை தாய்கள், ப்ராதா, பந்து, ஸக, குரு, புத்ர எல்லவு - பெற்றோர், அண்ணன் தம்பி, உற்றார் உறவினர், நண்பன், குரு, புத்திரன் அனைத்தும், எந்தெந்து - அனைத்து காலங்களிலும், நீனே - எனக்கு நீயே ஆகியிருக்கிறாய். இஹ பரதி - இங்கு, மற்றும் அனைத்து இடங்களிலும், நீனே - நீயே. கதி கோத்ர - ஆதரவு மற்றும் ஞானாதிகளைக் கொடுத்து காப்பாற்றுபவன் நீயே. இந்திராராத்ய - ஸ்ரீமஹா லட்சுமிதேவியினாலும் ஆராதனை செய்யப்படுபவன் நீயே. எம்ம - நம்மை. ஸலஹு - காப்பாற்றுவாயாக.

கோ என்னும் சொல், பற்பல அர்த்தங்களைக் கொண்டது. பூமி, பசு, ஸ்வர்க்க, வேத ஆகியவை சில முக்கிய அர்த்தங்கள். இவை அனைத்தின் பாதுகாவலனானதால் ஸ்ரீஹரி 'கோத்ரன்' ஆகியிருக்கிறான்.

த்வாரகையின் மக்கள் ஸ்ரீகிருஷ்ணனை எப்படி அறிந்து கொண்டாடினர் என்பதை சொல்லியவாறு, ஸ்ரீமத்பாகவதம், அனைத்து விதங்களிலும் ஸ்ரீஹரியை வணங்க வேண்டும் என்று உபதேசம் செய்கிறது.

பவாய நஸ்த்வம் பவ விஷ்வபாவன
த்வமேவ மாதாத்ம ஸுஹ்ருத்பதி:பிதா |
த்வம் ஸத்குருர்ன: பரமம் ச தெய்வதம்
யஸ்யானுவ்ருத்யா க்ருதினோ பபூவிம ||

அதாவது நம் அனைவருக்கும் நீயே தாய், தந்தை, நண்பன், பிரபு என அனைத்தும் ஆகியிருக்கிறாய். சத்குருவும் பரதேவதையும் நீயே. உன்னை வணங்குவதால் நாங்கள் தன்யர் ஆகிறோம். லௌகிக தந்தை தாய் ஆகியோரால் ஆகும் அனைத்து வித உபகாரங்கள், அவரவர்களின் பிம்பனான ஸ்ரீஹரியினாலேயே ஆகிறது என்று அறிந்து, பித்ருத்வேன, ஸுஹ்ருத்வேன ஆகிய ஸர்வ பிரகாரங்களால் அவனே கதி என்னும் ஞானயுக்தர் ஆகவேண்டும்.

என்ன போலுவ ப4க்தரன்னந்த நினகி3ஹரு
நின்னந்த2 ஸ்வாமி எனகி3ல்ல | எனகி3ல்லவத3ரிந்த3
பி3ன்னைபெனின்னு ஸலஹெந்து3 ||6-(222)

என்ன – என்னை, போலுவ – போலிருக்கும், பக்தரு – சேவகர்கள், நினகெ – உன்னை வணங்குபவர்களில், அன்யந்த – பல பேர், இஹரு – இருக்கிறார்கள். (ஆனால்), எனகெ – எனக்கு மட்டும், நின்னந்த ஸ்வாமி – உன்னைப் போன்றொரு தலைவன், இல்ல – வேறொருவர் இல்லை. அதரிந்த – ஆகையால், ஸலஹெந்து – காப்பாற்று என்று, இன்னு – திரும்பத்திரும்ப, பின்னெயிபெ – வேண்டிக் கொள்கிறேன்.

உன்னைப் போன்ற ஸ்வாமி இல்லை என்னும் ஞானம் எனக்கு இருக்கிறது. இதுவும் உன் அருளாலேயே. ஆனாலும், இந்த ஞானம் அனைத்து காலங்களிலும், நிலையாகவே இருக்கவேண்டும் என்று திரும்பத்திரும்ப பிரார்த்திக்கிறேன், என்கிறார் ஸ்ரீதாஸார்யர்.

ஸ்வாமி–தாஸன் ரூபமான நித்ய சம்பந்தம் உள்ள ஜீவேஷ்வரர், எதிர்மறை தர்மங்கள் உள்ள (அல்பஞத்வ – சர்வக்ஞத்வ, அல்பசக்தி – அனந்தஷக்திகளைப் போல) அத்யந்த வெவ்வேறு ஸ்வரூபம் என்று அறிய வேண்டும். ஜீவேஷ்வரரின் வெவ்வேறு லட்சணங்களையே அடுத்த பத்யங்களிலும் விளக்குகிறார்.

இந்தி3ராபதி நீனு மந்த3பா4க்யனு நானு
வந்த்3யனோ நீனு ஸுரரிந்த3 | ஸுரரிந்த3 நரரிந்த3
நிந்த்3யனோ நானு ஜக3தொ3ளு ||7-(223)

நீனு - நீ, இந்திராபதி - லட்சுமிபதி, நானு - நான், மந்தபாக்யனு - முட்டாள். நீனு - நீ, ஸுரரிந்த - தேவதைகளாலும், நரரிந்த - மனிதர்களாலும் (மற்ற ஞானிகளாலும்), வந்த்யனு - பூஜிக்கப்படுபவன். நானு - நான். ஜகதொளு - உலகத்தில். ஸுரரிந்த நரரிந்த - தேவ மனுஷ்ய இருவராலும், நிந்த்யனு - நிந்தனை பெற்றுக் கொள்பவன்.

ஸர்வக்ஞால்பக்ஞதாபேதாத் ஸர்வஷக்த்யல்பஷக்தித: |
ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யாப்யாம் ஸம்போகோ நேஷஜீவயோ: ||
(பாஷ்ய)

சர்வக்ஞத்வ - அல்பக்ஞத்வ, சர்வஷக்தித்வ - அல்பஷக்தித்வ, ஸ்வாதந்த்ர்ய - பாரதந்த்ர்ய என்னும் எதிர்மறை தர்மங்கள் உள்ள ஈச - ஜீவர்கள் (ஒரே தேகத்தில் இருந்தாலும்), சமான போகங்கள் உள்ளவர்கள் அல்ல. பரமாத்மன் பூர்ணகாமன் - போகத்தின் அவசியமே அவனுக்கு இல்லை. பாகவதத்தில் உள்ள குசேலனின் நுடிகளும் இந்த விஷயங்களையே சொல்கிறது.

க்வாஹம் தரித்ர: பாபீயான் க்வ க்ருஷ்ண: ஶ்ரீனிகேதன: |
ப்ரம்மபந்துரிதி ஸ்மாஹம் பாஹுப்யாம் பரிரம்பித: |
ஷுக்ரூஷயா பரமயா பாதஸம்வாஹனாதிபி: |
பூஜிதோ தேவதேவேன விப்ரதேவேன தேவவத் ||

தரித்திரனான நான் எங்கே? லட்சுமிபதியான ஶ்ரீகிருஷ்ணன் எங்கே? (ஜீவேஷ்வரத்தில் எவ்வளவு வித்தியாசங்கள்?). இப்படி இருந்தாலும் பிராமணன் என்னும் அபிமானத்தினால் என்னை தோள்களால் கட்டிப்பிடித்து, கால்களை அமுக்கிப் பிடிப்பது முதலான சேவைகளை செய்தான். எத்தகைய பக்தவத்ஸலன் ஶ்ரீகிருஷ்ணன்?!

ஶரணு தேவர தேவ ஶரணு ஸுரவரமான்ய
ஶரணு ஶதகோடி லாவண்ய | லாவண்ய மூருதியெ
ஶரணெம்பெ³ ஸ்வாமி கருணிஸோ ||8-(224)

ஷரணர தேவ - பக்தாராத்யதேவ. ஷரணு - சரணடைகிறேன். ஸுரவரமான்ய - ஹே பிரம்மாதி தேவபூஜ்யனே, ஷரணு -

உனக்கு நமஸ்காரங்கள். ஷஷிகோடி லாவன்ய மூருதியெ – கோடி சந்திரரின் காந்தியைப் போல ஒளியுடைய பவ்ய ஸ்வரூபனே. ஸ்வாமி – ஹே பிரபோ. ஷரணெம்பெ – நீயே கதி என்று. நமஸ்கரிசுத்தேனெ – வணங்குகிறேன். கருணிஸோ – கருணை காட்டி அருள்வாய், ஹே தேவனே.

ரக்ஷத்யேவேதி விஷ்வாஸ: ததீயோऽஹமிதி ஸ்ம்ருதி: |
ஷரணாகதிரேஷா ஸ்யாத்விஷ்ணௌ மோக்ஷப்ரதாயினி ||
(விஷ்ணு ரஹஸ்ய)

நான் அவனின் நித்ய சேவகன். என்னை என்றைக்கும் அவன் கைவிடமாட்டான். என்று விஷ்ணுவிடம் வைக்கும் திடமான நம்பிக்கையே மோட்ச ஸாதகமான 'ஷரணாகதி' தத்வம் ஆகும்.

கோடி சூரியர்களின் ஒளியைப் போல, ஸ்ரீஹரி, கோடி சந்திரர்களின் அழகினைக் கொண்டவன் ஆவான். அனந்த சூர்ய பிரகாஷக னாகவும், அனந்த சந்திரர்களைப் போல , தண்மையைக் கொடுப்பவ னாகவும் இருக்கிறான். உலகத்தில் எதிர்மறைகள் என்று நினைக்க க்கூடிய இத்தகைய அனேக பரஸ்பர எதிர்மறை தர்மங்கள் பரமாத்மனில் இருக்கிறது. 'ஸூர்யகோடி ப்ரதிகாஷம் சந்த்ரகோடி ஸுஷீதலம்' ஆகிய பிரமாணங்கள் இதையே சொல்கின்றன.

என்னொளிப்ப மஹாத்ம அன்யரொளு நீனித்து[3]
அன்னோன்யவாகி[3] மமதே[1]ய | மமதெ[1]ய கல்பிஸி
நின்னொளகெ[3] நீனே ரமிஸுவி ||9-(225)

என்னொளிப்ப – என் பிம்பனான (அந்தர்யாமியான), மஹாத்ம – ஹே மஹாமஹிமனே. அன்யரொளு – மற்றவர்களில், நீனித்து – நீயே இருந்து (அனைவரின் பிம்பனாக இருந்து), அன்யோன்யவாகி – பரஸ்பரம். மமதெய – அன்பினை. கல்பிஸி – உருவாக்கி. நின்னொளகெ – உன் ரூபத்தில். நீனே – நீ ஒருவனே. ரமிஸுவி – ஆனந்தப்படுகிறாய் (செயல்களை செய்கிறாய்).

மனைவி மக்கள் நண்பர்களில் இருக்கும் பரமாத்மனே நம் அந்தர்யாமியாகவும் இருக்கிறான். நம்மில் பரஸ்பரம் ப்ரேமாதிகளை உண்டு பண்ணுபவனும் அவனே. இவ்வாறு

செய்வது நமது சுகத்திற்காகவே. தான் மட்டும் ஸ்வரமணன். இப்படியான பிம்ப வியாபாரம் இல்லையெனில், கணவன் மனைவி ஆகியோரில் அன்பு என்பதே இருக்காது. நம் பிம்பனே அவரிலும் இருப்பதால் அவர் நமக்கு ப்ரியர் ஆகிறார்.

பதித நானாத^{3}ரு பதித பாவன நீனு
ரதினாத^{2} ஜனக நக^{3}பாணி | நக^{3}பாணி நீனிரலு
இதர சிந்த்யாகோ எனகி^{3}ன்னு ||10-(226)

நான், பதித ஆதரு – நான் ப்ரஷ்டன் ஆனாலும், நீ, பதித பாவன – தோஷத்தில் விழுந்து மூழ்கியிருப்பவர்களை எழுப்பி பவித்ரமாக்கு பவன். ரதிநாதஜனக – மன்மதனின் தந்தையான, நகபாணி – பர்வதத்தை கையில் தாங்கிப் பிடித்த ஹே ஸ்ரீகிருஷ்ணனே. நீனிரலு – உன்னுடைய கருணை இருக்கையில், எனகெ – எனக்கு, இன்னு இதர சிந்தெ – இன்னும் வேறு கவலை, யாகோ – ஏன் வேண்டும்? (கவலைப்பட காரணமே இல்லை).

170ம் பத்யத்தில் இருக்கும் சிறப்பு குறிப்புகளை பார்க்கவும்.

நடெ^{3}னுடிக^{3}ளபராத^{4} ஒடெ^{3}ய நீனெணிஸித^{3}ரெ
ப^{3}ட^{3}வ நானெந்து^{3} ப^{3}து^{3}க–லோ | ப^{3}த^{3}கலோ கருணாளு
கடெ^{3}பீ^{3}ள்வதெ^{3}ந்தோ^{1} ப^{4}வதி^{3}ந்த^{3} ||11-(227)

ஒடெய நீனு – ஆளும் தலைவனான நீ, நடெநுடிகளபராத – என் நடத்தையில் நடவடிக்கைகளில் வரும் தவறுகளையெல்லாம், எணிஸிதரெ – (தண்டனை கொடுக்கத்தக்கவை) என்று நினைத்தால், படவ – தீனனான, நான், எந்து – எப்படி, பதுகலோ – பிழைப்பேன் ஸ்வாமி?, கருணாளு – ஹே கருணைக்கடலே, பவதிந்த – சம்சாரத்திலிருந்து, கடெபீள்வது – விமோசனம் பெறுவது. எந்தோ – எப்படி சாத்தியம் ஆகப்போகிறதோ நான் அறியேன்.

ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேனாக்னி ரிவாவ்ருதா: (கீதை) – அக்னி புகையினால் சுற்றிக் கொண்டிருப்பதைப் போல, அனைத்து கர்மங்களும் தோஷங்களால் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இப்படியான நிலைமை இருந்தாலும், அவரவரகளுக்கு தக்க

கர்மங்களை செய்தே ஆகவேண்டும் என்று சொல்கிறான். ‘ ந கர்ம ணாமனாரம்பாத் நைஷ்யர்ம்யம் புருஷோஃஷ்னுதே’ கர்மங்களையே விட்டுவிட்டால் நைஷ்யர்ம்ய என்னும் மோட்சம் கிடைப்பதில்லை என்கிறார். எவ்வித பந்தனமும் இல்லாத கர்மங்கள் உள்ளது மோட்சம். இதனால் ‘நைஷ்யர்ம்ய’ எனப்படுகிறது. கர்மஷூன்ய நிலை என்று இல்லை. ‘ந ச ஸன்யஸனாதேவ ஸித்திம் ஸமதி கச்சதி’ - சன்யாசத்தினால் மட்டும் (நிஷ்காம கர்மாசரணையினால் மட்டும்) கூட, மோட்சம் கிடைக்காது என்கிறான். ஆனால், விஹித கர்மங்களை கர்த்ருத்வ அபிமானம் இல்லாமல் (பரமாத்மனே செய்து, தன்னால் செய்விக்கிறான் என்னும் அனுசந்தானத்துடன்) பக்தி பூர்வகமாக செய்து, பலன்களை எதிர்பார்க்காமல், பகவந்தனிடம் சமர்ப்பிக்க வேண்டியது, மோட்ச பிராப்திக்கு அவசியம் என்று அர்த்தம்.

நிர்தோஷ கர்மாசரணையில், சதுர்முகன் ஒருவனே பூர்ணாதிகாரி (ருஜுகணத்தவர் மட்டும் என்று அர்த்தம்). மற்றவர்களின் அனைத்து கர்மங்களும் தோஷ லோபங்களால் கூடியதே ஆகியிருக்கிறது (அவரவர்களின் தாரதம்யத்திற்கேற்ப இருப்பது அந்த தோஷங்களின் அளவு). முக்தி யோக்யரின் கர்மங்களில் இருக்கும் லோப தோஷங்கள், ‘மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்தி ஹீனம் ரமாபதே । யத்க்ருதந்து மயா தேவ பரிபூர்ணம் ததஸ்து மே’ மற்றும் ‘மந்திர வர்ண லோப தோஷ ப்ராயஸ்சித்தார்த்தம் (மந்த்ர லோப, வர்ண லோப, இவற்றால் வரும் பாவங்களுகு ப்ராயஸ்சித்த ரூபமாக) நாம த்ரய ஜபம் கரிஷ்யே. அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: – ஆகிய மந்திரங்களை உச்சரித்து பிரார்த்தனை செய்வதால், பரிகாரம் ஆகின்றன. அது மட்டுமல்ல. அசுர ப்ரேரணையால் சுஜீவர்கள் செய்யும் துஷ் கர்மங்களையும், பக்தவத்ஸலனான ஸ்ரீவிஷ்ணு பரிகரிக்கிறான். அந்த துஷ்கர்மங்களின் பலன்களால் மோசனம் செய்கிறான்.

அதோ யத்யஸுராவேஷாத் க்ருதமேதேன துஷ்க்ருதம் ।
அனாதிபக்தோ யஸ்யான்மே மோக்ஷயிஷ்யே ததஸ்வஹம் ।।
(பாகவத தாத்பர்ய)

என் பக்தனான, முக்தியோக்ய ஸ்வருபம் உள்ள ஜீவனை அசுரா வேஷம் இருப்பதால் செய்யும் பாவ கர்மங்களிலிருந்து விடுதலை

செய்விக்கிறேன். அனைத்து லோப தோஷங்களும், துஷ்கர்மங்களும் பற்பல பிறவிகளுக்கு காரணம் ஆகின்றன. ஸ்ரீஹரி அவற்றை மன்னிக்கவில்லையெனில், மோட்சம் என்பது எப்போதும் சாத்தியம் இல்லை என்கிறது. ஆகையால், ஸ்ரீஹரி அவற்றை மன்னித்து அருள்கிறான் என்றே நிச்சயமாகிறது. அப்படி இல்லையெனில்,

அபராத சஹஸ்ராணி க்ரியந்தே அஹர்னிஷம் மயா |
தானி சர்வாணி மே தேவ க்ஷமஸ்வ புருஷோத்தம ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

தினந்தோறும் என்னால் செய்யப்படும் ஆயிரக்கணக்கான பாவங்களையும், ஹே புருஷோத்தமனே, மன்னிப்பாயாக என்னும் பிரார்த்தனை, ஸ்ரீஹரி அவற்றை மன்னிக்காவிட்டால், பல-போகங்களாலேயே அவை நாசம் ஆகிறது. அதாவது வீண் என்றே அர்த்தம் ஆகிறது.

ஏஸேஸு ஜென்மத³லி தா³ஸ நா நினக³ய்ய
ஈஶ நீனெம்போ³ நுடி ஸித்த⁴ | நுடி ஸித்த⁴ வாகி³ரலு
தா³ஸீன மாடோது³சிதல்ல ||12-(228)

ஏஸேஸு ஜன்மதலி – எவ்வளவு பிறவிகள் எடுத்தாலும் (என்னென்ன ஸாதனைகளை செய்தாலும்), நா – நான், உனக்கு, தாஸனய்ய – தாஸனே ஆகிறேன், ஸ்வாமி. நீ, ஈஷனெம்போ – (என்றும்) என் ஸ்வாமி (ஆளும் தலைவன்) என்னும், வேத வாக்கியம் (ஞானிகளின் பேச்சுக்கள்), ஸித்த – நிச்சயம் (உண்மை). நுடி ஸித்தவாகிரலு – (இத்தகைய பிரமேயம்) இந்த நுடியின் (பிரமேயங்களுடன்) நிச்சயமாகிறது. உதாஸீன மாடலு – (என்னை) உதாசீனம் செய்வது, உசிதல்ல – சரியல்ல (என்றுமே நான் உன்னுடைய தாஸன். நீ என்னை அருளியே தீரவேண்டும். அதனை இப்போதே செய்வாயாக, ஸ்வாமியே, என்னும் பிரார்த்தனை).

ஆவ யோனியொளிரிஸு ஆவ லோகதொ³ளிரிஸு
ஆவாக³ நின்ன நெனெவந்தெ | நெனெவந்தெ கருணிஸோ
தேவகீ கந்த³ த³யதி³ந்த³ ||13-(229)

ஆவ – எந்தவொரு. யோனியொளு – (மானவ, பசு முதலிய) தேகத்தில். இரிஸு – வை (பிறவியைக் கொடு). ஆவ – (அல்லது) எந்தவொரு. லோகதொளு – (பூமி, ஸ்வர்க்க, நரகாதி) உலகத்தில், இரிஸு – வை. ஆவாக – அப்போது (எந்த தேகம், எந்த உலகத்தில் வைத்தாலும்), நின்ன – உன்னை, நெனெவந்தெ – நினைக்குமாறு, தேவகீகந்த – ஹே ஸ்ரீகிருஷ்ணனே. தயதிந்த – தயவு செய்து. கருணிஸோ – அருள்வாயாக.

201ம் பத்யத்தில் பன்றி முதலான நீச யோனியில் வராதவாறு நிரந்தரமாக ஹரிஸ்மரணையை பிரார்த்தித்து, இந்த பத்யத்தில் எந்த தேகம் வந்தாலும் ஹரிஸ்மரணை இருக்குமாறு அருள்வாயாக என்கிறார். இந்த இரு பிரார்த்தனைகளில் பரஸ்பரம் விரோதம் இல்லை. நீச யோனிகளில் ஹரிஸ்மரணைக்கு வாய்ப்பு இல்லை என்னும் பயத்தினால், முதலாம் பிரார்த்தனை. அப்படி ஆகாமல் இருக்க அருளுமாறு செய்வாயாக என்னும் பிரார்த்தனை இங்கு.

‘த்வத்பதாம்புஜ ஸ்ம்ருதிஸ்சேத் நிரயோ஽ப்யஸ்து’ என்று சனகாதிகள் பகவந்தனிடம் வேண்டிக் கொண்டனர் என்னும் பாகவத கதையை இந்த பத்யம் விளக்குகிறது. நிரய என்றால் நரக மற்றும் பசு முதலிய தேகங்கள். ஞான ஸாதனைக்கு மற்றும் ஸ்ரீஹரிஸ்மரணைக்கு சந்தர்ப்பம் இல்லாத பசு முதலான யோனிகள் சுஜீவர்களுக்கு நரகத்திற்கு ஈடானதே ஆகும்.

ஶிஷ்டனெந்தெ³னிஸென்ன ப்⁴ரஷ்டனெந்தெ³னிஸு ஸ
ர்வேஷ்டமூருதியெ ஜனரிந்த³ | ஜனரிந்த³ நுடிஸித்து³
இஷ்டவே கணோ எனகி³ன்னு ||14-(230)

ஸர்வேஷ்ட மூருதியெ – அனைத்து சஜ்ஜன ப்ரியனான ஹே கிருஷ்ணனே. அல்லது ஞானிகளுக்கு சர்வபுருஷார்த்த ஸ்வ ரூபனான ஹே ஸ்ரீனிவாசனே. என்ன – என்னை. ஷிஷ்ட னெந்தெனிஸு – சஜ்ஜன (சதாசாரி) என்று அழை. அல்லது, ப்ரஷ்ட னெந்தெனிஸு – பதிதன் என்றூ அழை. இன்னு எனகெ – எனக்காவது, ஜனரிந்த – மக்கள் மூலமாக, நுடிஸித்த – நீ. நுடிஸிதுது (என்னை இவ்வாறு அழைத்தது). இஷ்டவே கணோ – எனக்கு சரியானதே ஐயா.

சர்வாந்தர்யாமியான நீயே மக்களில் இருந்து சொல்லி சொல்லவைப்பவன் ஆகையால், என்னை யார் என்ன கூறினாலும் அது எனக்கு இஷ்டமே ஆகும். ‘துல்யனிந்தாஸ்துதி:’ ஆகிய கீதை வாக்கியங்கள் சமத்வ லட்சணங்களை சொல்கின்றன. மான அபமானங்களால் மன மாற்றத்தை அடையாதவனே ‘ஸாது’ ஆகிறான். இவ்வித ஸமத்வத்தை சம்பாதிக்க ஸாதகர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று ஸ்ரீதாஸார்யர் கூறுகிறார்.

ஶரணபாலக^{1}னெம்ப^{3} பி^{3}ருதி^{3}த்த^{3} மேலின்னு
பொரெயதி^{3}ரலென்ன நக^{3}ரேனு | நக^{3}ரேனு ஶூர்லோக^{1}
த^{3}ரஸ நீனாகி^{3} இருதி^{1}ர்த்து^{3} ||15-(231)

ஷரணபாலகனெம்ப – ஷரணாகத ரக்ஷகன் என்னும், பிருது – புகழ்பெற்ற பெயர். இத்தமேலெ – உனக்கு இருக்கும்போது. இன்னு – பிறகு. ஶூர்லோகதரஸு – 14 உலகங்களின் தலைவன். நீனாகி இருதிர்து – நீயாகவே இருந்தாலும்கூட. என்ன – என்னை. பொரெயதிரலு – காப்பாற்றாமல் இருந்தால். நகரேனோ – சஜ்ஜனர்களின் அவமானத்திற்கு நீ பாத்திரனாவதில்லையா ஸ்வாமி?

ஶூர்லோகதரஸ – என்பதில் பூமி, அந்தரிக்ஷ மற்றும் ஸ்வர்க்கத்துடன் மற்ற அனைத்து உலகங்களையும் சேர்த்து, 14 உலகங்களின் அரசன் என்று அர்த்தம்.

சரணாகதி அடைந்தவர்களை காப்பாற்றாமல் கைவிட்டு ஸ்ரீஹரி என்றும் கேலிக்கு ஆளாவதில்லை. இதனை அறிந்த ஸ்ரீதாஸர், சீக்கிரமாக காப்பாற்று என்னும் பிரார்த்தனைக்கு, இணையாக ‘நகரே’ என்னும் சொல்லையும் சேர்த்தார்.

‘த்ராஹி மாம் க்ருபயா கிருஷ்ண ஷரணாகதவத்ஸல’ என்று அனைத்து ஞானிகளும் ஷரணாகத ரக்ஷகன் என்று தினமும் வணங்குகின்றனர். ‘தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்’ ‘ந மே பக்த: ப்ரணஷ்யதி’ ஆகிய கீதை வாக்கியங்களால் பக்தர்களை காக்கிறான் என்று தானே ஆணையிட்டிருக்கிறேன். இந்த சபதத்தை, கஜேந்திரன், பலி, அம்பரீஷ, குசேல

முதலான பக்தர்களின் விஷயத்தில் செயல்படுத்திக் காட்டியிருக்கிறான்.

ஸ்ரீயரஸனெ நின்ன மாயக்கெ எணெகா[3]ணெ
ஹேய விஷயக[3]ள ஜனரிகெ[3] | ஜனரிகு[3]ணிஸி உபா
தே[3]யவெந்தெந்து[3] ஸுகி[2]ஸூவி ||16-(232)

ஸ்ரீயரஸனெ – ஹே லட்சுமிபதியே. நின்ன மாயக்கெ – உன் இச்சா சக்திக்கு (பந்தக சக்திக்கு) எணெகாணெ – இணையென்று யாரும் இல்லை. ஜனரிகெ – சம்சாரி ஜீவர்களுக்கு. ஹேய விஷயகள – துச்சமான, புறக்கணிப்பதற்கு யோக்யமான விஷயங்களை (இந்திரிய போக்ய விஷயங்களை). உபாதேயவு – மரியாதையுடன் ஏற்றுக்கொள்வதற்கு யோக்யமானவை. எந்தெம்ப – என்னும் புத்தியை கொடுத்து (கொடுக்க வைத்து). உணிஸி – போகிக்குமாறு செய்து (போகத்தில் ஈடுபடுமாறு செய்து). ஸுகிஸுவி – உன்னுடைய ஆனந்தத்தில் நீ இருப்பாய்.

மாயா என்னும் சொல்லுக்கு – இச்சை, ஷக்தி, மோகம், அஞ்ஞானம், ப்ரக்ருதி, லட்சுமி முதலான பற்பல அர்த்தங்கள் உள்ளன. ஸ்ரீஹரியின் அதீனமான ப்ரக்ருதி மற்றும் ப்ரக்ருத்யபிமானி லட்சுமிதேவியின், ஸ்ரீபூதுர்கா ரூபங்கள் அவனின் இச்சை யினாலேயே ஜீவர்கள் கட்டுப்பட்டிருக்கின்றனர். இந்த கட்டுப் பாட்டிற்கு ஆளாகாத ஜீவர்கள், ப்ரக்ருதி கார்யங்களான ஷப்தாதி விஷயங்களை, சுகப்ரத புருஷார்த்தங்கள் என்று நினைத்து, ப்ராக்ருத தேஹேந்திரியங்களல் போகிக்கின்றனர். இப்படியான போகங்களில் இருக்கும், அஹம், கர்வம் போன்றவைகளே சம்சாரத்தில் திரும்பத்திரும்ப வருவதற்கு காரணம் ஆகின்றன. ஸ்ரீஹரி இச்சையே முக்கிய காரணம்.

'பந்தகோ பவபாஷேன மோசகஸ்ச ஸ ஏவ ஹி' - பவ பாஷத்தினால் கட்டுப்படுத்துபவனும், அதிலிருந்து விடுதலை கொடுப்பவனும் ஸ்ரீஹரியே. இவ்வாறு ஜீவர்களை சம்சாரத்தில் வைத்து பூர்ணானந்த ஸ்வரூபனான அவன், ஜீவ சரீரங்களில் இருந்து ஷுபவிஷயங்களை போகித்தாலும் அதனால் பலன் எதுவுமின்றி, பூர்ணானந்தனாகவே இருக்கிறான்.

ஸர்வஸ்வதந்த்ர நீனோர்வனல்லதெ[3] ம
த்தோர்வரின்னுண்டெ ஜக[3]தொ[3]ளு । ஜக[3]தொ[3]ளக[3]ஜாதிக[3]ளு
த[3]ர்வியந்த[3]த[3]லி சரிஸோரு ।।17-(233)

நீனோர்வனு – நீ ஒருவனே. ஸர்வஸ்வதந்த்ர – யாரின் அதீனமும் இல்லாதவன் (அனைத்தையும் தீர்மானிக்கும் ஸ்வதந்த்ர பிரபு). அல்லதெ – இதைத் தவிர. ஜகதொளு – உலகத்தில் (எங்காவது). மத்தோர்வனு – அன்ய ஸ்வதந்த்ரன். இன்னுண்டெ – வேறு யாராவது உளரா? (இல்லவே இல்லை). ஜகதொளகெ – பிரம்மாண்டத்தில். அஜாதிகளு – பிரம்மாதி அனைவரும். தர்வியந்ததலி – ஜடப் பொருட்களைப் போல. சரிஸோரு – தங்களின் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிரம்மாதி அனைத்து ஜீவர்களும், ஜடத்தைப் போல அஸ்வதந்த்ரர்களே ஆவர். ஜடத்தைப் போல என்றால், ஜடமே அல்ல. அவர்களின் அனைத்து செயல்களையும் ஸ்ரீஹரி அவர்களில் இருந்து, தான் செய்து செய்விக்கிறான். ஜீவர்கள் ஞான, இச்சா, க்ரியா ஸ்வரூபர்களே ஆனாலும், ஸ்வரூபத்தால்கூட ஈஷ தந்த்ரர்கள் – அவர்களின் ஸ்வரூபமும் (ஸ்வரூப தர்மங்களும்கூட) ஈஷாதீனமே ஆகும்.

யதா தாருமயீ நாரி யதா யந்த்ரமயோ ம்ருக: ।
ஏவம் பூதானி மகவன்னீஷ தந்த்ராணி வித்தி போ: ।। (பாகவத)

'மரப் பொம்மைகளைப் போல, மிருக பொம்மைகளைப் போல, ஹே இந்திரனே, ஜீவர்கள் அனைவரும் ஈஷாதீனர்கள் என்று அறி' என்று பொருள்.

ஏனு கொட்டரு கொடோ[3] ஸ்ரீனிவாஸனெ நின்ன
தீ[4]னத[3]வனய்ய எந்தெ[3]ந்து[3] । எந்தெ[3]ந்து[3] ஸுக[2]துக்க[2]
மானாதி[3]க[3]ளிகெ[3] ப்ரபு[4] நீனு ।।18-(234)

ஸ்ரீனிவாஸனே – ஹே ஸ்ரீனிவாசனே. ஏனு கொட்டரு கொடோ – உன் விருப்பத்திற்கு வந்ததைக் கொடு. எந்தெந்து – எந்த காலத்திற்கும் (முக்தியிலும் கூட). நின்னதீனதவனய்ய – நான் உன் தாஸன். சுக துக்க மானாதிகளிகெ – சுக துக்க மான

அபமானாதி என இரண்டிற்கும், நீனு ப்ரபு - நீயே ஸ்வதந்த்ரனாக இருக்கிறாய்.

ஜீவர்களுக்கு அனைத்தும் தன்னாலேயே என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் சொல்லியிருக்கிறான்.

புத்திர்ஞானமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம:ஷம: |
ஸுகம் துக்கம் பவோsபாவோ பயம் சாபயமேவ ச ||
அஹிம்ஸா ஸமதா துஷ்டி: தபோ தானம் யஷோsயஷ: |
பவந்தி பாவா பூதானாம் மத்த ஏவ ப்ருதக்விதா: ||

புத்தி, ஞான, அஸம்மோஹ, மன்னிப்பு, ஸத்யம், தம (இந்திரிய நிக்ரஹ), ஷம (பகவத் இஷ்ட புத்தி), சுக துக்க, பவ (உத்பத்தி), பாவ அபவ (ஸ்திதி, லயங்கள்), பய, அபய, அஹிம்சை, சமத்வ (சுக துக்கங்களால் மகிழ்ச்சி துன்பப்படாமல் ஒரு நிலையில் இருப்பது), த்ருப்தி (விஷய போகங்களின் ஆசை கொள்ளாமல் இருப்பது), தபஸ், தானம், கீர்த்தி, அபகீர்த்தி ஆகிய பற்பல தர்மங்கள் பிராணிகளுக்கு உன்னாலேயே உண்டாகிறது.

முன்னாவ ஜன்மத³ புண்ய தா ப²லிஸிதோ¹
நின்னந்த² ஸ்வாமி எனகா³தி³ | எனகா³தி³ அதரிந்த
த⁴ன்யரோ நம்ம ஹிரியரு ||19-(235)

ஆவ ஜன்மத - எந்த பிறவியின். புண்ய - புண்ணியம். தா - தான். முன்ன பலிஸிதோ - முதலில் பலன் கொடுத்ததோ, (அதனால்) நின்னந்த ஸ்வாமி - உன்னைப் போன்ற சர்வேஷனான பிரபு. எனகெ - எனக்கு. ஆதி - கிடைத்திருக்கிறாய். அதனால் - தாஸ்ய பாவத்தினால், உன்னிடம் பக்தி உண்டான காரணம். நம்ம - என் மற்றும் என்னைப் போல உன்னை ஸ்வாமி என நினைத்து வணங்கும் அனைவரின். ஹிரியரு - பூர்வஜர்கள் (பித்ரு வர்க்கத்தவர்கள்) தன்யரோ - தன்யர் ஆனார்கள் ஸ்வாமி (உத்தம கதியை அடைந்தனர்).

ஹரிபக்தர்கள் மிகவும் புண்ணியம் செய்தவர்கள். பிரம்ம தேவன் இவ்வாறு கூறுகிறான்.

நஹ்யபுண்யவதாம் லோகே மூடானாம் குடிலாத்மனாம் |
பக்திர்பவதி கோவிந்தே ஸ்மரணம் கீர்த்தனம் ததா ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

மூர்க்கர்களுக்கும், வஞ்சகர்களுக்கும் (மித்யா ஞானிகளுக்கும்), பல பிறவிகளில் புண்ணியம் செய்யாதவர்களுக்கும், கோவிந்தனில் பக்தி உண்டாவது, ஸ்மரணை, கீர்த்தனைகளில் மனம் ஈடுபடுவதில்லை.

தம் குலத்தில் விஷ்ணுபக்தர்கள் பிறந்தனர் என்று பித்ருகள் நடனம் ஆடுவார்கள் என்று 'ந்ருத்யந்தி பிதரஸ்தேஷாம் வைஷ்ண வோ஽ஸ்ய த்யுலே ஜாத:' என்று விஷ்ணு ரஹஸ்ய சொல்கிறது.

த்ரி:ஸப்தபி:பிதா பூத: பித்ருபி: ஸஹ தே஽னக: |
யத்ஸாதோ஽ஸ்ய குலே ஜாதோ பவான் வை குலபாவன: ||

உன் தந்தை 21 பேர் பித்ருகளுடன் புனிதர் ஆகியிருக்கிறார். குலத்தையே பவித்ரமாக்கும் விஷ்ணுபக்தனான நீ குலத்தில் பிறந்ததால் இது ஒன்றும் வியப்பான விஷயம் இல்லை என்று ந்ருஸிம்ம ஸ்வாமி பக்த பிரகலாதனுக்கு ஆறுதல் கூறுகிறார் என்று பாகவதத்திலும் இதே விஷயமே விளக்கப்பட்டிருக்கிறது.

பிரகலாதனின் முந்தைய பிறவிகளின் பித்ருக்கள் என்று அறிய வேண்டும். 'ஜன்மாந்தரபித்ருபி:' (பாகவத தாத்பர்ய) என்று சொல்லப்படுகிறது. 'ப்ரதிமன்வந்தரே சைவ ப்ரஹ்லாதாத்யா பபூவிரே' என்றதால், முந்தைய பிறவிகள் இருக்கின்றன என்றும் ஸ்ரீ நரசிம்மனின் அருள் திரும்பத்திரும்ப கிடைக்கிறது என்றும் தெரிகிறது.

மனத[3]ல்லி ஹரிய சிந்தனெ உள்ள நரனிகெ[3]
மனெயாத[3]ரேனு வனவேனு |வனவேனு ஸதத து[3]
ர்ஜனர ஸங்க[3]தொ[3]ளு இரலேனு ||20-(236)

மனதல்லி - மனதில். ஹரிய சிந்தனெ - ஸ்ரீஹரி ஸ்மரணை. உள்ள - இருக்கும். நரனிகெ - மனிதர்களுக்கு. மனெயாதரேனு - வீட்டில் இருந்தால் என்ன? (கிருகஸ்தாரமம் ஆனால் என்ன), வன வேனு - காடாக இருந்தால் என்ன (வானபிரஸ்த அல்லது சன்யாச

ஆசிரமமாக இருந்தால் என்ன). ஸதத - எப்போதும், துர்ஜனர - கெட்டவர்களில் (விஷய போகங்களில் ஈடுபாடு கொண்டவர்களில்) ஸங்கதொளு - சகவாசத்தில். இரலேனு - இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். ஆகையால், அவனில் எந்தவொரு வேறுபாடும் உண்டாவதில்லை.

நிரந்தர ஹரிஸ்மரணை உள்ள, பரமாத்மனில் ஈடுபாடு கொண்ட மனம் கொண்ட, விவேகியானவன், விஷயபோகம் செய்தாலும், அப்படி செய்பவர்களுடன் இருந்தாலும், அவனுக்கு எந்தவொரு களங்கமும் உண்டாவதில்லை. அவனுக்கு மனநிம்மதி - மோட்சமே. விஷய போகங்கள் அல்ல. அவன் காமாதிகளின் வசம் ஆவதில்லை. காட்டில் இருந்தாலும், சம்சார பயம் போவதில்லை. அத்தகையவனுக்கு கிருஹஸ்தாசிரமத்தினால் என்ன பிரச்னை வந்துவிடப்போகிறது?

பயம் ப்ரமத்தஸ்ய வனேஷ்வபி ஸ்யாத்
யதோ வஸந்தே ஸஹ ஷட்ஸபத்னா: |
ஜிதேந்த்ரியஸ்யாத்மரேதேர் புதஸ்ய
க்ருஹாஸ்ரம: கின்ன கரோத்யவத்யம் || (பாகவதம்)

அதாவது, காமாதி அரிஷட் வர்கங்களுடன் காட்டில் வசித்தால் எப்படி பயம் போகும்? இந்திரியங்களை வென்று (ஆத்மரதே: புதஸ்ய) பரமாத்மனிடம் ஈடுபாடு கொண்ட மனம் கொண்ட விவேகிகளுக்கு கிருஹஸ்தாசிரமம் எதுவும் செய்யாது. முதலாம வனுக்கு சம்சார பயம் விலகுவதில்லை. இரண்டாமவனுக்கு அதன் பயமே இல்லை என்று அர்த்தம்.

அபூர்யமாண மசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிஷந்தி யத்வத் |
தத்வத்யாமா மம் ப்ரவிஷந்தி ஸர்வே ஸ்ச ஷாந்திமாப்னோதி ந காமகாமீ || (கீதை)

நிரந்தர ஹரிஸ்மரணை உள்ள ஞானி, கடலைப் போல இருக்கிறான். பற்பல ஆறுகள் வந்து சேர்ந்தால், கடல் ஆர்ப்பரிப்பதும் இல்லை. அதற்காக முயல்வதும் இல்லை. இவ்வாறு ஞானி காம போகங்களால் மகிழ்ச்சி அடைவதில்லை. அவற்றிற்காக முயல்வதும் இல்லை. அவை இல்லையென்றால்

கவலைப்படுவதும் இல்லை. இவ்வாறாக நிரந்தரமான ஹரி ஸ்மரணையின் மகிமைகளை ஸ்ரீகிருஷ்ணனே கூறியிருக்கிறான்.

பி3ம்ப3 நீனெனகெ3 ப்ரதிபி3ம்ப3 நா நினகெ3 க்ஷீ
ராம்பு3தி4ஶாயி நரஸிம்ஹ । நரஸிம்ஹ நீனிரலு
ஹம்ப3லிபுத்3யாகெ ஜ3க3தோ3ளு ।21-(237)

நீ, எனகெ – எனக்கு (அனைத்து ஜீவர்களுக்கும்). பிம்ப – பிம்பன். நா – நான் (அனைத்து ஜீவர்களும்). நினகெ – உனக்கு. ப்ரதிபிம்ப – பிரதிபிம்பர்கள். க்ஷீராம்புதிஷாயி – பாற்கடலில் படுத்திருக்கும். நரசிம்ஹ – ஹே புருஷோத்தமனே. நீனிரலு – பிம்பனான உன் கருணை இருக்கையில். ஜகதொளு – இந்த உலகில் (சம்சாரத்தில்). ஹம்பலிபுது யாகெ – கவலைகள் எதற்கு? (தேவையில்லை / காரணம் இல்லை).

பிரதிபிம்பம் பிம்பத்தின் அதீனமானது. அதன் அனைத்து செயல்களும் முழுமையாக பிம்பத்தின் அதீனமாகியே இருக்கின்றன. பிரதிபிம்பம் பிம்பனை அப்படியே பிரதிபலிக்கிறது. பிரதிபிம்பங்கள் பிம்பத்திலிருந்து வேறுபட்டவையே ஆகும். 'பின்னத்வ ததீனத்வத் ஸத்ருஷைரேவ ஸூர்யகாத்யுபமா' - சூர்ய பிரதிபிம்பங்களின் உவமானம், பிம்ப-பின்னத்வ, பிம்ப-அதீனத்வ, பிம்ப-ஸாத்ருஷ ஆகியவற்றை விளக்குவதற்காக சொல்லப் பட்டிருக்கிறது.

ததீனஸ்தத்ஸத்ருஷோ ஹரேர் ஜிவோ ந ஸம்ஷய: ।
ப்ரதிபிம்பஸ்ய ஷப்தார்த்தோ ஹ்யயமேவ உதாஹ்ருத: ।।
(பிரம்மகாண்ட)

ஆகிய வாக்கியங்கள் இந்த விஷயத்திற்கான ஆதாரங்கள் ஆகும். பிரதிபிம்பனான ஜீவனுக்கு பிம்பனான ஸ்ரீஹரியின் சாத்ருஷ்யம், ஞானானந்த ஸ்வரூப உள்ளவன் என்னும் காரணத்தால் மட்டும் சொல்லப்படுகிறது. ஏனெனில் 'ஆனந்தோ நேத்ருஷானந்த:' ஆகியவை ஸ்ரீஹரியின் ஆனந்தாதிகள் மிகவும் வேறுபட்டவை என்று சொல்கின்றன. உருவ-ஸாத்ருஷமும் ஜீவரில் இருக்கிறது. பசு, பறவை, மரம், கொடி, கிருமி ஆகிய ஸ்வரூபம் உள்ள

ஜீவர்களுக்கும் உருவத்தில் பிம்பாகாரத்தின் ஸாத்ருஷம் இருக்கிறது.

பகவந்தனிடம் அனைத்து ஆகாரங்களும் நித்ய-ஸித்தமே ஆகியிருக்கிறது. அவை அனைத்தும் ஸௌந்தர்யமானவையே ஆகும். குரூபமான ஆக்ருதிகள் என்று எதுவுமே இல்லை. சம்சார நிலையில் ஜீவர்களுக்கு பிராப்தம் ஆகும் குரூப தேகங்கள், உடல் நலக் குறைபாடுகள், ஸ்ரீஹரியின் அதீனங்கள். துக்காதிகளைப் போல, ஜட வஸ்துகளும்கூட ஸ்ரீஹரியின் பிரதிபிம்பங்களே. அவற்றிலும், உருவ-குணங்களின் அல்ப ஸாத்ருஷங்கள் உள்ளன. 'சிச்சேத்யமேததகிலம் அம்ஷாம்ஷ ப்ரதிபிம்பிதம்', 'பகவதி ஸர்வா காரணாம் நித்யசித்தத்வாத்' (சரஸ பாரதி விலாஸ). ஆகிய வாக்கியங்கள், இந்த பிரமேயங்களுக்கு ஆதாரங்களாக உள்ளன. ஜட வஸ்துகளின் சாத்ருஷ்யங்கள் உருவங்களில் மட்டுமே. ஜீவர்களைப் போல ஞானாதிகளில் அல்ல. ஏனெனில் அவற்றிற்கு ஞானாதிகள் இல்லை.

தமோயோக்ய ஜீவரும் ஸ்ரீஹரியின் பிரதிபிம்பரே. ஞான (சேதனத்வ) அனுபவ, ஸத்வாதிகளில் இருக்கும் அல்ப ஸாத்ருஷ்யத்தை மட்டும் அறிய வேண்டும். முக்தியோக்ய ஜீவர் ஆனாலும், ஆனந்தாதி மங்கள ஸ்வரூபராக இருந்து, பகவந்தனின் கல்யாண குணங்கள் இவர்களில் அதிகமாகி உபகாரகமாக இருக்கிறது. ஆகையால், இவரே ஸ்ரீஹரியின் விசேஷ ப்ரதிபிம்பர் என்று சொல்லப்படுகிறது. பகவத் அதீனமான இச்சாஞான க்ரியைகள் உள்ளவர்கள் என்பதில், ஜீவ ஸமூகத்தில் எவ்வித விசேஷமும் இல்லை.

கண்ணாடி முதலான பிரதிபிம்பம் உபாதிஜன்ய என்பது சாமான்ய நியமம். ஆனால், பிரதிபிம்பங்கள் ஸோபாதிக மற்றும் நிருபாதிக என்று இரு விதங்கள். 'ஸோபாதிரனுபாதிஷ்ச ப்ரதிபிம்போ த்விதேயதே | ஜீவ ஈஷஸ்மானுபாதிரிந்த்ரசாபோ யதா ரவே:' (பாஷ்ய) என்னும் இந்த வாக்கியம் இந்த விஷயத்திற்க்கு பிரமாணம் ஆகும். இங்கு, இந்திரசாப (காமனின் வில்) எப்படி உபாதி இல்லாத பிரதிபிம்பமோ, அப்படி ஜீவன் ஈஷனின் உபாதி இல்லாத பிரதிபிம்பன் என்று சொல்லப்படுகிறது. 'உபாதிரஹித பிரதிபிம்ப' என்றால், பிம்ப பிரதிபிம்பங்களால் பின்னமான

(வேறுபட்ட) கண்ணாடி முதலானவற்றைப் போல, உபாதி இல்லாதவை என்று அர்த்தம். இந்திரசாபம் பிம்பாதிரிக்த (பிம்பனிடமிருந்து வேறுபட்ட) உபாதி இல்லாத ப்ரதிபிம்பத்திற்கு உதாரணமானது.

ஜீவனானது பிரதிபிம்பாதிரிக்த உபாதி இல்லாத பிரதிபிம்பன் என்றால், ஜீவஸ்வரூபமே உபாதியும் பிரதிபிம்பனும் ஆகும். தேகத்தின் நிழல்கூட, நிருபாதிக ப்ரதிபிம்பத்திற்கு உதாரணம் ஆகிறது. (காமனின் வில்). இந்திரசாபம் சூரியனின் ஒளியிலிருந்து வேறுபட்ட உபாதியிலிருந்து பிறந்த பிரதிபிம்பன் அல்ல. தேஜஸ்ஸே (சூரியனின் கிரணங்களே) உபாதியும் ஆகிறது. பிரதி பிம்பமான இந்திரசாபத்தில் பிம்பமான சூர்யபிரகாஷத்தின் அதி ஸாத்ருஷ்யமும் இல்லை.

நீர்த்துளிகள் கண்ணாடியைப் போல (தேஜஸ்ஸிலிருந்து வேறுபட்ட) உபாதிகள் அல்ல. சூரிய கிரணங்களில் சேர்ந்திருக்கும் பற்பல வண்ணங்களை வேறுபடுத்தும் நிமித்த மாத்திரமே ஆகியிருக்கிறது. பற்பல வண்ணங்கள் உள்ள பிரதிபிம்பம், சூர்ய தேஜஸ்ஸிலேயே தெரிகிறது. தண்ணீரின் துளிகளில் தெரிவதில்லை. இந்திரசாபத்திற்கு தேஜஸ்ஸிலிருந்து வேறுபட்ட உபாதான காரணமும் அல்ல. கண்ணாடிக்கு உள்ளே இருக்கும் பிரதிபிம்பத்தைப் போல வேறு இடத்தில் வேறு காலத்தில் பார்க்க முடியுமான ஏழு வண்ணத்தைக் கொண்ட பிரதிபிம்பத்தை உதாரணம் கொடுத்தால், மழை வருவதற்கான குறியீடாக (அல்லது மழை பெய்த பிறகு), பகவத் இச்சையின்படி உதிக்கிறது என்னும் இந்திரசாபத்தையே பாஷ்யத்தில் ஸ்ரீமதாஸார்யர் உதாரணம் காட்டியிருப்பது, கம்பீரமான ரகசிய அர்த்தத்தைக் குறிக்கிறதும், குரு அனுக்கிரகமும் ஆகும் என்று அறியவேண்டும்.

சூர்யேண வினா ப்ராயேண இந்த்ரசாபஸ்ய அனவஸ்தானாத் – என்னும் விஷ்ணு தத்வ நிர்ணய டீகா வியாக்யானத்தில் இருக்கும் 'ப்ராயேண' ஷப்தார்த்தமும் ஸ்ரீ ஸ்ரீனிவாச தீர்த்தர் அவர்கள் தம் வியாக்யானத்தில், 'பாவ்யனிஷ்பஸூசனார்த்தம் கதாசித் ஸூர்யா ஸ்தமனானந்தரம் தேன வினாபி (இந்திரசாபஸ்ய) அவஸ்தான ஸத்பாத்' என்று இருக்கிறது. இதனால் பிரதிபிம்பத்தின் உதயத்திற்கு பிம்பமோ, உபாதியோ நிமித்த மாத்திரங்களாக

இருந்து, பகவத் இச்சையே மூல மற்றும் முக்ய காரணம் என்று அறியவருகிறது.

ஆகையால், அனைத்தும் பகவந்தனின் பிரதிபிம்பமே. பகவத் அதீனமே. ஸ்ரீஹரியே முக்ய பிம்பன். அனைத்து ஜீவர்களும் தம் ஸ்வோத்தமரான மற்ற அனைத்து ஜீவர்களின் பிரதிபிம்பரும் ஆகியிருக்கிறார்கள். – முக்ய பிம்பன் ஸ்ரீஹரியே. நம்மைப் பார்த்திருக்கும் கண்ணாடிகளில் பிரதிபிம்பங்களின் பரம்பரையே தெரிவதைப் போல, முதலாம் பிரதிபிம்பமே பிம்பமாக தெரிவதைப் போல, முதலாம் பிரதிபிம்பமே பிம்பமாக பிற பிம்பங்களுக்கு காரணம் ஆவதைப் போல, ஸ்வோத்தமர்கள் அனைவரும் பிம்பராக இருப்பதை சிந்திக்க வேண்டும். முக்ய பிம்பனிடமிருந்து தூரமாக இருப்பதைப் போல, பிரதிபிம்பம் அஸ்பஷ்டம் ஆகிறது என்பதை கவனிக்க வேண்டும். அது போலவே பவனதேவன், ஸ்ரீஹரிக்கு முக்யபிரதிபிம்பன் எனப்படுகிறான்.

ஜீவஸ்வரூபமே உபாதி மற்றும் ப்ரதிபிம்பம். ஜீவ ஸ்வரூபம் ஆனாலும் நித்யமானது. ஆகையால், பிரதிபிம்பத்வமும் நித்யமே. ஜீவ நித்யத்வமும் பகவத் அதீனமே ஆனாலும், ஸத்ய சங்கல்பனான ஸ்ரீஹரி அதனை என்றும் அன்யதா செய்வதில்லை. ஜீவனுக்கு பாஹ்யோபாதியும் உள்ளது. அது அழியக்கூடியது. அது நாசம் ஆனால், ஜீவன் முக்தன் ஆகிறான். பிரதிபிம்பனான ஜீவ ஸ்வரூபம், நஷ்டம் அடையக்கூடிய எந்த சந்தப்பமும் என்றும் உண்டாவதில்லை.

பிம்ப நாஷ, உபாதி நாஷ, பிம்ப உபாதிகளின் சன்னிதி நாஷ ஆகிய எந்தவொரு பிரதிபிம்ப நாஷ காரணங்களுக்கும் சாத்தியமே இல்லை. பிம்பனான ஸ்ரீஹரி நித்யனும், சர்வத்ர வியாப்தனும் ஆகியிருக்கிறான். உபாதியான ஜீவஸ்வரூபமும் நித்யமே. பாஹ்யோபாதியின் நாஷமே மோட்சம் என்பதில் இந்த அடுத்து வரும் பிரமாண வாக்கியங்களை கவனிக்க வேண்டும்.

ஜீவோபாதிர்த்விதா ப்ரோக்த꞉ ஸ்வரூபம் பாஹ்யமேவ ச |
பாஹ்யோபாதிர்லயம் யாதி முக்தாவன்யஸ்ய து ஸ்திதி꞉ ||
ஸர்வோபாதி வினாஷே து ப்ரதிபிம்ப꞉ கதம் பவேத் |
கதம் சாத்மவினாஷாய ப்ரயத்ன꞉

ஸேத்ஸ்ய: ஸேத்ஸ்யதே க்வசித் ||
ஞானஜ்ஞேயாத்ய பாவாச்ச ஸர்வதா நோபபத்யதே |
தஸ்மாத்தேதன்மதம் யேஷாம் தமோனிஷ்டா ஹி தே மதா: ||

ஜீவர்களுக்குள் இருக்கும் உபாதி, ஸ்வரூப மற்றும் பாஹ்ய என்று இரு விதங்கள். பாஹ்யோபாதி அழியத்தக்கது. மற்றது முக்தியிலும் இருக்கிறது. இரண்டும் நாசம் ஆனாலும் பிரதிபிம்பம் என்பது எப்படி இருக்க முடியும்? ஆத்ம நாசத்திற்காக முயற்சி (ஸாதனை) செய்ய முடியுமா?. மோட்சம் புருஷார்த்தம் என்றாவது எப்படி ஆகும்? ஞான, ஜ்ஞேயாதிகளின் இல்லாமையால் இது எப்போதும் சாத்தியமில்லை. சர்வோபாதி நாஷத்தை சொல்வது யாருக்கு பொருந்துகிறதோ, அவரே தமோயோக்யர் ஆவர்.

ப்ராக்ருத அந்தக்கரணமே பாஹ்யோபாதி ஆகும். இது, ஸ்தூல தேகம், அனிருத்த தேகம் மற்றும் லிங்க தேகங்களில் சூக்ஷ்மமாக இருக்கிறது. ஜீவஸ்வரூப பூதமான சின்மனம், பகவந்தனின் சக்தி விசேஷங்களால் சொல்லப்பட்டு லிங்க தேகாதிகளில் இருக்கும் சூக்ஷ்ம அசின்மனத்துடன் சேர்ந்து, ஸ்தூல தேக மற்றும் அதிலிருக்கும் இந்திரியங்களின் பற்பல காரியங்களின் பலன்களுக்கு காரணமாகிறது.

ஸ்வரூப தேகத்தின் கவசங்களைப் போலிருக்கும் பாஹ்ய தேகத்தில் இருக்கும் அந்தக்கரணத்தில் உண்டாகும் ஜீவ க்ரியைகளின் வியாப்தி, பிம்பனான ஸ்ரீஹரியின் ப்ரதிபிம்பபூதமாக இருக்கிறது. இந்த ப்ரதிபிம்பம், அதாவது இந்த ப்ராக்ருத இந்திரியங் களின் மூலம் நடக்கும் ஜீவக்ரியைகள், அந்தகரணரூபத்தின் பாஹ்யோபாதி அழியும்போது அழிகிறது. அப்போது, ஜீவன், நித்யமான வெறும் ஸ்வஸ்வரூபத்திலிருந்து ஸ்திதன் ஆகிறான். இதுவே முக்தி.

‘முக்திர்ஹித்வாऽன்யதாரூபம் ஸ்வரூபேண வ்யவஸ்திதி:’ என்று சொல்வதில், ஸ்ரீமத் பாகவதம் இதையே சொல்கிறது. 240ம் பத்யத்தின் விசேஷாம்சங்களின் விவரணை, இந்த பிரமேயங்க ளையே சொல்கிறது.

ஏனு மாடு^{3}வ கர்ம நீனெ மாடி^{3}பெ எம்ப
ஞானவே எனகெ^{3} ஜிதவாகி^{3} | ஜிதவாகி^{3} இரலி ம
த்தேனு நானொல்லெ நின்னாணெ ||22-(238)

ஏனு மாடுவ கர்ம – நான் செய்யும் அனைத்து கர்மங்களும், நீனே மாடிபெ – நீயே செய்து செய்விக்கிறாய். எம்ப ஞானவே – என்னும் ஞானமே. எனகெ – எனக்கு. ஜிதவாகி – (சந்தேகத்திற்கு இடமில்லாமல்) ஸ்திரமாக. இரலி – இருக்கட்டும். நானு – நான். மத்தேனு – வேறு எதையும். ஒல்லெ – விரும்புவதில்லை. நின்னாணெ – இது சத்தியம். உன் மேல் ஆணை என்று சொல்கிறேன்.

அபராதி^{4} நானெம்புது^{3}பசார மாத்ர நின
க^{3}பராத^{3}வெம்போ^{3}தி^{3}ளெயொளு | இளெயொளு இன்னுண்டெ
அபராதி^{4} எம்போ^{3}த^{3}பராத^{4} ||23-(239)

நான். அபராதி – அபராதி. எம்புது – என்னும் பேச்சு. உபசார மாத்ர – வாய் வார்த்தை மட்டுமே. நீயே அனைத்தையும் செய்பவன் ஆகையால். நினகெ – உனக்கு. அபராதவெம்புது – அபராதம் என்பது. இளெயொளு – உலகில். இன்னுண்டெ – எங்காவது உண்டா?. அபராதி எம்போது – நீ தவறு செய்விக்கிறாய் என்று அறிவதே (அல்லது அஸ்வதந்த்ரனான நான் அபராதி என்று அறிவது அல்லது சொல்லிக் கொள்வதே), அபராத – தவறாகும். (நீயே ஸ்வதந்த்ரகர்த்தன் என்றும் சர்வகர்த்தன் என்றும் அறிந்த யாரும் இந்த இரண்டையும்) பகெயுவுதில்ல – சொல்வதில்லை.

எல்லி ஈஶத்வ மத்தல்லிஹுது கர்த்ருத்வ
ஹுல்லு மனுஜரிகெ^{3} கர்த்ருத்வ | கர்த்ருத்வவெம்புது^{3}
எல்லிஹுதோ^{3} ப^{3}ரிதெ^{3} அபவாத^{3} ||24-(240)

எல்லி – எங்கு யாரிடம். ஈஷத்வ – ஸ்வதந்த்ர நியாமகத்வ தர்மம் இருக்கிறதோ, மத்தல்லி – அங்கங்கு. கர்த்ருத்வ – கர்த்ருத்வம். இஹுது – இருக்கிறது. ஹுல்லுமனுஜரிகெ – அல்பமான (அஸ்வதந்த்ரமான) மனிதர்களுக்கு (ஜீவ சேதனர்களுக்கு) கர்த்ருத்வவெம்புது – கர்த்ருத்வ உண்டு என்பது. எல்லிஹுது –

எங்கு இருக்கிறது? (எப்படி பொருந்தும்?). பரிதெ அபவாத – கர்த்ருத்வ உண்டு என்பது வீணான தவறான பேச்சே ஆகும்.

ஜீவகர்த்ருத்வத்தின் விஷயத்தின் 162ம் பத்யத்தின் விவரணையை பார்க்கலாம்.

‘ஸ ஹி ஸர்வஸ்ய கர்த்தா’ ‘தேன வினா த்ருணமபி ந சலதி’ ஆகிய ஸ்ருதிகள் பரமாத்மனே சர்வகர்த்தன் என்று நிர்ணயிக்கின்றன. ‘கர்த்ருத்வம் க்ருதி ஸ்வாதந்த்ர்யம்’ அதாவது ஸ்வதந்த்ரகர்த்தனே கர்த்ருத்வ உள்ளவன் எனப்படுகிறான். இந்த விளக்கத்தினால் ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரியே கர்த்தன். இதே அர்த்தத்திலேயே ஸ்ரீதாஸார்யர் ‘மனுஜரிகெ கர்த்ருத்வ வெல்லிஹுது’ என்கிறார். இந்த பார்வையால், ‘விஹாரோபதேஷாத்’ ‘யதா ச தக்ஷோபயதா’ ‘கர்த்தா ஷாஸ்த்ரார்த்தவத்வாத்’ ஆகிய ஸூத்ரங்களில் ஸ்ரீபாதராயணர், ஜீவனும் கர்த்தன் என்று சொல்லியிருப்பார். ஸ்வதந்த்ர கர்த்தன் அல்ல. இந்த நிர்ணயம், ஸ்ரீஹரியே சர்வகத்தன் என்பதற்கு எதிரானது அல்ல. ஸ்ரீஹரியின் ப்ரேரணைக்கேற்பவே ஜீவர்கள் அனைத்தையும் செய்வதால் பராதீன கர்த்தர்கள். யஜமானன் சொல்லியதைப் போல வேலை செய்யும் சேவகர்களைப் போல, அரசன் தன் அதிகாரத்தை தன் அதீனரான பற்பல சேவகர்களில் பிரித்துக் கொடுத்து அவர்கள் மூலமாக காரியங்களை செய்விப்பதைப் போல, ஆகிய லௌகிக உதாரணங்கள், ஜீவன் பரமாத்மனின் அதீனன் என்பதை சொல்வதற்கு மட்டுமே. ஸர்வப்ரகாரமான ஸாம்யத்தை சொல்வதற்கு அல்ல. ஸ்ரீஹரியானவர், ஜீவனின் அந்தர்யாமியாக நின்று அனைத்தையும் தானும் செய்து, செய்விக்கிறார்.

இச்சா, ஞான, க்ரியா ஷக்திகள் ஜீவர்களின் ஸ்வரூப தர்மங்கள். ஜீவஸ்வரூபமும் ஸ்ரீஹரியின் நித்யாதீனம் ஆகையால், ஜீவனால் ஆகும் எந்த கர்மமே ஆகட்டும், ஸ்ரீஹரியே செய்ததாக ஆகிறது. ஸ்ரீஹரி செய்தால் மட்டும் ஜீவன் செய்கிறான். இல்லையெனில் இல்லை. அசேதன வஸ்துகள் அனைத்தும் ஸ்ரீஹரியின் அதீனங்களே. அவற்றினால் ஆகும் சிறப்பு காரியங்களும் ஸ்ரீஹரியினால் செய்யப்பட்டவையே. சேதனாசேதனகள் அனைத்தும் இவ்வாறு ஸ்வரூபத: ஸ்ரீஹரியின் அதீனமானாலும்,

ஸத்யஸங்கல்பனான ஸ்ரீஹரி அவற்றின் அனாதி நித்ய ஸ்வபாவங்களின் சம்ரக்ஷகனாக இருக்கிறான்.

அதுபோலவே, அவனால் செய்ய முடியும் என்றாலும், அவற்றின் ஸ்வபாவங்களை அவன் மாற்றுவதில்லை. ஜட வஸ்துகளுக்கு ஞான, இச்சா, பிரயத்னங்களை உருவாக்குவதில்லை. அவை அனைத்தின் நித்யத்வத்தையும் காப்பாற்றுகிறான். அனந்த (எண்ணிக்கையற்ற) ஜீவர்கள் இருக்கின்றனர். ஸ்வரூபத்தினால் வெவ்வேறு யோக்யதை உள்ளவர்களாக இருக்கிறார்கள். பற்பல விதத்தின் பல கர்மங்களை இவர்களால் செய்வித்தாலும் ஸ்ரீஹரிக்கு வைஷம்ய தோஷம் இல்லை. அவரவர்களின் யோக்யதை மற்றும் அனாதி கர்மங்களை அனுசரித்து செய்விப்பதால் பூர்ண (ஜடத்தினைப் போல) அஸ்வதந்த்ரனான ஜீவன் மூலமாக அனைத்தையும் ஸ்ரீஹரியே செய்விப்பதால் 'இவ்வாறு செய், விடு' என்னும் ரூபத்தின் விதி விதிவிலக்குகளும், பலன்களுக்கும் ஜீவன் எப்படி பாத்திரன் ஆகிறான் என்பதை அறிய வேண்டியது அவசியம். ஸ்ரீஹரி நினைப்பதைப் போல - ஜீவன் செய்கிறான் என்பவரின் பாவத்தை தெளிவாக சிந்திக்க வேண்டும்.

விதி-போதனை-ப்ரேரணை என்பது பர்யாய பதங்கள். ஏகார்த்த போதக வார்த்தைகள். கர்மத்திற்கு நிமித்தங்கள் மூன்று. ஈஷ்வரனின் நித்ய சம்பந்தம் உள்ள ஜீவன் 'பரிக்ஞாதா' என்பார்கள். ஸ்ருதி ஸ்ம்ருதி ரூபத்தின் வாக்கியங்களால் ஆகும் அறிவு 'ஞானம்' ஆகும். தன் கடமைகளை செய்து பலன்களை பெற வேண்டும் என்னும் இச்சை மற்றும் முயற்சி கூட 'ஞேய' எனப்படுகிறது. 'ஞானம் ஞேயம் பரிஞாதா த்ரிவிதா கர்மசோதனா' (கீதை) என்று சொன்னதில், கர்மசோதனே (ப்ரேரணை)யில் இவை மூன்றும் நிமித்தங்கள் என்று சொல்லப்படுகிறது.

கர்ம ப்ரேரணை, த்ரிவிதம் என்றால் அதற்கு நிமித்தங்கள் மூன்று விதங்கள் என்று அர்த்தம். எப்போது ஜீவனுடன் இருக்கும் பிம்பனான ஸ்ரீஹரி, ஜீவனுக்கு அவனது யோக்யதைக்கேற்ப, தன் ஆக்ஞாரூபங்களான ஸ்ருதி ஸ்ம்ருதிகளிலிருந்து அவனின் கர்தவ்ய ஞானத்தை பிறப்பித்து, அவனின் இச்சாப்ரயத்னங்களை வளர்க்கிறான். இவை அனைத்தும் ஸ்ரீஹரிகர்த்ருகங்களே ஆகும். இப்படி இருந்தாலும், ஜீவன் தன் யோக்யதைக்கேற்ப ஸ்ரீஹரி

செய்ததை செய்யும் பராதீன கர்த்தனாதவன் ஆகையால், ஸ்ரீஹரி ஸ்வதந்த்ரனும் பூர்ணகாமனும் நிரபேக்ஷனும் ஆகையாலும்கூட, ஜீவன் மட்டும் கர்ம பலன்களை அனுபவிப்பவன் ஆகிறான்.

ப்ரதிபிம்பக்ரியாயா: பிம்பக்ரியானுஸ்யூததா |
யதாஷ்னாதி ததாஷ்னாதி யதா வக்தி ததெய்வ ஸ: |
கிமத்ர பஹுனோக்தேன நாऽக்ருதம் க்ரியதே ஜனை: ||
(ஷாண்டில்ய தத்வ)

பிம்பன் உண்டால் பிரதிபிம்பன் உண்கிறான், பேசினால் பேசுகிறான். பிம்பன் செய்யும் எதையும் பிரதிபிம்பன் செய்கிறான் என்பது, ஜீவனின் அஸ்வாதந்த்ர்யத்தை தெளிவாக சொல்கிறது. பிம்பக்ரியா னுஸ்யோததா என்றால், பிம்பனின் க்ரியையை அனுசரிப்பது. பிம்பக்ரியா ப்ரவேஷம் உள்ளவை என்று அர்த்தம்.

மயைவ தத்தம் ஸ்வாதந்த்ர்யம் கேவலேஷ்வபி கர்மஸு |
தாவன்மாத்ரேண ஸம்முக்தா: ஸ்வாதந்த்ர்யம் மன்யதே நிஜம் |
ஸ்வாதந்த்ரேऽபஹ்ருதே பஸ்சாஜ்ஜானந்தி பரதந்த்ரதாம் ||
(ஷாண்டில்ய தத்வ)

என்றால், வெறும் கர்மங்களை செய்வதில் உனக்கு அதிகாரம். என்னாலேயே ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என் இஷ்டப்படியே மோஹிதராகி, ஜீவர்கள் ஸ்வாதந்த்ர்யம் தம்முடையது என்று அறிந்திருக்கின்றனர். நான் ஸ்வாதந்த்ர்யத்தை திரும்ப எடுத்துக்கொண்டால் தம் பாரதந்த்ர்யத்தை அறிகிறார்கள். 'கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன' (கீதை) என்றால், உனக்கு கர்மத்தில் மட்டுமே அதிகாரம். பலவிஷயங்களில் இல்லை.

இந்த மேற்கண்ட சாஸ்திர வாக்கியங்களிலும், அரசன் சேவகர்களிடையே அதிகாரத்தை பிரித்துக் கொடுப்பதைப் போல என்னும் உதாரணங்களாலும், ஜீவர்களுக்கு பரமாத்மன் ஸ்வாதந்த்ர்யத்தை கொடுத்திருக்கிறான் என்னும் பிரமை உண்டாகிறது. தன் ஸ்வாதந்த்ர்யத்தை ரமா பிரம்மாதிகளில் பிரித்து தானம் செய்தான் என்னும் விளக்கமான விஷயங்கள் விஷ்ணுரஹஸ்ய முதலான கிரந்தங்களில் இருக்கிறது.

ஆகையால், ஸ்வாதந்த்ர்ய என்பதின் சரியான அர்த்தத்தை அறிய வேண்டியது மிகவும் முக்கியம்.

ஸ்வாதந்த்ர்ய என்பது பரமாத்மனில் மட்டும் இருக்கும்படியான குணம். பரமாத்மனுக்கும் அவனின் குணங்களுக்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. குணங்களே அவனின் ஸ்வரூபம். ஆகையால், ஸ்வாதந்த்ர்யத்தை பிறருக்குக் கொடுப்பதால், தானே அவரில் இருக்கிறான் என்றே அர்த்தம். பரமாத்மனின் ஞானானந்தாதி குணங்களைப் போல ஸ்வாதந்த்ர்ய குணமும் அபரிமிதமானது. அபாரமான ஸ்வாதந்த்ர்ய குணத்தில் ஒரு அம்சத்தை எடுத்து பிரித்து, அதனை திரும்பத்திரும்ப பற்பல அம்சங்களாக பிரித்தாலும், அந்த அனைத்து அம்சங்களும் அபரிமிதமாகவே இருக்கின்றன.

பரமாத்மன் அனந்தாம்ஷங்கள் உள்ளவன். ஒவ்வொரு அம்சமும் மூலரூபத்திலிருந்து வேறுபாடு அற்றவையே மற்றும் மூல ரூபத்தைப் போல பூர்ணமே. பரமாத்மன், ஒரே சமயத்தில், அணுவைவிட அணுவாகவும், பெரியதைவிட பெரியதாகவும் இருக்கிறான். உலகத்தில் எதிர்மறையான அனைத்து தர்மங்களும் அவனிடம் இருக்கின்றன. மஹத் ரூபங்களில் இருக்கும் அனைத்து மகிமைகளும், அணு ரூபங்களில் கூட இருக்கின்றன. அவனின் அனைத்து அம்சங்களும் கர, சரணாதி அவயவங்களுடனான சுந்தர பவித்ர ரூபங்களே ஆகின்றன.

இவ்வாறு ஸ்ரீஹரி, அசிந்த்ய மகிமோபேதனாக இருப்பதால், ஸ்வாதந்த்ர்யதான – அதாவது, தன் ஸ்வாதந்த்ர்யத்தின் அம்சங்களை பிறரில் வைக்கிறான் என்று அர்த்தம். 'ந து அன்யாதீன ஸத்தாகத்ருரூபஸ்வா பின்ன ஸ்வாதந்த்ர்யஸ்ய அன்ய நிஷ்டத்வ ஸம்பாதனம் | பஹுமான விரோதாத் | அத ஏவ ஸ்வகார்யாபி:வ்யக்த நபிவ்யக்தி விவக்ஷயா ஸ்வாதந்த்ர்ய தானா பஹாரயோருக்தி: | ஆவிர்பூதஸ்வஸ்வாதந்த்ர்ய பகஸாத்ய க்ரியா கரண ஷக்த்யவ்யக்திர் பூயாதிதீஸ்சர ஸங்கல்ப ஏவ ஸ்வாதந்த்ர்ய தானம்'. (ஜீவகர்த்ருத்வ விஷயத்தில் ஸ்ரீ கௌடகெரெ வெங்கட ரமணாசார்யர் கூறியது).

அதாவது, தன் ஸ்வரூபபூத ஸ்வாதந்த்ர்யத்தை பிறரின் அதீனத்தில் வைக்கிறான் என்றால், அதனை இன்னொருவரில் வைப்பதல்ல. தன் காரியங்களால், பிறரின் க்ரியாஷக்திகளை செய்வது அல்லது செய்யாதிருப்பது இதுவே ஸ்வாதந்த்ர்ய தானம் ஆகும். தன்னிடமிருந்து தோன்றிய ஸ்வாதந்த்ர்யாம்ஷங்களினாலேயே ஜீவனிஷ்ட க்ரியாகரண சக்தி, தோன்றட்டும் என்னும் ஈஷ்வர சங்கல்பமே ஸ்வாதந்த்ர்ய தானம். மற்றும் 'ததா ச ஸ்வாதந்த்ர்யதானம் நாம தத்ரூபேண ஜீவப்ரவேஷ:' 'ஸ்வகத-ஸ்வாதந்த்ர்ய தத்த ஸ்வாதந்த்ர்ய ரூபத்வயம் ஹரேரேவ' (சலாரி) - ஸ்வாதந்த்ர்ய தானம் என்றால் தன்னாமக ரூபத்தினால் ஜீவனை பிரவேசிப்பதே ஆகும். ஸ்வகத ஸ்வாதந்த்ர்ய, தத்த ஸ்வாதந்த்ர்யங்கள் என்பது ஸ்ரீஹரியின் இரு ரூபங்களே.

தத்தஸ்வாதந்த்ர்யனாம்னா வை ஹரேரீஷேன ஸர்வதா |
ப்ரேரித: கர்மகுர்வாணோ ந மே ஷக்தி: கதஞ்சன ||

தத்தஸ்வாதந்த்ர்ய நாமக ஸ்ரீஹரிரூபத்தினால் தீர்மானிக்கப்பட்டு கர்மங்களை செய்கிறானே தவிர, எனக்கு நானே கர்மங்களை செய்யும் ஷக்தி சிறிதளவும் எனக்கு இல்லை. (பிரகாஷ ஸம்ஹிதா). ஆகிய வாக்கியங்கள், தத்த ஸ்வாதந்த்ர்ய என்பது ஸ்ரீஹரியின் ரூப விசேஷத்தின் நாம என்று விளக்குகிறது.

தத்ர தத்ர ஸ்திதோ விஷ்ணு: தத்தச்சக்தீ: ப்ரபோதயன் |
ஏக ஏவ மஹாஷக்தி: குருதே ஸர்வமஞ்சஸா ||
மற்றும்
கர்த்ருத்வம் கரணத்வம் ச ஸ்வபாவஸ்சேதனா த்ருதி: |
யத்ப்ரஸாதாதிமே ஸந்தி ந ஸந்தி யதுபெக்ஷயா ||

என்னும் பிரமாண வாக்கியங்கள் இந்த பிரமேயத்தையே சொல்கிறது. ஸ்ரீஜகன்னாததாஸர் தமது ஹரிகதாம்ருத சாரத்தில் இதையே சொல்லியிருக்கிறார்.

அவனிப ஸ்வாமித்வதர்மவ
ஸ்வவஷமாத்யரிகித்து தா ம
த்தவர முகதலி ராஜகார்யவ மாடிஸுவ தெரதி
கவிபிரீடித தன்ன கலெகள

திவிஜதானவ மானவரொளி
ட்டிவிரத குணத்ரயஜ கா்மவ மாடி மாடிஸுவ
(கலெகள - அம்சங்களை; இட்டு - ஸ்தாபித்து)

ஜீவரில் ஸ்திதமான ஸ்ரீஹரியின் ஸ்வாதந்த்ர்ய அம்சங்கள் மூன்று விதம். 1. தத்த ஸ்வாதந்த்ர்ய 2. ஸ்வகத ஸ்வாதந்த்ர்ய மற்றும் 3. ஸர்வ ஸ்வாதந்த்ர்ய. அவற்றினால் ஆகும் செயல்கள் வெவ்வேறானவை. ஒவ்வொன்றிலும் மூன்று விதம். ப்ரசுர அப்ரசுர என்னும் விசேஷத்தினால் தனித்தனி பெயர்களால் அழைக்கப்படுகின்றன. ஜீவ ஸ்வரூபத்தில் இருக்கும் பிம்ப ஸ்வரூபங்களுக்கு காரணம் - சம்சார நிலையில் அதன் கார்யம் இல்லை. ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்ருஷ்டிக்காக (மூலரூபத்திலிருந்து அவதார ரூபங்கள் எப்படியோ அப்படி) ஸ்ரீஹரியின் அபார ஸ்வாதந்த்ர்ய குணத்திலிருந்து, விசேஷ பலத்தினாலும், கார்ய பேதத்தினாலும், தத்த ஸ்வகத ஸர்வ ஸ்வாதந்த்ர்யங்கள் என்னும் வ்யவஹாரத்திற்கு உள்ளாகும் அம்சங்கள் தோன்றுகின்றன.

த்ரிவித ஜீவர்களுக்கு அவரவர்களின் கதிகளை கொடுப்பதற்காக, ஸ்தூல தேக சம்பந்தத்தைக் கொடுத்து, அவர்களை படைத்து, மேற் கூறிய ஆவிர்பூத அம்சங்களால், அவரில் பிரவேசிக்கிறான். தத்த ஸ்வாதந்த்ர்ய நாமக அம்சம் 400 பாகங்களாக இருக்கின்றன. ஸ்ரீஹரி, இவற்றில் 132-3/4 பாகங்களை தன்னில் வைத்துக் கொண்டு, 67-1/4 பாகங்களை லட்சுமிதேவியிலும், பிரம்மனில் 52, வாயுதேவரின் 48, ருத்ரனில் 20, இந்திர காமர்களில் 15, தத்வாபிமானி தேவதைகளில் 10, ஜீவர்களில் 10, கலி முதலான தைத்யர்களில் 45 என ஸ்தாபிக்கிறான். தன் அதீனரான ரமாதி இந்த அனைவரின் மூலம் ஜீவனின் சர்வ க்ரியைகளுக்கு, தானே காரணன் ஆகிறான்.

இப்படி செய்வது, தேகத்தில் இருக்கும் ஜீவனுக்கு தன் கர்மங்களால் கிடைக்கும் பல பாகத்தைப் பற்றி சொல்கிறது. பிரம்மாண்டத் திற்குள் படைக்கப்படும் அனைத்து தாத்விக தேவதைகளிலும் (ஜீவ தேகத்தின் வெளியே இருந்து நிர்வகிக்கும் அவரின் செயல்களின் ஸித்திக்காக) இதே பிரமாணத்தினால் தத்த ஸ்வாதந்த்ர் யாம்ஷங்களால் பிரவேசிக்கிறான் என்றும் அறிய வேண்டும்.

தத்த ஸ்வாதந்த்ர்யம் லிங்க தேகத்தில் சூக்ஷ்மனின் ஆதிகளின் மூலம் ஸ்தூல தேகத்தில் இருக்கும் மனம் முதலானவற்றுடன் சேர்ந்து, ஸ்திதிகாலத்தின் (ஜீவனால் ஆகவேண்டிய) கார்யங்களுக்கு காரணம் ஆகின்றது. படிக்கும் காலத்தில் (அபக்வ- ஸாதன நிலையில்) ஜீவனின் முயற்சிகளில் காரணம் ஆகிறது - அஹம், கர்வம் ஆகிய ரூபத்தின் பிரமைகளுக்கும் அதுவே காரணம் ஆகிறது. தத்த ஸ்வாதந்த்ர்யத்தின் அம்சங்களில் ஒரு குணம் விசேஷ பலத்தினால் ஸ்வகத ஸ்வாதந்த்ர்ய நாமக ஆகின்றது. இது மேலும் பிரிந்து, இதில் நான்கில் ஒரு பாகம் மறுபடி 10 பாகங்களாக ஆகின்றது.

ஸ்வஸ்வாதந்த்ர்யம் சதுர்த்தாம்ஷம் தஷதா வ்யபஜத்தரி: |
பாதோனபஞ்சகம் ப்ராணே ஸபாதம் பிரம்மணே ததௌ ||
(விஷ்ணு ரஹஸ்ய)

ஆகியவை சொல்வதைப் போல, ஒரு பாதத்தின் (கால் பாக) 10 பாகங்களில், முக்யபிராணரில் 4-3/4, பிரம்மனில் 5-1/4; மற்றொன்று பாதத்தின் 10 பாகங்களில், ருத்ரனில் 2, இந்திர காமர்களில் 1-1/2, தத்வ தேவதைகளில் 1, ஜீவனில் 1, கல்யாதிகளில் 4-1/2,

மற்ற இரு பாதங்களில் 3 பாகங்கள் செய்து, 2 பாகம் தன்னில், ஒன்றினை ரமாதேவியிலும் நிறுவுகிறான். ஸ்வகத ஸ்வாதந்த்ர்ய அம்சம், த்ரிவித ஜீவர்களின், பக்வ-அபக்வ உபயங்களில், பாரத்ரிக பலஸாதன விஷயக ப்ரவ்ருத்தி காரணமாகிறது.

இந்த ஸ்வகத ஸ்வாதந்த்ர்யத்தின் ஒரு குணம், ஸர்வ ஸ்வாதந்த்ர்ய நாம உள்ளதாகி, நான்கு பாதங்களுக்கு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாதமும் 10 பாகங்களாகி, ஸ்வகத ஸ்வாதந்த்ர்யாம்ஷங்களாக ரமா பிரம்மாதிகளில் ஸ்தாபிக்கப்படுகிறது.

ஜீவர்களின் பக்வ திசையில், அஹம், கர்வ, மமகாரங்களை விட்டு விரக்த பூர்வகமாக, அனைத்தும் ஈசாதீன என்னும் ஞானத்தினால் இஷ்ட சம்பாதக கர்மங்களின் செயல்களுக்கு காரணம் ஆகின்றன இந்த சர்வ ஸ்வாதந்த்ர்யாம்ஷம். 'ஸர்வே ஸர்வகுணாத்மா ந: ஸர்வகர்த்தார ஏவ ச' என்று சொல்வதைப் போல, ஸ்ரீஹரியின்

அனைத்து அம்சங்களும் சர்வகுண பூர்ணத்வ, சர்வகர்த்ருத்வ உள்ளவை என்பதை மறக்கக்கூடாது.

ததா ச தத்தஸ்வாதந்த்ர்யேண ப்ரயத்னோபக்வத ஷாயாம் |
ஸ்வகதஸ்வாதந்த்ர்யேண பக்வாபக்வ தஷாயாம்
அனுகூல ப்ரதிகூலோபயனிஷ்பத்தி: ||
ஸர்வஸ்வாதந்த்ர்யேண பக்வதஷாயாம்
இஷ்டகார்ய ஸம்பாதனம் பவதி |
ப்ரத்யேகமேகைக ஸ்மின்னபி ஸ்வாதந்த்ரேபசுரா
ப்ரசுரதயா ஸ்வாதந்த்ர்ய த்ரயஸ்யாப்யவஸ்திதிரஸ்தி ||

ஆகிய ஜீவகர்த்ருத்வ விஷய வாக்கியங்கள், தக்க பிரமேயங்களை தொகுத்து கொடுக்கின்றன. விளக்கமாக சொல்லிக் கொண்டே போனால், இந்த விஷயத்தில் பல பிரமாணங்கள் கிடைக்கும்.

இவ்வாறு அனந்த ஜீவரில் அனந்தாம்ஷங்களால் பிரவேசித்து, ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலான கார்யங்களை நிர்வகிக்கும் ஸ்ரீஹரியின் அற்புத லீலை, அசிந்த்ய ஷக்தி ஞானங்களின் அபரிமித மகிமாத்யோதகமானது, சஜ்ஜனர்களில் பக்தியை வளர்த்து, அதனை திடப்படுத்துவதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு ஸ்வதந்த்ர்ய கர்த்ருத்வ என்பது கொஞ்சமும் ஜீவனில் இல்லை என்னும் மஹாமுக்ய பிரமேயத்தை ஸ்ரீதாஸார்யர் இந்த நுடியிலிருந்து தெளிவாக்குகிறார் என்று அறிய வேண்டும்.

ஹக^{3}லு இருளு ஸ்மரணெ ஒத^{3}கு^{3}திரெ ஜிஹ்வெயொளு
ப^{3}கெ^{3}யலின்னுண்டெ ஸாத^{4}னக^{3}ளு | ஸாத^{4}னக^{3}ளேதக்கெ
ஜக^{3}தொ^{3}ளகெ^{3} இன்னு அவரிகெ^{3} ||25-(241)

ஹகலு இருளு - இரவும் பகலும் (எப்போதும்). ஸ்மரணெயு – ஸ்ரீஹரிஸ்மரணை. ஜிஹ்வெயொளு - நாக்கினில் (நாமஸ்மரணை மூலமாக) ஒதகுதிரெ - கிடைக்க. பகெயலு - யோசித்தால். ஸாதனகளு இன்னுண்டெ - இன்னும் வேறு ஸாதனைகள்தான் அவசியமா? ஜகதொளகெ - உலகில். அவரிகெ – அத்தகையவர் களுக்கு. ஸாதனகளேதக்கெ - மற்ற ஸாதனைகள்தான் தேவையா? (தேவையில்லை).

இரவும் பகலும் நாம ஸங்கீர்த்தனை செய்வதானால், வர்ணாசிரம தர்மங்களின் அனுஷ்டாத்தை, ஷாஸ்திர ஸ்ரவண மனனாதி ஸாதனங்கள் அனாவசியங்கள் என்று இந்த நுடியின் அர்த்தத்தை புரிந்து கொள்ளக்கூடாது. அப்படி புரிந்து கொண்டால், அது தவறு மற்றும் ஶ்ரீதாஸார்யருக்கு எப்போதும் சம்மதமில்லை. நிரந்தரமாக பக்திபூர்வகமான ஹரிஸ்மரணையானது, பக்வ பக்தர்களுக்கு, அபரோக்ஷ ஞானிகளுக்கு மட்டுமே கிடைக்கிறது.

யதாக்ரஹக்ரஸ்த இவ க்வசித்தஸந்த்யாக்ரந்ததே
த்யாயதி வந்ததே ஜனம் |
முஹு:ஸ்வஸன்வக்தி ஹரே ஜகத்பதே
நாராயணேத்யாத்மகதிர் கதத்ரப: || (பாகவத)

என்று பக்வ பக்தனின் நிலைகள், செயல்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஶ்ரீஹரிஸ்மரணையினால் பரவசராகி (பிசாசு பிடித்தவர்களைப் போல) பக்வ பக்தன், சில சமயம் சிரிப்பான், கத்துவான், தியானத்தில் இருப்பான், கண்டவர்களை நமஸ்கரிப்பான், மூச்சு வாங்கியவாறு, தலைவனே, நாராயணா என்று சொல்லியவாறு, வெட்கத்தை விட்டு கத்தியவாறு, அனைத்து விதங்களிலும் பரமாத்மனையே வேண்டுவான். ஆகையால், பக்வ பக்தர் அல்லாத ஸாதன நிலையில் இருப்பவர்களுக்கு பிற ஸாதனைகள் தேவையில்லை என்னும் அர்த்தத்தை புரிந்து கொள்ளக்கூடாது.

அஹோபத ஷ்வபசோऽதோகரீயான் யஜ்ஜெஇஹ்வாக்ரே வர்த்ததே நாம துப்யம் (பாகவத) என்று, நாக்கு நுனியில் உன் நாமம் உள்ள அதம வர்ணத்தவன், நாம கீர்த்தனை இல்லாத உத்தம வர்ணத் தவனைவிட உத்தமன் என்றும் ‘தேபுஸ்தபஸ்தே ஜுஹுபு:ஸுரா த்யான் பிரம்மானொ ஜுர் நாமக்ருணந்தி யே தே’ (பாகவத) என்று, உன் நாமகீர்த்தனை உள்ளவன் அனைத்து தபஸ் யக்ஞுங்களை செய்தவன். அவரே வேதாத்யயனவந்தன் என்றும், இதே அர்த்தத்திலிருந்து சொல்லப்படுகிறது.

நிரந்தர ஹரிஸ்மரணை உள்ள ஞானிகளுக்கு மற்ற ஸாதனைகள் மோட்ச பிராப்திக்கு தேவையில்லை என்பதே சரி.

யேஷாம் ஞானம் ஸமுத்பன்னம் தேஷாம்
மோக்ஷோ வினிஸ்சித: |
ஷுபகர்மபிராதிக்யம் விபரீதைர் விபர்யய: || (பிரம்மதர்க)

என்று அபரோக்ஷ ஞானத்தை அடைந்தவர்களுக்கு மோட்சம் நிச்சயமே. எப்படி இருந்தாலும் சுப கர்மங்களின் அனுஷ்டானத் தினால் மோட்சத்தில் ஆனந்தாதிஷயமும், அஷுபாசரணையினால் ஆனந்தமும் உண்டு என்று சொல்லப்படுகிறது. 'விஹிதத்வாச்சா ஸ்ரமகர்மாபி' (பிரம்மஸூத்ர) என்று, வர்ணாசிரமத்திற்கேற்ப கர்மங்களை ஞானியும் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

அதீதானாகதஞானீ த்ரைலோகோத்தரணக்ஷம: |
ஏகாத்ருஷோ஽பி நாசாரம் ஷ்ரௌதம் ஸ்மார்த்தம் பரித்யஜேத் ||
(ஹரிவம்ஷ)

அதாவது, மூன்று உலகங்களை காக்கும் யோகசக்தி உள்ள த்ரிகால ஞானியும்கூட, ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் தனக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை விடக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி இருக்கையில், நிரந்தர நாம ஸங்கீர்த்தனை செய்பவனுக்கு ஸாதனைகள் எதற்கு என்னும் ஸ்ரீதாஸரின் நுடி, அபரோக்ஷ ஞானிக்கு மோட்சரூப பலப்ராப்திக்காக பிற ஸாதனங்கள் தேவை யில்லை என்னும் தாத்பர்யம் உள்ளது என்று தெளிவாகிறது. மனிதர்களோ கண்டிப்பாக அபரோக்ஷ ஞானத்திற்குப் பிறகும் கூட, விதிக்கப்பட்ட கர்மங்களை கண்டிப்பாக அனுஷ்டானம் செய்ய வேண்டும்.

'விதினியதா மனுஷ்யா: அனியதா தேவா: ப்ரம்மைவ ஸ்வேச்சா னியத:' (கௌபவன ஸ்ருதி) என்னும் ஸ்ருதி ஞானிகளையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து, மனிதர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை கண்டிப்பாக செய்ய வேண்டும் என்றும், தேவதைகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை, தங்களின் இஷ்டப்படி சிலவற்றை செய்ய வேண்டும், சிலவற்றை விட்டு விடலாம் என்றும், பிரம்மதேவன் மட்டும் தன் இஷ்டத்திற்கேற்ப செயல்களை செய்யலாம் என்றும் சொல்கிறது.

ஞானிகளுக்கு சொல்லப்பட்ட விஷயங்கள் எப்படி இருந்தாலும், பிரம்மாதி தேவதைகளும்கூட, லோகசிக்ஷார்த்தமாக விதிகளை தவறாமல் பின்பற்றுவர். 252ம் பத்யத்தின் டிப்பணியை இங்கு பார்க்க வேண்டும்.

நின்ன விஸ்ம்ருதி கொடு³வ புண்ய கர்மகளொல்லெ
நின்னனெ நெனெவ மஹபாப | மஹபாப கர்மக³ளு
ஜன்ம ஜன்மத³லி இரலய்ய ||26-(242)

நின்ன விஸ்ம்ருதி கொடுவ – உன்னை மறக்கச் செய்யும், புண்ய கர்மகளொல்லெ – (இஹபர செல்வங்களை பெற்றுத் தரும்) புண்ய கர்மங்களை, ஒல்லெ – எனக்கு தேவையில்லை. நின்னனெ – உன்னையே. நெனெவ – நினைத்து செய்யும் (உன் ஸ்வதந்த்ர கர்த்ருத்வத்தை நினைத்து செய்யும்). மஹபாபகர்மகளு – மஹா பாவங்கள் என்று சொல்லக்கூடிய கர்மங்கள். ஜன்மஜன்மதலி – அனைத்து பிறவிகளிலும், இரலய்ய – எனக்கு இருக்கட்டும். ஸ்வாமி.

ஸ்ரீஹரிஸ்மரணையுடன் செய்யும் கர்மமே புண்ணியம். விஸ்மரணையுடன் செய்வது பாப கர்மம். கர்ம ஸ்வரூபத்தை நிர்ணயிப்பது ஸ்மரணை – விஸ்மரணைகள்.

தர்மோபவத்ய தர்மோபி க்ருதோ பக்த்யைஸ்தவாச்யுத |
பாபம் பவதி தர்மோऽபி யோ ந பக்த்யை: க்ருதோ ஹரே ||
(ஸதாசாரஸ்ம்ருதி)

பக்தர்கள் (சர்வக்ருத்ருத்வாதி ஹரி மஹிமா ஞானம் கொண்டவர்கள்) செய்யும் அதர்மமும் தர்மமே ஆகின்றன. அபக்தர்கள் செய்யும் தர்மமும் பாப ஸாதனையே ஆகின்றன.

அஸ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் ச யத் |
அஸதித்யுச்யதே பார்த்த ந ச தத்ப்ரீத்ய நோ இஹ || (கீதை)

ஷ்ரத்தா ஷக்திகள் இல்லாமல் செய்யும் யக்ஞ தான தவம் மற்றும் இதன் சம்பந்தப்பட்ட கர்மங்கள் அனைத்தும், அஸத் கர்மங்கள் எனப்படுகின்றன. அவற்றால் இஹபரங்களில் எந்த சுகங்களும் இல்லை. துரியோதனாதி அபக்தர்கள் நானே கர்த்த –

ஈஷ்வர - யக்ஞம் செய்பவன் ஆகிய துஷ்ட அனுசந்தானத்துடன் செய்யும் யக்ஞ தானாதி (புறத்தில் அவை சத்கர்மங்கள் என்று உலகம் அறியும்) கர்மங்கள் அஸத்கர்மங்களே ஆகும். இந்திராதி தேவதைகளால் ஆகும் (பிராமணனான வ்ருத்ராசுர சம்ஹார ரூப பிரம்மஹத்யாதி) மஹாபாபங்கள் புண்யகர்மங்களே ஆகும். 'வ்ருத்ரம் ஹத்வா இந்த்ரோ மஹானஸ' (ஸ்ருதி) ஆகியவை இவற்றையே சொல்கின்றன.

கு³ணகாலகர்மக³ள மனெமாடி³ ஜீவரிகெ³
உணிஸுவெ நீனெ ஸுக²துக்க² | ஸுக²துக்க² மிஶ்ரப²ல
உணதெ³ சர்வத்ர பெ³ளகு³வி ||27-(243)

குணகால கர்மகள - ஸத்வரஜஸ் தமோ குணங்கள், கால மற்றும் கர்மங்களை, ஜீவருக்கு - சம்சாரி ஜீவர்களுக்கு. மனெமாடி - இருப்பிடமாக ஆக்கி (அவற்றில் வைத்து - அவற்றின் பந்தத்திற்கு சம்பந்தம் கொடுத்து) அல்லது குணகால கர்மகள மனெமாடி - குண கால கர்மங்களில் யஜமானனாக (நியாமகனாகி) நீ இருந்து, ஜீவரிகெ - சம்சாரிகளுக்கு, நீனே - நீயாகவே. சுகதுக்க – சுகதுக்க ங்களை. உணிஸுவி - அனுபவிக்குமாறு செய்வாய். ஸுகதுக்க மிஸ்ரபல - சுகதுக்கமான மிஸ்ர பலன்களை. உணதெ - நீ உண்ணாமல் (நிர்லிப்தனாக) சர்வத்ர - அனைத்து இடங்களிலும். பெளகுவி - நிலைத்திருப்பாய்.

உத்க்ராமந்தம் ஸ்திதம் பாபி புஞ்சானம் வா குணான்விதம் |
விமூடா நானுபஷ்யந்தி பஷ்யந்தி ஞானசக்ஷுஷ: || (கீதை)

ஜீவன் சரீரத்தை விட்டுப் போகும், அல்லது தேகத்தில் இருந்து மனம் முதலான இந்திரியங்களால் சுப விஷயங்களை போகிக்கும் ஈஷ்வரனை அஞ்ஞானிகள் காண மாட்டார்கள் - ஞான திருஷ்டி உள்ளவர்கள் காண்கிறார்கள்.

ஷுபம் பிபத்யஸௌ நித்யம் நாஷுபம் ஸ ஹரி: பிபேத்||(ஸ்ருதி)

ஸ்ரீஹரி சுகங்களை மட்டும் போகிக்கிறான். துக்கங்களை அல்ல. இவ்வாறு ஸ்ருதி ஸ்ம்ருதிகள், தேகத்தில் இருக்கும் ஸ்ரீஹரி, வெறும் சுகங்களையே போகிக்கிறான் என்று சொல்வதால், துக்க

மிஸ்ரமான சுகத்தை போகிப்பதில்லை என்று தெளிவாகிறது. இவ்வாறு ஷுபபோக்தன் ஆனாலும், கர்மபல போக நிமித்தமான எந்த மாற்றங்களும் இல்லாமல் ஒரேமாதிரியாக நிலைத்திருப்ப தால், ஜீவர்களின் சரீரங்களில் இருந்தாலும் போகங்கள் அனுபவிக்காதவன் என்று சொல்லப்படுகிறான். ‘அனஸ்னன்ன பேசாகஸீதி’ (த்வாஸுபர்ணா.. ஸ்ருதி) கர்ம பலன்களால் நிர்லிப்தனாகி போகங்கள் இல்லாமல் ஒளிர்கிறான் என்று ஸ்ருதி சொல்கிறது.

நினக^{3} ஸம்மதவாத^{3} அனிமிஷேஶன லோக
எனக்ஹத்தத^{3}ய்ய யது^{3}னாத^{2} | யது^{3}னாத^{2} நீனித்த
க^{4}ன நரக வெனகெ^{3} புருஷார்த்த^{2} ||28-(244)

நினகெ – உன் விருப்பத்திற்கு. அஸம்மதவாத – உனக்கு சம்மத மில்லாத. அனிமிஷேஷன லோக – ஸ்வர்க்க லோகம் (தேவேந்திரனின் உலகம்). எனகெ – எனக்கு. ஹத்ததய்ய – பிடிப்பதில்லை (மனதிற்கு ஒப்புவதில்லை). யதுநாத – ஹே கிருஷ்ண. நீனித்த – நீ கொடுக்கும். கனநரகவு – மஹா நரகம். எனகெ – எனக்கு. புருஷார்த்த – எனக்கு பிடித்தமானதாகும்.

நரகாதி துக்கங்களை பகவத் தத்தம் என்று அறிந்து புறக்கணிக்காமல் போகிப்பதே ஸ்ரீஹரி பூஜையாகும். ஆகையால், ஸ்ரீஹரி விசேஷமாக மகிழ்கிறான். அவனின் ஆணையை பின்பற்றிய திருப்தி, மன அமைதியையே அதிகப்படுத்துகிறது. ‘தவ ஸ்ம்ருதிஸ்சேத் நிரலோப்யஸ்து’ - உன் ஸ்ம்ருதி மட்டும் கிடைக்காவிடில் நரகாதிகள் (பசு முதலிய யோனிகள்)கூட வரட்டும்’ என்று சனகாதிகள் கூறுகின்றனர்.

யாவத்பரம பக்த்யைஸ்து புஜ்யதே துக்கமுல்பணம் |
தாவன்முக்தௌ ஸுகோத்ரேக: தத்ர சேத்பக்திவர்த்தனம் ||
(பிரம்மதர்க்க)

என்று, தீவிர துக்க அனுபவ காலத்தில்கூட பக்தி உருவாகும் மனோபாவம் கொண்டவர்கள், அதன் பலனாக முக்தியில் சுகத்தைப் பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறது. பக்தியில்லாமல் செய்யும் துக்க போகங்கள் முக்தியில் ஆனந்தாதிசயத்திற்கு காரணம்

ஆவதால், இந்த பத்யத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல, பகவந்தனிடம் வேண்டிக் கொள்வது சரியே ஆகிறது.

நீனில்லதா[3] ஸ்தா[2]ன ஈ நளினஜாண்ட[3]தொ[3]ளு
நானெல்லி காணெ நரசிம்ஹ | நரசிம்ஹ நரக ப[3]ன்
தே[3]னு மாடு[3]வுதோ எனகி[3]ன்னு ||29-(245)

நீனில்லத – நீ இல்லாத. ஆஸ்தான – பிரதேசத்தை. ஈ நளின ஜாண்டதொளு – இந்த பிரம்மாண்டத்தில். நானெல்லி காணெ – நான் எங்கும் காண மாட்டேன். நரஸிம்ஹ – ஹே லட்சுமி நரசிம்மனே. இன்னு – இந்த திட நம்பிக்கை இருப்பதற்கு, எனகெ – எனக்கு. நரக – நரகம். பந்தேனு மாடுவுதோ – வந்தால் என்ன செய்வது? (அதன் பய, துக்கங்கள் இல்லை).

தன் ரக்ஷகனான ஸ்வாமி, தன் உடனேயே அனைத்து இடங்களிலும் இருக்கிறான் என்னும் திட நம்பிக்கை கொண்ட பக்தனுக்கு, அவன் எங்கிருந்தாலும் நிர்பயமே சரி. பரமாத்மனோ அனைத்து இடங்களிலும் இருக்கிறான். 'நரகேபி வனன்னீஷோ நா ஸௌ துக்கபுகுச்யதே' நிர்லேபோ நிர்விகாரஸ்ச ஸதா ஸர்வத்ர ஸன்னபி' (சரஸ பாரதி விலாஸ). நரகத்தில் இருந்தாலும்கூட ஸ்ரீஹரி, அனைத்து இடங்களிலும் இருந்ததைப் போலவே, துக்க போகங்கள் இல்லாதவனாக, நிர்லிப்தனாக நிர்விகாரனாகவே இருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதமும்கூட இந்த பிரமேயங்களை, 'போத்வீப ஸரிதத்ரினப: ஸமுத்ர பாதாளதிஜ்வரக பாகணலோக ஸம்ஸ்தம் | கீதம் மயா...' ஆகிய பாகங்களில் நிரூபிக்கிறது.

த்[3]ருஹிண பித நின்னவர ஸஹவாஸ நின்னனு
க்[3]ரஹவெந்து[3] திளிவெ அனுகா[3]ல | அனுகா[3]ல ஸுக[2]வீவ
மஹதா[3]தி[3]லோக நானொல்லெ ||30-(246)

த்ருஹிணபித – ஹே பிரம்ம ஜனகனே. நின்னவர – உன் பக்தர்களின். ஸஹவாஸ – ஸகவாசம் (சங்கம்). நின்ன, அனுக்ரஹவெந்து – உன் அருள் என்று, திளிவெ – அறிவேன். அனுகால – எப்போதும். ஸுகவீவ – சுகத்தைக் கொடுக்கும்.

மஹராதிலோக – மஹர் லோக முதலான லோகங்கள். நானொலெ – எனக்கு வேண்டாம்.

14 உலகங்களின் விவரணைக்கு 68ம் பத்யத்தை பார்க்கலாம். மஹ, ஜன, தப, ஸத்ய நாமக லோகங்கள், தேவதைகள், ஸித்தர் மற்றும் மற்ற ஜீவன் முக்தர்கள் மஹாப்ரளயம் வரைக்கும் வசிக்கும் உலகங்கள். நிரந்தர பகவத் த்யானாதிகளால் சுகிக்கும் பிரஜைகள் உள்ள அந்த உலகங்களை அடையும் விருப்பம் இருக்க வேண்டிய தில்லை என்கிறார்கள். ஏனெனில், அந்த வகையான ஆனந்தம், பகவத் பக்தரின் சகவாசத்தினால் இங்கேயே கிடைக்கையில், அந்த உலகங்களே வேண்டும் என்னும் இச்சைக்கு காரணம் எதுவும் இல்லை. விஷ்ணு பக்தரின் சகவாசம் மிகவும் மரியாதையுடன் பிரார்த்திக்கப்பட வேண்டும் என்பதை, பக்த குசேலனின் மனோபாவத்தினால் அறியலாம்.

தஸ்யைவ மே ஸௌஹ்ருத ஸக்யமைத்ரீ
தாஸ்யம் புனர்ஜன்மனி ஜன்மனி ஸ்யாத் |
மஹானுபாவேன குணாலயேன விஷஜ்ஜதஸ்தத்
புருஷ ப்ரஸங்க: || (பாகவத)

ஒவ்வொரு பிறவியிலும் ஶ்ரீகிருஷ்ணனே எனக்கு நண்பன், நலனை வேண்டுபவன் ஆகட்டும். அவனின் தாஸ்யமே எனக்கு நிரந்தர மாகட்டும். மகானுபாவனான அந்த குணநிதியின் பக்தர்களின் சகவாசமே எனக்கு எப்போதும் கிடைக்கட்டும் என்று குசேலன் மனதில் பிரார்த்திக்கிறான்.

எனகெ[3] தா[3]தனு நீனு நினகெ[3] தூ[3]தனு நானு
இனிதித்த[3] ப[3]ளிக அத[4]மர | அத[4]ம மானவரன்னு
அனுஸரிஸல்யாகோ நானின்னு ||31-(247)

எனகெ – எனக்கு. தாதனு – அனைத்தையும் கொடுப்பவன். நீனு – நீயே. நான், நினகெ தூதனு – உன் சேவகன். இனிதித்த பளிக – இந்த ஸ்வாமி-தாஸ ரூப என்னும் நிஸ்சய ஞானம் இருந்தபிறகு, அதமர – அதிஷ்டானத்தினால் அதமரானவர்களை. அதம மானவரன்னு – ஸ்வரூபகுணத்தினால் அதமர்களை, இன்னு –

திரும்ப, யாகோ அனுஸரிஸலி – (அவரின்) மனதை கவர்வதற்கு ஏன் முயற்சிக்க வேண்டும்? (காரணமே இல்லை).

அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும் வரதேஷ்வரன், ஸ்ரீஹரி. பிறர் யாரும் ஸ்வதந்த்ரமாக, ஸ்ரீஹரியின் பிரேரணை இல்லாமல் எதையும் கொடுப்பதில்லை. கொடுப்பதற்கும் அவருடையது என்பதற்கு எந்த பொருளும் இல்லை. ஸாதகர்கள் தம்மைவிட உத்தமரில் (உத்தம அதிஷ்டானத்தில் இருக்கும் அந்தர்யாமி ஸ்ரீஹரியிடமிருந்து) விரும்புவதை வேண்டுவது தவறில்லை. ஆனால், குணங்கள் அற்றவர்களில் (நீச அதிஷ்டானத்தில்) அதனை செய்யக்கூடாது. மனுஷ்ய அதமர்கள் தமோ யோக்யர்கள். அவரைப் பற்றி நினைப்பது எப்போதும் சரியல்ல. அபரோக்ஷிகள் (ஞானிகள்) ஸ்ரீஹரியிடம்கூட, அவனின் மகிழ்ச்சி / அருளைத் தவிர வேறு எதையும் பிரார்த்திப்பதில்லை. அவனின் சேவையே அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அதுவே அவர்களுக்கு புருஷார்த்தம்.

பூஜ்ய பூஜக நீனு பூஜோபகரணஸ்த[2]
மூஜகத்பதியெ நீனாகி[3] | நீனாகி[3] ப[4]குதரிகெ[3]
நைஜஸுக[2] வ்யக்தி கொடு[3]திர்ப்பெ ||32-(248)

பூஜ்ய பூஜக – பூஜிக்கப்படுபவனும் பூஜை செய்பவனும். பூஜோப கரணஸ்த – பூஜைப் பொருட்களில் இருப்பனும், நீனு – நீயே. மூஜகத்பதியெ – மூன்று உலகங்களில் தலைவனே. நீனாகி – நீ. பக்தரிகெ – உன் பக்தர்களுக்கு. நீனாகி – உன் விருப்பத்தினா லேயே. நைஜஸுகவ்யக்தி – ஸ்வரூபானந்தத்தின் ஆவிர் பாகத்தை (மோட்சத்தை). கொடுதிர்ப்பெ – அருள்வாய்.

ஸ்ரீஹரியே விருப்பப்பட்டு, மோட்சத்தை கொடுக்க வேண்டுமே தவிர, வேறு எந்த ஸாதனைகளும் ஸ்வயம் மோட்சத்தைக் கொடுப்பவையல்ல. 'யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய:' என்னும் ஸ்ருதி இந்த விஷயத்தில் ஆதாரமாக இருக்கிறது. இதிலிருந்தே ஸ்ரீதாஸார்யர் 'நீனாகி கொடுதிர்ப்பெ' என்றிருக்கிறார்.

ப்ரக்ரமவத்ஸ்யத் க்ருதம் புருஷேஷு தீஷு பஹிரந்தர ஸச்சரணே|
தவ புருஷ வதந்த்யகில ஷக்தித்ருத: ஸ்வக்ருதம்

-- பாகவத ஸ்ருதிகீதா

சர்வ ஜீவர்களின் உள்ளே வெளியே நீ இருந்து, தாரதம்யத்திற்கேற்ப ஸத்கர்ம துஷ்கர்மங்கள் அனைத்தையும் நீயே செய்கிறாய். சர்வ ஷக்தனான நீ, அனைத்து இடங்களிலும் நிலைத்திருந்து உன் பூஜையை நீயே செய்து கொள்கிறாய். ஞானிகள் இவ்வாறு சொல்கிறார்கள். குரு, தேவாதி பூஜ்யர்களிலும், சிஷ்ய, அர்ச்சகாதி பூஜகர்களிலும் அந்தர்யாமியாக இருப்பதால் ஸ்ரீஹரியே பூஜ்யபூஜகன்.

அப்படியே, 'பாத்யபாதகதாம் கத:' பாத்ய பாதகர்களிலும் இருக்கிறான். பாத்யரில் (பாதிக்கப்படுபவர்களில் பாத்யத்வ தர்மத்திற்கே நியாமகன். துக்கிகளில் துக்கத்வ தர்மத்திற்கு நியாமகன் – தானே துக்கியல்ல. ஸர்வதோஷதூரனாக ஆனதால், இந்த பிரமேயங்களையே

ஸ்வயம் ஸர்வத்ர ஸம்ஸ்த:ஸன் ஸ்வபூஜாம் விததாதி ச |
ஸர்வகர்மாணி குருதே ஸார்வத்ராஸக்த ஏவ ஸன் ||
(ஸரஸ பாரதி விலாஸ) என்று தொகுத்திருக்கிறார்.

ஸன்னிதா³னவு நின்னதெ³ன்னல்லி இரலாகி³
மன்னிஸூத்திஹரு ஜனரெல்ல | ஜனரெல்ல நின்ன கா
ருண்ய காரணவோ கமலாக்ஷ ||33-(249)

கமலாக்ஷ – ஹே தாமரைக் கண்ணனே. என்னல்லி – என்னிடம். நின்னது – உன். ஸன்னிதானவு இரலாகி – சன்னிதானம் இருப்பதால். ஜனரெல்ல – அனைத்து மக்களும். மன்னிஸூத்தி ஹரு – (என்னை) கௌரவிக்கின்றனர். உன் காருண்ய – உன் கருணையே. காரணவோ – இந்த மக்களின் மரியாதைக்கு இது ஒன்றே காரணம் ஆகும்.

அனைத்து இடங்களிலும் வியாப்தனான ஸ்ரீஹரி அனைத்து இடங்களிலும் இருக்கிறான். அனைவரும் மக்களின் மரியாதையைப் பெறுபவர் அல்ல. சாமான்ய 'இருப்பு' சன்னிதானம் அல்ல. கௌரவத்திற்கு பாத்திரம் ஆவதற்குத் தேவையான குண பிரகாஷன ரூபத்தின் அருள் பெறுவது சன்னிதானம் எனப்படுகிறது.

இவ்வாறு ஜீவனை அருள்வதற்கு அவனின் கருணையே காரணம். ஜீவரின் தகுதி மற்றும் ஸாதனங்கள் சாட்சாத் ஸாதனங்கள் அல்ல.

ஏஸு ப³கெ³யாதரு நீ ஸலஹுபே³கென்ன
வாஸவ வந்த்³ய வரதே³ஶ | வரதே³ஶ நின்னவர
தாஸ நானெந்து³ த்³யதி³ந்த³ ||34-(250)

வரதேஷ - வர தானம் கொடுப்பதில் சிறந்த அல்லது வரங்களைக் கொடுப்பவர்களில் அந்தர்யாமியான, வாஸவ வந்த்ய - தேவ ஸ்ரேஷ்டன் என்று அழைக்கப்படும் தேவேந்திரனுக்கும் பூஜ்யனான தேவோத்தமனே. நான். நின்னவர - உன் தாஸரின், பக்தர்களின், தாஸனெந்து - தாஸன் என்று (சேவகன் என்னும் காரணத் தினால்). என்னன்னு - என்னை. ஏஸு பகெயாதரு - தந்தை, தாய், உறவினர், நண்பன் ஆகியோரைப் போல எவ்வளவு வகையாக இருந்தாலும், ஸலஹுபேகு - காப்பாற்ற வேண்டும்.

ஒரு தந்தையாக, தாயாக, உறவினனாக, நண்பனாக என பல்வேறு விதங்களாக ஸ்ரீஹரியை சிந்தித்து, உபாசனை செய்தால், அந்த அனைத்தினாலும் ஆகும் அனைத்து வித உபகாரங்களால் நம்மை காப்பாற்றுகிறான் என்று சொல்லப்படுகிறது.

ஞானக³ம்யனே கேளு நீ நரியத³பராத⁴
நானொம்மெ மாடெ³ நளினாக்ஷ | நளினாக்ஷ காயோ கொ
ல்லோ நன்ன மாடோ³ ஶரணன்ன ||35-(251)

ஞானகம்யனே - ஞானத்தால் மட்டுமே கிடைக்கக்கூடிய ஸ்ரீஹரியே. கேளு - என் வேண்டுகோளினைக் கேள். நீனு அரியத - உனக்குத் தெரியாத. அபராத - தவறுகளை. மாடெ - நான் செய்வதற்கு சாத்தியமில்லை. நளினாக்ஷ - ஹே தாமரைக் கண்ணனே. ஷரணன்ன - உன்னையே சரணடைந்த இந்த பக்தனை. காயோ - காப்பாற்று. கொல்லு - அல்லது கொன்றுவிடு. ஏனன்னு - எதையாவது. மாடோ - செய் (எதையும் செய்வதற்கு நீ ஸ்வதந்த்ரனாக இருக்கிறாய்).

அனைத்தையும் செய்விப்பவன் ஸ்ரீஹரியே. சர்வசாக்ஷி. சர்வ கர்த்தன். சர்வக்ஞன். ஸ்வதந்த்ரனுமான அவனுக்குத் தெரியாத எந்தவொரு தவறுகளை யாரும் என்றும் செய்துவிட முடியாது.

ஸ்ரீஹரி ஞானத்தால் மட்டுமே அறியப்பட முடிபவன். 'ஞானேனைவ அம்ருதீபவதி' ஆகிய ஸ்ருதி ஸ்ம்ருதிகள் இதையே சொல்கின்றன. ஞான என்றால், ஸ்வாதந்த்ர்யாதி குணங்களால் ஸ்ரீஹரியே சர்வோத்தமன் என்னும் மஹிமா ஞானம். இதனால் பிறக்கும் நட்பே பக்தி. பக்தியினாலேயே மோட்சத்திற்கு ஸாதனமான ஸ்ரீஹரி பிரஸாதம். ஞானத்தினாலேயே மோட்ச என்றும், பக்தியினாலேயே முக்தி என்றும் சொல்லும் வாக்கியங்களில் பரஸ்பரம் விரோதம் இல்லை. ஏனெனில், பக்தியும் ஞானம் என்றே அழைக்கப்படுகிறது. பக்தியின் ஞானமும் சேர்ந்து கொண்டிருக்கிறது.

ஞானஸ்ய பக்திபாகத்வாத் பக்திர் ஞானமிதீர்யதே – (அனுவியாக்யான) மற்றும்
மாஹாத்ம்ய ஞானபூர்வஸ்து ஸுத்ருட: ஸர்வதோऽதிக: |
ஸ்னேஹோ பக்திரிதி ப்ரோக்த: தயா முக்திர் நசான்யதா |(பாஷ்ய)

விதி[4] நிஷேத[4]க[3]ளெம்பு[3]த[3] த[4]மாதி[4]காரிக[3]
ல்லதெ[3] நின்ன நாம ஸர்வத்ர | ஸர்வத்ர சிந்திப
பு[3]த[4]ரிகி[3]ன்னுண்டெ ஜக[3]தொ[3]ளு ||36-(252)

விதி நிஷேதகளெம்புது – விதியை பின்பற்ற வேண்டும், நிஷித்தங் களை விலக்க வேண்டும் என்னும் நியமம். அதமாதிகாரிகெ – முக்தி யோக்யரில் கீழாக இருப்பவர்களுக்கு மட்டும். அல்லதெ – அல்லாமல். நின்ன நாம – உன் நாமங்களை (நாம ப்ரதிபாத்ய மகிமைகளை) சர்வத்ர – அனைத்து தேஷ, கால, நிலைகளிலும். சிந்திப – நினைக்கும். புதரிகெ – தேவாதி உத்தமாதிகாரிகளுக்கு / ஞானிகளுக்கு. ஜகதொளு – உலகத்தில் (அனைத்து இடங்களிலும்). இன்னுண்டெ – (நிதி நிஷேதங்களின் நிர்ப்பந்தம்) இருக்கிறதா? (இல்லை).

விதி நிஷேதங்கள் ஸ்ரீஹரியின் ஆணை ரூபமாக இருக்கின்றன. 'ஸ்ருதிஸ்ம்ருதீ ஹரேராக்ஞே'. ஸ்ரீஹரியின் ஆணையை

அனைவரும் பின்பற்றியே ஆகவேண்டும் என்பது கட்டாயம். மோட்ச ஸாதனையில் இருப்பவர்கள் (அனபரோக்ஷிகள்), விதி நிஷேதங்களை மீறி நடப்பது மிகவும் தவறு. தலைவனின் ஆணையை புறக்கணிப்பது சேவகர்களுக்கு சரியல்ல. அது மட்டுமல்ல, அது தண்டனைக்குறிய தவறும் ஆகும்.

அபரோக்ஷ ஞானிகள் ஆனாலும், விதி நிஷேதங்களுக்கு கட்டுப் பட்டவர்கள் அல்லர் என்பது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டி ருக்கிறது. அபரோக்ஷ ஞானம் ஆனபிறகு பிராரப்த கர்மபோகத் திற்காக ப்ராக்ருத தேகத்தில் இருக்கும்போது செய்யும் கர்மங்கள், சம்சாரத்திற்கு காரணமான (பிராரப்த போகத்திற்குப் பிறகு, திரும்ப பிறப்பு இறப்பு ஆகியவற்றிற்கு காரணமாகும்) புண்ய பாவங்களை உருவாக்குவதில்லை. விதி நிஷேத ரூபத்தின் நியமங்களால் கட்டுப்படாதவர்கள் என்பதன் அர்த்தம் இது மட்டுமே. தன்னிஷ்டப்படி நடப்பவர்கள் என்னும் அர்த்தம் கிடையாது. இங்கு 241ம் பத்யத்தின் விசேஷ அர்த்தங்களை படிக்கலாம்.

அறிஞர்களுக்கு விதி நிஷேதங்கள் இல்லை என்று சொல்லியிருப்பது, ஸ்ரீஹரியின் அபரோக்ஷ தரிசனம் இல்லாத சாமான்ய ஞானிகளுக்கு (பரோக்ஷ – சாஸ்திரத்தினால் வந்த ஞானம் உள்ளவர்களுக்கு) இல்லை. 'புத' என்றால், அபரோக்ஷத்தைப் பெற்ற தேவாதி உத்தமாதிகாரிகளை குறிப்பதாகும். மனுஷ்யாதி அதமாதிகாரிகள் – அபரோக்ஷிகள் மற்றும் அனபரோக்ஷிகள் – இந்த இருவருக்கும் பொருந்துகிறது என்று அறிய வேண்டும்.

தேவதைகள் விதிகளால் 'அனியத' என்றால், தங்களுக்கு வகுக்கப்பட்ட கர்மங்களின் நடுவில், தம் இஷ்டப்படி நடக்கலாம் என்னும் அர்த்தமே தவிர, தடை செய்யப்பட்ட செயல்களை செய்யலாம் என்று அர்த்தம் அல்ல. பிரம்மதேவன் ஸ்வேச்ச–நியதன் என்றால், தன் இஷ்டப்படி நடப்பதற்கு அதிகாரம் உள்ளவன் என்று அர்த்தம். அவனுகு தடை செய்யப்பட்ட செயல்களில் என்றும் விருப்பம் இல்லை. அவனின் விருப்பமே விதி – அது அனைத்து காலங்களிலும் பகவத் ஆணைப்படியே இருக்கிறது.

விதீனாம் விஷயாஸ்த்வன்யே பிரம்மண:ஸ்வேச்சயா க்ருதௌ |
பரஸ்ய பிரம்மணோஹ்யேவ ஸர்வவித்யதிதூரதா || (பிரம்மதர்க்க)

பிரம்மன் தன் இஷ்டப்படி நடக்கும் அதிகாரம் உள்ளவன். பர பிரம்மன் ஒருவனே எந்த விதிகளுக்கும் கட்டுப்படாதவன். அவற்றின் சம்பந்தமே இல்லாதவன். மற்ற அனைவரும் விதி வசமே. விதிகளால் கட்டுப்பட்டவர்களே.

ஶ்ரீஹரி ஸ்மரணை, விஸ்மரணைகளே, விதி நிஷேதங்கள் ஆகும். நிரந்தர ஹரிஸ்மரணை உள்ளவர்கள், ஹரிஸ்மரணையுடனேயே தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை செய்வதால் (ஶ்ரீஹரி தானே செய்து செய்விக்கும் ஸ்வதந்த்ர கர்த்தன் என்னும் ஸ்மரணையுடன் செய்வதால்) அபரோக்ஷ ஞானம் ஆவதற்கு முன்னர் (படிக்கும் / ஆராய்ச்சி சமயத்தில்) கூட, கர்ம பந்தத்திற்கு கட்டுப்படுவதில்லை. நிர்லிப்தராக இருக்கின்றனர். ஆகையால், எப்போதும் ஹரிஸ்மரணையில் இருந்துகொண்டு, விதிக்கப்பட்ட கர்மங்களை விட்டாலும், செய்யத்தகாத செயல்களை செய்தாலும், அது தவறு இல்லை என்பது ஶ்ரீதாஸார்யரின் அபிப்பிராயம் இல்லை.

ஜலதொ^{3}ளகெ^{3} மிந்து^{3} நிர்மலராதெ^{3}வெந்து^{3} த
ம்மொளு தாவெ ஹிக்கி^{3} ஸுகி^{2}ஸோரு | ஸுகி^{2}ஸோரு பரம மங்
க^{3}ள மூர்த்தி நின்ன திளியதெ^{3} ||37-(253)

ஜலதொளகெ – தண்ணீரில். மிந்து – ஸ்னானம் செய்து. நிர்மலராதெவு – சுத்தம் ஆகிவிட்டோம். எந்து – என்று. தம்மொளு தாவே – தமக்குத் தாமே. ஹிக்கி – பெருமையடைந்து. பரம மங்களமூர்த்தி – பவித்ர ஸ்வரூபமான. நின்ன – உன்னை. நெனெயதெ – நினைக்காமல் (பலர் ஸ்னான காலத்தில் தீர்த்தாபிமானி தேவதைகளில் இருந்து பவித்ரம் செய்விப்பவன் நீயே என்று நினைக்காமல்), ஸுகிஸோரு – மகிழ்வார்கள்.

ஜட^{3}பூ^{4}தஜல ஜனர மடி^{3}மாட^{3}லாப^{1}வெ
ஜட^{3}தி^{4}மந்தி^{3}ரன ஶுப^{4} நாம | ஶுப^{4} நாம மை
லிகெ^{3}ய பி^{3}டி^{3}ஸி மங்க^{3}ளவ கொட^{3}தே^{3}னோ ||38-(254)

ஜடபூதஜல - அசேதனங்களான நத்யாதி தண்ணீர். ஜனர - ஸ்னானம் செய்யும் மக்களை. மடிமாடலாபவெ - சுத்தம் செய்கிறதா? (அந்தஸ்ஷுத்தியை கொடுப்பதற்கு முடியாது). ஜடதி மந்திரன - பாற்கடலில் படுத்திருக்கும் ஸ்ரீஹரியின் (பாற்கடலில் நடுவில் இருக்கும் ஷ்வேதத்வீப வாசியான ஸ்ரீஹரி). ஷுபநாம - மங்கள நாமமே. மைலிகெய - மலத்தை (மனதின் ராக-த்வேஷ ரூப மலத்தினை). பிடிஸி - பரிகரித்து. மங்களவ - நன்மைகளை. கொடதேனோ - கொடுப்பதில்லையா? (விழுப்பினை பரிகரிப்பது வெறும் ஜடமான தண்ணீர் அல்ல என்பது பொருள்).

ஓடி^{3}ஹோகு^{3}வ மடி^{3}ய மாடி^{3} த^{3}ணியலு பே^{3}ட^3
நோடு^{3} சர்வத்ர ஹரிரூப | ஹரிரூப நோடி^{3} கொண்
டா^{3}டி^{3} நலிதா^{3}டோ^{3} மனவுப்பி^{3} ||39-(255)

ஓடிஹோகுவ - அடுத்த நொடி அழியப்போகும். மடிய மாடி – வெளிப்புற சுத்தியை செய்து கொண்டு. தணியலுபேட - சிரமம் பட வேண்டாம். சர்வத்ர - அனைத்து இடங்களிலும். ஹரிரூப - ஸ்ரீஹரி சான்னித்யத்தை. நோடு - அறி. நோடி - அப்படி அறிந்து. கொண்டாடி - அவனின் மகிமைகளை வணங்கி. மனவுப்பி - உற்சாகத்துடன். ஸுகியாகோ - மகிழ்ச்சி அடைவாயாக.

மீனு மொஸளெக^{3}ள தப்பேனோ ஜலதொ^{3}ளகி^{3}ஹவு
ஸ்னான ப^{2}லவ்யாகெ ப^{3}ரலில்ல | ப^{3}ரலில்ல ஜல சர
ப்ராணிகி^{3}ன்னக்ஞரிகெ^{3} கொரதேனோ ||40-(256)

மீனு மொஸளெகள - மீன், முதலை முதலான தண்ணீரில் வாழும் பிராணிகளின். தப்பேனோ - தவறுதான் என்ன?. ஜலதொளகிஹவு - அவை கங்கா நதி தண்ணீரிலேயே எப்போதும் இருக்கின்றனவே. ஸ்னானபலவு - ஸ்னானத்தினால் கிடைக்க வேண்டிய பலன். யாகெ பரலில்ல - அவற்றிக்கு ஏன் வரவில்லை. ஜலசரப்ராணிகெ - தண்ணீரில் வசிக்கும் பிராணிகளுக்கு. அக்ஞரிகெ - அஞ்ஞானி மனிதனுக்கும். இன்னு கொரதெ ஏனோ - வேறுபாடு என்னதான் இருக்கிறது? (இரண்டும் சமானமே ஆகும்). ஸ்னானத்தின் முக்கிய பலன் அந்த:ஷுத்தி. தேக சுத்தி மட்டுமே ஆனால், அஞ்ஞானி மானவனுக்கும் தண்ணீரில் வசிக்கும் பிராணிகளுக்கும் வேறுபாடுகளே இல்லை என்று ஆகிறது.

253-256 பத்யங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்னான விஷயங்களைப் பற்றிய முக்கிய அம்சங்கள்.

நஹ்யம்மயானி தீர்த்தானி.. (பாகவத) – தீர்த்தங்கள் வெறும் ஜட ஜல ஸ்வரூபங்கள் அல்ல. அவை அபிமானி தேவதைகள். ‘ஸ்வாந்தஸ்தேன கதாப்ருதா’ - தம் அந்தர்யாமியான கதாதரனின் (ஸ்ரீஹரியின்) சக்தியினாலேயே பவித்ரம் ஆகுவர். ‘யஸ்தீர்த்த புத்தி: ஸலிலே.. ஸ ஏவ கோகர:’ - யார் தண்ணீரையே தீர்த்த என்று அறிகிறானோ, அவனே கோகரன் (சேற்றில் புரளும் கழுதை). இவ்வாறு சொல்லும் பல பாகவத வாக்கியங்கள், நதி முதலான தீர்த்தங்களால் கிடைக்கும் பவித்ரமானது, ஸ்ரீஹரியிடமிருந்தே என்று நிரூபிக்கின்றன.

ஜல ஸ்னானம் தேகத்தின் அழுக்கினை மட்டும் பரிகரிக்கிறது. புற சுத்தியால் தற்காலிகமான ஒரு விதமான மகிழ்ச்சி உண்டாகிறது என்பது அனுபவ வாக்கியம். ஆனால், ஸ்ரீஹரி சிந்தனையில் ஈடுபடத் தேவையான மன ஸுத்தி, ஸ்னான காலத்தில் செய்யும் மாஹாத்ம ஞான பூர்வகமான ஸ்ரீஹரி நாம கீர்த்தனை, ஸ்மரணைகளாலேயே கிடைக்கிறது. விதிக்கப்பட்ட கர்மானுஷ்டான ரூபத்தின் பகவத் ஆணையை பின்பற்றுவதற்கு வெளிப்புற சுத்தி அவசியம். ஜல ஸ்னானாதிகள் இல்லாமல் எந்தவொரு கர்மங்களையும் செய்வதற்கு சாத்தியம் இல்லை. ஆகையால், ஹரி ஸ்மரணையை செய்து, ஜல ஸ்னானாதிகளின் நியமங்களை விட்டு விடலாம் என்பதே ஸ்ரீதாஸார்யரின் அபிப்பிராயம் என்று நினைப்பது தவறு. ஸ்ரீஹரித்யானத்துடனேயே ஜல ஸ்னானாதிகளை செய்ய வேண்டும் என்பதே அவரின் அபிப்பிராயம்.

ஹரிஸ்மரணையுடன் செய்ய வேண்டும் என்னும் இந்த நியமம் ஸ்னான கர்மத்திற்கு மட்டும் பொருந்துவதில்லை. தவம், தீர்த்த, ஜப, தான, முதலான மற்ற அனைத்து கர்மங்களுக்கும் இதுவே பொருந்துகிறது. இந்த எந்த ஸாதனங்களும் ஸ்ரீஹரியே பாவன–பிரதன் என்னும் ஞானம் இல்லையென்றால், மோட்ச ஸாதகமான அந்த:ஷுத்தியை கொடுப்பதில்லை. இந்த விஷயம் பாகவதத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

தபஸ்தீர்த்தம் ஜபோ தானம் பவித்ராணீதராணி ச |

நாலு குர்வந்தி தாம் ஷுத்திம் யா ஞானகலயா க்ருதா ||

மனவெ ஆலோசிஸிகொ நினகி3த்த3 சிந்தெ ந
ம்ம நிருத்த3கி3ல்லெ அனுகா3ல | அனுகா3ல ஸலஹுவ
பி3னுகு3 மானவர பி3டு3 கண்ட்3ய ||41-(257)

மனவெ - ஹே மனமே. ஆலோசிஸிகோ - நீயே சிந்தித்துக் கொள். நினகித்த - உனக்கு இருக்கும். சிந்தெ - அனைத்து விதங்களால் எப்படி காப்பாற்றப்படுகிறேன் என்னும் கவலை. அனுகால - எப்போதும். ஸலஹுவ - காப்பாற்றும். நம்ம - நம் அனைவரின் ஸ்வாமியான. அனிருத்தகெ - அனிருத்த ரூபி ஸ்ரீஹரிக்கு. இல்லெ - இருப்பதில்லையா? (எந்த காலத்தில் எந்த ஜீவனை எப்படி காப்பாற்ற வேண்டும் என்பதை சர்வக்ஞனான அனிருத்தன் எப்போதும் தெரிந்தே வைத்திருக்கிறான்). பினகு மானவர - கர்வம் கொண்டுள்ள மானவர்களின் (ஸ்வதந்த்ர கர்த்த என்பதை மறந்த) மனிதர்களை. பிடு - வணங்குவதை நிறுத்து. கண்ட்ய - புரிந்ததா?

அனிருத்தன் நம்மைப் போல ஜீவ ரக்ஷணையின் விஷயத்தை சிந்திக்கிறான் என்று நினைக்கக்கூடாது. ஏனெனில், அனைத்து காலத்தின் அனைத்து விஷயங்களும் எப்போதும் (நிகழ் காலத்தின் விஷயங்களைப் போலவே) தெளிவாக ஸ்ரீஹரியின் ஞானாகாஷத்தில் இருக்கிறது.

ப4ண்ட3 மனவெ கேளு கண்ட3கண்ட3வரிகெ3
அண்ட3லெத3ரேனோ புருஷார்த்த2 | புருஷார்த்த2 ஸ்வாமிபத3
புண்ட3ரீகவனெ நெரெனம்பு3 ||42-(258)

பண்டமனவெ - வெட்கம் கெட்ட மனமே. கேளு - என் பேச்சினைக் கேள். கண்டகண்டவரிகெ - கண்டவர்களை. அண்டலெதரெ - உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு, முதுகு வளைந்து வணங்கினால். புருஷார்த்த ஏனோ - பலன் என்ன? எந்த பலனும் இல்லை. அவர்கள் எதையும் கொடுப்பதில்லை. ஸ்வாமி பத புண்டரீகவனெ - ஸ்ரீஹரியின் பாத பத்மங்களையே. நெரெனம்பு - அனைத்து காலங்களிலும் நம்பு. அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுபவன் அவனே.

மனம் வெட்கம் கெட்டது. பிறரிடமிருந்து தன் விருப்பங்கள் எவ்வளவு முறை நிறைவேறாவிட்டாலும், திரும்பத்திரும்ப அவரையே வேண்டிக் கொள்ளும் தன்மை கொண்டது. யாசகன், ஒரு கருமியிடம் திரும்பத்திரும்ப வேண்டியதைப் போல. விஷய போகங்களால் திருப்தி கிடைக்கிறது என்னும் அனுபவம் இருந்தாலும் திரும்பத்திரும்ப விஷயங்களிலேயே போகிறது.

அஷன வஸனக³ளீவ வஸுதே³வ ஸுதனிரலு
ஹுஸியாகி³ பது³கோ நரரிகெ³ | நரரிகா³ல்பரித³ரெ
ஹஸிவெயட³கு³வுதே³ எலெ ஜீவ ||43-(259)

எலெ ஜீவ – ஹே ஜீவாத்மனே. அஷனவஸனகள – பிற துணி ஆகியவற்றினை (விரும்பிய அனைத்தையும்) ஈவ – கொடுக்கும். வஸுதேவ ஸுதனு – ஸ்ரீகிருஷ்ணன். இரலு – இருக்கையில். ஹுஸியாகி பதுகோ – வீணான வாழ்க்கை உள்ள. நரரிகெ – மனிதர்களுக்கு. அல்பரிதரெ – கருணை பிறக்கட்டும் என்று பல் வேறு விதமாக சொல்லிக் கொண்டால். ஹஸிவெயு – உன் ஆசைகள். அடகுவுதே – நிறைவேறுமா? (பசி அடங்கி திருப்தி கிடைக்குமா?). எப்போதும் கிடையாது.

ஸ்ரீஹரியே சர்வாபீஷ்டங்களை கொடுக்கிறான் என்பது அனைத்து பக்தர்களின் த்ருட நம்பிக்கையாகும். பக்த அக்ரூரர்,

கம் பண்டிதஸ்த்வதபரம் ஷரணம் ஸமீயாத்
பக்தப்ரியாத்ருதகிர: ஸுஹ்ருத: க்ருதஞாத் |
ஸர்வான் ததாதி ஸுஹ்ருதோ பஜதோऽபி காமான்
ஆத்மானமப்யுவாசயாபசயௌன யஸ்ய ||

தன் பக்தர்களுக்கு அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்று கிறான். வளர்ச்சி, குறைவு இல்லாத (நிர்விகாரமான – எப்போதும் ஒரே மாதிரியான) தன்னையே கொடுக்கும் அனிமித்த பந்துவாக இருப்பவன். பக்தர்களின் ஸ்துதிகளுக்கு மகிழும் கருணைக்கடலாக இருக்கிறான். பக்தர்களின் விருப்பங்களை அறிந்து பலன்களைக் கொடுப்பவன். (அவர்களின் சேவையை மறக்காமல், அதற்கு பதிலாக அபரிமித பலன்களைக் கொடுப்பதால், க்ருதக்ஞன் ஆகிறான்). இவ்வாறு இருக்கும் ஸ்ரீஹரியை விட்டு, எந்த

அறிவாளியும் வேறொருவரை சரணடைய மாட்டான் என்றும், ஸ்ரீகிருஷ்ணனையே சரணடைய வேண்டும் என்று அறிய வேண்டும் என்கிறார்.

ஹிந்தெ^{3} ஜன்மாந்தரதி^{3} தந்து^{3}கொட்டவராரு
இந்து^{3} முந்தீ^{3}வ ப்ரபு^{4}வாரு | ப்ரபு^{4}வாரு எலெ மனவெ
மந்த^{3}மதியாகி^{3} கெட^{3}பேட^3 ||44-(260)

ஹிந்தெ – முந்தைய. ஜன்மாந்தரதி – வேறு பிறவிகளில். தந்து கொட்டுவராரு? - (தேகம், உணவு, ஆடைகளை) உனக்கு கொடுத்தவர் யார்? இந்து – இப்போது, இந்தப் பிறவியில், முந்தெ – அடுத்த பிறவிகளிலும் கூட. ஈவ – அவற்றைக் கொடுக்கும். பிரபுவாரு – தலைவன் யார்? (ஸ்ரீஹரியே. அவனைத் தவிர வேறு யாரும் இல்லை). ஆகையால், எலெ மனவெ – ஹே மனமே. மந்தமதியாகி – முட்டாளாக (உண்மையை அறியாமல்). கெடபேட – கெட்டுப் போக வேண்டாம். (புருஷார்த்தங்களை இழந்து நாசம் அடைய வேண்டாம்).

அன்னவில்லெந்து^{3} நீ அன்யரிகெ^{3} ஹலுப^{3}தி^{3}ரு
அன்ன மயவாத^3 அனிருத்த^4 | அனிருத்த^4 ஜனகெ தி^{3}
வ்யான்ன தா கொட்டு ஸலஹூவ ||45-(261)

அன்னவில்லெந்து – தேகம் மற்றும் குடும்பத்தை பாதுகாப்ப தற்காக, அன்னம் முதலானவை இல்லை என்று, நீனு, அன்யரிகெ – அஸ்வதந்த்ரரான பிறருக்கு. ஹலுபதிரு – ஹே மனமே, அடிமையாக சொல்லிக் கொள்ள வேண்டாம். அன்னமயனாத – அன்னமயன் என்னும் பெயர் உள்ள. அனிருத்த – அனிருத்த ரூபனான. ஸ்ரீஹரியு ஜகக்கெ – உலகிற்கு (அனைத்து பிராணிகளுக்கும்). திவ்யான்ன – திவ்யமான அன்னத்தை (அமிர்தான்னத்தை). தா – தான். கொட்டு – கொடுத்து. ஸலஹுவ – காப்பாற்றுவான்.

ஸ்ரீஹரி, அன்னமய, பிராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய என்னும் பெயர்களைக் கொண்டவனாக, அதே பெயர்களில் சரீரத்தில் ஐந்து கோஷங்களில் இருக்கிறான். இந்த ஐந்து ரூபங்களே அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ, நாராயண என்னும் ஸ்ருஷ்ட்யாதிகளின் செயல்களில் ஈடுபட்டிருக்கும்

ரூபங்கள். அன்ன – என்பது ஸ்ரீஹரியின் நாமம். அனைத்தையும் உண்பவன் ஆகையால் அவன் – அன்னன். பிரம்மாதி, உலகில் அனைவரிலும் இருப்பவன் ஆகையாலும் அவன் அன்னன். இவ்வாறு அன்னமயனான அனிருத்தனை அறிந்த ஞானி, 'அன்னவான் பவதி' பரமாத்மனின் பூர்ண அருளுக்குப் பாத்திரனாகி முக்தன் ஆகிறான். இவ்வாறு அனிருத்தன் திவ்யான்ன பிரதனாக இருக்கும்போது, இந்த அன்னத்திற்கு பிறரை சார்த்திருக்க வேண்டுமா?

ஏஸேஸு ஜன்மத^{3}லி பே^{3}ஸராக^{3}தெ^{3} ஜீவ
ராஶிக^{3}ளிக^{3}ன்ன கொடு^{3}திர்ப்ப | கொடு^{3}திர்ப்ப நம்மனு உ
தா^{3}ஸீன மாடி^{3} பி^{3}டு^{3}வோனே ||46-(262)

ஏஸேஸு ஜன்மதலி – எண்ணிக்கையற்ற பற்பல பிறவிகளில். பேஸராகதெ – சோர்வடையாமல் (ஜீவர்களை காப்பாற்றுவதற்காக நித்ய உற்சாகத்துடன்). ஜீவராஷிகளிகெ – ஜீவராஷிகளில் இருக்கும் அனந்த ஜீவர்களுக்கு (அனைவருக்கும்). அன்ன – அன்னத்தை. கொடுதிர்ப்ப – கொடுக்கிறான். (இப்படி இருக்கையில்). நன்னனு – நம்மை (தன் பக்தர்களை). உதாஸீன மாடி – புறக்கணித்து. பிடுவோனெ – அன்னாதிகளைக் கொடுக்காமல் கைவிட்டு விடுவானா? (இல்லை).

அன்னத^{3}ன்னாத^{3}ன்ன ஸப்தான்ன கல்பக^{1}னாகி^{3}
அன்ன மயரூபி அனிருத்த^4 | அனிருத்த^4 ஜக^{3}கெ தி^{3}
வ்யான்னக^{3}ள கொட்டு ஸலஹுவ ||47-(263)

அன்னத – அன்னத்தைக் கொடுப்பவனும். அன்னாத – அனைத்து அன்னத்தையும் உண்பவனும். ஸப்தன்னகல்பகனு – ஏழு வித அன்னங்களை நிர்மாணம் செய்தவனும். ஆகி – ஆக இருந்து, அன்னமயரூபி – அன்னமய ஸ்வரூபனான. அனிருத்த – அனிருத்தன். ஜககெ – அனைத்து பிராணிகளுக்கு. திவ்யான்னகள – திவ்ய அன்னங்களை. கொட்டு – கொடுத்து. ஸலஹுவ – தவறாமல் காப்பாற்றுவான்.

பிருஹதாரண்யக உபநிஷத்தில் ஏழு வித அன்னங்களைப் பற்றி விவரங்கள் இருக்கிறது. விஷ்ணு பிரம்மன் இருவரும்,

கிருஹஸ்தாஸ்ரமிகள் ஆகையால், க்ருஹஸ்தாஸ்ரமியே உத்தமன் என்று நிரூபித்து, பிறகு க்ருஹஸ்தாஸ்ரமியின் கடமைகளை சொல்பவனாக, ஸ்ரீஹரி சப்தான்னங்களை நிர்ணயித்தான் என்று சொல்லப்படுகிறது.

யத்ஸப்தான்னானி மேதயா தபஸாsஜனயத் பிதைகமஸ்ய ஸாதாரணம் த்வே தேவானபாஜயத் த்ரீண்யாத்யனேsகுருத பஷுப்ய ஏகம் ப்ராயச்சத் தஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்டிதம் -- விஷ்ணு பிராணிகளின் கர்மங்களுக்கேற்ப ஏழு வித அன்னங்களை படைத்தான். வைஷ்வதேவ, பல்ஹரண என்னும் இரண்டிற்கு தேவதைகளை நியமித்தான். மனம், வாக்கு, மற்றும் பிராண என்னும் மூன்றினை தனக்காக வைத்துக் கொண்டான். (ஆகையாலேயே இவற்றினால் ஆகும் அனைத்து க்ரியைகளையும் தனக்கு அர்ப்பித்தால் ஸ்ரீஹரி மகிழ்கிறான்). பசுக்களுக்கு பாலினை அன்னமாக செய்தான். இவ்வாறு ஏழு வித அன்னங்களை சொல்லி, அடுத்து 'தானி ந க்ஷீயந்தே அத்யமானானி ஸர்வதா யோ வை தாமக்ஷிதிம் வேத ஸோsன்னமத்தி' - எப்போதும் தனக்காக ஆனந்த ஸ்வரூபனான ஸ்ரீஹரி படைத்த அன்னத்தை தின்றாலும் அவை நாசம் ஆவதில்லை (இல்லாததாக ஆவதில்லை). ஸ்ரீஹரியால் படைக்கப்பட்ட அன்னம், அவனது அருளால் அழியாததாகும் என்று அறிந்தவன், தனக்கு யோக்யமான சர்வ போகங்களையும் எவ்வித முயற்சியும் இல்லாமல் அனுபவிக்கிறான் என்று சொல்கிறார். தன் அன்னத்தை தான் உண்டு, மனோவாக் பிராணரூப அன்னங்களை (அவற்றின் சர்வ வியாபாரங்களை) ஸ்ரீஹரிக்கு அர்ப்பித்தால் முக்தன் ஆகிறான் - இதுவே திவ்யான்னம்.

ப்ராண பஞ்சகரூப ப்ராணாந்தராத்மகனே
ப்ராணிக^{3}ளொளகி^{3}த்து^{3} ப்ரதிதி^{3}ன | ப்ரதிதி^{3}ன ப்ரத்^{3}யும்ன
ப்ராணமயனெந்து^{3} கரெஸூவி ||48-(264)

ப்ராண பஞ்சகரூப - பிராண, அபான, வியான, உதான, ஸமான என்னும் ஐந்து ரூபங்கள் உள்ள. பிராணாந்தராத்மகனு – முக்ய பிராண அந்தர்யாமியான. ப்ரத்யும்ன - ப்ரத்யும்னரூபி விஷ்ணு. ப்ராணிகளொளகித்து - பிராணிகளின் உள்ளிருந்து (பிராணமய கோஷத்தில் இருந்து). ப்ரதிதினவு - தினமும் (தேகம் இருக்கும்

வரை). ப்ராணமயனெந்து - ப்ராணமய என்னும் நாமத்தினால். கரெஸுவ - அழைக்கப்படுகிறான்.

ப்ராண, அபான, வியான, உதான, ஸமான என்பது ஐந்து தேவதைகள். அவர்கள் 'தாஸப்ராண' என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களின் அதே நாமங்கள் உள்ள முக்யபிராணனின் ஐந்து ரூபங்கள் உள்ளது. இந்த முக்யபிராண ரூபங்களில் ப்ரத்யும்னரூபி ஸ்ரீஹரியே நியாமகனாக இருந்து, பஞ்சப்ராணங்களால் ஆகும் அனைத்து வியாபாரங்களின் முக்ய கர்த்தனாக இருக்கிறான். இந்த பிரத்யும்னன் ப்ராண நாமகன் என்று அழைக்கப்படுகிறான்.

தத்விவேகீ தியம் சைவ ததக்ஞானே பியம் ததா |
வாசம் நித்யம் தத்குணோக்தௌ ப்ராணம் தத்கர்மணி ஸ்புடம் |
ததன்யகர்ம ஸந்த்யாகே சாபானம் வ்யானமஸ்ய ச |
விரோதினாம் நிராஸே ததோதானம் யோகதாரணே |
மனோவாகாதீந்த்ரியாணாம் ஸமானம் நியமேऽத்ர து |
அன்னமுக்தேஷு ஸுஸ்தைர்யே நர: குர்யாஸ்ஸதெய்வ ஹி ||
(ப்ரு. பாஷ்ய)

என்று பஞ்ச பிராணரின் காரியங்களை விவரிக்கிறார். ஜீவ-ஈஷ்வரரின் ஜீவனை புரிந்து கொள்வதில் புத்தியை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீஹரியின் அஞ்ஞானத்தில் பயம் இருக்க வேண்டும் (ஜீவனை அறியாமலிருந்தால், நரகாதி அனர்த்தங்கள் உண்டு என்னும் பயம் மனதில் இருக்க வேண்டும்). ஸ்ரீஹரியின் குணங்களை தினமும் கீர்த்தனை செய்வதற்கு வாக் இந்திரியத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீஹரி சேவாரூப கர்மங்களில் 'ப்ராண'னையும், பிற கர்மங்களை விடுவதில் அபானனையும், ஸ்ரீஹரி விரோதிகளை எதிர்ப்பதற்கு வ்யானனையும், யோகானுஷ்டாத்தில் (தியானத்திற்காக) உதானனையும், மனம், வாக், முதலான இந்திரியங்களை (நன்மார்க்கத்தில் இருக்கும்படி) வைப்பதில் சமானனையும் பயன்படுத்த வேண்டும். அதாவது, இந்த ப்ராணரின் வ்யாபாரங்கள் ஸ்ரீஹரியின் சேவைக்காகவே இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அவரின் அருளைப் பெற வேண்டும் என்று அர்த்தம். விஷ்ணுபக்தி ஸ்திரமாகி வந்ததைப் போல, மனோ வாக் பிராணரின் செயல்கள் விஷ்ணு-அன்னங்களாக விஷ்ணு பிரஸாதத்திற்கு காரணம் ஆகின்றன.

எந்தெ[1]ந்து[1] நீ நடி[3]ஸித[3]ந்தெ நா நடெ[3]வேனோ
எந்து நீ நுடி[3]ஸெ நுடி[3]வேனு | நுடி[3]வெனல்லதெ[3] ரமா
காந்த என்னல்லி தப்பேனோ ||49-(265)

எந்தெந்து – எவ்வாறு. நீ – நீ. நடெஸிதந்தெ – செய்கிறாயோ. நா – நான். நடெவெனோ – அப்படியே செய்கிறேன். எந்து – எவ்வாறு. நீ – நீ. நுடிஸெ – சொல்கிறாயோ (வாக் இந்திரியத்தினால் பேச வைக்கிறாயோ) அப்படி, நுடிவெனு – பேசுவேன். அல்லதெ – இவ்வாறு இல்லாமல், ரமாகாந்த – ஹே லட்சுமிபதியே. என்னல்லி – என்னிடம். தப்பேனோ – என்ன தவறு இருக்கிறது? (எதுவும் இல்லை).

நில்லலு நில்லுவேனு மலகி[3]த[3]ரெ மலகு[3]வேனு
திளிது[3] திளிஸித[3]ரெ திளிவேனு | திளிவேனோ தே[3]ஹத[3]
நெளலந்தெ இர்ப்பெ நினக[3]னுகா[3]ல ||50-(266)

நில்லலு – நீ எழுந்து நின்றால். நில்லுவெனு – நான் எழுந்து நிற்கிறேன். மலகிதரெ – நீ படுத்தால். மலுகுவெனு – நான் படுக்கிறேன். திளிது திளிஸிதரெ – நான் அறிய வேண்டும் என்று நீ விரும்பி தெரிவித்தால். திளிவெனு – நான் அறிகிறேன். நினகானு = உனக்கு நான். தேஹத நெளலந்தெ இர்ப்பெ – தேகத்தின் நிழலினைப் போல. பூர்ண அதீனனாகித்தேனெ – அனைத்து செயல்களும் உனது செயல்களையே செய்கின்றன.

முக்யபிராணாந்தர்கத ப்ராண மயனின் ப்ரஸாதம் கிடைப்பதற்கு, மனோவாக் ப்ராணகளின் வ்யாபாரங்களில் இருக்க வேண்டிய அனு சந்தானத்தை மேற்கண்ட இரு பத்யங்களிலிருந்து அறிகிறோம். ஸ்ரீதாஸார்யர் இவ்வித அனுசந்தானம் உள்ளவரே ஆவார். இந்த ரூபத்தின் அனுசந்தானத்தை (சிந்தனையை) முயற்சி செய்து பின்பற்றினால், பிராணமயனின் அருள் தவறாமல் கிடைக்கிறது.

'தேஹத நெளலினந்தெ' என்றால், ஜீவன், ஸ்ரீஹரிக்கு பூர்ண அதீனரான ப்ரதிபிம்பர் என்று நினைவுபடுத்துகிறார். ஜீவர்களின் அனைத்து க்ரியைகளும் ப்ராணமயனின் க்ரியைக்கு ஏற்பவே ஆகிறது என்னும் யதார்த்தத்தை (உண்மையை) அறிய வேண்டும் என்பதே கருத்து.

ஸர்வக்ஞ ஸர்வேஶ ஸர்வாந்தராத்மகனே
ஶர்வாதி³வந்த்³ய ஶிவரூபி | ஶிவரூபி ஸஜ்ஜனர
ஸர்வகாலத³லி ஸலஹய்யா ||51-(267)

சர்வக்ஞ – சர்வக்ஞனும். சர்வேஷ – சர்வஸ்வாமியும் (சர்வ நியாமகனும்). சர்வாந்தராத்மகனெ – சர்வாந்தர்யாமியுமான. ஷர்வாதிவந்த்ய – ருத்ராதிகளால் வணங்கப்படுபவனான. ஷிவரூபி – பரம மங்கள ஸ்வரூபனான ஷிவாந்தர்யாமி நாராயண. ஸஜ்ஜனர – முக்தியோக்ய ஜீவர்களை (நன் மார்க்கத்தில் இருக்கும் மக்களை). சர்வகாலதலி – அனைத்து காலங்களிலும். ஸலஹய்ய – காப்பாற்று. தந்தையே.

ஷர்வ, ருத்ர, ஷிவ ஆகியவை மகாதேவனின் பெயர்கள். ருஜுஜீவர்களைத் தவிர மற்ற அனைத்து சேதனர்களில் சிவன் சிறந்தவன். விஷ்ணுபக்தர்களில் முதல்வன். அனைவரின் மனோபிமானி. 'ஈஷ்வராத் ஞானமன்விச்சேத் மோக்ஷ மிச்சேஜ் ஜனார்த்தனாத்' என்றதில் ஸ்ரீஹரி தத்வஞானத்தை சிவனிடமிருந்தும், மோட்சத்தை ஸ்ரீஹரியிடமிருந்தும் பெற வேண்டும் என்று சொன்னதைப் போல, யதார்த்த ஞானத்திற்காக ஹரிபக்தர்கள் சிவனை சரணாகதி அடையவேண்டும். சிவாந்தர்யாமியான சிவரூபனான சிவ நாமக ஸ்ரீஹரியே ஞானத்தைக் கொடுப்பவன் என்பதை அறிவது அவசியம் என்று சொல்கிறார்.

பிரம்மணி பிரம்ம ரூபோஸௌ ஷிவரூபி ஷிவே ஸ்தித: -- ஆகிய பிரமாணங்கள், ஸ்ரீஹரி, பிரம்மனில் பிரம்ம ரூபனாகவும், சிவனில் சிவ ரூபனாகவும் இருக்கிறான் என்று சொல்கிறது. மனோமயனான சிவாந்தர்யாமி சங்கர்ஷணனின் அருளை பிரார்த்திக்கிறார்.

உண்டு³ உட்டத்தெ³ல்ல க²ண்ட³ன மக²வென்னி
கண்ட³த்து³ ஹரிய ப்ரதிமென்னி | ப்ரதிமென்னி மூர்ஜக³கெ
பாண்ட³வ ப்ரியனே தொ³ரெயென்னி ||52-(268)

உண்டு உட்டத்தெல்ல – உணவு உண்டது. வஸ்த்ரங்களை அணிந்தது ஆகிய அனைத்து போகங்களும். அகண்டன –

அகண்டனான (பேதரஹிதனான, வியாப்தனான) ஸ்ரீஹரியின், மகவு – யக்ஞும் (அவனின் பூஜை). என்னி – என்று சொல்லுங்கள் (மற்றும் அப்படியென்று எப்போதும் சொல்லுங்கள்). கண்டத்து – கண்ணால் காணும் அனைத்தையும். ஹரிய – ஸ்ரீவிஷ்ணுவின். ப்ரதிமென்னி – பிரதிமை என்று அறியுங்கள் (சர்வாந்தர்யாமியான ஹரியின் இருப்பிடம் என்று சிந்தியுங்கள்). மூர்ஜககெ – அனைத்து உலகிற்கு. பாண்டவப்ரியனே – பாண்டவ ப்ரேமியான ஸ்ரீகிருஷ்ணனே. தொரெயென்னி – தலைவன் என்று கொண்டாடுங்கள்.

வாயுதேவனே முதலான தேவதைகளே. ஸ்ரீஹரியின் பூமியின் பாரத்தைக் குறைக்கும் காரியத்தில் பங்கு வகித்து, பாண்டவர்களாக அவதரித்தனர். பாண்டவப்ரியன் என்றால் தேவதைகள் அனைவருக்கும் ப்ரியன் – அவனே ஸ்ரீகிருஷ்ணன்.

பகவத் பூஜாரூபத்தின் அனைத்து கர்மமும் யக்ஞும் என்று சொல்ல வேண்டும். (யக்ஞுபூஜாயாம்) என்பதிலிருந்து யக்ஞு என்னும் சொல் வந்தது.

ஏவம் பஹுவிதா யக்ஞா விததா பிரம்மணோ முகே |
சர்வேப்யேதே யக்ஞுவிதோ யக்ஞுக்ஷ பிதகல்மஷா: || (கீதை)

என்று அனைத்து வித பகவத் ப்ரீதிக்காக செய்யப்படும் கர்மங்களும் யக்ஞு என்றும், அவை அனைத்தும் துரித பரிகாரங்கள் என்றும் ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான்.

மனவசன காயதிந்த³னுப⁴விப விஷயக³ள
நினக³ர்ப்பிஸுவேனு நிகி²ளேஶ | நிகி²ளேஶ நின்ன பா
வன மூர்த்தி தோரி ஸுக²வீயோ ||53-(269)

மனவசன காயதிந்த – மனம், வசன, தேகங்களால், அனுபவிப – அனுபவிக்கும். விஷயகள – அனைத்து விஷயங்களையும் (அனைத்து பொருட்களையும்), நினகெ – உனக்கு. அர்ப்பிஸுவெனோ – அர்ப்பிக்கிறேன் ஐயா. நிகிலேஷ – ஹே சர்வேஷனே. நின்ன – உன். பாவனமூர்த்தி – மங்கள

ஸ்வரூபத்தை. தோரி - காட்டி. ஸுகவீயோ - ஆனந்தத்தைக் கொடு ஸ்வாமி.

யத்கரோஷி யதஸ்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் |
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் || (கீதை)
என்று சொல்வதைப் போல, செய்யும் யக்ஞம், தானம், தவங்களை எனக்கே அர்ப்பிப்பாயாக என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான். சர்வ கர்ம சமர்ப்பணம் இல்லாமல் ஸ்ரீஹரி தரிசனம் இல்லை என்று (அபரோக்ஷம் இல்லை என்று) குறிப்பிடப்படுகிறது.

நிகி[2]ளாக[3]மைக[1]வேத்[3]ய க[1]ளங்க[1] ஸுசரித்ர
விக[2]னஸாராத்[4]ய ஸுக[2]ரூபி | ஸுக[2]ரூபி நின்னந்த[2]
ஸக[2]னிரலு து[3]ரித ப[3]ரலுண்டே[1] ||54-(270)

நிகிளாகமைகவேத்ய - சர்வவேதங்களால் முக்ய ப்ரதிபாத்யனும் (வேதகளினாலேயே அறியவேண்டிய ஸ்வரூப மஹாத்ம்யம் உள்ளவன்), அகளங்க - அனைத்து தோஷ ரஹிதனும், ஸுசரித்ர - நற்குண பூர்ணனும் (மங்கள மஹிமனும்), விகனஸாராத்ய - விரக்த ஜன ஆராத்யனும் (வைராக்யம் கொண்ட வானபிரஸ்த ஆசிரமத்தை சேர்ந்தவர்களால் காட்டில் சிறப்பாக வணங்கப்படுபவன்). சுகரூப - ஆனந்த ஸ்வரூபனுமான ஹே ஸ்ரீனிவாசனே. நின்னந்த - உன் சமமான. சகனிரலு - நண்பன் இருக்கையில். துரித - அவற்றின் பலரூபமான துக்கங்கள். பரலுண்டெ - எனக்கு வருவதற்கு சாத்தியமா? (வராது என்று பொருள்).

வேதத்தில் புகழப்பட்ட ‘விக்ஞானமய’ முக்தியைக் கொடுப்பவனான வாசுதேவனின் அருள் இருக்கையில், அனைத்து தோஷங்களால் (துக்க அஞ்ஞானாதி ப்ராக்ருத பந்தனங்களுக்கு காரணமான தோஷங்களால்) முக்தியோக்ய ஜீவர்கள் விடுதலையை அடைகிறார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா - என்னும் ஸ்ருதியின்படி, ஸ்ரீஹரி சர்வஜீவர்களுக்கு நித்ய நண்பன். ஆனால், நண்பன் என்று அறிந்தால் மட்டுமே கஷ்டங்கள் அருகில் வராது. அஞ்ஞானியானவன், தன் நித்ய நண்பனை கவனிக்காமல், அவனின்

உதவியைப் பெறாமல், தானே ஸ்வதந்த்ரன் என்று நினைத்து, நடவடிக்கைகளை செய்கிறான்.

ஸர்வைஸ்ச வேத்யை: பரமோ ஹி தேவோ ஜிக்ஞாஸ்ய: (சதுர்வேதஷிகா) – வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்ய: (கீதை) ஆகிய பிரமாணங்கள், ஸ்ரீஹரி அனைத்து வேதங்களால் அறியப்படத் தக்கவன் என்று சொல்கிறது. ஸ்ரீதாஸார்யர் 'நிகிலாக மைகவேத்ய' என்று சொல்லியிருப்பது இந்த அர்த்தத்திலேயே.

ஸர்வான் வேதான் ஸேதிஹாஸான் ஸபுராணான் ஸயுக்திகான் |
ஸபஞ்சராத்ரான் விக்ஞாய விஷ்ணுர் ஞேயோ ந சான்யதா ||
(பிரம்ம தர்க்க)

என்னும் வாக்கியம், வேத அர்த்தங்களை புரிய வைக்கும், இதிஹாஸ புராண பஞ்சராத்ராதிகளை அறிந்தவனே விஷ்ணுவை காண்கிறான் என்று சொல்கிறது. வேதாதி அனைத்து நற்சாஸ்திரங் களின் சமூகமே 'ஆகம' எனப்படுகிறது. அவற்றிலிருந்தே விஷ்ணுவை அறியவேண்டுமே தவிர, ப்ரத்யக்ஷ, அனுமானங் களினால் சாத்தியம் இல்லை.

பரமாத்மன் ஸ்வதந்த்ரன், ஸர்வஸ்வாமி, ஞானானந்தாதி அனந்த குணபூர்ணன், அசேஷ தோஷ ரஹிதன் என்னும் நிஸ்சய ஞான உள்ளவனுக்கு பாபலேபத்திற்கு அவசியமே இல்லை.

போ[4]ஜ்ய வஸ்துக[3]ளல்லி போ[4]ஜ்ய நாமகனாகி[3]
தஜ்ஜன்யரஸவ ஹரி தானு | ஹரி தானு உண்டு[3]ணிஸி
நிர்ஜரோத்தம்ஸ ஸுக[2]வீவ ||55-(271)

போஜ்யவஸ்துகளல்லி – ப்ராணிகளால் போகிக்கப்படும் பற்பல வஸ்துகளில், போஜ்யநாமகனாகி – 'போஜ்ய' என்று அழைக்கப் படும், அவற்றின் அந்தர்யாமியாக இருந்து, தஜ்ஜன்யரஸவ – தன்னிடமிருந்தே தோன்றிய அந்தந்த வஸ்துகளின் ரஸத்தை, நிர்ஜரோத்தம்ஸ – தேஷஷிகாமணியான. தான் – ஸ்வயம். உண்டு – சுபரஸங்களை ஏற்றுக்கொண்டு. உணிஸி – ஜீவர்களுக்கு உண்வித்து. ஸுகவீவ – சுகப்படுபவன்.

ஷப்தரூப ரஸஸ்பர்ஷ கந்தாத்யாக்ருதிரேஷ்வர: |

போக்யம் போக்தா ச போகஸ்ச போஜகஸ்சைக ஏவ து |
அதோ ஹ்யேகோ போஜ்யபோக்த்ரு போகாதிவ்யவஹாரப்யாக் ||

என்று, ரஸோ஽ஹமப்ஸு கௌந்தேய... ஆகிய கீதையின் வாக்கியங்களின் அர்த்தம் விளக்குகிறது. ஷப்த, ரூப, ரஸ, ஸ்பர்ஷ, கந்தங்களில் தன் நாமகனாக அதன் உருவங்களாக இருக்கிறான். சர்வ வஸ்துகளின் ரஸ தர்ம நியாமகனாக தன் நாமகனாக அந்தர்யாமியாக இருக்கிறான். போக வஸ்து போக்தா, போக (போக்தனுக்கு ஆகும் அனுபவ), போக செய்விப்பவன் என அனைத்தும் அவன் ஒருவனே (பற்பல ரூபங்களால்) ஆகியிருக்கிறான்.

இந்த காரணத்தாலேயே போஜ்ய, போக்த்ரு, போக முதலான ஷப்தங்களால் அழைக்கப்படுகிறான். ஸ்ரீஹரியின் இந்த லீலை அமோகமானது. ஸ்வதந்த்ரனும் பூர்ணகாமனும் ஆன தனக்கு இதனால் எந்த பலனும் இல்லை. எப்படியிருந்தாலும் ஜீவருக்கு ஸ்வஸ்வகதி தாயகரூபம் மகாபலன்களைக் கொடுப்பதாக இருக்கிறது. தான் ஸர்வபோக்தனானாலும், போகாஸக்தன் அல்ல. ஸாரபூதமான சுபங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு, ஜீவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறான். அஸாரத்தை என்றும் அவன் ஏற்றுக் கொள்வதில்லை.

அனைத்தும் தன் வசமே ஆகியிருப்பதால், தன் விருப்பத்தாலேயே துக்காதிகளின் அனுபவத்தை ஜீவர்களுக்கு கொடுக்கிறான். துர்விஷயங்களால் (அஸார வஸ்துகளால்) துக்க போக உண்டாகட்டும் என்னும் சங்கல்பனாவதே ஸ்ரீஹரியின் அஷுப போக்த்ருத்வம். இந்த பிரமேயத்தை ஸ்ரீமத் பாகவதம் இவ்வாறு சொல்கிறது.

ஸ வா இதம் விஷ்வமமோகலீல:
ஸ்ருஜத்யவத்யத்தி ந சஜ்ஜதே஽ன்மன் |
பூதேஷு சாந்தர்ஹித ஆத்மதந்த்ர:
ஷாட்வர்கிகம் ஜிக்ரதி ஷட்குணேஷ: ||
அதோவிதுஸ்த்வம் புருஷம் ஸந்தமத்ர
புங்க்தே ஹ்ருஷீகைர்மது ஸாரகம் யத: ||

இந்த உலகினை படைத்து, காப்பாற்றி, அழிக்கும் ஸ்ரீஹரி லீலை அமோகமானது. ஸ்வதந்த்ரனான தான், சர்வ ப்ராணிகளின் உள்ளிருந்து, மனம் மற்றும் ஞானேந்த்ரியங்கள் என்னும் ஆறு இந்திரியங்களால் போக்யங்களான அனைத்தையும், அவை அனைத்தின் பிரபுவான தானும் போகிக்கிறான். ஆனாலும் அதில் அவன் ஈடுபடுவதில்லை.

இந்திரியங்கள் மூலம் விஷயங்களை தானும் போகிப்பதில், வெறும் சாரபூதமான சுகத்தை மட்டும் போகிப்பதால் ஸ்ரீஹரி 'புருஷ' என்று அழைக்கப்படுகிறான். இதனையே கீதை –

ஷ்ரோத்ரம் சக்ஷு: ஸ்வர்ஷனம் ச ரஸனம் க்ராணமேவ ச |
அதிஷ்டாய மனஸ்சாயம் விஷயான் உபஸேவதே |
உத்க்ரமந்தம் ஸ்திதம் வாபி புஞ்சானம் வா குணான்விதம் |
விமூடா நானுபஷ்யந்தி பஷ்யந்தி ஞானசக்ஷுஷ: ||
என்று சொல்கிறது.

பூ^{4}மண்டலவே பீட^{2} வ்யோம மண்ட^{3}ல ச^{2}த்ர
ஸோம ஸூர்யருக^{3}ளே மஹதீ^{3}ப |மஹதீ^{3}ப நக்ஷத்ர
ஸ்தோமகளே நினகெ^{3} உபதீ^{3}ப ||56-(272)

பூமண்டலவே – விஸ்தாரமான பூமியே. நினகே – உனக்கு. பீட – ஆசனம். வ்யோமமண்டல – நபோ மண்டலமே (ஆகாயமே). சத்ர – வெள்ளைக்குடை. ஸோம சூர்யரே – சந்திர சூரியர்களே. மஹதீப – ப்ரதான தீபங்கள். நக்ஷத்ர ஸ்தோமகளே – நட்சத்திர சமூகங்களே. உபதீப – வரிசையான தீபங்கள்.

மளெயே மஜ்ஜனவு திக்^{3}வலயங்க^{3}ளே வஸன
பெ^{3}ளெவ பெ^{3}ளஸுக^{3}ளே நைவேத்^{3}ய |நைவேத்^{3}ய ஜனர கங்
க^{3}ள கா^{1}ந்தி^{1} நினகெ^{3} ஆரார்த்தி ||57-(273)

மளெயெ – பொழியும் மழையே. நினகெ – உனக்கு. மஜ்ஜன்வு – ஸ்னானம் (அபிஷேகம்). திக்வலயங்களே – விஸ்தாரமான திசைகளே. வஸன – வஸ்திரங்கள். பெளெவ பெளஸுகளே – பூமியில் விளையும் பருப்புகளே (பழ, தான்யங்களே). நைவேத்ய –

அர்ப்பிக்கப்படும் நைவேத்யம். ஜனர - மக்களின். கங்கள காந்தி - கண்களின் ஒளியே. ஆரார்த்தி - ஆரதி ஆகும்.

தருக^{3}ளே சாமரக^{3}ளாகி^{3}ர்ப்பவு நினகே^{3}
ஶரதி^{2} க^{3}ர்ஜனேயே மஹவாத்^{3}ய | மஹவாத்^{3}ய ஜீவர
ஸ்வரக^{3}ளே நினகே^{3} ஸங்கீ^{3}த ||58-(274)

நினகெ - உனக்கு. தருகளே - மரங்களே. சாமரகளு - சாமரங்கள். ஆகிர்பவு - ஆகின்றன. ஷரதிகர்ஜனெயெ - கடல் ஓசையே. மஹவாத்ய - சிறந்த வாத்தியம். ஜீவர ஸ்வரகளே - பிராணிகளின் த்வனிகளே. சங்கீத - சங்கீதம்.

பாதாள பாது^{3}க விதா^{3}த்ரு லோகவே முகு^{1}ட
ஶ்வேதத்^{3}வீபவே நினகே^{3} ஒட்^{3}யாண | ஒட்^{3}யாண வைகுண்ட^2
ஆதப^{1}த்ரவே நினகீ^{3}வே ||59-(275)

பாதாள - பாதாள லோகமே. பாதுக - பாதுகை. விதாத்ரு லோகவே - பிரம்ம லோகமே. முகுட - கிரீடம். ஷ்வேதத்வீபவே - ஷ்வேத த்வீபமே. ஒட்யாண - ஒட்டியாணம். வைகுண்ட - வைகுண்ட லோக என்னும். ஆதபத்ரவே - வெள்ளைக் குடையையே. நினகெ ஈவெ - இவற்றையே நான் உனக்கு அர்ப்பிக்கிறேன்.

பகவத் உபாசகர்களில் இரு பெரிய விதங்கள். ப்ரதிகாலம்பனர், அப்ரதிகாலம்பனர். அக்னி, சூர்ய, ஸ்வஹ்ருதய, மற்ற சல, அசல ப்ரதிமைகளில் பகவந்தனை உபாசனை செய்து, தரிசனம் பெறுபவர்கள் ப்ரதிகாலம்பனர் எனப்படுகின்றனர். வ்யாப்த ரூபங்களின் உபாசகர்கள் அப்ரதிகாலம்பனர்கள். இவர்கள் அனைவரும் தேவதைகளே. மேற்கண்ட நான்கு பத்யங்களில் நிரூபித்திருக்கும் பூஜாகிரமம் அப்ரதிகாலம்பனருக்கு விசேஷமாக பொருந்துகிறது. மற்றவர்களுக்கு ஸ்ரீஹரியின் ஆனந்த்ய ஞானத்தை (ஆனந்தனு - அபாரமஹிமன் என்பதை) புரிந்து கொள்ள உதவுகிறது. ஸ்வயோக்யமான பூஜா த்ரவ்யங்களை அர்ப்பித்து பூஜிக்கும்போது, ஸ்ரீஹரியிடமிருந்து படைக்கப்பட்ட பிரம்மாண்டம், அதன் அந்தர்யாமி அனைத்து பொருட்களும், அவனின் பூஜைக்காகவே என்னும் அனுசந்தானம் இருந்தால்,

ஸ்வபூஜைக்கு அதிக பலன் உண்டு. ஸ்ரீஹரி விசேஷமாக மகிழ்வான். ஸ்ரீஹரிப்ரீதியே பூஜைக்கான பலன்.

அணு ஸ்வரூபரான அனந்த ஜீவர்களிலும், ப்ருத்வியே முதலான அனந்த ஜட பரமாணுகளிலும், ஸ்ரீஹரி அனந்தரூபங்களால் நிலைத்திருக்கிறான். இதைப்போலவே, மஹத் வஸ்துகளில்கூட தனித்தனி ரூபங்களால் நிலைத்திருக்கிறான். அனந்த சூக்ஷ்ம ஸ்தூலவஸ்துகளால் நிறைந்த பிரம்மாண்டத்தையே வியாபித்திருக்கும் பரமாத்மனின் ஒரு ரூபமும் இருக்கிறது. இது 'வைராஜ' என்று அழைக்கப்படுகிறது.

அண்டகோஷே ஷரீரே஽ஸ்மின் ஸப்தாவரண ஸம்யுதே |
வைராஜ:புருஷோ யோ஽ஸௌ பகவான் தாரணாஸ்ரய: ||(பாகவத)

ஆகிய வாக்கியங்கள் இந்த ரூபத்தை வர்ணிக்கிறது. 'பாதாள மேதஸ்ய ஹி பாதமூலம்' ஆகியவை இந்த ரூபத்தின் கரசரணாதி அவயவங்களை வர்ணிக்கிறது.

ஸ்ரீஜகன்னாததாஸர், தமது ஹரிகதாம்ருத சாரத்தில் உத்தமாதிகாரி களின் அர்ச்சனா கிரமத்தை விளக்கமாக சொல்லியிருக்கிறார். இந்த பத்யத்தின் பொருளையே விளக்குவதாக பின்வரும் பத்யம் இருக்கிறது.

வாரிஜபவாண்டவே சுமண்டப
மேருகிரி ஸிம்ஹாஸனவு பா
கீரதியு மஜ்ஜனவு திக்வஸ்த்ரகளு நுடி மந்த்ர |
பூருஹஜ பலபுஷ்பகந்த ஸ
மீர ஷஷிவிதீப பூஷண
தாரகெகளெந்தர்ப்பிஸலு கைகொண்டு மன்னிஸுவ ||

பிரம்மாண்டம் மற்றும் அதில் இருக்கும் வஸ்துகளால் அர்ச்சிக்கும் கிரமத்தை இங்கு விளக்குகிறார். பகவந்தனை ஆராதிக்கும் பக்தர்களின் யோக்யதா தாரதம்யத்திற்கேற்ப, பூஜா விதங்கள், வெவ்வேறாக இருக்கின்றன. இந்த மானஸ பூஜையில் சதுர்முகனே பூர்ண சமர்த்தனாக இருக்கிறார்.

நடெ3வுதே ஹரியாத்ரே நுடி3வுதே3 ஹரிநாம
குடி3வ நீருக3ளே அபி4ஷேக | அபி4ஷேக தி3னதி3னதி3
ஒட3லிகு3ம்ப3ன்ன நைவேத்3ய ||60-(276)

நடெவுதெ - நடப்பதே. ஹரியாத்ரெ - ஸ்ரீஹரி ப்ரீத்யர்த்தமான சஞ்சாரம் (புண்யக்ஷேத்திரங்களின் யாத்திரை). நுடிவுதே - பேசுவதே. ஹரிநாம - ஹரி நாமோச்சாரணை. குடிவ நீருகளே - ஜலபானமே. அபிஷேக - (ஸ்ரீஹரிக்கு செய்யும்) அபிஷேகம். தினதினதி - தினந்தோறும். ஒடலிகெ - வயிற்றுக்கு உம்ப - உண்ணும். அன்ன - அன்ன முதலான ஆகார வஸ்துகளே. நைவேத்ய - உனக்கு அர்ப்பிக்கும் நைவேத்யம்.

வேத3 ஶாஸ்திரக3ளு நினகா3த3ர உபசாரவு
ஹாதி3 நடெ3வோதே3 நர்த்த1ன | நர்த்த1னவு ஸஜ்ஜனர
வாத3 ஸம்வாத3க3ளு உய்யாலே ||61-(277)

வேதஷாஸ்த்ரகளு - நான் உச்சரிக்கும் வேத சாஸ்திர வசனங்கள். நினகெ - உனக்கு. அதர உபசாரவு - அதன் உபசாரங்கள். ஹாதி நடெயுவுதே - வழி நடப்பதே. நர்த்தன - நர்த்தன சேவை. ஸஜ்ஜனர - சாதுகளின் வாதஸம்வாதகளு - பரஸ்பரம் செய்யும் பேச்சுக்கள் (உன் சம்பந்தமான வாத சம்வாதங்கள்). உய்யாலெ - தொட்டில் சேவை (ஊஞ்சல் சேவை).

நக்ஷத்ர மண்ட3லவு லக்ஷ தீ3பவு நினகெ3
ருக்ஷேஶ தரணி ஆகா1ஶ | ஆகா1ஶ தீ3பக3ளு
வ்ருக்ஷவல்லி ஜவே ப2லபுஷ்ப ||62-(278)

நக்ஷத்ர மண்டலவு - நட்சத்திர கூட்டமே. நினகெ - உன்னில் நான் அர்ப்பிக்கும். லக்ஷதீபவு - லட்சதீபோத்ஸவ சேவை. ரிக்ஷேஷதரணி - சந்திர சூர்யரே. ஆகாஷதீபகளு – ஆகாய தீபோத்ஸவம். வ்ருக்ஷவல்லிஜனெ - மரம் மற்றும் கொடிகளில் இருப்பவையே. பலபுஷ்ப - நாம் அர்ப்பிக்கும் பழ புஷ்பங்கள்.

கு1ண்ட3வே கோ3ளக1வு கெண்ட3வே கரணக3ளு
உண்டு3டு3வ விஷய அவதா3ன | அவதா3ன கைகொண்டு3
புண்ட3ரீகாக்ஷ த3யவாகோ3 ||63-(279)

ஹே புண்டரீகாக்ஷ - ஹே தாமரைக் கண்ணனே. குண்டவே - என் யக்ஞத்தில் அக்னி குண்டங்களே. கோளகவு - இந்திரிய ஸ்தானங்களான கண், காது, ஆகியவை. கெண்டவே - அக்னி. கரணகளு - கண்கள் முதலான இந்திரியங்கள். அவதான - இந்த ஹவிஸ்ஸுகளை. கைகொண்டு - ஏற்றுக்கொண்டு. தயவாகோ - அருள்வாயாக.

கோள3கக3ளெல்ல நினகா3லயவு கரணக3ள
ஸாலுக3ளே தீ3ப தத்3போ4க்ய | தத்3போ4க்ய விஷயக3ள
மேளனவே நினகே3 மஹபூஜே ||64-(280)

கோளககளெல்ல - இந்திரிய ஸ்தானங்கள் அனைத்தும். நினகெ - உனக்கு. ஆலயவு - ஆலயம் (இருக்கும் இடம்). கரணகள ஸாலுகளெ - இந்திரியங்களே (ஞான கர்மேந்திரியங்களே). தீப - தீபங்கள். தத்போக்ய விஷயகள மேளனவெ - இந்திரியங்களின் மற்றும் அவற்றிலிருந்து போகிக்கப்படும் விஷயங்களின் கூட்டே. நினகெ - உனக்கு அர்ப்பித்தமான. மஹபூஜெ - மஹா பூஜையாகும்.

176ம் பத்யம் முதல் இந்த பத்யம் வரையில் ஸ்ரீஹரியின் 'சுலப பூஜை' விதத்தை விளக்குகிறார். பூஜா திரவியங்களை சிரமப்பட்டு பெற்றுக் கொள்ள வேண்டியதிலை என்கிறார். இவ்வாறு சொன்னதால், பூர்வ புண்ய லோகாதி காரணங்களால் ஸ்ரீஹரி அருளி கொடுத்திருக்கும் பொருட்களை அவனின் பூஜைக்காக பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அறியக்கூடாது. கண்டிப்பாக அந்த அனைத்தையும் ஸ்ரீஹரி சேவைக்காக பயன்படுத்தவே வேண்டும். மற்றும் சுலப பூஜைக்குத் தேவையான பக்தி மற்றும் அனுசந்தானங்கள் இல்லாதவர்கள், சக்திக்கேற்ப, ஸ்ரீஹரி கொடுத்த தேக சாமர்த்தியத்தை, பூஜா திரவியங்களின் சம்பாதனைக்காக, பயன்படுத்த வேண்டும்.

கர்மாப்யேகம் தஸ்ய தேவஸ்ய ஸேவா - கீதா மஹாத்மயத்தின் வாக்கியத்தின்படி, ஸ்ரீஹரி சேவாரூபமான கர்மமே சிறந்த கர்மம் அல்லது செய்யும் அனைத்து கர்மங்களும் ஸ்ரீஹரி சேவையே ஆகவேண்டும்.

ஷரீரசேஷ்டாபி மம ப்ரணாம:
ஸ்துதிஸ்து வாகிந்த்ரியவ்ருத்திரஸ்து |
ஸர்வாத்ம நோவ்ருத்திரனுஸ்ம்ருதிஸ்தே
ஸர்வம் த்வதாராதனமேவ பூயாத் ||

என்னும் ஸ்தோத்திரங்கள் சொல்வதைப் போல, தேஹேந்திரியங்களால் ஆகும் அனைத்து க்ரியைகளும் ஸ்ரீஹரியின் ஆராதனை என்னும் அனுசந்தானம் இருக்க வேண்டும்.

ஷப்தாதீன் விஷயானன்ய இந்த்ரியாக்னிஷு ஜுஹ்வதி (கீதை) என்று கூறியதைப் போல, இந்திரியங்கள் என்னும் அக்னிகளில், நாம் போகிக்கும் விஷயங்கள் என்னும் ஹவிஸ்களை ஹோமம் செய்ய வேண்டும். தேகம், இந்திரியங்கள், இந்திரிய கோளகங்கள், அனைத்தும் ஸ்ரீஹரியின் அதிஷ்டானங்கள் என்று அறிய வேண்டும். போக்ய வஸ்துகளிலும், இந்திரியங்களிலும் ஸ்ரீஹரியே பற்பல ரூபங்களில் இருந்து, போகிக்கிறான் என்னும் (போக்த்ரு போஜ்யனெம்ப) ஞானத்துடன் விஷயங்களை போகிப்பதே ஸ்ரீஹரிக்கு ‘மஹா பூஜை’ ஆகிறது.

தத்தத் பதார்த்தத^{3}லி தத்ததா^{3}காரனா
கெ^{3}த்த நோடி^{3}த^{3}ரு இருதிர்ப்ப | இருதிர்ப்ப ஹரிகெ^{3} நா
ப்^{4}ருத்யனெம்பு^{3}வுதே^{3} ப^{3}லு த^{4}ர்ம ||65-(281)

தத்தத் ப்ரதார்த்ததலி – அந்தந்த பொருட்களில். தத்ததாகாரனாகி – அந்தந்த ரூபமாக. எத்த நோடிதரு – உலகத்தில் எங்கு பார்த்தாலும், இருதிர்ப்ப – இருக்கும். ஹரிகெ – பரமாத்மனுக்கு. நா – நான். ப்ருத்யனு – தாஸன் (அனைத்து விதங்களிலும் அதீனன்). எம்புவுதே – என்று அறிவதே. பலுதர்ம – உத்தம தர்மம் ஆகும்.

பரமாத்மனுக்கு உலகமும், உலகத்தில் இருக்கும் சேதன, அசேதன வஸ்துகள் அனைத்தும் பிரதிமைகள். அந்தந்த வஸ்துகளில் அந்தந்த ரூபங்களால் இருந்தவாறு, அனைத்து வஸ்துகளின் ரூபாதி அனைத்து தர்மங்களின் ரக்ஷகனாக இருக்கிறான்.

ஸர்வாணி மத்திஷ்ண்யதயா பவத்பிஸ்சராணி
பூதானி ஸுதா த்ருவாணி |

ஸம்பாவிதவ்யானி பதே பதே வோ
விவிக்த த்ருஷ்டிஸ்ததுதார்ஹணம் மே || (பாகவத)

அதாவது, ஸ்தாவர ஜங்கமாத்மகமான அனைத்தையும் என் இருப்பிடம் என்றே அறிந்து (யோக்யதைக்கேற்ப) பூஜிக்க வேண்டும். நான் அவை அனைத்திடமிருந்தும் வேறாக, அவற்றில் இருக்கிறேன் என்னும் மஹிமா ஞானமே, என் உத்தம பூஜை. இவ்வாறு நிரந்தரமாக என்னை சிந்தியுங்கள் என்று ரிஷபா வதாரியான ஸ்ரீஹரி தன் மக்களுக்கு உபதேசம் செய்கிறார். இந்த உலகம் கார்யகாரண ரூபமானது. அதாவது, ப்ரக்ருதி, காரண, அதில் இருக்கும் அனைத்து வஸ்துகளும் கார்யங்கள். மஹதாதி தத்வங்க ப்ரக்ருதியே மூலகாரணமாக உள்ள கார்யங்கள் ஆகும். இவ்வாறு இருந்தாலும், மஹத் தத்வம் கார்யரூபமானதாக இருந்தாலும், தன்னிடமிருந்து தோன்றும் தத்வத்திற்கு காரணமும் ஆகியிருக்கிறது. கார்யகாரண ரூபத்தின் சகல வஸ்துகளில் ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரி, பற்பல ரூபங்களால் வியாபித்து அந்தர்முகியாக இருக்கிறான்.

அனைத்து சேதனர்களும் அவனது பிரதிமைகளே ஆனாலும், அனைவரின் பிம்பனாக அந்தர்யாமியாக இருக்கிறான். இவ்வாறு அனந்த ரூபங்களால் சேதனாசேதனாத்மக ஜகத்தில் இருக்கும் ஸ்ரீஹரி ஒருவனே. அபின்னன் – அனந்தரூபங்களுக்கு ஐக்யத்தையே சிந்திக்க வேண்டும். அவன் மட்டும் ஸ்வதந்த்ரன். ப்ரதிமாஸ்தனீயமான உலகம் அவனின் அதீனம். ஸ்ரீஹரியே 'வஸ்து' என்னும் சொல்லால் அழைக்கப்படுகிறான். உலகம் அனைத்தும் 'அவஸ்து'. இதுவே பாவாத்வைதம் ஆகும்.

கார்யகாரணவஸ்த்வைக்யம் தர்ஷனம் படதந்துவத் |
அவஸ்துத்வத்விகல்பஸ்ய பாவாத்வைதம் ததுச்யதே || (பாகவத)
என்று பாவாத்வைதம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீதாஸார்யர் இதையே இந்த பத்யத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 'தத்ததாகாரனாகி' என்பதற்காக விவரத்தை 237ம் பத்யத்தை பார்க்கலாம்.

ஸத்³ஸத்³விலக்ஷணனே ஆதிபூ⁴த ஆத்⁴யாத்ம
ஆதி⁴தெ³ய்வத³ரஸ ரஸரூபீ | ரஸரூபனாகி ஸ
ன்முத³ துஷ்டி புஷ்டி கொடு³திர்ப்பே ||66-(282)

ஸதஸத்விலக்ஷணனெ – ஸத் (கார்ய) அஸத் (காரண)ங்களால் விலக்ஷணன் (ஸ்வதந்த்ரமே முதலான தர்மங்களால் மிகவும் வேறுபட்டவன்). அதிபூத அத்யாத்ம அதிதெய்வதரஸ – அதிபூத, அத்யாத்ம, அதிதெய்வங்களின் நியாமகனும் (அவற்றை ஆளும் அரசன்) ஆன ஹே ஸ்ரீனிவாஸனே. ரஸரூபி – (அனைத்து வஸ்துகளின்) சாற்றினை ஏற்றுக்கொள்பவனான நீ, ரஸரூபனாகி – ஆகாரப் பொருட்களின் ரஸத்தில் ரஸரூபனாக இருந்து, ஸம்மத துஷ்டி புஷ்டி – அதன் சக்தி, வளர்ச்சிகளை, கொடுதிர்ப்பெ – கொடுக்கிறாய்.

அதிபூத (ப்ருதிவ்யாதி பூதங்கள்), அத்யாத்ம (தேஹேந்திரிய மனஸ்கள்), அதிதெய்வ – தத்வாபிமானி தேவதைகள். இந்த மூன்று அதிஷ்டானங்கலிலும் இருந்து அதிபூதாதி நாமங்களால், தானே முக்ய வாச்யனாகி அவற்றை நியமிக்கிறான் ஸ்ரீஹரி.

ஜிஹ்வேந்திரியத்தால் ஏற்றுக்கொள்ளும் பற்பல ரஸங்களில் ரஸ நாமகனாக ரஸரூபனாக ஸ்ரீஹரியே இருந்து, ஜீவர்களுக்கு ரஸ போகங்களைக் கொடுத்து, அதிலிருந்து ஏக காலத்தில், துஷ்டி, புஷ்டி, சக்திகளை உருவாக்குபவன் ஸ்ரீஹரியே.

பக்தி:பரே ஸ்வேऽனுபவோ விரக்திரன்யத்ர சைஷ த்ரிக ஏககால: |
ப்ரபத்யமானஸ்ய யதாऽஷ்னத: ஸ்யுஸ்துஷ்டி:
புஷ்டி: க்ஷுதபாயோऽனுகாஸம் || (பாகவத)

பகவத் உபாசனையால், பக்தி ஞான விரக்திகள் ஒரே காலத்தில் வளர்ந்து கொண்டே போகின்றன. போஜனத்தில் ஒவ்வொரு கவளத்திலும் (பசி அடங்குதன் மூலம்), சக்தி, திருப்தி, தேக வலிமை ஆகியவை பகவத் அருளால் கிடைப்பதைப் போல என்று, இந்த பத்யத்தில் சரியான ஆதாரத்துடன் விளக்கப்பட்டிருக்கிறது.

மனதொ³ளகே³ நீனித்து³ மனவெந்தெ³னிஸி கொண்டு³
மனத³ வ்ருத்திக³ளன்னு ஸ்ருஜிஸுவி | ஸ்ருஜிஸி சங்கர்ஷணனே
நின்ன கருணக்கெ எணெகா³ணே ||67-(283)

மனதொளகெ – மனதில். நீனித்து – நியாமகனாக இருந்து. மனவெந்தெனிஸிகொண்டு – ‘மன’ என்னும் நாமத்தினால் அழைக்கப்பட்டு.

மனத – மனதின். வ்ருத்திகளன்னு (பற்பல) வியாபாரங்களை (செயல்களை). ஸ்ருஜிஸுவி – உருவாக்குவாய். ஸ்ருஜித – அப்படி செய்யப்பட்ட. ஸங்கர்ஷணனெ – ஹே சங்கர்ஷணனே. நின்ன கருணக்கெ – கருணைக்கு. எணெகாணெ – இணை எங்கும் இல்லை.

ஸ்ரீசங்கர்ஷணரூபி ஸ்ரீஹரியே மனோமயன். மனதின் செயல்கள் ஐந்து – மனஸ், புத்தி, அஹங்கார, சித்த மற்றும் சேதன. இந்த ஐந்தினால் கூடிய அந்தக்கரணமே (அந்தரிந்திரிய) 'மனஸ்' என்று அழைக்கப்படுகிறது. இதனை செய்கிறேன், இதனை விடுகிறேன் ஆகிய சங்கல்ப, விகல்ப ரூபத்தின் செயல்களை – மனஸ் செய்கிறது. யோக்யாயோக்யங்களை (சரி, தவறு என்று பகுத்தறியும் சக்தி) – புத்தி செய்கிறது. 'நான் செய்வேன்' என்னும் கர்த்ருத்வ அபிமானம் – அஹங்காரம். ஸ்மரண சக்தியே - சித்த. பஹுஸ்மரண சக்தி – சேதன. இந்த அனைத்து வித செயல்களை தோற்றுவித்து, நடத்துபவன், சங்கர்ஷணன்.

மனோ நாமகனாக சர்வஜீவரின் ஸ்வயோக்ய ஸாதனைகளை செய்விக்கும் ஸ்ரீஹரி, அபாரமான கருணாளு. மனோவ்ருத்திகளுக்கு மற்ற அபிமானி தேவதைகளும் அவாந்தராபிமானிகளும் இருக்கின்றனர். அவர்களில் ஸ்ரீஹரியே அந்தர்யாமியாக நின்று அவர்கள் மூலமாகவே அனைத்தையும் செய்விக்கிறான் – அவர்களையும் அருள்கிறான்.

ஆதிபூ^{4}த ஆத்^{4}யாத்ம ஆதி^{4}தெ^{3}ய்வ தாப களெ
வுது நின்ன திவ்யத்ரய நாம | த்ரய நாம ஸர்வதா^{3}
ஒத^{3}க^{3}லோ ப^{3}ந்து^{3} வத^{3}னக்கெ ||68-(284)

ஆதிபூத ஆத்யாத்ம அதிதெய்வதாப – அதிபூத, அத்யாத்ம மற்றும் அதிதெய்வ என்னும் மூன்று வித துக்கங்களை (தாபத்ரயங்களை). நின்ன திவ்யத்ரய நாம – உன் திவ்ய (விலக்ஷண சாமர்த்தியம் உள்ள) மூன்று நாமங்கள். களெவுது – பரிகரிக்கிறது. ஸர்வதா – அனைத்து காலங்களில். த்ரயநாம – இந்த நாம த்ரயங்கள். வதனக்கெ – என் வாயில் / நாக்கினில். பந்து ஒதகலோ – நின்று உச்சாரணம் ஆகட்டும். தாபத்ரயங்களின் விவரணைக்கு 153ம் பத்யத்தை பார்க்கலாம்.

அதிபூத (பஞ்சபூதங்கள்), அத்யாத்ம (இந்திரியங்கள் மற்றும் மனஸ்) மற்றும் அதிதெய்வ (தத்வாபிமானி தேவதைகள்) – என தேகத்தில் இருக்கும் இந்த மூன்றில், அந்த நாமங்களால் தானே முக்ய வாச்யனாக இருந்து, நியாமகனாக இருக்கிறான்.

அதிபூதாதிகளில் இருக்கும் ரூப விசேஷங்களே முறையே, அனந்த, கோவிந்த, அச்யுத என்னும் நாமங்கள். இந்த நாமங்களின் ஸ்மரணை, கீர்த்தனைகளால் தாபத்ரயங்களின் பரிகாரம் ஆகின்றன.

நானா பதா³ர்த்த²தொ³ளு நானா ப்ரகாரத³லி
நீனித்து³ ஜக³வ நடெ³ஸுவி | நடெ³ஸுவி ஹரி நீனெ
நானெம்போ³ நரகே³ க³தியுண்டே ||69-(285)

நானாபதார்த்ததலி – பற்பல வகையான எண்ணிக்கையற்ற பொருட்களில். நானாப்ரகாரதலி – அனந்த ரூபங்களால். நீனித்து – நியாமக, அந்தர்யாமி ரூபங்களால் நீயே இருந்து. ஜகவ – உலகினை. நடெஸுவி – நடத்துகிறாய். (அனந்த வியாபாரங்களை நீயே செய்தவாறு ஜகத் பிரவாகத்தை செய்விக்கிறாய்). ஹீகிரலு – இப்படி இருக்கையில். ஹரி – ஹே ஹரியே. நீனெ – இத்தகைய நீயே. நானெம்ப – நான் என்னும் (ஜீவனும் பிரம்மனும் ஒன்றே என்னும்). நரகெ – மனிதனுக்கு. கதியுண்டெ – சத்கதி கிடைக்கிறதா? (எப்போதும் இல்லை – துர்கதியே கிடைக்கிறது).

ஒவ்வொரு பொருட்களிலும்கூட ஸ்ரீஹரி, பற்பல ரூபங்களால் இருக்கிறான். உதாரணம்: மனித தேகத்தில் முழுமையாக வியாபித்த ஒரு ரூபம் இருந்து, தேகத்தில் பஞ்சபூதங்களே முதலான தத்வங்கள், சப்த தாதுக்கள், 27,000 நாடிகள், நக-ரோமங்கள ஆகியவற்றில்கூட தனித்தனியாக ரூபங்களில் இருக்கிறான். இந்த ஒவ்வொரு ரூபங்களில்கூட அனந்த ரூபங்கள் உள்ளன. ஜீவர்களின் கல்பனா சக்தியையே மீறிய இந்த அற்புத மகிமை உள்ள ஸ்ரீஹரி, உலகத்தில் நடக்கும் அனைத்து க்ரியைகளின் கர்தனாக இருக்கிறான்.

தேன வினா த்ருணமபி ந சலதி- அதாவது, ஸ்ரீஹரியின் கர்த்ருத்வம் இல்லாமல் ஒரு புல் கூட நகர்வதில்லை என்று

ஸ்ருதி சொல்கிறது. அல்பனும், அஸ்வதந்த்ரனுமான ஜீவன், இவ்வாறு அற்புத மகிமனான ஹரியே தான் என்று அறிந்தால் 'ஈஷ்வரோsஹம்' ஆகிய சிந்தனையுடன் 'மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம்' என்று சொல்வது போல, வெறும் துக்கமயமான அந்தம்தமஸ்ஸையே அடைகிறான் என்று கீதையில் ஶ்ரீகிருஷ்ணன் தெளிவாக சொல்லியிருக்கிறான்.

அந்தம் தம: ப்ரவிஷந்தி யேsவித்யா முபாஸதே (ஈஷாவாஸ்ய உபநிஷத்). ஜீவைக்யேன து தம் த்யாயன் தமஸ்யந்தே பதேத்ருவம் (காடக பாஷ்ய) ஆகிய ப்ரமாணங்கள், ஹரியே நான் என்று அறியும் மூர்க்கனுக்கு அந்தம்தமஸ்ஸே கதி என்று சொல்கிறது.

ஸேவ்ய ஸேவகரல்லி ஸேவ்ய ஸேவகனாகி[3]
அவ்யக்தனாகி[3] நெலெஸிர்ப்பே | நெலெஸிர்ப்பே ஸர்வதா[3]
ஸேவ்ய நா நினகே[3] ஸரிகா[3]ணே ||70-(286)

ஸேவ்யஸேவகரல்லி - ஸ்வாமி & பக்தர்களில், ஸேவ்யஸேவக னாகி - ஸ்வாமியில் இருந்து. ஸேவ்யனு (வணங்கப்படுபவனும்), ப்ருத்யனல்லித்து (சேவகனும்) சேவை செய்பவனுமாகி. அவ்யக்த னாகி - மறைந்திருந்து. ஸர்வதா - எப்போதும். நெலெஸிர்ப்பெ - இருக்கிறாய். ஸேவ்ய - அனைவராலும் (ரமாதிகளால்) வணங்கப் படும். நினகெ - உனக்கு. நா - நான். ஸரிகாணெ - சமமானவர் என யாரும் இல்லை (அதிகமானவன் இல்லவே இல்லை).

248ம் பத்யத்தில் மேலும் விளக்கத்தை பார்க்கலாம்.

மருளு மனவே கேளு மரெவரே ஹரிநாம
கருணாப்தி[4] கிருஷ்ண அனுகா[3]ல | அனுகா[3]ல ஸலஹுவனு
பரிதே[3] சிந்த்யாகோ நினகி[3]ன்னு ||71-(287)

மருளு மனவே - அறியாத மனமே. (சஞ்சலமான மனமே). கேளு - நான் சொல்வதைக் கேள். ஹரிநாம - ஶ்ரீஹரியின் திவ்ய நாமத்தை. மரெவரே - மறப்பது சரியா? (எப்போதும் சரியல்ல). ஏனெனில், கருணாப்தி கிருஷ்ண - கருணைக்கடலான ஶ்ரீகிருஷ்ணன். அனுகால - எப்போதும். ஸலஹுவனு -

அருள்கிறான். நினகின்னு - உனக்கு. பரிதெ - எப்போதும். சிந்த்யாகோ - கவலைப்படுவதற்கு காரணமே இல்லை.

நற்புத்தியைக் கொண்ட ஜீவன். சஞ்சல மனதிற்கு விவேகத்தை சொல்லும் விதத்தை இங்கு நிரூபிக்கிறார். 'ரக்ஷத்யேவேதி விஷ்வாஸ:', 'ந மே பக்த:ப்ரணஷ்யதி', 'தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸார ஸாகராத்' ஆகியவை ஸ்ரீஹரியே சர்வரக்ஷகன் என்று சொல்கின்றன.

தந்தெ[3] மக்களனு பொரெவந்த[3]த[3]லி ஸ்ரீகாந்த
எந்தெ[3]ந்து[3] தன்ன ப[4]குதர | ப[4]குதர ஸலஹுவ
ஸந்தே[3]ஹவ்யாகோ நினகி[3]ன்னு ||72-(288)

தந்தெ - தந்தை. மக்களனு - தன் மக்களை. பொரெவந்ததலி - (பய துக்கங்களை பரிகரித்து, விருப்பங்களை நிறைவேற்றி) காப்பாற்றுவதைப் போல. ஸ்ரீகாந்த - லட்சுமிபதி. தன்ன - தன். பகதர - பக்தர்களை. ஸலஹுவ - (அனைத்து விதங்களினால்) அருள்வான். இன்னு நினகெ - பிறகு, உனக்கு. ஸந்தேஹவ்யாக - ஹே மனமே. ஏன் சந்தேகம்? (சந்தேகத்தை நீக்கி திடமாக நம்பு).இந்திராவதாரியான அர்ஜுனன், ஸ்ரீகிருஷ்ணனின் விஷ்வரூபத்தைக் கண்டு வணங்கியவாறு, ஸ்ரீகிருஷ்ணனே அனைவரின் முக்ய தந்தையென்று வேண்டிக் கொண்டான்.

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஷ்ச குருர்கரீயான் |
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய:ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் |

சராசர ஜகத்தின் தந்தையும், பரமபூஜ்ய குருவும், நீயே ஆகிறாய். தந்தை மக்களின் அபராதங்களை, நண்பனின் தோஷங்களை, கணவன் தன் மனைவியின் தவறுகளை சகித்துக் கொண்டு மன்னிப்பதைப் போல, நீயும் என் அபராதங்களை மன்னிப்பாயாக என்று பிரார்த்திக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனோ 'பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:' - நானே உலகின் தந்தை, தாய், தாத்தா, ரக்ஷகன் - அனைத்துமாக ஆகியிருக்கிறேன் என்று சொல்கிறான்.

அம்பு³ஜ ப⁴வாண்டதொ³ளு ஒம்ப⁴த்து வித⁴விப்ப
அம்பு³ஜாம்ப³கன விபூ⁴தி | விபூ⁴தி ரூபவனு
காம்பு³வனே யோகி³ ஜக³தொ³ளு ||73-(289)

அம்புஜபவாண்டதொளு – பிரம்மாண்டத்தில். ஒம்பத்து விதவிப்ப – ஒன்பது விதமாக இருக்கும். அம்புஜாம்பகன – புண்டரீகாக்ஷனின் (ஸ்ரீஹரியின்). விபூதிரூபவனு – விபூதி ரூபங்களை. காம்புவனெ – காண்பவனே. ஜகதொளு – உலகில். யோகி – யோகி (யோகசித்தன்).

தன்னாலேயே உருவான உலகில் பற்பல ரூபங்களால் இருக்க விரும்பி, ஸ்ரீஹரி அனந்த ரூபங்களை தரித்தான். 'ஸ்வஸ்யைவ விவிதம் பவனம் வைபவம்' - இந்த ரூபங்களே பகவந்தனின் வைபவங்கள் – விபூதிகள். அந்த ரூபங்களில் தன் விருப்பத்திற் கேற்ப தன் மகிமைகளை வெளிப்படுத்துகிறான். பரமாத்மனின் விபூதிகளில், விசேஷ மகிமைகளை வெளிப்படுத்தும் ரூபங்களை, ப்ரத்யக்ஷ மற்றும் திரோஹித என்று இரு விதங்களாக சொல்லப்படுகிறது.

த்விவிதம் வைபவம் ரூபம் ப்ரத்யக்ஷம் ச த்ரிரோஹிதம் |
கபிலவ்யாஸக்ருஷ்ணாத்யம் ப்ரத்யக்ஷம் வைபவம் ஸ்ம்ருதம் |
பின்னம் பிரம்மாதி ஜீவேப்ய: ஜடேப்யஸ்சாபி தத்கதம் |
ஸ்வஜாத்யாதிக்யகம் தேஷாம் தத்திரோஹித வைபவம் ||

கபில, வியாச, கிருஷ்ணாதி ரூபங்கள் பிரத்யக்ஷ விபூதிகள். ஜீவ ஜடங்களில் இருந்து, அவற்றிலிருந்து வேறுபட்டு, ஜீவஜடங்களில் (பிரம்மாதிகளுக்கு, வஜ்ரகளாத – அஷ்வத்தாதிகளுக்கு எப்படியோ அப்படி) ஸ்வஜாதீய வஸ்துகளல்லி ஆதிக்ய (சிறந்த நிலை) கொடுக்கும் ரூபங்கள் திரோஹித விபூதிகள். விஷ்ணு ரஹஸ்யத்தில் ஸ்ரீஹரியின் விபூதிகளை சல, அசல என்றும், அசலங்களில் சஹஜ, அஹித என்றும், சஹஜத்தில் தீர்த்த க்ஷேத்திர ஷிலா என்றும், பற்பல விதங்களில் பிரித்து நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறு பற்பல பிரமாணங்களால் பற்பல விதமாக நிரூபிக்கப்படும் விபூதிகளை ஸ்ரீஜகன்னாததாஸர், தம் 'ஹரிகதாம்ருதசார'த்தில் பத்து விதங்கள் என்று சொல்கிறார். அவை பின்வருமாறு:

1. நீத – மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்கள்.
2. ஸாதாரண – அனைத்து ஜீவ ஜடத்தில் இருக்கும் ரூபங்கள்
3. விசேஷ – தேவதைகளில் இருக்கும் ரூபங்கள்
4. ஆஹித – தேவதைகளில் இருக்கும் விசேஷ சன்னிதானங்கள்
5. ஸஜாதி – ஐராவதாதி ஸஜாதீயங்களில் இருப்பது.
6. நைஜ – சாளகிராமாதிகளில் இருப்பவை
7. விஜாதி – விஜாதீய வஸ்துகளில் (நட்சத்திரங்களில் சந்திரனைப் போல)
8. ஸஹஜ – சில உத்தம தேவதைகளில் இருக்கும் பலராமாதிகளில் இருக்கும் ஆவேஷ ரூபங்கள்.
9. கண்ட – ஒரு வஸ்துவில் இருக்கும் பற்பல ரூபங்கள்
10. அகண்ட – சர்வவியாபகமான ரூபம் (அல்லது ஒரு வஸ்துவை பூரணமாக வியாபித்து, உள்ளே பற்பல ரூபங்களைக் கொண்ட ஒரே ரூபம்).

இந்த பத்யத்தில் ஒன்பது விபூதிகள் என்று சொல்லியிருப்பதை, விசேஷ மற்றும் அஹித – இரண்டையும் சேர்த்து ஒன்றாக சொல்லியிருப்பதாக அறிய வேண்டும்.

கர்த்ரு கர்மக^{3}ளல்லி காரண க்ரியேக^{3}ளலி
நித்ய நீனித்^{3}து^{3} நடெ^{3}ஸுவி | நடெ^{3}ஸுவி ஜீவர
க்ருத க்ருத்யரனு மாடி^{3} ஸலஹுவி ||74-(290)

கர்த்ரு கர்மகளல்லி – கர்த்தனில் மற்றும் கர்மங்களில். காரண க்ரியெகளலி – காரணங்களான மஹத் அஹங்காராதிகளில் மற்றும் கார்யங்களான பிரம்மாண்ட, தேஹேந்த்ரியாதிகளிலும். நித்ய – அனைத்து காலங்களிலும். நீனித்து – நீயே அந்தரயாமி யாக இருந்து. நடெஸுவி – (அனைத்தையும்) நடத்துகிறாய். ஜீவர – ஜீவர்களை. க்ருதக்ருத்யரனு – தன்யராக. மாடி – அனைத்து ஸாதனைகளையும் நீ செய்து, அவர் மூலமாக செய்வித்து. ஸலஹுவி – அருள்கிறாய்.

கார்ய காரணங்களில் ஸ்ரீஹரியின் வியாப்தியை சொல்லும் ‘பாவாத்வைத’த்தின் விவரணையை 281ம் பத்யத்தில் பார்க்கலாம்.

கர்த்ருகர்ம வ்யபதேஷாத் – என்னும் ஸூத்திரத்திலும், ஆத்மானம் பரஸ்ம்யை ஷம்ஸதி – என்னும் ஐதரேய உபநிஷத்திலும், சர்வகதன் விஷ்ணு அல்லாமல் ஜீவன் அல்ல என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது. உபாஸகனான (கர்த்தனான) ஜீவனில் மற்றும் உபாஸனா க்ரியைகளில், (உபாஸ்யனான தானே உபாஸனா விஷயனும் ஆகி) நியாமக ரூபங்களால் ஸ்ரீஹரியே இருக்கிறான்.

நித்ய ப[4]த்[3]த[3]னு நானு நித்ய முக்தனு நீனு
ப்[4]ருத்யனு நானு ப்ரபு[4] நீனு । ப்ரபு[4] நீனு மூர்லோக
வ்யாப்தனு நீனு அணு நானு ||75-(291)

நானு – நான். நித்யபத்தனு – நித்ய பராதீனன். நீனு – நீ. நித்ய முக்தனு – நித்ய ஸ்வதந்த்ரன். நானு ப்ருத்யனு – நான் உன் சேவகன் (வேறு யாரின் அதீனனும் அல்ல). நீனு பிரபு – நீ என் தலைவன். நீ மூர்லோக வியாப்தனு – நீ அனைத்து இடங்களிலும் வியாப்தன். நானு – நான். அணு – அணு மாத்ர ஸ்வரூபனாக இருக்கிறேன். ஜீவேஷ்வரரின் ஸ்வரூப தர்மங்களில் சிலவற்றை 223ம் பத்யத்தில் பார்த்திருக்கிறோம். அந்த பத்யத்தின் சிறப்புக் குறிப்புகளை பார்க்கலாம்.

நித்யபத்தனு நானு – என்று நித்ய ஸம்சாரி ஜீவன் என்னும் அர்த்தத்தை சொல்கிறது. ஆனால் இங்கு வெறும் நித்ய சம்சாரி ஜீவருக்கும் பரமாத்மனுக்கும் இருக்கும் வேறுபாட்டினை நிரூபிப்பது ஸ்ரீதாஸார்யரின் அபிப்பிராயம் அல்ல. ‘நித்ய’ என்பதற்கு ‘ஒரு நியமத்துடன் – தவறாமல்’ என்னும் அர்த்தமும் உள்ளது. ‘நித்யபத்தோ நித்யமுக்தோ ஏக ஏவேதி மே மதி:’ (பாகவத) என்று, வெறும் ஐக்யவாதிகளில் (ஜீவேஷ்வர ஐக்ய வாதிகளில்) ஒரு பகுதியினரான ஏகஜீவ வாதிகளின் பட்சத்தை சொல்லி பக்த உத்தவன், தத்வ நிஸ்சயார்த்தமாக ஸ்ரீகிருஷ்ணனை, நித்ய முக்தனும், நித்யபத்தனும் ஒருவனே எப்படியென்று கேட்க, ஸ்ரீகிருஷ்ணன், பந்த மோட்சங்கள் ப்ராக்ருத குணபந்தமுள்ள ஜீவனுக்கு மட்டுமே தவிர, நிர்குணனும் ஸ்வதந்த்ரனுமான தனக்கு எந்த காலத்திற்கும் பந்த மோட்சங்கள் இல்லை என்று சொல்கிறான்.

ஜீவர்கள் அனைவரும் நித்யபத்தரே என்பதை தாத்பர்யத்தில் ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதர், பின்வரும் வாக்கியங்களால் நிரூபிக்கிறார்.

முக்தஸ்யாபி து பத்தத்வமஸ்தி யத்ஸஹரேர்வஷ: |
முக்தாக்யா துக்கமோக்ஷாத்ஸ்யாத் பத்தாக்யா ஹர்யதீனதா |
நித்யபத்தா அபி ததோ முக்தா துக்கவிமோக்ஷத: |
நித்யமுக்தஸ்த்வேக ஏவ ஹரிர் நாராயண: பிரபு: ||

ஸ்ரீஹரியின் வசமானதால் முக்தனுக்கும் பத்தத்வம் இருக்கிறது. துக்க விமோசனமே முக்தன் என்னும் நாமத்திற்கு காரணம். ஸ்ரீஹரியின் அதீனமே பத்தன் என்னும் நாமத்திற்கு காரணம். ஆகையால், முக்தன் ஆனாலும் ஜீவன் நித்யபத்தரே ஆவர். ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரி ஒருவனே நித்யமுக்தன்.

ஹ்ருஷிக நியாமகனே விஷயதொ[3]ளு நீ நிந்து[1]
ப்ரஸுகா[2]த்மனாகி[3] ரமிஸுவி |ரமிஸுவி ஜீவர மோ
ஹிஸி திளியகொ[3]ட[3]தே[3] இருதி[3]ர்ப்பே ||76-(292)

ஹ்ருஷிக நியாமகனே – ஸர்வேந்த்ரிய நியாமகனான ஹே ஸ்ரீனிவாசனே. விஷயதொளு – இந்திரியங்களால் போக்யமான விஷயங்களில். நீ – நீயே. நிந்து – இருந்து. ப்ரஸுகாத்மனாகி – பூர்ணானந்த ஸ்வரூபனாகி. ஸ்வரமணனாக இருக்கும் நீ. ரமிஸுவி – விஷயங்களை போகிக்கிறாய். ரமிஸி – அப்படி ஜீவர்களில் விளையாடியவாறு இருந்து. ஜீவரனு – ஜீவர்களை. மோஹிஸி – விஷய போகத்தினால் மயக்கி. திளியகொடதெ – நித்ய போக ப்ரகாரங்களை தெரிவிக்காமல். இருதிர்ப்பெ – எப்போதும் இருக்கிறாய்.

இந்திரியங்களிலும் விஷயங்களிலும் ஸ்ரீஹரி நியாமக ரூபங்களால் இருந்து, இந்திரியங்களால் விஷயங்களை தானும் போகிக்கிறான் – ஜீவர்களுக்கும் கொடுக்கிறான். விஷயபோகத்தில் மோகத்தைக் உருவாக்குகிறான். என்று ஞானிகள் மட்டும் அறிகின்றனர். அஞ்ஞானிகள் இவ்வாறு அறிவதில்லை.

ஸ்ரோத்ரம் சக்ஷு: ஸ்வர்ஷனம் ச ரஸனம் க்ராணமேவ ச |

அதிஷ்டாய மனஸ்சாயம் விஷயானுபஸேவதே |
உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்சானம் வா குணான்விதம் |
விமூடா நானுபஷ்யந்தி பஷ்யந்தி ஞானசக்ஷுஷ: || (கீதை)

ஸ்ரோத்ர (காது) முதலான ஐந்து ஞானேந்திரியங்களிலும், மனஸ்ஸிலும் இருந்து, சுப விஷயங்களை, (தேகத்தில் இருந்து) ஸ்ரீஹரி போகிக்கிறான். தேகத்தை விட்டு, ஜீவர்களுடன் பிரயாணம் செய்கிறான். ஸ்ரீஹரியின் இந்த வியாபாரங்களை ஞானிகள் அறிகின்றனர். அஞ்ஞானிகள் அறிவதில்லை. இவ்வாறு, இந்திரியங்கள் மூலமாக சுப விஷயங்களை நான் போகிக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ணனே சொல்லிக் கொள்கிறான்.

விஷயங்களை போகிப்பவன் தான் என்றும், இந்திரியங்கள் தன் அதீனங்கள் என்றும், விஷய போகத்திலிருந்து வந்த சுகம் அல்லாமல் அன்ய சுகம் இல்லை என்றும், அறிவதே மோகம். இந்த மோகத்தை உருவாக்குபவன் ஸ்ரீஹரியே.

ஸ்ரீஹரி, சுபங்களை மட்டும் போகிக்கிறான் என்றும், அசுபங்களை போகிப்பதில்லை என்றும் 'ஷுபம் பிபத்யஸௌ நித்யம் நாஷுபம் ஸ ஹரி: பிபேத்' (ஸ்ருதி) ஆகியவை தெளிவாக கூறுகின்றன. 'ஸ ஸர்வ போக்தா' ஆகிய அனேக பிரமாண வாக்கியங்கள் அவனை ஸர்வபோக உள்ளவன் என்றும் சொல்கின்றன. இந்த (இங்கு கூறியிருக்கும்) விரோதத்தை பரிகரிக்க வேண்டுமென்றால் 'போக' ஷப்தத்தின் அர்த்தத்தை தெளிவாக அறியவேண்டியது அவசியம்.

ஸ்ரீஹரி பூர்ணகாமன், ஆனந்த ஸ்வரூபனும் ஆகையால், சுப விஷயங்களின் போகத்தினால், தனக்கு எவ்வித பிரயோஜனமும் இல்லை. ஸ்வதந்த்ரனும் சர்வ ஷக்தனும் ஆகையால், சுப விஷயங்களையும் அதிலிருந்து வரும் துக்கங்களை போகிப்பதில்லை என்பது சரியே.

ஸ்வபிரயோஜனத்திற்காக (ஸ்வ சுகார்த்தமாக) ஸ்வீகரிப்பது போகம். இந்த அர்த்தத்தில் ஸ்ரீஹரி எதையும் போகிப்பதில்லை - போகிக்கவும் வேண்டியதில்லை. மேலும், போகம் என்றால், அனுபவிப்பது, உண்பது என்னும் அர்த்தமும் உள்ளது. இந்த அர்த்தத்தில் ஸ்ரீஹரி அசுபத்தை போகிப்பதே இல்லை -

பக்தர்களால் அர்ப்பிதமான சுபத்தை போகிக்கிறான். ஸ்வ ப்ரயோஜன இல்லையென்றாலும், ஸ்வீகரிப்பது என்பது 'போக' ஷப்தத்தின் உள் அர்த்தமாகும். இந்த அர்த்தத்தில் ஸ்ரீஹரி சர்வபோக்தன். இந்திரியங்களில் இருந்து சுப விஷயங்களை ஸ்வீகரிப்பது ஜீவர்களுக்கு சுகத்தை கொடுப்பதற்காக மட்டுமே - ஸ்வ-சுகத்திற்காக அல்ல.

அசுபங்களை ஸ்ரீஹரி போகிக்காமல் இருந்தால், அவற்றின் போகம் ஜீவர்களுக்கு உண்டாவது எப்படி என்பதை அறிய வேண்டும். அஷுப போகம் (அதிலிருந்து வரும் துக்கமும்) ஜீவர்களுக்கு உண்டாகட்டும் என்னும் விரும்புவதே ஸ்ரீஹரியின் ஒப்புதல் ஆகும்.

ஸ்வீகார என்பது பற்பல விதமாகும். பிரஜைகள் தம் அரசனுக்கு பலபுஷ்பாதி காணிக்கைகளை அர்ப்பிக்கின்றனர். அரசன் சிலவற்றை, பார்வையால் மட்டுமே பார்த்து ஏற்றுக் கொள்கிறான். மற்றும் சிலவற்றை, அவற்றை வைத்து சமர்ப்பிக்கப்பட்ட தட்டினை தொட்டு ஏற்றுக் கொள்கிறான். தன்னில் அதிக பக்தி மரியாதை களைக் கொண்ட சிலர்களுக்கு (தனக்கு பிரியமானவர்களுக்கு) மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காக, அவர்களின் தட்டினை கையில் ஏற்றுக் கொண்டு, அதில் இருக்கும் ஒரு புஷ்பத்தை தானே தரிக்கிறான். ஒரு பழத்தினை உண்கிறான் அல்லது ஒரு ஆபரணத்தை தன் கழுத்தில் தான் தரிக்கிறான். இதனால், அதனை அர்ப்பித்த மக்களுக்கு விசேஷ மகிழ்ச்சி உண்டாகிறது.

இவ்வாறே, ஸ்ரீஹரி, தான் சுகபூர்ணன் ஆனாலும், பக்தர்களுக்கு சுகத்தைக் கொடுப்பதற்கு தானும் போகிக்கிறான். இந்திரியாதிகளில் இருக்கும் (அத்தகைய அனுசந்தானம் கொண்ட பக்தன்) ஸ்ரீஹரிக்கு அர்ப்பிதம் என்று விஷயங்களை போகிப்பதற்கு, ஸ்ரீஹரி சுக விசேஷத்தை அருள்கிறான். ராமகிருஷ்ணாதி அவதார ரூபங்களால், வெண்ணை பழம் முதலான ப்ராக்ருத வஸ்துகளை உண்பதைப் போல, இந்திரியங்களில் இருந்து ப்ராக்ருத விஷயங்களை போகிப்பதில்லை - விஷயங்களில் இருக்கும் (போக்ய வஸ்துவில் இருக்கும்) ஸ்வாக்ய ரசத்தை மட்டும் போகிக்கிறான்.

ஒவ்வொரு போக்யபதார்த்தமும் ஆறு வித ரசங்களைக் கொண்டது. 1. ஸ்வ ரஸ – இது பகவத் ஆத்மகமே. அவனின் ஒரு ரூபவிசேஷமே ஆகிறது. 2. லட்சுமி போக்யரஸ. 3. பிரம்ம முதலான ருஜுகண தேவதா போக்யரஸ. 4. மற்ற தத்வாபிமானி போக்ய ரஸ 5. அபரோக்ஷ ஞானிகளின் ஸ்வீகார போக்ய ரஸ 6. தேஹாபிமானி ஜீவ போக்யரஸ. இந்த போக சம்பந்த ரஹஸ்ய விசேஷங்களை ஷாஸ்த்ர பயிற்சி, குரு உபதேசங்களின் மூலம் பெறவேண்டும்.

ஸ்ரீப்ராண நாயகனே ஈ ப்ராணிக³ள மேலே
ஸுப்ரீதனாகி³ ஸலஹெந்து³ | ஸலஹெந்து³ ஸர்வதா³
நா ப்ரார்த்திஸுவேனோ பரமாத்மா ||77-(293)

ஸ்ரீபிராண நாயகனெ – லட்சுமிதேவி மற்றும் முக்யபிராணருக்கும் நாதனான. பரமாத்ம - ஹே ஸ்ரீனிவாஸனே. நீ – நீ. பிராணிகள மேலெ – ஜீவர்கள் மேல். ஸுப்ரீதனாகி – மகிழ்ந்து. ஸலஹெந்து – அருள்வாயாக என்று, நா – நான். ஸர்வதா – எப்போதும். பிரார்த்திசுவெனோ – வேண்டிக் கொள்கிறேன் ஸ்வாமி.

அனைத்து பிராணிகளுக்கும் சுகத்தை வேண்டுவது ஸத் புருஷர்களின் ஸ்வபாவம். ஆனால், அந்த கோரிக்கை அனைவரையும் ஒரேமாதிரியாக அருளவேண்டும் என்ற பிரார்த்தனை என்று நினைக்கக்கூடாது. துஷ்டர்களை அழிப்பதும், காக்கும் விதமே ஆகும் மற்றும் அந்த துஷ்டர்களுக்கு ஸ்வயோக்ய கதியை கொடுப்பதாகவும் ஆகிறது. ஆகையால் ‘ஸலஹு’ என்பதற்கு ஸ்வஸ்வயோக்ய கதிப்ரதனாகு என்னும் அர்த்தத்தை அறிய வேண்டும்.

அன்ன, வஸ்திராதிகளால் ஆகும் தேக பாதுகாப்பு, அனைவருக்கும் ஸ்ரீஹரியினாலேயே ஆகிறது. இப்படியான லௌகிக ரக்ஷணை க்காக ஸ்ரீஹரியை ‘ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து’ என்று சத்புருஷர் (தேவதைகள் அல்லாத பிறர்) வேண்டுவது சரியானதே ஆகும்.

அனக^4 ரோக^{3}க்^{4}ன எந்தி^{3}னிது மங்க^{3}ள நாம
நெனெயெ து^{3}ரிதக^{3}ளு ப^{3}ரலுண்டே । ப^{3}ரலுண்டே லோகத^3
ஜனர த^{4}ன்வந்த்ரி காபாடோ^{3} ||78-(294)

தன்வந்த்ரி – ஹே தன்வந்திரி ரூபனான ஸ்ரீனிவாஸனே. அனக – தோஷதூர. ரோகக்ன - சர்வரோக வினாஷக. எந்தினிது – என்னும் இவ்வளவு. மங்கள நாம – சுப நாமங்களை. நெனெயெ – நினைத்தால். துரிதகளு – பாவங்கள் (தத் பலங்களான ரோகாதி உபத்ரவங்கள்) பரலுண்டெ – என் அருகில் வருவதற்கும் சாத்தியமா? சாத்தியம் இல்லை. லோகத ஜனர – சம்சாரி ஜீவர்களை. காபாடோ – காப்பாற்று ஸ்வாமி.

தன்வந்தரிஸ்ச பகவான் ஸ்வயமேவ கீர்த்தி
நாம்னா ந்ருணா புருருஜாம் ருஜ ஆஷு ஹந்தி ।
யக்ஞே ச பாகமம்ருதாயுரமாவருந்த
ஆயுஸ்ச வேதமனுஷாஸ்த்யவதீர்ய லோகே || (பாகவத)

சாக்ஷாத் விஷ்ணுவே தன்வந்தரி நாமத்தினால் அவதரித்து, ஆயுர் வேதத்தை உபதேசித்தான். தன்வந்தரியின் நாம கீர்த்தனையினால் மக்களின் உக்ரமான நோய்கள் (பவரோகமும்) பரிஹாரம் ஆகிறது என்று ஸ்ரீவிஷ்ணு மகிமை நிரூபிக்கப்படுகிறது. பற்பல பாவங்களே அனைத்து ரோகங்களுக்கு காரணம். பாவங்கள் தீர்ந்தால், நோய்கள் வராது. இப்படியான க்ஷேமம், தன்வந்தரியின் உபாசனையால் தவறாமல் கிடைக்கிறது என்று பத்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாராயண வர்மத்திலும் ஸ்ரீதன்வந்திரியின் துதி இருக்கிறது. இதன் உபதேசத்தைப் பெற்று, அருளைப் பெற்ற பகவத் பக்தரின் உதாரணங்கள் ஏராளமாக உள்ளன. பாகவதத்தில், தேவேந்திரனே உபதேசம் பெற்று விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நின்ன கொண்டா^{3}டி^{3}த^{3}ந்தன்யரனு கொண்டாடே^{3}
நின்னனே நோட^3 ப^{3}யஸுவே । ப^{3}யஸுவே பே^{3}ஸரதே^{3}
என்ன குலதெ^{3}ய்வ ஸுக^{2}வீயோ ||79-(295)

நின்ன – உன்னை. கொண்டாடிதந்தெ – வணங்கியதைப் போல. அன்யரனு – பிறரை. கொண்டாடெ – வணங்க மாட்டேன்.

நின்னனெ - உன்னையே. பேஸரதெ - போதும் என்னும் புத்தி யில்லாமல். நோடபயஸுவெ - பார்க்க விரும்புகிறேன். என்ன - என். குலதெய்வ - குலஸ்வாமியே. (ஞானிகளால் வணங்கப் படுபவனே). ஸுகவீயோ - இந்த சுகத்தை கொடுப்பாயாக. அல்லது பேஸரதெ - என் நிரந்தர வேண்டுதலை புறக்கணிக்காமல், சுகத்தைக் கொடுப்பாயாக.

அபரோக்ஷ ஞானிகளுக்கு சமாதியில் கிடைக்கும் பகவத் தரிசனம் தற்காலிகமானது. அந்தந்த பக்தர்களின் தகுதிக்கேற்ப அந்த காலத்தில் மட்டும் தரிசனம் கிடைக்கிறது. 'ஸுகமாத்மந்திகம் யத்தத் புத்திக்ராஹ்ய மதீந்த்ரியம் (கீதை) என்று சொல்வதைப் போல, ஹரிதரிசனத்தால் ஆகும் சுகம் வேறானது மற்றும் அந்த அனுபவத்தின் காலம் அதிகமானது. பகவத் ரூபம், மறைந்த பிறகு அனேக ஞானிகள், மிகச்சிறந்த ரத்தினத்தை இழந்தவர்களைப் போல, துக்கப்படுகின்றனர். அத்தகைய சுகம் நீண்ட காலத்திற்கு இருக்கவேண்டும் என்று யாரும் விரும்புவதில்லையா? அந்த சுகானுபவத்தில் கெட்ட புத்தி உண்டாவதற்கு சாத்தியம் இல்லை. தரிசனத்திற்காக நீண்ட காலம் உற்சாக பாவத்துடன் இருக்கும் நிலையை நிரூபிக்கிறது - இந்த நுடி.

முஹூர்த்தமாத்ரம் ஞானம் ஸ்யான்மஹாஞானம் ததோऽதிகம் |
ஞானேன பிரம்மலோக: ஸ்யான்மஹா ஞானாத்தரோ்கதி: |
ஸதெய்வாகண்டிதம் ஞானம் தப இத்யுச்யதே புதை: |
அபரோக்ஷத்ருஷா யுக்தம் நித்யம் ஷண்மாத்ர காலயா |
அபரோக்ஷத்ருஷா யுக்தம் ஏகமாத்ரயுஜா யுதம் |
யோக நாம்னா ஸமுத்திஷ்டம் த்யானம் நித்யமகண்டிதம் |
தச்சதுர்பாகயா நித்யமபரோக்ஷத்ருஷா யுதம் |
பாதயோகாக்யமுத்திஷ்டம் த்யானம் நித்யமகண்டிதம் |
பாதயோகான் மஹர்லோகொ ஜனோலோகஸ்து யோகத: |
தபஸஸ்து தபோலோக: ப்ராப்யதே நான்யத: க்வசித் ||
(பாகவத தாத்பர்ய)

என்னும் இந்த பிரமாணங்கள், அபரோக்ஷத்தில் பகவத் தரிசனம் ஆகும் கால அளவுகளையும், கிடைக்கும் லோகங்களையும் சொல்கிறது. இந்த வாக்கியங்களின் பொருள் இவ்வாறு உள்ளது.

தினமும் தியானத்தின் ஒரு முஹூர்த்தத்தின் வரை (இரு நாழிகை காலம்), பகவத் ரூபத்தின் பிரத்யட்சம் ஆனால், அதனை ‘ஞான’ என்றும், இரு முஹூர்த்தங்களின் காலம் தரிசனம் ஆனால், அதனை ‘மஹாஞான’ என்றும் அழைக்கின்றனர். ஞானத்தினால் ஸத்யலோகமும், மஹாஞானத்தினால் வைகுண்ட லோகமும் கிடைக்கின்றன. ஆறு மாத்திரைகளின் காலம் (மாத்திரை – ஒரு மெய்யெழுத்து உச்சரிக்கும் காலம்) தரிசனம் ஆனால், ‘தப’ என்றும், ஒரு மாத்திரை காலம் தரிசனம் ஆனால் ‘யோக’ என்றும் சொல்லப்படுகிறது. கால் மாத்திரை அளவு காலம் (மின்னலைப் போல ஒளிர்ந்து மறைவது) தரிசனம் ‘பாதயோக’ எனப்படுகிறது.

பாதயோகத்தினால் மஹர்லோகமும் யோகத்தினால் ஜன லோகமும், தபத்தினால் தபோலோகமும் கிடைக்கின்றன.

நீரு த்ருணவீயே கோ க்ஷீரவனு கரெவந்தெ
ஸூரிக³ளு மாள்ப அபராத⁴ | அபராத⁴ ஸ்வீகரிஸி
ஸாரூப்யவீவே ஸர்வக்ஞ ||80-(296)

நீரு த்ருணவீயெ – தண்ணீர் புற்களைக் கொடுக்க. கோ – பசு (அதனை தின்று). க்ஷீரவனு – பாலினை. கரெவந்தெ – கொடுப்பதைப் போல. ஸூரிகளு – உன் மகிமைகளின் ஞானம் உள்ள பக்தர்கள். மாள்ப – செய்யும். அபராத – தோஷமான அல்ப செயல்களைக்கூட. ஸ்வீகரிஸி – ஏற்றுக்கொண்டு. ஸர்வக்ஞ – அனைத்தையும் அறிந்த (ஞானிகள் – நீயே ஸ்வதந்த்ர கர்த்தனாக செய்து செய்விக்கிறாய் என்னும் அனுசந்தானம் உள்ளவர்கள்). ஹே ஸர்வக்ஞ! ஸாரூப்யவ – சாரூப்ய முக்தியை (நிர்துக்கா னந்தத்தை). ஈவெ – அருள்கிறாய்.

1. துச்சமான சிறு புற்களை ஏற்றுக்கொண்டு அமிர்தத்தைப் போன்றதான பாலினைக் கொடுக்கும் கோமாதாவைப் போல, பரமாத்மன் ஞானிகளின் அல்பஸேவையை ஏற்றுக்கொண்டு, முக்தியையே கொடுக்கிறான்.

2. ‘ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேனாக்னிரிவாவ்ருதா:’, ‘ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத்’ ஆகிய கீதா வாக்கியங்கள், சர்வகர்மங்களும் தோஷத்துடனே இருக்கின்றன

என்றும், அக்னியானது புகையிலிருந்து வெளிவருவதைப் போல, தோஷங்களைக் கொண்டிருந்தாலும், ஸ்வதர்மத்தை பின்பற்றவே வேண்டும் என்று சொல்கிறது.

3. தோஷங்கள் அற்ற கர்மங்களை செய்வதில் சதுர்முகன் ஒருவனே சமர்த்தன். பிறர்,

யஸ்ய ஸ்ம்ருத்யாச நாமோக்த்யா தப:ஸந்த்யா க்ரியாதிஷு |
ந்யூனம் சம்பூர்ணதாம் யாதி ஸத்யோ வந்தே தமச்யுதம் ||

என்னும் மந்திரத்தை சொல்லி, கர்மத்தின் குறைகளின் பரிபூர்ணத்திற்காக ஸ்ரீஹரியையே சரணாகதி அடையவேண்டும்.

4. அல்பமாத்ரக்ருதோ தர்மோ பவேத் ஞானவதோ மஹான் (பாரத); ரிஷிமாத்யம் ந பத்னாதி பாபீயாம்ஸ்த்வாம் ரஜோகுண: (பாகவத); அதாவது, ஞானிகளின் அல்ப கர்மங்களும் மஹா பலன்களைக் கொடுக்க வல்லவை என்று பாரதத்திலும், ஆதிரிஷி என்னும் சதுர்முகனை பாப காரணமான ரஜோகுணம் நெருங்குவதில்லை என்று பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. இந்த பத்யத்தில் 'அபராத' ஷப்த, தோஷங்களைக் கொண்ட கர்மங்களையும், கர்த்ருத்வாபிமானம் இல்லாத பக்தர்கள், செய்யத் தக்க நிஷித்த கர்மங்களையும் கொண்டிருக்கிறது. 'தர்மோ பவத்ய தர்மோऽபி க்ருதோ பக்த்யைஸ்தவாச்யுத' - பக்தர்கள் செய்த அதர்மமும் தர்மம் என்று கருதப்பட்டு, ஸ்ரீஹரியினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்னும் அர்த்தத்தில் மட்டும் 'அபராத ஸ்வீகரிஸி' என்று இருக்கிறது.

நின்ன ஸங்கல்பக்கே அன்யதா²வாகி³ப்ப
புண்யகர்மக³ள நானொல்லெ | நானொல்லெ ஸ்ரீஹரியே
மன்னிஸை நின்ன மனத³ந்தே ||81-(297)

நின்ன ஸங்கல்பக்கெ – உன் விருப்பத்திற்கு. அன்யதாவாகிப்ப – எதிராக இருக்கும். புண்யகர்மகள – புண்யகரமான கர்மங்களை. நானொல்லெ – நான் செய்ய விரும்புவதில்லை. ஸ்ரீஹரியெ – ஹே ஸ்ரீனிவாசனே. நின்ன மனதந்தெ – உன் விருப்பப்படி. மன்னிஸை – என்னை நடத்து. (எதிர்பாராமல் செய்துவிட்ட

தவறுகளை மன்னித்து, உன் விருப்பப்படியே என் விருப்பமும் இருக்குமாறு அருளி காப்பாற்று).

யதாகாமம் சரதி யதாகாமம் பிபதி யதாகாமம் ரமதீ
யதாகாமமுபரமதே முக்தானாம் நைவ காம: ஸ்யாத் |
ந சாயோக்யம் விமுக்தோऽபி ப்ராப்னுயான்ன ச காமயேத் ||

ஆகிய ஸ்ருதிகள், முக்தஜீவன் பகவத் காமானுசாரமான காமனைகள் உள்ளவன் என்று அயோக்ய செயல்களை என்று விரும்பமாட்டான் என்று சொல்கிறது. ஜீவன்முக்தன் (அபரோக்ஷ ஞானி) முழுமையாக ஹரியின் விருப்பத்திற்கேற்ப, முக்தனைப் போல நடப்பதற்கு விரும்புவான். ப்ராரப்த கர்மத்தினால், வேறு விருப்பங்கள் விலகட்டும் என்று நினைப்பான். ஸ்ரீஹரி ப்ரீதியையே விரும்பி, புண்ய பாப கர்மங்களையும், வேறு எதையும் விரும்ப மாட்டான்.

நின்ன துதிபுத³கிந்த புண்ய பேரே³னய்ய
நின்னங்க்⁴ரி ப⁴ஜனெ ஸுக²கிந்த | ஸுக²கிந்த புருஷார்த்த²
இன்னுண்டே ஸ்வாமி ஜக³தொ³ளு ||82-(298)

நின்ன – உன்னை. துதிபுதக்கிந்த – வணங்குவதை விட. பேரெ – வேறான. புண்ய – சத்கர்ம (சுகத்தைக் கொடுக்கும் செயல்கள்). ஏனய்யா – எது இருக்கிறது ஸ்வாமி. நின்ன – உன். அங்க்ரிபஜனெ – பாத தியானத்தினால் கிடைக்கும். ஸுககிந்த – சுகத்தைவிட. ஜகதொளு – உலகில். புருஷார்த்த – ஜீவாபேக்ஷித பலன்கள். இன்னுண்டெ ஸ்வாமி – வேறு இருக்கிறதா? ஸ்வாமி?

ஸ்ரீஹரிஸ்துதியைவிட அதிகம் புண்ணியம் வேறெதுவும் இல்லை. அவனின் தியானத்தைவிட உத்தம சுகம் இல்லை மற்றும் துக்க சாகரத்தை தாண்ட வைக்கும் ஸாதனம் வேறு இல்லை.

ததேவ புண்யம் ருசிரம் நவம் நவம்
ததேவ ஷஷ்வன்மனஸோ மஹோத்ஸவம் |
ததேவ ஷோகார்ணவஷோஷணம் ந்ருணாம்
யத்ரோத்தமஷ்லோகய ஷோனுகீயதே || (பாகவத)

என்று ஸ்ரீஹரி குணங்களின் கீர்த்தனையின் சிறப்பு நிரூபிக்கப் பட்டதையே ஸ்ரீதாஸார்யர் இந்த பத்யத்தில் சொல்லியிருக்கிறார்.

தே3ஶ காலாதி3க3ளிகீ3ஶ நீனெந்த3ரிது3
பாஸனெய கெ3ய்வ ப4குதரு | ப4குதரெல்லித்த3ரு
தோ3ஷவெல்லிஹுதோ3 அவரிகெ3 ||83-(299)

தேஷகாலாதிகளிகெ – தேஷ, கால ஆகியவற்றிற்கு ஈஷ – ஸ்வாமி (நியாமகன்), நீனெந்து – நீயே என்று. அரிது – அறிந்து. உபாஸனெய – தியானத்தை. கெய்வ – செய்யும். பஜகரு – சேவகர்கள் (பக்தர்கள்). எல்லித்தரு – எந்த தேசத்தில் இருந்தாலும். அவரிகெ – அந்த பக்தர்களுக்கு (தேஷ காலாதிகளின் ஈஷன் என்று அறிந்தவர் என்னும் காரணத்தினால்). தோஷவு – (பாபாதி) தோஷங்கள். எல்லிஹுதோ – எங்கு இருக்கிறது? (இல்லவே இல்லை).

தேஷகாலங்களை சம்பந்தப்படுத்தியே அனைத்து வஸ்துகளும் இருக்கின்றன. தேஷகாலங்களை அனைத்தும் அண்டியிருக்கின்றன. ஆனால் பரமாத்மன் மட்டும் அவற்றை நம்பி இல்லை. அவனே அவற்றின் நியாமகனாக, தலைவனாக இருக்கிறான்.

அணுமாத்ர பிரவேஷத்தில் அனந்தஜீவர்களை நிறுவுகிறான். அணு பிரதேஷத்தில் விஸ்தாரமான லோகங்களையே நிர்மாணம் செய்கிறான். அனாதி காலத்தினால் அனந்த பிரம்மாதி ஜீவர்கள் முக்தராக இருக்கின்றனர். அடுத்து அனந்த காலத்தின் வரைக்கும் அனந்த ஜீவர்கள் முக்தராகிக் கொண்டிருக்கின்றனர். இப்படி இருந்தாலும், வைகுண்டாதி முக்த லோகங்களில் இடப் பற்றாக் குறை இருக்கிறது என்னும் நிலை என்றும் உண்டாவதில்லை. நெருக்கடியும் இல்லை. விஸ்தாரமான அரண்மனை,

தோட்டங்களுடன் உள்ள இடங்களில், முக்தர்கள் சஞ்சரித்துக் கொண்டே இருக்கிறார்கள். காலகதியும் ஸ்ரீஹரியின் அதீனமே ஆகிறது. கால ஏற்பாட்டிற்கு நிமித்த காரணங்களான, ஜகத் ஸ்ருஷ்டி லயாதிகள், சூர்ய, சந்திர, க்ரஹ, நட்சத்திராதிகளின் கதிகளும் ஸ்ரீஹரியின் விருப்பத்தினாலேயே ஆகிறது.

த்ரவ்யம் கர்ம ச காலஸ்ச ஸ்வபாவோ ஜீவ ஏவ ச |
யதனுக்ரஹத: ஸந்தி ந ஸந்தி யதுபேக்ஷயா ||

என்னும் ஸ்ருதி, காலாதிகளும்கூட ஸ்ரீஹரியின் அதீனமாகியே இருக்கின்றன என்று சொல்கிறது.

ஈஷோ தேஷஸ்ச காலஸ்ச ஸ்வகதா ஏவ ஸர்வதா |
ஈஷாதீனௌ ச தௌ நித்யம் ததாதாரௌ ச தத்கதௌ ||
(சரஸ பாரதி விலாஸ)

ஈஷ, தேஷ, காலங்கள் தம்மில் தாமே இருக்கத்தக்கவை (ஸ்வகத மானவை). தேஷகாலங்கள் நித்ய மற்றும் ஸ்வகதமானவை (பரதந்த்ரங்கள்) ஆனாலும், ஸ்வதந்த்ரம் அல்ல. தேஷ காலங்களின் ஈஷாதீனத்வ ஸ்வரூப விஷயத்தில் (space-time concept), நவீன விக்ஞானிகளின் கற்பனைக்கும் மீறிய விஷயங்களை, நம் பண்டைய ரிஷிமுனிவர்கள் பெற்றிருந்து, ஸ்ருதியில் சொல்லப்பட்ட உண்மைகளை பின்பற்றி வந்தனர் என்பதை, இந்த பிரமேயத்தின் சாஸ்திர ரஹஸ்யங்களை தீவிரமாக படித்தாலே அறியலாம்.

ஸ்ரீஹரி, தன் அவதார லீலைகளால் தேஷ காலாதிகளின் நியாமகத்வ மகிமையினை வெளிப்படுத்தினான். பாரதத்தில் சொல்லியபடி, ஸ்ரீகிருஷ்ணன் ஒரு நாளில் அஷ்வமேத யாகத்தை செய்த கதை, இந்த மகிமையை சொல்கிறது. யாகதீக்ஷிதனான ஸ்ரீகிருஷ்ணன், பிராமண புத்திரனை காப்பாற்ற முடியாமல் போன அர்ஜுனன் அக்னிபிரவேசம் செய்ய தயாரானதைக் கண்டு, அனேக கோடி யோஜன தூரத்தில் இருக்கும் கடல்களைத் தாண்டி, அனந்தாஸன என்னும் தன் இடத்திற்கு வந்து, ரதத்தில் அமர்ந்திருந்த அர்ஜுனனையும், பிராமணனையும் வெளியே நிறுத்தி, தான், உள்ளே நுழைந்து, அந்த புத்திரனைக் கொண்டு வந்து, திரும்ப த்வாரகைக்கு வந்து, யாகத்தை அதே நாளிலேயே செய்து முடித்தான். அந்த யாக குதிரையானது, லட்ச யோஜனை விஸ்தாரமான பூமண்டலத்தையே சுற்றி வந்தது. பீமஸேனன் அதன் பாதுகாப்பிற்காக அதனை பின்னர் சென்று, வெற்றியாளனாக திரும்பி வந்தான்.

ஹய: ஸ க்ருஷ்ண நிர்மிதோ தினேன லக்ஷயோஜனம் |
வ்ருகோதராதிபிஸ்து தைர்ஹயஸ்ச திவ்ய ஆயயௌ ||
சக்ரே ஸார்த்தமுஹூர்த்தேன புனர்மகம் .. முதலான (பாரத தாத்பர்ய) வாக்கியங்கள் ஸ்ரீகிருஷ்ணனின் தேஷகாலங்களை ஆக்ரமிக்கும் சாமர்த்தியத்தை விளக்குகின்றன.

இன்னொரு சமயத்தில், ஈஸ்வரனைக் குறித்து தவம் செய்து பிரத்யும்னனை பெற்றது போல, அஞ்ஞானிகளின் மோகனத்திற்காக, கிரகங்களை 12 ராசிகளில் வேகமாக சுழல வைத்து, மிகச்சிறிய காலத்தில் அந்த விரதத்தை செய்து முடித்தான் என்னும் கதை, ஸ்ரீகிருஷ்ணனின் இதே மகிமையையே விளக்குகிறது.

நரகாசுரனைக் கொன்றபிறகு, அனேக ஷத யோஜன விஸ்தாரம் உள்ள ரத்ன பர்வதாதி செல்வங்களை கருடன் மேல் ஏற்றி, த்வாரகைக்கு அனுப்பி, தோட்டம் போன்ற இடங்களில் அவற்றை நிறுவினான். அதுமட்டுமல்லாமல், கிருஷ்ண அனுக்கிரகத்திற்கு பாத்திரர் ஆனவரும்கூட (அவனின் சாமர்த்தியத்தினாலேயே) இவ்வாறு அற்புத காரியங்களை செய்திருக்கின்றனர்.

ஸுவர்ணரத்ன கிரயஸ்சதுர்பி: த்ருஸ்ஸமார்ஜிதா: |
சத்வாரோ யோஜனானாம் ஹி தஷத்ரிம்ஷச்சதம் ததா |
சது:ஷதம் ச க்ரமஷ: உச்ஸ்ரீதா திக்ஜயார்ஜிதா: ||
விஷ்வகர்மக்ருதத்வாத்து புரஸ்யால்பேsபி ச ஸ்தலே |
அந்தர்கதாஸ்தேகிரயஸ்ததத் புத மிவாபவத் || (பாகவத தாத்பர்ய)

என்று, பாண்டவர்கள் ராஜசூயா யாகத்திற்காக சேகரித்த பொருட்கள், விஷ்வகர்மனால் நிறுவப்பட்ட சபையின் நடுவில், அந்தர்கதமாயிற்று என்று சொல்லப்படுகிறது. ஊசியின் துளையில் யானையை நுழைத்து எடுக்கக்கூடிய அற்புத மகிமை ஸ்ரீகிருஷ்ணனுடையது. இது போன்ற ஹரி லீலைகள் தேச காலங்களின் மேல் அவனுக்கு இருக்கும் அதீனத்தை வெளிப்படுத்துகிறது. ஸ்ரீஹரியின், இவ்வித அற்புத மகிமைகளை அறிந்த ஞானிக்கு (ஸ்வாதந்த்ர்யேண ஸர்வ கர்த்தன் என்று அறிந்தவனுக்கு) பாவம் வந்து சேர்வதற்கு சிறிதும் சந்தர்ப்பமே இல்லை.

அனிருத்^{3}த^{4} ப்ரத்^{3}யும்ன அனல த^{4}ரணீத^{4}ரனே
அனுவிஷ்டனாகி^{3} ப்ரக்ருதிய | ப்ரக்ருதிய நிர்மிஸித^{3}
க^{4}னமஹிம எமகே^{3} த^{3}யவாகோ^{3} ||84-(300)

அனிருத்த ப்ரத்யும்ன – அனிருத்த பிரத்யும்ன ரூபங்களைக் கொண்ட. அனலதரணிதரனெ – நெருப்பு, பூலோகங்களை தரித்திருக்கும் ஹே ஸ்வாமியே. ப்ரக்ருதிய – ப்ரக்ருதியை. அனு விஷ்டனாகி – பிரவேசித்து, நிர்மிஸித – (உலகங்களை) படைத்த. கனமஹிம – மஹாமஹிமைகளே ஸ்வரூபமாக உள்ள ஹே ஶ்ரீனிவாஸனே. எமகெ – எமக்கு (இவ்வித மஹிமா ஞானம் உள்ள பக்தர்களுக்கு) தயவாகோ – அருள்வாயாக. அனல – அக்னி. நரசிம்ம ரூபத்தினால் கண்ணில் அக்னியை தரித்திருக்கிறான் ஶ்ரீஹரி. தரணி – ப்ருத்வி. ‘த்யுப்யாத்யாயதனம் ஸ்வஷப்தாத்’ (பிரம்மசூத்ர) என்று சொல்வதைப் போல, ஶ்ரீவிஷ்ணுவே த்யு மற்றும் பூலோகங்களின் கதி. (தாரணபோஷணத்தை செய்பவன்). அது மட்டுமல்ல, அவனே ஸ்ருஷ்டி கர்த்தன்.

ப்ரக்ருதியை பிரவேசித்த, ப்ராக்ருத தத்வங்களை, அவற்றிலிருந்து மொத்த உலகத்தினால் நிர்மாணம் செய்தவனும் அவனே. சேதன அசேதன உலகத்தின் ஸ்ருஷ்டி முதலான அஷ்டகர்த்ருத்வத்தை செய்வதற்காகவே மூலரூபி நாராயணன், வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த ஆகிய ரூபங்களை தரித்திருக்கிறான்.

இத்தம் விசிந்த்ய பரமஸ்ஸ து வாஸுதேவ
நாமா பபூவ நிஜமுக்தி பதப்ரதாதா |
சங்கர்ஷணஸ்ச ஸ பபூவ புன: ஸுநித்ய: ஸம்ஹார காரணவபு: |
ஸ்தித்யை புன: ஸ பகவான் அனிருத்த நாமா |
ஸ ஸ்ருஷ்டிஹேதோ: ப்ரத்யும்ன தாமுபகத: || (பாகவத தாத்பர்ய)

ஆகிய வாக்கியங்கள் இந்த ரூபங்களினால் ஆகும் காரியங்களை நிரூபிக்கின்றன. பிரத்யும்னனிடமிருந்து ஸ்ருஷ்டியும், அனிருத்த னிடமிருந்து ஸ்திதியும் ஆவதால், ஶ்ரீஹரியினாலேயே உலகம் படைக்கப்பட்டு, அவன் மூலமாகவே காக்கப்படுகிரது என்னும் பிரமேயத்தை இந்த நுடியில் சொல்லியிருக்கிறார்.

வாஸுதே³வானந்த¹ வாஸவானுஜ வர
வாஸுகீ ஶயன வனமாலி | வனமாலி வீத ப⁴ய
வாஸவாகெ³ன்ன மனத³ல்லி ||85-(301)

வாஸுதேவானந்த – ஹே வாசுதேவனே. ஹே அனந்தனே. வாசவானுஜ – ஹே வாமனனே. (இந்த்ரானுஜ – உபேந்த்ர). வரவாசுகிஷயன – ஹே சேஷசாயியே. வனமாலி - வனமாலை அணிந்து ஒளிரும். வீதபய – ஹே தோஷங்கள் அற்றவனே. (பயம் முதலான தோஷங்கள் அற்றவனே). என்ன – என். மனதல்லி – சித்தத்தில். வாசவாகு – நிலைத்திருப்பாய்.

நாராயணாச்யுத முராரி முனிஜன ஸேவ்ய
நாரதப்ரீய நரசிம்ஹ | நரசிம்ஹ நின்னவரி
ராரோக்³ய பா⁴க்3ய கருணிஸோ ||86-(302)

நாராயண – ஹே நாராயணனே. அச்யுத – சதுர்வித நாசங்கள் அற்றவனே. முராரி – ஹே முரவைரியே. (மார நாமக தைத்யனைக் கொன்ற ஹே கிருஷ்ணனே). முனிகணஸேவ்ய – ஞானிகளால் பூஜ்யனான. நாரதப்ரிய – நாரதரிடம் விசேஷ ப்ரியம் கொண்ட. நரஸிம்ஹ – ஹே நரஹரியே. நின்னவரிகெ – உன் பக்தர்களுக்கு. ஆரோக்யபாக்ய – ஆரோக்ய பாக்கியத்தை. கருணிஸோ – அருள்வாயாக.

நாரதப்ரிய என்றதால், நாரத அவதாரிகளான ஸ்ரீபுரந்தரதாஸரை சிந்திக்கிறார் என்று அறியலாம். நாரதருக்கு ஸ்ரீஹரி ப்ரியன் – ஆகையாலேயே நாரதர் -> ஸ்ரீஹரிப்ரியர். நாரதரிடம் ப்ரியம் உள்ள ஸ்ரீஹரி -> நாரதப்ரியன். ஸ்ரீஹரியின் பற்பல அவதார காரியங்களில், நாரதர் முன்னரே சென்று முக்கிய பாத்திரத்தை தரித்திருக்கிறார். தேவ, அசுர என இரு பக்கங்களிலும் சஞ்சரித்து, இருவரின் நம்பிக்கைக்கும் பாத்திரராகி, பகவத் காரியத்திற்கு தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் நாரதர். பகவத் பக்தர்களுக்கு ஞானதானம் செய்யும் மஹாமஹிமர்.

'நரதீதி நர: ப்ரோக்த: பரமாத்மா ஸனாதன:' (நாரதீய புராண) என்றும் (எப்போதும்) குணபரிபூர்ணனான நரன் என்று பெயர். அதாவது, ஸ்ரீநாராயணனின் சம்பந்தப்பட்ட ஞானம், நாரம்

எனப்படுகிறது. அதனை ததாதி – கொடுப்பதால், அவர் நாரதர் என்று அழைக்கப்படுகிறார். இந்த தேவரிஷிகள் – த்ரிலோக சஞ்சாரிகள் – பக்தி சூத்ரங்களை இயற்றிய மிகச்சிறந்த பக்தர். ந்ருஸிம்ஹாதிகமன்யச்ச துரிதாதி நிவர்த்தயே – என்று பாப நிமித்தகரமான ரோகாதிகளின் (மற்றும் துர்மரணத்தின்) பரிகாரத்திற்காக ந்ருஸிம்ஹ மந்திர ஜபம் ஞானிகளுக்கும் பொருந்துகிறது என்று சொல்லப்படுகிறது. முக்தியோக்ய ஜீவர்கள் மோக்ஷ ஸாதன மார்க்கத்தில் இருக்க, தேக ஆரோக்கியம் மிகவும் அவசியம்.

அதுபோலவே, ‘அத்யைந்யம் தேஹதார்ட்யம் மே த்வத்பாதாம்புஜ ஸத்ரதிம்’ என்று தினமும் பிரார்த்திக்கின்றனர். பக்தர்களுக்காக ஸ்ரீதாஸார்யர் இதையே பிரார்த்திக்கிறார்.

ம்ருத்யுஞ்சயாராத்⁴ய ம்ருத்யு ம்ருத்யுவே ம்ருகன்
டா³த்மஜப்ரீய கவிகே³ய | கவிகே³ய ப⁴க்தர ப
ம்ருத்யு பரிஹரிஸி ஸலஹய்ய ||87-(303)

ம்ருத்யுஞ்சயாராத்ய – மஹேஷ்வர சேவிதனான. ம்ருத்யு ம்ருத்யுவெ – ம்ருத்யுவிற்கும் ம்ருத்யு ரூபனான. ஹே ஜகத் பிரளய கர்தனே. ம்ருகண்டாத்மஜ ப்ரிய – மார்க்கண்டேய ப்ரியனான. கவிகேய – பிரம்மாதிகளாலும் வணங்கப்படும் ஹே ஸ்ரீனிவாஸனே. பக்தர – பக்தர்களின். அபம்ருத்யு – துர்மரணத்தை. பரிஹரிஸி – பரிகரித்து. ஸலஹய்ய – அருள்வாயாக, ஸ்வாமியே.

ம்ருத்யு ஷப்தத்தால் அழைக்கப்படுபவர்கள் பலர் இருக்கலாம். ம்ருத்யு தேவதை, யம, ப்ரளய கால ருத்ரர், சதுர்முக, துர்கா ரூபளான மஹாலட்சுமி – இந்த அனைவரும் ம்ருத்யு என்றே அழைக்கப்படுகின்றனர். ஸ்வாவரரின் லயகர்த்தர் – ஸ்வாவரத்தினால் பிறருக்கு கிடைக்கும் ம்ருத்யுவை பரிகரிப்பதற்கு வல்லவர்கள்.

பிரம்மருத்ராதிகளுக்குக்கூட லயகர்த்தளான மகாலட்சுமிக்கும், ஸ்ருஷ்டி, லயங்கள் உண்டு. பகவத் ஆணையினால், ஜகத் ஸ்ருஷ்டிக்காக, காரியங்களில் ஈடுபடுவதே அவளுக்கு ஸ்ருஷ்டி

என்றும், அதிலிருந்து விடுபடுவதே லய என்றும் சொல்லப் படுகிறது. இது வெறும் உபசாரத்திற்காக சொல்லப்படும் விஷயம் என்று அறியவேண்டும். பிரம்மாதிகளுக்கு இருப்பதைப் போல தேக யோக, வியோக போன்ற ஸ்ருஷ்டி, லயங்கள், நித்யமுக்தளான, ப்ராக்ருத தேக சம்பந்தம் எந்த காலத்திற்கும் இல்லாத, லட்சுமிதேவிக்கு இல்லவே இல்லை.

இவ்வாறு இருப்பதால், ருத்ரன் ம்ருத்யுஞ்சன். ஸ்தாவரமயாதி ம்ருத்யு ஷப்த வாச்யரின் வசன் அல்ல. வினைப்பயன்களால் தீர்மானிக்கப்படும் ஆயுளின் காலம் முடிந்தபிறகு வரும் மரணம் - கால மரணம். பூர்ண ஆயுளை அனுபவிப்பதற்கு, வினைப் பயன்களால் தடை உண்டாகி, நடுவில் வரக்கூடிய மரணம் - அபம்ருத்யு மரணம். சாஸ்திரோக்த பிராயஸ்சித்தாதிகளாலும், ஸ்வோத்தமரின் அருளாலும் அபம்ருத்யு பரிகாரம் ஆகிறது. காலம்ருத்யு பரிகாரம் ஆவதில்லை.

இந்தி³ராரமண கோ³விந்த³ கேஶவ ப⁴க்த
ப⁴ந்து³ நீனெந்து³ மொரெஹொக்கெ | மொரெஹொக்கெ காருண்ய
ஸிந்து⁴ நீனெனகெ³ த³யவாகோ³ ||88-(304)

இந்திராரமண - ஹே ரமாபதியே. நீனு - நீயே. கோவிந்த எந்து - அனைத்து வேத முக்யபிரதிபாத்யன் என்றும், கேஷவ – பிரம்ம ருத்ரருக்கும்கூட ஞானத்தைக் கொடுப்பவன் என்றும், பக்தபந்து - பக்தர்களின் நண்பன் என்றும், மொரெஹொக்கெ - (அறிந்து) சரணாகதி அடைகிறேன். காருண்யஸிந்து - ஹே கருணாமயியே. நீ - நீ. எனகெ - எனக்கு. தயவாகோ - அருள்வாயாக.

வேதப்ரதிபாத்ய முதலான, மகிமாஞான பூர்வகமான (ஸ்னேஹ) பக்தியுடன், தாரதம்ய சகிதமான சர்வோத்தமத்வத்தை அறிந்து, சரணடைந்தவர்கள் ஸ்ரீஹரியின் கருணைக்கு பாத்திரர் ஆகிறார்கள் என்னும் பிரமேயத்தை பிரார்த்தனா ரூபத்தினால் இந்த பத்யம் சொல்கிறது.

நோகனீயனே நின்ன ஸ்ரீ கமலஜாதி³க³ளு
ஏகதே³ஶவனு அரியாரு | அரியதா மஹிமெக³ள
ஈ கு¹மதி ஜனரு திளிவோரே ||89-(305)

நோகனீயனே – ‘நோ கனீயான்’ என்னும் ஸ்ருதி சொல்வதைப் போல வளர்ச்சி, குறை ஆகியவை இல்லாமல், ஒரே மாதிரியாக இருக்கும் ஹே நித்யபரிபூர்ணனே. ஸ்ரீகமலஜாதிகளு – லட்சுமி பிரம்மாதிகள். நின்ன – உன் ஸ்வரூப மகிமைகளில். ஏகதேஷவனு – அனந்தாம்ஷத்தில் ஒரு அம்சத்தைக்கூட. அரியரோ – அறிய மாட்டார்கள். அரியதா மஹிமெகளு – இவர்கள்கூட அறியாத மகிமைகளை. ஈ குமதிஜனரு – தோஷங்களைக் கொண்ட அல்ப ஞானிகள் (அல்ப ஜீவர்கள்). திளிவோரெ - அறிவார்களா? (என்றும் சாத்தியம் இல்லை).

‘ந கர்மணா வர்த்ததே நோ கனீயான்’, ‘ஏஷ நித்யோ மஹிமா பிராம்மணஸ்ய’, ‘பராஸ்ய ஷக்திர் விவிதெய்வ ஷ்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபல க்ரியா ச’ ஆகிய ஸ்ருதிகள் சொல்லும் பகவத் மகிமையை ‘நோ கனீயனெ’ என்னும் பதம் சொல்கிறது. நித்ய பரிபூர்ணனான ஸ்ரீஹரிக்கு, வளர்ச்சி, குறைபாடு ஆகியவை எக்காலத்திற்கும் இல்லை. அவனின், ஞானபல க்ரியாதிகள் மற்றும் எண்ணிக்கையற்ற ஸ்வபாவிகமான சக்தி, ஸ்வரூபதர்மங்களே ஆகின்றன.

வாஸுதே[3]வன பி[3]ட்டு லேஸு ஹாரயிஸிகொண்
டே[3]ஸு தெய்வக[3]ள ப[4]ஜிஸலு । ப[4]ஜிஸலு ப[3]ரிதெ[3] ஆ
யாஸவல்லத[3]லெ ஸுக[2]வில்ல ।।90-(306)

லேஸு – முக்தியை. ஹாரைஸிகொண்டு – குறிக்கோளாக வைத்துக்கொண்டு. வாஸுதேவன பிட்டு – மோட்ச பிரதனான வாசுதேவனைத் தவிர. ஏஸு தெய்வகள – வேறு எந்த தேவதைகளையும். பஜிஸலு – வணங்கினாலும். பரிதெ – அது வெறும். ஆயாஸவல்லதெ – சிரமமே தவிர. சுகவில்ல – சுகத்தைக் கொடுக்காது. மற்ற தேவதைகளை வணங்கி பெறமுடிகிற பலன்கள், தற்காலிகமானவை மற்றும் சிறியவை. அவர்களில் நின்று பலன்களைக் கொடுப்பவனும் ஸ்ரீஹரியே. அந்த தேவதைகளே (வணங்கப்படும் எந்தவொரு தேவதையானாலும் சரி), சர்வோத்தமர் என்று அறிவது மித்யா ஞானமே ஆகும். அமிர்தத்தை விட்டு, காலகூட விஷயத்தைக் குடித்ததைப் போல ஆகிறது.

வாசுதேவம் பரித்யஜ்ய யோऽன்யம் தெய்வமுபாஸதே |
த்யக்த்வாऽம்ருதம் ஸ மூடாத்மா புங்க்தே ஹாலாஹலம் விஷம் |
வாஸுதேவம் பரித்யஜ்ய யோऽன்யம் தெய்வமுபாஸதே |
த்ருஷிதோ ஜான்ஹவீதீரே கூபம் கனதி துர்மதி: ||
(க்ருஷ்ணாம்ருத மஹார்ணவ)

வாசுதேவனைத் தவிர பிற தேவதைகளை உபாசிப்பவன், அமிர்தத்தை விட்டு ஹாலாஹல விஷத்தை குடித்ததைப் போல – தாகத்தால் தவிப்பவன், அருகில் இருக்கும் கங்கையை விட்டு கிணறு தோண்டுவதற்கு முயல்வதைப் போல, மூடனே ஆவான் என்று ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத்பாதர் கூறியிருக்கிறார்.

நா நின்ன மரெத1ரு நீனென்ன மரெயத3லெ
ஸானுராக3தி3 ஸலஹுவி | ஸலஹுவி ஸர்வக்3ஞ
ஏனெம்பெ3 நின்ன கருணக்கெ ||91-(307)

ஸர்வக்ஞ – ஹே ஸர்வக்ஞனே. ஸ்ரீனிவாச பிரபுவே. நா – நான். நின்ன – உன்னை. மரெதரு – வணங்குவதற்கு மறந்தாலும். நீ – நீ. என்ன – என்னை. மரெயதலெ – மறக்காமல் (விஸ்மரணை என்பது இல்லாத காரணத்தால்). ஸானுராகதி – எப்போதும். ப்ரீதியிந்த – அன்புடன். ஸலஹுவி – அருள்வாய். நின்ன – உன். கருணக்கெ – கருணைக்கு. ஏனெம்பெ – என்ன சொல்வேன்? (சொல்ல முடியாத அளவிற்கு அபாரமானதாக இருக்கிறது).

ஜீவ நாமகனாகி3 ஜீவரொளு நீ நிந்து
ஜீவக்ருத கர்ம நீ மாடி3 | நீ மாடி3 மாடி3ஸி
ஜீவரிகெ3 கொடு3வே ஸுக2துக்க2 ||92-(308)

ஜீவ நாமகனாகி – ஜீவன் என்னும் நாம உள்ளவனாக. (அந்தந்த ஜீவர்களின் நாமங்களாலேயே, பிரம்மருத்ராதி நாமங்களினாலேயே). ஜீவரொளு – ஜீவர்களில். நீ நிந்து – நீ இருந்து அல்லது நீனு + இந்து, நீ இவ்விதமாக (அவர்களின் தகுதிக்கேற்ப). ஜீவக்ருத கர்ம – ஜீவர்களால் ஆகும் கர்மங்களை. நீ – நீ. மாடி மாடிஸி – செய்து, அவர்கள் மூலமாக செய்வித்து. ஜீவரிகெ – அவர்களின் யோக்யதை மற்றும் கர்மங்களுக்கேற்ப, ஜீவர்களுக்கு. சுகதுக்க –

சுக, துக்க அல்லது சுகதுக்க மிஸ்ர போகங்களை. கொடுவெ – கொடுக்கிறாய்.

விஷ்ணுர்ஜீவ இதி ப்ரோக்த: ஸததம் ப்ராணதாரணாத் |
ஸம்ப்ரவிஷ்ய ஷரீரம் ச ஸ்தாவரம் ஜங்கமம் ததா ||
மஹாபூதானி ச விபு: த்ரிவ்ருத்கரணபூர்வகம் |
ஸம்ஸாரிணம் ப்ராமயதி || (விஷ்ணு தத்வ நிர்ணய)

நிரந்தரமாக அவனே பிராணதாரகன் ஆனதால் விஷ்ணு, ஜீவன் என்று சொல்லப்படுகிறான். ஸ்தாவர ஜங்கம சரீரங்களை பிரவேசித்து, சம்சார ஜீவனை துதிக்கிறான். (கர்மங்களுக்கேற்ப ஸ்தாவர ஜங்கம சரீரங்களை அடைந்து தானும் ஜீவனுடன் அவற்றில் நுழைந்து, ப்ராமயதி – ஜீவனுக்கு அந்தந்த சரீரத்தில் அஹம், மமகார ரூபத்தின் மயக்கங்களை உருவாக்குகிறான்). பஞ்ச மஹாபூதங்களை, மூன்று கரணங்களால் (ப்ருதிவி, ஜல, தேஜஸ் மற்றும் அவற்றின் இணைப்பில்) அனைத்து பிராணி தேகம் முதலான வஸ்துகளை படைத்து, அங்கும் பிரவேசிக்கிறான்.

ஆகையாலேயே ஸ்ரீஹரி, ஜீவ முதலான அனைத்து வஸ்துகளின் நாமம் உள்ளவன். இது மட்டுமல்லாமல் 'ததீனத்வாதர்த்தவத்' (பிரம்மஸூத்ர) என்பதில் அனைத்து வஸ்துகளின் அனைத்து தர்மங்களும் பகவத் அதீனங்களானதால் தர்ம வாசக அனைத்து ஷப்தங்களும் பரமாத்மனின் நாமங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யததீனோ குணோ யஸ்ய தத்குணீ ஸோऽபிதீயதே |
யதா ஜீவ:பராத்மீதி யதா ராஜா ஜயீத்யபி || (பாஷ்ய)
அதாவது, எந்த குணம் யாரின் அதீனமோ அவன் அந்த குண ஷப்த வாச்யனே ஆகியிருக்கிறான். இந்த அர்த்தத்தில் பரமாத்மன் ஜீவன் என்றே அழைக்கப்படுகிறான். ராஜ சேவகர்கள் போரில் வெற்றியை அடைந்தாலும், அவர்கள் அரசனுக்கு கட்டுப்பட்டவர்கள் ஆகையால், அந்த அரசனையே 'ஜயி' என்று மக்கள் அழைப்பார்கள்.

ஸத்யஸங்கல்ப த்வச் சித்தானுஸார ம
ச்சித்த வர்த்தி[1]ஸலி ஸர்வத்ர |ஸர்வத்ர ஸர்வதா[3]
ப[4]க்தி இரலெனகெ[3] அனுகா[3]ல ||93-(309)

ஸத்யசங்கல்ப - சத்யசங்கல்பனான ஹே ஸ்ரீனிவாசனே. த்வச்சித்தானுசார - உன் சித்தத்தின்படி. மச்சித்த - என் மனம். வர்த்திஸலி - நடக்கட்டும். ஸர்வத்ர - அனைத்து இடங்களிலும். ஸர்வதா - அனைத்து காலங்களிலும். எனகெ - எனக்கு. அனுகால - எப்போதும். பக்தி இரலு - உன்னிடம் பக்தி இருக்குமாறு அருள்வாயாக. 297ம் பத்யத்தை இங்கு கவனிக்கலாம். ஸ்ரீஹரியின் விருப்பத்திற்கேற்ப மனம் நடக்க வேண்டும் என்பதுடன், இந்த பத்யத்தில் அனைத்து இடங்களிலும், எப்போதும், நல்ல செயல்களையே பிரார்த்திருக்கிறார்.

நரக ஸ்வர்க்க³க³ளெரடு³ இருதிஹவு இல்லெ வி
ஸ்மரணெயே நரக ஸ்ம்ருதி ஸ்வர்க்க³ | ஸ்ம்ருதி ஸ்வர்க்க³விரே
பா³ஹ்ய நரக ப⁴யகஞ்செ எந்தெ³ந்து³ ||94-(310)

நரகஸ்வர்க்ககளெரடு - நரக மற்றும் ஸ்வர்க்க என்னும் இரண்டும், இல்லே - இங்கேயே. இருதிஹவு - இருக்கின்றன. (அவை எவை என்றால்). விஸ்மரணெயெ - ஸ்ரீஹரியை மறப்பதே. நரக - நரகம். ஸ்ம்ருதி ஸ்வர்க்க - ஸ்மரணையே ஸ்வர்க்கம். ஸ்ம்ருதி ஸ்வர்க்கவு இரெ - ஸ்மரணரூப ஸ்வர்க்கம் (அதிலிருந்து வரும் சுகம்) இருக்கையில், எந்தெந்து - எந்த காலத்திலும். பாஹ்ய நரகபயகெ - புற (இந்த உலகத்திலிருந்து வேறான) நரக லோகத்தின் பயங்களுக்கு. அஞ்செ - நான் பயப்படுவதில்லை.

அத்ரைவ நரக: ஸ்வர்க்க இதி மாத: ப்ரசக்ஷதே |
யா யாதனா வை நாரக்யஸ்தா இஹாப்யுபலக்ஷிதா: || (பாகவத)

அதாவது, ஹே ஜனனி, நரக ஸ்வர்க்கங்கள் இங்கேயே இருக்கிறது என்று ஞானிகள் சொல்வார்கள். நரக லோகத்தின் பிரச்னைகள் - பற்பல துக்கங்கள் இந்த உலகத்தில் (தேகத்திலும்கூட) இருக்கிறது என்று அறிய வேண்டும் என்பது அவரின் அபிப்பிராயம். வேறு நரக லோகம் என்பதே இல்லை என்றில்லை. என்று கபில பரமாத்மன் தன் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்கிறான். ஸ்ரீதாஸார்யரும் ‘பாஹ்ய நரககஞ்செ’ என்றதால், நரகலோக என்னும் அன்யலோகம் இருக்கிறது என்பதை குறிப்பிடுகிறார்.

'அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமஷ்னுதே' என்னும் வாக்கியமும் இதே அர்த்தத்தையே சொல்கிறது. தீவிர புண்ணிய பாவங்களால் புற ஸ்வர்க்க நரக லோகங்களின் ப்ராப்தி இல்லை என்றில்லை. அந்த உலகங்களின் ப்ராப்தி இல்லாமல் இங்கேயே சுகதுக்கங்களை (புண்ய பாவங்களின் பலரூபமாக) அனுபவிப்பான் என்று அர்த்தம்.

பிராணப4ய ப3ந்தா3க3 காணத3லெ ஹலுபி3த3ரு
ப்ராணமயனாத3 ப்ரத்3யும்ன |பிரத்3யும்ன மூஜக3
த்ராணநாகி3ன்னு ஸலஹூவ ||95-(311)

பிராணபய பந்தாக – மரணபயம் உண்டானபோது. காணதலெ – அறியாமல். ஹலுபிதரு - ஸ்ரீஹரி நாமத்தை உச்சரித்தால். பிராண மயனான – 'ப்ராணமய' என்னும் நாமம் கொண்ட. ப்ரத்யும்ன – பிரத்யும்னரூபி ஸ்ரீஹரி. மூஜகத்ப்ராணனாகி – சர்வ லோக ரக்ஷகனான தான் சன்னிஹிதனாகி. ஸலஹுவ – ரக்ஷிக்கிறான். (பயத்தை பரிகரிக்கிறான்). இன்னு – இன்னும் வேறு என்ன? (நாமோச்சாரணையின் மகிமையை இன்னும் வேறு எப்படி கூறட்டும்?).

ஆர்த்தா விஷண்ணா: திதிலாஸ்சபீதா:
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமானா: |
ஸங்கீர்த்ய நாராயண ஷப்தமாத்ரம்
விமுக்த துக்கா: ஸுகினோ பவந்தி ||கிருஷ்ணாம்ருத மஹார்ணவ

துக்கம் அடைந்தவர்கள், அத்யாத்மாதி தாபத்ரயங்களால் கஷ்டப்படுபவர்கள், பயப்படுபவர்கள், கோர வியாதிகளால் கஷ்டப்படுபவர்கள், நாராயண என்று சொன்ன மாத்திரத்திலேயே துக்காதிகளிலிருந்து விமோசனம் அடைந்து சுகம் அடைகிறார்கள்.

ம்ரியமாணோ ஹரேர்நாம க்ருண்ஹன் புத்ரோபசாரிதம் |
அஜாமிளோऽப்யகாத்தாம கிமுத ஸ்ரத்தயா க்ரணன் |(பாகவத)

மரண காலத்தில் மகனை அழைப்பதற்காக நாராயண என்னும் ஸ்ரீஹரி நாமத்தை உச்சரித்த அஜாமிளனும், நற்கதியை அடைந்தான். இப்படி இருக்கையில் பக்தி, சிரத்தையுடன்

(நேரடியாக ஞான பூர்வகமாக பிறந்த பக்தியுடன்) ஹரி நாமத்தை உச்சரித்தவன் விஷ்ணு பாதத்தையே அடைகிறான் என்று தனியாக சொல்லவும் தேவையில்லை என்று ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது.

கூப்பிடுவதற்காக வைத்த நாராயண என்னும் பெயர், ஸ்ரீஹரி ஸ்மரணைக்கு காரணம் ஆயிற்று. அதுவே ஸ்ரீஹரியின் மேல் பக்திக்கு காரணம் ஆயிற்று. அதனால் தக்க பலனும் கிடைத்தது.

ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேலனமேவ வா |
வைகுண்ட நாமக்ரஹண மசேஷாகஹரம் விது: || (பாகவத)

ஹரிநாமத்தினை ஒரு குறிப்பாகவோ, கேலியாகவோ, நகைச்சுவை யாகவோ கூறினாலும்கூட பாப பரிஹாரம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது.

நாமஸ்வாமிதயா தஸ்ய ஸ்மரணம் ஜாயதே யத: |
பக்தஸ்யாதோ நாமகீர்த்தி: ஸங்கேதாதாவபீரிதா |பாகவத தாத்பர்ய

குறிப்பால் கூறினாலும், பக்தனுக்கு நாமோச்சாரணையில், நாம ஸ்வாமியான ஸ்ரீஹரியின் ஸ்மரணை உண்டாகிறது. அது அனைத்து பாவங்களையும் பரிகரிக்கிறது என்று பாகவத வாக்கியத்தின் தாத்பர்ய விவரணையில் இருக்கிறது. பக்தி பூர்வகமான நாம கீர்த்தனை பாவங்களையும் (அதன் மூலமான துக்கங்களையும்) பரிகரிக்கும் மகா பலன்கள் கொண்டது. பக்திபூர்வகமாக இல்லை என்றாலும், (மஹாத்ம ஞானபூர்வகமான நட்புடன் உச்சரிக்கவில்லை என்றாலும்), புண்ணியத்தைக் கொடுத்து, ஞான ஸாதனை ஆகிறது.

இப்படியில்லாமல், அபக்தன் (ஸ்வரூபத்திலேயே பகவத் பக்தி இல்லாத தமோயோக்ய ஜீவன்) உச்சரிக்கும் ஸ்ரீஹரி நாமத்தினால் எவ்வித பலன்களும் கிடைப்பதில்லை. ‘அபக்தோதாஹ்ருதம் நைவ பலதாத்ரு பவிஷ்யதி’ (பாகவத தாத்பர்ய) அபக்தனால் உச்சரிக்கப் படும் பலப்ரதம் ஆவதில்லை என்று நிர்ணயம் ஆகிறது. அதே அபிப்பிராயத்தையே ஸ்ரீமதாஸார்யர் கீழ்க்கண்ட ஸ்லோகத்தில் நிறுவியிருக்கிறார்.

அவஷேனாபி யன்மான்மி கீர்த்திதே ஸர்வபாதகை: |
புமான்விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹத்ரஸ்தா ம்ருகா இவ ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

அவஷனாகவே நாமத்தை உச்சரித்தாலும், பாவங்களால் முக்தன் ஆகிறான். சிங்கத்தின் பயத்தால் யானை முதலான விலங்குகள் ஓடிப் போவதைப் போல, பாவங்கள் தூர விலகுகின்றன. அவஷன் என்றால், மரணம், நோய் முதலான பயங்களால் பரவசன் ஆகாதவன் அல்லது விஷ்ணு வசம் ஆனவன் ('ஆ இதி பிரம்ம' என்னும் ஸ்ருதியில் சொல்லப்பட்டபடி).

வாமன த்ரிவிக்ரம நிராமய நிராதா^{4}ர
ராம ராஜீவத^{3}ள நேத்ர | த^{3}ளநேத்ர மம குல
ஸ்வாமி நீனெனெமகெ^{3} த^{3}யவாகோ^{3} ||96-(312)

வாமன - ஹே வாமனனே. த்ரிவிக்ரம - (வாமன ரூபத்தினால் மூன்று பாத பூமியை பலிசக்ரவர்த்தியிடமிருந்து பெற்று. அளந்து எடுத்துக் கொள்வதற்கு தரித்த அற்புத) த்ரிவிக்ரம ரூபியே. நிராமய - ரோகாதி தோஷங்கள் அற்றவனே. நிராதார - பிறரை அணுகாத (ஸ்வதந்த்ரனான). ராஜீவதள நேத்ர - மலர்ந்த தாமரையைப் போன்ற கண்களைக் கொண்ட. ராம - ஹே ஸ்ரீராமசந்திரனே. மம - என். குலஸ்வாமி - குலதெய்வமே. நீ - நீ. எமகெ - நமக்கு. தயவாகோ - அருள்வாயாக. ப்ராக்ருத தேக சம்பந்தமே இல்லாத, நித்ய சச்சிதானந்த தேகத்தைக் கொண்ட ஸ்ரீஹரி, நித்ய நிராமயன் - தோஷங்கள் அற்றவன்.

ஶோகநாஶன விக^{3}தஶோக நீனெந்த^{3}ரிது^{3}
நா கரவ முகி^{3}வெ கருணாளு | கருணாளு ப^{4}குதர
ஶோகக^{3}ள களெது^{3} ஸுகவீயோ ||97-(313)

நீனு - நீ. விகதஷோக - துக்கங்கள் இல்லாதவன். ஷோக நாஷன - பக்தர்களின் துக்கங்களை பரிகரிப்பவன். எந்து அரிது - என்று அறிந்து. நா - நான். கரவ முகிவெ - கை கூப்பி வேண்டிக் கொள்வேன். கருணாளு - ஹே கருணைக்கடலே. பகதர - பக்தர்களின். ஷோககள - துக்கங்களை. களெது - போக்கி. ஸுகவீயோ - சுகத்தைக் கொடுப்பாயாக.

ஸ்ரீஹரி, துக்காதி தோஷங்கள் அற்றவன் மற்றும் ஆனந்தாதி நற்குண பூர்ணன். ஆகையால், தன்னை வேண்டியவர்களின் துக்காதிகளை போக்கி, சுகங்களைக் கொடுப்பதில் சமர்த்தன். 'ஸ்வயம் தர்தும் அக்ஷம: கதம் பராம்ஸ்தாரயேத்' தானே தாண்டுவதற்கு அஸமர்த்தன் ஆனவன் பிறரை தாண்டச் செய்ய மாட்டான்.

ஆனந்தனந்த விக்[3]ஞானமய விவித[4] ஸ
ந்மானத[3] ப்ரவர ஸமவர்த்தி | ஸமவர்த்தி ஸுமனஸ
த்ராண நீனிமகெ[3] த[3]யவாகோ[3] ||98-(314)

ஆனந்தனந்த – ஸ்வரூபானந்தத்தினாலேயே சுகபூர்ணனான. (பக்தர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்து சுகத்தைக் கொடுக்கும்) விக்ஞானமய – விக்ஞானமய நாமக ஹே வாசுதேவனே. விவித ஸன்மானத – மனோமய நாமகனாகி பற்பல வகையினரான பக்தர்களுக்கு அவரவர்களின் யோக்யதைக்கேற்ப எல்லையற்ற ஞானத்தைக் கொடுக்கும். ப்ரவரஸமவர்த்தி – உத்தம சமத்வ தர்மம் உள்ள. ஸுமனஸத்ராண – (இப்படி சர்வசமனானாலும்) தேவதா ப்ரியனாகி அவர்களை அனைத்து விதங்களிலும் அருளும். நீ, எமகெ – எங்களுக்கு. தயவாகோ – அருள்வாயாக.

ஸ்ரீஹரியின் சர்வசமத்வத்தை அறிய வேண்டும்.
ஸ்வபாவத: ப்ரியத்வாத்து ஸதா தேவப்ரியோ ஹரி: |
அப்ரியஸ்சாஸுராணாம் ஸ ஸ்வபாவாத்தோபயம் ந்ருணாம் ||
அனாதி நியதாஸ்சைவ குணதோஷா: ஸுராதிஷு |
யதாக்ரமம் புனஸ்சைவ நியமாத்வர்த்தி தாஸ்ததா |
விஷமத்வம் து தோஷாய ஷுபாஷுப விபர்யயே ||(பாக.தாத்பர்ய)

தேவதைகளின் ஸ்வபாவ குணம் – ஸ்ரீஹரிப்ரீதி. ஆகையாலேயே ஸ்ரீஹரி அவர்களை நேசிக்கிறான். அசுரர்கள் ஸ்வபாவத்தினாலேயே ஸ்ரீஹரியை த்வேஷிக்கின்றனர். ஆகையால், ஸ்ரீஹரியும் அவர்களிடம் த்வேஷ பாவத்தையே காட்டுகிறான். அசுரர்கள் ஸ்ரீஹரிக்கு அப்ரியர்கள். மனிதர்கள் இருவித குணங்களும் கொண்டவர்கள். ஸ்ரீஹரி அவர்களின் விஷயத்தில் அப்படியே நடந்து கொள்கிறான்.

இப்படியாக, ஜீவர்கள் விஷய ஸ்வபாவம் உள்ளவர்களே தவிர, ஸ்ரீஹரியிடம் பாரபட்சம் இல்லை. சர்வஸமனான ஸ்ரீஹரி, அவரவர்களின் ஸ்வபாவ குணங்களையே வளர்க்கிறான். ஜீவ ஸ்வபாவங்கள், ஸ்ரீஹரியின் அதீனமானவையே ஆனாலும், ஷுப-அஷுப ஸ்வபாவங்களை எதிர்மறையாக மாற்றி அமைத்தால் மட்டுமே வைஷம்ய தோஷம் வரும். மாறாக, ஸ்வபாவத்தை காப்பாற்றி வளர்த்தால் வைஷம்ய தோஷம் வருவதில்லை என்று அறிய வேண்டும்.

ப்ரியோ ஹி ஞானினோऽத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய: |
என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையில், ஞானிக்கு நான் அதிசயப்ரியன். அதனாலேயே அவனும் எனக்கு ப்ரியன் – என்று சொல்லியிருக்கிறான்.

நீனிப்ப லோக நிர்வாணவெந்தா³க³ம பு
ராண பேளுவுவு அனுதி³ன | அனுதி³னதி³ நரக வி
த்³தே³னு மாடு³வுதோ³ எனகி³ன்னு ||99-(315)

நீனிப்ப – நீ இருக்கும். லோக – உலகம் (வைகுண்ட, ஷ்வேதத்வீப, அனந்தாஸன என்னும் த்ரிதாமங்கள் – மூன்று உலகங்கள்). நிர்வாணவெந்து – அப்ராக்ருத என்று (லட்ச்ம்யாத்மக என்று). ஆகமபுராண – ஸ்ருதி ஸ்ம்ருதிகள். அனுதின – எப்போதும். பேளுவுது – சொல்கின்றன. இன்னு – இப்படி இருக்கையில். எனகெ – எனக்கு. அனுதினதி – எப்போதும். நரகவித்து – நரக லோகம் கிடைத்தாலும். ஏனு மாடுவுதோ – எப்படி பாதிக்கிறது ஸ்வாமி? (நரகவாசமே இல்லாத என்னை அது என்ன செய்து விடும்?)

முக்தலோகத்தில் இருப்பவர்களுக்கு நரகத்தின் (பய துக்காதிகளின்) யோசனையே இல்லை. அவற்றின் அனுபவங்களோ இல்லவே இல்லை என வேண்டும். நிர்வாண – என்றால், ஸ்வரூப சுகானுபவம். லோக ஷப்தத்திற்கு தேக என்னும் அர்த்தமும் இருக்கிறது. இந்த தேகத்திலேயே (ப்ராக்ருத தேகத்திலேயே) நித்ய பிரசன்னனான ஸ்ரீஹரியுடன் வசித்தால், அதே முக்தலோகத்திற்கு சமமாகிறது.

ப்ராக்ருத தேகத்திற்கு வரும் துக்காதிகள் வரவில்லையெனில், தேகம் இருந்தாலும் அது இல்லை என்பதே சரி. ப்ராக்ருத தேகமே நரகம். அது என்னை என்ன செய்தது? இதையே சனகாதிகள் 'தமஸ்ம்ருதிஸ்சேத் நிரயோ:ப்யஸ்து' என்றனர். 'ஷாரீரோப்ய ஷரீரவான்' என்று சதுர்முகன் புகழ்பெற்றிருக்கிறான்.

வேதம் அனாதி நித்யம். ஆனால், புராணங்கள் பிரம்மதேவனின் நாளில் (ஒவ்வொரு கல்பத்திலும்) நிர்யாணம் ஆகிறது. வேதம், வர்ணங்கள் மற்றும் அவற்றின் கிரமத்தினால் நித்யமானவை. புராணங்கள் அப்படியல்ல - அர்த்தத்தின்படி ஒரே மாதிரியானவை. மற்றும் நித்யங்கள் அல்ல. அபௌருஷேயங்களும் அல்ல. அர்த்தத்தால் ஒரே மாதிரியானவை ஆனதால், 'அனுதின பேளுவுது' என்று வேதங்களுடன் புராணங்களை சேர்த்தனர். வேத புராணங்களில், ஒரே அர்த்தத்தை தரக்கூடியவையானவை என்று சொல்லி, வேத ஸம்மதமான அர்த்த விசேஷங்களையே புராணங்களும் சொல்கின்றன என்று தெளிவாக உரைத்தனர்.

க்ருபணவத்ஸலனெ என்னபராத[4]க[3]ள நோடி[3]
குபிதனாகு[3]வுதே[3] கமலாக்ஷ |கமலாக்ஷ நீனெனகே[3]
உபகாரி எந்து[3] ஸ்மரிஸுவி ||100-(316)

க்ருபணவத்ஸலனெ - ஹே தீனபந்தோ. என்ன - என். அபராதகள - தவறுகளை. நோடி - கண்டு. குபிதனாகுவுதெ? - என் மேல் கோபம் கொள்வது சரியா? கமலாக்ஷ - ஹே தாமரைக் கண்ணனே. நீ, எனகெ - எனக்கு. உபகாரி - சாட்சாத் அனிமித்த உபகாரியே. எந்து - என்று அறிந்து (நம்பி). ஸ்மரிஸுவெ - உன்னை எப்போதும் நினைத்திருப்பேன். பகவந்தனின் ஆணை ரூபங்களான ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லியிருப்பதைப் போல, அதிக-குறைகள் இல்லாதவாறு நடப்பது என்பது சாத்தியம் இல்லை. குறைகள் இல்லா கர்மங்களை செய்து, ஸ்ரீஹரி மகிழ்விப்பவர்கள் பிரம்மாதி ருஜுகணத்தின் ஜீவர்கள் மட்டுமே. பிறர், தங்களின் தாரதம்யத்திற்கேற்ப, பற்பல தவறுகளை செய்கின்றனர். இவற்றை மன்னித்து மகிழ்வாயாக என்றே உன்னை வணங்குகிறோம் - என்கிறார் ஸ்ரீதாஸார்யர்.

யஸ்ய ஸ்ம்ருத்யா ச நாமோக்த்யா தப: ஸந்த்யா க்ரியாதிஷு |
ந்யூனம் ஸம்பூர்ணதாம் யாதி ஸத்யோ வந்தே தமச்யுதம் ||
என்று ஒவ்வொரு கர்மத்தின் இறுதியிலும் சொல்லும் வழக்கம் நம்மில் உள்ளது.

ஸத்யஸங்கல்ப ஜக[3]த[3]த்யந்தபி[4]ன்ன ஸ
ர்வோத்தமோத்தமனே ஸுக[2]பூர்ண | ஸுக[2]பூர்ண நீ என்ன
சித்ததி[3]ந்த[3]க[3]லதி[3]ரு கண்ட்[3]ய ||101-(317)

ஸத்யஸங்கல்ப - சத்யசங்கல்பனும். ஜகதத்யந்தபின்ன - சேதன அசேதனாத்மக உலகத்திலிருந்து மிகவும் வேறுபட்டவனான. ஸர்வோத்தமோத்தமனே - சர்வ ஜீவோத்தமரான பிரம்மதேவ மற்றும் சகல முக்தாமுக்தர்களைவிட உத்தமர்களான லட்சுமி தேவி. இவரைவிட அதி சிறந்தவளான ஹே ஸ்ரீனிவாசனே. சுக பூர்ண - ஆனந்தமயமான. நீ. என்ன - என். சித்ததிந்த - மனதால். அகஸதிரு - விலகாமல் இரு. கண்ட்ய - என் இந்த பிரார்த்தனை உனக்கு சம்மதமா, ஸ்வாமி?

ஸ்ரீமத்விஷ்ணு தத்வ நிர்ணய கிரந்தத்தில் ஸ்ரீமதாசார்யர் அனேக பூர்வபட்சங்களை பலவிதங்களால் கண்டித்து, ஸ்வஸித்தாந்தத்தை நிறுவும் பல யுக்திகளையும், பல ஸ்ருதி ஸ்ம்ருதிகளையும் உதாரணம் கொடுத்து, ஸ்ரீவிஷ்ணு 'அத: ஸர்வாகம்யைரேவ ஸர்வ ஸ்மாத் பின்னத்வேன, ஸர்வஸ்மாத் விஷ்டத்வேன ச விக்ஞேயோ பகவான் நாராயண:' அனைத்திலிருந்து மிகவும் வேறுபட்டவனும், ஸர்வோத்தமன் என்றும் நிறுவியிருக்கிறார். இதையே ஸ்ரீதாஸார்யரும் இங்கு சொல்லியிருக்கிறார்.

ஞானகர்மேந்த்[3]ரியக[3]ளானந்த[3]மயக[3]தி[4]
ஷ்டானவெந்த[3]ரிது[3] ப்ரதிதி[3]ன | ப்ரதிதி[3]ன உம்ப[3]ன்ன
பானாதி[3] விஷய ஹரிகெ[3]ன்னி ||102-(318)

ஞானகர்மேந்த்ரியகளு - கண் முதலான ஞானேந்திரியங்கள் மற்றும் வாக் முதலான கர்மேந்திரியங்கள் (மனஸ் சேர்த்து), ஆனந்தமயகெ - பூர்ணானந்த ஸ்வரூபனான நாராயணனுக்கு. அதிஷ்டானவு - இருப்பிடம். எந்தரிது - என்று அறிந்து. ப்ரதிதின - எப்போதும். உம்பன்னபானாதி விஷய - போகிக்கும் அன்ன

பானாதி வஸ்துகள் அனைத்தையும், ஹரிகென்னி – ஸ்ரீஹரிக்கு அர்ப்பிதம் என்று சொல்லுங்கள்.

ஸ்ரோத்ரம் சக்ஷுः ஸ்பர்ஷம் ச ரஸனம் க்ராணமேவ ச |
அதிஷ்டாய மனஸ்சாயம் விஷயானுபஸேவதே || (கீதை)

என்று சொல்வதைப் போல, ஞானேந்திரியங்கள் ஆறு. அவற்றில் இருந்து விஷயங்களை போகிப்பவன் ஸ்வதந்த்ர ஸர்வபோக்த னான ஸ்ரீஹரி. என்று அறிந்து ஸர்வ விஷயங்களை ஸ்ரீஹரிக்கு அர்ப்பிக்கிறார்கள். (அவனின் போக்த்ருத்வத்தின் அனுசந்தானம் உள்ளவர்கள்), அவனின் பிரஸாதத்திற்கு பாத்திரர் ஆகுவர்.

காயேன வாசா மனஸேந்திரியைர்வா
புத்யாத்மனா வாऽனுஸ்ருதः ஸ்வபாவம் |
கரோதி யத்யத்ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்ப்பயேதத் || (பாகவத)

தம் யோக்யதைக்கேற்ப (மற்றும் ஸ்வபாவ ஷப்த வாச்யனான பரமாத்மனின் ப்ரேரணைக்கேற்ப), தன் தேகம், வாக், மனஸ், இந்திரிய, புத்தி மற்றும் ஸ்வரூப தேகத்தினாலும் நடக்கும் அனைத்து க்ரியைகளையும் ஸர்வோத்தமனான நாராயணனுக்கு அர்ப்பிக்க வேண்டும். 'நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மன்யேத தத்வவித்' (கீதை) – ஸ்வதந்த்ரனாக நான் எதையும் செய்வதில்லை (ஸ்ரீஹரி செய்து செய்விப்பதையே செய்கிறேன்) என்னும் நிரந்தர அனுசந்தானமே அர்ப்பணம். இதுவே தத்வஞானியின் லட்சணம். 'நிமிஷன்னுன்மிஷன்னபி' ஆகிய, கண் இமைகள் மூடுவதான சிறு செயல்களும்கூட ஸ்ரீஹரியினாலேயே ஆகிறது என்னும் அறிவினை ஸாதகர்கள், முயற்சி செய்து பெறுகிறார்கள் என்று ஸ்ரீதாஸார்யர் உபதேசிக்கிறார்.

எனகெ[3] நின்னலி ப[4]குதி இனிதில்லதித்[3]த[3]ரு
அனிமித்த ப[3]ந்து[4] ஸலஹூவி | ஸலஹூவி ஸர்வதா[3]
எணெகா[3]ணெ நின்ன கருணக்கெ ||103-(319)

எனகெ – எனக்கு. நின்னலி – உன்னிடம். பகுதி – பக்தி. இனிதில்ல தித்தரு – கொஞ்சம்கூட இல்லாவிட்டாலும். அனிமித்தபந்து –

பிரதி உதவி ஆகியவற்றை எதிர்பார்க்காத நண்பனான நீ. ஸர்வதா – அனைத்து தேக, தேச, காலங்களில். ஸலஹுவி – காப்பாற்றுவாய். நின்ன கருணக்கெ – உன் கருணைக்கு. எணெகாணெ – இணை காணமாட்டேன். (உன் சமமான கருணாமூர்த்தி வேறு எவருமே இல்லை).

முந்தைய பத்யத்தில் கூறியதைப் போல, ஸர்வேந்திரிய போகங்களை ஸ்ரீஹரிக்கு அர்ப்பிக்க, சர்வோத்தமன் என்னும் மகிமா ஞானம் அதி அவசியம் என்று இந்த பத்யத்தினால் சொல்கிறார். ‘பகுதி இனிதில்லதித்தரு’ என்று, சர்வ சமர்ப்பணைக்கு அவசியமான மகிமாஞான பூர்வக அன்பு ஸ்ரீஹரியிடம் இல்லை என்றாலும், ஸ்ரீஹரி அருளாமல் விடமாட்டான் என்கிறார். பக்தரோ, அபக்தரோ, அனைவரும் எப்போதும் ஸ்ரீஹரியாலேயே அருளப்படுகிறார்கள். அவன் அனைவரின் பக்த ரக்ஷகன். ஆனால், முக்ய ரக்ஷகன் என்னும் மோட்சம் மட்டும் யோக்ய ஜீவருக்கு கிடைக்கிறது. யதாகாலத்தில் பக்திதான ரூபமான ரக்ஷணையைக் கொடுத்து, ஸாதனை செய்வித்து சர்வசமர்ப்பணையில் சக்தியைக் கொடுத்து, முக்யரக்ஷணா ரூபத்தின் முக்திதானத்தை செய்கிறான்.

மான த⁴ன வனித ஸந்தானக³ள ப³யஸுத்த
ஸ்னான ஜப ஹோம உபவாஸ | உபவாஸ வ்ரத நேம
ஏனு மாடி³த³ரு ஹரி மெச்ச ||104-(320)

மான – பிறரால் புகழப்படுதல், தன – ஐஸ்வர்ய. வனிதெ – பெண். ஸந்தானகள – புத்ரபௌத்ராதிகளை. பயஸுத்த – விரும்பி. ஸ்னான, ஜப, ஹோம, உபவாஸ, விரத, நியமங்களை, ஏனு மாடிதரு – எந்த சத்கர்மங்களை செய்தாலும். ஹரி – ஸ்ரீஹரி. மெச்ச - மகிழ்வதில்லை (ஒப்புக்கொள்வதில்லை).

‘மா கர்மபலஹேதுர்பூ: மா தே ஸங்கோऽஸ்த்வ கர்மணி’ என்றால், விதிப்படியான கர்மங்களை விடாதே. செய்யக்கூடாதவற்றை செய்யாதே. ஆனால், எந்த கர்மத்தையும் பலனை எதிர்பார்த்து செய்யாதே. கர்மபலனுக்கு நீயே காரணம் என்று நினைக்காதே. மற்றும் ‘சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸம்யஸ்ய மத்பர:’ என்றால், அனைத்து கர்மங்களையும் ஞானபூர்வகமாக (புத்தி பூர்வகமாக) என்னிடம் அர்ப்பித்து, நானே சர்வகர்த்தன், என்

விருப்பப்படி பலன்களைக் கொடுப்பவன் என்று திட மனதினைக் கொள், என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் உபதேசிக்கிறான். இது மட்டுமல்லாமல், இதன்படி செய்யாவிட்டால் (அர்ப்பண புத்தி இல்லாமல் விஷய போகத்தில் ஈடுபட்டால்), ஆகும் அனர்த்தத்தை நிரூபித்து எச்சரிக்கிறான்.

யோஷித்ஸு கல்பாபரணாம்பராதி
த்ரவ்யேஷு மாயாரசிதேஷு மூட: |
ப்ரலோபிதாத்மா ஹ்யுபபோகபுத்யா
பதங்கவன்னஷ்யதி நஷ்டத்ருஷ்டி: || (பாகவத)

என்று வேதவியாசர் ப்ராக்ருத குணகார்யங்களான பெண், பொருள், ஆபரணாதிகளின் போகத்தினால் வஞ்சிதனான மூடன், ஞான ஷூன்யனாகி, உபபோக புத்தியினால், விட்டில்பூச்சி நெருப்பில் விழுவதைப் போல, விழுகிறான் என்று சொல்கிறார்.

ஸ்ரீவரனெ நீ தத்வதே[3]வதெக[3]ளொளகி[3]த்து[3]
யாவத்து கர்ம நீ மாடி[3] | நீ மாடி[3] மாடி[3]ஸுத
ஜீவரிகெ[3] ஈவெ ஸுக[2]து[3]க்க[2] ||105-(321)

ஸ்ரீவரனே - ஹே லட்சுமிரமணா. நீ - நீ. தத்வதேவதெக ளொளகித்து - தத்வாபிமானி தேவதைகளில் நியாமகனாக இருந்து, யாவத்து - அனைத்து. கர்ம - கர்மங்களை. நீ மாடி - நீ செய்து. மாடிஸுத - ஜீவர்களால் செய்வித்து, ஜீவரிகெ - ஜீவர்களுக்கு, சுகதுக்க - சுக துக்கங்களை (அவரவரின் யோக்யதைக்கேற்ப) ஈவெ - கொடுக்கிறாய்.

தன்னால் உண்டாகும் அனைத்து இந்திரிய க்ரியைகளில் ஜீவனுக்கு இருக்கவேண்டிய அனுசந்தானத்தைப் பற்றிய பிரமாண வாக்கியம் இவ்வாறு உள்ளது.

ஸர்வேந்திரியாபிமானிஸ்த முக்யப்ராணஸ்த விஷ்ணுனா |
ப்ரேரித: ஸ்ரீஷதுஷ்டயர்த்தம் கரிஷ்யே கர்ம சாகிலம் ||

அனைத்து இந்திரிய அபிமானி தேவதைகளில் இருக்கும் முக்ய பிராணனின் அந்தர்யாமியான ஸ்ரீவிஷ்ணு ப்ரேரணையினாலேயே,

நான், ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யர்த்தமாக, அனைத்து கர்மங்களையும் செய்கிறேன்.

ஜீவன் செய்யும் அனைத்து கர்மங்களும் ஸ்ரீவிஷ்ணுவினால் செய்து, செய்யப்படுவதே ஆகும். 'கர்ம காரயிதா சைவ' ஆகிய ஸ்ருதிகள் இந்த விஷயத்திற்கு ஆதாரமாக உள்ளது. ஸ்ரீமதாசார்யர், சூத்ர பாஷ்யத்தில்:

பூர்வகர்மப்ரயத்னம் ச ஸம்ஸ்காரம் சாப்யபேக்ஷ்யது |
ஈஷ்வர: காரயேத்ஸர்வம் தச்சேஷ்வரக்ருதம் ஸ்வயம் ||

அதாவது, ஜீவர்களின் அனாதிகர்ம, யோக்யதைகளுக்கேற்ப ஸ்ரீஹரி, ஜீவர் மூலமாக அனைத்தையும் செய்விக்கிறான். அந்த அனைத்தும் ஈஷனால் செய்யப்பட்டதே என்று கூறுகிறார்.

வைஷ²ம்ய மொத³லாத³ தோ³ஷரஹிதனெ நிரபி⁴
லாஷெ²யலி நின்ன ஸர்வத்ர | ஸர்வத்ர சிந்தெ பர
தோ¹ஷிஸுவெ ஒலிது³ ஸுக²வித்து ||106-(322)

வைஷம்ய மொதலாத - வைஷம்ய (பாரபட்சம்) முதலான. தோஷ ரஹிதனெ - தோஷரூபனான நீ. நிரபிலாஷெயலி - நிஷ்காமராக (பலனை எதிர்ப்பார்க்காதவராக). நின்ன - உன்னை. ஸர்வத்ர - அனைத்து தேஷகாலங்களில். சிந்திபர - சிந்திப்பவர்களை. ஒலிது - மெச்சி. ஸுகவித்து - சுகத்தைக் கொடுத்து. தோஷிஸுவெ - மகிழ்விக்கிறாய்.

'ஸ காரயேத்புண்யமதாபி பாபம் ந தாவதா தோஷ வானிஷிதாபி' என்னும் (சதுர்வேதஷிகா) ஆகம வாக்கியம், புண்யபாபரூப கர்மங்களை செய்விக்கும் ஸ்வதந்த்ர நியாமகன் ஆனாலும், அவன் தோஷி அல்ல என்று சொல்கிறது. 'ஓம் வைஷம்ய நைர் க்ருண் யேன ஸாபேக்ஷத்வாத் ஓம்' என்னும் பிரம்மசூத்ரத்தில், ஸ்ரீஹரி வைஷம்யாதி தோஷங்கள் அற்றவன் என்று ஸ்ரீபாதராயணர் நிர்ணயம் செய்திருக்கிறார்.

314ம் பத்யத்தின் விவரணையை இங்கு பார்க்கலாம்.

பூ^{4}ரமண நித்ய ஸம்ஸாரிக^{3}ளலித்^{3}து^{3} த^{4}ன
தா^{3}ராதி^{3}க^{3}ளலி மமதெய | மமதெய கொட்டு ஸஞ்
சார மாடிஸுவெ ப^{4}வதொ^{3}ளு ||107-(323)

பூரமண – பூமாதேவிக்கு ரமணனான ஸ்ரீஹரியே. நித்ய ஸம்சாரி களலித்து – நித்ய சம்சாரி ஜீவரில் இருந்துகொண்டு. தனதாராதி களலி – தன, மனைவி முதலான வஸ்துகளில். மமதெய – என்னுடையது என்னும் அபிமானத்தை. கொட்டு – கொடுத்து. பவ தொளு – சம்சாரத்தில். சஞ்சார மாடிஸுவெ – சஞ்சாரம் செய்ய வைப்பாய். முக்தியோக்யர், நித்யசம்சாரிகள் மற்றும் தமோ யோக்யர்கள் என்று ஜீவர்கள் ஸ்வரூபத்தினால் மூன்று விதங்கள். ஸ்ரீரமணன் முக்தியோக்யருக்கு கதியைக் கொடுக்கிறான் (321ம் பத்யத்தில் ஸ்ரீரமணனின் செயல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன).

நித்யசம்சாரிகளை சம்சாரத்திலேயே சுழல வைப்பவன் பூரமணன். இந்த ஸ்ரீஹரி ரூபத்தின் செயல்கள் இந்த நுடியில் சொல்லப்பட்டி ருக்கின்றன. துர்கா ரமணன் தமோயோக்யர்களை அந்தம் தமஸ்ஸிற்கு அனுப்புகிறான். ஸ்ரீமஹா லட்சுமிதேவியின் ஸ்ரீ, பூ, துர்கா ரூபங்கள் முறையே ஸத்வ, ரஜ, தமோ குணங்களின் நியாமகங்களாக இருக்கின்றன. அடுத்த நுடி துர்காரமணனின் செயல்களை நிரூபிக்கிறது.

க்ரூரகர்மவ து^{3}ர்கெ^{3}ரமணனே தை^{3}த்யரொளு
தோரிகொள்ளத^{3}லெ நீ மாடி^{3} | நீ மாடி^{3} மாடி^{3}ஸுத
கோ^{4}ரது^{3}க்கக^{3}ள உணிஸூவி ||108-(324)

துர்கெரமணனெ – ஹே துர்கா ரமணனே. தைத்யரொளு – தமோ யோக்ய ஜீவரில். நீ தோரிகொள்ளதெ – (நீயே செய்து செய்விக்கிறாய் என்னும் ஞானத்தை அவருக்கு கொடுக்காமல்) அஞ்ஞானத்தில் வைத்து, க்ரூரகர்மகள – உக்ரமான கர்மங்களை. நீ மாடி மாடிஸித – நீயே செய்து அவர்கள் மூலமாக செய்வித்து, கோரதுக்ககளனு – கோரமான நித்ய துக்கங்களை. உணிஸுவி – அனுபவிக்குமாறு செய்கிறாய். (அதற்காக அந்தம்தமஸ் என்னும் நித்ய நரகத்திற்கு அனுப்புகிறாய்).

ஸத்வகுண பந்தம் உள்ள முக்தியோக்யர் (ஸாதனங்கள் முடிந்தபின்) மஹராதி மேல் உலகங்களை (ஸ்வயோக்யமான உலகங்களை) அடைகின்றனர். ரஜோகுணத்தால் பந்திதரான நித்ய ஸம்சாரிகள் நடுவில் இருக்கும், பூ, ஸ்வர்க்க, நரகங்களில் சுற்றுவர். தமோ குண பந்தமுள்ள தமோயோக்யர், அதோலோகத்தில் (தமஸ்) அடைவர்.

மூன்றுவித ஜீவர்களும் மூன்று குணங்களாலும் பந்தனப் பட்டவர்களே ஆனாலும், ஸத்வாதி குணங்களின் தன்மையால், அந்தந்த குணங்களால் (அதிகமாக) பந்தப்பட்டவர்கள் என்று இங்கு சொல்லப்படுகிறது.

ஊர்த்வம்கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: |
ஜகன்யகுணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா: || (கீதை)

மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் || (கீதை)

என்னும் பிரமாண வாக்கியங்கள் மேற்கண்ட விஷயத்தை நிரூபிக்கின்றன.

ஹரியே நீனொளகி³த்³து³ பரதா³ர த⁴னக³ளலி
எரகி³ஸுவெ மனவ மருகி³ஸி | மருகி³ஸி மோஹிஸுவெ
கருணி நினகி³து³ உசிதவே ||109-(325)

ஹரியே – ஹே ஸ்ரீஹரியே. நீனொளகித்து – அனைத்து ஜீவர்களின் உள்ளிருந்து சர்வப்ரேரகனாகி நீயே இருந்து. பரமாதரன களலி – பிறன் மனை, பிறன் சொத்துக்களின். மனவ – அவர்களின் மனதினை. மருகிஸி – மெச்சி அவற்றில் ஆசையை பிறப்பித்து. எரகிஸுவெ – (அங்கேயே) இருக்குமாறு செய்வாய். (மனம் அவற்றை ஆக்ரமிக்குமாறு – விரும்புமாறு செய்வாய்). மோஹிஸுவெ – (ஆகையால் சம்சாரத்தில் சுற்றுவதற்கு காரணமான அஹம், மமகாரங்களின் ரூபமான) மோகத்தை உருவாக்குவாய். கருணி – ஹே தயாளோ. இது – எப்படி செய்கிறாய்? நினகெ – உனக்கு. உசிதவெ – இது சரியா?

ஜீவர்களுக்கு அஹம் மமகாரங்களை உருவாக்கி, சம்சாரத்தில் சிக்க வைப்பவனும், அதிலிருந்து, மோசனம் செய்விப்பவனும் ஸ்ரீஹரியே.

பந்தகோ பவபாஷேன பவபாஷாஸ்ச மோசக: |
(விஷ்ணு தத்வ நிர்ணய)

விவிதஸாம்ஸாரிக துக்கதர்ஷனேன விரக்தஸ்ய |
என்று சொல்வது போல, சம்சாரத்தில் பற்பல விதமான துக்கங்களை அனுபவிப்பதாலேயே மோட்ச ஸாதனைகளில் முக்கியமான வைராக்கியம் வருகிறது. அனாதி கர்ம மற்றும் லிங்க தேகங்களிலிருந்து முக்தரான ஜீவர்களை, ஸ்ரீஹரி, எந்த ஸாதனையும் இல்லாமல் முக்தர்களாக செய்வதற்கு தக்கவனே ஆகியிருந்தாலும், அப்படி செய்தால் வைஷம்யாதி (பாரபட்சம்) தோஷத்திற்கு ஆளாவான் மற்றும் ஸாதனை செய்தபிறகே அவரவர்களின் கதிகளை கொடுக்கிறான் என்பது அவனின் சங்கல்பம். அவன் சத்யசங்கல்பன்.

எல்லி ஹரிரூப மத்தல்லி கு³ணக்ரியெக³ளு
எல்லி கு³ணரூப க்ரியெக³ளு | க்ரியெக³ளு கு³ணரூப
ப³ல்லவனே ஞானி ஜக³தொ³ளு ||110-(326)

எல்லி ஹரிரூப – ஸ்ரீஹரியின் ரூபம் இருக்கும் இடங்களில். மத்தல்லி – ரூபத்துடன் அங்கு (அந்த ரூபத்தில்). குணக்ரியெகளு – குண க்ரியைகளும் இருக்கிறது என்றும், அல்லெ – அந்த ரூபகுண க்ரியைகளில் ஒவ்வொன்றிலும், குணரூப க்ரியெகளு – அனந்த குண ரூப க்ரியைகள் இருக்கிறது என்றும், க்ரியெகளு – க்ரியைகளே. குணரூப - குணரூபங்கள் என்றும். பல்லவனெ – அறிந்தவனே. ஜகதொளு – உலகில். ஞானியு – ஞானி என்று சொல்லிக் கொள்வதற்கு தகுதி படைத்தவன்.

ஸ்ரீஹரி தன் ஒரு ரூபத்தில் அனந்தரூபங்களைக் கொண்டவன். ஒவ்வொரு ரூபமும் குண க்ரியைகளால் பூர்ணமே ஆகிறது. குணரூப க்ரியைகள் அனைத்தும் பரஸ்பரம் அபின்னமே ஆகிறது. இந்த பிரமேயத்தை (சரஸ பாரதி விலாஸ) இவ்வாறு சொல்கிறது.

ப்ரத்யேகம் து குணா: ஸர்வேப்யனந்தானந்ததா மதா: |
ப்ரத்யேகம் து குணா: ஸர்வே ஸதா ஸர்வகுணாத்மகா: ||
குணாந்தர விசேஷாஸ்ச யதா ரூபாணி தே குணா: |
சமஸ்த குணபூர்ணாஸ்ச க்ரியாரூபாதிபிர்யதா: ||

குணானாம் யே குணாஸ்தேऽபி குணபூர்ணா: புனஸ்ததா |
பரஸ்பரமபின்னாஸ்ச தர்மா: ஸர்வேऽபி தத்கதா: |
ததபின்னா குணா நித்யமபி ஸர்வே விசேஷத: ||

அதாவது, ஸ்ரீஹரி அனந்தரூபங்கள் உள்ளவன். ஒவ்வொரு ரூபமும் அனந்த குணபூர்ணமானவை. ஒவ்வொரு குணமும் தனித்தனியாக அனந்தமானவை (அனந்த வகையானவை). ஒவ்வொரு குணமும் சர்வகுணாத்மகம் ஆனவை. (ஞானத்தில் ஆனந்தாதிகளும், ஆனந்தத்தில் ஞானாதிகளும் இருக்கிறது என்று அர்த்தம்.

ரூபங்களைப் போல குணங்களும் அனந்தமே. அனைத்து ரூபங்களும் குணாத்மகமும் க்ரியாத்மகமும் ஆகியிருக்கிறது. குணங்களின் விசேஷ குணங்களும் (அதன் ஒவ்வொரு வகையும்) திரும்ப குணபூர்ணமே ஆகின்றன. அதுமட்டுமல்லாமல், ரூப, குண, க்ரியைகள் அனைத்தும் ஒவ்வொன்றும் அத்யந்த அபின்னமாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட அற்புத மகிமை உள்ளவன் என்று ஸ்ரீஹரியை அறிந்தவனே ஞானி.

ஸ்ரீஜகன்னாததாஸரே இன்னொரு இடத்தில் :
ஒந்துரூபதொள் அனந்தரூபவு பொந்திப்பவு குணகண ஸஹித
ஹிந்தெ முந்தெ எந்தெந்திகெ ஸ்ரீகோ
விந்தகெ ஸரிமிகில்லெந்தெம்புதெ - பலவிது பாள்துதக்கெ ||
என்று இதே அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறார்.

நின்னதீ[4]னனு நானு நின்ன தா[3]ஸர தா[3]ஸ
என்னதே[3]னய்ய அபராத[4] | அபராத[4]க[3]ள நோடி[3]
ப[3]ன்ன ப[3]டி[3]ஸோது[3] உசிதவே ||111-(327)

நான். நின்னதீனனு - (எப்போதும் அனைத்து விதங்களிலும்) உன் வசன். நின்ன தாஸர - உன் சேவகனான தேவாதி அனைத்து ஸ்வோத்தமர்களின். தாஸ - தாஸன் ஆகிறேன். என்ன - என். அபராத - (நானே ஸ்வதந்த்ரனாக செய்யத்தக்க) அபராதவு - தவறுகள். ஏனய்ய - என்ன இருக்கிறது, ஸ்வாமி. இப்படி இருக்கையில், அபராதகள - என்னால் செய்யப்பட்ட தவறுகளை. நோடி - பார்த்து. பன்னபடிஸோது - கஷ்டப்படுத்துவது. உசிதவெ

– சரியா? (அனைத்தையும் நீயே செய்து செய்விப்பதால், சீக்கிரமாக எனக்கு அருள்வாயாக என்னும் பிரார்த்தனையே இது).

239, 265, 266ம் பத்யங்களின் விவரங்களை இங்கு பார்க்கலாம்.

ஔ ஹொரகெ³ நீனித்³து³ திளியகொ³ட³த³லே ஜக³தி³
ஹலவு கர்மக³ள நீ மாடி³ | நீ மாடி³ மாடி³ஸுத
ப²லக³ளன்னீவே ஜனரிகெ³ ||112-(328)

ஔஹொரகெ – (ஜீவர்களின்) உள்ளே மற்றும் வெளியே. நீனித்து – நீயே இருந்து. திளியகொடதலெ – (ஜீவர்களுக்கு) தெரியப் படுத்தாமல். ஜகதி – உலகில். ஹலவு கர்மகள – பற்பல கர்மங்களை. (நீ செய்தவற்றையே) ஜீவர்களால் செய்வித்தவாறு. ஜனரிகெ – மக்களுக்கு. பலகளன்னு – அதனால் வரும் கர்ம பலன்களை. ஈவெ – கொடுக்கிறாய்.

புருஷ என்னும் பெயரால் ஜீவாந்தர்யாமியாகவும், கால நாமகனாகவும் வெளியேயும் இருந்து, இரு இடங்களிலும் நியாமகனான ஸ்ரீஹரியே, அனைத்தையும், அந்தந்த காலங்களில் செய்து, ஜீவர்களால் செய்விக்கிறான். 'அந்தர்பஹி:புருஷ காலரூபை:' ஆகிய பாகவத வாக்கியங்கள் இந்த மகிமையை சொல்கின்றன. பிரம்ம ருத்ராதிகளில், தன் பெயர்களால் அவரின் அந்தர்யாமியாக இருக்கிறான். புறத்தில் அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கிறான்.

பிரம்மா நாராயண: | ஷிவஸ்ச நாராயண: | ஷக்ரஸ்ச நாராயண: | த்யாவாப்ருதிவ்யௌ ச நாராயண: | காலஸ்ச நாராயண: | திஷஸ்ச நாராயண: | ஊர்த்வம் ச நாராயண: | அதஸ்ச நாராயண: | அந்தர்பஹிஸ்ச நாராயண: | - என்று லகு நாராயணோபனிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தே³வக³ங்கே³ய தடி³ய பா⁴வி தோடு³வனந்தெ
தே³வேஶனிரலு திரிது³ம்ப | திரிது³ம்ப ரக்கஸர
தே³வரெந்தெந்து³ கெட³தி³ரு ||113-(329)

தேவகங்கெய தடிய – கங்கைக்கரையில். பாவி தோடுவனந்தெ – (தாகம் எடுத்தவன்) வாயை திறந்து வைப்பதைப் போல.

தேவேஷனிரலு – தேவோத்தமனான (சர்வாபீஷ்டனான) ஸ்ரீஹரி இருக்கையில், திரிதும்ப – பிக்ஷை எடுத்து உண்ணும். ரக்கஸர – துர்தேவதைகளை. தேவரெந்தெந்து – (வணங்கத்தக்க) தேவதைகள் என்று அறிந்து. கெடதிரு – கெட வேண்டும்.

309ம் பத்யத்தின் விவரணையை இங்கு பார்க்கலாம்.

நிர்தோ^{3}ஷ கு^{3}ணபூர்ண ஸ்வர்து^{3}னீ ஜனக கோ^{3}
வர்த்த^{4}னோத்தா^{3}ர க^{3}ம்பீ^{4}ர | க^{3}ம்பீ^{4}ர க^{2}ளர குல
மர்த்த^{3}னனே நீனெனகெ^{3} த^{3}யவாகோ^{3} ||114-(330)

நிர்தோஷ குணபூர்ண – தோஷங்கள் அற்ற, குணபூர்ணனான. ஸ்வர்துனீஜனக – தேவகங்கையின் தந்தையும். கம்பீர – அப்ரமேயனும், ஒப்பிலா மகிமனுமான. கோவர்த்தனோத்தார – கோவர்த்தன பர்வதத்தை தன் லீலையால் தூக்கிப் பிடித்த ஹே கிருஷ்ணா. களர குலமர்த்தனனே – தைத்ய குலாந்தகனே. நீ. எனகெ – எனக்கு. தயவாகோ – அருள்வாயாக.

நாராயணம் குணை:ஸர்வைருதீர்ணம் தோஷவர்ஜிதம் |
மற்றும் நிர்தோஷாசேஷஸத்குணம்

ஆகிய வாக்கியங்களில் விளக்கியதைப் போல, ஸ்ரீமதாசார்யர் தம் பாஷ்யாதி பற்பல கிரந்தங்களில் ஸ்ரீஹரியே சர்வகுணபூர்ணனும் நிர்தோஷனும் ஆகிறான் என்று நிரூபித்திருக்கிறார். ஸ்ரீஹரியின் விருப்பங்களை ரமாபிரம்மாதிகளும் அறியமாட்டார்கள். அவனின் அருளாலேயே கால விசேஷங்களில் மட்டும் சிலவற்றை அவர்கள் அறிந்திருக்கின்றனர். ஸ்ரீஹரியின் ஸ்வரூபத்தை முழுமையாக வேதாதிகளாலும் அறிவதற்கு சாத்தியம் இல்லை. இந்த இரு காரணங்களால் ‘கம்பீர’ என்று ஸ்ரீதாஸார்யர் கூறுகிறார்.

நாராயணனிருத்த^{3} ஈரைது^{3} கரணதி^{3} வி
ஹாரகொ^{3}ளுதிர்ப ப்ரத்^{3}யும்ன | பிரத்^{3}யும்ன ஸங்கர்ஷணனே நீ
விராஜிஸுவி ஜக^{3}தொ^{3}ளு ||115-(331)

நாராயணனிருத்த – நாராயண, அனிருத்த என்னும் (போஜ்ய வஸ்துவில் இருக்கும்) இரு ரூபங்களைக் கொண்ட, மற்றும் பிரத்யும்ன சங்கர்ஷணனே – பிரத்யும்ன, சங்கர்ஷண என்னும்

(போக்த்ருவில் இருக்கும்) மேலும் இரு ரூபங்களைக் கொண்ட ஹே ஹரியே. ஈரைது கரணதி - 10 இந்திரியங்களின் மூலமாக. விஹாரகொளுதிர்ப்ப - லீலைகளை புரியும். நீ. ஜகதொளு - உலகத்தில். விராஜிஸுவி - செயல்களை செய்கிறாய்.

வாஸுதே³வனே ஜீவராஶிக³ளொளித்து³ அவ
காஶ கொடு³திர்ப்பெ விஷயக்கெ | விஷயக³ளனுண்டு³ ஸன்
தோஷபடி³ஸுவி ப⁴கதர ||116-(332)

வாஸுதேவனே - ஹே வாசுதேவனே. ஜீவராஷியொளகித்து - ஜீவர்களில் (உள்ளே மற்றும் வெளியே) இருந்து. விஷயக்கெ - விஷய போகத்திற்கு. அவகாஷ கொடுதிர்ப்பெ = சூழ்நிலையை உருவாக்குகிறாய். விஷயகளனுண்டு - விஷயங்களை நீ போகித்து. பகதர - பக்தர்களை. ஸந்தோஷ படிஸுவி - அவர்களுக்கும் போகத்தைக் கொடுத்து சுகத்தைக் கொடுப்பாய்.

நாராயண, அனிருத்தரூபங்கள் போஜ்ய வஸ்துகளில் இருக்கின்றன. சங்கர்ஷண, பிரத்யும்ன ரூபங்கள் போக்த்ருகளில் இருக்கிறது. ஜீவ தேகங்களின் உள்ளே மற்றும் வெளியே இருக்கும் ஆகாஷத்தில் வாசுதேவன் இருந்து, போகத்திற்கு (போகரூப வ்யாபாரத்திற்கு) சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கிறாய்.

சங்கர்ஷணஸ்ச ப்ரத்யும்னௌ தத்ர போக்த்ருஷு ஸம்ஸ்துதௌ |
தர்பகௌ ஸர்வஜீவானாம் தஸ்மாத்போஜயோ ந ஜான்யதா |
நாராயணானிருத்தௌ து போஜ்யவஸ்துஷு ஸம்ஸ்திதௌ |
போக்த்ருஷக்திப்ரதௌ நித்யம் போக்தாரஸ்ச விசேஷத: |
அவகாஷப்ரதோ நித்யம் வாசுதேவோ நபஸ்தித: |
ஏதைஸ்சதுர்பிர் பகவான் ரூபைஸ்ச சதுராத்மபி: |
போக்யபோக்த்ரு ஸ்வரூபேண திஷ்டதி க்ரீடயா ஸ்வயம் |
ஸ ஏவ பகவான் விஷ்ணுரவிதேஷோகிலேஷ்வபி |
ரூபேஷு க்ரீடதே நித்யம் போக்தா போஜயதீச்சயா ||
(தைத்திரிய பாஷ்ய)

சங்கர்ஷண பிரத்யும்னர் போக்த்ருகளில் இருந்து அனைத்து ஜீவர்களுக்கு தர்ப்பகராக இருக்கின்றனர். நாராயண, அனிருத்தன் போஜ்ய வஸ்துகளில் இருக்கின்றனர். போக்தாரரான ஜீவர்களுக்கு

போகஷக்தி பிரதரும் ஸ்வயம் போக்தரும் (விசேஷ பலத்தினால்) அவரே ஆகியிருக்கின்றனர் என்று சொல்லப்படுகின்றனர். ஆகாஷத்தில் இருக்கும் வாசுதேவன் (தேகத்தில் உள்ளே மற்றும் வெளியே வியாப்தமான) ஆகாஷத்தில் இருந்து போகத்திற்கு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கிறான். இவ்வாறு ஷட்குணை ஸ்வர்ய பூர்ணனான விஷ்ணுவே போஜ்ய போக்த்ருகளில் இருக்கும் ரூபங்களால் அபின்னனாக இருந்து, உண்டு, உண்விக்கும் செயல்களை தினமும் செய்விக்கிறான்.

அணுவிக^{3}ணுதரனாகி க^{4}னகெ க^{4}னதரனாகி^{3}
அணுமஹத்துக^{3}ள தெ^{3}ஶெயிந்த^{3} | தெஶெயிந்த^{3} நீ வில
க்ஷணனெனிஸிகொம்பெ^{3} ஸ்ருதியொளு ||117-(333)

நீ – நீ. அணுவிகெ – அணுவைவிட. அணுதரனாகி – அணுவாக (சிறியதாக). கனகெ – பெரியதைவிட. கனதரனாகி – பெரியதாக. அணுமஹத்துகள தெஷெயிந்த – அணு, மஹத்களைவிட. விலக்ஷணனு – வேறுபட்டவன். எனிஸிகொம்பெ ஸ்ருதியொளு – என்று ஸ்ருதிகளில் புகழப்படுகிறாய்.

‘அணோரணீயான் மஹதோ மஹீயான்’ (காடக) ‘ஐஸ்வர்யாத் பகவான் விஷ்ணுர்விருத்தம் கடயத்யஸௌ’ (கா.பா) என்று இந்த நுடியில் சொல்லப்பட்ட பிரமேயம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீஹரி, அணுஸ்வரூபரான ஜீவர்களில் அந்தர்யாமியாக இருக்கிறான். மேரு, ஆகாஷாதி சர்வ மஹத் வஸ்துகளில் மஹத் ரூபனாகவே இருக்கிறான். இது மட்டுமல்ல, ஒரே சமயத்தில் ஒரே ரூபத்தினால் அணுமஹத் என்னும் இரண்டுமாக ஆகியிருக்கிறான். ஸ்ரீஹரியின் அனைத்து ரூபங்களும் இந்த மகிமைகளைக் கொண்டதாகவே ஆகியிருக்கின்றன.

யசோதை, ஸ்ரீகிருஷ்ணனை கயிற்றினால் கட்ட முயன்றபோது, எவ்வளவு கயிற்றினை பயன்படுத்தினாலும் அது குறைவாகவே இருந்தது. அவளால் அவனை கட்டமுடியவில்லை. தாயின் சிரமத்தைப் பார்த்து, கருணையுடன், ஸ்ரீகிருஷ்ணன் தானே அதற்கு கட்டுப்படுகிறேன் என்று சங்கல்பம் செய்து கொண்டவுடன், ஒரு சிறிய கயிற்றினால் அவனை கட்டிவிட்டாள். ஸ்ரீகிருஷ்ண ரூபம் முதலில் மேரு பர்வதத்தைப் போல பெரியதும் இல்லை. பிறகு

சிறியதாகவும் ஆகவில்லை. உருவம் ஒரே மாதிரியே இருந்து, உலகத்தில் எதிர்மறைகள் என்று இருக்கும் (சிறிய, பெரிய) தர்மங்களும் எப்போதும் தன்னிடம் இருக்கிறது என்பதை விளக்கியிருக்கிறான்.

அணுவாகபல்ல மஹத்தாகபல்ல அணுமஹத்தெரடு ஒந்தாகபல்ல (புரந்தரதாஸர்)

விஹித கர்மக[3]ளிந்த[3] அஹிகபாரத்ரிகக[3]
ளிஹவு ஜீவரிகே[3] ஸர்வத்ர | ஸர்வத்ர ஸஜ்ஜனர
ஸஹவாஸவெந்து[1] தொ[3]ரெவுதோ[3] ||118-(334)

விஹிதகர்மங்களிந்த – ஜீவர்களுக்கு அவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்ம ஆசரணையினால். அஹிக பாரத்ரிககளு – இஹபர உலகங்களில் சுகபிராப்தி. அஹவு – கிடைக்கிறது. (ஆனால்) சர்வத்ர – அனைத்து பிறவிகளில். சஜ்ஜனர – பகவத் பக்தர்களின் (சாதுகளின், மஹாத்மரின்). சஹவாஸவு – சங்கமானது. எந்து தொரெயுவுதோ – எப்படி கிடைக்கும்? (கிடைக்காது என்பதே சரி. வெகு புண்ணிய சாத்யமான ஸ்ரீஹரி பிரஸாதத்தினால் மட்டுமே கிடைக்கும்).

ஸத்சங்கத்தினால், மனம் மற்றும் ஸ்ரோத்ர இந்திரியங்களுக்கு, ஸ்ரீஹரியின் மகிமைகளின் நிரந்தர ஸ்ரவணாதிகளும், சஜ்ஜனர்களின் அந்தர்யாமியான ஸ்ரீஹரியின் சேவையும், கிடைக்கிறது. ஆகையால், சீக்கிரமாக பக்வபக்தியின் உதயம் ஆகிறது. ஸ்வதர்மாசரணையினால் இஹபர சுகப்ராப்தி ஆகிறதே தவிர, சத்ஸங்கத்தின் மஹாபலன் கிடைப்பதில்லை.

பவாபவர்கோ ப்ரமதோ யதா
பவேஜ்ஜனஸ்ய தர்ஹ்யச்யுத ஸத்ஸமாகம: |
ஸத்ஸங்கமோ யர்ஹி ததெய்வ ஸத்கதௌ
பராவரேஷே த்வயி ஜாயதே ரதி: || (பாகவத)

சம்சாரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் ஜீவர்களுக்கு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் அருகில் வந்தபோது, ஹே கிருஷ்ணா. உன் விருப்பத்தினாலேயே சஜ்ஜனர்களின் சகவாசம் கிடைக்கிறது.

சத்சங்கத்தினால் புருஷோத்தமனான உன்னில் (அபரோக்ஷத்திற்கு சாட்சாத் ஸாதனமான) சிறந்த பக்தி உண்டாகிறது.

என்னப்ப என்னம்ம என்னய என்னண்ண
என்னரஸ என்ன குலதெ³ய்வ |குலதெ³ய்வ இஹபரதி³
என்ன பி³ட்டக³லதே இரு கண்ட்³ய ||119-(335)

என்னப்ப – என் தந்தையும். என்னம்ம – என் தாயும். என்னய்ய – என் ஸ்வாமியும். என்னண்ண – என் அண்ணனும். என்னரஸ – என் தலைவனும் ஆன. என்ன குலதெய்வ - என் குலதெய்வமான ஹே ஸ்ரீனிவாசனே. என்ன பிட்டு – என்னை விட்டு. அகலதே இரு – பிரியாமல் இரு. (என்னை விடவேண்டாம். எப்போதும் கூடவே இரு). கண்ட்ய – என் இந்த வேண்டுகோளை சித்தத்திற்குக் கொண்டு வா, ஸ்வாமி.

ஸ்ரீஹரி, அனைத்து ஜீவர்களில் பிம்பரூபத்தினால் நித்ய சம்பந்தம் உள்ளவனாகவே இருக்கிறான். என்றும் (எப்போதும்) விலகாமலேயே இருக்கிறான். எப்படி இருந்தாலும், விட்டு விலகாதீர்கள் என்னும் பிரார்த்தனை வீண் அல்ல. எப்போதும் அருள்வதாகவே இருங்கள் என்னும் பிரார்த்தனையே இது. பித்ருத்வேன, மாத்ருத்வேன, ப்ராத்ருத்வேன, ஸ்வாமித்வேன உன்னை நான் வணங்குகிறேன் ஆகையால், என் பிரார்த்தனையை நிறைவேற்றுவது உனக்கு தக்க விஷயமே ஆகும் என்னும் வேண்டுகோளே இதுவாகும்.

என்ன ப³ந்து⁴க³ளெல்ல நின்ன தா³ஸரு ஸ்வாமி
மன்னிஸு கண்ட்³ய மஹராய |மஹராய நீ மரெத³
ரின்னாரு ஸாகலரியரு ||120-(336)

ஸ்வாமி – ஹே பிரபோ. என்ன – என். பந்துகளெல்ல – அனைத்து உற்றார் உறவினர்களும். நின்ன தாஸரு – உன் தாஸரே ஆகியிருக்கின்றனர். (உன் பக்தரே என் உறவினர்கள்). கண்ட்ய – (இவ்வாறு சிந்திக்கிறேன் என்பதை) மனதில் வைத்துக்கொள், ஸ்வாமி. மஹராய – ஹே மஹதைஸ்வர்ய சம்பன்னனே. மன்னிஸு – அருள்வாயாக. நீ. மரெதரெ – மறந்துவிட்டால்

(புறக்கணித்தால்). இன்னாரு – வேறு யார். ஸாகலரியரு - என்னை காப்பாற்றுவார்கள்.

மனைவி, மக்கள் ஆகிய அனைத்து உறவினர்களும் ஸ்ரீஹரியின் அதீனர்கள் என்னும் அனுசந்தானம் இருக்க வேண்டும் என்பதும் இங்கு சொல்லப்படுகிறது. 'பாந்தவா விஷ்ணுபக்தாஸ்ச' என்று சொல்வதைப் போல, விஷ்ணுபக்தர்களையே பந்துகள் என்று அறிய வேண்டும் என்னும் அபிப்பிராயமும் இங்கு உள்ளது.

சஜ்ஜனர்கள் அனைவருக்கும் எப்போதும் சுகத்தைக் கோருவது மஹாத்மர்களின் ஸ்வபாவம். தம் உறவினர்களை விட்டு, ஸ்வர்க்காதி லோகங்களுக்கு வரமாட்டேன் என்று புறக்கணித்த பக்தர்களின் உதாரணங்களும் உள்ளன. பிரகலாதனின் 21 பித்ருகள் சத்கதியை அடைந்தனர் என்று ஸ்ரீநரஹரியே பிரகலாதனுக்கு நம்பிக்கை அளித்திருக்கிறார்.

பவபந்தங்களிலிருந்து மோசனம், வேறு யார் மூலமாகவும் கிடைப்பதில்லை. 'பந்தகோ பவபாஷேன பவபாஷாஸ்ச மோசக:' மற்றும் 'விஷ்ணுர்ஹி தாதா மோக்ஷஸ்ய வாயுஸ்ச ததனுக்ஞயா' ஆகிய ப்ரமாணங்கள் முக்தியைக் கொடுப்பதில் ஸ்ரீஹரி ஒருவனே சமர்த்தன் என்று சொல்கின்றன. வாயுதேவர் ஒருவர் மட்டும், விஷ்ணுவின் அனுமதியுடன் மோட்சத்தைக் கொடுப்பதற்கு ஷக்தர். ஸ்வதந்த்ரமாக முக்தியைக் கொடுக்க வல்லவர் ஸ்ரீஹரி ஒருவரே.

ஸர்வாந்தராத்மகனே து³ர்விஷய தைலதொ³ளு
த³ர்வியந்த³த³லி சரிஸூவ | சரிஸூவ மனத³ல்லி
ஸர்வகாலத³லி நெலெகொ³ள்ளோ ||121-(337)

ஸர்வாந்தராத்மகனெ – ஹே ஸர்வாந்தர்யாமி ஸ்ரீநிதியே. துர்விஷய தைலதொளு –துர்விஷயங்கள் என்னும் எண்ணையில். தர்வியந்தலி – கரண்டியில். சரிஸுவ – சஞ்சாரம் செய்யும். மனதல்லி – மனதில். ஸர்வகாலதலி – எப்போதும். நெலெகொள்ளோ – நிற்பாயாக.

துர்விஷயங்கள், எண்ணையைப் போல ஒட்டிக்கொள்ளும் ஸ்வபாவம் கொண்டது. கரண்டியானது, சாம்பார், பாயசம் ஆகியவற்றை அதில் எடுத்தாலும், அவற்றின் சுவையை அது அறியாது. அதைப்போலவே, விஷயங்களை அனுபவிப்பவர்களும், அந்த போகங்களில் விருப்பத்தைக் கொள்ளாமல் (நிர்லிப்தனாக இருக்குமாறு), எண்ணையைப் போல துர்விஷயங்கள் மனதினை ஒட்டிக் கொள்ளாதவாறு, அருள்வாயாக என்று பிரார்த்திக்க வேண்டும் என்கிறார்.

இந்திரியங்களின் மூலம் மனமானது, விஷயங்களிடம் ஈடுபடாத வாறு சிலர் அடக்கி வைக்கின்றனர். அதாவது, விஷயேந்திரி யங்களின் சம்பந்தமே இல்லாதவாறு மனம் முதலான இந்திரியங்களை அடக்குகின்றனர் என்று அர்த்தம். விஷயங்களை இந்திரியங்கள் என்னும் அக்னியில் ஸ்ரீவிஷ்ணு ப்ரீத்யார்த்தமாக ஹோமம் செய்கிறார்கள் என்று அறிந்து, போகிப்பவரக்ள் சிலர்.

அபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிஷந்தி யத்வத் |
தத்வத்காமா யம் ப்ரவிஷந்தி ஸர்வே
ஸ ஷாந்திமாப்னோதி ந காமகாமீ || (கீதை)

என்று சொல்வதைப் போல, அனேக நதிகள் நுழைந்தாலும் கடல் ஒரே மாதிரியாக இருக்கும்; மற்றும் நதிகள் தன்னில் வந்து சேர வேண்டும் என்னும் விருப்பமோ, அதற்கான முயற்சியோ இல்லாத/செய்யாத, கடலைப் போல இரு. இவ்வித நிர்விகார மனதிற்காக பரமாத்மனின் அருளைப் பிரார்த்திக்கிறார்.

ஏனபே[3]ட[3]லி நின்னதீ[4]னவே ஜக[3]வு ஸ்வா
தீ[4]ன வஸ்துக[3]ள நா காணெ | நா காணே ப[4]க்தி வி
க்[3]ஞான வைராக்[3]யவனே கருணிஸோ ||122-(338)

ஈ ஜகவு – இந்த மொத்த உலகமும். நின்னதீனவு – (அனைத்து விதங்களாலும்) உன் வசமே. ஸ்வாதீன வஸ்துகள – என் வசத்தில் இருக்கும் (மற்றும் எப்போதும் அப்படியே இருக்கக் கூடிய) எந்த வஸ்துகளையும். நா – நான். காணெ – காண வில்லை. (இப்படியிருக்கையில்) ஏன பேடலி – உன்னிடம் நான் எந்த வஸ்துவை கேட்கட்டும்?. (எது வேண்டினாலும் அது என்

வசத்தில் இருக்கத் தக்கதல்ல, ஆகையால் வேண்டுவதில்லை). பக்திவிக்ஞான வைராக்யவனெ – பக்தி, விக்ஞான (விசேஷ ஞான - அபரோக்ஷ தர்சன) மற்றும் வைராக்கியங்களை மட்டும், கருணிஸோ – அருள்வாயாக.

ஜகத்வஸ்துகள் அனைத்தும் உன் விருப்பத்தின்படியே படைத்தல், அழித்தல் ஆகியவற்றை அடைகின்றன. அவை என் வசத்தில் இருப்பவை அல்ல. ஞான பக்தி வைராக்யங்களோ ஜீவஸ்வரூப தர்மங்களே ஆகியிருப்பதால், அவை எப்போதும் என்னில் இருக்குமாறு அருள்வாயாக என்று வேண்டுகிறார்.

ஆஸெயொந்து³ண்டு ஸர்வேஶ விக்ஞாபிஸுவெ
விஶ்வம்ப⁴ராக்³ய ஸதி¹மோஹ | ஸதி¹மோஹ தப்பிஸி
நீ ஸலஹபே³கோ த³யதி³ந்த³ ||123-(339)

(ஆனால்,) சர்வேஷ – ஹே ஸர்வஸ்வாமியே. ஆஷெயொந்து – ஒரு ஆசை. உண்டு – எனக்கு இருக்கிறது. விக்ஞாபிஸுவெ – அதையே உன்னிடம் வேண்டிக் கொள்கிறேன். விஷ்வம்பராபாக்ய ஸதிமோஹ – பூமி, செல்வம், மனைவி (மண், பொன், பெண்) ஆகியவற்றின் மோகத்தை (இவை என்னுடையவை மற்றும் இவற்றினால் சுகம் உண்டாகிறது என்னும் மயக்கத்தை). தப்பிஸி – போக்கி. நீ – நீ. தயதிந்த – தயவுசெய்து. ஸலஹபேகோ – அருள்வாயாக. ஸ்வாமி.

ராம:களத்ரம் பஷவ:ஸுதாதயோ
க்ருஹா மஹே குஞ்சரகோஷபூதய: |
ஸர்வேsர்தகாமா: க்ஷணபங்குராமுஷ:
குர்வந்தி மர்த்யஸ்ய ஹியத்ப்ரியம் சலா: |
ஜஹ்யங்கனாப்ரமம ஸத்தமயூதகாதம்
ப்ரீணேஹி ஹம்ஸஷரணம் விரம க்ரமேண ||

என்னும் பாகவத உபதேச பாகங்களை தொகுத்து, ஸ்ரீதாஸார்யர் இந்த பத்யத்தில் சொல்லியிருக்கிறார். பாகவத ஸ்லோகங்களின் அர்த்தம் இவ்வாறு உள்ளது. செல்வம், மனைவி, பசு முதலான வஸ்துகள், புத்ராதி உறவினர்கள், யானை, குதிரை முதலான அனைத்தும் நாசம் அடைவதே ஆகும். அ-ஸ்திரமான இந்த

செல்வங்களால் என்ன சுகம் கிடைக்கிறது? விஷயங்களை விரும்பும் அ-சஜ்ஜனர்களால் புகழப்படும் பெண் மோகம் முதலான பிரமைகளை விடு. பரமஹம்ஸருக்கும் பூஜ்யனான ஸ்ரீஹரியை வணங்கி திருப்திப்படுத்து. வைராக்ய சிரகத்தில் ஏறு.

ஏனு பே[3]டு[3]வுதி[3]ல்ல மானாதி[3] ஸம்பத்து
நானொல்லெ ஸ்வப்னத[3]லி தவ நாம | தவ நாம க்ஷண
க்ஷணக்கெ தானொத[3]க[3]லென்ன வத[3]னக்கெ ||124-(340)

ஏனு - வேறு எதையும். பேடுவுதில்ல - நான் கேட்பதில்லை. மானாதி சம்பத்து - மானம், மரியாதை ஆகிய செல்வங்கள். ஸ்வப்னதலி - கனவிலும். நானொல்லெ - எனக்கு வேண்டாம் (விரும்புவதில்லை). க்ஷண க்ஷணக்கெ - ஒவ்வொரு நொடியும் (எப்போதும்). தவ நாம - உன் பெயர். என்ன - என். வதனக்கெ - நாக்கினில். ஒதகலி - இருக்கட்டும்.

முந்தைய பத்யத்தில் மோகத்தை பரிகரிப்பாயாக என்று வேண்டினார். இந்த பத்யத்திலிருந்து, அதற்குத் தேவையான நித்ய சங்கீர்த்தனையை பிரார்த்திக்கிறார். துக்கத்தை பரிகரிப்பதுடன் (அஞ்ஞான நாசத்துடன்) சுக ப்ராப்தியும் (ஞான லாபமும்) பரிபூர்ணத்திற்கு அவசியமே. நாம சங்கீர்த்தன சுகத்தை பக்வபக்தர்கள் அறிவார்கள். பற்பல கஷ்டங்களை அனுபவிக்கும் பிறரும் அந்த சுகத்தை (அதன் அனுபவத்தை) தத்தம் தகுதிகளுக்கேற்ப அறிகிறார்கள். 'பானேன தே தேவ கதாஸுதாயா:', 'தத்ரஸாம்ருத த்ருப்தஸ்ய நான்யத்ர ஸ்யாத்ரதி:க்வசித்' ஆகிய அனேக பாகவத வாக்கியங்களும்,

புத்யா புத்வா வதஸ்வைனம் ஹரிரித்யக்ஷரத்வயம் |
ஹே ஜிஹ்வே மம நிஸ்னேஹே ஹரிம் கிம் நாமபாஷஸே |
அஸாரே கலு ஸம்சாரே ஸாராத்ஸாரதர ஹரி: ||

ஆகிய கிருஷ்ணாம்ருத மஹார்ணவ வாக்கியங்களும் நாமோச்சாரணையின் மகிமைகளை பலவகையில் வர்ணிக்கின்றன. இந்த வாக்கியங்களின் அர்த்தம் இவ்வாறு உள்ளது. 'ஹே ஸ்வாமி. உன் மகிமைகளைப் பற்றி பேசுவது, அமிர்தத்தைக் குடிப்பது போன்றதாகும்'; 'பகவத் மகிமைகள் என்னும் சாரத்தினால் திருப்தி

அடைந்தவனுக்கு, பிற சாரங்கள் என்றும் சுவைக்காது'. ஹரி என்னும் இரு எழுத்துக்களின் மகிமைகளை, ஹே ஜீவனே. புத்தியினால் அறிந்து சொல்லிக் கொண்டிரு. அஸாரமான இந்த சம்சாரத்தில், ஹரியே சாரம். ஹே நாக்கே. நீ ஹரி என்னும் எழுத்துக்களை உச்சரித்து, உபகாரம் செய்வாயாக. உனக்கு என்னில் நட்பு இருக்கிறதா? ஏன் ஹரி நாமத்தை சொல்வதில்லை? எனக்காக சொல்வாயாக.

ஸிரி நின்ன சரணவ கிருபெ^{3}ரள நக^{2}த^{3} கு^{3}ண
அரஸி நோடு^{3}தலி அனுகா^{3}ல | அனுகா^{3}ல காணதி^{3}ரெ
பெரகு^{3} பீ^{3}ளுவளோ மருளாகி^{3} ||125-(341)

ஸிரி – ஸ்ரீதேவி. நின்ன சரணவ கிருபெரள நகத குண – பாதத்தின் சிறு விரலின் முனையில் இருக்கும் நகத்தின் மகிமைகளை. அனுகால – எப்போதும். அரஸி நோடுதலி – தேடிப் பார்த்தவாறு (முழுமையாக அறிவதற்கு முயற்சி செய்தவாறு). மருளாகி – அப்படி அறிவதற்கு முடியாதவளாக. காணதிரெ – அதன் இறுதியைக் காணாமல். பெரகுபீளுவளோ – வியப்பில் மூழ்குகிறாள்.

வேதானுக்தமஹானந்த குணபூர்ண ஸதா ரமா |
கோ நாம வக்தும் ஷக்தஸ்யான்மாஹாத்ம்ய மமரோபி ச ||
(சரஸ பாரதி விலாஸ)

என்று சொல்வதைப் போல, வேதங்களில்கூட சொல்லப் பட்டிருக்கும் குணபூர்ணன். எப்போதும் இவ்வாறு இருக்கும் ரமாதேவியின் மகிமைகளை எந்த தேவதையும் (பிரம்மனும்கூட) சொல்ல முடியாது. இவ்வித மகாமகிமளான ரமாதேவி,

அனந்தானந்த காலே஽பி தஸ்மாதப்யனந்தகே |
விஷ்ணோரேக குணாம்ஷஸ்ய விபக்தஸ்ய ச கோடிதா |
புனஸ்சானந்ததா தஸ்ய புனஸ்சாபி ஹ்யனந்ததா |
நைகாம்ஷலேஷலேஷம் வா சிந்தயேயு: ப்ரயத்னத: |
நைவம் ஸாமான்யதோ விஷ்ணோர் குணலேஷாம்ஷ தர்ஷனே |
அபி ஷக்தா ரமாபிரம்ம முகா: ஸர்வே஽பி யத்னத: ||
(சரஸ பாரதி விலாஸ)

அனந்தானந்த காலம் சிந்தித்தாலும், விஷ்ணுவின் ஒரு குணத்தின் அம்சத்தை கோடி பாகம் செய்து, அதில் ஒன்றினை அனந்த அம்ஷங்களாக பிரித்து, திரும்ப அந்த ஒரு அம்சத்தை அனந்தாம் ஷங்களாக பிரித்து, அவற்றில் ஒரு அம்சத்தின் சிறப்பினை முழுமையாக அறிவதற்கு சாத்தியம் இல்லை. பிரம்மாதி தேவதைகள் யாரும் சமர்த்தர் அல்ல என்று சொல்ல வேண்டும். ஸ்ரீஹரியின் குண ஆனந்தத்தை புரிந்து கொள்வதற்காக மட்டும் இந்த விளக்கமே தவிர, அவருடைய குண ஆனந்தம், இவ்வளவு மட்டுமே அல்ல. இவ்வாறு ஒவ்வொரு அனந்தமான அனந்த குணபூர்ணன் ஸ்ரீஹரி. இதே பிரமேயத்தை ஸ்ரீமன் நாராயண பண்டிதாசார்யர் ஸ்ரீசுமத்வவிஜயத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

குணயேத்ரமாஸ்ய ந குணானகிலாம்ஸ்ச
துரான நஷ்சதுரவாகபி நோ |
ந வயம் ஸஹ்ரவதனா அபி தானபரோதி தானதிவதேம புன: ||

அதாவது, ரமாதேவியோ, வாக் ஸ்ரேஷ்டனான நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மனோ, சஹஸ்ர வதனங்களைக் கொண்ட நானோ, ஸ்ரீஹரி குணங்களின் ஒரு துகளையும் எண்ணி முடிக்க அசமர்த்தர். 1,000 முகங்களைக் கொண்ட சேஷதேவர், பிரம்மாதிகளும்கூட ஹரி குணங்களை அறிவதற்கு சாத்தியம் இல்லை.

ந ரமாபி பதாங்குலீல ஸன்னகதூராஜதனந்த ஸத்குணான் |
கணயேத் கணயந்த்யனாரதம் பரமான் கோSஸ்யபரோ குணான் வதேத் ||

அதாவது, ஸ்ரீஹரியின் பாதங்களின் விரலின் நகத்தின் முனையில் உள்ள அழுக்கின் மகிமைகளை, ரமாதேவியும், நிரந்தரமாக எண்ணியவாறு அமர்ந்தாலும், அதனை முடிக்க முடியாது. இவ்வாறு ஸ்ரீஹரி குணங்களின் மகிமை எல்லையற்றதாகும்.

கர்மக்ஞ கர்மேஶ கர்மப்ரவர்த்தகனே
கர்மபலதா³த கர்மஸ்த² | கர்மஸ்த² என்ன து³
ஷ்கர்ம களெது³ நீ ஸலஹய்ய ||126-(342)

கர்மக்ஞ - கர்மஞானியும். கர்மேஷ - கர்மத்தின் தலைவனும். கர்மப்ரவர்த்தகனெ - கர்மத்தை நடத்துபவனும். கர்மபலதாத - கர்ம பலனைக் கொடுப்பவனும், கர்மஸ்ய - கர்மங்களில் இருப்பவனுமான. நீ. என்ன - என். துஷ்கர்ம களெது - துஷ்கர்மங்களை பரிகரித்து. ஸலஹய்ய - காப்பாற்றுவாயாக, ஸ்வாமி.

சர்வ வியாப்தனான ஸ்ரீஹரியே ஸர்வசாக்ஷி. சர்வ ஜீவர்களின் தேகம், மனஸ், கர்மேந்திரியங்களில் இருந்து, ஸ்வதந்த்ரனான தான் அனைத்து கர்மங்களையும் செய்து, ஜீவர்களால் செய்வித்து, கர்ம பலன்களை அனுபவிக்குமாறு செய்கிறான். இவ்வாறு சர்வகாரணனான ஸ்ரீஹரியை, துஷ்கர்மங்கள் நிகழாதவாறு அருள்வாயாக என்று பிரார்த்திக்கிறார்.

ஸ்வானந்த^{3} பரிபூர்ண நானா விஷயக^{3}ளலி
நீ நிந்து^{3} மமதெய கல்பிஸி | கல்பிஸி ஹீனனென்
தெ^{3}ன்னனேதகே த^{3}ணிஸுவி ||127-(343)

ஸ்வானந்த பரிபூர்ண - பூர்ணானந்த ஸ்வரூபனான ஹே ஸ்ரீனிவாசனே. நானா விஷயகளலி - பற்பல வித போக்ய வஸ்துகளில். நீ நிந்து - நீயே இருந்து. மமதெய - மோகத்தை (தற்பெருமையை). கல்பிஸி - என்னில் உருவாக்கி. ஹீனனெந்து - தகுதியற்றவன் என்று (சம்சாரத்திலிருந்து விடுதலை என்னும் உன் அருளுக்கு இன்னும் தகுதி பெறவில்லை என்று). ஏதக்கெ - என்ன காரணம். தணிஸுவி - (சம்சாரத்தில்) துன்பப்படுத்துவாய் (சீக்கிரமாக மோகத்தை களைந்து அருள்வாயாக என்னும் பிரார்த்தனை இது).

292ம் பத்யத்தில் மோகத்தை கொடுப்பவன் ஸ்ரீஹரியே என்று சொல்லி, மோகத்தின் நிமித்தமான துன்பங்களை பரிகரிப்பாயாக என்று இங்கு பிரார்த்திக்கிறார்.

விஜிதாத்ம நீ பூ^{4}பு^{3}ஜரொளித்து^{3} அனவரத
யஜமானனெந்து^{3} கரெஸுவி | கரெஸி ஸிக்ஷகனாகி^{3}
ப்ரஜர ஸந்தெயிபெ அனுகா^{3}ல ||128-(344)

விஜிதாத்ம - அனைவரின் மனோ நியாமகனான (அனைவரையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டு ஆளும் பிரபுவான). நீ. பூபுஜரொளித்து - ராஜர்களில் இருந்து (விசேஷ சன்னிஹிதனாக இருந்து). அனவரத - எப்போதும். யஜமானனெந்து - அனைவரின் தலைவன் என்று. கரெஸுவி - அழைக்கப்படுகிறாய். ஷிக்ஷகனாகி - ஆள்பவனாக. ப்ரஜர - பிரஜைகளை. அனுகால - காலத்திற்கேற்ப. ஸந்தெய்பெ - அருள்வாயாக.

அனைத்து சேதனர்களும் எப்போதும் ஸ்ரீஹரியின் வசமே. ஆகையால், ஸ்ரீஹரி 'விஜிதாத்மன்'. மனோஜய என்னும் குணஸ்வரூபனும் அவனே. அரசர்களில் இருந்து பிரஜைகளை ஆண்டு, தர்ம ரக்ஷணை செய்பவனும், பிரஜைகளில் இருந்து, அரசர்களை பின்பற்றுமாறு செய்பவனாகவும், ஸ்ரீஹரியே இருக்கிறான்.

'நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:' விஷ்ணுவின் சன்னிதானம் இல்லாத ராஜன் இல்லை என்பது மிகவும் அர்த்தம்பொதிந்த பேச்சு. அனைவரில் இருக்கும் ஸ்ரீவிஷ்ணு, ராஜர்களில் இருந்து அரசாட்சி செய்கிறான் என்றால், அரசனில் தனியான சிறப்பு ரூபத்தைக் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம். அனைத்து அரசர்களில் 'ராஜ ராஜேஷ்வர' என்னும் பெயர் கொண்ட ஸ்ரீஹரி நிலைத்திருக்கிறான். இந்த பிரமேயத்தை 'ஏஷ ஸாக்ஷாத்தரே ரம்ஷோ ஜாதோ லோகரிரிக்ஷயா' என்னும் ப்ருது ராஜனின் உத்பத்தியை சொல்லும் பாகவத ஸ்லோகத்தின் தாத்பர்யத்தில், ஸ்ரீமதாசார்யர், தெளிவாக சொல்லியிருக்கிறார்.

ப்ருதுஹைஹயாதயோ ஜீவா: தேஷ்வா
விஷ்ணோ ஹரி: ஸ்வயம்|
விசேஷாவேஷ தத்ஸ்தேஷு ஸாக்ஷாத் தர்யம்ஷதா வச: ||

அதாவது, ப்ருதுராஜனே ஸ்ரீஹரி அல்ல. ப்ருது, ஹைஹய (கார்த்த வீர்யார்ஜுன) ஆகியோர் ஜீவர்கள். அவர்களில் மற்ற அரசர்களைவிட, ராஜராஜேஷ்வர ரூபத்தின் விசேஷ ஆவேசம் இருந்த காரணத்தால், ஸ்ரீஹரியின் அம்சர்கள் என்று சொல்லப்படுகின்றனர்.

எல்லரந்தெ லக்ஷ்மினல்லனெந்தெ^{3}னபேட
ப^{3}ல்லித^{3}னு கண்ட^{3}ய ப^{4}கவந்த | ப^{4}கவந்தன மஹிமெ
ப^{3}ல்லவரு இல்ல ஜக^{3}தொ^{3}ளு ||129-(345)

லக்ஷ்மீனல்லனு – ஸ்ரீலட்சுமிதரன். எல்லரந்தி – அனைவரைப் போல (மற்ற ஜீவர்களைப் போல, ரமா பிரம்மாதிகளைப் போல). எந்தெனபேட – என்று அறியாதே. பகவந்த – ஷட்குணைஸ்வர்ய பூர்ணனான ஸ்ரீஹரி. பல்லிதனு – எல்லையற்ற அற்புத சாமர்த்தியம் உள்ளவன். கண்ட்ய – அறிந்தாயா? (ஹே மனமே. அல்லது ஹே அஞ்ஞானிகளே). பகவந்தன – ஸ்ரீனிவாசனின். மஹிமெ – மகிமைகளை. பல்லவரு – பூர்ணமாக அறிந்தவர்கள். ஜகதொளு – உலகில். இல்ல – யாரும் இல்லை.

உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன, ஞான, அஞ்ஞான, பந்த மற்றும் மோட்சங்கள் என்னும் எட்டுவித காரியங்களை தன் விருப்பத்திற்கேற்ப அனாயாசமாக நிர்வகிக்கும் எல்லையற்ற சக்தியைக் கொண்டவனான ஸ்ரீஹரியின் சர்வோத்தமத்வத்தை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று உபதேசிக்கிறார்.

கோ^{3}விந்த^{3}னே ப^{3}ந்து^{3} ஆவாவ காலத^{3}லி
காவனு எம்ப^{3} நுடி^{3} ஸித்த^{3} | நுடி^{3} ஸித்த^{3}வாகி^{3}ரலு
ஆவ ப^{4}யகஞ்சே எந்தெ^{3}ந்து^{3} ||130-(346)

கோவிந்தனே – வேதபிரதிபாத்யனான ஸ்ரீஹரியே. பந்து – பக்தர்களின் அருகில் இருந்து. ஆவாவ காலதல்லி = அந்தந்த காலங்களில். காவனு – காப்பாற்றுகிறான். எம்ப – என்னும். நுடி ஸித்த – சாஸ்திர வாக்கியங்கள் புகழ்பெற்றவை (அல்லது ஞானிகள் சொல்லும் இந்த பேச்சு உண்மை). நுடி ஸித்தவாகிரலு – இந்த உண்மையான பேச்சு இருக்கையில். எந்தெந்து – எந்த காலத்திலும். ஆவ பயகெ – எவ்வித பயமும். அஞ்செ – நான் பயப்படுவதில்லை.

சம்ஸாரார்ணவ மக்னானாம் நராணாம் பாபகர்மணாம் |
நான்யோத்தர்த்தா ஜகன்னாதம் முக்த்வா நாராயணம் பரம் ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவ)

சம்சார சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும், பாப கர்மங்களைக் கொண்ட சுஜீவர்களை, காப்பாற்றுபவன், அனைத்தையும் விட வேறுபட்டவனும், சர்வோத்தமனுமான நாராயணனைத் தவிர வேறு யாரும் இல்லை. கோவிந்தனே காப்பவன் என்னும் நுடி உண்மை. அறிஞர்களின் நுடியும் இதுவே ஆகும்.

கரிவரத^{3}னே நின்ன கருணவில்லதே^{3} ப^{4}வ
ஷரதி^{4}யனே தா^{3}டுவ திரன்ஹ்யாங்கே^{3} | திரன்ஹ்யாங்கே^{3} லோகத^{3}
வரிந்த^{3}லி எமகே^{3} ஸுக^{2}வில்ல ||131-(347)

கரிவரதனே – ஹே கஜேந்திரவரதனே. நின்ன – உன். கருணவில்லதெ – கருணை இல்லாமல். பவஷரதியனெ – சம்சார கடலை. தாடுவ – தாண்டி கரையைத் தொடும். தெரனு – விதம். ஹ்யாங்கெ – எப்படி சாத்தியம்?. (வேறு வழியில்லை என்று அர்த்தம்). லோகதவரிந்தலி – லோக பாலகர்களால் (அல்லது சம்சாரிகளான மற்றவர்களால்). எமகெ – எமக்கு (யாருக்கும்) ஸுகவில்ல – பிரயோஜனம் இல்லை (யாரும் நம்மை தாண்டச் செய்ய மாட்டார்கள்).

அனன்யாஸ்சிந்தயந்தோமாம் யே ஜனா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ||
(கீதை)

உங்கள் யோகக்ஷேமத்தை காக்க வல்லவர்கள் வேறு யாரும் இல்லை என்பதை அறிந்து, என்னையே எப்போதும் நினைத்தவாறு பக்தியுடன் வணங்கினால், அந்த பாரத்தை நான் வகிக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ணன் அபயம் அளிக்கிறான். இப்படி சரணடைந்த பக்தர்களுக்கு, தயாமூர்த்தியான ஸ்ரீஹரி, அவரின் அதீனனோ என்று சொல்வதைப் போல, விருப்பங்களை நிறைவேற்றுகிறான். ‘அஹம் பக்தபராதீனோ ஹ்யஸ்வதந்த்ர இவ த்விஜ’ (பாகவத) என்று, தன் பக்த பராதீனத்வத்தை சொல்கிறான்.

அபராதி^{3} நானல்ல அபராத^{3}வெனகி^{3}ல்ல
ஸ்வபரக^{3}தனாகி^{3} நீ மாடி^{3} | நீ மாடி^{3} மாடி^{3}ஸி
அபரிசிதனந்தே இருதிர்ப்பே ||132-(348)

அபராதி - அபராதி (தோஷங்களைக் கொண்டவன்). நானல்ல - நான் இல்லை. எனகெ - எனக்கு. அபராதவில்ல - பிறர் எனக்கு செய்யத்தக்க அபராதம் இல்லவேயில்லை (என் பார்வையில் மற்றவர்கள் யாரும் தோஷிகள் அல்ல). ஏனெனில், ஸ்வபரகதனாகி - என்னிலும் பிறரிலும் இருந்து. நீ - நீயே செய்து. மாடிஸி - (அபராதங்கள் என்னும் தோஷத்தைக் கொண்ட க்ருதிகளை) செய்து, என் மூலமாகவும், பிறர் மூலமாகவும் செய்வித்து, அபரிசி தனந்தெ - யாருக்கும் தெரியாததைப் போல (அவற்றிலிருந்து விலகியிருந்து - அந்தந்த கிருதிகளின் அறிமுகமே இல்லாததைப் போல). இருதிர்ப்பெ - இருக்கிறாய்.

பயதுக்காதிகளுக்கு காரணமான கிருதிகள் 'அபராத' ஷப்தத்தினால் குறிக்கப்படுகின்றன என்று அறிய வேண்டும். எப்போதும் ஈஷாதீனத்வத்தை அறிந்து, பெருமை, கோபம், பயம் ஆகியவை இல்லாதவனே தனக்கு ப்ரியன் என்று ஸ்ரீகிருஷ்ணன், 'யஸ்மான்மோத்விஜதே லோகே லோகான்மோத்விஜதே ச ய:' என்னும் கீதை ஸ்லோகத்தில் சொல்லியிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனுக்கு பிரியனான இத்தகைய பக்தனால் லோகம் பயப்படுவதில்லை (பிறருக்கு பயதுக்காதிகளை இவன் கொடுப்ப தில்லை). மற்றும் லோகத்தினால் தானும் பய, துக்கங்களை அடைவதில்லை. அனைத்தும் ஈஷாதீனம் என்றும், யாரும் ஸ்வதந்த்ரராக தனக்கு பய துக்கங்களை உருவாக்குவதற்கு சாத்தியம் இல்லை என்றும் அறிந்திருக்கிறான்.

ஶரணு தே³வர தே³வ ஶரணரிகே³ ஸுக²வீவ
ஶரதி²ஜெய ரமண கருணிஸோ | கருணிஸி ஸலஹோ நா
மொரெ ஹொக்கெ நின்ன சரணக்கே ||133-(349)

தேவர தேவ - ஹே தேவோத்தமனே. ஷரணு - உன் சேவகனாக உன்னை வணங்குகிறேன். ஷரணரிகெ - உன் பக்தர்களுக்கு (உன்னை நம்பியவர்களுக்கு). ஸுகவீவ - சுகத்தைக் கொடுக்கும் (சுகஸாதன சம்பத்துகளை அருளும்). ஷரதிஜிய - சமுத்ரராஜனின் மகளான லட்சுமிதேவியின். ரமண - ப்ரிய தலைவனே. (ஹே லட்சுமிரமணனே). கருணிஸொ - அருள்வாயாக. நா - நான். நின்ன சரணக்கெ - உன் பாதங்களில். மரெஹொக்கெ -

ரட்சணைக்காக அடைக்கலம் அடைகிறேன். கருணிஸி - கருணை காட்டி. ஸலஹோ - அருள்வாயாக.

ஸ்ரீஹரி பிரஸாதத்தினாலேயே மோட்சம் என்பது நிச்சயம். ஸ்ரீஹரியை இடைவிடாமல் சரணடைவதே அந்த பிரஸாதத்திற்கு பிரதான ஸாதனம். ஸ்ரீகிருஷ்ணன், கீதோபதேசத்தை முடித்தவாறு, அர்ஜுனன் தனக்கு மிகவும் பிடித்தவன் என்னும் காரணத்தால் முக்கிய ரகசியத்தை திரும்ப சொல்வதற்காக இவ்வாறு கூறுகிறான்.

தமேவ ஷரணம் கச்ச சர்வபாவேன பாரத |
தத்ப்ரஸாதாத் பராம் ஷாந்திம் ஸ்தானம் ப்ராஸ்யஸி ஷாஷ்வதம்|

அனைத்து விதங்களிலும் என்னை சரணடைவதாலேயே நான் மகிழ்கிறேன். அதிலிருந்தே பரம ஷாந்திரூபத்தின் மோட்ச ஸ்தானத்தை அடைவாய் - என்று கூறுகிறான்.

தோ^{3}ஷதூ^{3}ரனே கேளு த்^{3}வேஷி நா நினக^{3}ல்ல
ஈஷ^{2}ணத்ரயதி^{3} மமதெய | மமதெயனு கொட்டு ப்ர
த்^{3}வேஷகொ^{3}ளிஸுவுது உசிதல்ல ||134-(350)

தோஷதூரனே - எவ்வித தோஷங்களும் அற்ற ஹே ஸ்ரீனிவாசனே. கேளு - என் வேண்டுகோளினை கேள். நினகெ ஆனு - உனக்கு நான். த்வேஷி அல்ல - த்வேஷிப்பவன் அல்ல (நீ அனைவரையும் ஒரே மாதிரியாகவே பார்ப்பதால், என்னை த்வேஷிப்பவன் அல்ல). (இப்படி இருக்கையில்), ஈஷணத்ரயதி - மூன்று பிரபலங்களான ஈஷணங்களில் (மனதினை இழுத்து தம்மில் வைத்துக்கொண்டு உன் மறதியைக் கொடுக்கும் பிரபல காரணங்களில்). மமதெய - அபிமான (என்னுடையது. எனக்கு சுகத்தைக் கொடுப்பவை என்னும் அறிவினை), கொட்டு - கொடுத்து. ப்ரத்வேஷ கொளிஸுவுது - உன்னில் எதிர்மறை சிந்தனைகளை உருவாக்குவது. உசிதல்ல - சரியல்ல.

ஈஷணகளு - பொன், மண், பெண் ஆகியவற்றின் மேல் ஆசை. இந்த உலகம் ஸ்ரீஹரியின் விருப்பத்தினாலேயே உருவாகி யிருப்பதால், இந்த மோகங்கள் வளராதவாறு விரைவில் பரிகரிக்க

வேண்டும் என்று பிரார்த்தித்து, ஸ்ரீஹரியையே சரணடைய வேண்டுமே தவிர, இதற்கு வேறு வழியில்லை.

பன்னகா^{3}சல நிவாஸ நின்னுளிது^{3} ஸந்தெயிப
ரின்னெல்லி காணே நின்னாணே | நின்னாணே ஸுகு^{3}ண ஸம்
பன்ன ஸஜ்ஜனர ஸலஹெம்பே^{3} ||135-(351)

பன்னகாசல நிவாஸ - சேஷாசலவாசியான ஹே ஸ்ரீனிவாசனே. நின்னுளிது - உன்னைத் தவிர. சந்தெய்பர - எங்களை காப்பாற்றும் பிறரை. இன்னெல்லி - வேறு எங்கும். காணெ - காணவில்லை. (இவ்வாறாக). நின்னாணெ - உன் மேலேயே சபதம் செய்கிறேன். ஸுகுணஸம்பன்ன - ஹே கல்யாண குணபூர்ணனே. சஜ்ஜனர - சுஜீவிகளை (நல்மார்க்கத்தில் இருப்பவர்களை) அருள்வாயாக என்று வேண்டிக் கொள்கிறேன்.

பூ^{4}ரமண ஸர்வப்ரகாரத^{3}லி ஒலிதெ^{3}ம்ம
தூ^{3}ரத^{3}லி ப^{3}ப்ப து^{3}ரிதௌக^4 | து^{3}ரிதௌக^4 ஸம்ஹரிஸி
காருணிக நீனே ஸந்தெயிஸோ ||136-(352)

பூரமண - பூ-ரமணனே. தூரதலி பப்ப - அடுத்து வரவிருக்கும். எம்ம - எம். துரிதௌக - பாப சமூகங்களை. சர்வப்ரகாரதலி - அனைத்து வகைகளிலும். ஸம்ஹரிஸி - நாசம் செய்து. காருணிக - ஹே கருணாகர ஸ்ரீனிவாசனே. நீனே - நீயே. சந்தெயிஸோ - அருள்வாயாக, ஸ்வாமி.

பூரமண - ஸ்ரீலட்சுமிதேவியின். ஸ்ரீ, பூ, துர்கா நாமக மூன்று ரூபங்களில் ஒன்றான பூரூபளான லட்சுமியின் ரமணன். தராதேவி - ப்ருத்வியின் அபிமானி தேவதை. இவள் 'பூ' நாமகள். பூ-ரூபளான லட்சுமியின் ஆவேஷம் கொண்டவள்.

அனாத^2 ப^{3}ந்து^{2}வெ ஜக^{3}ன்னாத^{2}விட்ட^{2}ல ப்ர
பன்ன பரிபால மாலோல | மாலோல அரிபாஞ்ச
ஜன்ய த்^{4}ருதபாணி ஸலஹெம்ம ||137-(353)

அனாத பந்துவெ - ஹே அனாதபந்தோ. ப்ரபன்னபரிபால - சரணாகதி அடைந்தவர்களை அருள்பவனே. மாலோல - ஹே லட்சுமிலோலனே. அரிபாஞ்சஜன்ய த்ருதபாணி - அரி (சுதர்சன

சக்கரம்), பாஞ்சஜன்ய (சங்கு)களை தரித்த தோள்களைக் கொண்ட. ஜகன்னாதவிட்டல – ஹே உலக தலைவனான விட்டலனே. எம்ம – எம்மை. ஸலஹு – காப்பாற்று.

'பாஹி மாம் க்ருபயா தேவ ஷரணாகதவத்ஸல' 'தீனபந்தோ தயாஸிந்தோ' ஆகிய பிரார்த்தனா மந்திரங்களில் சொல்லப்பட்ட ஸ்ரீஹரியின் மகிமைகளை விளக்கும் பதங்களால் ஸ்தோத்திரம் செய்து, ஸ்ரீனிவாஸ ஸ்வாமியின் ஸ்தோத்திர பாகத்தை தம் கிரந்தத்திற்கு மங்களம் செய்கிறார். பக்தர்கள் அனைவரையும் அருள்வாயாக என்கிறார்.

அனந்தரூபியான ஸ்ரீஹரி, தன் அனைத்து ரூபங்களிலும் 'மாலோல' ஆகவே இருக்கிறான். 'மஹாலக்ஷ்மி முகாம்போஜ மத்வாஸ்வாதன லாலஸா:' (சரஸ பாரதி விலாச) – அனைத்து ரூபங்களும் ஸ்ரீதேவியின் முககமலத்தின் மதுவை ஏற்றுக் கொள்வதில் ஈடுபட்டிருக்கிறது. 'லாலஸ' என்பதின் ரகசியம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

மஹாலக்ஷ்மீம் ரமயதே லீலயா க்ருபயா ஹரி: |
ரமயா ரமமாணோऽபி தத்ஸேனைவ ஸ்த்ரியாத்மனா ||
(சரஸ பாரதி விலாஸ)

ரமாதேவியிடம் அருள் புரிந்து அவளுடன் செயல்களை செய்து, சுகத்தைக் கொடுக்கிறான். ரமாதேவியில் இருக்கும் தன் ஸ்த்ரி ரூபத்துடன் இருந்து, அதிஷ்டானபூதளான அவளுக்கு அதிக ஆனந்தத்தை அருள்கிறான்.

19. மாயாவாத கண்டன

ஶிவனு நீனாத[3]ரே ஶிவராணி நினகே[3]னு
அவிவேகி மனுஜ ஈ மாது[1] | ஈ மாது[1] கேளித[3]ரே
கவிஜனரு நக[3]ரெ கை ஹொடெ[3]து[3] ||1-(354)

நீனு – அல்பஜீவனான நீ. ஷிவனு ஆதரெ – சிவஸ்வரூபனே ஆகியிருந்தால். ஷிவராணி - சிவனின் மனைவி. நினகேனு – உனக்கு என்ன ஆகவேண்டும்? (உன் மனைவியாகிறாளா அவள்?)

அவிவேகி மனுஜ - புத்தியில்லாத ஹே மனிதனே. ஈ மாது - நீயும் சிவனும் ஒன்றே என்னும் பேச்சினை. கேளிதரெ - கேட்டால். கவிஜனரு - ஞானிகள். கைஹொடெது - கை தட்டி (கேலி செய்து). நகரே? - சிரிக்க மாட்டார்களா? (பைத்தியம் என்று நினைத்து சிரிப்பார்கள்).

பிரம்ம சத்யம் ஜகன்மித்யா ஜீவோ பிரம்மைவ நாபரः । - என்றால், பிரம்ம சத்யன், ஜகத் உண்மையல்ல. ஜீவன் பிரம்மனே - வேறு அல்ல. என்பது அத்வைதிகளின் சித்தாந்தம். இது மாயாவாத மதம் என்றும் அழைக்கப்படுகிறது. 'மாயா' என்றால் சாஸ்திரியமான - ப்ரக்ருதி, லட்சுமிதேவி, பகவத் இச்சை, அஞ்ஞான போன்ற பற்பல அர்த்தங்கள் உள்ளன.

மாயாவாதம் ஜீவபிரம்மரின் ஐக்யத்தை சொல்கிறது. இந்த ஐக்யவாதிகளில் சில முக்கிய பேதங்கள் உள்ளன. ஐக்யவாதிகள் மற்றும் பேத-அபேத வாதிகள் என்னும் இரு வகையினர் முக்கிய மானவர்கள். வெறும் ஐக்யவாதிகள் இவ்வாறு சொல்கின்றனர். பிரம்மன் ஜீவ-ஜடங்களால் வேறுபட்டவன் அல்ல. நிர்விசேஷன் (எவ்வித தர்மங்களும் இல்லாதவன்). பிரம்மவஸ்து ஒன்றே தத்வம். அந்த பிரம்மனில் அஞ்ஞானம் சொல்லப்படுகிறது. இத்தகைய அஞ்ஞானத்தினால் பிரம்மன், ஈஷ்வர, ஜீவ, ஜகத் என்னும் ரூபங்களால் காட்டிக் கொள்கிறான். அஞ்ஞானம் பாவ ரூபமானது மற்றும் அனாதியானது. ஆனாலும், அது சத்யமல்ல - அஸத்யமும் அல்ல. அனிர்வசனீயமானது (என்று சொல்ல முடியாத ஸ்வரூபம் உள்ளது). மற்றும் ஆவரண மற்றும் விக்ஷேபங்களால் செயல்களை செய்யக்கூடியது. ஆவரண என்றால், ஸ்வரூப பிரகாசத்தை கட்டுப்படுத்துவது. அததாகாரப்ரதிபாஸ (ஸ்வரூபத்தில் இருக்கும் துக்காதிகளை வெளிப்படுத்துவது) என்பது விக்ஷேபம்.

இந்த அஞ்ஞானமானது, ஷாஸ்திர தத்வஞானத்தினால் போக்கப் படுவதால், அஞ்ஞான, அவித்யை, ஆகிய சொற்களால் அழைக்கப் படுகின்றன. அஞ்ஞானம், மாயா அவித்யை என்று இரு விதங்களாக இருக்கிறது. மாயாவிசிஷ்டனான பிரம்மனே ஈஷ்வரன். இவன் மாயாமயங்களான, சர்வக்ஞத்வ, சர்வேஷ்வர த்வாதிகள் உள்ளவனாக, உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி,

சம்ஹாராதிகளை செய்கிறான் என்றும், அந்த ஜகத், சத், அஸத், ஸதஸத் – என இவை எதுவுமே இல்லாத அனிர்வசனீயமான மித்யா வஸ்து என்றும், மாயையே உபாதான காரணமாக இருக்கிறது என்றும், சொல்லப்படுகிறது.

ஷுக்தியில் (முத்துச்சிப்பியில்) ரஜதவு (முத்து) மறைந்திருந்து தோன்றுவதைப் போல, பிரம்மனில் மறைந்திருந்து தோன்றுகிறது என்றும், ஆகையால் ஈஷ்வரனின் ஜகத் கர்த்ருத்வாதிகளும் மாயமய, மித்யாகளே என்றும் சொல்லப்படுகிறது. ஈஷ்வரன் பிரம்ம வஸ்துவினை யதார்த்தமாக அறிந்திருப்பதால் அவனுக்கு மோகம் இல்லை. ஆனால், இந்த உலகத்தினை பார்க்கிறான். அவித்யாவிஷ்டனான பிரம்மனே ஜீவன். கண்ணாடி முதலான உபாதிவிசிஷ்டமான முகம் பிரதிபிம்ப ரூபத்தினால் இருந்து, முகத்தில் இருக்கும் தோஷங்களை அதுவும் கொண்டிருப்பதைப் போல, ப்ரத்யகாத்மனான பிரம்ம பிரதிபிம்பத்தில் அவித்யையே உபாதான காரணமாக உள்ள மித்யாபூதமான ‘அஹங்கார’ என்னும் வஸ்து, அடங்கியிருக்கிறது. அது ஞானசக்தியைக் கொண்டு மனஸ் என்றும், கர்த்ருத்வ சக்தியைக் கொண்டு, பிராண என்றும் சொல்லப்படுகிறது.

இந்த அகங்காரத்தின் தர்மங்களான கர்த்ருத்வ, போக்த்ருத்வ, சுக, துக்காதிகள் உலகத்தில் அடங்கியிருக்கின்றன. அவித்யா, அகங்கார, முதலான வஸ்துகளை பார்க்கத்தக்கவன் ‘சாக்ஷி’ என்று அழைக்கப்படுகிறான். சாக்ஷித்வமும் அவித்யாகல்பிதமே ஆகும் – உண்மையல்ல. ஆகிய விஷயங்களைக் கொண்டது ‘கேவலைக்யவாதம்’. இது மேலும் ஏகஜீவவாத, பஹுஜீவவாத என்னும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பேத–அபேத ஜீவவாதிகள், ஜீவேஷ்வரத்தில் பேதமும், அபேதமும் – இவ்விரண்டுமே சத்தியம் என்றும், அதிலும், அபேதம், ஸ்வாபாவிகம் என்றும், பேதம், ஔபாதிகம் என்றும், யாருக்கு நிஷ்காம கர்மத்தினால் யுக்தமான ஐக்யஞானம் ஆகிறதோ, அவர், உபாதி நாசத்தினால் பிரம்மத்வத்தை அடைகிறார் என்றும் சொல்கின்றனர். இதிலும்கூட மூன்று உட்பிரிவுகள் உள்ளன. இவ்வாறு பற்பல விதங்களைக் கொண்ட, ஜீவேஷ்வர ஐக்ய மற்றும் ப்ரபஞ்ச மித்யாத்வத்தை விளக்கும் மாயாவாதத்தை, ஸ்ரீமதானந்த தீர்த்த

பகவத்பாதர், ‘விஷ்ணுதத்வ நிர்ணய’ என்னும் தம் கிரந்தத்தில், புங்கானுபுங்கமான வாதங்களால் கண்டித்து, ப்ரத்யக்ஷ, அனுமான (தர்க்க) மற்றும் ஆகம (வேதாதி சாஸ்திரங்கள்) என்னும் அனைத்து பிரமாணங்களால் தூரமாக இருக்கும் கண்டிக்கத்தக்க மதம் என்று நிறுவியிருக்கிறார்.

ஸ்ரீஜகன்னாததாஸர், கிரந்தத்தின் இந்த பாகத்தில் பற்பல லௌகிக யுக்திகளாலும், மாயாவாத மதம் மிகவும் சகிக்கமுடியாத, சஜ்ஜனர்களால் மரியாதை இல்லாததான செயல்பாடுகளைக் கொண்டது என்றும் நிறுவி, புத்தியில் ஏறுமாறு தெளிவாக விளக்கியிருக்கிறார். மாயாவாத மத கண்டனம் என்பது, மோட்ச ஸாதனைக்கு மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

அந்தந்தம:ப்ரவிஷந்தி யேऽவித்யா முபாஸ்தே |
ததோ பூய இவ தே தமோ ய உ வித்யாயாம் ரதா: ||
(ஈஷாவாஸ்ய உபநிஷத்) என்னும் வாக்கியத்தின் பாஷ்யத்தில்,

அன்யதோபாஸகா யே து தமோऽந்தம் யாந்த்யஸம்ஷயம் |
ததோऽதிகமிவ வ்யக்தம் யாந்தி தேஷாமனிந்தகா: |
தஸ்மாத்யதாஸ்வரூபம் து நாராயண மனாமயம் |
அயதார்த்தஸ்ய நிந்தாம் ச யே வித:ஸஹ ஸஜ்ஜனா: |
தே நிந்தயாऽயதார்த்தஸ்ய துக்காஞானாதி ரூபிண: |
துக்காஞானாதி ஸந்தீர்ணா: ஸுகஞானாதி ரூபிண: |
யதார்த்தஸ்ய பரிஞானாத் சுகஞானாதி ரூபதாம் யாந்தி ||
(ஈஷாவாஸ்ய பாஷ்ய)

விஷ்ணு சர்வோத்தமத்வ, பஞ்சபேத தாரதம்யாதிகளை தவறாக புரிந்துகொண்டு உபாசனை செய்பவர்கள், கண்டிப்பாக அந்தம்தமஸ்ஸிற்கே செல்கின்றனர். இந்த அன்யதா ஞானிகளை திட்டாதிருப்பவர்கள், அவர்களைவிட அதிக துர்கதியை அடைகின்றனர். ஆகையால், தோஷதூரனும், குணபூர்ணனுமான விஷ்ணுவை யதார்த்தமாக அறிந்து, அன்யதா ஞானத்தை திட்டும் சஜ்ஜனர்கள், இப்படி செய்வதால், துக்க, அஞ்ஞானாதிகளை போக்கிக் கொண்டு, சுக ஞானாதி ரூபங்களைக் கொள்கிறார்கள் என்று, ஸ்ருதி தாத்பர்யத்தை நிரூபித்திருக்கிறார்.

ஆகையால், துக்க அஞ்ஞானாதிகளின் நாசத்திற்காக அன்யதா ஞானத்தை கண்டிக்க வேண்டும். நிந்தனை என்றால், நீச சொற்களால் திட்டுவதல்ல – துர்மதங்களின் நிராகரணையாகும்.

இந்த நுடியில், ஈஷ்வரனும் (சிவனும்), ஜிவனும், பிரம்ம ஸ்வரூபர்களே ஆகி, அபின்னர்கள் ஆனால், சிவபத்னி (பார்வதிதேவி) ஒவ்வொரு மானவனின் மனைவி என்று அர்த்தம் வருகிறது என்னும் யுக்தியினால், இது மிகவும் தவறான விஷயம் என்று சொல்கிறார். சிவனே ஜகத் கர்த்தன் என்று சொல்லும் சிவ-அத்வைதிகள், பிரஸக்தர்கள் என்று அறியவேண்டும். மாயாவிசிஷ்ட பிரம்மன், ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளை செய்கிறான் என்பவர்கள், அவனை, சிவ, பிரம்ம, விஷ்ணு, கணபதி, சூர்ய முதலான எந்த நாமத்தினால் அழைத்தாலும், அவர்கள் அனைவருக்கும் இந்த யுக்தி பொருந்துகிறது. அப்போது 'ஷிவராணி' என்பதை, பிரம்மராணி, விஷ்ணுராணி என்று சொல்ல வேண்டும். ஜீவபிரம்மரின் பேதம் சத்யமாக இருக்கையில், இந்த தவறான சிந்தனை மிகவும் அனர்த்தமான விஷயம் என்று சொல்வதே சரி.

எல்ல ஒந்தெ^{3} எம்ப^{3} கு^{2}ல்ல மானவ நின்ன
வல்லபெ^{4}ய பெ^{3}ரெ^{3}து^{3} ஸந்தான | ஸந்தான படெ^{3}வேகே
இல்லவே ஜனனி ப^{4}கி^{3}னேரு ||2-(355)

எல்ல – இருக்கும் அனைத்தும். ஒந்தே – வேறுபாடுகள் அற்றவை (ஒன்றே). எம்ப – என்று அறியும். குல்லமானவ – ஹே துஷ்ட மனிதனே. வல்லபெய – (உன்) மனைவியை. பெரெது – கூடி. சந்தான – மக்களை. ஏகெ படெவெ – ஏன் பெறுகிறாய்? ஜனனி – தாயும். பகினீரு – அக்கா, தங்கைகள். இல்லவெ – இருக்கிறார்கள் அல்லவா? (அனைவரும் ஒன்று என்று கூறினால், அவர்களிடம் கூடி மக்களை பெறலாம் என்று ஆகிறதல்லவா?)

மாயாவாதம், சத்ய என்பதை மூன்று விதம் என்று சொல்கிறது. ப்ராதிபாசிக, வ்யாவஹாரிக மற்றும் பாரமார்த்திக. முத்துச் சிப்பியில் இருக்கும் முத்து, ப்ராதிபாஸிக (சரியான நேரத்தில் தோன்றுவது). சத்யத்வத்தைக் கொண்டது. அதைப் போலவே, ஐக்யஞானம் ஆகுமாறு காட்டி, உலகின் பற்பல செயல்களுக்கு காரணமாக இருக்கும் ஜகத் (பிரபஞ்சம்) வியாவஹாரிக ஸத்யத்வ

உள்ளது என்றும், த்ரிகாலங்களில்கூட ஒரேமாதிரியாக ஞானத்தினால் அறியப்படும் வஸ்து மட்டும் பாரமார்த்திக ஸத்யத்வ உள்ளது என்றும், சொல்வார்கள்.

ஜீவ பிரம்மர்கள் ஒன்றே என்னும் ஞானத்தின் சாக்ஷாத்காரம் ஆவதற்கு, மித்யாபூதமான (வ்யாவஹாரிக ஸத்யத்வம் உள்ள), பாரமார்த்திக சத்யனான பிரம்மன் ஒருவனே இருப்பான் – இல்லாத பிரபஞ்சம், சிப்பிக்குள் இருக்கும் முத்தினைப் போல, இவர்களுக்கு தெரிகிறது என்னும் யதார்த்த ஞானம் ஆகிறது என்றும் சொல்கிறார்கள்.

மேலும், ‘நாஸ்தி நாஸ்தின்னபவிஷ்யதி இத்யாகாரக ஞான விஷயத்வம் மிதாத்வம்’ அதாவது, ‘இல்லை, இருந்திருக்கவில்லை, இருப்பதில்லை என்னும் ஞானமே மித்யாத்வம் எனப்படுகிறது. இதனை வியாவஹாரிக சத்யம் என்று சொல்வது, வெறும் மாயாவாதிகளின் குறியீடாகும். நாம் உலகினை சத்யம் என்று அங்கீகரிக்கிறோம் என்று சொல்லிக் கொள்வது, மக்களை நம்ப வைக்கும் செயலாகும். அஸத்யத்தையே சத்ய என்று அழைத்தால், அது சத்யம் ஆகிவிடுமா?

இவ்வாறு, பிரபஞ்சம் வெறும் பிரம்மாத்மகமாக இருக்கையில், பேத வ்யவஹாரத்தையே கூறிவந்தால், அதனை விலக்க முற்படாமல் இருந்தால், பிரமை ஞானம் பரிகாரம் ஆவதில்லை. ஜீவ பிரம்மர் பின்னர் என்னும் அனுசந்தானமே எப்போதும் இருப்பதென்றால், ஐக்ய ஞானம் ஆவது என்று? ஏதாவது ஒரு பாவம், அனுபவத்திற்கு வருவதற்கு, அதனை எப்போதும் பின்பற்ற வேண்டும். வெறும் சாஸ்திரங்களை படித்து, புத்தியில் ஏற்றிக்கொண்டு, அதனை ஆசரணைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாவிட்டால், எந்த ஞானம் ஆனாலும் அது வீணே.

ஆகையால், ஐக்யஸித்திக்காக பேத வியவஹாரத்தினை விலக்கும் முயற்சி எப்போதும் நடந்து கொண்டேயிருக்க வேண்டும். அஞ்ஞானத்தை புறக்கணிக்கும் முயற்சியே நடக்கவில்லை என்றால், அது கெட்ட ஸாதனைக்கே வழிவகுக்கிறது. இந்த காரணங்களாலேயே ஸ்ரீதாஸார்யர், ‘இல்லவே ஜனனி பகினீரு’ என்று சொல்கிறார். அனைத்தும் ஒன்றே என்னும் பாவத்தை,

அனுஷ்டானத்திற்கு கொண்டு வந்தால், வாழ்க்கையில் உண்டாகும் அனர்த்தங்கள் ஏராளமானவை.

பேதமே உண்மை என்றால், மாயாவாதிகளுக்கு துக்கமயமான (சுகம் இல்லாத) அந்தம்தமஸ்ஸே கிடைக்கிறது என்று சூரியனின் ஒளியைப் போல தெளிவான விஷயமாகும். ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள், இந்த விஷயத்தில், மிகவும் தெளிவாக, மாயாவாதி களை இவ்வாறு கண்டித்திருக்கிறார்.

தர்ஹிஸ்யாஜ்ஜாதி பேதஸ்யைவாபாவாத் ஸர்வஸங்கர: |
ஸ்முஷா ச பார்யா பார்யா ச மாதா கௌஸ்ச ஷுனி புத: |
மத்த ஏவேதி தச்சாஸ்த்ரம் ஸ்யாதுன்யத்தஸ்ய ஜல்பிதம் |
கம்யாகம்ய விபாகஸ்ச ஸ்வரூபைக்யே கதம் வத ||யுக்திமல்லிகா

அனைத்தும் பிரம்ம ஸ்வரூபமே என்றால், ஜாதிபேதங்களின் அபாவத்தினால் வர்ண பிரிவே உண்டாகாமல் இருந்திருக்க வேண்டும். மருமகள் மனைவியாவது, மனைவி தாயாவது, பசு நாய் ஆவது, ஞானி பைத்தியம் ஆவது, ஆகியவை ஆகியிருக்க வேண்டும். இந்த விதமான தவறான நிலைக்கு காரணமான சர்வ பேதத்தை வலியுறுத்தும் சாஸ்திரத்தையே தவறானது என்று நினைப்பது. தகுதியுள்ளவை, தகுதியற்றவை என பெண்களை எப்படி பிரிக்கிறாய், சொல்?

பி^{3}ம்ப^3 ஒந்தே^{3} ப்ரதிபி^{3}ம்ப^3 ஒந்தெ^{3}ம்பெ^{3}லா
அம்ப^{3}ர நௌலு கப்பாகெ^{3} | கப்பாத^3 ப^{3}ளிக நீ
நெம்ப^3 ஈ மாது புஸியல்லெ ||3-(356)

பிம்ப – பிம்பம். ஒந்தே – ஒன்றே (பிரதிபிம்பத்திலிருந்து வேறல்ல). ப்ரதிபிம்ப – பிரதிபிம்பம். ஒந்தே – ஒன்றே (பிம்பத் திலிருந்து வேறல்ல). எம்பி – என்று சொல்கிறாய். அம்பர நௌலு – ஆகாயத்தைப் போல சுத்தமானவனும், நிர்லிப்தமானவனுமான பிரம்மனின் பிரதிபிம்பம் (நிழல்). கப்பாகி – கறுப்பாக இருப்பதென்றால் (கர்ம லேபத்தினால், துக்காதி தோஷங்கள் உண்டாகின்றன என்றால்), எலா – ஹே மாயாவாதியெ. நீனு எம்ப மாது – நீ கூறும் (பிம்ப பிரதிபிம்பம் ஒன்றே என்று சொல்லும்)

பேச்சு. புஸியல்லெ – பொய் இல்லாமல், உண்மை என்று ஆகிறதா? (அது பொய்யே ஆகிறது).

அவித்யா வசத்தினால் பிரம்மன், ஜீவ பாவத்தை அடைகிறான். ஜீவன் ஒருவனே. இவனின் அஞ்ஞானத்தினால் மற்ற அனைத்து ஜீவ ஜடாத்மகமான ஜகத் கற்பனை என்றாகிறது. இந்த ஜீவனுக்கு அவித்யா பரிகாரத்திற்காக ஐக்யஞானம் ஆயிற்று என்றால், ஜகத்தே இல்லை என்றாகிறது என்று, வெறும் ஐக்யவாதிகளில் ஒருவரான 'ஏகஜீவவாதிகள்' அறிகிறார்கள்.

அஞ்ஞான ஜன்யமான பல உபாதிகளில் ப்ரதிபிம்பிதரான அனந்த ஜீவர்கள் இருக்கின்றனர். ஐக்ய ஞானத்தினால் யாரின் உபாதி அழிகிறதோ, அவன் சுத்தன் ஆகிறான். அதாவது, பிரம்ம ஸ்வரூபத்தினால் இருக்கிறான். மித்யா பிரபஞ்சம் அவனுக்கு இல்லை. இவ்வாறு 'பஹுஜீவவாதிகள்' கூறுகின்றனர்.

இவர்கள் பிம்பப்ரதிபிம்பங்களுக்கு அபேதத்தை சொல்கின்றனர். மற்றும் அஞ்ஞான மற்றும் அதிலிருந்து வரும் உபாதிகள்கூட மித்யையே என்கின்றனர். ஏனெனில், பிற சத்ய வஸ்துகளை ஒப்பினால், அத்வைதத்திற்கு பங்கம் வந்துவிடும். இந்த இரு பிரிவுகளின் ஐக்யவாதிகளை நிராகரித்து, ஜீவபிரம்மரின் பேதத்தை, சத்ய என்றும், ஸ்ரீமத் விஷ்ணு தத்வ நிர்ணயத்தில், தெளிவாக விளக்கியிருக்கிறார்.

குரு உபதேசத்தினாலேயே அறியவேண்டிய ஆழமான விஷயம் இவை. புத்தகம் மிகவும் நீண்டுவிடும் என்னும் பயத்தினால் இங்கு மேலும் இதனை விளக்கவில்லை.

இந்த நுடியில் இந்த இரு வகையினரின் வாதமும் நிராகரிக்கப் பட்டது என்று அறிய வேண்டும். 'ப்ரதிபிம்ப ஒந்தெம்பி' என்றால், ஒரே பிரதிபிம்ப – ஏகஜீவ என்று சொல்கிறாய் – என்று அறிய வேண்டும். 'கப்பாத பளிக' என்றால், எதிர்மறை ஸ்வபாவத்தினரான ஜீவ பிரம்மர் ஒன்றாவதற்கு சாத்தியம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதீனத்வ மற்றும் சிறிது சாத்ருஷ்யங்களால் மட்டுமே ஜீவர்கள் ப்ரதிபிம்பர் என்று சொல்லப்படுகின்றனர். இங்கு

237ம் பத்யத்தின் விவரணையை பார்த்துக் கொள்வது சரியாக இருக்கும்.

எல்ல ஒந்தே[3] எம்ப[3] ஸொல்ல கரெயெந்தெ[3]னலு
ஸுள்ளு எம்போ[3]து[3] க[2]ரெயாகி[3] | கரெயெம்ப மாதுக[3]ள
ஸுள்ளெம்ப[3]ரேனோ ஸுஜனரு ||4-(357)

எல்ல ஒந்தே – (ஜீவ, ஜட, ஈஷ ஆகிய) அனைத்தும் ஒன்றே (வேறுபாடுகள் அல்லாதவை). எம்ப ஸொல்லு – என்னும் பேச்சு (திரும்பத்திரும்ப சொல்வது). கரெயு – உண்மை. எனலு – என்று சொன்னால், சுள்ளு எம்போது – பொய் என்பதும்கூட. கரெயாகி – உண்மையாகி (பேத என்பதே இல்லை என்றும், சத்ய – அசத்ய ஆகியவற்றில்கூட பேதமே இல்லை என்றும்). கரெயெம்ப மாதுகளு – சத்ய என்று நீ சொல்லும் பேச்சுக்களே. சுள்ளு – பொய் என்று, சுஜனரு – சஜ்ஜனர்கள். எம்பரேனோ – சொல்வார்களா? (கண்டிப்பாக சொல்வார்கள் – அப்போது நீ என்ன சொல்வாய்?). ப்ரத்யட்ச சித்தமான ஜகத், 'நான்' என்னும் அனுபவத்திற்கு தெரியும் தேகத்திலிருந்து வேறுபட்ட ஜீவன், மற்றும் சாஸ்திர சித்தமான 'பிரம்ம' இந்த அனைத்தும், அஸத்யமான 'ஷஷவிஷாண' - முயலின் கொம்பினைப் போலவே மாயாவாதிகளின் செயல்கள், ஷூன்யமானதையே நிரூபிக்கின்றன.

நின்ன நா பை[3]த[3]ரே என்ன நீ பை[3]யலு
நிர்மூலவாய்து அத்[3]வைத | அத்[3]வைத உளுஹலிகெ
ஸும்மனிரபே[3]கோ எலோ ப்ராணி ||5-(358)

நின்ன – உன்னை. நா – நான். பைதரெ – திட்டினால். என்ன – என்னை. நீ – நீ. பையலு – (திரும்ப) திட்டினால். அத்வைத – அனைத்தும் ஒன்றே என்னும் உன் அத்வைத மதம். நிர்மூல வாயிது – அழிகிறது. அத்வைத – அத்வைதத்தை. உளுஹலிகெ – காப்பாற்றுவதற்காகவாவது. எலோ ப்ராணி – ஹே மனிதப் பசுவே. ஸும்மனிரபேகோ – எதிராகப் பேசாமல் மௌனமாக இருக்க வேண்டும், தெரிகிறதா? நிந்தக – திட்டுபவன், திட்டப்படுபவன் ஆகியோர் இருவராக இருந்தால் மட்டுமே, அந்த திட்டுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. தன்னால் வேறுபட்ட இன்னொருவனே இல்லையென்றால், அங்கு திட்டிற்கு சூழ்நிலையே இல்லை.

பேதத்தை சொல்லும் நான், உன்னை (உன் மதத்தை) திட்டலாம். அப்படி திட்டினால், அபேதத்தை அறிந்திருக்கும் நீ, அமைதியாக இருக்கவேண்டுமே தவிர, திரும்ப என்னைத் திட்டுவது சரியல்ல.

ஶுத்த^{4} பி^{3}ரம்மன கு^{3}ணவ கத்^{3}த^{3} ப்ரயுக்த ப்ர
ஸித்த^{3} சோரத்வ நின்னல்லி | நின்னல்லி பொத்^{3}தி^{3}தோ
உத்^{3}தா^{4}ரவெல்லி ப^{4}வதி^{3}ந்த^{3} ||6-(359)

ஶுத்த பிரம்மன – சுத்தனும் (தோஷங்கள் அற்றவனும்). பிரம்மனும் (குண பூர்ணனும்) ஆன பரமாத்மனின். ஸுகுண – கல்யாண குணங்களை. கத்தப்ரயுக்த – அபகரித்த காரணத்தால் (நிர்குணன் என்று சொல்வதன் மூலம்), அனைவருக்கும் தெரியும் உன் கள்ளதனம். நின்னல்லி – உன்னில். போத்திதோ – பிரவேசித்தது (உன்னையே சேர்ந்தது). (இப்படி இருக்கையில்). பவதிந்த – சம்சாரத்திலிருந்து. உத்தாரவெல்லி – விடுதலை / மேம்படுவது எப்படி சாத்தியம்?

கள்ளதனம் புரிந்தபிறகு, சிறைவாசம் ஆகாமல் எப்படி இருக்கும்? இதையே ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள்,

மஹாகுணாபஹர்த்ரீம் த்வம் த்யஜ பக்த்யா பஜாச்யுதம் |
ந சேத் ப்ரபுர்மஹாசோரம் த்வாமந்தே தமஸி க்ஷிபேத் ||
(யுக்தி மல்லிகா)

ஸ்ரீஹரியின் மஹாகுணங்களை அபகரிக்கும் துர்புத்தியை விடு. பக்தியுடன் அச்யுதனை வணங்கு. அப்படி இல்லையெனில், பிரபு, மகாதிருடன் ஆகும் உன்னை, அந்தம்தமஸ்ஸில் தள்ளுவான் – என்று மாயாவாதியின் மஹாசோரத்வத்தை நிரூபிக்கிறார்.

அசூசுரத் வேதஸமூஹவாஹம் ததோ மஹாதஸ்கர மேனமாஹு: (மத்வவிஜயம்)

வேதார்த்தங்களை நிர்ணயித்து கூறும் (வேதங்களின் மஹாதாத்பர்ய பாரத்தை வகிக்கும்) பிரம்மசூத்ர சமூகங்கள் என்னும் சூரியனையும், சூத்திரங்களையும் தவறான அர்த்தங்களை சொல்வதன் மூலம், மஹாசோரன் என்று மாயாவாதிகளை

திட்டுகிறார். பகலில் திருடும் திருடனைவிட, சூரியனையே திருடும் திருடனே மகாதிருடன்.

ஸுள்ளிகி^{3}ந்ததி^{4}க மத்தில்லவோ மஹாபாப
ஸுள்ளு கள்ளதனவு நின்னல்லி | நின்னல்லி உண்டாயி
தல்லோ ஜாரத்வ இத^{3}ரந்தெ ||7-(360)

ஸுள்ளிகிந்த – பொய்யையே பேசுவதால். அதிக – பெரிதான. மஹபாப – மஹாபாவம். மத்தில்லவோ – வேறு எதுவும் இல்லை. ஹே துர்ஜனனே. நின்னல்லி – உன்னிடம். ஸுள்ளு கள்ளதனவு – பொய் மற்றும் திருட்டுத்தனம் இரண்டும். உண்டாயி தல்லோ – இருக்கிறது என்று தீர்மானமாக தெரிந்துவிட்டது. இதரந்தெ – இதைப் போலவே. ஜாரத்வ – ஜாரத்வமும் (பிற பெண்களைக் கவர்வது) இருக்கிறது என்று தெரிய வருகிறது.

ரமா ரமணனான நாராயணனிடமிருந்து தான் அபின்னன் என்று தெரிபவனுக்கு, லட்சுமி ரமணத்வ ரூபத்தின் மஹாஜாரத்வமும் இருக்கிறது என்கிறார். அல்பனும், கஞ்சனும் ஆன ஜீவன், ஸ்ரீநாராயணனிடமிருந்து மிகவும் வேறுபட்டிருக்கையில், தானே நாராயணன் என்று சொல்வது என்பது, மஹாலட்சுமிதேவியின் உக்ர கோபத்திற்கு ஆளாவதற்கான வழிதானே? ஜாரத்வ தோஷம் அயோக்ய சிந்தனையினால் வருகிறது.

பரஸ்த்ரீபோகத: கிம் ந ஷிரச்சேதாதிகம் பயம் – யுக்தி மல்லிகா

ஜாரத்வத்தினால் உலகத்திலேயே சிரச்சேதாதி மஹாபயம் இருக்கிறதே? இப்படி இருக்கையில், லட்சுமிபதியை குற்றம் சாட்டுபவனுக்கு, அந்தம்தமஸ்ஸில் தள்ளுவது என்பது, குறைவான தண்டனையே என்று சொல்லப்படுகிறது.

மாயவாதி^{3} மதவு ஹேயவெம்பு^{3}து^{3} ஸித்த^3
தாயிதந்தெ^{3}க^{3}ளு ஸதி புத்ர | ஸதிபுத்ரகலித^{3}ரெ
பா^{3}யி பி^{3}ட்யாகே அளுதித்தி^{3} ||8-(361)

மாயாவாதிமதவு – (ஜீவேஷ்வர ஐக்ய முதலான விஷயத்தை நிறுவும் உன்) மாயாவாத மதம். ஹேயவு – மிகவும் புறக்கணிக்கக் கூடியதாகும். எம்புது ஸித்த – என்னும் நிர்ணயம் அனைத்து

பிரமாணங்களால் நிச்சயமாகிறது. தாயிதந்தெகளு ஸதிபுத்ரரு - தாய், தந்தை, மனைவி, மக்கள். அகலிதரெ - உன்னை விட்டால் (இறந்துவிட்டால்). பாயி பிட்டு - வாய் விட்டு சத்தமாக. யாகெ அளுதித்தி - ஏன் அழுகிறாய்? (அனைவரும் ஒன்றே மற்றும் ஜனன மரணங்கள் மித்யை என்று சொல்லும் நீ, அழுவதற்கு காரணமே இல்லை அல்லவா?).

ஹேயம் மாயாமதம் ஷுசை: - (அனுவியாக்யான).

சஜ்ஜனர்களால், மாயாவாத மதம், புறக்கணிக்கப்படுகிறது என்று ஸ்ரீமதாசார்யர் நிறுவியிருக்கிறார். ஸ்ரீவாதிராஜர் :

அதோ மாயாவாதிமதான்னாம்யை வாதிஜுகுப்ஸிதாத் |
பீதோऽஹமபஜம் தத்வவாதினாமேவ பத்ததிம் || (யுக்தி மல்லிகா)

என்றால், பரமாத்மனுக்கு நிர்குணத்வாதிகளைக் கூறி, சர்வ நிந்தனைகளுக்கும் அவனையே இலக்காக வைக்கும் மாயாவாதி மதத்திற்கு பயந்து, பிரபஞ்சத்திற்கு சத்வாதிகளையும், பரமாத்மனுக்கு குணபூர்ணத்வத்தையும் சொல்லும், தத்வாதிகளின் மதத்தையே பின்பற்றுகிறேன்.

மே மாதே வந்த்⁴யெம்ப³ ஈ மாதினந்தெலே
ஈ மூர்த்தமூஜக³வு புஸியெம்ப³ | புஸியெம்ப³ மாதுக³ளு
ப்⁴ராமகவோ க²ரெயோ நிஜவெல்லி ||9-(362)

மே - என். மாதெ - தாய். வந்த்யெ - மலடி. எம்ப - என்னும். ஈ மாதினந்தெலெ - சொல்வதைப் போலவே. ஈ மூர்த்த ஜகவு - பிரத்யட்சமாக தெரியும் இந்த (மூன்று உலகங்கள்) பிரபஞ்சம். பிஸியெம்ப மாதுகளு - பொய் என்னும் பேச்சுகள்கூட (எதிர்மறை யானவை). ப்ராமகவு - (உலகம்) மித்யையோ. கரெயோ - சத்யமோ. நிஜவெல்லி - (இந்த இரண்டில்) உண்மை எது, நீயே சொல்வாயாக. ‘மே மாதா வந்த்யா’ என்பது எதிர்மறையாக பேசுவதற்கு ஒரு உதாரணம் ஆகும். அவள் என் தாய். அவள் ஒரு மலடி என்றால் எப்படியோ, பிரத்யட்சமாக இருக்கும் ஜகத்தினை பொய் என்று சொல்வதும்கூட அப்படியே ஆகும். பேசும்

பேச்சுகளே தாம் சொல்லும் விஷயத்தை எதிர்க்கிறது (பொய் என்று சொல்கிறது).

ஶஶவிஷா²ணக³ளெந் தொ³ப்புவரே ப³ல்லவரு
ப³ஸவகுண்டேனோ மொலெஹாலு |மொலெஹாலு உண்டே தோ
ரிஸு மித்²யெ ஸத்யவஹுதே³னோ ||10-(363)

ஷஷவிஷாணகளு - முயல் கொம்புகள். எந்தரெ - என்று யாராவது கூறினால். பல்லவரு - அறிந்தவர்கள். ஒப்புவரெ - (எந்த முயலுக்கும் எங்கும், எந்த காலத்திலும் இல்லாத) முயல் கொம்புகள், இருக்கும் ஒரு விஷயம் என்று ஒப்புக் கொள்வார்களா? (யாரும் ஒப்புக் கொள்வதில்லை). (அதைப்போலவே), பஸவகெ - எருதுக்கு. மொலெஹாலு - முலைப்பால் என்பது, உண்டேனோ? - இருக்கிறதா? (இல்லை). (அப்படி இருந்ததென்றால்), தோரிஸு - காட்டுவாயாக, பார்க்கலாம். மித்யெ - பொய் என்பது (இறந்த, நிகழ், எதிர்காலங்களில் இருக்காத). சத்யவஹுதேனோ - சத்யமாகிறதா சொல். (உண்மை என்று சொல்லமுடியுமா?).

ஸத்யவெந்தரே³ க²ரெயு மித்²யெ எந்த³ரே ஸுள்ளு
ஸத்யமித்யெக³ளு ஏகத்ர |ஏகத்ர இஹுதே³ உ
ந்மத்த ஈ மாது நிஜவெல்லி ||11-(364)

ஸத்யவெந்தரெ - சத்யமானது என்று கூறினால். கரெயு - உண்மையானது. மித்யெ எந்தரெ - மித்யை என்றால். சுள்ளு - பொய் என்று அர்த்தம். ஸத்யமித்யெகளு - உண்மை மற்றும் பொய்கள். (இரண்டும்). ஏகத்ர - ஒரேயிடத்தில் இருக்கிறது என்பது (ஒரே வஸ்து இரு விதமாகவும் உள்ளது என்பது) இஹுதெ - உண்டா? உன்மத்த - ஹே பைத்தியமே. ஈ மாது - ஒரே இடத்தில் இருக்கிறது என்று சொல்லும் உன் பேச்சு. நிஜவெல்லி - உண்மையல்ல. (உதாரணம் கொடு, பார்க்கலாம்).

கயிற்றினில் தோன்றும் பாம்பினைப் போல, ப்ரபஞ்சம் மித்யை என்று மாயாவாதிகள் கூறுவர். அதையே வியாவஹாரிகசத்ய என்று அழைத்து, ஜகத் அஸத்ய என்று சொல்வது நாங்கள் அல்ல என்னும் கூறுவர். மித்யா என்றால் அஸத்ய இல்லாமல் வேறு எதுவும் இல்லை என்பது தத்வவாதிகளின் (ஸ்ரீமதாசார்யரின்)

சித்தாந்தம். ஆகையால், சத்ய-மித்யைகளின் ஸ்வரூபத்தை தெளிவாக அறியவேண்டியது அவசியம். அதனை ஒரு தொகுப்பாக இங்கு சொல்லியிருக்கிறோம். ஸத்யமித்யைகள் எதிரெதிரான லட்சணங்களைக் கொண்டது. அவை இவ்வாறு.

அஸத்ய	ஸத்ய
1. நம்பிக்கை உள்ள காலத்தில் மட்டுமே இருப்பது. கயிற்றினை பார்த்து பாம்பு என்று அறியும் காலத்தில், கயிற்றில் தோன்றும் பொய் பாம்பின் உருவம். அது உண்மையில் பாம்பு அல்ல. அது முன்பு பாம்பாகவும் இருந்திருக்கவில்லை. அடுத்தும் இருப்பதில்லை. பிரம காலத்தில் மட்டும் இருப்பதைப் போல தோன்றுகிறது.	ஸத்யவஸ்து பல தேஷ கால சம்பந்தம் உள்ளதாக இருக்கிறது.
உபாதான மற்றும் நிமித்த காரணங்களால் தோன்றியதல்ல. மண் மற்றும் குயவன், சக்கரம், கொம்பு ஆகிய நிமித்த காரணங்களால் தோன்றுவது சத்யவாத நிலை.	உபாதான மற்றும் நிமித்த காரணங்களைக் கொண்டது.
3. தோஷம் உள்ள ஞானத்திற்கு மட்டும் விஷயம் ஆகிறது. கண்ணின் தோஷம், கிட்டப் பார்வை, தூரப்பார்வை ஆகிய தோஷங்களால் ஒரு பொருளைக் கண்டு வேறு பொருள் என்று நினைப்பது நடக்கிறது.	நிர்தோஷமான இந்திரியங்களால், வேறு விதமான தோஷங்கள் இல்லாதபோது, கிரகிக்கப்படுகிறது.

4. பாவஞானம் கொண்டது. அருகில் பார்த்தபோது 'இது பாம்பு அல்ல - கயிறுதான்' என்னும் ஞானத்தினால் சிந்திப்பது ப்ரமஞானம்.	பாத ஞானம் இல்லாதது.
5. அர்த்தக்ரியாகாரித்வம் - இல்லாதது. கயிறு கடித்து யாரும் இறப்பதில்லை. பிரமை காலத்தில் உண்டாகும் பயம், நடுக்கம், சர்ப்பம் என்று நினைப்பதால் வருகிறதே தவிர, சர்ப்பத்தினால் அல்ல. ஞானம் மட்டுமே உண்மை. ஞானத்தினால் தெரிந்த வஸ்து உண்மையல்ல.	அர்த்தக்ரியாகாரித்வம் - உள்ளது. கடையில் இருக்கும் உண்மையான வெள்ளியினால் ஆபரணங்களை செய்வதைப் போல, முத்துச்சிப்பியில் தெரியும் வெள்ளியை பயன்படுத்தி, எந்த பயனையும் பெறமுடிவதில்லை.

இந்திரியங்களால் தெரியாத பொருட்களையும்கூட அறியும் அபரோக்ஷ ஞானிகள் மற்றும் முக்தர்கள்கூட, உலகத்தைக் கண்டு அறிகின்றனர். பாத-ஞானம் என்பது எந்த காலத்திற்கும் இல்லாததால், ஜகத்-ஸத்யமே. பிரளய காலத்தில் ப்ரக்ருதி

குணகாரியங்களால் அனைத்து வஸ்துகளும் சூக்ஷ்மரூபத்தினால் மூல காரணத்தில் லீனம் ஆகிறதே தவிர, அது அழிவதில்லை. இது பிரமாணத்தினால் நிறுவப்பட்ட விஷயம் ஆகும். ஜகத்தில் மித்யா வஸ்து லட்சணங்கள் இல்லை. இரு சத்ய வஸ்துகள் மற்றும் அவற்றில் பரஸ்பர ஒப்புமை இல்லையேல், பிரம ஞானமே பிறப்பதில்லை. கயிறு (உதாரணம்) மற்றும் பாம்பு (பிரதான) இந்த இரண்டும் சத்யமாக இருந்து, அவற்றில் சமான லட்சண (நீளம், தடிமன் போன்ற) கயிற்றினைக் கண்டு பாம்பு என்னும் பிரமை உண்டாகிறதே தவிர, சத்யமான பாம்பின் அறிவே இல்லாதவனுக்கு, கயிற்றில் பாம்பின் பிரமை உண்டாவதில்லை.

ஜகத், ஆத்மனில் அடங்கியிருக்கும் காரணத்தால் (இல்லாதது இருப்பதைப் போல தெரிவதால்) மித்யை என்று மாயாவாதிகள் கூறுகின்றனர். பிரம்மனில் ஜகத்தின் அடக்கம் இருக்கையில் சத்யமான ஜகத் ஒன்று (வேறு) இருக்க வேண்டும். அதன் ஞானம்

இருக்க வேண்டும். அது இல்லாமல், உதாரணமான பிரம்மனுக்கும், சத்ய ஜகத்திற்கும் (பிரதான) ஒப்புமை இருக்க வேண்டும். ஆத்மனில் அனாத்மத்தின் (ஜடமான – சேதன இல்லாத; ஒரே மாதிரியான ஆத்ம வஸ்துவினில். பலவித வகைகள் உள்ள அனந்த வஸ்துகளில்) அடக்கம் ஆவதில்லை. இது போன்ற பல விஷயங்களுக்கு எதிரான, ப்ரபஞ்சம் மித்யை என்னும் பிரமேயம் எப்போதும் சரியல்ல.

ஜீவ-ஜடங்களில் மற்றும் ஜட-ஜடங்களில் சாதாரணமாக காணப்படும் வேறுபாடும் மித்யை என்றே மாயாவாதிகள் கூறுவர். இந்த வேறுபாடு உபாதிக்ருதமானது என்று நிரூபிப்பார்கள். உபாதியும், அவரைப் போல மித்யையே. சத்யம் ஆனால், அத்வைதத்திற்கு நஷ்டம். அஞ்ஞான சித்தமானால் மித்யையான உபாதி சித்தமாகிறது.

இந்த உபாதி சித்தமாகாமல் அஞ்ஞானம் சித்தமாகுவதில்லை. சுத்த சைதன்யத்திற்கு உபாதி சம்பந்தமே என்றும் பொருந்துவ தில்லை.

சத்ய மித்யைகள் இரண்டும் ஒரே இடத்தில் இருப்பதற்கு சாத்தியம் இல்லை. சத்யமும் அசத்யமுமான (ஸதஸத்) வஸ்துவிற்கு எந்த உதாரணமும் இல்லை. கயிற்றில் தெரியும் சர்ப்பத்தை சதஸத் விலக்ஷண என்கிறார்கள். பிரமை காலத்தில் தெரியும் இந்த சர்ப்பம் சத்விலக்ஷண (சத்யத்தினால் வேறுபட்ட) என்றால், அசத்விலக்ஷண (அசத்யத்திலிருந்து வேறுபட்ட) என்றால், அல்லது, சத்விலக்ஷணத்தால் கூடிய அஸத்விலக்ஷண என்றால், சத்ய–அசத்யங்கள் இரண்டிற்கும் வியாவஹாரிக சத்ய என்றால், - என்று என்ன கூறினாலும், இந்த எந்த வாதமும் சரியான பதில்களைத் தராது.

மித்யாசர்ப்பமானது, அத்யந்த அஸத் என்றே ஆகிறது. இந்த அனைத்து மாயாவாதிகளின் வாதங்களையும் ‘உபாதிகண்டன’, ‘மாயாவாதகண்டன’ மற்றும் ‘ப்ரபஞ்சமித்யாத்வானுமான கண்டன’ என்னும் கிரந்தத்தில் ஶ்ரீமதாசார்யர் கண்டித்து, அவற்றின் குறைகளை நிரூபித்தார். மற்றும் ‘ஶ்ரீமத் விஷ்ணு தத்வ நிர்ணய’த்தில், மாயாவாதத்தின் இந்த குறைகளை, ப்ரத்யக்ஷ,

அனுமான மற்றும் ஆகமங்கள் என்னும் பிரமாணங்களின் உரைகல்லில் தேய்த்து, அவற்றின் உண்மையான நிலையை வெளிப்படுத்தினார்.

அதிஷ்டானம் ச சத்ருஷம் தத்யவஸ்துத்வயம் வினா |
ந ப்ராந்திர்பவதி க்வாபி ஸ்வப்னமாயாதிகேஷ்வபி ||
(விஷ்ணு தத்வ நிர்ணய)

ஸ்வப்ன பிரபஞ்ச, சுகதுக்கங்கள் எவையும் (உதாரணம், பிரதானம் இவற்றின் ஒப்புமை இல்லாமல்) இரு சத்ய வஸ்துகள் மற்றும் அவற்றில் ஒப்புமை இல்லாமல் பிரமை என்பது எங்கும் இல்லை. இப்படி இருக்கையில், பிரம்மன் ஒருவனே சத்ய - பிற அனைத்தும் பிரமை என்னும் மதம், எப்போதும் சஜ்ஜனர்களால் ஒப்புக்கொள்ளப் படுவதில்லை என்பதை நிறுவினார்.

இந்த நுடியில், அனைத்து சாஸ்திரங்களின் விஷயத்தால் தெரியவரும் நிர்ணயத்தின் விஷயங்களை ஸ்ரீதாஸார்யர் இங்கு சொல்கிறார். மித்யை என்றால் அஸத்ய என்றே, பொய் என்றே அர்த்தம். முக்காலங்களிலும் இருக்கும் (நித்ய) வஸ்துவே சத்ய என்றில்லை. நித்யவஸ்து சத்யமானதே. ஆனால், சத்யவஸ்துகள் அனைத்தும் நித்ய ஆகியிருக்க வேண்டும் என்று நியமம் இல்லை. ஏதாவது ஒரு வஸ்து சத்யமாக இருக்க வேண்டும் அல்லது பொய்யாக இருக்க வேண்டும். இரண்டுமாக இருக்க முடியாது. உபலட்சணத்தினால், சதசத்விலக்ஷண, சதஸத்விலக்ஷண விலக்ஷண ஆகியவை மிகவும் தூரம் (வாய்ப்பேயில்லை) என்று அறியவேண்டும்.

பீ4தி நிர்பீ4தி ஸீதா தபக3ளொத்தட்டு
நீதவாகிஹவே ஜக3தொ3ளு | ஜக3தொ3ளித்த3ரே தோரு
ஜாதிபே4த3க3ளு இரலாகி3 ||12-(365)

ஜகதொளு - உலகில். ஜாதிபேதகளு - வஸ்துஸ்வபாவங்கள் வெவ்வேறாக. இரலாகி - இருக்கும்போது. பீதி நிர்பீதி ஷீதாதபகளு - பயம், நிர்பயம், குளிர், வெப்பம், ஆகிய எதிர்மறைகள். ஒத்தட்டு - ஒரெ இடத்தில். நீதவாகிஹவெ - இருக்கும் நியமம் இருக்கிறதா? (இல்லை). இத்தரெ - அப்படியிருந்தால். தோரு - எங்கிருக்கிறது

என்று காட்டு (உதாரணத்தைக் கொடு). ஜாதிபேதங்கள் - பிராமணாதி வர்ண பேதங்கள் இங்கு சொல்லப்படவில்லை. ஜாதி - தர்மம். சகஜ தர்மம். ஸ்வபாவத்தினால் வரும் குணம் (essential characteristics of a thing fixed by birth). சத்ய-அஸத்யங்கள் ஒரு இடத்தில் இருக்காது என்பதை, பிற எதிர்மறை தர்மங்களின் உதாரணங்களால் அறிகிறார்கள்.

‘த்³வாஸுபர்ணா’ எம்ப³ ஈ ஶ்ருதிக³ளல்லி வி
ஶ்வாஸ மாடதலே ஜீவேஶ | ஜீவேஶரைக்யோப
தே³ஶ மாடி³த³வ சண்டா³ல ||13-(366)

த்வாஸுபர்ணா எம்ப - ‘த்வாஸுபர்ணா ஸயுஜா...’ என்னும். ஈ ஸ்ருதிகளல்லி - இந்த வகை பிரசித்த வேத வாக்கியங்களில், விஷ்வாஸ மாடதலெ - நம்பிக்கை வைக்காமல். ஜீவேஷ்வரைக்ய - வேதபிரம்மர்கள் ஒன்றே என்று, உபதேஷ மாடிதவ - உபதேசம் செய்பவன். சண்டால - நீசனே ஆகிறான்.

த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே
தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யனஷ்னன்
னன்யோ அபிஜாகஷீதி (ஸ்ருதி)

எப்போதும் ஒன்றாகவே இருக்கும் அன்யோன்யர்களான ஜீவ, ஈஷ்வர என்னும் இரு பக்ஷிகள், தேகம் என்னும் வ்ருக்ஷத்தை ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் ஜீவன் (வ்ருக்ஷத்தின்) தேகத்தின் கர்ம பலன்களை, அஸ்வாது (கசப்பு) என்பதையே (இனிப்பு) இனிக்கிறது என்று அறிந்து தின்கிறான். (அஷுபத்தை - பாப பலன்களை) துக்கத்தை தொடாமல் ஈஷ்வரன் எப்போதும் அங்கிருக்கிறான்.

‘ஸ ஆத்மா தத்வமஸி ஷ்வேதகேதோ’ (சாந்தோக்ய) - ‘பரமாத்மனையே நம்பியவன் நீ’ நீ அந்த பரமாத்மனிடமிருந்து வேறுபட்டிருக்கிறாய் (அதத்வமஸி) ஆகிய அர்த்தங்கள், பற்பல யுக்திகளால் புரிந்து கொள்வதற்கு, தேவையான உதாரணங்கள் உள்ளன. இதைப்போலவே, அபேதங்களை சொல்வதைப் போல

இருக்கும் மற்ற வேதவாக்கியங்களுக்கு (மாயாவாதியின் மஹாவாக்கியங்களுக்கு) வேறுவிதமான அன்ய அர்த்தங்களை சொல்ல முடியும். இவ்விதமான வாக்கியங்களின் தாத்பர்யங்களை, புராணங்களிலிருந்தும், யுக்திகளாலும் நிறுவும், சாந்தோக்ய பாஷ்ய, விஷ்ணு தத்வ நிர்ணய ஆகியவற்றை படிப்பதன்மூலம் அறிய முடியும்.

ஜீவேஶரொந்தெ³ம்ப³ ஈ வாகு கேள்வரிகே³
கேவலாஶ்ரவ்யவெந்தெ³ந்து³ | எந்தெ³ந்து³ பு³த⁴ரு பஶு
கா³வி நீனெந்து³ கரெயரே ||14-(367)

ஜீவேஷரு - ஜீவ மற்றும் பிரம்ம இருவரும். ஒந்தெம்ப - ஒன்றே என்னும் (வேறுபாடற்றவர்கள் என்னும்) ஈ வாகு - இந்த பேச்சு. கேள்வரிகெ - கேட்பவர்களுக்கு. எந்தெந்து - எந்த காலத்திற்கும். கேவல அஷ்ராவ்ய - கேட்க சகிக்கமுடியாததாக இருக்கிறது. புதரு - அறிஞர்கள் (ஞானிகள்). நீனு பஷுகாவி - நீ பசு மேய்க்கும் இடையன். எந்து - என்று. கரெயரெ - அழைக்காமல் இருப்பார்களா?

சர்வதோஷ ரஹிதனும், சமஸ்த குண பூர்ணனும், சர்வோத்தமனுமான விஷ்ணுவே நான் என்று அல்பனான ஜீவன் சொல்லிக்கொண்டால், அதைவிட சகிக்கமுடியாத விஷயம் வேறு உள்ளதா?

சர்வோத்தமம் சர்வதோஷ வ்யபேதம்
குணைரஸ்ரேஷை: பூர்ணமன்யம் சமஸ்தாத்|
வைலக்ஷண்யாத் ஞாபயந்தி ப்ரவ்ருத்தா:
ஸர்வேவேத முக்யதோ நைவ சான்யத்|| (மஹோபனிஷத்)

என்னும் ஸ்ருதி, 'ஸர்வோத்தமனான விஷ்ணுவை, அனைத்து தோஷ தூரனும், சமஸ்த குணபூர்ணனும், சமஸ்த சேதன அசேதன வஸ்துகளிடமிருந்து வேறுபட்டவனும், விலக்ஷணனும் என்று சொல்வதற்காகவே சர்வ வேதங்களும் முக்கியமாக தோன்றியிருக்கின்றன. அபேதத்தை சொல்வதற்கு - வேறு எதையும் சொல்வதற்கு இல்லவேயில்லை என்று சொல்கின்றன.

கு^{3}ணவந்தனெம்ப^3 மாதனு கேளி ஸுகி^{2}ஸத^{3}வ
மனுஜ பஶு ஸித்த^3 புஸியல்ல |புஸியல்ல நின்ன மத
கணனே மாட^{3}த^{3}லே பை^{3}ய்த்^{3}வோரே ||15-(368)

குணவந்தனு - ஸ்ரீஹரி குணபூர்ணன். எம்ப மாதனு - என்னும் சித்தாந்த வசனத்தை. கேளி - கேட்டு. சுகிசதவ - மகிழ்ச்சி அடையாதவன். மனுஜபஷு - மனித ரூபத்தில் இருக்கும் பசு. ஸித்த - இது உண்மை. புஸியல்ல - பொய் அல்ல (சந்தேகமே இல்லை).

நின்ன மத - உன் (மாயாவாத) மதத்தை. கணனெ மாடதலெ - கணக்கில் எடுக்காமல். பெய்த்வோரே - (ஸ்ரீஹரி குணஷூன்யன், நிராகாரன், ப்ரபஞ்சம் பொய். ஜீவ பிரம்மர் ஒன்றே என்னும் உன் அப்ரமாணிக ப்ரமேயங்களை) திட்டுவார்கள்.

க உத்தமஸ்லோக குணானுவாதாத் புமான்
விரஜ்யேத வினா பஷுக்னாத் || (பாகவத)

ஸ்ரீஹரிகுணங்களை கேட்டு மகிழ்ச்சியடையாதவன் (அதனை புறக்கணிப்பவன்). பஷுக்னனே - இதயம் இல்லாதவன். ஹரியின் கதா சிரவணம், சஜ்ஜனர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

மலக^{3}ர்தகே ஶூத்த^3 ஜலதி^{4} ஸமவெந்தெம்பி^{3}
கலுஷவர்ஜிதகே^{3} த்ருணஜீவ |த்ருணஜீவ ஸரியே ஸிம்
ப^{3}ளகே கோ^{3}க்^{4}ருதவு ஸமவேனோ ||16-(369)

மலகர்தகெ - மலம் கழிக்கும் இந்திரியத்திற்கு. ஷுத்தஜலதி - சுத்த தண்ணீர்க் கடல். சமவந்தெ - சமம் என்று. எம்பி - சொல்வாய். த்ருணஜீவ - (புல்கட்டிற்கு சமானமான, அல்பனான) அணுஜீவன். கலுஷ வர்ஜிதகெ - நிர்தோஷனான ஸ்ரீஹரிக்கு. ஸரியே - சமானமாக முடியுமா? ஸிம்பளகெ - மூக்குச்சளிக்கு. கோக்ருதவு - பசு நெய். ஸமவேனோ - சமம் ஆகமுடியுமா?

சர்வ அபேதங்களைக் கூறும் மாயாவாதம் எவ்வளவு கீழானது என்பதை, சில உதாரணங்களால் இங்கு விளக்குகிறார். ஜீவ-ஈஷ்வரரில், அல்பக்ஞத்வ - சர்வக்ஞத்வ, பாரதந்த்ர்ய - ஸ்வாதந்த்ர்யாதி மஹத் தெய்வ லட்சணங்கள் இருக்கையில்,

சேதனத்வாதி ஒரு பார்வையில் மிகச்சிறியதான ஒரு சமம் இருக்கையில், ஐக்யத்தை அறிவது மிகவும் தவறு என்று சொல்கிறார். உதாரணங்களின்படி அவை இரண்டிற்கும் சமானத்தை சொல்வதே சரியல்ல என்றபோது, அபேதத்தை சொல்வது என்பது மித்யா ஞானமே ஆகும்.

ஐராவதகே ஸரியே கொரெ ஹேனின மரியு
மேருபர்வதக்கே க1ஸகு1ப்பே | க1ஸகு1ப்பே ஸரிப3ஹுதே3
தோ1ரிதோ1 நின்ன அஞ்ஞான ||17-(370)

கொரெ ஹேனின - கீழ்த்தர வஸ்திரங்களில் தோன்றும் கிருமி, பேன் ஆகியவை. ஐராவதகெ சரியே - இந்திரனின் பட்டத்து யானைக்கு. சரியே - சமானமாகுமா? கஸகுப்பெ - குப்பைக் கூளம் மேருபர்வதக்கெ - (தங்கமயமான, ஒரு லட்ச யோஜன உயரம் உள்ள) மேரு பர்வதத்திற்கு சரிபஹுதெ - சமானம் ஆகுமா? நின்ன அஞ்ஞான - உன்னுடைய மித்யா ஞானம். தோரிதோ - ஆஹா. எப்படி வெளியில் தெரிகிறது, பார்.

இந்த நுடி மற்றும் அடுத்த சில நுடிகளால், ஜீவ பரமாத்மனில் இருக்கும் வேறுபாடுகளை விளக்குவதுடன், ஐக்ய வாதத்தின் குறைகளையும் தெளிவாக்குகிறார்.

அஜராமரண பி3ரம்ம பு3ஜக3பூ4ஷண பூஜ்ய
த்ரிஜக3 தே3வேஶ ஹரியெத்த | ஹரியெத்த நீனெத்த
அஜக3ஜன்யாய புஸியல்ல ||18-(371)

அஜராமரண - மூப்பு, சாவுகள் இல்லாதவர்கள். பிரம்ம புஜக பூஷண பூஜ்ய - சதுர்முக பிரம்ம ருத்ர தேவபூஜ்யனும், த்ரிஜக தேவேஷ - மூன்று உலகங்களின் (அனைத்து உலகின்) நியாமகர் என்னும் தேவதைகளுக்கும்கூட தலைவனும் ஆன, ஹரியு எத்த - ஸ்ரீஹரியிடம். நீ - நீ. எத்த - எங்கு. அஜகஜன்யாய - ஆடு, யானைகளைப் போன்றவன். புஸியல்ல - இது பொய் அல்ல.

ஜராமரணன் என்று சொல்வதால், ஸ்ரீஹரி அனைத்து காலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கிறவன் என்று சொல்வதாக ஆயிற்று. இவ்வாறு ஷஷ்வதேக பிரகாரனான ஸ்ரீஹரிக்கும், ஜனன

மரண வளர்ச்சி குறை மற்றும் ப்ராக்ருத அழியக்கூடிய தேகத்தைக் கொண்ட அல்ப ஜீவனுக்கும் சமானம் - ஐக்யங்கள் என்றும் வருவதேயில்லை.

புஜகபூஷணபூஜ்ய என்றால், ஸ்ரீஹரி, சேஷதேவனுக்கும் (சேஷ சாயி ஆனதால்), பூஷணன் (அலங்காரம் செய்து கொண்டவன்). முக்யபூஜ்யன் ஆனதால், பூஜ்ய ஷப்தத்தால் அழைக்கப்படுபவன். புஜகபூஷண - ருத்ரதேவ (சர்ப்பத்தை தேகத்தில் அலங்காரமாக தரித்திருப்பவன்). அல்லது சேஷபதவியையே பூஷண என்று (தனக்கு ஸாதனை என்றும், அலங்காரம் என்றும், அந்த பதவியிலிருந்தே முக்தன் ஆவதால்) தெரிந்திருப்பவன் என்றும் அறியலாம்.

பாலக³ட³லொளகி³ருவ ஸ்ரீலோல ஹரியெல்லி
ஹேலுச்சியொளகே ஹொரளுவ | ஹொரளுவ பளலுவ
கூ²ளமானவனே நீனெல்லி ||19-(372)

பாலகடலொளகிருவ - பாற்கடல் வாசியான. ஸ்ரீலோல – லட்சுமி லோலனான. ஹரியெல்லி - ஸ்ரீஹரி எங்கே? ஹெல்லுச் செயொளகெ - மல மூத்திரங்களில். ஹொரளுவ - விழுந்து புரளும். பளலுவ - அதன் மூலம் பற்பல துக்கங்களை அனுபவிக்கும். கூளமானவனெ - துர்ஜனனே. நீனெல்லி - உன் இடம் எங்கே? (தெரிந்து கொள்).

க்ஷீராம்பு³தி⁴கெ³ ஸரியே காரிகெயு ஶ்லேஷ்ம பா⁴
கீ³ரதி²கெ³ ஸரியே க²ரமூத்ர | க²ரமூத்ர ஜீவ ல
க்ஷ்மீ ரமணகெணெயே ஜக³தொ³ளு ||20-(373)

ஜகதொளு - உலகில் (எங்காவது). காரிகெயு - வாந்தி, மூக்குசளி போன்றவை. க்ஷீராம்புதிகெ - பாற்கடலுக்கு. ஸரியெ - சமம் என்று (இரண்டும் திரவியமே என்பதால்) சமம் என்று சொல்ல முடியுமா? ஜீவ - ஜீவன். லட்சுமிரமணகெ - ஸ்ரீநாராயணனுக்கு. எணெயெ - இணையா? (எப்போதும் இல்லை). கரமாத்ர - மல மூத்திரங்கள். பாகிரதிகெ சரியே - கங்கா நதிக்கு சமம் என்று சொல்வது போல ஆகும்.

வாந்தி, மூக்குசளி மற்றும் மல மூத்திரங்கள், பாற்கடல் மற்றும் கங்கா நதிக்கு ஒப்பிடமுடியாமல் வேறுபாடுகளுடன் இருக்கிறதோ அதைப் போல, ஜீவ பரமாத்மரும், மிகவும் வேறுபட்ட ஸ்வபாவங்களைக் கொண்டவர்கள் என்று அறியவேண்டும்.

உதாரணம் கொடுத்த பொருட்களில், அதன் தன்மை மட்டுமே ஒன்றாக இருப்பதைப் போல, அஸ்தித்வ, சேதனத்வ தர்மங்களால் ஜீவன் பரமாத்மனைப் போல இருக்கிறது என்று அறியலாமே தவிர, பிற குணங்களால் இந்த ஒப்புமையை சொல்ல முடியாது.

கு³ணபூர்ண ஸர்வக்³ஞ அணுமஹத்க³தன நி
ர்கு³ண அஞ்ஞ அல்பனெனுதித்³தே³ | எனுதித்³தி³ ஹரிகே தூ³
ஷணெயு பே³ருண்டே இத³க்கிந்த ||21-(374)

குணபூர்ண – கல்யாண குணபூர்ணனும். சர்வக்ஞ – சர்வக்ஞனும் ஆன. அணுமஹத்கத – அனைத்து சூக்ஷ்ம, ஸ்தூல பொருட்களில் வியாபித்னான. ஶ்ரீஹரியன்னு – ஶ்ரீஹரியை. நிர்குண – குணஷூன்யனும். அக்ஞ – ஞானஷூன்யனும். அல்பனு – அல்பனும் (நீசனும்) எனுதித்தீ – என்று சொல்கிறாய். இதகிந்த – இதைவிட. ஹரிகெ – ஶ்ரீஹரிக்கு (செய்யும்). தூஷணெயு – நிந்தை (திட்டு). பேருண்டெ – வேறு என்ன இருக்கிறது? (இதைவிட அதிக திட்டு வேறு எதுவும் இல்லை). நிர்குண, நிர்விசேஷ, எல்லா இடங்களிலும் இல்லாதவன் என்று சொல்லும் மாயாவாதியின் பிரகாரம், ஞானாதி எந்த தர்மங்களும் பரமாத்மனுக்கு இருப்பதில்லை.

ஜீவேஷ்வர்கள் ஒன்றே என்று சொல்வதால், வாழ்க்கையில் அனுபவசித்தமான அல்பக்ஞத்வ, அல்பஷக்தித்வ ஆகிய அல்பங்களை ஶ்ரீஹரியிடம் சொன்னதைப் போல ஆகிறதால், இதைவிட கீழான செயல் வேறு எதுவும் இல்லை.

பிரம்ஹைவ ஹீனயோனிஸ்தா:ப்ராப்ய ஸ்வேனைவ கர்மணா |
ஸம்ஸரேச்சேத்ரியம் ஸர்வாகாலீ கஸ்யகலே வத ||
ஸத்குணாபாவதோ நிந்தாச்தாஸ்து நைர்குண்யவாதினாம் |
மதே ஸ்யுர்பிரம்மணி பதே ஸர்வா: ஸர்வஸ்ய ஸம்மதா: ||
(யுக்தி மல்லிகா)

பிரம்மனே (ஜீவ பாவத்தைப் பெற்று) தன் கர்மத்தினால் தான் புழு, பூச்சி, பசு முதலான நீச யோனிகளைப் பெற்று, துக்கமயமான சம்சாரத்தில் சுற்றுகிறான் என்று அறியாமல், உலகத்தில் வாழ்க்கையில் பயன்படுத்தும் திருடன், ஏமாற்றுக்காரன், குடிகாரன், குருடன், ஊமை போன்ற திட்டுகளை யாருக்கு சொல்ல வேண்டும், சொல்?. ஸ்ரீஹரி குணஷூன்யன் என்றால், கருணை, அன்பு, தைரியம், ஸ்வாதந்த்ர்ய முதலான நற்குணங்கள் இல்லாததால் அனைத்து உலக திட்டுகளையும் அவனுக்கும் சொல்ல வேண்டும் அல்லவா?

யக்ஞோऽஸீதி து யா நிந்தா ஸா மாயாஸ்ரயதோக்தித: |
பகவத்யுச்யதே கர்மபத்தத்வோக்த்யா ச பாபிதா || (யுக்தி மல்லிகா)

பிரம்மனுக்கு அஞ்ஞானாதிகளை சொல்வதால், அவன் அஞ்ஞானி என்றும் கர்மங்களுக்கு ஈடுபட்டு பற்பல யோனிகளில் பிறக்கிறான் என்றதால் பாவி என்றும் திட்டுவதைப் போல ஆகிறது அல்லவா?

ஶஷ நானெனலு கீ¹னாஶனிந்த³லி த³ணிப
தா³ஸனெம்புவகெ³ த³யதி³ந்த³ | த³யதி³ந்த³ தன்னயா
வாஸதொ³ளகி³ட்டு ஸலஹுவ ||22-(375)

ஈஷ நானெனலு - நானே ஈசன் (பிரம்மன்) என்றால் (என்று நினைத்தால்). கேனாஷனிந்தலி - யமனால். தணிப – தண்டிக்கப் படுவான் (பற்பல தண்டனைகளைப் பெற்று துக்கப்படுவான்). தாஸ னெம்புவகெ - தான் ஸ்ரீஹரியின் தாஸன் என்று அறிந்தவனுக்கு (இவ்வாறு தாஸபாவத்தினால் உபாசனை செய்பவருக்கு) தயதிந்த - கருணை காட்டி. தன்னய - தன்னுடையதே ஆன. ஆவாஸ தொளகிட்டு - வைகுண்டாதி இடங்களில் வைத்து. ஸலஹுவ - காப்பாற்றுவான்.

ஈஶத்வவெம்பு³து³ ஸ்ரீஶக³ல்லதெ³ ஜீவ
ராஶிக³ளிகு³ண்டே ஈ ஶக்தி | ஈ ஶக்தி ஸத்வகு³ண
ஈஶ பி³ட்டிஹனே ஜக³தொ³ளு ||23-(376)

ஈஷத்வவெம்புது - (அனைவரின் உள்ளே வெளியே இருந்து) ஆளும் ஷக்தி. ஸ்ரீஷகல்லதெ - லட்சுமிபதிக்கு இல்லாமல்.

ஜீவராஷிகளிகெ – ஜீவ சமூகங்களுக்கு (தனித்தனியாகவோ அல்லது அனைவரும் சேர்ந்தாற்போலவோ). ஈ ஷக்தி – இந்த பிரபுத்வ ஷக்தி. ஜகதொளு – உலகில். உண்டெ – இருக்கிறதா? (இல்லை). ஈஷ – ஸ்ரீஹரி. சத்வகுண – தன் ஸ்வரூபபூதனான இந்த ஈஷத்வ சக்தியை. பிட்டிஹனெ – காட்டாமல் இருப்பானா? (ஜீவனில் ஏன் காட்டவில்லை. 'ஸ்வபாவஸ்ய அனபாயாத்' - ஸ்வபாவிக குணத்திற்கு எந்த காலத்திற்கும் விலக்கு இல்லை).

உத்கீ^{3}த^2 ஸ்ரீப்ராணஹ்ருத்க^{3}தனு ஜக^{3}தே^{3}க
ஸத்கு^{3}ருவரேண்யனெனுதிப்ப | எனுதிப்பவகே யம
க^{3}த்க^{3}த நடு^{3}கி^{3} நமிஸுவ ||24-(377)

உத்கீத – உத்கீத நாமக. ஸ்ரீப்ராண ஹ்ருத்கதனு – பல, ஞானாதி சம்பத்களைக் கொண்ட முக்யபிராணரின் அந்தர்யாமியான ஸ்ரீஹரி. ஜகதேக சத்குணவரேண்ய – பிரம்மாதி அனைத்து சுஜீவிகளின் பிரதான குணம் (முக்ய ஞானோபதேஷகன்). எனுதிப்பவகெ – என்று அறிந்து வணங்குபவர்களுக்கு. யம – யமதேவன். கத்கத நடுகி – (அத்தகையவர்களைக் கண்டு) கடகடவென நடுங்கி (பயத்தினால்). நமிஸுவ – வணங்குவான்.

ஓமித்யேதக்ஷரமுத்கீத முபாஸீத – என்னும் சாந்தோக்ய (உபநிஷத்) பிரகரணத்தில், உத்கீதனின் உபாசனை நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த உத்கீத நாமக ஸ்வாமியின் மற்றும் ஸ்ரீபிராணதேவரின் மகிமைகளைப் பற்றி அறிவதற்கு, 63ம் பத்யத்தின் விவரணையைப் பார்க்கலாம்.

உத்கீத நாமத்தினால் பிரதிபாத்யமான பகவத்ரூபம் 'உத்கீத' நாமம் கொண்டது. 'உச்சத்வாத் உத்கீயமானத்வாத் ஸ்தானாதுக்தீத உச்யதே' (சாந்தோக்ய பாஷ்ய).

விஷ்ணு சர்வோத்தமன் ஆகையாலும், உச்ச த்வனியினால், சாமகான செய்யும் 'உத்காத'னால் வணங்கப்படுபவன் ஆகையாலும், உத்கீத நாமத்தினால் போற்றப்படுபவன் ஆகையாலும், 'உத்கீத' என்று அழைக்கப்படுகிறான். 'ஆசார்ய சைத்ய வபுஷா ஸ்வகதிம் வ்யனங்க்ஷி' (பாகவத) – என்றால், குருகளின் சித்தாபிமானியான பிரம்மதேவனின் அந்தர்யாமியான

வாசுதேவனே, அனைவருக்கும் அவரவர்களின் கதியைக் கொடுக்கும் ஞானோபதேஷக முக்கிய குரு என்று சொல்லப்படுகிறது. ‘குருவரேண்ய’ என்று இந்த அர்த்தத்திலேயே சொல்கிறார்.

எம மற்றும் எமதூதர்கள், விஷ்ணு மகிமா ஞானம் உள்ள விஷ்ணு பக்தர்களை கண் எடுத்து பார்ப்பதற்கும்கூட பயப்படுவார்கள் என்று, ஸ்ரீமத் பாகவதம் அஜாமிளனின் கதையிலிருந்து சொல்கிறது. யமன் தன் தூதர்களுக்கு விஷ்ணு மகிமைகளை உபதேசித்தவாறு, ‘தான்னோபஸீதத ஹரேர் கதயாபிகுப்தான் நைஷாம் பயம் ந ச வயம் ப்ரபவாம தண்டே’ என்றால், ஸ்ரீஹரியின் கதையினால் எப்போதும் அருளப்படும் அவனின் பக்தர்களின் அருகில் போகாதீர்கள் – அவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு என்னாலும் முடியாது என்று தெளிவாக கூறுகிறான். மற்றும் ‘தத் க்ஷம்யதாம் ஸ பகவான் புருஷ: புருஷோ நாராயண: ஸ்வபுருஷைர் யதஸ்க்ருதம் ந:’ - அதாவது, என் தூதர்கள் பக்தனான அஜாமிளனை அழைத்து வருவதற்கு சென்ற அபராதத்திற்காக என்னை மன்னியுங்கள் என்று புராண புருஷனான நாராயணனிடம் மன்னிப்பு கேட்கிறான். யமனின் உபதேசத்தைக் கேட்ட யமதூதர்கள், அன்றிலிருந்து ‘த்ருஷ்டஞ்ச பிப்யதி தத: ப்ரப்ருதி ஸ்ம ராஜன்’ - அச்யுதனின் பக்தர்களை பார்ப்பதற்கும்கூட பயப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஸ்வாமி ப்^{3}ருத்யன்யாய ஈ மாதினொள ப^{3}ந்து
க்^{3}ராமதா^{4}மக^{3}ளு இத^{3}ரந்தே | இத^{3}ரந்தே நோடி^{3}கோ
நீ மாத்ர நுடி^{3}யே ஸாகெம்பே^{3} ||25-(378)

ஈ மாதினொளு – (முன்பு பார்த்த) இந்த வாக்கியங்களில், ஸ்வாமி ப்ருத்யன்யாய – ஈசன் ஸ்வாமி, ஜீவன் அவனின் சேவகன் என்னும் பாவனை, பந்து – வந்திருக்கிறது (தோன்றியிருக்கிறது). இதரந்தெ – இப்படியே (இந்த சிந்தனையையே நினைத்து) க்ராமதாமகளு – கிராம பூமிகள். நோடிகோ – என்று அறிவாயாக (அந்த அனைத்தும் ஸ்வாமியுடையது. உன்னுடையது அல்ல. உன் வசம் அல்ல என்பதை அறிவாயாக). நீ மாத்ர – நீ மட்டும். நுடியெ – இப்படியென்று சொன்னால். ஸாகெம்பெ – நிறுத்துவேன்.

அதவா நீ மாத்ர (என்ன சொன்னாலும்) நீ மட்டும். நுடியெ – ஈசன் ஸ்வாமி என்றும், பூம்யாதி அனைத்தும் உன்னுடையது அல்ல என்று என்றும் சொல்வதில்லை. ஸாகெம்பெ – ஆகையால், உன் ஸ்வரூபமே இவ்வாறு மித்யா ஞானம் உள்ளதென்று அறிவேன். ஆனாலும் மாயாவாத மதத்தின் நிந்தை இல்லாமல் சஜ்ஜனர்கள் மோட்ச ஸாதனை அபூர்ணமே ஆகிறது என்னும் காரணத்தினால் இந்த விஷயத்தை இவருக்கு நிரூபிக்கிறேன்.

ஈஶ நானெந்த3வன ஶ்வாஸபி3ட3கொட3தே யம
பாஶக3ள கட்டி ஸெளெதொ3ய்து3 | ஸெளெதொ3ய்து3 நரகதி3
கா4ஸிகொ3ளிஸுவனோ ப3ஹு கால ||26-(379)

ஈஷ நானு – நானே பிரம்மன். எந்தவன – என்று அறிந்தவனை. ஷ்வாஸபிடகொடதெ – மூச்சு விடுவதற்கும்கூட சந்தர்ப்பம் கொடுக்காமல் (மூச்சு இருந்தாலும் பிராணன் போகாமல், துக்கப்படுவதைப் போல செய்து). யம – யமன். பாஷகள கட்டி – தன் பாஷங்களால் அவர்களை கட்டிப் போட்டு. ஸெளெதொய்யு – இழுத்துப் போய். நரகதி – நரக லோகத்தின் பற்பல தண்டனை இடங்களில். பஹுகால – வெகு காலம். காஸிகொளிஸுவனோ – பற்பல கஷ்டங்களைக் கொடுத்து துக்கப்படுத்துவான். ம்ருத்யுவிற்கும் ம்ருத்யனான (முக்ய சம்ஹாரகனான) ஸ்ரீஹரியே அனைவருக்கும் யமன். ஜீவேஷ்வர ஐக்யத்தை சொல்லும் தமோ யோக்யர்களை ஸ்ரீஹரி (எமன்) 'பஹுகால காஸிகொளிஸுவனு' அதாவது நித்ய நரகத்தில் வைத்து (அந்தம்தஸ்ஸில் தள்ளி) நித்ய துக்க அனுபவத்தை கொடுக்கிறான் என்னும் அர்த்தத்தை, இந்த நுடியிலிருந்து அறிய வேண்டும்.

மாத்ருபித்ரு த்3ரோஹி ப்4ராத்ரு ஸக2 குரு ப3ந்து4
கா4தகனு நீனு புஸியல்ல | புஸியல்ல ஸ்ரீஜக3
ந்னாத2 விட்ட2லனே நானெம்பி3 ||27-(380)

ஸ்ரீஜகன்னாதவிட்டலனே – ஜகத் ஸ்வாமியான ஸ்ரீவிட்டலனே. நானு எம்பி – நானாக இருக்கிறேன் என்று அறி. நீனு – இந்த ஞானமுள்ள நீ. மாத்ருபித்ருத்ரோஹி – தாய் தந்தைகளின் த்ரோஹி. ப்ராத்ருஸக குருபந்து காதகனு – சகோதர, மித்ர, குரு,

உறவினர் முதலாதவர்களின் சம்ஹாரகனே ஆகிறாய். புஸியல்ல – இது பொய் அல்ல. (மிக்க உண்மையே ஆகும்).

தாய், தந்தை, சகோதர, நண்பன், குரு, உறவினர் முதலாத அனைவரில் அந்தர்யாமியாக இருந்து, அந்தந்த நாமங்களால், தானே அவர்கள் மூலமாக நமக்கு ஆகும் அனைத்து நலன்களையும் செய்து செய்வித்து காப்பாற்றிக் கொண்டிருக்கும்போது, தானே அந்த பிரம்மன் என்று அறியும் மூர்க்கன், அந்த அனைவரையும் கொன்றது போலவே ஆகும். மற்றும் ஸ்ரீஹரி பிரேரணைக்கேற்ப அவர் தனக்கு செய்யும் உதவிகளை நினைக்காத மஹாத்ரோஹியே ஆவான். இந்த பிரகரணத்தில் விளக்கப்பட்ட பற்பல காரணங்களால் மாயாவாதம் சஜ்ஜனர்களுக்கு மிகவும் பிடிக்காததாகும் என்றும், முமுக்ஷுகளுக்கு (மோட்சத்தை விரும்புபவர்களுக்கு) மிகவும் அல்பமானது (புறக்கணிப்பட வேண்டியது) என்றும் ஸ்ரீதாஸார்யர் உபதேசம் செய்திருக்கிறார்.

20. ஸ்ரீ அக்னி தேவரின் ஸ்தோத்திரம்

தே^{3}வமுக^{2} என்னய கராவலம்ப^{3}னவித்து
பாவகரிகொ^{3}லிது^{3} ப^{4}வதாப | ப^{4}வதாப பரிஹரிஸு
பாவகன ஜனக ப்ரதிதி^{3}ன ||1-(381)

தேவமுக – ஹே அக்னிதேவனே. கராவலம்பனவ – உன் கைகளை. இத்து – எனக்கு கொடுத்து. ஒதகிஸி – கைபிடித்து. பாவகரிகெ – (உன் சந்ததியினரான மற்ற) அக்னிகளுக்கு. ஒலிது – பிரசன்னனாகி. என்னய – என். பவதாப – சம்சார துக்கங்களை. பாவகன ஜனக – ஹே பாவகனின் தந்தையே. பிரதான அக்னிதேவனே. ப்ரதிதின – தினமும் பரிஹரிஸு – என்னை காப்பாற்றுவாயாக. ப்ரதின என்றதால், விதிப்படி அக்னி கார்யங்களை தினமும் செய்யவேண்டும் என்றும், அதனால் சம்சாரத்தில் வரும் பற்பல துக்கங்களின் பரிகாரம் ஆகிறது என்றும் சொல்லப்படுகிறது.

பிரதான அக்னிதேவனின் மக்கள், பாவக, பவமான, ஷுசி என்று மூவர். இவர்களின் சந்ததியில் மொத்தம் 45 பேர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் அக்னி நாமகர்கள். இவ்வாறு மொத்தம் 49

பேர் அக்னிகள். விதிப்படியான பற்பல கர்மங்களில் பயன்படுத்தப் படும் அக்னிகளுக்கு (ஜட அக்னிகளுக்கு) ஒவ்வொருவரும் தனித்தனியான அபிமானி தேவதைகளாக இருக்கின்றனர். அந்தந்த கர்மங்களின் பலனுக்கு அந்தந்த அக்னி தேவதையின் அருள் தேவை. பிரதான அக்னி 'தேவமுக'ன். தன் மூலமாக அதிகாரிகள் அர்ப்பிக்கும் ஹவிஸ்களை உத்திஷ்ட தேவதைகளுக்கு கொடுக்கிறான். இந்திராதி தேவதைகளுக்கு பிரதானாக்னி முகத்தைப் போல இருக்கிறான். ஆகையால் அவனுக்கு தேவமுக என்று பெயர் வந்தது. மற்ற அக்னிகள், பிரதாக்னியின் பிரஸாதத்தினாலேயே தம் காரியங்களை செய்கின்றனர். இந்த காரணத்தினால் மற்ற அக்னிகளின் அருள் நமக்கு கிடைக்குமாறு செய் என்று பிரதாக்னியை பிரார்த்தனை செய்கிறோம். மத்ஸ்ய புராணத்தில் பிரதாக்னியின் சந்ததிகள் மற்றும் அவர்களின் கார்யங்களும் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த பாகத்தின் புராணத்தினால் விவரங்களை அறிய வேண்டும்.

அக்னௌ க்ரியாவதாம் விஷ்ணு: (பாகவத) மற்றும்
அக்னௌ கர்மாணி க்ருத்வைவ மானுஷா முக்திபாகின:
ஆஸ்ரிதா: ஸூர்யகம் விஷ்ணும் ரிஷயோ பிரம்மதித்யைஸௌ
வாயுஸ்தமாஸ்ரிதா தேவா: பதமானாபிதம் ஹரிம் ||
(ஐதரேய பாஷ்ய)

ஆகிய பிரமாணங்களால், முக்தி யோக்யரான மனுஷ்யர்கள், அக்னி கார்யங்களை செய்தே (அக்னி அந்தர்கதனை உபாசனை செய்தே) முக்தியை அடைகிறார்கள் என்றும், ரிஷிகள் சூர்ய அந்தர்கதனான ப்ருஹத் என்னும் நாமம் கொண்ட ஸ்ரீஹரியை உபாசனை செய்தும், தேவதைகள் வாயுஸ்தித பவமான நாமக ஸ்ரீஹரியை உபாசனை செய்தும் முக்தர் ஆகின்றனர் என்று தெளிவாகிறது. அனைத்து முக்தி யோக்யரும் அவரவர் இதய வாசியான பிம்பரூபி ஸ்ரீஹரியை தகுதிக்கேற்ப உபாசனை செய்ய வேண்டும். பிம்பாபரோக்ஷம் இல்லாமல் மோட்சம் இல்லை என்று அர்த்தம்.

மனுஷ்யர்களுக்கு, காயத்ரி மந்திரத்தினால் சூர்யாந்தர்கத நாராயணனின் உபாசனையும், வாயுஸ்த பவமானனின் உபாசனையும் நிஷித்த என்று அறியக்கூடாது. மனுஷ்யரே முதலான அதிகாரிகளுக்கு அவர்களுக்கு விதிக்கப்பட்ட அந்தந்த

உபாசனைகள் இருக்கிறது என்று அர்த்தம். ஸ்வஸ்வரூபத்தின் நிஸ்சய ஞானம், அபரோக்ஷ ஞானத்திற்குப் பிறகே கிடைக்கிறது என்பதால், எந்த ஜீவனோ அவன் மனுஷ்ய தேகத்தில் வந்தபோது, மனுஷ்ய ஜீவர்களுக்கு தக்க அக்னித்வாரா உபாசனையை அனுஷ்டானம் செய்ய வேண்டும். அபரோக்ஷிகளும்கூட அக்னித்வாரா, மனுஷ்ய தேகத்தில் இருக்கும்போது அனைத்து கர்மங்களையும் ஸ்வாமிக்கு அர்ப்பிக்க வேண்டும்.

மனுஷ்யருக்கு இப்படி அக்னிதேவரே பகவத் உபாசனைக்கு முக்கிய பிரதிமையாக இருக்கிறார். அக்னியில் செய்யும் ஹோமாதிகள் மட்டும் பகவத் உபாசனைகள் அல்ல. மனுஷ்யர், தம்மால் ஸ்ரீஹரி செய்விக்கும் அனைத்து வித சேவையையும் அக்னியின் மூலமே அக்னி அந்தர்கதனுக்கு அர்ப்பிக்க வேண்டும். 'தத்வ ஸுவாலி'யை இயற்றிய கர்மத்தை அக்னிதேவனின் மூலம் ஸ்ரீஹரியிடம் அர்ப்பிக்கும் அனுசந்தானமும், இறுதியில் அக்னி ஸ்தோத்திரத்தை இயற்றி, பிறகு மங்களத்தை இயற்றியிருப்பதன் மூலமாக, ஸ்ரீதாஸார்யருக்கு இருந்திருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஹுதவஹனே என்ன து^{3}ர்மதிய பரிஹரிஸி ஸ
த்க^{3}திய ப^{1}த^{2} தோரோ த^{3}யதி^{3}ந்த^{3} | த^{3}யதி^{3}ந்த^{3} நித்ய நா
நுதிஸுவெனு நின்ன கருணாளோ ||2-(382)

ஹுதவஹனே – ஹே அக்னிதேவனே. தயதிந்த – தயவு செய்து. என்ன – என். துர்மதிய - கெட்ட புத்தியை. பரிஹரிஸி – போக்கி. சத்கதிய பத – சத்கதி அடையும் மார்க்கத்தை. தோரோ – காட்டு. கருணாளோ – ஹே தயாளோ. நின்ன – உன்னை. நா – நான். நித்ய – எப்போதும். நுதிஸுவெனு – வணங்கி பிரார்த்திக்கிறேன். அக்னி அந்தர்கத அர்க்க நாமக ஸ்ரீஹரியின் பிரார்த்தனை இது. இவனே பரசுராமன்.

கிருஷ்ண வர்த்மனே து^{3}ஷ்டகர்மவ நோடி^{3}
ப்^{4}ரஷ்டனென்னத^{3}லே ஸந்தெயிஸு | ஸந்தெயிஸு பா^{4}ர்க்க^{3}வக^{3}
தி^{4}ஷ்டானனெந்து^{3} மொரெ ஹொக்கெ ||3-(383)

க்ருஷ்ணவர்த்மனே - ஹே அக்னிதேவனே. என்ன - என். துஷ்டகர்மவ - துஷ்ட கர்மங்களை (அல்லது தோஷங்கள் கொண்ட கர்மங்களை). நோடி - பார்த்து. ப்ரஷ்டனு - அல்பன். என்னதலெ - என்று சொல்லாமல் (அறியாமல்). ஸந்தெய்ஸு - காப்பாற்று. பார்க்கவகெ - ஸ்ரீஹரிணிபதி பரசுராம தேவனுக்கு (ப்ருகுகுலத்தில் அவதரித்த ஸ்ரீஹரிக்கு) அதிஷ்டானனெந்து - வசிக்கும் இடத்தின் ரூபம் என்று. மொரெஹொக்கெ - (உன்னை) நான் சரணடைகிறேன்.

ருத்ராக்ஷகனே மஹோபத்³ரவவ பரிஹரிஸு
ப⁴த்³ரப்ரகாஶ மஹப⁴த்ர | மஹப⁴த்ர விக்²யாத
கருணா ஸமுத்³ர ஶரணெம்பே³ ||4-(384)

ருத்ராக்ஷகனெ - ருத்ரதேவனின் நேத்ரங்களில் இருக்கும். பத்ரப்ரகாஷ - மங்களகரமான ஒளியைக் கொண்ட. மஹபத்ர - அதிமங்கள ஸ்வரூபனான, ஹே அக்னிதேவனே. மஹோபத்ரவவ - மஹாபீடையை (சம்சாரத்தில் தினமும் வரும் ரோகாதி உபத்ரவங்களை). பரிஹரிஸு - போக்கு. விக்யாத கருணாஸமுத்ர - அபார கருணை உள்ளவன் என்று பெயர் பெற்ற ஹே தேவனே. ஷரணெம்பெ - நீயே கதி என்று வணங்குகிறேன்.

கட³ல ஒட³லொளகி³த்து³ ப³ட³வாக்³னி எனிஸுவி
அட³வியொளகி³த்து³ தா³வாக்³னி | தா³வாக்³னி எனிஸுவி
பொட³வியொளு பௌ⁴ம எனிஸுவி ||5-(385)

(ஹே அக்னிதேவனே). கடல ஒடலொளகித்து - கடலில் உள்ளேயிருந்து. படவாக்னி - 'படவாக்னி' என்று. எனிஸுவி – அழைக்கப்படுகிறாய். அடவியொளகித்து - காட்டில் இருந்து. தாவாக்னியு - காட்டுத்தீ என்று. எனிஸுவி - அழைக்கப்படுகிறாய். பொடவியொளு - உலகில். பௌம - அங்காரன். எனிஸுவி - என்று அழைக்கப்படுகிறாய்.

அக்னிதேவனின் சாமர்த்த்ய ரூபமகிமைகள் இங்கு சொல்லப் படுகிறது. ப்ரளய காலத்தில் சமுத்திரத்தையே எரிப்பது, அதில் இருக்கும் 'படவ' நாமக அக்னி. அடர்ந்த காடுகளை அழிப்பது

தாவாக்னி. அக்னி ஒளியினால் ஒளிர்பவன் அங்காரகன் (பூ-புத்ர மங்களன்).

ஶுசி நாமகனே மனோ வசனாதி[3]க[3]ள தோ[3]ஷ
நிசயக[3]ளனெணிஸி த[3]ணிஸதே[3] | த[3]ணிஸதே[3] மச்சித்த
க[2]சிதவனு மாடோ[3] ஹரியல்லி ||6-(386)

ஷுசி நாமகனெ - ஹே ஷுசி நாமக அக்னியே. மனோ வசனாதிகள - என் மன, வசனங்களால் நிகழும். தோஷநிசயகளனு - தோஷ சமூகங்களை. எணிஸி - கவனித்து. தணிஸதெ – சிரமப் படுத்தாமல். மச்சித்த - என் மனதினை. ஹரியல்லி - ஸ்ரீஹரியிடம். கசிதவனு மாடோ - ஸ்திரமாக நிற்குமாறு செய் ஸ்வாமி. அக்னிதேவன் வாகீந்திரியத்தின் அபிமானியும் ஆகியிருக்கிறான். வாக் இந்திரியத்தின் வெற்றியினால், தகுதிக்கேற்ப மனோ நிக்ரஹம் கிடைக்கிறது. இந்திரியங்களின் நிக்ரஹமும், மனதினை வெல்வதற்கு ஒரு வழியே என்று இங்கு குறிப்பிடப்படுகிறது.

வீதி[1]ஹோத்ரனே ஜகன்னாத[2] விட்டலன ஸம்
ப்ரீதி பூர்வகதி[3] துதிஸுவ | துதிஸி ஹிக்கு[3]வ பா[4]க்[3]ய
ஜிதவாகி[3] இரலி எந்தெ[3]ந்து[3] ||7-(387)

வீதிஹோத்ரனே - ஹே அக்னிதேவனே. ஜகன்னாதவிட்டலன - உலக நாயகனான விட்டலனை. சம்ப்ரீதிபூர்வகதி - சத்பக்தியுடன். துதிஸுவ - துதிக்கும். துதிஸி ஹிக்குவ - வணங்கி மகிழும். பாக்ய - பாக்கியம். (அந்த ரூபமான செல்வம்). ஜிதவாகி - ஸ்திரமாகி (கண்டிப்பாக). இரலி - என்னில் இருக்கட்டும். ஸ்ரீஹரியை வணங்குவது மட்டுமல்ல. ஸ்துதியினால் மகிழ்ச்சியும் உண்டாக வேண்டும். அப்படி மகிழ்ந்தால் மட்டுமே, மனதிற்கு நித்ய ஸ்துதியில் ஈடுபாடு உண்டாகிறது. ஸ்துதியிலிருந்து பக்தியும், பக்தியிலிருந்து ஸ்துதியில் திட ஈடுபாடும் வளர்ந்து கொண்டே போகிறது.

மங்களம்
ஸுவ்விபத

ராக: ஆனந்தபைரவி. ஆதிதாளம்

ஸுவ்வி ஸ்ரீதே^{3}விரமண ஸுவ்வி ஸர்ப்பராஜஷயன
ஸுவ்வி தை^{3}த்ய நிக^{1}ரஹரண ஸுவ்வி நாராயண || பல்லவி

ஸ்ரீதேவிரமண - ஹே லட்சுமிபதியே. ஸுவ்வி - (உனக்கு) மங்களம். (மங்களஸ்வரூபனான நீ உன் பக்தர்களுக்கு எப்போதும் மங்களத்தையே கொடுப்பவனாக இரு). சர்ப்பராஜஷயன - ஹே சேஷசாயியே. ஸுவ்வி - உனக்கு மங்களம். தைத்ய நிகரஹரண - ஹே தைத்ய ஸமூக வினாஷகனே. ஸுவ்வி – வெற்றியாள னாக இரு. நாராயண - ஹே நாராயணனே. ஸுவ்வி - உனக்கு மங்களம். ஸுவ்வி - இது பழைய கன்னட சொல்லாகும். ஷுப ஷோபன என்னும் அர்த்தத்தைக் கொண்டது. மங்களபிரதன் ஆகு என்று வணங்கி, ஜயகோஷம் செய்யும் அபிப்பிராயத்தைக் கொண்ட சொல் என்று அறியவேண்டும். ஸ்ரீதாஸார்யர் தம் கிரந்தத்திற்கு மங்களபதமாக இதனை பாடியிருக்கிறார்.

ப^{4}வ்யசரித து^{3}ரிதவிபின ஹவ்யவஹன ப^{4}வேந்தி^{3}ராதி^{3}
ஸேவ்யமான ஸுப்ரஸித்^{3}த^4 ஸுலப^{4}மூருதீ
அவ்யயாத்மனே ஸுகா^{2}த்ம நின்ன தி^{3}வ்யமஹிமெ துதிப
ஸுவ்விவேகிக^{3}ளிகெ^{3} கொடு^{3}வுத^{3}மிதமோத^{3}வ ||1 (388)

பவ்யசரித - அற்புத மகிமனும் (அல்லது மங்கள சரித்ரனும்). துரித விபின ஹவ்யவஹன - பக்தர்களின் பாவங்கள் என்னும் அடர்ந்த காட்டினை எரிக்கும் தாவாக்னியும், பவேந்த்ராதி ஸேவ்யமான - ருத்ர இந்திராதிகளால் வணங்கப்படுபவனும். ஸுப்ரஸித்த – ஸ்ருதிகளால் வணங்கப்படுபவனும் (ஞானிகளால் புகழப்படுபவ னும்) ஆன, ஸுலபமூருதே - பக்தர்களுக்கு ஸுலப ஸாதனை களால் கிடைப்பவனான ஹே ஸ்ரீனிவாசனே. அவ்யயாத்மனே – நிர்விகார நித்யமங்கள ஸ்வரூபனான ஹே ஹரியே. சுகாத்ம - ஆனந்த ஸ்வரூபனே. திவ்யமஹிமெ - உன் உலகப் புகழ்பெற்ற மகிமைகளை. துதிப - வணங்கும். ஸுவ்விவேகிகளிகெ -

சுக்ஞானிகளுக்கு (ஸுவ்வியை பாடும் புத்திசாலிகளுக்கு அல்லது, பஞ்சபேத தாரதம்ய சஹித ஶ்ரீஹரி சர்வோத்தமத்வ ஞான உள்ளவர்களுக்கு) அமிதமோதவ – ஆனந்த சுகத்தை (மோட்சத்தை). கொடுவுது – கொடு, ஸ்வாமி.

வாஸவாத்யமர வாதாஷிகாரதெந்து மத்வதேஷிகார்ய சித்த ஸிம்ஹபீடமத்யக – இந்திராதி தேவதைகள், சேஷதேவ (வாயுவே ஆகாரமாக உள்ள சர்ப்பராஜ) பாரதி, இவர்களுக்கு சந்திரனைப் போல இருக்கும் (மகிழ்ச்சியைக் கொடுக்கும்) ஶ்ரீமத்வர் என்னும் குருஸ்ரேஷ்டரின் சித்த என்னும் ஸிம்ஹாசனத்தில் வீற்றிருப்பவனான தேஷகால வியாப்த சர்வதேஷ காலங்களில் வியாப்தனான, சர்வேஷ – சர்வஸ்வாமியான. சார்வபௌம – சக்ரவர்த்தியான (சர்வாதிபதியான). (சர்வலோகாதிபதியான), ஶ்ரீமஹீஸமேத – ஶ்ரீபூ ரூபங்களால் (லட்சுமிரூபங்களால்) சஹிதனான. கிருஷ்ண – ஶ்ரீகிருஷ்ணன். நமகெ – நமக்கு. மோதவ கொடலி – மங்களத்தைக் கொடுக்கட்டும்.

கமலஸம்ப4வன வேத3 த1மனு ப3ய்யுதிரலு லக்ஷ்மீ
ரமண வத்ஸ்யனாகி3 தந்த3 ஷரதி4 மத2னதி3
க1மட2ரூபதி3ந்த3 ஸுூரிக3ம்ருதவித்து காய்து3 அகி2ள
ஸுமனஸேந்த்3ரஸ்வாமி கொட3லி எமகெ3 மங்க3ளவ || 3 (390)

கமலசம்பவன – பத்மசம்பவனான சதுர்முக பிரம்மனின். வேத – வேதத்தை. தமனு – தமனென்னும் அசுரன் (ஹயக்ரீவ என்னும் அசுரன்). பய்யுதிரலு – திருடிச் செல்ல. லக்ஷ்மிரமண – நாராயணன். மத்ஸ்யனாகி – மத்ஸ்யரூபத்தினால் அவதரித்து. தந்த – (அந்த தைத்யனை சம்ஹரித்து வேதங்களை, பிரம்மனுக்கு) கொண்டு வந்து கொடுத்தவனும், ஷரதிமதனதி – பாற்கடலைக் கடையும் காலத்தில் (தேவ தைத்யர்கள் அமிர்தத்திற்காக பாற்கடலை கடையும்போது). கமடரூபதிந்த – கூர்ம ரூபத்தினால் (மூழ்கிக் கொண்டிருக்கும் மந்தர பர்வத ரூபத்தின் மத்தினை தன் முதுகில் தாங்கிப் பிடித்து கடலைக் கடையும் காரியத்தை நிறைவேற்றி). அம்ருதவ – (தன்வந்திரி ரூபத்தினால் தானே கடலிலிருந்து மேலே வந்து) அமிர்தத்தை. ஸுூரிகெ – தேவதை களுக்கு. இத்து – (மோகினி ரூபத்தினால் தைத்யர்களை ஏமாற்றி, தேவதைகளுக்கு) கொடுத்து உண்வித்து. காய்து – (இவ்வாறு

அனைத்து விதங்களிலும், தேவதைகளை) காப்பாற்றிய. அகிள - அனைத்து. ஸுமனஸேந்த்ர - தேவஸ்ரேடனாஅன ஸ்ரீஹரி. எமகெ - எமக்கு. மங்களவ - அனைத்து நலன்களையும். கொடலி - அருளட்டும்.

கனகலோசனன்ன ஸதெ^{3}து^{3} மனுஜஸிங்க^{3}வேஷனாத^3
த்^{3}யுனதி^{3} படெ^{3}த^3 ஜனனி கடி^{3}து^{3} வனவ சரிஸித^3
ஜனப கம்ஸனொதெ^{3}து^{3} த்ரிபுரவனிதெ ஸுவ்ரதவனளித^3
வினுத கல்கி தே^{3}வராஜ எம்ம ஸலஹலி ||4 - (391)

கனகலோசனன்ன - ஹிரண்யாக்ஷக என்னும் தைத்யனை. ஸதெது - கொன்று (வராக ரூபத்தினால் கொன்று). மனுஜஸிங்க வேஷனான - நரசிம்ம ரூபத்தை தரித்த (ஹிரண்யகசிபுவை கொன்ற). த்யுனதி படெத - தேவகங்கையைப் பெற்ற - பாதத்தினால் வரவழைத்த (வாமன - த்ரிவிக்ரம) ஜனனி - தாயினை. கடிது - சிரச்சேதம் செய்து (தந்தையான ஜமதக்னி ரிஷியின் ஆணையால் தாயின் தலையை கத்தரித்து, பித்ருவாக்ய பரிபாலனம் செய்தவன் என்று காட்டிய பரசுராமன்). வனவ சரிஸித - வனவாசத்தை அனுபவித்த (தசரதனின் வாக்கியத்தை கேட்டு, 14 ஆண்டு காலம் வனவாசம் செய்து, ராவணாதி அசுரர்களைக் கொன்ற ஸ்ரீராமசந்திர). ஜனப கம்ஸன - ராஜனான கம்சனை (தந்தை உக்ரசேனனை சிறையில் அடைத்து, தானே சிம்மாசனத்தை ஆக்ரமித்தவனை). ஒதெது - கொன்று. (ஸ்ரீகிருஷ்ணாவதாரம்). த்ரிபுரவனிதெ - த்ரிபுராசுரரின் பத்னிகளின். ஸுவ்ரதவ - பதிவ்ரத நியமத்தை. அளித - அழித்த (புத்தா வதாரம்). வினுத - தேவஸ்ரேஷ்டர்களால் வணங்கப்படுபவனான. தேவராஜ - தேவோத்தமனான. கல்கி - கல்கி ரூபனான ஸ்ரீஹரி. எம்ம - நம்மை. ஸலஹலி - காப்பாற்றட்டும்.

வராஹாவதாரங்கள் - இரண்டு. விளக்கத்திற்கு 181ம் பத்யத்தை பார்க்கலாம்.

புத்தாவதாரங்கள் - இரண்டு. முதலாவது - த்ரிபுராசுரர்களின் பெண்களின் பதிவிரதத்தை அழிப்பதற்காக அவர்களை மோகித்த புத்த ரூபம்.

லோகான் க்னதாம் மதிவிமோஹமதிப்ரலோபம் வேஷம்
விதாய யதபாஷத ஔபதர்ம்யம் (பாகவத)

என்று, த்ரிபுர ஸ்த்ரீகளுக்கு வேறொரு கணவனை ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறிய புத்த ரூபம் இங்கு சொல்லப்படுகிறது. இரண்டாம் புத்தாவதார விஷயத்திற்கு ஸ்லோகம் #187 பார்க்கலாம்.

ஜினஸுததயாப்யேகம்வாரம் புத்தாவதாரோ஽ஸ்தி ஔபதர்மமிதி த்விதீயஸ்கந்த வசனாத் த்ரய்புரஸ்த்ரீணாம் ஔபதர்ம்யம் உபபத்னிர் க்ராஹ்யேதி ப்ரமேய ஸம்பந்திதர்மம் பாஷிதமபி ஏகவாரம் புத்தாவதாரோ஽ஸ்தீதி ஞேயம்' என்று ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள், தாத்பர்ய நிர்ணய டீகாவில் (பாவபிரகாஷிகா), இரு முறை புத்தாவதாரம் நடந்திருக்கிறது என்று தெளிவாக கூறியிருக்கிறார்.

பாஹி பாவன்னசரித பாஹி பாஹி பத்³மநேத்ர
பாஹி நிக³ம நிகரஸ்தோத்ர லலிதகா³த்ர மாம்
பாஹி ஸுஜனஸ்தோமமித்ர தோ³ஷதூ³ர ஸுகு³ண ஸம்
தோஹ ஜகன்னாத²விட்ட²ல ஜய த்ரிதா⁴மக³ ||5 (392)

பாவன்னசரித - ஹே மங்களசரிதனே. பாஹி - காப்பாற்று. பத்மநேத்ர - ஹே தாமரைக் கண்ணனே. பாஹி பாஹி – அருள் வாயாக அருள்வாயாக. நிகமநிகர ஸ்தோத்ர - வேதசமூகங்களே ஸ்தோத்திரங்களாக உள்ள. ஹே தேவோத்தமனே. பாஹி - அருள்வாயாக. லலிதகாத்ர - ஹே ஸௌந்தர ஸாரஸ்வரூபனே. மாம் - எனக்கு பாஹி - அருள்வாயாக. ஸுஜன ஸ்தோமமித்ர - சர்வசஜ்ஜன சகனே. தோஷதூர - தோஷங்கள் இல்லாதவனே. ஸுகுண ஸந்தோஹ - கல்யாண குண சர்வஸ்வரூபனே. ஞானானந்தாதி குணங்களே தேகமாக உள்ள. ஜகன்னாதவிட்டல - ஹே ஜகன்னாதவிட்டலனே. த்ரிதாமக - லட்சும்யாத்மக வைகுண்டாதி முக்த உலகத்தில் இருப்பவனான பிரபுவே. ஜய - ஜயஷீலன் ஆகு.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து
ஆசார்யா: ஸ்ரீமதாசார்யா: ஸந்துமே ஜன்ம ஜன்மனி
***